வலிமார்கள் வரலாறு

(மூன்றாம் பாகம்)

HASANAINE FEE JAMIYA YASEEN
SEETHAPATTI
PATTY (P.O)
TRUCHY.620009

அப்துற் - றஹீம்

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்),
தி. நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2834 3385
E-mail : universal_pub2002@yahoo.co.in

பதிப்புரை

வலிமார்களை, செல்வர்கள் என்று குறிப்பிடுவதுண்டு. அவர்கள் பொருள் செல்வர்கள் அல்லர், அருள் செல்வர்கள். அவர்களிடம் பொருள் இருந்ததில்லையா? இருந்தது மடியில் அல்ல, கால் அடியில்.

அவர்கள், தம் வார்த்தையைக் கொண்டும், வாழ்வைக் கொண்டும் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தார்கள். அவர்கள் வாயால் பேசியது கொஞ்சம், வாழ்வால் பேசியது அதிகம்.

வார்த்தையைக் கொண்டு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய, 'இல்ம்' வேண்டும். வாழ்வைக் கொண்டு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்வதற்கு, 'அமல்' வேண்டும். இரண்டும் அவர்களிடம் அமைந்திருந்தன.

அவர்கள் கற்ற 'இல்ம்' என்ன? புரிந்த 'அமல்'கள் எவை?

சுவையாய் இருப்பது கதை என்பர். அதையும் மிஞ்சுவது அவர் களின் வாழ்க்கை. அவர்களின் வாழ்க்கை பொய்க்கதை அல்ல, மெய்க்கதை.

இவ்வித இறைநேசர்களில் தலை சிறந்த நிலையிலிருந்த சிலரின் வரலாற்றைத் தமிழில் கொடுக்க எண்ணினோம்.

முதல் பாகத்தில் இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களின் வரலாறும், இன்னும் சிலரின் வரலாறுகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இரண்டாம் பாகத்தில் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களின் வரலாறும், இன்னும் சிலரின் வரலாறுகளும் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

மூன்றாம் பாகமான இந்நூலில் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜீலானி (ரஹ்) அவர்களின் வரலாறும், இன்னும் சிலரின் வரலாறுகளும் அடங்கியிருக்கின்றன.

இதற்கு அடுத்து நான்காம் பாகமும், ஐந்தாம் பாகமும் வெளிவரவிருக்கின்றன.

தம்மைப் பார்த்தவர் மனத்தையே மாற்றக் கூடியவர்கள் வலி மார்கள். அவர்களின் வரலாறுகளைப் படித்தவர் மனத்தையா மாற்ற முடியாது? உண்மையில் இந்நூல்களைப் படிப்பவர் மனத்தில் அணு வளவாவது மாற்றம் ஏற்படாது இராது. அந்த மாற்றம், அல்லாஹ்வை நோக்கிய ஏற்றமாகவே இருக்கும், நிச்சயமாக ஏமாற்றமாக இராது.

– யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

பொருளடக்கம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

வலிமார்கள் வரலாறு

(மூன்றாம் பாகம்)

1. கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்)

சீருலவு கருணையால் எவ்வுலகும் எந்தெந்த
ஜீவ ஜெந்தும் புகழவே
செய்துதம் நிலையோடு உறம்காக்கும் முறைவாழி
தேடரிய மெய்மைவாழி
பாருலவு மன்பதைகள் மற்றவைகள் நேசர்வாழி
பயின்றுநற் கதிபெருகுவான்
பண்ணரிய மறைகொண்டு தூதாகி வந்தநம்
பார்த்திபர் முஹம்மது றசூல்
பேருலவு தவமென்ன வருகின்ற பெண்பிள்ளை
பெற்றபிள்ளைப் பேரராய்ப்
பேதகத் துழல்கின்ற சிறியோர்கள் உறுதிநிதிப்
பேறென வருங்குரிசிலே
மூரியந் தவமன்னர் வாழுநகர் பகுதாதின்
முச்சுடர் நின்றிலங்கு
முஹியித்தின் முஹியித்தீன் என்றவரும் ஏத்தவரும்
முஹ்யித்தின் முஹ்யித்தினே

- சேகனாப் புலவர்

பா யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் ஆன்மீகத் துறையில் தன்னி கரற்றுத் தனிப்பெரும் செங்கோல் நடத்திக் கொண்டிருந்த காலம் அது. ஒரு நாள் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது, திடீரெனக் கூட்டத்தினரை நோக்கி, ''இராக் நாட்டிலுள்ள ஜீலான் நகரில் ஆன்மீகச் சூரியன் உதயமாகும் காலம் அண்மிவிட்டது. அவரின் உதயம் உலகில் மாபெரும் ஆன்மீகப் புரட்சியை உண்டுபண்ணும். அவரின் திருப்பெயர் அப்துல் காதிர் முஹ்யித்தீன் என்பதாகும்'' என்று கூறினர்.

அது கேட்டு ஆங்குக் குழுமியிருந்தோர் அனைவரும் மெய் சிலிர்த் தார்கள். எப்பொழுது வருவார் அந்த முஹ்யித்தீன் என்று ஏங்கினார்கள். ''அவரைக் காணும் பேறு நமக்குக் கிடைக்குமோ, கிடைக்காதோ, தெரியவில்லையே'' என்று தவித்தார்கள். இத்தகு ஏக்கத்திற்கும் தவிப்பிற்கும் இடையே கூட்டம் கலைந்தது.

நாட்கள் உருண்டோடின. பல ஆண்டுகள் கழித்து ஒரு நாள், ஷைகு அபூபக்ர் ஹர்ரார் (ரஹ்) அவர்கள் தம் மாணவர் குழாத்தை நோக்கி, ''உங்கள் அனைவர் மீதும் இறையருள் பொழியுமாக! நான் இப்பொழுது ஒரு தேன் செய்தியைக் கூறப் போகிறேன். அப்துல் காதிர் என்னும் அழகுசால் திருப்பெயரும், முஹ்யித்தீன் என்னும் மாண்பார்ந்த அருட் பெயரும் கொண்ட ஒரு மாபெரும் இறைநேசச் செல்வர் அண்மையில் இராக் நாட்டில் தோன்றப் போகிறார். அவருடைய மாண்பினை என்னால் எடுத்துரைத்தல் சாலாது. அத்தகு மேதகுசீலர் ஆன்மீகச் செங்கோல் செலுத்தத் தொடங்கி, ''என் பாதம் அனைத்து 'வலி'மார்களின் தோள் மீதும் இருக்கிறது'' என்று அகிலம் அறியப் பிரகடனப்படுத்துவார். அவரைக் காணும் பேறு உங்களில் எவருக்கேனும் கிடைப்பின், அவரின் பாதாரவிந்தங்களை விட்டும் அடிபெயராதீர்கள்'' என்று அருள்மொழி பகர்ந்தார்கள்.

காலம் உருண்டோடியது. ஒருநாள், அஹ்மது அப்துல்லாஹ் இப்னு அஹ்மது (ரஹ்) அவர்கள், தம் சீடர்களை நோக்கி, ''அவனி செய்த அருந்தவப் பயனாய் அண்மையில் ஒரு குழந்தை பிறக்கப் போகிறது. அது வயதுற்றதும் வலிமார்களில் மகுடமாகத் திகழும். அவர் ஆற்ற விருக்கும் அற்புதங்களோ அனந்தம். 'என் பாதங்கள் 'வலி' மார்களின் பிடரி மீது இருக்கின்றன' என்று அவர் நவில்வார். அப்பொழுது அவரின் ஆன்மீக அதிகாரம் விண்ணை உராய்ந்து கொண்டிருக்கும்'' என்று முன்னறிவிப்புச் செய்தார்கள்.

நாட்கள் நகர்ந்தன. இப்பொழுது மற்றொரு காட்சி தொடங்குகிறது. கலீல் பல்கி (ரஹ்) அவர்கள் தம் மாணவர் புடை சூழத் தம் தவச் சாலை யில் வீற்றிருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் தம் மாணவர்களை

நோக்கி, ''முஹ்யித்தீன் என்னும் மாண்பார்ந்த திருப்பெயருடன் இராக் நாட்டில் ஒரு மகான் தோன்றப் போகிறார். அவர் ஒரு கௌதாகத் திகழ்வார். அவரின் ஆன்மீக அதிகாரம் அவரின் காலத்தில் மட்டுமல்லாது உலக முடிவு காலம் வரை மங்காது சுடர் பரப்பிக் கொண்டிருக்கும்'' என்று நன்மாராயம் நவின்றார்கள்.

இதன்பின் பல ஆண்டுகள் கழிந்தன. 'என்று தோன்றுவார் அப்துல் காதிர்? என்று தோன்றுவார் முஹ்யித்தீன்?' என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் இறைநேசச் செல்வராக விளங்கிய அபூ அப்துல்லாஹ் அலீ (ரஹ்) அவர்கள் தம் சீடர்களை நோக்கி, ''முஹ்யித்தீன், முஹ்யித்தீன் என்றவரும் ஏத்தவரும் முஹ்யித்தீன் தோன்றக் கூடிய காலம் அண்மிவிட்டது. அல்லாஹ்வின் தனிப் பெரும் ஞானப் பரிதியான அவர் இராக் நாட்டின் அடிவானத்திலிருந்து உதிக்கப் போகிறார். அவர் உழுவானிலிருந்து படுவான் வரை தன் பொற் கிரணங் களை அள்ளித் தெளிப்பார்'' என்று வாயினிக்க நவின்றார்கள். அது கேட்டு மக்களுக்கு ஏமாற்றமேயன்றி, மனநிறைவு ஏற்படவில்லை. எல்லாரும் அண்மை, அண்மை என்று கூறுகிறார்களே யொழிய ஒருவரும் எப் பொழுது, எந்த ஆண்டு, எந்த மாதம், எந்த நாள் என்று கூறுகிறார் களில்லையே. மாதம், நாளைக் கூறாவிட்டாலும் பாதகமில்லை. ஆண்டையாவது கூறினால் தானே எங்களுக்கு மகிழ்ச்சியாய் இருக்கும்'' என்று அவர்கள் அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

நாட்கள் உருண்டோடி, மாதங்களாக மாறி, ஆண்டுகளாக உருப் பெற்று மறைந்து கொண்டிருந்தன. இவ்வாறு பல ஆண்டுகள் ஓடி மறைந்ததன் பின் ஒரு நாள் ஆன்மீகச் செல்வர் ஷைகு மன்சூர் பதாயிஹி (ரஹ்) அவர்கள் தம் பேச்சினிடையே, ''ஆன்மீகப் பேரரசர் அப்துல் காதிரின் ஆட்சி தொடங்கும் காலம் அண்மித்து விட்டது. மக்களே! உங்களில் எவரேனும் அவ்வாட்சியைக் காணும் பேற்றினைப் பெறின், அவரின் கால் மாட்டிலே போய் அமரும் வாய்ப்பை இழந்து விடாதீர்கள்!'' என்று அருள் எச்சரிக்கை செய்தார்கள். அது கேட்டு மக்கள் மகிழ்ச்சியடை வதற்குப் பதிலாக முனகினார்கள். 'அண்மையாம் அண்மை! இந்த அண்மைக்கும் ஓர் அந்தம் (முடிவு) இல்லையா?' என்று அவர்களின் வாய் முணுமுணுத்தது.

இந்த முணுமுணுப்போடு பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் ஷைகு உகைல் முன்ஜீ (ரஹ்) அவர்கள், ''ஆ! அந்தக் காலம் வந்துவிட்டது. பகுதாது மாநகரில் முஹ்யித்தீனின் அருட்கொடி அதோ பறக்கின்றதை நான் பார்க்கிறேன். தம் பாதகமலங்கள் 'வலி' மார்களின் பிடரிமீது இருக்கின்றன என்று அவர்கள் பிரகடனப்படுத்துவதையும், நான் இதோ

செவியாராக் கேட்கிறேன்.'' என்று கூறினர். ஞானக் கண்களால் அவர்கள் கண்டவை, அவர்களைச் சூழ வீற்றிருந்தவர்களின் ஊனக் கண்களுக்குத் தெரியவில்லை. எனவே அவர்கள் திகைத்தார்கள். ''எங்கே? எங்கே? எங்களின் கண்களுக்குத் தெரியவில்லையே'' என்று அவர்கள் ஏங்கினார்கள். அதனை உய்த்துணர்ந்து கொண்ட ஆண்டகை அவர்கள், ''அந்தக் காலம் விரைவில் வரும். அப்பொழுது நான் உயிரோடிருப்பின், நான் அவர்களின் பாதகமலங்களை விட்டும் பெயரேன்'' என்று கூறினர். அது கேட்டு மக்கள் மீண்டும் சோர்வுற்றார்கள். 'இச்' என்ற ஒலி அவர்களின் இதழ்களைப் பிளந்து கொண்டு சோகத்துடன் வெளிவந்தது.

நாட்கள் என்னும் ஓடைகள் மாதங்கள் என்னும் நதியில் விழுந்து, ஆண்டுகள் என்னும் கடலில் ஒன்று சேர்ந்து கொண்டிருந்தன. அப்பாஸியக்கிலாஃபத்தின் ஆட்சி பீடமாகிய பக்தாது மாநகரில், சுல்தானுல் அவ்லியா ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள் ஆன்மீகச் செங்கோல் செலுத்திக் கொண்டுள்ளார்கள். ஒரு நாள் தம் மாணவர் குழாத்திடையே அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த அவர்கள், திடீரெனச் சற்றுநேரம் தலை தாழ்த்தி இருந்துவிட்டு, பின்னர் தலையை நிமிர்த்தி, ''அவரின் பாதம் அடியேனின் சிரம் மீது, பிடரிமீது, இதயம் மீது ஆகுக!'' என்று பெரும் குரலெடுத்து முழங்கினார்க்ள.

மக்கள் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறியாது திகைத்தார்கள். அப்பொழுது அவர்கள், ''ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், இராக் நாட்டிலுள்ள ஜீலான் என்னும் ஊரில், அப்துல் காதிர் என்னும் இயற்பெயரும், முஹ்யித்தீன் என்னும் சிறப்புப் பெயரும் பெற்ற ஒரு மாபெரும் இறைநேசச் செல்வர் தோன்றப் போகிறார். அவர் பக்தாது மாநகரில் அமர்ந்து ஆன்மீகச் செங்கோல் செலுத்துவார். அவர் தம் பாதகங்கள் அனைத்து 'வலி'மார்களின் பிடரிமீதும் இருக்கின்றன என்று பிரகடனப்படுத்துவார் என்பதை நான் உள்ளுணர்வு மூலம் உணர்ந்தேன். எனவே ஒரு கணமும் தாமதியாது, என் பிடரியை மட்டுமல்லாது, என் சென்னியையும், என் இருதயத்தையும் அவரின் பாதங்களில் கீழ் வைத்தேன்'' என்று கூறினார்கள்.

அது கேட்டு மக்களுக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி ஏற்பட்ட போதினும், ஏக்கமே மிகைத்தது. எப்பொழுது தோன்றப் போகிறார் என்பதை அறிந்ததன் காரணமாக ஏற்பட்ட மகிழ்ச்சியை அதுவரை நாம் உயிரோடிருப்போமா என்ற ஏக்கம் தூக்கி விழுங்கி விட்டது.

இதன்பின் ஆண்டுகள் உருண்டோடின. இறைநேசச் செல்வர் இமாம் ஹஸன் அஸ்கரி (ரஹ்) அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்கிறார்கள். அவர்கள் திடீரெனத் தம் நம்பிக்கைக்கு உரிய உறவினர் ஒருவரை,

அழைத்துத் தம் அருகில் மடித்து வைக்கப்பட்டிருந்த தொழுகை விரிப்பை அவரிடம் ஒப்படைத்து, ''ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் அப்துல் காதிர் முஹ்யித்தீன் என்னும் அருந்தவச்சீலர் தோன்றவிருக்கிறார். இதனை நீர் பத்திரப்படுத்தி வைத்திருந்து, அவர் தோன்றியதும், இதனை அவருக்கு என் அன்புக் காணிக்கையாக வழங்க வேண்டும். அத்தகு வாய்ப்பினைப் பெறும் பேற்றினை நீர் பெறவில்லையாயின், உமது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் இந்த அமானிதத்தை ஒப்படைத்து, அந்த அப்துல் காதிர் முஹ்யித்தீன் தோன்றியதும், அவரிடம் இதனை ஒப்படைக்குமாறு கூறிச் செல்ல வேண்டும்'' என்று கூறிவிட்டுத் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார். காலம் உருண்டோடியது. மக்கள் பிறந்து, வாழ்ந்து, மாய்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால், அப்துல் காதிர் முஹ்யித்தீன் தாம் இன்னும் தோன்றவில்லை. எக்குலத்தில், எவர் தம் மணிவயிற்றிலிருந்து தோன்றுவார் என்பது தான் எவருக்கும் தெரியாத புரியாத புதிராக இருந்தது.

★★★

(2)

அண்ணலெம் பெருமான் முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் அருமைத் திருமகள் பாத்திமா (ரலி) அவர்களின் மணி வயிறு உதித்த செம்மலர்கள் ஹஸன் (ரலி), ஹுஸைன் (ரலி) ஆகிய இருவராவர். அவர்களில் மூத்தவரான ஹஸன் (ரலி) அவர்களின் முதல் மகன், தந்தைக்கேற்ற தனயராக இருந்ததோடல்லாது. பெயரிலும் தந்தையின் அழகுத் திருப்பெயராகிய ஹஸன் என்பதையே சூட்டப் பெற்றிருந்தார். அது மட்டுமல்லாது உருவிலும் தந்தை ஹஸனையே ஒத்திருந்தமையின் இருவருக்கும் பாகுபாடு தெரியும் வண்ணம் மகனை, ஹஸன் முதன்னா - இரண்டாம் ஹஸன் - என்று மக்கள் அழைக்க லாயினர்.

ஹஸன் முதன்னா அவர்கள், தம் சிறிய தந்தை ஹுஸைன் (ரலி) அவர்களின் அழகுத் திருமகள் பாத்திமத்து ஸொஹ்ராவை மணமுடித்து அப்துல்லாஹ் என்னும் அருங்குணத்து வள்ளலை ஈன்றெடுத்தனர். தாய் வழியிலும், தந்தை வழியிலும் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர் களின் அருந்தவப் பேரராக விளங்கியதன் காரணமாகவும், அவருடைய இரத்த நாளங்களில் ஹஸன், ஹுஸைன் ஆகிய இருவழியிலும் வந்த எம்பெருமானார் (ஸல்) அவர்களின் தூய இரத்தம் ஓடியதன் காரண மாகவும், அவருடைய பெயருடன் பத்தரை மாற்றுப் பசும்பொன் என்று பொருள்படும் மஹ்லு என்னும் சொல் இணைக்கப்பட்டு அவர்கள் அப்துல்லாஹ் மஹ்லு என்று அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு அவ்வான்றோரைக் கௌரவிக்க அவ்வித அடை மொழியை மக்கள் பயன்படுத்திய போதினும், அவர்களோ அப்துல்லாஹ் என்னும் தம் பெயருக்கேற்ப அல்லாஹ்வின் தாழ்மையான அடியா ராகவே விளங்கினர். எனவே மக்கள் அவர்களை அப்துல்லாஹ் மஹ்லு என்று அழைக்கும் தோறெல்லாம், ''பிறர் தம்மை மதிக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகின்றார்கள். ஆனால், எங்களின் மனோநிலையோ வேறாக, மாறாக உள்ளது. நாங்களோ இறைவனின் படைப்பினங்கள் அனைத்தும், எங்களை விட மேலானவை என்று கருதுகிறோம்'' என்று தாழ்மையுடன் எடுத்துரைத்தனர்.

அப்துல்லாஹ் மஹ்லு (ரலி) அவர்களின் அருந்தவப் புதல்வர் அப்துல்லாஹ் தானீ (ரஹ்) அவர்கள் சிறந்த வணக்கவாளர்களாக இருந்தனர். 'தஹஜ்ஜுத்' தொழுகையின் இரண்டு 'ரகஅத்'களில் திருக்குர் ஆன் முழுவதையும் அவர்கள் ஓதி முடிப்பர் என்று கூறுவர்.

இத்தகு மாண்பார்ந்த சீலரின் அருமைத் திருமகன் தாம் சையிது மூஸா (ரஹ்) அவர்கள் ஆவர். கடுமையான வணக்கத்தின் காரணமாக உடல் மெலிவுற்று பலவீனமாக இருந்த அவர்கள், கலீபா ஹாரூன் அல் ரஷீதின் அவைக்கு அழைப்பின் மீது சென்ற சமயம், தடுக்கிக் கீழே விழுந்து விட்டனர். அதைக் கண்டு கலீபாவும் அவையினரும் சிரித்த பொழுது, ''நான் உடல் பலவீனத்தால் தடுக்கிக் கீழே விழுந்தேனேயன்றி மது போதையினாலல்ல'' என்று அவர்கள் சுடச்சுடக் கூறினர். அது கேட்டு, இளித்த வாய்கள் இறுக மூடிக் கொண்டன.

சையிது மூஸா (ரஹ்) அவர்களின் மகன் சையிது மூஸா தானீ (ரஹ்) அவர்களும் தந்தை போன்று சிறந்த வணக்கவாளராக இருந்ததோடல் லாது, வாரி, வாரி வழங்கும் வள்ளலாகவும் விளங்கினர். தமக்குக் காணிக்கை வரும் பொருள்களை அவ்வப்பொழுது ஏழைகளுக்கு வாரி வழங்குவதோடு, எஞ்சியதை வெள்ளியன்று ஜும் ஆத் தொழப் பள்ளி செல்லும் பொழுது அள்ளிச் சொரிந்து கொண்டு செல்வது அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்து வந்தது. அவர்களின் திருக்கரம் பற்றி ஏராள மானோர் இஸ்லாத்தைத் தழுவவும் நேர்வழி நடக்கவும் செய்தார்கள்.

சையிது மூஸா தானீ (ரஹ்) அவர்களின் அருமைத் திருமகன் சையிது தாவூது (ரஹ்) அவர்கள் பெரிதும் இறையச்சம் உடையவர்களாக இருந்தார்கள். ''இறை நம்பிக்கையாளர்களே! உங்களையும், உங்களின் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து காத்துக் கொள்ளுங்கள்!'' என்னும் இறை திருவசனத்தை அவர்கள் அடிக்கடி ஓதித் தமக்கே தாம் நினைவுறுத்திக் கொள்வார்கள்.

அவர்கள் பள்ளி செல்லும் பொழுது, எவரும் எழுந்து நின்று அவர்களுக்கு மரியாதை செய்யின், ''இது இறைவனின் திரு இல்லம். இதன் சொந்தக்காரனுக்கே இங்கு மதிப்பு அளிக்க வேண்டு மேயன்றி, வேறு எவருக்கும் மதிப்பளிக்கக் கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறுவர். அப்பொழுது அவர்களின் கண்கள் உணர்ச்சி மிகுதியால் பனிக்கும்.

அவர்களின் மகன் ஸையிது முஹம்மது (ரஹ்) அவர்களும், தந்தை போன்று சிறந்த வணக்கவாளராக இருந்தனர். அவர்களுக்கு ஷம்சுத்தீன் என்னும் சிறப்புப் பெயரும் வழங்கப் பெற்றிருந்தது. அவர்கள் எப்பொழு தாவது ஒரு நாள் 'தஹஜ்ஜுத்' தொழ இயலாது அயர்ந்து உறங்கி விட்டார் களானால், ''ஷம்சுத்தீனே! தஹஜ்ஜுத் வேளை வந்து விட்டது. எழும்! தொழும்!'' என்னும் ஒலி வீட்டின் நாற்புறத்திலிருந்தும் கேட்கும். உடனே அவர்கள் எழுந்து 'உளூ'ச் செய்து, தொழத் துவங்கி விடுவர்.

இதனைக் கவனித்த அவர்களின் மகன் ஸையிது யஹ்யா இதுபற்றித் தம் தந்தையிடம் விசாரித்த பொழுது, அவர்கள், ''அவ்வொலி எழுப்பியது ஒரு ஜின். நான் தஹஜ்ஜுத் தொழாது உறங்கிவிடின், என்னைக் குரல் கொடுத்து எழுப்பும் பொறுப்பை இறைவன் அதனிடம் ஒப்படைத்திருக்கிறான்'' என்று நவின்றார்கள்.

அவர்கள் இறந்த அன்று அது மனித உருத்தாங்கி வந்து அழுது கொண்டிருந்ததைத் தனயர் கண்டார்கள். பின்னர் அது எப்பொழுதாவது தன் எசமான விசுவாசத்தைத் தெரிவிக்கும் முறையில் தனயரை வந்து கண்டு செல்வதுண்டு. ஒரு நாள் தனயர் அந்த ஜின்னை நோக்கித் தமக்கும் தந்தைக்கே போன்று ஊழியம் செய்யக் கூடாதா என்று வினவினார். அதற்கு அது, ''அத்தகு பக்குவநிலையை நீர் எய்தப் பெறவில்லையே. நீர் உம் தந்தையின் அடக்கவிடத்தைத் தரிசித்து வாரும்! உமக்கும் ஒரு வேளை அவரைப் போன்றே ஆத்ம பலம் கிடைக்கலாம்'' என்று கூறியது.

அவ்வாறே தனயர் செய்ய, ஒரு நாள் அவர் தம் தந்தையின் அடக்கவிடத்தில் அமர்ந்திருக்கும் பொழுது, 'லா இலாஹ இல்லா அன்த சுப்ஹானக்க இன்னீ குந்து மினல்லாள்ளி மீன்' என்னும் கலிமாவை நாற்பத்தொரு நாள் ஓதி வருமாறு, உள்ளுணர்வு மூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறே அவர் ஓதி வர, அவர் ஆத்ம பலம் அடைந்து விட்டார். அந்த ஜின்னும் தானாகவே முன்வந்து அவருக்கு ஊழியம் புரியத் தொடங்கியது.

சையிது யஹ்யா (ரஹ்) அவர்கள் இளமையிலே 'விலாயத்' எய்தப் பெற்றிருந்தனர். சுன்னத் தொழுகைகளை இல்லத்திலும், ஃபர்ள் தொழுகைகளைப் பள்ளியில் இமாம் ஜமாஅத்துடன் தொழுவதும் இறுதிவரை அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்து வந்தது.

சையிது யஹ்யா (ரஹ்) அவர்களின் திருமகன் சையிது அபூ அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களும் 'விலாயத்' எய்தப் பெற்ற மகானாக விளங்கினர். அவர்கள் மூலம் பல அற்புதங்கள் வெளியாயின என்றும், ஒரு வெண்குட்ட நோயாளி மீது அவர்களின் கடைக்கண் பட்ட மாத்திரமே, அவன் பொன்மேனி பெற்றுப் பொலிவுற்று விளங்கினான் என்றும் கூறுவர். அவர்களின் நாவில், ''இறைவனே! நீயே வழிகாட்டி; நீயே உண்மை; உன்னையன்றி வழிகாட்டுபவர் வேறு யார்?'' என்னும் பொருள்படும். 'அன்தல் ஹாதீ, அன்தல் ஹக்கு, லைஸல் ஹாதீ இல்லாஹூ' என்ற இறைதுதி எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கும்.

அவர்களுக்கு ஐந்து ஆண்மக்களும், ஒரு மகளும் இருந்தனர். அவர்களில் சையிது மூஸா (ரஹ்) அவர்களும், ஸையிது ஆயிஷா அவர்களும் புகழ்பெற்று விளங்கினர்.

ஒருமுறை ஜீலானில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட பொழுது, மக்கள் திரண்டு வந்து, அம்மையாரிடம் மழைக்காக இறைஞ்சுமாறு வேண்ட, அம்மையார் அவர்கள் துடைப்பத்தைக் கையில் பிடித்துத் தம் வீட்டின் முற்றத்தைப் பெருக்கித் துப்புரவு செய்தபின், ''இறைவ எம்பெரும! உன் பணிப் பெண், தன் வீட்டு முற்றத்தைப் பெருக்கித் தூய்மைப்படுத்தி விட்டாள். இனிமேல் நீ தான் அதன் மீது தண்ணீர் தெளித்தருள வேண்டும்'' என்று இறைஞ்சினர். அடுத்த கணம் மழை, சோனா மாரியாகப் பெய்து நாடு செழித்தது.

அவரே போன்று அவரின் உடன் பிறந்தார் சையிது மூஸாவும் அல்லாஹ்வின் நல்லடியாராக விளங்கினர். ''ஹராம் ஆன பொருள் களுக்கு ஸையிது மூஸாவின் உடலை இறைவன் ஹராமாக ஆக்கி விட்டான்'' என்று ஒரு பெரியார் கூறும் வண்ணம் அவர்கள் தூய வாழ்வு வாழ்ந்தனர்.

வனங்களில் திரிந்து வணக்கம் செய்வதில் அவர்கள் தனி இன்பம் கண்டதால், அவர்களை மக்கள் ஜங்கிதோஸ்த் (வனத்தின் நண்பர்) என்னும் சிறப்புப் பெயரால் அழைத்து வந்தனர்.*

★ தம் மனத்துடன் அவர்கள் எப்பொழுதும் போராட்டம் நிகழ்த்தி வந்ததால் அவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

(3)

இப்பொழுது ரஷ்ய நாட்டிலுள்ள ஜீலான் நகரின் அண்மையில் அமையப் பெற்ற நீப் என்னும் சிற்றூரில் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழியில் ஸௌமயீ கிளையில் தோன்றிய சான்றோர், சையிது அப்துல்லாஹ் ஸௌமயீ (ரஹ்) அவர்கள், கற்றாரும் மற்றாரும் போற்றும் வண்ணம் தவ வாழ்க்கை நடத்தி வந்தனர். இறையருள் பெற்ற அவர்கள் ஆற்றி வந்த அற்புதங்கள் பல. ஒரு தடவை ஜீலானிலிருந்து ஸமர்க்கந்த் சென்ற வணிகக் கூட்டத்தினர் வழியில் திருடர்களால் மறிக்கப்பட்ட சமயம், அவ்வணிகக் கூட்டத்தினர் இவ்வான்றோரின் உதவியை வேண்டிய பொழுது, உடனே இவர்கள் அங்குக் காட்சி வழங்கி ஒரு திருமந்திரத்தை அத்திருடர்கள் மீது ஓதி ஊத, அவர்கள் திக்கு வேறு திசை வேறாகச் சிதறுண்டு ஓடினர் என்றும், பின்னர் இவர்கள் ஆங்கிருந்து மறைந்து விட்டனர் என்றும், அவ்வணிகக் கூட்டத்தினர் ஜீலான் வந்து இச் செய்தியை மக்களிடம் எடுத்துரைத்த பொழுது, 'அப்துல்லாஹ் ஸௌமயீ (ரஹ்) அவர்கள் பலமாதங்களாக ஜீலானை விட்டு நகரவில்லையே இஃதென்ன புதுமை!' என்று அவர்கள் வியப்பு மொழி பகர்ந்தனர் என்றும் கூறுவர்.

இவ்வாறு பல அற்புதங்கள் ஆற்றிய அப்பெரியார் ஒரு நாள், தம் தோட்டத்திலே தஸ்பீஹ் மாலையும் கையுமாக வீற்றிருந்த பொழுது, ஒருவர் அவர்களின் முன்வந்து, "ஷைகு அவர்களே! என் பிழை பொறுத்தருளுங்கள்!!" என்று பணிவோடு வேண்டி நின்றார்.

"என்ன செய்தி? நீர் எனக்கு என்ன பிழை செய்தீர், நான் உம்மைப் பொறுத்தருள?" என்று வியப்போடு வினவினார்கள் ஸௌமயீ (ரஹ்) அவர்கள்.

அதற்கு அவர், "ஷைகு அவர்களே! நான் திஜ்லா நதியின் ஓரத்தில் கடும் பசியாக வீற்றிருந்த சமயம், ஓர் ஆப்பிள் பழம் தண்ணீரிலே மிதந்து வந்தது. பசியின் கொடுமை தாங்காது நான் அதனை எடுத்து உண்டு விட்டேன். உண்ட பின் தான் எனக்கு அது ஹலாலா, ஹராமா என்னும் ஐயம் எனக்கேற்பட்டது. இந்த ஐயத்தின் காரணமாக நான் இரவு முழுவதும் சரியாக உறங்கவில்லை. விடிந்தெழுந்ததும் அதற்கு உரியவரைக் கண்டு, அவரிடம் என் பிழை பொறுத்தருளுமாறு வேண்ட, அந்நதி ஓரமாகவே நடந்து வந்தேன். இங்கு வந்ததும், அத்தோட்டத்தையும், அதில் ஓர் ஆப்பிள் மரத்தின் பவளநிறப் பழங்கள் நிறைந்த ஒரு கொப்பு ஆற்றை உராயும் வண்ணம் கீழே சாய்ந்து அசைந்தாடிக் கொண்டிருப்

பதையும் கண்டு, சரிதான் இப்பழத் தோட்டத்திலிருந்து தான் அப்பழம் ஆற்றில் விழுந்து மிதந்து வந்திருக்க வேண்டுமென்று உய்த்துணர்ந்து கொண்டேன். எனவே தங்களை நாடி வந்தேன். நிச்சயமாக அந்தப் பழம் இந்தத் தோட்டத்தைச் சேர்ந்தது தான். இத்தோட்டத்தின் உரிமையாளரான தங்களுக்கு உரியதுதான். ஆதலின் தங்களுக்குரியதான பழத்தைத் தங்களிடம் கேட்காது நான் எடுத்து உண்டதன் காரணமாக, பெரும் பிழை புரிந்து விட்டேன்'' என்று கூறித் தம்மைப் பெரு மனத்துடன் பொறுத் தருள வேண்டும் என்று அவர்களை வினயமாக வேண்டி நின்றார்.

இப்பொழுது ஸௌமயீ (ரஹ்) அவர்களின் மூளை வேகமாக வேலை செய்தது. தம் முன் வந்து மன்னிப்பு வேண்டி நிற்பவர் சாமான் யரல்லர், இறையருள் பெற்ற நல்லடியார் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்தார்கள். எனவே அவரை நோக்கி, ''உம்மை நான் மன்னிக்க முடியாது'' என்று கண்டிப்பான குரலில் கூறினார்கள்.

''அப்படியா! அவ்விதமாயின் அதற்கான தண்டனை என்ன? கூறுங்கள்! நான் அதனை மனமகிழ்வுடன் தீர்க்கின்றேன். மறுமையில் அதற்கான இறை தண்டனையை ஏற்பதைவிட, இம்மையிலே அதற்கான தண்டனையைத் தீர்த்து விடுவது மிகமிக நல்லதாகும்'' என்று பணிவோடு கூறினார் அவர்.

அப்பொழுது ஸௌமயீ (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, ''நீர் எனக்குப் பன்னிரண்டாண்டு காலம் பணிபுரிய வேண்டும்'' என்றார்கள்.

''நல்லது; அவ்விதமே செய்கின்றேன்'' என்று மறுபேச்சின்றி மறுமொழி பகர்ந்தார் வந்தவர். ஆற்றிலே மிதந்து வந்த ஓர் ஆப்பிள் பழத்தை உரியவரிடம் கேட்காது உண்டதற்காகப் பன்னிரண்டாண்டு பணி செய்ய வேண்டிய தண்டனை!

பன்னிரண்டாண்டுகள் உருண்டோடின. ஒரு நாள் ஸௌமயீ (ரஹ்) அவர்கள் தம் ஊழியரை அழைத்து, ''இன்றோடு நீர் நம் பணியில் அமர்ந்து பன்னிரண்டாண்டுகள் முடிவடைந்து விட்டன. நீர் இன்னும் ஓர் அலுவல் ஆற்ற வேண்டும். அதனை ஆற்றி முடித்தாலொழிய நான் உம்மை மன்னிக்க மாட்டேன்'' என்று கூறினார்கள்.

''நல்லது அதனையும் கூறுங்கள்! ஆற்றி முடிக்கின்றேன்'' என்றார் ஊழியர்.

அதுகேட்ட ஸௌமயீ (ரஹ்) அவர்கள் ''நீர் என் மகளை மண முடித்துக் கொள்ளவேண்டும். அவள் மூலம் எனக்கு ஒரு பேரன் பிறப்பதை நான் விரும்புகிறேன். அவளோ குருடு, செவிடு, ஊமை, முடம்'' என்று கூறினார்கள்.

"நல்லது; என் விதி அவ்விதமாயிருப்பின் நான் அதனையும் ஏற்றுக் கொள்கிறேன்" என்று மறுமொழி பகர்ந்தார் ஊழியர்.

திருமணம் எளிய முறையில் நடந்தது. திருமணம் முடித்து மணமகன் மணவறையில் புகுந்த பொழுது, அங்கு அழகே உருவெடுத்தாற்போன்ற ஓர் ஆரணங்கு வீற்றிருப்பதைக் கண்டதும், மணமகனுக்கு ஏற்பட்ட ஐயத்திற்கு அளவில்லை. 'நாம் தவறான இடத்திற்கு வந்து விட்டோமோ? எவருக்கோ உரிய மணமகளை இங்கு தவறாக அழைத்து வந்து அமரச் செய்து விட்டார்களோ?' என்று எண்ணினார் அவர். இந்த எண்ணத்துடன் அவர் ஒரு மூலையில் ஒதுங்கிப் படுத்துக் கொண்டார்.

விடிந்தெழுந்ததும் அவர் ஐயத்தெளிவு வேண்டி, ஸௌமயீ (ரஹ்) அவர்களை அணுகிக் கண்டதை மொழிந்த பொழுது, அவர்கள், "என் மகள் குருடி என்றேன். தனக்குரியவரல்லாத ஆடவரை அவள் என்றுமே பாராததால் அவள் குருடி தானே. அவள் செவிடு என்றேன். உண்மையில் அவளை தேவையற்ற, வீண் பேச்சுக்களை ஒரு போதும் செவி சாய்த்துக் கேளாததால் அவள் செவிடு தானே. மார்க்கத்திற்கு முரணான பேச்சுக் களை அவள் ஒருபோதும் பேசியதில்லையாதலால், அவள் ஊமையை யேயன்றி வேறென்ன? அவளோ வீட்டை விட்டு வீணே வெளியே செல்லமாட்டாள். எனவே அவள் காலிருந்தும் முடமேயன்றி வேறென்ன?" என்று புன்முறுவலுடன் விளக்கம் பகர்ந்தனர்.*

இல்லறச் சோலை புகுந்த இளம் மணமக்களான அபூஸாலிஹ் சையிது மூஸா ஜங்கீ தோஸ்த் (ரஹ்) அவர்களும் அப்துல்லாஹ் ஸௌமயீ (ரஹ்) அவர்களின் அருமைத் திருமகளார் உம்முல்கைர் பாத்திமா அவர்களும், இல்லறத்தை நல்லறமாகச் செய்து, இனிதே வாழ்ந்து வந்தனர். எனினும் இல்லறச் சோலையில் பிள்ளைக் கனி ஒன்றேனும் பழுக்காதது அவர்களுக்கு அளவற்ற மனவேதனையை அளித்தது. அபூ ஸாலிஹ் (ரஹ்) அவர்களும் கிழவராகி விட்டார்கள். பாத்திமா அவர்களும் அறுபதாம் வயதை எட்டிப் பிடித்துவிட்டார்கள். இதற்கு மேல் மகப்பேறு பெற மார்க்கமில்லை என்பதை அவர்கள் எண்ணிய பொழுது, அவர்களின் உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகென உருகியது.

ஒருநாள் அபூஸாலிஹ் (ரஹ்) அவர்களுக்கு திடீரென ஓர் உள்ளு ணர்வு ஏற்பட்டது. "இன்றிரவு அன்னையின் கருவில் தரிக்கும் குழந்தை அறிவொடும், தவத்தொடும், வனப்பொடும், வாழ்வொடும் சிறக்கும்" என்று அவர்கள் தம் நண்பர் குழாத்திடையே எடுத்துரைத்தார்கள். இச்செய்தி ஒரு நொடியில் நகரமெங்கணும் பரவியது.

★ இந்நிகழ்ச்சி இமாமுல் அஃலம் அவர்களின் தந்தையார் வரலாற்றிலும், நாகூர் ஆண்டகை அவர்களின் வரலாற்றிலும் காணப்படுகின்றது.

அன்றிரவு பாக்கியம் பெற்ற இரவாக இருந்தது. வலிகள் நாயகம் அவர்கள் இவ் அவனி தோன்றும் ஏற்றமிகு இரவாக இருந்தது. அவர்களோடு சேர்ந்து ஓராயிரத்து ஒரு வலிமார்களும், பாரினில் தோன்றும் புனித இரவாகவும் அது இருந்தது. அன்றிரவு பாத்திமா அவர்களின் கனவில் கிள்ரு (அலை) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, "பாத்திமாவே! உம் கவலை ஒழிக! அல்லாஹ் உமக்கு ஸலாம் சொன்னான். உம் கருவறையில் குவலயம் போற்ற வரும் குத்பு நாயகம் தரித்து விட்டார். அவருக்கு அப்துல் காதிர் என்னும் அழகுப் பெயர் சூட்டுக!" என்று நன்மாராயம் நவின்று மறைந்தனர்.

திடுக்குற்று விழித்தெழுந்த பாத்திமா அவர்கள், தம் கணவரை எழுப்பிச் சற்று முன் தாம் கண்ட கனவை விண்டனர். அது கேட்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் அளவில்லை. கணவனும் மனைவியும் சேர்ந்து இறைவனுக்கு ஆயிரம், ஆயிரம் முறை நன்றி செலுத்தினர்.

இதன்பின் பத்து மாதங்கள் பறந்தோடின. ஓரிரவு அபூஸாலிஹ் சையிது மூஸா (ரஹ்) அவர்கள், அயர்ந்து உறங்கும் பொழுது அவர்களின் கனவில் முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கித் தம் மகனனைய ஒரு மாமகன் அவரின் திருமா மகனாகத் தோன்ற விருப்பதை நன் மாராயம் மொழிந்து விட்டு மறைந்தனர்.

அவ்விதமே அடுத்த நாள் ஹிஜ்ரி 470 ஆம் ஆண்டு ரமலான் திங்கள் முதல் நாள் (கி.பி 1078 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 - ஆம் தேதி)* திங்கட்கிழமை இரவு, 'ஸஹ்ர்' நேரத்தில், வையகத்தோரும், வானகத் தோரும் ஒருங்கு சேர்ந்து.

"யா மஹ்பூபெ சுப்ஹானி, யா மஃஷூக்கெ ரஹ்மானீ, யா கிந்தீலெ நூரானீ, முஹ்யித்தீனி ஜீலானீ" என்று போற்றிப் பரவசமடைய, குத்புல் அக்தாப், கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள், இவ்வுலகில் தோன்றினார்கள். இதனையே புலவர் நாயகம் ஷைகு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் தாம் பாடிய 'குத்பு நாயகம்' என்னும் நூலில்,

தானமும் தகையும் ஒழுக்கமும் நெறியும்
    தவத்தொடு செல்வமும் செழிப்பும்
மானமும் தயவும் இரக்கம் ஆதரவும்
    மானிடர்க் கரியன வாழ்வும்

★ ஷஃபான் பிறை இருபத்தொன்பதில் அவர்கள் பிறந்ததாக மற்றொரு வரலாறு கூறுகிறது.

கோனவன் புறத்துப் பேறுள வெல்லாம்
கூடியோர் உருவெடுத் தென்ன
மோனநன் னிலையின் ஞானமேற் றுறையின்
முஹ்யித்தீன் ஆண்டவர் பிறந்தார்.

என்று பண்ணிசைக்கின்றார்கள்.

இதனையே பின்னர் தோன்றிய மகாவித்வான் பதுருத்தீன் புலவர் அவர்கள் தாம் இயற்றிய முஹ்யித்தீன் புராணத்தில்,

குறைஷியங் குலத்துக் கொருமணி யெனவும்
குருநபிக்(கு) இருவிழி யெனவும்
அறந்தரும் இஸ்லாம் தனக்கணி யெனவும்
அவனியில் தீனவர் எவர்க்கும்
பெறுகதி தரவந் துதித்த சஞ்சீவியாய்ப்
பெண்மயில் பாத்திமுத் தெனும் தாய்
குறையற முடிக்கும் தவத்தினுக் குயிராய்
கௌதெனும் முஹ்யித்தீன் பிறந்தார்

என்று பாவிசைக்கிறார்கள்.

அப்புனித இரவில் கௌது நாயகம் மட்டும், இவ் அவனி தோன்றவில்லை. அன்றிரவு ஜீலான் நகரில் மட்டும் ஆயிரத்தொரு குழந்தைகள் பிறந்தன. அத்தனையும் ஆன்றோர்களும், சான்றோர்களும், வலிமார்களும் ஆன ஆண் குழந்தைகள். கௌது நாயகம் பிறப்பதைக் கட்டியம் கூறும் முறையில், அவர்கள் அனைவரும் அவனி தோன்றினார்களோ, என்னவோ? இதனை ஐதுரூஸ் நெய்னார்ப் புலவர் தாம் பாடிய 'நவமணி மாலை' என்னும் நூலில்,

பெண்களெனும் பிள்ளைகளைப் பிள்ளைப் பெறுகின்ற
பெண்களெவ ராயினுமே பெற்றதிலை பெற்ற
பெண்களிலெலாம் அரிய பேறுடைய விண்ணோர்
பெண்கள்மகிழ் நற்புருடப் பிள்ளைகளைப் பெற்றார்.

என்று பண்ணிசைத்து மகிழ்வது, நமக்கும் பரவசத்தை உண்டு பண்ணுகிறது.

மாண்பார் ரமலானின் முதல் நாள் பிறந்த அம் மாமகனார் பகலிலே பால் அருந்தாது, இரவிலே மட்டும் பால் அருந்தியதும், அந்த ரமலான் மாதம் முடியும் வரை, அவர்கள் அவ்வாறே செய்து வந்ததும், அவர்களை ஈன்ற அன்னை தந்தையருக்கு மட்டற்ற வியப்பையும், மகிழ்ச்சியையும் நல்கின. உண்மையில் தம் மகன் இறைவனின் பேரருள் பெற்றவரே என்பதை அவர்கள் எண்ணியபொழுது, அவர்களின் உள்ளத்தில் களி பேருவகை பொங்கித் துளும்பியது.

அடுத்த ஆண்டு ரமலான் முதல் பிறையைக் காண இயலா வண்ணம் கார்முகில் மறைத்த பொழுது, மக்கள் பிறை காணாது நோன்பு நோற்க மயங்கினர். விடிந்ததும் அவர்கள் ஆண்டகை அவர்களின் அன்னை யாரிடம் வந்து இதுபற்றி வினவியபொழுது, அவர், தம் மகன் அன்று வைகறையிலிருந்து பால் அருந்தவில்லை என்றும், எனவே அன்று ரமலான் முதற் பிறையாக இருக்கும் என்றும் கூறினார். அவர் கூறியது உண்மையாகவே இருந்தது. பக்கத்து ஊர்களில் அன்று பிறை கண்டதாகப் பின்னர் செய்தி வந்ததைச் செவியுற்றதும், மக்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

தம் சின்னஞ்சிறு மகன் பெரு மனிதராகிப் பாரெலாம் புகழும் மேதையாக, மாபெரும் இறை நேசச் செல்வராக விளங்குவதை தந்தை யார் அபூஸாலிஹ் காணும் நற்பேறு பெறவில்லை. மகனின் பச்சிளம் பருவத்திலேயே அவரை, அன்னையாரின் அரவணைப்பிலும், மாமனாரின் ஆதரவிலும் விட்டுவிட்டு, அவர் இவ் அவனி நீத்தார். தம் மகனின் மகனை வளர்க்கும் மாபெரும் பொறுப்பு, அவரின் பாட்டனார் ஸையிது அப்துல்லாஹ் ஸௌமயீயின் தளர்வுற்ற தோள்கள் மீது திடீரென வந்து விழுந்தது. அம் முதியவருக்குச் சொல்லொணாத் திடுக்கத்தை நல்கியது. எனினும் இறைவன் விட்ட விதியை ஏற்றுத் தம் அருமைப் பேரரைத் தம் உயிரினும் மேலாய்க் கருதி வளர்த்து வந்தார் அவர். விரைவில் அவரும் இறைவனின் அழைப்போலையை ஏற்று, அவனி நீக்கவே, அவர்களை வளர்க்கும் முழுப் பொறுப்பும் அன்னை பாத்திமாவின் தலையில் வந்து விழுந்தது.

ஆறு வயதில் பள்ளிக்கு அனுப்பிவைக்கப்பட்ட அவர்கள், ஆங்கு மற்ற மாணவர்களை விட எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கினார்கள். மற்றவர்கள் ஒரு வாரத்தில் மனனம் செய்யும் பாடங்களை அவர்கள் ஒரே நாளில் மனனம் செய்து ஒப்புவிப்பதைக் கண்டு, ஆசிரியரும், அன்னை யாரும் இறும்பூதெய்தினர். இரண்டாண்டுகளில் இறை மறையாம் திருக்குர்ஆன் முழுவதும் அவர்களின் இளமை உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டதைக் கண்டு, ஆசிரியருக்கும், அன்னையாருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை.

ஒரு நாள் அவர்கள் தெருவழியே செல்லும் பொழுது, ஒரு மெல்லிய குரல், ''மாண்பாளரே!'' என்று அழைப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த் தார்கள். எவரையும் காணோம். அப்பொழுது அவர்களின் உள்ளத்தை அச்சம் கௌவ அவர்கள் இல்லத்திற்கு வெருண்டோடினார்கள்.

மற்றொரு நாள் தம் பள்ளித் தோழர்கள் விளையாடச் செல்வதைக் கண்டதும், தாமும் அவர்களுடன் சேர்ந்து விளையாடச் செல்லலாமா

என்ற எண்ணம் சிறுவர் அப்துல் காதிரின் உள்ளத்தில் ஊசலாடியது. எடுத்து வைத்தார்கள் ஓர் அடி, விளையாடும் வெளிநோக்கி. அப்பொழுது திடீரென ஒரு மெல்லிய குரல், "நீர் எங்கு செல்கிறீர்?" என்று வினவியதைக் கேட்டு அதிர்ந்து போய், அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தார்கள். ஒருவரையும் காணோம். அடுத்த கணம் அவர்கள் தங்களின் இல்லம் நோக்கி விரைந்தோடினார்கள். இதன்பின் அவர்கள் தம் வாணாளில் ஒரு போதும் விளையாட எண்ணவே இல்லை.

விளையாடத்தான் செய்யவில்லை. சற்று அயர்ந்து உறங்குவோம் என்று எண்ணி அவர்கள் சற்று அயர்ந்து உறங்கினால், "உறங்குவதற் காகவோ நாம் உம்மைப் படைத்தோம்" என்ற ஒலி அவர்களின் காதருகே ஒலிக்கக் கேட்டு அவர்கள் விழித்தெழுவார்கள். தனித்திருந்தாலோ, "நீரோ மாண்பாளர். மென்மேலும் மாண்பினைப் பெறத் தனிமையை நாடுக!" என்று ஒலி கேட்டுத் திடுக்குறுவார்கள்.

பத்தாண்டுப் பருவத்தை எய்திய அப்துல்காதிர், ஒரு நாள் பள்ளி நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் பின்புறத்திலிருந்து, "அல்லாஹ்வின் வலி வருகிறார்" என்று எவரோ கூறுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஒருவரையும் காணோம்.★ பின்னர் அவர்கள் பள்ளிவந்தபொழுது, அவர்களின் ஆசிரியர், "அல்லாஹ்வின் வலி அமர இடமளியுங்கள்!" என்று மற்ற மாணவர் களிடம் கூறியதைக் கேட்டதும், அவர்களின் வியப்புப் பன்மடங்கு அதிக மாகியது.

இதன்பின் அப்துல் காதிரின் வாழ்விலே ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. அவர்கள் தனித்து வெளியே செல்லும் பொழுது, அவர்களின் செவிகளில், "நற்பேறு பெற்றவரே! நற்பேறு பெற்றவரே!!" என்னும் நன்மாராயம் இடை விடாது அசரீரியாக முழங்கிக் கொண்டிருந்தது. இது முதல் அவர்கள் தங்களின் இல்லத்தில் தனித்து இறை வணக்கத்தில் ஈடுபடத் தொடங்கினார்கள். அப்பொழுது அவ் அசரீரி சற்று உரத்த குரலில், "நாம் உம்மை மனிதர் மனிதராக, மாண்பாரும் மனிதராகக் காண்கிறோம், ஆன்ம நலனும் அரும்பெரும் வெற்றியும் பெற விழையின் என்னுடன் தனித்திரும்" என்று அறிவுரை பகர்ந்தது.

ஹிஜ்ரி 488 - ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள், அவர்கள் வெளியே சென்று கொண்டிருந்த பொழுது, வழியில் காளைகள்

★ ஆண்டகை அவர்களிடம் தாங்கள் அல்லாஹ்வின் வலி என்பதை எப்பொழுது அறிய வந்தீர்கள் என்று பிற்காலத்தில் வினவப்பட்டபொழுது, அவர்கள் இந்நிகழ்ச்சியை எடுத்துரைத்து, அவ்வாறு தம்மை முதலில் அழைத்தவர்கள் விண்ணவர்கள் என்று கூறினர்.

நிற்பதைக் கண்டு, அதில் ஒரு கரு நிறக்காளையை அவர்கள் விளையாட்டுக்காக விரட்டினார்கள். அப்பொழுது அது அவர்களைத் திரும்பி முறைத்துப் பார்த்தது. அப்பார்வை, ''நீர் விளையாட்டுக்காகப் படைக்கப் படவில்லை'' என்று இரு கருத்துப்பட அவர்களுக்கு உணர்த்துவது போன்றிருந்தது.

எனவே, இல்லம் மீண்ட இளைஞர் அப்துல் காதிர், இதே நினைவாகத் தம் இல்லத்தின் மேல் தளத்தில் நின்று உலவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் கண்களுக்குப் பல நூறு காதத் தொலைக்கப்பால் உள்ள அரஃபாத் வெளியும், அங்கு இலட்சோப லட்சம் புனித ஆன்மாக்கள் குழுமி, இறைவனை வழுத்தி அழுது கண்ணீர் வடித்து இறைஞ்சிக் கொண்டிருக்கும் நிலையும் திருக்காட்சி வழங்கியதைக் கண்டதும், அவர்களுக்குத் தங்களின் கண்களையே தங்களால் நம்ப இயலவில்லை. இனி, தங்களின் கடன் இறைபணி செய்து கிடப்பதே என்பதை அவர்கள் தெள்ளத் தெளியத் தெரிய வந்தார்கள். அதற்குத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள, அக்காலத்தில் இஸ்லாமியக் கலா ஞானத்தின் இருப்பிடமாக விளங்கிய பக்தாது மாநகரம் சென்று உயர்தர மார்க்க, ஆன்மீகக் கல்விகளைப் பெறுவதே சாலச்சிறந்த வழி என்றும் முடிவு செய்தார்கள்.

★★★

(4)

ஜீலானிலிருந்து பக்தாது மாநகரம் ஒரு மாதத் தொலைப் பயணத்தில், அதாவது நானூறு மைல்களுக்கு அப்பால் இருந்தது. அங்கு வணிகக் கூட்டத்தினர் சாரிசாரியாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு தட்வை நாற்பது வணிகர்கள் இரு நூறு ஒட்டகங்களில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு பக்தாது செல்வதாகக் கேள்வியுற்று அக்கூட்டத்தினருடன் சேர்ந்து இளவல் அப்துல் காதிரும் இறை ஞானக் கல்வி பெறுவதற்காக பக்தாது மாநகரம் புறப்பட விழைந்தார்கள். இதனை அவர்கள் தம் அருமை அன்னையாரிடம் எடுத்துரைத்ததும், அவர்கள் ஒரு கணம் துடித்து விட்டார்கள். ''என் கணவரையும் இழந்தேன். என் தந்தையாரையும் இழந்தேன். இத்தள்ளாத வயதில் நீயே எனக்கு ஆதரவாயிருப்பாய் என்று நான் எண்ணியிருந்த பொழுது எவ்வாறு நீ என்னை விட்டுப் பிரிய நினைத்தாயோ?'' என்று கூறிக் கண்ணீர் விட்டு அழுதார்கள். பின்னர் தம் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு, ''மகனே! நீர் இந்தத் திடீர் முடிவுக்கு வர அடிப்படைக் காரணம் என்ன?'' என்று அனுதாபத்துடன் வினவினார்கள். அதற்கு மைந்தர், அன்று நடந்தவை அனைத்தையும் ஒன்றும் விடாது அன்னையாரிடம் நவின்றனர். அது

கேட்டதும் அன்னையின் உள்ளம் இளகியது. தம் மகனின் வருங்காலப் பெருவாழ்வு அவர்களின் மனக்கண் முன் ஒரு கணம் பளிச்சிட, அவர்களின் மனம் மறுகணம் மாறியது. அதற்கு மேல் தம் மகனின் இறைஞான வேட்கைக்கு எதிரிடையாக நிற்க அவர்களால் இயலவில்லை. ''நல்லது, மகனே! உன் விருப்பம் போல் செய்! இறைவன் உனக்குப் பேரருள் பாலிப்பானாக!'' என்ற ஆசிமொழி அவர்களின் வாயிலிருந்து வெளி வந்தது. அப்பொழுது இளைஞர் அப்துல் காதிருக்கு ஏற்பட்ட இன்ப மகிழ்விற்கு அளவில்லை.

பிரயாண நாளும் வந்து விட்டது. அப்பொழுது அன்னை தம் ஆருயிரனைய திருமாமகனை அருகழைத்து, ''மகனே! எனக்கோ இப்பொழுது எழுபத்தெட்டு வயதாகிறது. இனிமேல் நாம் இருவரும் இவ்வுலகில் சந்திப்போமா என்பதை அறியேன். இறைவன் நாடின், மகிழ்வுறும் வண்ணம் நீ இப்பூவுலனில் நடந்து கொள்ள வேண்டும். என் பவம் பொறுக்குமாறு நீ இறைவனிடம் ஒவ்வொரு நாளும் இறைஞ்சுவதை உன்னுடைய நீங்காக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

''உன் அருமைத் தந்தையார் அவனி நீத்த பொழுது, எண்பது பொற் காசுகளை வைத்துச் சென்றார்கள். அவற்றில் நாற்பது பொற்காசுகளை உம் இளவல் அப்துல்லாஹ்வுக்காக வைத்துவிட்டு நாற்பது பொற்காசு களை உமக்காக எடுத்து வந்துள்ளேன் அவற்றை உம் சட்டையில் பத்திரமாக வைத்துத் தைத்துத் தருகிறேன். சட்டையைக் கழற்றித்தாரும்!'' என்று அன்போடு கூறினார்கள்.

அவ்விதமே தனயர் தாம் அணிந்திருந்த சட்டையைக் கழற்றிக் கொடுத்ததும், அதன் விலாப்புறத்தில் அவற்றை வைத்துத் தைத்து மகனிடம் கொடுத்தனர். மகன் அதனை வாங்கி அணிந்து கொண்டதும், அவரின் மீது ஒரு போர்வையைப் போர்த்தி, ''மகனே! உம் தந்தையார் எப்பொழுதும் 'ஹலால்' ஆன உணவையே உண்டு வந்தார்கள். அதே போன்று நீரும் 'ஹலால்' ஆன உணவையே உண்டு வர வேண்டும்! 'ஹராம்' ஆன பொருள் அணுவத்தனையும் உம் வயிற்றிற்குள் புக நீர் அனுமதிக்கக் கூடாது!

''அடுத்து, நீர் எங்கும், எவரிடமும், எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மையையே உரைக்க வேண்டும். இது உம்மை ஈன்ற அன்னையின் ஆணை'' என்று கூறி, இன்னும் எத்தனை எத்தனையோ அறிவுரை களெல்லாம் மகனுக்கு எடுத்துரைத்தார்கள்.

பின்னர் தம் மகன் நாள்தோறும் தவறாது ஓதி வருவதற்காக ஒரு 'துஆ' வையும் அவருக்குக் கற்றுக் கொடுத்து, ''மகனே! இதனை நீர்

இடைவிடாது ஓதிவாரும்! நீர் எல்லா நலன்களும் எய்தப் பெறுவீர்'' என்று கூறித் தம் மகனுடன் சேர்ந்து வணிகக் குழுவினர் புறப்படும் இடத்திற்குத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றார்கள்.

இறுதியாக மகன் அன்னையாரிடம் விடைபெற்ற பொழுது, மகனின் செந்தாமரை முகத்தில் ஆயிரம், ஆயிரம் முத்தங்களைப் பொழிந்து,

'கண்ணெழில் மணியே! நெஞ்சம் கனிந்தினி தொழுகும் தேனே!
தண்ணெழில் மதியே! என்றன் தவப்பலன் மகனே! நின்னை
விண்நெடு மண்ணும் கோன்மை விளக்கிய நாயன் பக்கல்
உண்ணெகிழ்ந் தடைக்க லத்தில் பணையமாய் உதவினேனால்'

என்று கூறி இறைவன் பால் தம் மகனை அடைக்கலமாக ஒப்படைத் தார்கள். அப்பொழுது அவர்களுடைய கண்கள் நீர் வீழ்ச்சியெனக் கண்ணீரைக் கொட்டின.

இதன் பின் தனயர் அன்னையிடம் பிரியா விடை பெற்றுப் புறப்பட்ட பொழுது, பீரிட்டு வரும் அழுகையினூடே அன்னை தம் மைந்தரை நோக்கி,

''மண்ணெலாம் போற்றும் மைந்தா! மஃஷரின் நாளை யன்றிக்
கண்ணெலாம் நிறையக் காணல் இனி இ(ல்) லை காட்சி''

என்று கூறி அவர்கள் இருவருக்கும் இனிமேல் சந்திப்பு மஃஷரில் தான் என்று முன்னர் தாம் கூறியதை உறுதிப்படுத்தினார்கள்.

கானகத்தின் நடுவே வணிகக் குழு சென்று கொண்டிருக்கிறது. அது ஹமதான் நகரைக் கடந்து, தர்தங் என்னும் காட்டினூடே சில கல் தொலை தான் சென்றிருக்கும். அப்பொழுது திடீரென அறுபது பேர் அடங்கிய ஒரு கொள்ளைக் கூட்டம் எங்கிருந்தோ அவர்கள் மீது பாய்ந்து, அவர்களி டமிருந்த பொருள்களையெல்லாம் கொள்ளை கொண்டது. அச்சமயம் அது கண்டு சற்றேனும் அமைதி குலையாதவராய் ஆங்கொரு புறத்தில் ஒரு இளவல், எளிமையே உருவெடுத்தாற் போன்று நின்று கொண்டிருப் பதைக் கொள்ளைக்காரர்களில் ஒருவன் கண்டதும், அவர்களை நோக்கி அவன் விளையாட்டாக, ''பக்கீரே! உன்னிடம் என்ன உள்ளது?'' என்று வினவினான். ''நாற்பது பொற்காசுகள் உள்ளன'' என்று அவர்கள் ஒரு கணமும் தாமதியாது கணீரென மறுமொழி பகர்ந்தனர். இளவலின் இம்மறுமொழி அவனுக்கு ஏளனச் சிரிப்பைத் தான் உண்டு பண்ணியது. ''பஞ்சையிடம் பொற்காசுகளா? பக்கீரிடம் பொற்குவையா?'' என்று கூறி இடி, இடியென்று சிரித்தான். அதன்பின் ஆங்கிருந்த தன் தோழனிடமும் இச்செய்தியை ஏளனச் சிரிப்புடன் கூறினான். அவனுடைய தோழனும்

ஆங்கு நின்று கொண்டிருந்த இளவலை அணுகி முன்னவன் கேட்ட கேள்வியையே கேட்டான். அதற்கும் முன் போன்றே பதில் வந்தது. அது கேட்டு இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இச்செய்தி கொள்ளைக் கூட்டத்தினரின் தலைவனுக்குத் தெரிய வரவே, அவன் தன் முன்னே அவ் இளவலை அழைத்து வருமாறு தம் கூட்டாளர்களுக்கு ஆணையிட்டான். அவ்வாறே இளவலும் அடுத்த கணம் அவன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். அப்பொழுது அவன் அவர்களை நோக்கி, "உன்னிடம் என்ன உள்ளது?" என்று வின வினான். "நாற்பது பொற்காசுகள் உள்ளன" என்று இளவல் மறுமொழி பகர்ந்தனர். "எங்கே அவை?" என்று அடுத்த கேள்வி அவனுடைய வாயிலிருந்தும் வெளிவந்தது. இளவல் தம் விலாப்புறத்தைச் சுட்டிக் காட்டினர். அப்பொழுது கொள்ளைக் கூட்டத்தினரில் ஒருவன், அவர்களின் சட்டையின் விலாப்புறத்தைப் பிரித்து, அதிலிருந்து நாற்பது பொற்காசுகளை எடுத்துத் தன் தலைவனின் கையில் கொடுத்தான்.

அவற்றைக் கையில் பெற்றதும், தலைவனின் உடல் முழுவதையும் என்றுமில்லா வண்ணம் ஒரு திடுக்கம் ஆட்கொண்டது. அவன் தன் முன் அமைதியின் திருவுருவாக நின்று கொண்டிருந்த இளவலை நோக்கி, "நீ இதனை ஒளிக்காது, உள்ளதை உள்ளவாறு உரைத்த காரணம் என்ன?" என்று வினவினான். "எச்சமயத்திலும், எந்நிலையிலும் உண்மையையே உரைப்பதாக என் அன்னையிடம் ஆணையிட்டு வந்தேன். அதனைக் காப்பது தானே முறைமை" என்று இளவல் மறுமொழி பகர்ந்தனர்.

இளவலின் இம்மறுமொழி, அக்கொள்ளைக் கூட்டத் தலைவனின் உச்சியைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியது. அவனுடைய கண்களி லிருந்து கண்ணீர் வெள்ளமாக ஓடியது. "இளைஞரே! நீர் உம்மை ஈன்ற உம் அன்னையின் ஆணைக்கு மாறு செய்யாது, அதனை நிறைவேற்றி விட்டீர். ஆனால் நானோ என் அன்னையும், ஆசானும், ஆண்டவனும், அவனின் திருத்தூதரும் புகன்ற அனைத்து அறிவுரைக்கும் மாறு செய்து, இவ்விழி தொழிலைச் செய்து உயிர் வாழ்ந்து வருகின்றேன். சீ! இதுவும் ஒரு வாழ்வா? நானும் ஒரு மனிதனா? பாவி, பாவி" என்று கூறிக் கதறினான். இதனையே புலவர் நாயகம் அவர்கள் தாம் பாடிய 'குத்பு நாயகம்' என்ற காப்பியத்தில்,

தாயுரை இகழ்ந்தனன்; தந்தை மெய்க்குரு
வாயுரை இகழ்ந்தனன்; வல்ல நாயகன்
தூயுரை இகழ்ந்தனன்; தூதர் நன்னபி
ஆயுரை இகழ்ந்தனன்; பாவி யாயினேன்

என்று பாடுகிறார்கள்.

இதன் பின் அவன் இளவலின் கரத்தைப் பற்றிக் கொண்டு தமக்கு விமோசனம் உண்டா என்று கதறி அழுத வண்ணம் வினவினான். ''ஆம் நிச்சயமாக உண்டு'' என்று கூறி, அவனுக்கு அவர்கள் நேர்வழியைப் போதித்தினர். அக்கணமே அவன் அவர்களின் கரகங்களைத் தன் கண்களில் ஒற்றி நேர்வழி பெற்றான்.

பின்னர் அவன் தன் தோழர்களை ஒருங்கழைத்து, ''தோழர்களே! இதுகாறும் நான் இறைவனை விட்டும் முகம் திரும்பி, தவறான பாதை யில் அடியெடுத்து வைத்து நடந்து வந்தேன். இப்பொழுது அவன்பால் முகம் திருப்பி, அவனிடம் சரணடைந்து விட்டேன். இனிமேல் நான் சென்ற அப்பாதையை, என் கடைக்கண்ணாலும் பார்க்கமாட்டேன். இது உறுதி. ஆதலின் நீங்கள் இக்கணத்திலிருந்து என்னைத் தலைவன் என ஏற்றுக் கொள்ள வேண்டாம்! இக்கணத்திலிருந்து நீங்கள் வேறு, நான் வேறாகி விட்டோம். இனிமேல் நீங்கள் உங்களின் மேலான விருப்பப்படி செயலாற்றலாம்'' என்று கூறினான்.

அதுகேட்ட அவர்கள், ''துன்மார்க்கத்தில் தங்களைப் பின்பற்றி வந்த நாங்கள், எவ்வாறு தாங்கள் நன்னெறியில் அடியெடுத்து வைத்து நடக்கும் பொழுது, தங்களை விட்டுப் பிரிந்து வேறு மார்க்கத்தில் செல்வோம். அரசன் எவ்வழி, குடிகளும் அவ்வழியன்றோ? எனவே நாங்களும் தாங்கள் செல்லும் வழியிலே வருகிறோம்'' என்று கூறினர்.

அவர்களின் இப்பதில் அவனுக்கு மகிழ்ச்சியையும் மனநிறை வையும் அளித்தது.

அப்பொழுது அவன் அவர்களை நோக்கி, கொள்ளையிடப்பட்ட பொருள்களை, அவரவர்களிடம் ஒப்படைத்து விட்டு, இளவலின் கரம் பற்றி நேர்வழி பெறுமாறு ஆணையிட்டான். அவ்விதமே அவனுடைய ஐம்பத்தொன்பது தோழர்களும் செய்தனர். ★

அப்பாஸியக் கிலாஃபத்தின் ஆட்சிபீடமாக விளங்கிய அன்றைய பக்தாது மாநகரம், கோலாகலமாகக் காட்சி வழங்கிக் கொண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் மாடங்களும், மாளிகைகளும் தோற்றம் வழங்கின. ஆறு கிடந்தன்ன அகல் நெடும் வீதிகளில் ஆயிரம், ஆயிரம் மக்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களினூடே ஒரு சில

★ இக்கொள்ளைக் கூட்டத்தின் தலைவரான அஹ்மது அலிபி என்பவர் பின்னர் சிறந்த இறைநேசச் செல்வராக விளங்கினார். இந்நிகழ்ச்சி பற்றி பிற்காலத்தில் ஆண்டகை அவர்கள் குறிப்பிடும் பொழுது. ''உண்மையின் அடிப்படையிலேயே நான் என் வாழ்வைத் தொடங்கினேன். அதை விட்டும் நான் ஒரு போதும் விலகிச் சென்றதில்லை'' என்று கூறினர்.

அறிஞர்களும், உண்மைப் பெரியார்களும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அதோ தெரிகின்றதே கூம்பு நீட்டிய மனாராவுடன் ஒரு கட்டடம். அதுதான் நிஜாமிய்யா கல்லூரி. ஸல் ஜோக்கிய மன்னரின் முதல் அமைச்சரான நிஜாமுத்தீன் தூஸி, தம் பெயரால் நிர்மாணித்த நிறுவனம் அது. அதிலே தான் இமாமுல் ஹரமைனி (ரஹ்) அவர்களும், அவர்களின் மாண்பார்ந்த மாணவர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும், ஒருவர் பின் ஒருவராகத் தலைமை ஆசிரியர் பதவி தாங்கிச் சில காலம் மக்களுக்கு அறிவு விருந்து நல்கி வந்தார்கள். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், அப்பொழுது ஆங்கு அப்பதவியில் இல்லை. அவர்கள் துறவு மேற்கொண்டு சென்று விட்டதன் காரணமாக, அவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் அபூ ஜக்கரிய்யா யஹ்யா தப்ரேஸி(ரஹ்) அவர்கள் வீற்றிருந்து, மக்களுக்கு அறிவமுது வழங்கி வந்தார்கள்.

இளவல் அப்துல் காதிர் தம் ஊரிலிருந்து புறப்பட்டு ஒருமாதம் கழித்து, பக்தாது மாநகரின் மண்ணில் அடியெடுத்து வைத்ததும், அவர்களின் உடலிலும் உள்ளத்திலும் ஒருவித மின் ஆற்றல் ஊடுருவிப் பாய்வது போன்றிருந்தது. தம்முடைய இலட்சிய பூமியை அடைந்து விட்ட பெருமகிழ்ச்சியில் அவர்களின் உள்ளம் துள்ளி விளையாடியது. கடைகளையும், கடைத்தெருக்களையும், அங்கு அழகழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த வண்ணவண்ணப் பொருள்களையும் பார்த்துக் கொண்டு சென்றார்கள் அவர்கள். அதன்பின் அவர்களின் கண்கள் தமக்கு அறிவமுதூட்டும் ஆசானைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

அச்சமயம் பக்தாது மாநகரில் கல்வியின் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்து விளங்கிய பெரியார்கள் இருந்துவந்தார்கள். அவர்களில் காஜி அபூ ஸயீதினில் முபாரக் பின் அலீ முகர்ரமி என்பாரும், அபுல் வஃபா அலீ பின் அகீல் என்பாரும் இஸ்லாமிய சட்ட திட்டங்களிலும் (ஃபிக் ஹிலும்) அபூ காலிபும் அபுல் கனாயிமும், அபுல்காசிமும் ஹதீதுக் கலையிலும், அரபி இலக்கியத்தில் அபூ ஜகரிய்யா யஹ்யா தப்ரேஸி அவர்களும், தரீக்கத், தஸவ்வுஃப் ஆகிய ஆன்மீகக் கலையில் ஹம்மாது ஷைகு அவர்களும் புலமை பெற்று விளங்கினார்கள். ஹம்மாது ஷைகு அவர்கள், கல்லூரி சென்று கல்வி பயிலாத போதினும், இறையருளால் ஆன்மீகக் கல்வியில் உயர்வெய்தி நின்றார்கள்.

முதலில் மார்க்கச் சட்டங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேற விரும்பிய இளைஞர் அப்துல் காதிர், அக்காலை தாஜுல் ஆரிஃபீன் (இறைநேயர் களின் கிரீடம்) என்ற புகழ்ப் பெயர் பெற்று விளங்கிய அபுல் வஃபா அவர்களின் அவைக்குள் அடியெடுத்து வைத்து நடந்தார்கள். அவர்

களைக் கண்டதும், அறிஞர் அபுல் வஃபா, தம் போதனையைத் திடீரென நிறுத்தித் தம்மை நோக்கி வந்து கொண்டிருந்த இளவலை உள்ளே வராது தடுத்து நிறுத்தி அப்புறப்படுத்துமாறு தம் மாணவர்களுக்கு ஆணை யிட்டார்கள். அவ்விதமே மாணவர்கள் செய்தார்கள்.

மீண்டும் அவ் இளவல் வரவே, மீண்டும் அவர்கள் அப்புறப்படுத் தப்பட்டனர். மீண்டும் அவர்கள் வரவே, அவர்களை அப்புறப்படுத்த மாணவர்கள் பாய்ந்த பொழுது ஆசிரியர், அவர்களைக் கையமர்த்தித் தாமே முன் சென்று அவர்களை அப்புறப்படுத்தினர் - இல்லை. இல்லை ஆரத்தழுவி ஆயிரம், ஆயிரம் முத்தங்களை அவர்களின் நெற்றியில் சொரிந்தனர். அப்பொழுது மாணவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. நடப்பது நனவா, கனவா என்று அறியாது ஐயுற்ற வண்ணம் அவர்கள் திகைத்து நின்று கொண்டிருந்தனர்.

இச்சமயம் ஆசிரியர் தம் மாணவர்களை நோக்கி, "இவரை இகழ்ந்து நான் அப்புறப்படுத்திடக் கூறினேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம்! இவருக்கு இணையானவர் இங்கு ஒருவருமில்லாத காரணத்தாலும், இவரின் மாண்பினை உங்களுக்கு உணர்த்துவதற்காகவுமே நான் அவ்விதம் செய்யக் கூறினேனேயன்றி, வேறில்லை. எதிர் காலத்தில் இவரின் ஆணையிலும், வல்லபத்திலும் அகிலமனைத்தும் ஆட்படும். இவர் 'குத்பு' ஆகவும், 'கௌது' ஆகவும் விளங்கி, ஆன்மீகச் செங்கோல் செலுத்துவார்" என்று கூறினர்.

பின்னர் அவர்கள் இளவல் அப்துல் காதிரின் பக்கல் திரும்பி, "இளைஞரே! இன்றைய அறிவுலகம், வருங்காலத்தில் உமக்குரியதாய் விளங்கும். ஊழி ஊழி காலம் உம்முடைய ஞானச் சேவலே கூவிக் கொண்டிருக்கும்" என்று ஆசிமொழி பகர்ந்தனர். அத்துடன் நில்லாது தம்முடைய கைத்தடியையும், உணவருந்தும் பீங்கானையும், தொழுகை விரிப்பையும், ஜபமாலையையும், மேலங்கியையும் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினர். அப்பொழுது ஒருவர் அவருக்கு தீட்சை நல்குமாறு தம் ஆசிரியரிடம் கூற, அதற்கு அவர்" அப்பொறுப்பு ஷைகு அபூஸயீதுல் முபாரக் மக்ஜூமி (ரஹ்) அவர்களுடையதாக இருக்கும்" என்றனர். இத்துடன் அவை கலைந்தது.

அவை கலைந்ததும், அறிஞர் அபுல் வஃபா, இளவலை நோக்கி, "அப்துல் காதிரே! நீர் ஆன்மீகச் செங்கோல் செலுத்தும்பொழுது, இந்தக் கிழவனையும் நினைவு கூற வேண்டும். இதுவே என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்" என்று கூறி, இளவலின் இளம் தாடியைக் கையால் தடவினர். இளவலும் இணக்கத்தைத் தெரிவிக்கும் முறையில் ஆவோடு தலையை அசைத்தனர்.

இதன்பின் அறிஞர் அபுல் வஃபாவிடம் இளைஞர் மாணாக்கராக அமர்ந்து, சித்திரப்பாவையெனத் தகவடங்கி, செவி வாயாக, நெஞ்சு களனாகக் கேட்டவை, கேட்டவை விடாதுளத்தமைத்துப் பயின்றனர். ஃபிக்ஹுக் கலைகற்று முடிந்ததும், ஹதீதுக்கலையை அபூகாலிப் அஹ்மதிடமும், அபுல் காசிம் அலீ இடமும் கற்றுத் தேர்ந்த அவர்கள், அரபி இலக்கியத்தை அபூ ஜக்கரிய்யா யஹ்யா தப்ரேஸியிடம் கற்றார்கள்.

பள்ளியில் பயிலும் பொழுது, அவர்கள் ஒரு நாளை ஏழு பங்குகளாகப் பிரித்து, அவற்றில் மூன்று பங்குகளைக் கல்விக்கும், மூன்று பங்குகளை வணக்கத்திற்கும், ஒரு பங்கை உறக்கத்திற்கும் செலவிட்டார்கள்.

இச்சமயத்தில் ஞானக் குன்றின் சிகரமேறி நின்ற 'கௌது' என்பார் ஒருவர் உண்டென்றும், அவர் மக்கள் மத்தியில் தோன்றியும், மறைந்தும் வாழ்ந்தார் என்றும், இளவல் அப்துல் காதிர் கேள்வியுற்று, அவரைக் காண்பதற்காகத் தம் பள்ளித் தோழர் அப்துல்லாஹ் என்பவரோடும், இப்னு சகா என்பவரோடும் கிளம்பினர். அவர்களில் மூத்தரவரான இப்னு சகா, தாம் கௌதிடம் விடையளிக்க இயலாத கடினமான கேள்வி யொன்றைக் கேட்கப் போவதாகக் கூறினார். அப்துல்லாஹ்வோ தாம் அவரிடம் கேட்கும் கேள்விக்கு அவர் எவ்வாறு விடை பகர்கிறார் என்று பார்க்கப் போவதாகச் சொன்னார். இளவல் அப்துல் காதிரோ தாம் அவரிடம் எதுவும் வினவ விரும்பவில்லை என்றும், அவரைக் கண்டு, அவரின் ஆசி பெற்று வரவே விரும்புவதாகவும், அவரிடம் ஏதேனும் கேள்விகளைக் கேட்காது இறைவன் தம்மைக் காத்தருள் புரிய வேண்டுமென்றும் கூறினார்கள்.

இறுதியாக அவர்கள் கௌதை அடைந்தபொழுது, அவர் கண்கள் சிவக்க இப்னு சகாவைப் பார்த்து, ''என்னிடம் விடையளிக்க இயலாத கடினமான கேள்வியைக் கேட்க விரும்பியவர் நீரல்லவா? நீர் கேட்க விரும்பிய கேள்வி இது, அதற்கு விடை இன்னது'' என்று கூறி, ''உம்மிடம் நான் இறை மறுப்பை (குஃப்ரிய்யத்தை) காண்கிறேன்'' என்று கூறினார்.

பின்னர் அப்துல்லாஹ்வை நோக்கி, ''நீர் கேட்கும் வினாவிற்கு நான் எவ்வாறு விடை பகர்கிறேன் என்பதைச் சோதிக்க வந்தவரல்லவா நீர்? உம் வினா இது, அதற்கான விடை இது. உம் இருகாதுகளின் சோனை அளவு உலகமாயை உம்மைப் பற்றி நிற்கும்'' என்று சொன்னார்.

அதன்பின் இளவல் அப்துல் காதிரின் பக்கம், தம் அருளொழுகும் கண்களைத் திருப்பி, ''நீர் அல்லாஹ்வுடையவும், அவனுடைய தூதருடையவும் திருப்பொருத்தத்தைப் பெற்றவராவீர். எதிர்காலத்தில்

ஏற்றமிகு இறைநேசராகத் திகழ்வீர்'' என்று ஆசிமொழி பகர்ந்தார். முனிவும் ஆசியும், முறையே பெற்று மூவரும் பள்ளி திரும்பினர்.*

அக்காலத்தில் அரபிக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு அறிவமுது நல்கப்பட்டதேயன்றி, உணவமுது வழங்கப் பெறவில்லை. எனவே, ஒவ்வொரு மாணவரும் தத்தம் உணவுக்குத் தாமே வழி செய்து கொள்ள வேண்டி இருந்தது. எனவே இளவல் அப்துல் காதிரும் தம் உணவுக்குத் தாமே வழி செய்து கொண்டு கல்வி பயின்று வந்தார்கள்.

அன்னையார் தந்த நாற்பது பொற்காசுகளும் ஒன்றின் பின் ஒன்றாகக் கரைந்து வந்தன. அது கரைந்து வரும் வேகத்தைக் கண்டு, அவர்களின் உள்ளம் 'பகீர்' என்றது. எனவே அவர்கள் 'வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி' கல்வி பயின்று வந்தார்கள். பாடங்களை மனனம் செய்வதற்காக, ஊருக்கு வெளியிலுள்ள கானகங்களுக்கோ, பாழ்பட்ட இடங்களுக்கோ செல்லும் பொழுது, அங்கிருந்த கனிகளையும், கிழங்குகளையும் தின்று தங்களின் பசியைத் தீர்த்துக் கொள்வார்கள். இவ்வாறு சில காலம் உருண்டோடியது.

இறுதியாக நாற்பது பொற்காசுகளும் கரைந்து போய், கையில் அரைக்காசும் இல்லாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. என் செய்வதென அறியாது அவர்கள் பெரிதும் கவலையுடன் ஓரிடத்தில் படுத்திருக்கும் பொழுது, ''அப்துல்காதிரே! வீணே கவலையுறாதீர்! கடன் வாங்கி உம் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும்!'' என்று ஓர் அசரீரி முழங்கியது.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''நானோ ஏழை. வெளி நாட்டான். என்னை நம்பி எவர் கடன் தருவார்? கடன் தந்தாலும், நான் எவ்வாறு அதனைத் திருப்பிக் கொடுப்பேன்?'' என்று கூறினார்கள்.

அதற்கு அசரீரி, ''நீர் கடன் வாங்கும்! நாம் அதனைத் திருப்பிக் கொடுக்க வழி செய்வோம்'' என்று முழங்கியது.

எனவே, அவர்கள் தாம் வழக்கமாக ரொட்டி வாங்கி உண்டு வந்த ரொட்டிக்காரனை அணுகித் தமக்கு நாளொன்றுக்கு ஒன்றரை ரொட்டி வீதம் தந்துதவுமாறும், கையில் பணம் வந்ததும் அக்கடனைத் தீர்த்து விடுவதாகவும் கூறினார்கள். அவனும் அதற்கு இசைந்து, அவ்வாறே கொடுத்து வந்தான். ஆனால் கையில் காசோ வரவில்லை.

★ பிற்காலத்தில் அவ்வாறே நிகழ்ந்தது. இப்னு சகா ரூம் மன்னனின் பணியில் அமர்ந்து, அவனின் அழகு மகளை மணப்பதற்காகக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார். அப்துல்லாஹ் திமிஷ்க் மன்னர் நூருத்தீனிடம் பல உயரிய அலுவல்கள் ஆற்றி, ஆன்ம வாழ்வில் உயரிய படித்தரத்தை எய்த இயலாது போனார். ஆண்டகை அவர்களோ ஆன்மீகப் பேரரசராக ஆயினர்.

நாளுக்கு நாள் கடன் விஷம் போன்று ஏறிக் கொண்டு வந்தது. இதைக் கண்டு இளவலுக்கு ஏற்பட்ட திடுக்கத்திற்கு அளவில்லை. அப்பொழுது அவர்களின் உள்ளிலிருந்து, ''அப்துல் காதிரே! நீர் இன்ன பாழடைந்த இடத்திற்குச் செல்லும்! அங்கு கிடப்பதை எடுத்துக் கொள்ளும்!'' என்று ஒரு மெல்லிய குரல் பேசியது. அவ்வாறே அவர் களும் சென்றனர். என்ன வியப்பு! அங்கே ஒரு பொற்காசு, விண்ணிலே கிடக்கும் முதற்பிறையென மண்ணிலே பாதி மூடப்பட்டுக் கிடந்து, ''என்னை எடுத்துக் கொள்ளும்! என்னை எடுத்துக் கொள்ளும்!'' என்று கூறுவது போன்று பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அதனை எடுத்து வந்து ரொட்டிக் கடைக்காரனிடம் கொடுத்துக் கடன் நீங்கப் பெற்றார்கள் அவர்கள். அப்பொழுது அவர்களின் நாசியிலிருந்து நீண்ட சூடான பெரு மூச்சு, நன்றியில் தோய்ந்து வெளிவந்தது.

அடுத்தநாள் மீண்டும் உணவுப்பிரச்சினை தலைதூக்கியது. அக்காலத்தில், பக்தாது மாநகரில் பயின்று வந்த மாணவர்கள் அறுவடை காலத்தில் நகருக்கு வெளியிலிருந்த வயல்களுக்குச் சென்று, அவ் வயல் களின் உரிமையாளர்களிடம் தானியங்கள் கேட்டு வாங்கி வருவது வழக்கமாக இருந்து வந்தது. அவ்வாறே ஒரு நாள் இளவல் அப்துல் காதிரையும் தம்முடன் அவ் வயல்களுக்கு அழைத்துச் சென்றனர் பள்ளித் தோழர்கள். அப்பொழுது ஆங்கிருந்த பெரியார் ஒருவர் அவர்களை - குறிப்பாக அப்துல் காதிரை நோக்கி, ''உண்மையைத் தேடித் திரிவோர், ஒரு போதும் பிறர் முன் கையேந்தார்'' என்று கூறினார். அவரின் இச்சொல் அப்துல் காதிரின் இளம் உளத்தில் சுருக்கெனத் தைத்தது. அக்கணமே அவர்கள் வந்த வழியே திரும்பி விட்டனர், இறைவன் விட்ட விதிபோல் நடக்கட்டும் என்று.

இதன்பின் என்ன? மீண்டும் போராட்டம் தான். வறுமை அவர்களை வாட்டி வதைத்தது. அடுக்கடுக்காகத் துன்பங்கள் அவர்களை எதிர் நோக்கி வந்து கொண்டிருந்தன. அவை ஒரு மலை மீது வீழ்ந்தால் கூட, மலை சுக்கு நூறாகி விடும். அத்தனை துன்பங்கள் அவர்களை எதிர் நோக்கி வந்து, அவர்கள் மீது தாக்குதல் நடத்திய போதினும், அவர்கள் அவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டு, கல்வி பயின்று வந்தார்கள். அப்பொழுது அவர்கள் தரையிலே மல்லாந்து படுத்துக் கொண்டு, ''ஃபஇன்ன மஅல் உஸ்ரி யுஸ்ரன் இன்ன மஅல் உஸ்ரியுஸ் ரா'' (இன்னலிலேதான் இன்பம் உள்ளது; இன்னலிலே தான் இன்பம் உள்ளது) என்ற இறை மொழியைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார்கள். அது அவர்களின் மனத்துயருக்கு மாமருந்தாக விளங்கி, அவர்களுக்கு ஆறுதல் அளித்தது.

ஓராண்டு வானம் பொய்த்து விட்டதன் காரணமாக பக்தாதும், அதன் சூழலும் பஞ்சத்தின் கொடும் பிடியில் சிக்கி உழன்றன. ஏற்கனவே வறுமையில் உழன்று கொண்டிருந்த அப்துல் காதிருக்கோ, இப்பஞ்சம் ஒரு பேரிடி போல் அமைந்தது. பல நாட்களாக உண்ண உணவின்றி அவர்கள் பட்டினியும், பசியுமாக இருந்தார்கள். தஜ்லா நதிக்கரைக்காவது சென்று, ஆங்குள்ள கிழங்குகளைப் பறித்துத் தின்னலாம் என்று அவர்கள் சென்ற பொழுது, அங்கும் பல முதியோர்கள் மண்ணைத் துளாவிக் கொண்டிருப்பதைக் கண்டதும், அவர்களுடன் போட்டியிட விரும்பாது அவர்கள் வந்த வழியே திரும்பிவிட்டார்கள்.

அயர்வு மேலிட்டவர்களாய் அவர்கள் அண்மையிலிருந்த பள்ளி சென்று, ஆங்கு வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஆங்கு ஓர் இளைஞன் ரொட்டியும் கறியும் கொணர்ந்து, அவர்களின் அருகமர்ந்து உண்ண லானான். அப்பொழுது அவனிடம் சிறிதளவு ரொட்டி கேட்டு உண்ண லாமா என்று அவர்களின் நெஞ்சம் எண்ணியது. அச் சமயம் அவர்களின் உள்மனம், ''அப்துல் காதிரே! அவசரப்படாதே! நம்பிக்கை இழந்து விடாதே! பொறுமையைக் கைவிட்டு விடாதே!'' என்று கூறியது அவர்களின் செவியில் பட்டது.

வந்த இளைஞன் ஆங்கிருந்த இளவலை நோக்கித் தன்னுடன் உண வருந்த வருமாறு அழைத்தான். அப்துல் காதிரோ, ''நன்றி; வேண்டாம்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள். எனினும், அவன் விடவில்லை. திரும்பத் திரும்ப அன்போடும், பரிவோடும் அவர்களை அவன் அழைத்தான். எனவே அப்துல் காதிரும் அவனுடைய அன்பான அழைப்பை ஏற்று அவனுடன் சேர்ந்து உணவருந்தினார்கள்.

உணவருந்தி முடிந்ததும் அவர்களிருவரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவன் அவர்களை நோக்கி, '' நீர் எந்த ஊர்?'' என்று வினவினான்.

''ஜீலான்'' என்றனர் இளவல்.

''ஜீலானா?''

''ஆம்''

''நானும் ஜீலானைச் சேர்ந்தவன்தான்''

''அப்படியா? இங்கு வந்த காரணம்?''

''எங்களின் ஊர்க்காரர் ஒருவர் இங்கு இருக்கிறார். அவரைக் காண இங்கு வந்தேன்.''

''அவர் பெயர் என்ன?''

''அப்துல் காதிர்''

''அப்துல் காதிரா? நான் தானே அப்துல் காதிர்''

''அப்படியா! உம்மைத் தேடி, நான் எத்தனை நாட்களாக எங்கெங் கெல்லாம் அலைந்து திரிவது? உம்முடைய அன்னை என்னிடம் எட்டு தீனார்கள் தந்து, உம்மிடம் சேர்த்து விடுமாறு கூறினர். நான் இங்கு வந்து பல நாட்களாகி விட்டதால், என்னிடமிருந்த பணமெல்லாம் செலவழிந்து விட்டது. எனவே உண்ண உணவின்றி மூன்று நாட்கள் பட்டினி கிடந்தேன். அதன்பின் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக விலக்கப்பட்டதையும் உண்பதற்கு மார்க்கம் அனுமதித்திருப்பதை எண்ணி, உம் அன்னையார் தந்த பணத்திலிருந்தே சிறிதளவு உணவு வாங்கி இங்கு வைத்து உண்ண வந்தேன். நல்ல வேளையாக நாம் சந்தித்துக் கொண்டோம். இப்பொழுது நீர் என் விருந்தினரல்லர் நானே உம் விருந்தினன். உம் அனுமதியின்றி உமக்குரிய பணத்தில் சிறிதை நான் செலவழித்ததற்காக நீர் என்னை மன்னித்தருள வேண்டும் என்றான்.''

இவ்வாறு மூச்சு விடாது கூறிய அவன், மீதிப் பணத்தை எண்ணி அப்துல் காதிரிடம் கொடுத்தான். அதனை நன்றியுடன் பெற்ற இளவல், ''நீர் செய்தது தவறே அல்ல. அதைப்பற்றிக் கவலையுறாதீர்'' என்று ஆறுதல் மொழி பகர்ந்தனர். அத்துடன் நில்லாது, அதில் அவனுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து, அவனை ஊருக்குச் செல்லுமாறு கூறி விட்டு, மீதிப்பணத்திற்கு உணவுப் பொருள் வாங்கி, தஜ்லா நதி தீரத்திலே கிழங்கு தேடி மண்ணைக் கிளறிக் கொண்டிருந்த அந்த முதியோர்களிடம் கொண்டு போய் வழங்கி, அவர்களின் அழி பசி தீர்த்தனர் - தம் பொருள் வைக்கும் இடமாக அவர்களை எண்ணி.

இதன் பின் என்ன? மீண்டும் உணவுப் போராட்டம்தான். எனவே அவர்கள் தங்களின் மேல் துண்டையாவது விற்று உணவுப் பொருள் வாங்கி உண்ணலாமென்று, அதனைக் கடைத்தெருவுக்கு எடுத்துச் சென்று விலை கூறினார்கள். எனினும் அதனை வாங்க எவரும் முன் வரவில்லை. எனவே அதனை, ஒரு தீனாருக்கு ஈடு வைத்து, அப்பணத்தைக் கொண்டு அவர்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கையிலிருந்த பணமும் கரைந்து வந்தது. ஈட்டினைத் திருப்ப யாதொரு வழியும் தென்பட வில்லை.

ஒருநாள் அதனை ஈடு வாங்கியவரே, அந்த மேல் துண்டுடன் அவர்களிடம் வந்து, ''இதோ உம் மேல் துண்டு'' என்று கூறினார். அது கேட்டதும் இளைஞர் அப்துல் காதிரின் உள்ளம் 'பகீர்' என்றது. ''ஈடு

பெற்றுச் சென்றவர், ஈட்டுப் பொருளைத் திருப்பித் தந்து விட்டார். அவருக்கு எங்கிருந்து பணம் கொடுப்பது?'' என்று தம் உள்ளின் உள்ளே ஏங்கித் தவித்தார்கள் அவர்கள்.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ''இதனை நீரே அணிந்து கொள்ளும்! இதற்காக நீர் பெற்றுச் சென்ற ஒரு தீனாரையும், நீர் எனக்குத் தர வேண்டியதில்லை'' என்று பரிவோடு கூறினார். ஆனால் தன்மானம் மிக்க இளைஞர் அப்துல் காதிரோ அதனை வாங்கிக் கொள்ள மறுத்து, ''சற்றுப் பொறுங்கள்! தங்களுக்குத் தர வேண்டிய ஈட்டுத் தொகையைத் தந்து, அதனைப் பெற்றுக் கொள்கிறேன்'' என்று எவ்வளவோ கூறியும் அவர் கேட்காது, ''நீர் இதனை பெற்றுக் கொள்ளவில்லையாயின், இதனைத் தீயிலிட்டுச் சாம்பராக்கி விடுவேன்'' என்று கூறினார். எனவே அவர்கள் அதனை வேண்டா வெறுப்பாக வாங்கிக் கொண்டார்கள். அப்பொழுது அவர்களின் உள்மனம், ''எல்லாம் இறைவன் செயல். மனிதனின் முயற்சியால் மட்டும் யாதும் நிகழ்வதற்கில்லை'' என்று கூறியது.

★★★

(5)

இளவல் அப்துல் காதிர் பக்தாது மாநகரம் வந்து, ஏழாண்டுகள் உருண்டோடி விட்டன. பதினெட்டு ஆண்டுப் பருவத்தில் பக்தாதை அடைந்த அவர்கள், இப்பொழுது இருபத்தைந்தாண்டுப் பிராயத்தை எட்டிப் பிடித்து நின்று கொண்டிருந்தார்கள். இந்த ஏழாண்டு காலத்தில் அவர்கள் கல்வி பெறுவதன் பொருட்டு பட்ட பாடுகள் கொஞ்சமன்று. எல்லா இன்னல்களையும், இடும்பைகளையும் கடந்து அவர்கள், இறுதியாகக் கல்லூரி உயர்தர வகுப்புத் தேர்விலும் சிறப்புடன் தேர்ச்சியடைந்து விட்டார்கள். பக்தாதுக்கு வந்த அலுவல் முடிந்து விட்டது. இனிமேல் அதை விட்டு வெளியேறி விட வேண்டியதுதான் என்று அவர்கள் எண்ணினார்கள். அப்பொழுது அங்கு நிகழ்ந்து வந்த ஒழுக்கக் குறைகளும், போலித் தன்மைகளும் அவர்களை அவ்வாறு எண்ணுமாறு செய்தன.

இப்பொழுது யூசுஃப் இப்னு ஐயூப் அல் ஹமதானி என்னும் சான்றோர், அவர்களை அணுகி மக்களுக்கு அறிவுரை பகருமாறு கூறினார். அதற்கு அவர்கள், ''நானோ ஓர் அஜமி. அரபிகள் நிறைந்த இந்நகரில் என் பேச்சு எடுபடுமா, என்ன?'' என்று அடக்கத்துடன் கூறினர். அதற்கு அவர் ''நீரோ எல்லாக் கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்துள்ளீர். இதன் பின்னரும் உமக்குத் தயக்கம் ஏன்? அது எதிர்காலத்தில் பெரும் ஈச்ச மரமாக வளரும். அதன் காரணமாக இலட்சக் கணக்கானோர் நேர்வழி

பெறப் போகின்றனர். இதனை நான் என் மனக்கண்ணால் காண் கிறேன்'' என்று கூறினார். எனினும், பக்தாது நகரப் போலி வாழ்க்கை அவர்களுக்கு வெறுப்பை உண்டு பண்ணியது. எனவே அவர்கள் அந்நகரை விட்டும் வெளிக்கிளம்பி விட்டனர்.

நகரின் நுழைவாயில், அதைவிட்டும் அப்துல் காதிரின் திருப் பாதங்கள் வெளியே பெயர்ந்தன. அப்பொழுது ஓர் அசரீரி அவர்களை அதட்டியது, ''அப்துல் காதிரே! எங்குச் செல்கிறீர்? திரும்பிச் செல்லும்! மனித இனத்தை வாழ்விக்க வந்த வான் முதல் நீர். உம்மால் மனித இனம் மாண்புற வேண்டாமா?'' என்று அது முழங்கியது. அது கேட்டு இளவல் அதிர்ந்து போய் விட்டார்கள். ''நான் ஆத்மீகத் துறையில் முழு வெற்றி பெற வேண்டாமா?'' என்று ஈனக்குரலில் வினவினார்கள். ''இரும் இங்கே! எல்லாம் எய்தப் பெறுவீர்'' என்று அந்த அசரீரி மீண்டும் முழங் கியது. இதன் பின் என்ன? இளவலின் கால்கள் அவர்களை விறுவிறு வென்று பக்தாது மாநகரின் உள்ளே இழுத்துச் சென்றன.

கால்கள் அவர்களை அவ்வாறு இழுத்துச் சென்றனவேயொழிய, அவர்களின் கரங்கள் விண்ணை நோக்கி உயர்ந்தன. ''இறைவ எம்பெரும! உன் சித்தமே என் பாக்கியம். எனினும், ஞான வழிகாட்டும் நல்லாசான் ஒருவரை எனக்கு ஈங்குக் காட்டியருள்வாயாக!'' என்று அவர்களின் உள்ளமும் நாவும் ஒருங்கு சேர்ந்து இறைஞ்சின.

அடுத்த நாள் இருட்படலங்களைப் பிளந்து கொண்டு கதிரவன் புலர்ந்தான். இளவல் அப்துல் காதிர் அவர்களும் பக்தாது மாநகரின் முனைஃப்பரியாப் பகுதியில் நடந்து சென்றனர். அப்பொழுது ஒரு வீட்டின் கதவு 'படார்' என்று திறந்தது. வயோதிகப் பெரியார் ஒருவர் தம் தலையை வெளியே நீட்டி, ''அப்துல் காதிரே! நீர் நேற்று இறைவனிடம் எதை வேண்டினீர்?'' என்று வினவினார். அவரின் எதிர்பாராத இக் கேள்வி இளவலைத் திணறச் செய்தது. எதுவும் மறுமொழி கூற இயலா நிலையில், அவர்களும் அங்கிருந்து அடியெடுத்து வைத்தனர். கதவும் ''படார்'' என்று மூடிக் கொண்டது.

சற்றுத் தொலை சென்றதும் தான், இளவல் அப்துல் காதிருக்குத் தன்னுணர்வு ஏற்பட்டது. தம்மிடம் அக்கேள்வியை விடுத்தவர், இறை வனின் அருள் நேசச் செல்வராகத் தான் இருக்க வேண்டும் என்னும் எண்ணம் அவர்களின் உள்ளத்திலே கோடிழுத்தது. எனவே, அவர்களின் கால்கள் அவர்களை வந்த வழியே மீண்டும் இழுத்துச் சென்றன. அவர் களின் கண்கள் அவ்வீட்டை இலக்குக் கண்டு கொள்வதற்காக, அங்கு மிங்கும் துளாவின. எனினும் இயலவில்லை. எனவே அக்கணத் திலிருந்து அவர்களின் குறிக்கோள் அப்பெரியாரை எவ்வாறாவது

கண்டுபிடித்து அவர்களின் தாள் அமர்ந்து ஆத்மீக அறிவு பெற வேண்டும் என்பதாகவே அமைந்தது.

இறுதியாக, அவர்கள் அவரைக் கண்டுபிடித்து விட்டார்கள்! தமக்கு ஞான வழிகாட்டும் நல்லாசானை அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள்! பக்தாது நகரின் தெருக்கோடியில் ஒருவர் நின்று, குளிர்ந்த மதுரபானம் விற்றுக் கொண்டிருப்பதை அவர்களின் கண்கள் கண்டன. ஆனால் மற்றவர்களின் குளிர்ந்த மதுர பானங்களிலெல்லாம் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்க, இவரின் குளிர்ந்த மதுரபானத்தில் மட்டும் ஈக்கள் மொய்யாதிருப்பதைக் கண்டதும் இவர் இறையருள் பெற்றவராகத் தான் இருக்க வேண்டும் என்று ஒரு கணம் எண்ணினார்கள். மறுகணம் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்கள். என்ன வியப்பு! தாம் அன்று கண்ட அந்த இறைநேசச் செல்வர் தாம் அவர்.

அவரை அணுகி அவருக்கு ஸலாம் உரைத்து, ''நலமா?'' என்று விசாரித்தார்கள். ''யார் நீ?'' என்று மறுவினா விடுத்தார் அவர். ''தங்களின் இல்லம் முனஃப்பரிய்யா பகுதியில் தானே உள்ளது? ஒரு நாள் நான் அவ்வழியே வந்த பொழுது, என்னைப் பெயர் சொல்லி அழைத்தவர் தாங்கள் தாமே'' என்று வினவினார்கள். அவர் அதற்குப் பதில் கூற வில்லை.

''நல்லது; தங்களின் குளிர்ந்த மதுரபானத்தில் மட்டும் ஈக்கள் மொய்க் கவில்லையே, ஏன்?'' - இது இளைஞரின் அடுத்த கேள்வி.

''நெருப்பில் ஈ மொய்க்குமா, என்ன?'' இது அவரின் பதில்.

அவரின் இப்பதில் இளைஞரின் மூளையை ஒரு கணம் சக்கரம் போன்று சுழலச் செய்தது. ''குளிர்ந்த மதுர பானத்தை, இவ்வாறு இவர் கூறுகிறாரே, இது என்ன புதுமை!'' என்று அவர்கள் ஒரு கணம் எண்ணி னார்கள். அதன் பின் தான் அவர் கூறியதன் உட்பொருள் அவர்களுக்குத் தெரிய வந்தது. 'ஹலால்' ஆன துப்புரவான பொருள்கள் மீது ஈக்கள் அமர்ந்து அசுத்தப்படுத்துவதில்லை என்று அவர் கூறுகிறார் என்பதை, அவர்கள் விளங்கிக் கொண்டு, அவர் உண்மையில் ஒரு பெரியார் தாம் என்று முடிவுக்கு வந்தார்கள்.

இதன்பின் அவர்கள் அவரிடம் எதுவும் கேட்கவில்லை. அங்கேயே அமர்ந்திருந்தார்கள். அவரும் சற்று நேரத்தில் கடையை மூடிவிட்டு இல்லம் திரும்பினார். அவரின் பின்னே சென்ற அவர்கள், ''எனக்கு ஆத்ம ஞானத்தை அருள் கூர்ந்து போதியுங்கள்! அதற்காகவே நான் தங்களைத் தேடி வந்துள்ளேன்'' என்று வினயமாகக் கூறினார்கள்.

அப்பொழுது அவர் தம் பொக்கைவாய்ச் சிரிப்பை உதிர்த்து, ''ஆத்ம ஞானமா? மதுரபான விற்பனையாளரிடம் வந்து ஆத்ம ஞானத்தைப் போதிக்குமாறு கேட்கிறீரே. இதுவென்ன வேடிக்கையாக இருக்கிறது?'' என்று கூறினார்.

இவ்வாறு கூறிவிட்டு அவர் விறுவிறுவெனத் தம் இல்லம் நோக்கிச் சென்று கதவைப் 'படார்' என்று சாத்திக் கொண்டார்.

இளவல் அப்துல் காதிருக்கோ இவையெல்லாம் என்னவென்றே விளங்கவில்லை. உண்மையிலே அவர் ஒரு பெரியார் தாமா அல்லது ஒரு சாதாரண மதுரபான விற்பனையாளர் தாமா என்று அவர்களின் மூளை குழம்பியது. அவர் ஒரு சாதாரண மதுரபான விற்பனையாளர் என்றால், அவரின் மதுரபானத்தில் மட்டும் ஏன் ஈக்கள் மொய்க்கவில்லை? இவ்வாறு அவர்கள் தம் உள்ளத்தையே கேட்டுக் கொண்டார்கள்.

இந்த ஐயத்திலேயே உழன்ற வண்ணம் அவரின் உண்மை நிலையை விளங்கிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், அவர்கள் அடுத்த நாள் காலையில் அவரின் கடைக்குச் சென்று, ஆங்கு ஓரிடத்தில் அமர்ந்திருந் தார்கள். அவர்களை அவர் கடைக்கண்ணாலும் பார்க்கவில்லை. ஏதோ வாய்க்குள் முனகிக் கொண்டிருந்தார். பின்னர் சற்று உரத்த குரலில், ''மார்க்கக் கல்வி பயில்வதற்காக நெடுந்தொலைவுப் பயணத்தை மேற் கொண்ட இளவலுக்கு, வழிப்பறியையே தங்களுக்கு வளம் நல்கும் தொழிலாகக் கொண்டிருக்கும் கொள்ளையருக்கும் தொடர்பு உண் டென்றால், ரொட்டிக் கடைக்காரனுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிக்கும், பாழ் மண்டபத்தில் கிடக்கும் பத்தரை மாற்றுத் தங்க நாணயத்திற்கும் தொடர்பு உண்டென்றால், விண்ணுக்கும் மண்ணுக்கும் ஏன் தொடர்பு இருக்கக் கூடாது?'' என்று எங்கேயோ பார்த்த வண்ணம் பேசினார்.

இளவல் அப்துல் காதிருக்கு இப்பொழுது எல்லாம் தெளிவாகி விட்டது. தம்மை முன்பின் அறியாத அவர், தம் பெயரை எடுத்துரைத்தது, தம் வரலாற்றை எடுத்துரைப்பது, ஆகியவை அவர் ஓர் இறை நேசச் செல்வரே என்பதையும், தம்மைச் சோதிப்பதற்காகவே அவர் இவ்வாறு நடக்கிறார் என்பதையும், அவர்கள் நன்கு விளங்கிக் கொண்டார்கள்.

எனவே அவரின் முன் சென்று அடக்கத்துடன் தம் உள்ளக் கிடக்கையை எடுத்தோதினார்கள். அது கேட்ட அவர் புன்னகை தம் முகத் திலே மின்ன, ''நீர் மார்க்க ஞானம் கற்றவராயிற்றே. உமக்கு ஆத்ம ஞானம் எதற்கு?'' என்று வினவினார். அவர்கள் மிகவும் மரியாதை யுடன், தம் வேணவாவை விரித்தோதியதும் அவர்களைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டார் அந்தப் பெரியார் அபுல் கைர் ஹம்மாது அல் தப்பாஸ்.

பெரியார் ஹம்மாதின் தாள் அமர்ந்து இளவல் அப்துல் காதிரும், மூன்று ஆண்டுகள் ஆன்மீகப் பயிற்சி பெற்றனர். இச்சமயத்தில் அவர்களைப் புடம் போட்ட பொன்னே போல் ஆக்குவதற்காகப் பல்வேறு சோதனைகளுக்காளாக்கினார் அப்பெரியார். அவருக்கு நல்ல திண்பண்டங்கள் காணிக்கையாக வரும் போதெல்லாம், அவற்றில் சிறிதளவும் இளவல் அப்துல் காதிருக்குக் கொடுப்பதில்லை. அது மட்டுமல்லாது அவர்களை நோக்கி, ''இன்று இன்ன இன்ன திண்பண்டங்களெல்லாம் காணிக்கையாக வந்தன. அவற்றை நானும் ஏனைய மாணவர்களும் தின்று முடித்து விட்டோம்'' என்று அவர் கூறுவார். அது கேட்டு அவர்கள் சிறிதளவும் வருத்த முறுவதில்லை. இவ்வாறு தம் ஆசான், அவர்களை இலேசாகக் கருதி நடத்தி வருவதைக் கண்டு, ஏனைய மாணவர்களும் அவர்களை இலேசு கண்டனர். அது கண்டும் அவர்கள் மனத் துயருறவில்லை.

ஒரு நாள் ஆசானைக் காண வந்த தோழர் ஒருவர், அப்துல் காதிர் அவர்களை இலேசு கண்டு இழித்துரைத்து விட்டார். இது ஆசானின் செவிப்பட்டதும், அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. உடனே அவர் தம்மைக் காண வந்த தோழரை நோக்கி, ''நீர் அவரை இழித்துரைத்த காரணம் என்ன? நான் அவரைப் புடம் போட்ட தங்கமாக்குவதற்காகப் பல்வேறு சோதனைகளுக்கும் ஆளாக்குகிறேனென்றால், அது கண்டு நீர் அவரைத் தவறாக மதிப்பிட்டு இழித்துரைப்பதா, என்ன?'' என்று கடுமையாக எச்சரித்து அனுப்பினார்.

ஓரிரவு அவர்கள் அயர்ந்து படுத்துறங்கும் பொழுது, ஷைத்தானைக் கனவில் கண்டனர். அப்பொழுது அவர்கள் அவனைக் கொல்ல நாடிய பொழுது, ''நீர் என்னைக் கொல்ல நாடுகிறீர்? நான் என்ன அத்தகு பாவம் இழைத்தேன். எல்லாம் இறைவன் வகுத்த வழிப்படியே செல்கின்றன. என்னால் எதனையும் மாற்றவோ, திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ இயலுமா, என்ன?'' என்று அவன் கூறிவிட்டு மறைந்தான்.

ஹிஜ்ரி 499 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் பதினைந்தாம் நாள் வெள்ளிக் கிழமையன்று ஷைகு ஹம்மாது தம் மாணவர் குழாம் புடைசூழ 'ரலாபா' ஆற்றின் கரையோரமாகச் சென்று கொண்டிருந்த பொழுது, அவர்கள் இளவல் அப்துல் காதிரை அவ்வாற்றிலே பிடித்துத் தள்ளி விட்டனர். அது கண்டு இளவல் சிறிதேனும் வருத்தமோ, சினமோ கொள்ளவில்லை. நடுக்கும் குளிரில் அவர்கள் அவ்வாற்று நீரில் குளித்து வெளியேறினர். தாம் நீரில் மூழ்கும் பொழுது, தம்முடைய கம்பளிச் சட்டையிலிருந்த குர்ஆனின் சில பகுதிகள் எழுதப் பெற்ற தாள் நனைந்து போகாமலிருக்க அவர்கள், அதனைத் தம் கையிலே வைத்து உயர்த்திக்

கொண்டனர். பின்னர் ஓடோடிச் சென்று தம் ஆசானையும் அவர்களின் குழுவினரையும் சேர்த்துக் கொண்டனர்.

அப்பொழுது அவர்களின் பள்ளித் தோழர்கள், அவர்கள் அன்றையத் தினம் ஜுஂம்ஆ குளிப்புக் குளியாததன் காரணமாகவே, அவர்களைத் தங்களின் ஆசான் அவ்வாறு ஆற்றிலே பிடித்துத் தள்ள வேண்டிய தேற்பட்டது என்று கூறவே, ஷைகு ஹம்மாது அவர்கள் குறுக்கிட்டு, ''அவ்விதமன்று; நான் அவரைச் சோதித்தறிவதற்காகவே அவ்வாறு செய்தேன். அவர் அச்சோதனையில் அசையா மாமேருவாகக் கூம்பு நீட்டி நின்றார்'' என்று பாராட்டுரை பகர்ந்தனர்.

பின்பொரு தடவை அவர்களைப் பற்றி ஷைகு ஹம்மாது அவர்கள் கூறும் பொழுது, ''இந்த அஜமி - அப்துல் காதிர் - வருங்காலத்தில் மாண்பு மிகு இறைநேசச் செல்வராக, எழிலாரும் ஆத்ம ஞானியாக இலங்குவார். எல்லா இறைநேசச் செல்வர்களின் (வலிமார்களின்) தோள் மீதும், இவரின் திருப்பாதங்கள் உள்ளன எனக் கூறுமாறு இறைவனால் ஆணை யிடப்படுவார். இவர் காலத்து இறைநேசச் செல்வர்களின் அரசரேறாக இவர் விளங்குவார், துலங்குவார்'' என்று நன்மாராயம் நவின்றனர்.

ஷைகு ஹம்மாது அவர்களின் காலடியில் அமர்ந்து மூன்றாண்டுகள் ஆன்மீகப் பயிற்சி பெற்ற பின் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகிய 'ஹஜ்ஜு'க் கடமையை ஆற்றி வர வேண்டுமென்ற எண்ணம் இளவல் அப்துல் காதிரின் உள்ளத்தில் இரேகை விடலாயிற்று. இதனை அவர்கள் தம் ஆசானிடம் எடுத்துரைத்து விடை வேண்டிய பொழுது, அவர்கள் தம் மாணவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டு, ''அப்துல் காதிரே! இன்று ஆத்மீக ஞானமும், மார்க்கக் கல்வியும் எங்களிடமிருந்து உம்மிடம் வந்து இருப்பிடம் கொண்டுள்ளன. அவற்றை நன்முறையில் பேணிப் பாது காத்து வருவீராக!'' என்று கூறிவிட்டு, ''ஹிஜாஸ் மாநிலமே! இன்று முதல் உன்னுடைய விண்வெளியில், அருள் முகில் சூழ்ந்து, ஞான மழையைப் பொழியப் போகின்றது. அம்மழை நீரை உலகிலுள்ள ஆன் மாக்கள் அள்ளிப் பருகித் தம் அறிவுத்தாகத்தைத் தீர்த்துக் கொள்ளப் போகின்றன. இன்று முதல் ஷைத்தானின் அரியணைத் தலைகுப்புறக் கவிழ்ந்து விடும்; இஸ்லாம் தேசோமயத்துடன் கொலுவீற்றிருக்கும்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தனர்.

ஆசானிடம் பிரியா விடை பெற்றுத் தன்னந்தனியாக 'ஹஜ்'ஜுப் பயணத்தை மேற்கொண்ட அவர்களுக்கு, உம்மூல் குருன் என்ற இடத்தில் வைத்து ஷைகு அதீ என்னும் பயணத் தோழர் கிடைத்தார். இருவரும் சேர்ந்து மக்கமா நகரை நோக்கி அடியெடுத்து வைத்து நடந்து சென்றார் கள். அப்பொழுது முன்பின் தெரியாத அழகிய நீக்ரோப் பெண் ஒருத்தி,

அவர்களின் முன் தோன்றினாள். அவளின் உடல் இளைத்திருந்தது. இறைவனை வணங்கிய அடையாளமும், முற்றும் துறந்த நிலையும் பிரதிபலித்த தம் முகத்தை முக்காடிட்டு மூடியவளாய், இளவல் அப்துல் காதிரின் முன் வந்து நின்று, ''ஐயா! தாங்கள் எந்த ஊர்?'' என்று வினவினாள். அதற்கு அவர்கள் '' நான் ஓர் அஜமி (அரபியல்லாதவன்)'' என்று பதில் கூறினார்கள். அதன் பின் அவள், ''தங்களைக் காணும் வேண வாவை ஏன் என்பால் ஏற்படுத்தி என்னை வருத்தினீர்கள்?'' என்று அவர்களை நோக்கி வினவினாள். அது கேட்டுத் திடுக்குற்ற அவர்கள், ''நானோ ஒரு துறவி. என்னைக் காணத் தாங்கள் வந்ததாகக் கூறுகிறீர்கள். நானோ யாதும் அறியா நிலையில் நிற்கிறேன். தாங்கள் ஈங்குற்ற காரணம் யாது?'' என்று வினவினார்கள். அதற்கு அவள், ''ஹபஷி நாட்டில் இருந்த என்னை, இறைவன் இங்கு அனுப்பி வைத்துள்ளான். நான் இறை நினைவில் இலயித்திருக்கும் பொழுது, எவரும் பெறா நிலையை இறைவன் தங்களுக்கு அளிப்பதைக் கண்டு, தங்களைக் காண விழைந்தேன். அடுத்த நொடியில் நான் இங்கு வந்து, தங்களின் முன் நிற்கிறேன். தங்களுடன் நானும் உடனிருந்து நோன்பு திறந்து செல்வேன்'' என்று கூறினாள். அதற்கு இளவலும் இணங்கினர். பின்னர் பொழு தடைந்ததும், மூவரும் நோன்பு திறந்தனர். அவள் தன் வழியே சென்றாள்.

இதன்பின் இளவலும் ஷைகு அதீயும் தம் பயணத்தைத் துவக்கி, இறுதியாக மக்கமா நகர் வந்து, இறை ஆலயத்தை இடம் சுற்றி வந்தனர். அப்பொழுது திடீரென ஷைகு அதீ மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார். கீழே சாய்ந்த அவர் நெடுநேரமாகியும் எழாததைக் கண்டு, அவர் இறந்து விட்டார் என்றே மக்கள் கருதினர். அப்பொழுது வழியில் தோன்றிய அந்த நீக்ரோ மாது அங்குத் திடீரெனத் தோன்றி, அவரின் தலை மாட்டில் அமர்ந்து,''அவரைக் கீழே கிடத்திய இறைவனே அவரை எழுந்தமரச் செய்யப் போதுமானவன்''என்று கூறினாள். மேலும் அவள், ''அனைத்து உயிர்களின் மீதும் இறைவன் தன் பேரொளியைப் பாய்ச்சிக் கொண் டுள்ளான். இல்லையெனில் அவை உயிர் வாழ இயலாது போயிருக்கும். உலகம் உயிர் வாழ்வதற்கே ஆதாரமான அந்தப் பேரொளி ஞானியர் உள்ளத்திலும் ஊடுருவிப் பாய்ந்து, அவர்களுக்கு ''ஞான திருஷ்டி''யை அளிக்கிறது. அந்தப் பேரொளியை ஏற்றுக் கொள்ள இயலாது, சிலர் மயங்கிக் கீழே விழுகின்றனர்.'' என்று கூறினாள். இவ்வாறு அவள் கூறிய சிறிது நேரத்திற்குள் ஷைகு அதீ மயக்கம் தெளிந்து எழுந்தார்.

இவை ஒன்றும் இளவலுக்குத் தெரியாது. அவர்கள் 'ஹஜருல் அஸ்வத்' என்னும் விண்ணகக் கருங்கல்லில் தம் முகத்தைப் புதைத்த வண்ணம், ''இறைவ எம்பெரும! என் பவம் பொறுத்து என்னை ஆட் கொள்வாயாக! எக்காரணத்தாலோ நான் மறுமையில் தண்டனைக்குரி

யோனாகி விட்டால், அக்காலை நான் நல்லோர்களின் முகத்தில் விழிக்கா வண்ணம் என் கண்களைக் குருடாக்கி விடுவாயாக!'' என்று அழுது கெஞ்சி, இறைஞ்சிய பின், கஃபாவை இடம் சுற்றி வரத் தொடங்கினார்கள். அப்பொழுது இறைவனின் பேரொளி அவர்களின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. அதனைத் தாங்கி நிற்கும் ஆற்றலை அவர்களுக்கு அளித்துப் பின்வருமாறு அவர்களுடன் பேசினான். அவன் துவக்கத்தில்,

'வல்லதீன ஜாஹிதூ; பீனா லநஹ்தீனஹுˉம் ஸாபில்னா' (எவர்கள் நமக்காகப் பெரும் துன்பத்தை மேற்கொள்கிறார்களோ, அவர்களுக்கு நாம் நேர்வழியைக் காட்டுவோம்) என்ற, தான் திருமறையில் கூறிய வசனத்தைத் திரும்பக் கூறிய பின் , ''அப்துல் காதிரே! நீர் 'தௌஹீது' என்னும் ஏகத்துவத்தை பற்றிப் பிடிப்பீராயின், நாம் உமக்குப் பற்பல அற்புதங்களைக் காட்டுவோம். எப்பொழுதும் நீர் தனித்திருந்து, என் நினைவில் தோய்வீராக! உம் நாட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு எம் நாட்டமே உம் நாட்டம் என்றாகுவீராக! நம் நாட்டமின்றி இவ்வுலகில் யாதொன்றும் நிகழ்வதில்லை என்று திட்டமாக அறிவீராக! உம்மைக் கொண்டு பலர் நம்மை அணுகி, நம் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்'' என்று கூறினான் இறைவன். இறைவனின் இச்சொல் இளவலின் இதய கமலத்தை மலரச் செய்தது.

இச்சமயம் அந்த ஹபஷி மாது அவர்களை அணுகி, 'இன்று தங்களுக்கென ஒளியாலான ஒரு கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. மண்ணிலிருந்து விண்ணளவும் வானவர்கள் அதைச் சூழ்ந்து நிற்பதையும், தங்களின் பாதங்களைத் தம் தோள்களில் பதியச் செய்த வண்ணம், இறைநேயர்கள் தங்களை இமைக்காது பார்த்து நிற்பதையும், இறைவன் தங்களுக்களித்த இவ்வருட் பேறுகளைத் தமக்கும் அவர்கள் விரும்புவதையும், இதோ நான் காண்கிறேன்'' என்று கூறி, அவ்விடத்தை விட்டு அகன்றாள். இதன் பின் இளவல் அப்துல் காதிர் அவர்கள் அப்பெண்மணியை என்றுமே, எங்குமே பார்க்கவில்லை.

இதன்பின் பக்தாது திரும்பிய அவர்கள் தம் பாட்டனார் முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் அடங்கப் பெற்றுள்ள மதீன மாநகருக்கு நடந்தே வந்து, ஆங்கு நாற்பது நாட்கள் தங்கியிருந்து, எம்பெருமானாரின் முன் கைகட்டி நின்று அவர்களின் துதி பாடினர். அப்பொழுது அவர்கள்,

''அலை போல் மலைபோல் என்பவங்கள்
அளவில் பெரிதாய் உளவெனினும்
அலகில் இறைவன் அருள் உண்டேல்
கொசுவின் இறகினும் அது சிறிதே.''

என்று உள்ளம் உருகிப் பாடி, அப்பேற்றினைப் பெறுவதற்குத் தம் பாட்டனாரின் பேருதவியை வேண்டி நின்றனர்.

"அப்துல் காதிரே! எப்பொழுதும் தனித்திருந்து, என் நினைவில் தோய்வீராக!" என்று கஃபாவை இடம் சுற்றி வரும் பொழுது, இறைவன் கூறிய அறிவுரை அவர்களின் உள்ளத்தில் நீங்காது பதிந்திருந்தது. எனவே, வணக்கத்தையும் தியானத்தையும் நாடி அவர்கள், இராக் நாட்டுக் கானகத்திலுள்ள கர்க் என்ற இடத்தை அடைந்து, ஆங்குக் கடும் தவத்தில் ஈடு பட்டனர். முதலாவது ஆண்டில் காய், கனிகளைத் தின்று நீரருந்தாது கடும்தவம் புரிந்தனர். இரண்டாவது ஆண்டில் நீர் மட்டும்அருந்தி, வேறொன்றும் உண்ணாது பெரும் தவம் புரிந்தனர். மூன்றாவது ஆண்டில் யாதொன்றும் உண்ணாது, உறங்காது அகோர தவம் புரிந்தனர்.

அவர்களின் மாண்பினை அறியாது அவ்வழியே செல்லும் மடமாக்கள், அவர்களை ஊமையர் என்று எண்ணிச் செல்வர். அவர்களின் கடும் தவத்தினைக் கண்டு, அவர்களின் நஃப்ஸ் (இச்சை) பெரும் எதிர்ப்பைத் தெரிவித்த பொழுது, அவர்கள் அதனை எதிர்த்துப் பெரும் சப்தமிடுவர். அதைக் கண்டு வழிப்போக்கர் சிலர், "சற்று நேரத்திற்கு முன் பெல்லாம் அமைதியாக இருந்த இவர், திடீரென எவரோடோ சண்டை செய்வது போன்று பெரும் கூச்சலிடுகிறாரே, இவருக்குப் பைத்தியம் முற்றிவிட்டது போல் இருக்கிறது" என்று கூறிச் செல்வர்,

சில பொழுது அவர்கள் உச்சி வேளையில், பாலை மணலில் வெறும் காலுடன் நடந்து செல்வர். மற்றும் சில பொழுது, வெயிலில் குளிப்பது போன்று வெகுநேரம் பொறி பறக்கும் மணலில் வெறும் காலுடன் நின்று கொண்டிருப்பர். வேறு சில பொழுது அவர்கள், முட்புதர்களின் ஒரு பக்கல் புகுந்து மறுபக்கல் வெளி வருவர். அப்பொழுது அவர்களின் உடை கிழிந்து, உடலிலும் முட்கள் கீறி இரத்தம் கசிந்தோடும். அவர்களின் இவ் அவல நிலையைக் கண்டு அவர்கள் மீது இரக்கமுற்றுச் சிலர் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வர்.

ஆண்டுக் கணக்காகப் பட்டினி கிடந்து, அகோர தவம் செய்தததன் காரணமாகச் சில பொழுது, அவர்கள் களைப்பு மேலிட்டுப் பிணம் போல் கிடப்பதைக் கண்டு, அவர்கள் இறந்து விட்டார்களோ என்று சிலர் எண்ணி, அவர்களை நல்லடக்கம் செய்யக் குளிப்பாட்டத் தொடங்கும் பொழுது, அவர்கள் உணர்வு பெற்று எழுவதுமுண்டு.

இச்சமயம் அழகும் அறிவும் வாய்க்கப் பெற்ற நல்லார் ஒருவர் அவர்களை அணுகி, "நான் உம்முடன் நட்புக் கொள்ள விழைகிறேன். என் விருப்பத்திற்கு மாறாக நடக்காது, நீர் உறுதியுடன் நின்றால் நான்

உம்முடன் இருக்கிறேன். நீர் இம்மை, மறுமைப் பேறுகளை எய்தப் பெறலாம்'' என்று கூறினார். அதற்கு அவர்கள் உடன்படவே, அவர் அவர்களுக்கு ஒரு கம்பளிப் போர்வையை அன்பளிப்பாக வழங்கி, ''நான் மீண்டும் வரும்வரை நீர் எனக்காக இங்கேயே காத்திரும்!' என்று பணித்துவிட்டுச் சென்றார்.

அவ்வாறே ஆண்டகை அவர்களும் அவ்விடத்திலேயே இறைத் தியானத்தில் மூழ்கிய வண்ணம் வீற்றிருந்தார்கள். ஒரு நாளல்ல, ஒரு மாதமல்ல, பன்னிரண்டு மாதங்கள். இந்தப் பன்னிரண்டு மாதங்களும், அவர்கள் பொறுமையை இழக்காது, உலக மாயை அவர்களை வீழ்த்த முனைந்தபொழுதெல்லாம், அதனை எதிர்த்து நின்று வெருண்டோடச் செய்து, அந்த நல்லாரை எதிர்பார்த்த வண்ணம் வீற்றிருந்தனர்.

இறுதியாக அவரும் வந்தார். வந்தவர் அவர்களுடன் யாதொன்றும் பேசாது, சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, மற்றொரு கம்பளிப் போர்வையை அவர்களுக்கு ஈந்து ''இவ்விடத்திலேயே இரும்! நான் மீண்டும் வரும் வரை இவ்விடத்திலேயே இருத்தல் வேண்டும்!'' என்று பணித்து விட்டுச் சென்றார். மீண்டும் அவ்வாறே அவர்கள் இருந்தனர்.

இவ்வாறு மீண்டும் அவர்களைச் சோதித்தறிந்த பின், ஆண்டுக் கடைசியில் அவர்களை வந்தெய்திய அந்நல்லார், தம்மை கிள்ரு என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, அவர்களின் முன் பாலும் அடையும் வைத்து, ''இவற்றை உம்முடன் உடனிருந்து உண்ண வந்தோம். உண்ணுக!'' என்று கூறி, அவர்களுடன் சேர்ந்து அவற்றை உண்டார். உண்டு முடிந்ததும், அவர்களுக்கு இறையை அண்மும் எழிலார் பாட்டையைக் காட்டி, இஸ்முல் அஃலத்தைக் கற்றுக் கொடுத்து மறைந்தார்.

இவ்வகையில் மூன்றாண்டுகள் கழிந்த பின், கர்க் கானகத்தில் தவக்கோலம் புனைந்து ஒன்பது ஆண்டுகள் தனித்திருந்து, இறைவனைத் தியானித்து வந்த அவர்கள், பின்னர் இடைக்கிடையே பக்தாது மாநகரம் சென்று வரும் வழக்கத்தை மேற்கொண்டனர். இவ்வாறு வனத்திலும் நகரிலுமாக இரண்டாண்டுகள் கழிந்தன.

இதன்பின் ஆண்டகை அவர்களின் தவமடம் கானகத்தின் நடுவில் முற்காலத்தில் பாரசீக மன்னர்கள் நிர்மாணித்த ஒரு பழம் கோட்டையாக இருந்துது. பாழடைந்து கிடந்த அக்கோட்டையில் அவர்கள் தங்கி இறைத் தியானத்தில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக, அது அரபி அல்லாதாரின் கோட்டை என்று பொருள்படும் 'புருஜுல் அஜமி' எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றது. ஆங்கு அவர்கள் தங்கிக் கடும் தவம் செய்தனர். இரவுத் தொழுகைக்காகச் செய்யப்படும் 'உளூ'வுடன் அவர்கள் வைகறைத்

தொழுகையையும் தொழுது முடித்தனர். தம்மை உறக்கம் அணுகின், தம்மையே தாம் கடினமாகச் சினந்து, மீண்டும் அது தன்னை அணுகா வண்ணம் பக்கத்திலிருந்த மதிளில் முளை அறைந்து, அதில் ஒரு கையைப் பிணைத்து, ஒரு காலைத் தூக்கி ஒற்றைக் காலில் நின்று திருக்குர் ஆனை ஓதத் தொடங்குவர். அதனை ஓதி முடிப்பதற்கும் கிழக்கு வெளுப்பதற்கும் சரியாக இருக்கும். அதன்பின் வைகறைத் தொழுகையைத் தொழுது முடித்து விட்டு அவர்கள் கீழே அமர்வர்.

நோன்பு நோற்றாலோ, எப்பொழுதும் நோன்பு தான் என்று சொல்லும் விதம் இருந்தது. அதுவும் சாதாரண நோன்பா? மூன்று நாட்கள், ஏழு நாட்கள், நாற்பது நாட்கள் உண்ணல், பருகல் இன்றி அவர்கள் நோன்பு நோற்றனர்.

ஆண்டகை அவர்களின் இந்த அபார தவம் பற்றிப் பிற்காலத்தில் ஒரு பெரியார் குறிப்பிட்ட பொழுது, ''புருஜுல் அஜமி'' யில் நிகழ்ந்ததை நான் உங்களுக்குச் சொல்லவா? கஃபாவை, அதன் திரை சுற்றி வந்தது. காதிரை, அப்துல் காதிர் சுற்றி வந்தார். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. நீங்களே உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்'' என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் கடும் தவம் செய்து கொண்டிருக்கும் பொழுது, அவர்களின் தவத்தைக் கெடுக்க ஷைத்தான் செய்த சூழ்வினைகள் கொஞ்சமல்ல. முதலில் தம் சீடர்களான பேய்க் கணங்களை அவர்கள் மீது தாக்குதல் நடத்துமாறு அனுப்பி வைத்தான் அவன். அவற்றின் மூர்க்கமான தாக்குதலை, வீரத்துடன் எதிர்த்து நின்றார்கள் அவர்கள். அப்பொழுது அவர்களின் செவியில் அசரீரி ஒன்று, ''அப்துல் காதிரே! அஞ்சாது எதிர்த்து நிற்பீராக! உமக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் நாம் செய்வோம்'' என்று முழங்கியது. அதனைக் கேட்டு ஆண்டகை அவர்கள் ஊக்கம் பெற்றுப் பொருதபொழுது, பேய்க் கணங்கள் திடுக்குற்று திக்கொன்று, திசையொன்றாகச் சிதறி ஓடின.

மற்றொரு நாள், பேய் ஒன்று பயங்கர உருவுடன் அவர்களின் முன் தோற்றம் வழங்கி, அவர்களைத் தாக்க முற்பட்ட பொழுது, உடனே அவர்கள், ''லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அளிய்யுல் அளீம்'' என்ற 'ஹவ்கலா' கலிமாவை ஓத, அடுத்தகணம் அது பொசுங்கிச் சாம்பலாகியது.

வேறொரு நாள் இப்லீஸே பயங்கரத் தோற்றத்துடன் அவர்களின் முன் தோன்றினான். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''நீ யார்?'' என்று வினவினர். அதற்கு அவன், ''நான் இப்லீஸ். தங்களுக்கு ஊழியம் புரிய இங்கு வந்தேன். என்னையும் என் பணியாட்களையும், எக்காரணம்

கொண்டு தாங்கள் அழித்தொழிக்க முனைந்து நிற்கிறீர்கள்? இனிமேல் அவ் அலுவல் தங்களுக்கு வேண்டாம்! நான் இப்பொழுது தங்களின் தாள் அமர்ந்து குற்றேவல் புரிய வந்துள்ளேன்'' என்று பணிவோடும் கனிவோடும் பேசினான்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவனை நோக்கி, ''சீ! இறை ஆணைக்கு மாறு செய்த மூதேவியே! என் ஆணைக்கா நீ பணிந்து நடக்கப் போகிறாய்? வேண்டாம் இந்த மாய்மாலப் பேச்சுக்கள்! இங்கிருந்து போய்விடு!'' என்று அதட்டினார்கள்.

அதற்கு அவன், ''தாங்கள் என்னதான் கூச்சலிட்டாலும், நான் தங்களை விட்டும் ஒரு போதும் அகலேன்'' என்று கூறினான். அப்பொழுது அழகிய நீண்ட கரம் ஒன்று திடீரெனத் தோற்றம் வழங்கி, அவனை அடித்து விரட்டியது.

அடிபொறுக்காது அலறிய அவன், மீண்டும் தீப்பந்தம் ஒன்றைக் கையிலேந்தி ஆண்டகை அவர்களைச் சுட்டெரிக்க முனைய, அப் பொழுது சிவப்பு நிறம் கலந்தவெண் புரவி மீது முகமூடியணிந்த ஒருவர் தோன்றி, ஆண்டனை அவர்களின் கையில் ஓர் ஒளி மிகுந்த வாளினைக் கொடுத்து, ''அக்கயவன் மீது இதனை வீசுக!'' என்று கழறிச் சென்றார். அவ்விதமே ஆண்டகை அவர்கள் செய்ய, அதனை எதிர்த்து நிற்க ஆற்றாது வெருண்டோடினான் அவன்.

மூன்றாம் முறையாகப் பிறிதொரு கோலத்தில் வந்த அவன், தரையில் அமர்ந்து மண்ணைவாரித் தன் தலையில் போட்டுக் கொண்டு, ''இறையருள் பெற்ற ஏந்தலாம் அப்துல் காதிரே! ஏன் தாங்கள் என்னுடன் இவ்வாறு நடந்துகொள்கிறீர்கள்? தங்களால் என் மாண்பும், மதிப்பும், தலைமையும் தறுகண்ணும் அழிந்தொழிந்தன'' என்று அழுது புலம்பினான். அது கேட்டுக் கடும் சினமுற்ற அவர்கள் அவனை முனிந்து விரட்டியடித்தனர்.

தன் மாய்மாலங்களில் சிக்காது, வழக்கம் போல் அவர்கள் கடும் தவம் செய்வது இப்லீஸுக்கு என்னவோ மாதிரியாக இருந்தது. ஒருநாள் அவன் அவர்களின் முன்தோன்றி, தன் உடலிலிருந்து தூண்டில்களையும், வலைகளையும் எடுத்தான். ''அவை என்ன?'' என்று அவர்கள் வினவ, ''தங்களைப் போன்ற அறிவாளிகளை வேட்டையாட நாங்கள் பயன்படுத்தும் கருவிகளே இவை'' என்று அவன் கர்வத்தோடு மறு மொழி பகர்ந்தான்.

இவ்வாறு கூறிய அவன் ஒரு நாள், அவர்களின் முன் அழகெலாம் திரண்ட ஆரணங்கு போன்று பிறந்த மேனியாய்த் தோற்றம் வழங்கினான். அவனை எவனென விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், அப்புல்லனைப் புல்லாக வல்ல, தூசியாகக் கூட மதிக்காது தம் தவத்தில் மூழ்கித் திளைத்தனர்.

தன் சூழ்ச்சி பலியாதது கண்ட அத்தூர்த்தன், ஓரிரவு ஆண்டகை அவர் களின் கனவில் நாற்பது தடவை அழகிய ஆரணங்கின் உருவில் தோற்றம் வழங்கி, அவர்களின் உறுதியைக் கலைக்க முயன்றான். அதன் காரணமாக அவர்கள் தூய்மை பெற அன்றிரவு மட்டும் நாற்பது தடவை குளிக்க வேண்டியதாயிற்று.

மற்றொரு நாள் அவன் ஓர் அறிஞனின் உருத்தாங்கி அவர்களின் அருகமர்ந்து இறைமறையை இனிய குரலெடுத்து ஓதினான். எனினும் ஆண்டகை அவர்கள் அவனைக் கடைக்கண்ணாலும் பார்க்கவில்லை.

எனவே மூக்குடைந்து முகமின்றித் திரும்பிச் சென்ற அவன் மற்று மொரு தடவை ஒரு வானவரின் திருக்கோலத்தில் தோற்றம் வழங்கி, ''அப்துல் காதிரே! உம்மை இறைஆணைப்படி இறைவனின் திருமுன் கொண்டு செல்வதற்காக புராக்கைக் கொணர்ந்துள்ளேன்'' என்று கூறினான். ''இவ்வுலகில் எம்பிரான் நபிகள் கோமான் (ஸல்) அவர் களையே யன்றி, வேறெவரையும் விண்ணகம் அழைத்துச் செல்வதற்காக 'புராக்' இதுவரை அனுப்பப் பெறவுமில்லை; இனிமேல் அனுப்பப் பெறப் போவதுமில்லை'' என்று கூறி அவனை விரட்டினர்.

அப்பொழுது அவன் அவர்களை நோக்கி ''அப்துல் காதிரே! நீர் உம் அறிவால் தப்பினீர்'' என்று அவர்கள் மீது புகழ்மாலை தொடுத்தான். இது தம்மை அவனுடைய மாயவலையில் சிக்க வைத்து, மாய்ப்பதற்கான மற்றொரு சூழ்ச்சி என்பதை நன்கு விளங்கிக் கொண்ட அவர்கள், ''சீ! ஓடிப் போ! என் முன் நில்லாதே! இறையருள் இல்லையேல், என் அறிவால் யாது செய்ய இயலும்? இறைவனின் தனிப்பெரும் கருணையே என்னை உன்னுடைய மாய வலையிலிருந்து காத்தருளியது'' என்று விடை பகர்ந்தனர்.

மற்றொரு நாள் அவர்கள் தண்ணீரின்றித் தாகவிடாயால் தவித்துக் கொண்டிருந்த பொழுது, திடீரென விண்ணிலே ஒரு கருமுகில் தோன்றி, மழையைப் பொழிந்தது. அத்தண்ணீரை எடுத்து அவர்கள் அருந்தித் தாக விடாய் அடங்கப் பெற்றனர். அப்பொழுது விண்முகட்டில் கண்ணை மழுக்கும் ஓர் ஒளி உருவார் தோன்றி, ''அப்துல்காதிரே! நாம் தாம் அல்லாஹ். உம் தவம் கண்டு மெச்சினோம். அதனை நாம் ஏற்றுக் கொண்டோம். அதற்குப் பிரதிபலனாக இதுமுதற் கொண்டு உமக்கு விலக்கப் பட்டவை அனைத்தையும் விதிக்கப் பட்டவையாக ஆக்கினோம்'' என்று கூறினார்.

அதுகேட்டு அவர்களின் திருவாயிலிருந்தும், ''எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டும் நான் காவல் தேடுகிறேன்'' என்ற சொற்கள் வெளிவந்தன. அதன்பின் ''இப்லீஸே! அடாது செய்யும் கொடியோனே!

என் முன் நில்லாதே! ஓடிப்போ'' என்னும் சொற்கள் அனற்பிழம்பென வெளிவந்தன. அடுத்த கணம் அவன் மின்னலென மறைந்தான்.★

இதன்பின் ஆண்டகை அவர்கள் தம் உள்ளத்தை இறைவனின் தனிப்பெரும் ஆசனமாக ஆக்கி, எல்லாம் அவனே, அவனன்றி யாதுமில்லை என்ற மெய்யறிவின் ஞானப்பாட்டையிலே அடியெடுத்து வைத்து நடந்து சென்றார்கள். அவர்கள் கடந்து சென்ற படித்தரங்களை இதோ ஆண்டகை அவர்களே கூறுகின்றார்கள்:

''முதலில் 'தவக்குல்' என்ற வாயிலை வந்தடைந்தேன். அங்கே அல்லாஹ்வே தஞ்சம் என்று கொண்ட ஞானவான்கள் நிரம்பி வழிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். பின்னர் அதை விட்டும் நீங்கி அடியெடுத்து வைத்து நடந்த பொழுது அல்லாஹ்வையன்றி வேறொன்றும் தேவையற்ற கினாஃ என்னும் வாயிலை அடைந்தேன். அங்கும் மக்கள் கூட்டம் சொல்ல முடியாததாக இருந்தது. பின்னர் அங்கிருந்தும் புறப்பட்டு அல்லாஹ்வை அண்மித்தல் என்ற குரூப் என்ற வாயிலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கும் மக்கள் நெரிசலாக நின்று கொண்டிருந்தார்கள். எனவே அதைவிட்டும் நீங்கி நான் 'ஷுக்ர்' என்ற வாயிலை அடைந்தேன். அங்கும் ஒரே கூட்டம், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, மேலும் முன்னேறிச் சென்றேன். இறைவனின் அற்புதக் காட்சிகள் நிரம்பிய 'முஷாஹதா' என்ற வாயில் என் கண்களில் தென்பட்டது. அங்கு எங்குப் பார்த்தாலும் மக்கள், கும்பல், கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். இறுதியாக அல்லாஹ்வின் மாண்புமிகு திருவாயிலாகிய 'ஃபக்ரு' என்ற வாயிலை நான் அடைந்தேன். அங்கு எவ்விதமான நெரிசலோ கூச்சலோ இல்லை. எங்கும் அமைதி நிலவியது. என் குறிக்கோள் நிறைவேறியது. மாபெரும் சாயுச்சிய ஞானப் பேற்றினை நான் எய்தப் பெற்றேன்.''

இவ்விதம் பற்பல படித்தரங்களை அவர்கள் தாண்டி வரும் பொழுது, அவர்கள் பல்வேறு அனுபவங்களையெல்லாம் பெற்றார்கள். ஞான போதை தலைக்கேறி, அவர்கள் திடீரெனக் காட்டிலே வெருண்டோடுவர். வெருண்டோடிய அவர்கள் ஓரிடத்தில் மயக்கமுற்றுக் கீழே

★ பிற்காலத்தில் ஆண்டகை அவர்கள் மக்களின் முன் பேருரை வழங்கும் பொழுது இதனை எடுத்துரைத்தனர். அப்பொழுது ஒருவர், ''தாங்கள் அவ்வாறு கூறியவன் இப்லீஸ் தான் என்பதை எவ்வாறு உணர்ந்தீர்கள்?'' என்று வினவினார். அதற்கு ஆண்டகை, ''நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் மூலமாக உலக முடிவு நாள் வரை மாந்தரினத்திற்குச் சிலவற்றை விதித்தும், சிலவற்றை விலக்கியும் இறைவன் வரையறுத்திருக்க, எனக்கு மட்டும் விதிவிலக்குச் செய்வானா, என்ன? எனவே இவ்விதம் கூறுபவன் ஷைத்தானாகத் தான் இருப்பான் என்பதை நான் நன்கு விளங்கிக் கொண்டேன்'' என்று கூறினார்.

விழுவர். மயக்கம் தெளிந்து பார்க்கும் பொழுது, அது வெகு தொலை விலுள்ள ஊராக இருக்கும். ''நாம் சற்றுத்தொலை தானே ஓடினோம், அதற்குள் இவ்வளவு தொலை வந்துவிட்டோமே'' என்று அவர்களே வியப்புறுவர்.

ஒரு தடவை அவர்கள் கானகத்தில் இருக்கும் பொழுது, ஞான போதை தலைக்கேறி, தம்மைமறந்த நிலையில ஓடினர். சற்றுத் தொலைவுதான் ஓடி இருப்பர். அதற்குள் அவர்களுக்குத் தன்னுணர்வு திரும்பியது. கண்களை அகல விரித்துப் பார்த்தார்கள். என்ன வியப்பு! பக்தாதிலிருந்து பன்னிரண்டு நாட்கள் பயணத் தொலைவிலுள்ள துஸ்தர் நகரில் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு பெண் அவர்களின் முன் தோன்றி, ''என்ன அப்துல் காதிரே! உம்மைப் போன்று உயரிய படித்தரத்தை எய்தப் பெற்றவர்களுக்கு இவையெல்லாம் ஆச்சரியமா, என்ன?'' என்று கூறிச் சென்றாள்.

கானகத்தில் அவர்கள் கடும் தவம் செய்யும் பொழுது, ஜின்கள் கூட்டம் கூட்டமாக அவர்கள் முன் வந்து, தாள் மடித்து அமர்ந்து பாடம் கேட்டுச் சென்றன. அவர்களுக்கு ஆண்டகை அவர்கள், அறவழியை, அல்லாஹ்வின் வழியைப் போதித்தனர்.

ஒரு நாள் அவர்கள் கானகத்தின் வழியே சென்று கொண்டிருந்த பொழுது, ஒரு குகையின் வாயிலில் ஒரு 'ஸலவாத்' எழுதப்பட்டிருப் பதையும், அதன் கீழே 'இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்து களை ஐம்பதாயிரம் தடவை ஓதுவதை விட மேலானதாகும்'' என்று பொறிக்கப்பட்டிருப்பதையும் கண்டனர். அன்றிரவு அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு, இதுபற்றி வினவிய பொழுது, இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்துக்களை எழுபதாயிரம் தடவை ஓதுவதை விட மேலானது'' என்று அவர்கள் திருவாய் மலர்ந் தனர். இதுவே 'ஸலவாத்துல் ஹிஜ்ரிய்யா' என்ற புகழ்பெற்ற ஸலவாத்தாகும்.

ஹிஜ்ரி 511 ஆம் ஆண்டில் ஒரு வெள்ளிக்கிழமை. அப்பொழுது தான் ஆண்டகை அவர்களுக்கு நாற்பது வயது நிறைவுற்று, நாற்பத்தொன் றாவது வயது தொடங்கியிருந்தது. அவர்கள் பக்தாது மாநகரம் நோக்கிக் கால்களில் செருப்பின்றிக் கானகத்தின் நடுவே நடந்து கொண்டிருந் தார்கள். அப்பொழுது வழியில் ஒரு வயோதிகர் கடுமையான நோய் வாய்ப்பட்டவராய், குற்றுயிராய்க் கிடந்தது அவர்களின் கண்களில் தென் பட்டது. அவரும் அவர்களைப் பார்த்தார். உடனே அவரின் வாயிலி ருந்தும், ''அஸ்ஸலாமு அலைக்கும்'' என்னும் சொற்கள் ஈனக்குரலில் வெளிவந்தன. அதற்கு முறையே மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

அப்பொழுது அந்த வயோதிக நோயாளர், அவர்களை நோக்கி, ''என்னைத் தூக்கி நிறுத்தும்!'' என்று வேண்டினார். அவ்வாறே அவர்களும் செய்தார்கள். அடுத்த கணம் அவர் இளமை எழிலுடன் காட்சி வழங்கினார். அப்பொழுது அவர், அவர்களைப் புன்முறுவல் முகத்திலே தவழ நோக்கி, ''என்னை நீர் இதற்கு முன் கண்டதுண்டா?'' என்று வின வினார். ''இல்லை'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள். அப் பொழுது அவர் மீண்டும் ஒரு புன்முறுவலை உதிர்த்து, ''அன தீனுன் வ அன்த முஹ்யித்தீனுன்.'' (நான் இஸ்லாம் என்ற மார்க்கமாவேன். நீர் அதனை உயிர்ப்பித்தவராவீர்) அகிலத்திற்கு இறுதியாக வந்த, மாதூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கமாகிய, நான், நோயுற்று நலிவுற் றிருந்த சமயம் இறைவன் உம்மால் எனக்குப் புத்துயிரளித்தான். இன்று முதல் நீர் முஹ்யித்தீனாவீர் என்று கூறி மறைந்தார்.

இதன்பின் கானகத்திலே கால் கடுக்க நடந்து பக்தாது மாநகரை அடைந்த ஆண்டகை அவர்கள், ஜும்ஆ தொழுவதற்காக நேரே பள்ளி சென்றனர். அப்பொழுது அவர்களின் முன் ஒருவர் வந்து அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து, அவர்களின் காலடியில் ஒரு சோடி செருப்பை வைத்து, ''அணிந்தருள்வீர்!'' என்று வேண்டி நின்றார். அவ்வாறே அவற்றை அணிந்து கொண்டு, அவர்கள் பள்ளி சென்ற பொழுது, பள்ளியில் இருந்தோர் அனைவரும் வெளியே வந்து, ''முஹ்யித்தீனே வருக! முதல்வனின் வலியே வருக!! தங்களைக் கொண்டு தான் இஸ்லாம் புத்துயிர் பெற வேண்டுமென்று சற்று நேரத்திற்கு முன் பேசிக் கொண்டி ருந்தோம். தாங்களும் நல்ல வேளையாக வந்து சேர்ந்தீர்கள்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தனர்.

அதன்பின் அவர்கள் தொழுது முடித்துப் பள்ளியிலிருந்து வெளி வந்த பொழுது, மக்கள் அதன் வாயிலிலே குழுமி நின்று அவர்களின் கரமெடுத்துக் கண்களில் ஒற்றி, ''யா முஹியித்தீன்! யா முஹிய்யித்தீன்!!'' என்று கூறி மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்து நின்றார்கள். அப்பொழுது சிலர், ஆண்டகை அவர்களைச் சூழ்ந்து நின்று,

முஹ்யித்தீன் என்று கூற முன்னவன் கருணை யுண்டாம்
முஹ்யித்தீன் என்று கூற முஸிபத்தும் பலாயும் நீங்கும்
முஹ்யித்தீன் என்று கூற முத்தொகை உலகும் வாழ்த்தும்
முஹ்யித்தீன் என்று கூற முடிவிலாப் பதவி யுண்டே''★

★ இது வண்ணக் களஞ்சியப் புலவர் பாடிய குத்பு நாயகத்திலுள்ள ஒரு செய்யுள்.

என்று போற்றிப் புகழ்ந்து பண்ணிசைத்தது; பக்தாது மாநகரம் முழுவதும் எதிரொலி செய்தது.

எனினும் தம்முடைய வருங்காலத்தைப் பற்றி ஆண்டகை அவர்களால் எத்தகைய திடமான முடிவுக்கும் வர இயலவில்லை. முன்பு போன்று தவக்கோலம் புனைந்து, தனித்திருந்து வாழ்வதா அல்லது பொது வாழ்வில் ஈடுபட்டு இஸ்லாத்திற்குப் புத்துயிரளிக்கும் திருப்பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொள்வதா என்பதை அறியாத நிலையில், அவர்கள் 'புருஜுல் அஜமியி'லேயே மேலும் சில காலத்தைக் கழித்து வந்தார்கள். அப்பொழுது அவர்களின் உள்ளத்தில் நூதனமான ஓர் எண்ணம் உதித்தது. இனிமேல் தமக்கு எவரும் வலிய வந்து உணவூட்டினாலன்றித், தாமாக எதனையும் எடுத்து உண்பதில்லை என்னும் முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். இவ்வாறு முடிவுக்கு வந்த அக்கணமே அதனைச் செயலாற்றவும் தொடங்கிவிட்டார்கள்.

புருஜுல் அஜமி நிர்மாணிக்கப்பட்ட கானகமோ மனித நடமாட்டமில்லாதது. தப்பித் தவறி வழிப்போக்கர் எவரும், அங்கு வருவதோ அரிதினும் அரிது. இந்நிலையில் ஆண்டகை அவர்கள் கொண்ட உள உறுதியோ விநோதமாக இருந்தது. நாற்பது நாட்கள் அன்ன ஆகாரமின்றி, அக்கானகத்திலே அவர்கள் கிடந்தார்கள். எவரும் அவர்களை அணுகி, ''உண்ணுக!'' என்று உரைக்கவுமில்லை. உணவைக் கொண்டு வந்து ஊட்டவுமில்லை. எவரும் ஊட்டாது தாமாகவே அவர்கள் உண்ணவும் முற்படவில்லை.

நாற்பத்தோராவது நாள் புலர்ந்தது. அப்பொழுது வழிப்போக்கர் ஒருவர், தம்முடைய உணவில் ஒரு பகுதியை அவர்களின் முன் கொண்டு வந்து வைத்து எதுவும் கூறாது, அவ்விடம் விட்டு அகன்றார். அப்பொழுது அவர்களின் 'நஃப்ஸ்' ''உண்ணுக! உண்ணுக!!'' என்று கூறிக் கலகக் கொடியைத் தூக்கியது. அத்துடன் சேர்ந்து கொண்டு, அவர்களின் வயிறும் பேரிரைச்சல் செய்து எதிர்ப்புக்குரல் முழக்கியது. எனினும் அவற்றைச் சற்றேனும் சட்டை செய்யாது, அசட்டையாக இருந்தார்கள் அவர்கள்.

இப்பொழுது அறிவில் சிறந்த ஆன்றோர் ஷைகு அபூ ஸயீது முகர்ரமீ அவ்வழியே வந்தனர். அவர்கள் ஆண்டகை அவர்களைக் கண்ணுற்றதும், ''அப்துல் காதிரே! என்ன இப்பேரிரைச்சல்?'' என்று கனிவோடு வினவினர். அதற்கு அவர்கள், ''இது என்னுடைய வயிற்றுப் பசியின் ஓலமாகும். நான் அதனைப் பொருட்படுத்தாது இறை நினைவில் ஒன்றியுள்ளேன்'' என்று பதிலிறுத்தனர். ''நல்லது நம் இருப்பிடமாகிய 'சுஸாம்' வாயிலுக்கு வாரும்!'' என்று கூறிவிட்டு அவர்கள் அவ்விடம் விட்டு அகன்றனர்.

அவர்கள் அகன்றது தான் தாமதம், மீண்டும் ஆண்டகையின் உள்ளத்தில் போராட்டம் தொடங்கியது. 'போ!' என்றது உள் மனம். 'போகாதே! என்றது வெளி மனம். என்ன செய்வதென அறியாது, எதைச் செய்வதெனத் தெரியாது அவர்கள் அங்கு அமர்ந்திருந்த பொழுது, இறவா வரம் பெற்ற ஏந்தலார் கிள்ரு (அலை) அவர்கள், அவர்களின் முன் திருத்தோற்றம் வழங்கி, ''அப்துல் காதிரே! அழைப்பை ஏற்று அங்கு செல்லும்!'' என்று பணிந்து விட்டுச் சென்றனர். அவ்வாறே, தாம் பதினொரு ஆண்டுகாலம் இருந்து அருந்தவமாற்றிய அப்பாழ் மண்டபத்தை விட்டு, ஆண்டகை அவர்கள் அடிபெயர்ந்தனர். ஷைகு அபூ ஸயீது முகர்ரமீ அவர்களின் இருப்பிடம் நோக்கி, இந்த ஷைகு அபூ ஸயீது முகர்ரமீ என்பவர் யார்?

பக்தாது மாநகரிலே பாபுல் அஸ்ரஜ் என்று ஓர் இடம் உண்டு. அங்கு அருளே உருவினராய், அன்பே வடிவினராய், ஆன்றோர் ஒருவர், மக்களுக்கு இறை ஞான நல்லமுது நல்கும் கல்லூரி ஒன்றை நிறுவி, அதற்கு 'மதரஸா முபாரக்கிய்யா' எனப் பெயரிட்டு நடாத்தி வந்தனர். அவர்களோ முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களிலிருந்து, அலீ (ரலி) அவர்கள் மூலம் வந்த ஞானப் பேரரசில், பதின்மூன்றாவது கிலாஃபத் பதவியைத் தாங்கி அரசோச்சி வந்தனர்.

தம்முடைய அன்பான அழைப்பை ஏற்று, ஆண்டகை அவர்கள் தம்முன் வந்து நிற்பதைக் கண்டதும், அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஓடோடிச் சென்று அவர்களை வரவேற்று, ''நான் கூறியது பற்றாதென்று, கிள்ரு வந்து கூறியபின் தான் வரவேண்டுமோ?'' என்று ஆண்டகை அவர்களைச் செல்லமாகக் கோபித்து விட்டு, அவர்களை உள்ளே அழைத்துச் சென்று அருசுவை உண்டியைத் தம் செங்கமலக் கையால் வயிறார ஊட்டி மகிழ்ந்தனர்.

உணவூட்டி முடிந்த பின், தம்முடைய ஞானப் பேரரசின் பொறுப்பை ஆண்டகை அவர்களிடம் மனமுவந்து ஒப்படைத்து, வழி வழி வந்த புனிதப் போர்வையையும் அவர்கள் மீது போர்த்தி, நன்மாராயம் மொழிந்தனர். அப்பொழுது மாவும் மக்களும், பூவும் புள்ளும் புளகாங்கித முற்றுப் பூரிப்படைந்தன. அந்த ஆன்மீகப் பேரரசின் அரியணையோ தம்மீது அமரத் தனிப்பெரும் சீர்த்தி மிகு ஏந்தல் தேர்ந்தெடுக்கப்பட்டது அறிந்து பெருமகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தது.★

இதன்பின் ஆண்டகை அவர்களின் வாழ்விலே ஒரு புதுவிதத் திருப்பம் ஏற்பட்டது. அப்புனிதப் போர்வை அவர்களின் உள்ளத்திலே

★ ஆண்டகை அவர்களின் திருக்கரம் வந்த அப்பேரரசே, பிற்காலத்தில் 'காதிரிய்யா தரீக்கா' எனப் புதுப் பெயர் பெற்றுக் பொலிவுற்றுத் துலங்கியது.

ஒரு புதுவிதப் பொறுப்புச் சுமையைச் சுமத்தியது. அவர்களின் உள்ளம் முன்பு போன்று, கானகத்தில் தனித்திருந்து கடும் தவம் செய்ய விழைந்த போதினும், தம்மைக் கொண்டு மனித இனம் மாண்பு பெறவேண்டு மென்ற இறைவனின் திருவுள்ளத்தை உணர்ந்தது. அதற்கான சமயம் அண்மி விட்டதையும் அது தெள்ளத் தெரிய அறிந்தது. எனவே மறுபேச்சின்றி, ''இறையுள்ளம் எதுவோ அதுவே என்னுள்ளம்'' என்று கூறி இறையுள்ளத்திற்கு அடி பணிந்தது. எனினும் அவர்களை ஒருவிதத் தயக்கம் ஆட்கொண்டது.

ஹிஜ்ரி 521 ஆம் ஆண்டு, ஷவ்வால் மாதம், பதினோராம் நாள் செவ்வாய்க்கிழமை, ஆண்டகை அவர்களுக்கு ஐம்பத்தாறாவது வயது நடந்து கொண்டிருந்த பொழுது, பகல் பொழுதில் அவர்கள் சற்று நேரம் அயர்ந்து உறங்கினர். அப்பொழுது முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள், ஆண்டகை அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''அப்துல் காதிரே! தயக்கம் ஏன்? மற வழி செல்லும் மாக்களை இன்னும் ஏன் நீர் அறவழியில் அழைக்காதிருக்கின்றீர்?'' என்று வினாக்கணை விடுத்தனர்.

அதுகேட்டுத் திடுக்குற்ற ஆண்டகை அவர்கள், ''அண்ணலெம் பெருமானே! நான் அரபியல்லவே. அஜமி அல்லவோ? எனவே தான், அரபிகளின் அரசத் திருநகரில், நான் அரபி மொழியில் வாய் திறக்க அஞ்சுகின்றேன்'' என்று கூறினர்.

ஆண்டகை அவர்களின் இம்மறுமொழி, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முகத்தில் ஒரு புன்னகையை மலரச் செய்தது. அவர்களின் திருவாயைத் திறக்கச் செய்து, அதில் ஏழு தடவை தங்களின் உமிழ் நீரை உமிழ்ந்தனர் அண்ணல். அதன்பின் ஆண்டகை அவர்களை நோக்கி, ''அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ்வின் பேரருளால் மக்களை அற வழியில், அல்லாஹ்வின் நன்னெறியில் அழைப்பீராக!'' என்று நன்மாராயம் மொழிந்து விட்டு மறைந்தனர்.

அண்ணலெம் பெருமானின் ஆசிபெற்ற ஆண்டகை அவர்கள், நண்பகல் தொழுகைக்குப்பின் பள்ளியில் குழுமியிருந்த மக்களுக்குப் பேருரையாற்ற முன் வந்தனர். அப்பொழுது திடீரென மீண்டும் அத் தயக்கம் அவர்களை ஆட்கொண்டது. அப்பொழுது அபூத்தாலிப் ஈன்ற அருந்தவத்துப் பெருமகனார் அலீ (ரலி) அவர்கள் ஆண்டகை அவர்களின் முன் திருத்தோற்றம் வழங்கி, ''என்னரும் மைந்தரே! ஏனோ தயக்கம்?'' என்று வினவினர். ''பேச நாவெழவில்லை'' என்று ஆண்டகை அவர்கள் பதிலிறுத்தனர். அப்பொழுது அவர்கள் ஆண்டகை அவர்களின் திரு வாயைத் திறக்குமாறு கூறி, அதில் ஆறுதடவை தங்களின் உமிழ்நீரை

உமிழ்ந்தனர். அதுகண்ட ஆண்டகை அவர்கள், "ஏன் தாங்கள் ஏழுதடவை உமிழவில்லை" என்று வினவியபொழுது, "நாயகப் பெருமானுக்கு மரியாதை செய்வதற்காக" என்று நவின்றார்கள் அவர்கள். இவை அனைத்தும் ஒரு நொடியில் நிகழ்ந்தன. இதன் பின் என்ன? ஆண்டகை அவர்கள் வாயைத் திறந்ததும், அவர்களின் திருவாயிலிருந்து ஞானப் பேரமுதம் மடை திறந்தால் போன்று வெளிவரத் தொடங்கியது.

"சிந்தனை என்னும் முத்துக் குளிப்போன், இதயம் என்னும் கடலில் மூழ்கி, அறிவென்னும் ஆணிமுத்துக்களை, நெஞ்சென்னும் கடற் கரையில் கொண்டு வந்து சேர்ப்பான். அவற்றை நாவெனும் தரகன் விலை கூறியவுடனே, இறைவன் மேன்மைப்படுத்திய உயர்வான இல்லங்களில் வைத்து, வழிபாடு என்னும் உயரிய விலைக்கு அவை வாங்கப்படும்" என்று முதன் முதலாக அவர்கள் பேசிய பேச்சு, குழுமியிருந்த மக்களின் உடலத்திலும், உள்ளத்திலும் ஒருவித மின் ஆற்றலை ஊடுருவிப் பாயச் செய்தது.

ஆண்டகை அவர்கள் அன்று ஆற்றிய அருளுரை, கேட்டார் பிணைப் பதாய், கேளாரும் வேட்ப மொழிவதாய் அமைந்திருந்தமையின், மக்கள் சாரி சாரியாக அவர்கள் வீற்றிருந்து அருளுரை வழங்கிய கல்லூரிக்கு வரத் தலைப்பட்டார்கள். அது கண்ட ஷைகு அபூஸயீது முகர்ரமி அவர்கள், அப்பள்ளியின் தலைமைப் பீடத்தில் ஆண்டகை அவர்களை அமர்த்தி ஓய்வு கொண்டார்கள்.

இப்பொழுது பாபுல் அஸஜின் தலைமைப்பீடத்தில் அமர்ந்து ஆண்டகை அவர்கள் ஆற்றிய பேருரையின் பெரும் புகழ், நாடெங்கணும் நறுமணம் கமழலாயிற்று. மக்கள் வெள்ளம் அலைவீசி அக்கல்லூரியின் மீது மோதியதால், அக்கல்லூரிப் பெரும் கட்டடமும் சிறியதாக ஆகி விட்டது. எனவே அது இன்னும் விரிவுபடுத்தப்பட்டது. என் செய்தும் என்ன? அது மக்கள் வெள்ளத்தில் மூழ்கி மறைந்தது. எனவே, ஒவ்வொரு புதன் கிழமைக் காலையிலும், பாபுல் ஹல்பாவில் இருந்த ஈத்கா வெளியில் மேடை அமைத்து, அவர்கள் ஞானப்பேருரை வழங்கினார் கள். அவ்வெளியும் தெறித்துவிடுகிறாற் போன்று மக்கள் திரள் நிறைந்து விட்டதால், நகருக்கு வெளியிலுள்ள பரந்த பூமியில் பேச்சு மேடை அமைக்கப்பட்டு, அதில் அமர்ந்து, அவர்கள் அருட்பேருரை வழங்கி வந்தார்கள். அதனைத் தம் செவித் தட்டால் வந்த நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும், எழுபதாயிரம் மக்களுக்கு மேல் திரண்டு வந்தார்கள். இரவில் நடக்கும் கூட்டத்திற்குப் பகலிலேயே இடம் பிடிப்பதற்காக மக்கள் முண்டியடித்துக் கொண்டு முன் பாய்ந்தார்கள். சிறிது தாமதித்து வந்ததன் காரணமாக இடம் கிடைக்கப் பெறாதவர்கள், தாங்கள் இவர்ந்து

வந்த ஒட்டகைகள் மீதோ, குதிரைகள் மீதோ, கோவேறு கழுதைகள் மீதோ வீற்றிருந்து, அப்பேருரைக்குச் செவி சாய்த்துக் சொக்கி மகிழ்ந் தார்கள்.

வந்தவர்கள் அனைவருக்கும் விருந்து நல்கப்பட்டது. பேருரை நடக்கும் நாட்களில், விருந்திற்காகப் பத்தாயிரம் ஆடுகள் வரை அறுக்கப் பட்டன. இதனைக் கேள்வியுற்ற கலீபா, ஆண்டகை அவர்களுக்கு 'நீம்ரோஜ்' என்னும் வளமார்ந்த பகுதியை அன்பளிப்பாக வழங்க முன் வந்த பொழுது, 'இறைவன் எனக்கு 'நீம்ஷப்' என்ற செல்வத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளான். எனவே, தங்களின் 'நீம்ரோஜ்' எனக்குத் தேவையில்லை'' என்று அவர்கள் கூறிவிட்டார்கள். 'நீம்ஷப்' என்றால் இரவில் விழித்து வணங்கும் நற்பேறு என்பது பொருளாகும்.

வாரத்திற்கு மும்முறை - வெள்ளிக்கிழமை காலையிலும், செவ்வாய்க்கிழமை இரவிலும், பாபுல் அஸஜ் கல்லூரியிலும், புதன் கிழமைக் காலையில் ஈத்கா வெளியிலும், நிகழ்த்தப்பட்டு வந்த அப்பேருரையில், ஆண்டகை அவர்கள் ஆத்மீக ஞானத்தை வாரி வழங்கியதோடு, அன்றாட அரசியல், உலகாயதச் செய்திகளையும் எடுத்தோதி, மக்களுக்கு நேர்வழியை,- அல்லாஹ்வுடைய வழியை எடுத்துக் காட்டி வந்தனர்.

மக்கள் தம் பேச்சைக் கேட்கத் தொடர்ந்து வரவேண்டுமென்று ஆண்டகை அவர்கள் விரும்பினார்கள். ஏதாவதொரு நாள், தொடர்ந்து வருவோர் எவரேனும் வராவிடின், அவரைப் பற்றி விசாரித்து, அவருக் காக இறைவனிடம் இறைஞ்சுவார்கள். தம் பேச்சைக் கேட்க வருவோர் எவரேனும் வாணிபத்தின் பொருட்டு, வேற்றூர் சென்றிருப்பின், அவர் நலமே திரும்பி வர இறையருளை வேண்டுவார்கள்.

ஆண்டகை அவர்கள் தம் வாணாளில் எழுபத்து மூன்று ஆண்டு காலத்தை பக்தாதிலே கழித்தனர். அவர்கள் முதன் முதலாக பக்தாது வந்த பொழுது கலீபா அல் முஸ்தஸ்ஹிர் பில்லாஹ் (ஹிஜ்ரி 487 - 512) ஆட்சி செய்துகொண்டிருந்தார். அவருக்குப் பின் அல் முஸ்தர்ஷித் பில்லாஹ் (ஹிஜ்ரி 512- 559), அர் ரஷீத் பில்லாஹ் (ஹிஜ்ரி 529), அல் முக்தஃபில் அம்ரில்லாஹ் (ஹிஜ்ரி 530 - 555), அல் முஸ்தன்ஜித் பில்லாஹ் (ஹிஜ்ரி 555 - 565) ஆகியோர் முறையே கலீபாப் பதவி வகித்தனர்.

இவர்களில் முக்தஃபில் அம்ரில்லாஹ்வே, கஃபாவின் வாயிலைப் புதுப்பித்தவராவர். இவரின் கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, விரைவில் இவர் கலீபாவாகப் போவதாகவும், கலீபாவானதும் தம்மை ஒழுங்காகப் பின்பற்றி நடக்குமாறும் பணித்து

விட்டுச் சென்றனர். அவ்விதமே இவர் கலீபா ஆனார். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருள் வழியைப் பின்பற்றி ஒழுகினார்.

இதன்பின் பல்லாண்டுகள் கழித்து இவரின் மகன் முஸ்தன்ஜித் பில்லாஹ்வும் கனவொன்று கண்டார். அதில் ஒரு வானவர் விண்ணி லிருந்து இறங்கி, இவரின் கையில் 'கே' என்ற எழுத்தை நாலு தடவை எழுதினார். விழித்தெழுந்ததும் இதைப் பற்றி, அவர் கனவு விளக்க வல்லுனர்களிடம் வினவிய பொழுது, 'தலில் கிதாபத்த ஸனத்த, கம்ஸின் வ கம்ஸின வகம் ஸிமி அத்தின்' (நீர் ஹிஜ்ரி ஐந்நூற்று ஐம்பத்தைந்தாம் ஆண்டு கிலாஃபத் பதவியை எய்தப் பெறுவீர்) என்று விளக்கம் பகர்ந் தார்கள் அவர்கள். அவ்விதமே அவர் கலீபா பதவியை எய்தப் பெற்றார்.

இந்தக் கலீபாக்களின் காலம், இஸ்லாமிய உலகிலேயே மிகவும் குழப்பமான காலமாக இருந்தது. கலீபாக்களுக்கும் ஸெல்ஜூக் மன்னர்களுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது. கலீபாக் களைப் பெயரளவில் கலீபாக்களாக வைத்துக் கொண்டு, ஸெல்ஜூக் மன்னர்களே அரசியல் ஆதிக்கம் பெற விரும்பினர்.

இப்போராட்டம் கலீபா அல்முஸ்தர்ஷித் பில்லாஹ்வின் காலத்தில் உச்ச கட்டத்தை எய்தியது. அவர் வீராதி வீரராக இருந்த போதினும், பல போர்க்களங்களில் எதிரிகளைத் தோற்கடித்து வாகை சூடி இருந்த போதினும், ஹிஜ்ரி 529 ஆம் ஆண்டில் ஸெல்ஜூக் மன்னர் சுல்தான் மஸ்வூதினால் தோற்கடிக்கப்பட்டுச் சிறை செய்யப்பட்டார். பின்னர் அவர் சுல்தான் சஞ்சரின் பரிவுரை மீது விடுவிக்கப்பட்ட போதினும், பக்தாதுக்கு வரும் வழியில் பாத்தினிகளால் கொல்லப்பட்டார்.

இவற்றையெல்லாம் கண்டு ஆண்டகை அவர்கள் பெரிதும் உளம் வருந்தினார்கள். ஒற்றுமையாக இருக்க வேண்டிய இஸ்லாமிய சமுதாயம் இவ்வாறு பிளவு பட்டுச் சின்னா பின்னமாவதைக் கண்டு அவர் களின் உள்ளம் நைந்துருகியது. மக்களிடம் ஒழுங்கையும், ஒழுக்கத் தையும், இறைபக்தியையும், இறை நம்பிக்கையையும் உண்டு பண்ண, அவர்கள் தம் பேச்சுத் திறனைப் பயன்படுத்தினார்கள். மக்கள் உலகாயத நன்மைகளுக்காக வேண்டி அரண்மனையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டும், செல்வர்களுக்கு ஆலாத்தி எடுத்துக் கொண்டும் இருப்பதை அவர்கள் பெரிதும் கடிந்தார்கள். இதோ ஆண்டகை அவர்கள் ஈத்காஹ் வெளியில் பேசுகிறார்கள்:

''படைப்பினங்கள் அனைத்தும் பேரரசன் ஒருவனால் சிறை செய்யப்பட்டு விலங்கிடப்பட்ட மனிதன் போன்றுள்ளன. அம்மனிதன் ஒரு மரத்தில் தொங்க விடப்பட்டிருக்கிறான். அவனின் கீழே ஆழமான

ஆறு ஒன்று அலைமோதி ஓடிக் கொண்டுள்ளது. அரசன் ஓர் உயரமான அரியாசனத்தின் மீது அமர்ந்திருக்கிறான். அவனுடைய முகம் எள்ளும் கொள்ளும் வெடித்துவிடும் வண்ணம் உள்ளது. அவனுடைய இரு புறங்களிலும் ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது எவனாவது தொங்கிக் கொண்டிருக்கும் அந்த மனிதனிடமிருந்து, தனக்கு அபாயம் வரும் என்று கருதி, அரசனை விட்டும் தன் பார்வையைத் திருப்பி அவனையே பார்த்துக் கொண்டிருப்பானா? அவ்விதம் செய்பவனை முட்டாள் என்றோ பைத்தியம் என்றோ உலகம் கருதாதா, என்ன?

''இறைவனே! நீ எனக்குக் கண்ணைக் கொடுத்தும், நான் குருடனாயிருப்பதை விட்டும், உன் அண்மையை எய்திய பின்னர் அங்கிருந்து தூக்கி எறியப்படுவதை விட்டும், உன்னால் வழிகாட்டப் பட்ட பின்னரும், வழி தவறிச் செல்வதை விட்டும், இறை நம்பிக்கை பெற்ற பின்பும், இறை நம்பிக்கையற்றுப் போவதை விட்டும் நான் உன்னிடம் காவல் தேடுகிறேன்.

''மக்களே! நீங்கள் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவன் மீது, உங்களின் பார்வையைப் பதியவையுங்கள்! எவன் தன்னை உங்களின் முன்னிலையில் வைத்துக் கொண்டுள்ளானோ, அவனுடைய முன்னிலை யில் நீங்கள் உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்! அவன் உங்களை அழைக்கிறான். அவனுடைய அழைப்புக்கு நீங்கள் செவி கொடுங்கள்! எவனால் உங்களைக் காப்பாற்ற இயலுமோ; எவனால் உங்களை இருளிலிருந்து ஒளிக்குக் கொண்டுவர இயலுமோ; எவனால் உங்களை உங்களின் தீய இச்சைகளிலிருந்து காத்தருள இயலுமோ, அவனிடமே உதவி தேடுங்கள்!

''உங்களுடைய உலகாயத ஆசைகளெல்லாம், உங்களை நேர் வழியி லிருந்து திசை திருப்பிவிடக் கூடிய தீய நண்பர்கள் போன்றுள்ளனர். அந்த ஆசைகளுக்கு நீங்கள் எவ்வளவு காலம் தான் அடிமையாக இருக்கப் போகிறீர்கள்? நீங்கள் எவ்வளவு காலம் தான் இறைவனையும் மறுமையையும் மறந்து இருக்கப் போகிறீர்கள்?

''எல்லாம் இறைவனின் கைப்பிடியில் உள்ளன. அனைத்துப் படைப் பினங்களும் அவன் முன் ஆற்றலற்றவையாக உள்ளன. உங்களுக்கு அவனாலே அன்றி வேறு எவரா்லும் எவ்வித நன்மையோ, தீமையோ செய்ய இயலாது. உங்களுக்கு நடக்க வேண்டியதை அல்லாஹ் ஏற்கனவே நிர்ணயித்து வைத்துவிட்டான். அதனை எவராலும் மாற்றியமைக்க முடியாது.''

இவ்வாறு மக்களுக்கு அறிவுரை பகர்ந்த அவர்கள், எல்லாம் விதிப் படித்தான் நடக்குமென்று மக்கள் முழங்காலைக் கட்டிக் கொண்டிருப் பதை விரும்பவில்லை. ''நம் கடமை அயராது உழைப்பதேயாகும். அதற்கான பலனைத் தருவது இறைவனின் பொறுப்பில் உள்ளது'' என்று கூறினார்கள்.

அவர்கள் தம் அறிவுரையில் பற்பல உவமைகளையும் பயன்படுத்தி, தாம் கூறுவது மக்களின் உள்ளத்தில் நன்கு பதியுமாறு செய்தார்கள். பணத்திற்கு அரபு மொழியில் கூறப்பெறும் திர்ஹம், தீனார் என்ற இரு சொற்களைப் பயன்படுத்தி, பணத்தை எந்த அளவு மதிக்க வேண்டு மென்பதைத் தெளிவாக மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

''திர்ஹம் என்னும் சொல்லிலுள்ள 'ஹம்' என்ற சொல்லைத் தனியே எடுத்து ஆராய்ந்தோமானால் அதன் பொருள் 'கவலை' என்றாகிறது. அந்தக்கவலை, அதாவது பணம் பற்றிய கவலை அளவோடு இருந்தால் தான், மனிதன் முன்னேறுவான், இல்லையேல், பைத்தியக்காரனாகி விடுவான்'' என்று அவர்கள் கூறினார்கள்.

''தீனார் என்னும் சொல்லிலுள்ள 'நார்' என்ற சொல்லைத் தனியே எடுத்து ஆராய்ந்தோமானால் அதன் பொருள், 'நெருப்பு' என்றாகிறது. நெருப்பு அளவோடு இருந்தால் தான் அது விளக்கு ஏற்றவும் சமையல் செய்யவும், இன்னும் பல தேவைகளுக்கும் பயன்பெறுகிறது. அது அதிகமாகப் போய் விட்டால், அது வீட்டை மட்டுமின்றி, நம்மையும் எரித்துச் சாம்பலாக்கிவிடும்'' என்று அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இந்த உவமைகள் மூலம், மக்கள் பணத்தை அளவோடு ஈட்ட வேண்டும், அப்பொழுது தான் அது, அவர்களுக்குத் துணையாக இருக்கும், இல்லையேல், அது அவர்களுக்கு வினையாக ஆகிவிடும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

மேலும் அவர்கள் மக்களை நோக்கி, ''உலக ஆதாயங்களை, உலகத் தின் முன் பிச்சைக்காரன் போன்று கைகட்டி நின்று பெற நினைக்காதீர்கள்! அதற்கு மாறாக, திரைப் பொருள்கள் தன்முன் கொண்டு வந்து குவிக்கப்படும் பொழுது, கம்பீரமாக வீற்றிருக்கும் அரசன் போன்று நீங்களும் நடந்து கொள்ள வேண்டும். இந்த உலகமானது தன் முன் கைகட்டி நிற்பவனைத் தாழ்த்துகிறது. அதற்கு மாறாக, இறைவனின் திருமுன் கைகட்டி நிற்பவனை உயர்த்துகிறது. எனவே, உங்களின் பங்குக்குரிய உலக ஆதாயங்களை, உங்களையே நீங்கள் தாழ்மைப் படுத்திக் கொண்டு பெற, நீங்கள் முயலவேண்டாம், நீங்கள் உங்களின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படாமல் அதனைப் பெறவேண்டுமென்றே அல்லாஹ் விரும்புகிறாள்.

''உலக ஆதாயங்களைப் பெறுவதோ, அதனை நற்காரியங்களுக்காகச் சேமிப்பதோ சட்டப்படி சரியேயாகும். ஆனால், அவற்றின் மீது உங்களின் இதயங்களை நீங்கள் பதிய வைக்கக் கூடாது. அவற்றை நீங்கள், உங்களின் இதயத்தின் வாயிலில் நிற்க அனுமதிக்கலாம். ஆனால் அவற்றை, உங்களின் இதயத்தின் உள்ளே புக அனுமதிக்கக் கூடாது. அனுமதிப்பின் நீங்கள் மதிப்பை இழந்தவர்களாவீர்கள்'' என்று அருள் எச்சரிக்கை செய்தார்கள்.

இன்னும் இரண்டு உவமைகளைக் கூறி, மனிதனின் துவக்க நிலையையும், இறுதி நிலையையும் அவர்கள் அழகாக எடுத்துரைத்தார்கள்.

''அன்னையின் மார்பில் குழந்தை வாய் வைத்துப் பால் அருந்திக் கொண்டிருக்கும். திடீரென அவளுக்கு ஓர் ஐயம் ஏற்படும். குழந்தை பாலுண்டு கொண்டிருக்கிறதா அல்லது வெறும் மார்பைச் சுவைத்துக் கொண்டுள்ளதா என்பது தான் அந்த ஐயம். உடனே அவள் அக் குழந்தையை அன்போடு அணைத்துத் தூக்கித் தன் மறு மார்புக்கு மாற்றுவாள். அப்பொழுது அக்குழந்தை அழும். ஆனால், அடுத்த கணம் அது அன்னையின் மறு மார்பில் வாய் வைத்ததும் பால் சுரக்கும், அதனை மகிழ்ச்சியுடன் அருந்தும்.

''அதே போன்று, தான் நேசிக்கும் நல்லடியார்களை மாசகற்றி மனித குல மாணிக்கங்களாக ஆக்குவதற்காக, இறைவன் அவர்களுக்கு இடைக்கிடையே துன்பங்களையும், துயரங்களையும், நட்டங்களையும், நோய்களையும் நல்குகின்றான். அவற்றை இறைவன் தங்களின் நன்மைக்காகவே நல்குகின்றான் என்பதை அறியாது மக்கள், அந்தக் குழந்தை போன்று சிணுங்கவும், அழவும் செய்கிறார்கள். பின்னர் எவ்வாறு அந்தக் குழந்தை மகிழ்கிறதோ, அவ்வாறே அவர்கள் துன்பத் திற்குப் பின்வரும் இன்பம் கண்டு, மகிழ்ச்சியடைவார்கள். இது ஆன்மீக வாழ்வின் முதலாவது படித்தரம் ஆகும்.

''இறுதிப் படித்தரம் என்னவென்றால், எவ்வாறு குளிப்பாட்டுகிற வனின் கையில் தன்னை ஒப்படைத்துவிட்டு ஒரு 'மையித்' கிடக் கின்றதோ அதே போன்று, இறைவனிடத்தில் தன்னையும், அலுவல்கள் அனைத்தையும் ஒப்படைத்துவிட்டு, அமைதியாக இருப்பது தான்.''

இவ்வாறு மணி மணியான கருத்துக்களைப் பேசிக் கொண்டு வந்த ஆண்டகை அவர்கள், இதோ இணை வைத்தல் பற்றி அற்புதமான கருத்தொன்றைக் கூறுகின்றார்கள்:

''இணைவைத்தல் என்றால், இரும்பையும், செம்பையும், கல்லையும், மரத்தையும் சிலைகளாக வடித்து, அச்சிலைகளைக்

கடவுளர்களாகக் கருதி வழிபடுவது தான் என்று சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இது மட்டும் இணைவைத்தல் ஆகாது.

''நீங்கள் இறைவனை மறந்துவிட்டு, அவனை விட மேலாக உங்களின் மனைவியை நேசிப்பீர்களேயானால், உங்களின் மனைவி, நீங்கள் வணங்கும் விக்கிரகம் ஆகிவிடுவாள். நீங்கள் இணைவைப்பவர்களாகி விடுவீர்கள். இதே போன்று, நீங்கள் இறைவனை மறந்துவிட்டு, அவனைவிட மேலாக உங்களின் உடைமை, ஆற்றல், பட்டம், பதவி ஆகியவற்றை நேசிப்பீர்களேயானால், அவையே நீங்கள் வணங்கும் விக்கிரகங்களாகி விடும். நீங்கள் இணைவைப்பவர்களாகி விடுவீர்கள்.

''நாம் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்னும் இஸ்லாமிய மூல மந்திரத்தைக் கூறும் பொழுது, முதலில் 'லா இலாஹ' என்று தான் கூறுகிறோம். இதன் பொருள், எதுவுமே வணங்குதற்குரியதல்ல என்பதேயாகும். இவ்வாறு கூறி இதயத்தில் எவ்வித மாசு மறுவில்லாமல் துப்புரவு செய்துவிட்டு, அதன்பின் 'இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர) என்று கூறி, அல்லாஹ்வை அவ்விடத்தில் குடியேற்றுகிறோம். இதுவே தௌஹீதின் தத்துவமாகும்''.

இவ்வாறு பேசிய அவர்கள், தவறு செய்தவர்கள் எவராக இருந்த போதினும், அவர்களை இடித்துக் கூறத் தயங்கியதில்லை. இதன் காரணமாக, அவர்களைத் தொலைத்துக் கட்ட ஒரு விரோதக் கும்பல் தலை தூக்கலாயிற்று. அதனைத் துரும்பாகக் கூட அவர்கள் கருதாது, ''நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து பாருங்கள்! இறைவன் எனக்கு அருளிய அருட்பெரும் பேற்றினைப் பறித்து விடவும் முயற்சியாற்றுங்கள்! உங்களின் வாளாயுதத்தையும் என் மீது வீசிப் பாருங்கள்! உங்களால் எனக்கு எவ்வித இன்னலும் இழைக்க இயலாது. நான் அருட்பெரும் அருளாளனாகிய அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கிறேன். அவனன்றி அணுவும் அசையாது'' என்று முழங்கினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் பேசும் பொழுது, ''உங்கள் மீதுள்ள கழிவிரக்கத்தினாலேயே நீங்கள் தரும் இன்னல்களைச் சகித்துக் கொண்டுள்ளேன். இல்லையெனில்...'' என்று கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார்கள்.

ஆண்டியாயினும், அரசனாயினும், அவர்களின் கண்களுக்கு இருவரும் சமமாகவே தென்பட்டனர். ஒரு தடவை கலீபா அல்முக்தஃபில் அம்ரில்லாஹ், தீமையே உருவெடுத்த அபுல் வஃபா யஹ்யா என்பவரை நீதிபதியாக நியமித்ததை ஆண்டகை அவர்கள் அறிந்ததும், அதனை அவர்கள் பல்லாயிரவர் நடுவிலும் வைத்துச் சாடத் தயங்கவில்லை. ''இத்தகுதியற்ற நியமனத்தைத் தாம் செய்ததற்குக் கலீபா

இறைவனின் திருமுன் பதிலுரைத்தே ஆக வேண்டும். அப்பொழுது அவர் என்ன பதிலுரைப்பார்?'' என்று ஆண்டகை அவர்கள் அப்பொழுது ஆணித்தரமாகப் பேசிய மொழிகள், ஆங்கு வீற்றிருந்த கலீபாவை நிலை குலையச் செய்துவிட்டது. கண்ணீர் விட்டு அழுத வண்ணம் அவர், அக்கணமே அந்நியமனத்தை ரத்துச் செய்தார்.

மற்றொரு நாள் கலீபா அல்முக்தஃபில் அம்ரில்லாஹ், ஆண்டகை அவர்களின் பேச்சைக் கேட்பதற்காக வந்தமர்ந்திருந்த பொழுது , ஆண்டகை அவர்கள் அங்கு வளர்ந்திருந்த பேரீச்சமரம் ஒன்றைச் சுட்டிக் காட்டி, ''இதுவும் தவறாக வளர்ந்து சென்றால், அதனுடைய தலையை வெட்டுவேன்'' என்று கூறினார்கள். இது தம்மையே குறிப்பதை விளங்கிக் கொண்ட கலீபா, அரண்மனை சென்றதும், தம் அமைச்சர் இப்னு ஹுபைராவை அருகழைத்து, நடந்ததைக் கூறி, அடுத்தநாள் ஆண்டகை அவர்களிடம் சென்று, தம்மைக் கூட்டத்தில் வைத்துக் கண்டிக்க வேண்டாமென்று சொல்லி அனுப்பினார்.

அடுத்த நாள் ஆண்டகை அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் பொழுது அங்கு வந்து அமைதியாக வீற்றிருந்தார் அமைச்சர். அவர் வந்திருக்கும் காரணத்தைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள் தாம் சென்ற தினம் கூறியது போன்றே, அந்த மரத்தைச் சுட்டிக் காட்டி, ''இதுவும் தவறாக வளர்ந்து சென்றால் அதனுடைய தலையை நிச்சயமாக வெட்டுவேன்'' என்று கூறினார்கள்.

உலகை அறநெறிப்படுத்த வந்த ஆண்டகை அவர்கள், அதனை எவ்வளவு உள உறுதியோடு எடுத்துரைத்தார்கள் என்பதை விளங்கிக் கொண்ட அமைச்சர் இப்னு ஹுபைரா, கலீபாவிடம் வந்து நடந்ததைக் கூற, அவர் சற்று மன அமைதியுற்றார். பின்னர் அவரும் அமைச்சருமாக, ஆண்டகையைக் காண வந்தனர். அப்பொழுது அவருக்கு ஆண்டகை அவர்கள் பல அறபோதங்களை வழங்கினார்கள். அது கேட்டு கலீபாவின் கண்கள் குளமாயின. பின்னர் ஆண்டகை அவர்கள் கலீப்பாவைப் பெரிதும் பரிவோடும், பாசத்தோடும் நோக்கி, ஆறுதல் பல கூறி, வழி அனுப்பி வைத்தார்கள்.

பின்பு ஒருகால் கலீபா முஸ்தன்ஜித் பில்லாஹ் ஆண்டகை அவர்களிடம் அருளுரை கேட்பதற்காக அவர்களின் திருமுன் மரியாதையுடன் வந்தமர்ந்து, பத்துப் பைகள் நிரம்பவிருந்த பொற்காசுகளை அவர்களுக்குக் காணிக்கை வழங்கி, அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு பெரிதும் வேண்டினார். அவற்றை ஆண்டகை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும், அவர் ஆண்டகை அவர்களை விடவில்லை. ''ஆண்டகையீர்! ஆண்டகையீர்! ஏற்றருள்வீர்! ஏற்றருள்வீர்!'' என்று அவர் ஏங்கி, ஏங்கி

வேண்டினார். அப்பொழுது ஆண்டகை அவர்கள், அப்பைகளில் இரண்டினை எடுத்துத் தங்களின் திருக்கரங்களால் நசுக்கினார்கள். என்ன வியப்பு! அப்பைகளிலிருந்து இரத்தம் பீரிட்டு வெளியே பாய்ந்தது.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் கலீபாவை நோக்கி, ''இப்பொற்காசுகள் உண்மையில் பொற்காசுகளல்ல. இவை மக்களைக் கொடுமைப்படுத்தி, அவர்களைப் பிழிந்தெடுத்த இரத்தம் என்பதை நான் அறிவேன், நீங்கள் அறியமாட்டீர்கள். இப்பொழுதாவது நான் கூறுவதன் உண்மையை அறிகின்றீர்களல்லவா?'' என்று கூறினார்கள். இச்சொற்கள் கலீபாவின் செவிப்புகுந்ததும், அவர் மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தார். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அங்கிருந்தோரை நோக்கி, ''அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகின்றேன். இவர் மட்டும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் (ரலி) அவர்களின் வழித்தோன்றலாக இல்லாதிருந்திருப்பின், இவருடைய அரண்மனை வரையிலும் இவ்விரத்தம் பாய்ந்தோடச் செய்திருப்பேன்'' என்று கூறினார்கள்.

மீண்டுமொரு முறை அவர் ஆண்டகை அவர்களை அணுகி, அவர்களிடம் இரண்டு மாதுளம் பழம் தரவேண்டுமென்று வேண்டி நின்றார். அதுவோ மாதுளை காய்க்காத காலமாக இருந்தது. அது கேட்ட ஆண்டகை அவர்கள், புன்முறுவல் தம் முகத்திலே தவழ, தம் செங்கையை மேலே உயர்த்தினார்கள். அடுத்த கணம் அதிலே இரண்டு பவள நிறத்து மாதுளம் பழங்கள் வந்து அமர்ந்தன. அவற்றில் ஒன்றைக் கலீபாவின் கரத்தில் கொடுத்து, அதனை உடைக்குமாறு கூறிவிட்டு, மற்றொன்றை ஆண்டகை அவர்கள் தம் திருக்கரங்களால் உடைத்தார்கள். ஆண்டகை அவர்கள் உடைத்த பழத்திலிருந்து மாணிக்கமனைய சுளைகள் தெறித்து விழுந்தன. கலீபா உடைத்த பழத்திலிருந்து, புழுக்கள் நெளிந்தோடின. அது கண்டு வியப்பும், திகைப்பும் அடைந்த கலீபா, ஆண்டகை அவர்களை நோக்கி, அதற்கான காரணத்தை வினவியபொழுது, ''அநியாயக்காரன் கரம்பட்ட பழம் வேறு எவ்வாறு இருக்கும்?'' என்று சுருக்கமாக, ஆனால் சுருக்கெனத்தைக்குமாறு பதில் கூறினார்கள். கலீபா வெட்கித் தலை குனிந்தார்.

ஆண்டகை அவர்களின் அறிவார்ந்த சொற்பொழிவைக் கேட்பதற்குக் கலீபா மட்டுமின்றி அரசாங்கத்தில் பெரும் பதவி வகித்த பலரும் வந்து குழுமினர். அவர்களை ஆண்டகை அவர்கள் குறை காணும் பொழுது, அவர்களை இடித்து அறிவுறுத்தச் சிறிதேனும் தயங்கியதில்லை. அரசாங்கத்தில் பணியாற்ற அறிவாளிகளும், மார்க்கமேதைகளும் முன்னுக்குப் பாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள்,

வெகுண்டெழுந்தார்கள். ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது அவர்கள் கூறினார்கள்:

''நீங்கள் உங்களின் அறிவையும், ஆற்றலையும் துஷ்பிரயோகம் செய்துவிட்டீர்கள். நேர்மை வழிநின்று பாடுபட்ட உங்களின் மூதாதையர் எங்கே? நீங்கள் எங்கே? நீங்கள் இறைவனுடையவும், அவனுடைய திருத்தூதருடையவும் விரோதிகளாவீர்கள். உங்களுக்கும், கொள்ளைக் காரர்களுக்கும், கொடுங்கோலர்களுக்கும், நயவஞ்சகர்களுக்கும் இடையே என்ன வேற்றுமை இருக்கிறது? ஒன்றுமில்லை. நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் பக்திமான்கள் போன்று நடித்துக் கொண் டிருக்கப் போகிறீர்கள்? இன்னும் எவ்வளவு காலம் உங்களுடைய அரசர்களுக்காகவும், ஆளுநர்களுக்காகவும் வேண்டி, போலி பக்தி உடையை அணிந்து கொண்டிருக்கப் போகிறீர்கள்? இன்னும் எவ்வளவு காலம் அதிகார ஆசை, உலக இச்சை ஆகியவற்றின் அடிமைகளாக இருக்கப் போகின்றீர்கள்? திட்டமாக, நீங்களும், உங்களின் அரசர்களில் பெரும்பாலோரும், கொடுமைக்காரர்களாகவும், இறைவனுக்கும் அவனுடைய நல்லடியார்களுக்கும் துரோகம் இழைக்கும் துரோகிகளா கவுமே இருக்கிறீர்கள். வல்ல நாயன் இத்தகு அநியாயக்காரர்களை இழிவடையச் செய்யவோ, தம் பாவங்களை எண்ணி வருந்தி நேர் வழி பெறச் செய்யவோ, அழித்தொழிக்கவோ செய்கிறான்''.

ஒரு தடவை அரசருக்குக் குற்றேவல் புரிந்து வந்த மார்க்க விற்பன்னர் ஒருவர் வந்து, அவர்களிடம் மாட்டிக் கொண்ட பொழுது, ''உம்முடைய பேராசையானது இந்தக் கொடுங்கோலருக்குக் குற்றேவல் செய்யுமாறு உம்மைச் செய்ததையும், 'ஹராம்' ஆன, ஷரீஅத்திற்கு முரணான வழியில் உம்மைப் பொருள் சேகரிக்குமாறு செய்ததையும் பற்றி நீர் இன்னும் நாண முறவில்லையா? இந்த ஈனப் பிழைப்பை இன்னும் நீர் எவ்வளவு காலம் தான் செய்து கொண்டிருக்கப்போகிறீர்? நீர் குற்றூழியம் செய்து கொண்டிருக்கும் அரசர்களின் ஆட்சியெல்லாம், இன்னும் சிறிது காலத்தில் முற்றுப் பெற்றுவிடும். அதன்பின் வல்ல நாயனின் திருமுன் விசாரணைக்காகக் கொண்டு வந்து நிறுத்தப்படுவீர் என்பதை நீர் உணரமாட்டீரா?'' என்று அவரைச் சாடினார்கள்.

மக்கள் உலகாதயத்தில் மூழ்கித் திளைப்பதைக் கண்டு அவர்களின் உள்ளம் கொதித்தது. தம் உள்ளக் கொதிப்பை அவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் எடுத்துரைக்கச் சிறிதேனும் தயங்கிய தில்லை. அவர்கள் இதோ காரசாரமாகப் பேசுகின்றார்கள்.

''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நிர்மாணித்த இஸ்லாம் என்ற கோட்டை, செங்கல், செங்கல்லாக எடுக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டு

விட்டது. அது இப்பொழுது கீழே விழுந்து துவம்சமாகும் நிலையில் உள்ளது. மக்களே! அதனைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு ஓடோடி வாருங்கள்! அவ்வேலையை நாம் ஒன்று பட்டுச் செய்ய வேண்டும். கதிரவனே! வெண்ணிலாவே! கதிர் உடுக்குலங்களே! நீங்களும் எனக்கு உதவி செய்ய ஓடோடி வாருங்கள்!

''இன்றையத் தினம் இஸ்லாம் கண்ணீர் சிந்திக் கொண்டுள்ளது. நயவஞ்சகர்களும், 'பித்அத்' காரர்களும் தோன்றி, இஸ்லாத்திற்குப் புறம்பானவற்றை, இஸ்லாத்தைச் சேர்ந்தவை என்று கூறுவது கண்டு அது அழாமல் என் செய்யும்?

''முஸ்லிம்களே! உங்களின் மூதாதையரின் நடவடிக்கைகளை உற்று நோக்குங்கள்! அவர்கள் சரியானவற்றை மேற்கொண்டு ஒழுகினார்கள், தவறானவற்றைத் தங்களின் முதுகுப்புறம் தூக்கி எறிந்தார்கள். ஆனால் அவர்கள் இறந்த பின், அவர்களை நீங்கள் முழுக்க முழுக்க மறந்து விட்டீர்கள்.

''நாய் கூடத் தன் எசமானனுக்கு நன்றியுடன் நடந்து கொள்கிறது. தனக்கு மாலையில் கிடைக்கும் ஒரு சில ரொட்டித் துண்டுகளுக்காக அது பகல் முழுவதும் தன் எசமானனின் நிலங்களையும், கால்நடைகளையும் காவல் செய்கிறது. இறைவன் உங்களுக்குத் தன் அருண்மாரியைச் சொரிந்து கொண்டுள்ளான். எனினும் நீங்கள், அவனுக்கு நன்றி செலுத்தவோ, உங்களுக்கு அவன் கடமையாக்கிய பணிகளை நிறைவேற்றவோ செய்கின்றீர்களில்லை. அதற்கு மாறாக, அவனுடைய கட்டளைகளை மீறவும், ஷரீ அத்தின் வரம்புகளைக் கடக்கவும் செய்கின்றீர்கள்''

இவ்வாறு பேசிய ஆண்டகை அவர்களின் பேச்சிலே ஒரு விதக் கவர்ச்சி இருந்தது. அதன் காரணமாக மக்கள் காந்தத்தால் கவரப்பட்ட இரும்பு போன்று அவர்கள்பால் இழுக்கபட்டு வந்து நின்றனர். ஒரு நாள் ஆண்டகை அவர்களின் அருமந்த மைந்தர் அப்துல் வஹ்ஹாப் தம் தந்தையை நோக்கித் தமக்குச் சற்று நேரம் பேச அனுமதி வழங்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். அவரோ, கல்வி கேள்விகளில் தேர்ந்து பல நாடுகளுக்குச் சென்று, சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பி வந்திருந்தார். தனயரின் வேண்டுகோளுக்குத் தந்தையும் இசைந்தார்கள்.

அதன் பேரில் தனயர், தந்தையின் பேச்சு மேடையில் ஏறித் தம் திறமை அனைத்தையும் பயன்படுத்திச் சொற்பொழிவாற்றினார். ஆனால், அதுகேட்டு ஒருவரின் உள்ளமும் நெகிழவில்லை; ஒருவரின் கண்களும் கண்ணீர் சிந்தவில்லை. ''நீங்கள் எங்களைப் பார்த்துப் பேசிக் கொண்டி

ருங்கள்! நாங்கள் உங்களைப் பாராது பேசிக் கொண்டிருக்கிறோம்'' என்று கூறுவது போன்று, அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டிருந் தார்கள்.

தனயர் அலுப்பின்றி பேசிக் கொண்டிருந்த போதினும், மக்களுக்கோ அது பெரும் 'அறுப்பு' ஆக இருந்தது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து அவர்களின் பொறுமைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது. எனவே ஆண்டகை அவர்கள் பேச வேண்டுமென்று அவர்கள் குரல் எழுப்பினார்கள். அதன் பேரில் ஆண்டகை அவர்கள் எழுந்து நின்றார்கள். மேடை மீதேறி, ''நான் நேற்று நோன்பு நோற்றிருந்தேன். நான் நோன்பு திறப்பதற்கென என் அடிமைப் பெண் உம்மு யஹ்யா சில முட்டைகளைப் பொறித்து, அவற்றை ஒரு பீங்கானில் வைத்து மூடி, ஒரு புறத்தில் வைத்திருந்தார். அப்பொழுது ஒரு பூனை வந்து அப்பீங்கானைத் தள்ளிவிடவே, அது கீழே விழுந்து நொறுங்கி விட்டது'' என்று கூறினார்கள். அவ்வளவுதான். அடுத்தகணம் அங்கு கூடியிருந்த அனைவரும் 'கோ' வென்று அலறிவிட்டார்கள்.

இத்துடன் தம் பேச்சை முடித்துக் கொண்டு, மேடை விட்டிறங்கிய தந்தையை, தனயர் அணுகி, ''என்னரும் தந்தையே! இதுவென்ன புதுமை! நான் மேடை மீதேறி நின்று கரடியாய்க் கத்திய போதினும், அதற்குச் சிறிதேனும் செவி கொடாத மக்கள், தாங்கள் ஒரு சில சொற்கள் மொழிந்ததும் 'கோ' வென்று கதறி அழுது விட்டார்களே'' என்று வியப்பு மொழி பகர்ந்தார்.

அதற்கு ஆண்டகை அவர்கள் ''என் அருமை மகனே! நீ கல்வி தேடுவதற்காக மண்ணிலே சுற்றுப் பயணம் செய்துள்ளாயேயன்றி, அங்கு நீ சுற்றுப் பயணம் செய்துள்ளாயா?'' என்று விண்ணைத் தம் சுட்டு விரலால் காட்டினார்கள். அதன்பின் தம் மகனை நோக்கி, ''மகனே! நீ வானிலே பிரயாணம் செய்யாத போதினும், மண்ணிலே பல நாடுகளைச் சுற்றிப் பார்த்ததன் காரணமாக, மனத்திலே ஒருவிதப் பெருமை கொண்டுள்ளாய். ஆனால் நான் பேசுவதற்காக மேடை மீது ஏறியதும், இறைவனின் பேரருள் என் உடலில் ஊடுருவிப் பாய்வதை உணர்கிறேன். அதன் காரணமாக என் உள்ளமும், உடலும் இறை பக்தியால் நிரம்பி விடுகிறது. அதன்பின் இறை பக்தியில் தோய்ந்து என் சொற்கள் வெளி வருவதன் காரணமாக, அவை அவ்வளவு ஆற்றல் வாய்ந்தவையாக இருக்கின்றன'' என மொழிந்தார்கள்.

பின்பு ஒரு சமயம் தந்தையைப் பற்றித் தனயர் குறிப்பிடும் பொழுது, ''என்னுடைய பேச்சு மக்களின் உள்ளத்தை அணுவத்தனையும் நெகிழச் செய்யாத பொழுது, தந்தையார் எழுந்திருந்து, 'மடையனே! உண்மையான

வீரம் ஒரு கணம் பொறுமையை மேற்கொள்வதாயிருக்கும்' என்று மட்டும் கூறுவர். அவர்கள் இவ்வாறு கூறி வாய் மூடுமுன், அவையிலுள் ளோர் அனைவரும் கூக்குரலிட்டு அழத் தொடங்கி விடுவர். அவர்களின் பேச்சின், இம்மாபெரும் ஆற்றலுக்கான காரணத்தை மீண்டும் ஒரு முறை அவர்களிடம் வினவினேன். அதற்கு அவர்கள், 'நீ உன் போன்றவர் களுடன் உரையாடுபவன். நானோ, நானல்லாதவனுடன் உரையாடு பவன்' என விடையிறுத்தார்கள்'' என்று கூறினார்.

ஆம்: அவர்கள் அவ்விதம் உரையாடுபவர்கள் தாம். மார்க்கம் பற்றிய ஏதாவது ஒரு கேள்வியை எவரேனும் அவர்களின் பேச்சினூடே அவர்களிடம் கேட்டுவிடின், ''நான் அது பற்றி உத்திரவு பெற்றுப் பதில் கூறுகின்றேன்'' என்று கூறி, அவர்கள் தங்களின் தலையைக் கவிழ்த்திச் சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருப்பார்கள். பின்னர் தலையை நிமிர்த்தி, அல்லாஹ் நாடியதைக் கொண்டு அவர்கள் பதிலிறுப்பார்கள்.

ஆண்டகை அவர்களின் பேச்சிலும் சில பொழுது மக்களுக்கு அலுப்பு ஏற்படாமல் இருந்ததில்லை. ஓரிரவு ஆண்டகை அவர்கள் அருட்பேருரை நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது, மக்களுக்குச் சற்று அலுப்பு ஏற்பட்டது. அதனை விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், விண்ணைப் பார்த்த வண்ணம்.

''இறைவா! உன்றன் உவப்பென்னும்
இனிமை நிறைந்த ஆரமுதை
நிறைவாய் எனக்கு மட்டும் நீ
நேமமாகப் புகட்டி நிற்பின்
குறையே யன்றி நிறையாமோ?
குறையே என்றன் தோழர்க்கு
மறைவாய் நீயே செய்திடுதல்
மாண்போ மன்னர்க் கிது அழகோ?''

என்று பண்ணிசைத்தார்கள். பண்ணிசைத்து முடிந்தது தான் தாமதம், மக்களின் உள்ளங்களிலே ஒருவித மின் ஆற்றல் ஊடுருவிப் பாய்வது போன்றிருந்தது. அங்கிருந்த அனைவரும் புத்துணர்ச்சி பெற்று, ஆண்டகை அவர்களின் சொற்பொழிவைப் புளகாங்கிதத்துடன் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

ஒருதடவை ஆண்டகை அவர்கள் விதியைப் பற்றி மக்களுக்கு விரித்துரைத்துக் கொண்டிருந்தார்கள். அவனன்றி அணுவும் அசையா தென்றும், எனவே இறைவன் பால் நம்பிக்கை கொண்ட மக்கள், எது கண்டும் அச்சமுறத் தேவையில்லை என்றும் கூறினார்கள். அப்பொழுது

திடீரென அவர்களின் தலைப்பாகையில் பாம்பொன்று விழுந்தது. அப்பொழுது அங்குக் குழுமியிருந்த மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், ஆண்டகை அவர்களோ, அணுவத்தனையும் திடுக்கமோ, துணுக்கோ உறாது, அமைதியாகத் தங்களின் சொற் பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அவர்களின் தலைப் பாகையில் விழுந்த அந்தப் பாம்பு, அவர்களின் உடலைச் சுற்றி வளைந்து பின்னர் மெதுவாகக் கீழே இறங்கிச் சுவர்ப் பக்கமாய் ஓடியது. அப்பொழுது ஆண்டகை அவர்கள் அந்தப் பாம்பினைச் சுட்டிக் காட்டி, ''இறைவன் நாடினாலன்றி அவனுடைய படைப்புகளில் ஒன்றாகிய இப்பாம்பினால் என்னை என்ன செய்ய இயலும்?''என்று கேட்டார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டி ருக்கும் பொழுது, பருந்தொன்று அங்குமிங்கும் பெரும் சப்தமிட்டுப் பறந்து கொண்டிருந்தது. அது கண்டு அங்கிருந்தோர் அனைவருக்கும் ஏற்பட்ட எரிச்சலுக்கு அளவில்லை. பொறுமையின் புகலிடமாகிய ஆண்டகை அவர்களுக்கும் சற்றுச் சினம் ஏற்பட்டது. எரிச்சலுடன் அதனை ஏறிட்டுப் பார்த்தார்கள். அடுத்த கணம் அது தலை வேறு முண்டம் வேறாகக் கீழே விழுந்தது. அருளுள்ளம் கொண்ட ஆண்டகை அவர்கள் அதன் மீது இரங்கி, அதன் தலையையும் முண்டத்தையும் ஒன்றிணைத்து 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்று ஓதி அதன் மீது ஊதினார்கள். மறுகணம் அது விண்ணிலே சிறகடித்துப் பறந்து சென்றது.

ஆண்டகை அவர்கள் மக்களின் உள்ளங்களைத் தங்களின் உள்ளங்கையில் வைத்து விளையாடவும் செய்தார்கள். ஹிஜ்ரி 550 - ஆம் ஆண்டு, ஜமாதில் ஆகிர் மாதம், பதினைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை யன்று, அவர்கள் பள்ளிவாயிலுக்குச் சென்ற பொழுது, ஒருவரும் அவர்களை ஏறிட்டுப் பார்க்கவுமில்லை, அவர்களுக்கு ஸலாம் கூறவுமில்லை. இதற்கு முன்பெல்லாம், அவர்கள் ஜும் ஆத் தொழப் பள்ளிக்குச் சென்றால், மக்கள் முண்டியடித்துக் கொண்டு முன் வந்து, அவர்களுக்கு 'ஸலாம்' கூறவும், அவர்களின் கைகளைப் பிடித்து முத்தமிடவும் செய்ய, இன்று ஒருவரேனும் அவ்வாறு செய்யாததைக் கண்டு, அவர்களுடன் சென்றவருக்குப் பெரிதும் வியப்பாக இருந்தது.

இதனை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், அவரை நோக்கிப் புன்முறுவல் பூத்தார்கள். அதன் பின் என்ன? மக்கள் முண்டியடித்துக் கொண்டு, முன் வந்து ஆண்டகை அவர்களுக்கு 'ஸலாம்' கூறவும், அவர்களின் கைகளை முத்தமிடவும் செய்தனர். இதனால் அவர்கள் பள்ளிவாயிலுக்குள் நுழைவதே பெரிதும் சிரமமாகி விட்டது.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் தம்முடன் வந்தவரை நோக்கி, "உமரே! நீர் தாமே இதனை விரும்பினீர்? மக்கள் என்னை ஏறிட்டுப் பாரா நிலையிலேயே, நான் பள்ளிவாயிலுக்குள் புக விரும்பினேன். எனவே, அவ்வித நிலையை உருவாக்கிப் பள்ளிவாயிலுக்குள் நுழைந்தேன். அறிந்து கொள்ளும்! மக்களின் இதயங்களெல்லாம் என் கைவசம் இருக்கின்றன. அவற்றை நான் விரும்பிய வண்ணம் திருப்புவேன்" என்று கூறினார்கள்.

உண்மையில் மக்களின் உள்ளங்களெல்லாம், அவர்களுக்குத் திறந்த புத்தகம் போன்றிருந்தன. எவரும் அவர்களைக் காண முன்னோக்கிவரின், அவர் நல்லவராயிருப்பின், அவர் தொலைவில் வரும் பொழுதே "மர்ஹபன் பிஹபீபில்லாஹ்" (அல்லாஹ்வின் நேசருக்கு நன்மாராயம்) என்று கூறுவார்கள். தீயவராயிருப்பின் அவர் தொலைவில் வரும் பொழுதே, "லா மர்ஹபன் பித்தரீதில்லாஹ்" (அல்லாஹ்வால் வெருட்டப்பட்டவனுக்கு நன்மாராயமில்லை) என்றுகூறுவார்கள். பின்னர் பார்க்கும் பொழுது அவர்கள் கூறியது சரியாகவே இருக்கும்.

ஒவ்வொருவரின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய அனைத்தையும் அவர்கள் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறிந்து வைத்திருந்தார்கள். ஒரு நாள் தம்முன் ஒருவர் வீற்றிருப்பதைக் கண்டு, "நீர் ஏன் இங்கு அமர்ந்துள்ளீர்? எழுந்து செல்லும்! நீர் அமரும் இடம் சுல்தானின் முன்பு இருக்கிறது" என்று கூறினார்கள். என்ன வியப்பு! விரைவில் அவர் சுல்தான் நூருத்தீன் ஜங்கியின் அறவாரியத் தலைவராகி விட்டார்.

ஆண்டகை அவர்களுக்கு முஹம்மது என்ற ஒருவர் ஊழியம் புரிந்து வந்தார். அவரை ஆண்டகை அவர்கள் 'நீண்ட முஹம்மதே! என்று அழைப்பார்கள்.

ஒருநாள் அவர் ஆண்டகை அவர்களை அணுகி 'நானோ குள்ளன். என்னை ஏன் தாங்கள் நீண்ட முஹம்மது என்று அழைக்கிறீர்கள்?' என்று வினவினார்.

அதற்கு ஆண்டகை அவர்கள் புன்முறுவல் பூத்த வண்ணம், "நீர் பன்னெடுங்காலம் பாரினில் வாழ்வீர்" என்று கூறினார்கள்.

அவ்விதமே அவர் இவ்வுலகில் நூற்று முப்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து உயிர் நீத்தார்.

தமக்கு இறைவன் அளித்த இவ்வாற்றல் பற்றி அவர்கள் ஒரு தடவை குறிப்பிடும் பொழுது, "மார்க்க வரம்பு (ஷரகு) என்னும் கடிவாளம்

மட்டும் என்னுடைய நாவில் இல்லாதிருப்பின், நீங்கள் உங்களின் இல்லங்களில் தேடி வைத்திருத்தல், தின்றல் ஆகிய அனைத்தையும் நான் உங்களுக்கு அறிவித்து விடுவேன். நீங்கள் என் முன் பளிங்குக் கிண்ணம் போன்றுள்ளீர்கள். உங்களின் உள்ளிலும் வெளியிலும் உள்ள அனைத்தையும் நான் காண்கிறேன். மீண்டும் நான் கூறுகிறேன். அல்லாஹ்வுடைய வரையறை மட்டும் என்னுடைய நாவைக் கட்டுப்படுத்தாதிருப்பின் யூசுஃப் (அலை) அவர்களின் பொன் மரக்கால் பேசியது போன்று நான் எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றிப் பேசிவிடுவேன்' என்று கூறினார்கள்.

ஒருதடவை ஆண்டகை அவர்கள் துறவு (ஸுஹுத்) பற்றிப் பேசும் பொழுது, அபுல் ஹஸன் ஸஅத் என்பவர் அப்பேரவையின் கடைக் கோடியில் வீற்றிருந்து, அதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் தம் உள்ளின் உள்ளே, ஆண்டகை அவர்கள் மெய்ஞ்ஞானம் (மஅரிஃபா) பற்றிப் பேசின் நலமாக இருக்குமே என்று எண்ணினார். அவர் எண்ணிய அடுத்த கணம் அவர்கள் மெய்ஞ்ஞானம் பற்றிய ஆழிய கருத்துக்களை மடை திறந்தாற் போன்று பொழியத் தொடங்கி விட்டார்கள். தாம் இதுகாறும் கற்றோ, கேட்டோ அறியாத கருத்துக்களை ஆண்டகை அவர்களின் வாயிலாகக் கேட்டறிந்த அபுல் ஹஸன் ஸஅத், இறை இன்பம் (ஷௌக்) பற்றி ஆண்டகை அவர்கள் பேச வேண்டுமென்று எண்ணினார். உடனே ஆண்டகை அவர்களின் திருவாயிலிருந்தும் இறை இன்பம் பற்றிய கருத்துமணிகள் உருண்டோடி வெளிவந்தன.

இதன்பின் இறைவன்பால் தன்னை அழித்தல், இறைவன் பால் தன்னை நிலையாக்குதல் (ஃபனா, பகா) ஆகியவை பற்றி ஆண்டகை அவர்கள் பேச வேண்டுமென்று அவர் தம் மனத்திற்குள் எண்ணினார். அவ்வாறே அவர்கள், அவை பற்றி அற்புதமான கருத்துக்களை அள்ளித் தெளித்தார்கள். இன்னும் அவர் ஆண்டகை அவர்கள் இறை நினைவில் மனம் இலயித்தல் (ஹுளூரி) பற்றியும், இறைவனைத் தவிர உள்ள அனைத்தையும் மறந்திடுதல் (கைபத்) பற்றியும் பேச வேண்டுமென்று, ஒன்றின் பின் ஒன்றாக எண்ணினார். அவர் எண்ணிய வண்ணமே, அவர்கள் பேசி முடித்தார்கள். அதன் பின் அவர்கள் அபுல் ஹஸனை நோக்கி, ''அபுல் ஹஸன்! உமக்கு இவ்வளவு போதும்'' என்று கூறிப் பேச்சை நிறுத்தினார்கள். அப்பொழுது அபுல் ஹஸனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும், திடுக்கத்திற்கும் அளவில்லை.

இச்சமயத்தில் பக்தாதில் இப்னு ஜௌலி என்னும் மார்க்க அறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். சிறந்த மேதையான அவருக்கு நூல்களைப்

படிப்பதென்றால் அமுதத்தை அருந்துவது போல் இருக்கும். எனவே அவர் தம் கையில் கிடைக்கும் எந்த நூலையும், படித்து முடித்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார். ''என்னுடைய மாணவ நிலையில் நான் இருபதாயிரம் நூல்களைப் படித்துக் குவித்தேன் என்று கூறினால் அது மிகையாகாது'' என்று அவரே தாம் எழுதிய 'சையிதுல் கதிர்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். எல்லாக் கலைகளும் அவருக்குக் கைவந்ததாக இருந்தன. அவரை ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம் என்றே கூறலாம். அவர் ஆயிரம் நூல்கள் வரை எழுதியிருப்பதாக இப்னுதைமிய்யா குறிப்பிடுகிறார்.

இத்தகு மார்க்க மேதைக்கு ஆத்ம ஞானிகளைக் கண்டாலே பிடிக்காது. இவர் தாம் எழுதிய 'தல்பீஸ் - வ - இப்லீஸ்' என்னும் நூலில் ஆத்ம ஞானிகளைப் பெரிதும் சாடுகிறார். ''இந்தத் துறவிகளை மார்க்க மேதைகளை விட மேலாகக் கருதுவது அறியாமை மட்டுமல்லாது, 'ஷரீ அத்'தை இழிவுபடுத்துவதுமாகும். வழி தவறிச் செல்லும் அவர்கள், தாம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பிறக்காததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். காரணம், அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பிறந்து வாழ்ந்து, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பல மனைவியரை மணமுடித்து வாழ்வதையும், உண்ணவும், உடுத்தவும், தேனை அருந்தவும், செய்வதையும், பார்த்திருப்பார்களாயின் அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தவறாக மதிப்பிட்டு 'காஃபிர்'களாக ஆகி இருப்பார்கள்'' என்று குறிப்பிடுகிறார்.

ஆண்டகை அவர்கள் ஆன்மீகம் பற்றிப் பேசுவது பற்றியும், அதனை ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று கேட்பதைப் பற்றியும், செவி யுற்றதும் அவருக்கு எரிச்சல், எரிச்சலாக வந்தது. தம்மை விட ஆண்டகை அவர்கள் முப்பத்தெட்டு வயது மூத்தவர்கள், எனவே, அவர்கள் தம்மைவிட உலகில் அதிக நாட்கள் வாழ்ந்ததன் காரணமாக அதிகமான அறிவுகளையும், பட்டறிவுகளையும் பெற்றிருப்பார்கள் என்பதை அவரின் தருக்கு, அவருடைய அறிவுக் கண்களுக்குத் திரையிட்டு விட்டது.

திருக்குர் ஆன் ஆய்வில் தம்மைப் போன்று தேர்ச்சியுற்றோர் தரணியிலே எவருமில்லை என்று தருக்கி நின்ற அவருக்கு, ஆண்டகை அவர்கள் திருக்குர்ஆனுக்கு விளக்கம் பகர்வது விநோதமாகப்பட்டது. எனவே, அவர்கள் என்னதான் விளக்கம் பகர்கிறார்கள் என்பதை நேரில் கேட்டறியும் விருப்புடன், ஒருநாள் அவர் ஆண்டகை அவர்கள் திருக்குர் ஆன் விரிவுரை நிகழ்த்திக் கொண்டிருந்த பேரவைக்கு தம் மாணவர் குழாம் புடைசூழ வந்து, அங்கு ஒரு மூலையில் அமர்ந்து ஆண்டகை அவர்களின் விரிவுரைக்குச் செவி தாழ்த்திக் கொண்டிருந்தார்.

ஒருவர் இறைமறையின் திருவசனம் ஒன்றை இனிமையுடன் ஓத, ஆண்டகை அவர்கள் அதற்கான விளக்கமும், விரிவுரையும், அகமியப் பொருளும், அணுவணுவாக எடுத்துரைத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அதற்கான ஒவ்வொரு விளக்கம் கூறக்கூற, ''இது எனக்குத் தெரிந்த விளக்கம் தான்; இது எனக்குத் தெரிந்த விளக்கம் தான்'' என்று தம் மாணவர் பக்கம் திரும்பித் திரும்பிக் கூறி வந்தார் அவர்.

ஆண்டகை அவர்கள் ஒன்றின் பின் ஒன்றாகப் பத்து விளக்கங்களைக் கூறி வர, வர மேலே கண்ட வண்ணம் கூறி வந்த அவர் பதினொன்றாவது விளக்கத்தை ஆண்டகை அவர்கள் கூறியதும் அது அவருக்குப் புதிதாகத் தோன்றவே சற்று வியப்புற்றார். அதன்பின் ஆண்டகை அவர்கள், அந்த ஒரே ஒரு இறை வசனத்திற்கு மட்டும் ஒன்றன் பின் ஒன்றாக நாற்பது விளக்கங்களை மளமளவென்று கூறவே, அவர் மலைத்து விட்டார். தம்முடைய அறியாமையையும், ஆண்டகை அவர்களைத் தாம் தவறாக மதிப்பிட்டதையும் நினைந்து, நினைந்து உளம் நைந்து, ஆண்டகை அவர்களை அணுகித் தம் பிழை பொறுத்தருளுமாறு வேண்டினார். ஆண்டகை அவர்களும் அவ்விதமே செய்தார்கள்.

இதே போன்று தான் ஆண்டகை அவர்களைச் சோதிக்க வந்த நூறு மார்க்க விற்பன்னர்களின் நிலையும் ஆனது. அவர்கள் வந்ததும் அவர்களை ஆண்டகை அவர்கள் பார்த்த ஒரு பார்வையிலேயே அவர்கள் அனைவரும் தடுமாறினார்கள். அவர்கள் கற்ற கல்விகளெல்லாம் அவர்களைக் கைவிட்டு ஓடி விட்டன. பின்னர் அவர்களை ஆண்டகை அவர்கள் தம் நெஞ்சோடு நெஞ்சாகக் கட்டியணைத்த பொழுது, அவர்கள் இழந்த கல்வியை மீண்டும் எய்தப் பெற்றார்கள். அச்சமயம் ஆண்டகை அவர்கள், அவர்கள் ஒவ்வொருவரிடமும், ''நீங்கள் என்னிடம் கேட்க எண்ணி வந்த கேள்வி இது, அதற்கான பதில் இது'' என்று கூறிய பொழுது, அவர்களுக்கு நடப்பது என்ன கனவா, நனவா என்று விளங்கவில்லை.

வேறொரு தடவை, ஆண்டகை அவர்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட இரு வெளியூர் வாசிகள், அவர்களுடன் வாதிட்டு, அவர்களை வெல்ல வேண்டுமென்னும் எண்ணத்துடன் பக்தாது மாநகர் வந்து சேர்ந்தனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். ''நல்லது; அவர்கள் பேசி முடியட்டும். அதன் பின் நம் வாதத்தைத் தொடங்குவோம்'' என்று கூறிக் கொண்டு, அவ்விருவரும் ஓர் மூலையில் அமர்ந்து அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஆண்டகை அவர்கள் திருமறை வசனங்களில் ஒன்றை ஓதி, அதற்கு ஒரு விளக்கம் பகர்ந்தார்கள். அப்பொழுது அவ்விருவரில் ஒருவர் மற்றவரைப் பார்த்து ''இவ்விளக்கம் உமக்குத் தெரியுமா?'' என்று வினவினார். ''தெரியாமல் என்ன? நானே இதனைப் பல கூட்டங்களில் கூறியிருக்கிறேனே'' என்றார் மற்றவர்.

அதன்பின் ஆண்டகை அவர்கள், அத்திருவசனத்திற்கு மற்றொரு விளக்கம் கூறினார்கள். அப்பொழுது அவ்விருவரில் ஒருவர் மற்றவரை நோக்கி, ''இந்த விளக்கம் உமக்குத் தெரியுமா?'' என்று வினவினார். அதற்கு அவர், ''தெரியும்; நான் இதனைப் பலமுறை கேட்டுள்ளேன்'' என்று விடையிறுத்தார்.

பின்னர் ஆண்டகை அவர்கள், அதே திருவசனத்திற்கு வேறொரு விளக்கம் கூறிய பொழுது, அவர்களில் ஒருவர் ''நான் இதனை நூலொன்றில் படித்துள்ளேன்'' என்று கூறினார்.

இதன் பின்னர் ஆண்டகை அவர்கள், அந்த ஒரு திருவசனத்திற்கு ஒன்றின் பின் ஒன்றாகப் பல விளக்கங்கள் கூறிவர, அவர்கள் இருவரும் ஆண்டகை கூறும், ஒவ்வொரு விளக்கத்திற்கும் ஒரு முடிச்சாக கயிற்றில் முடிச்சுப் போட்டுக் கொண்டிருந்தனர்.

இறுதியாக ஆண்டகை அவர்கள் அந்த ஒரே திருவசனத்திற்கு தொண்ணூற்றொன்பது விளக்கம் கூறிமுடித்து விட்டு, ''நான் இங்கு ஒவ்வொரு சிக்கலான முடிச்சையும் அவிழ்த்து விளக்கம் பகர்ந்து கொண்டிருக்கும் பொழுது, வேறு சிலர் முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறினார்கள். அடுத்த கணம் அந்த இரு வெளியூர் வாசிகளும் பெரிதும் நாணமுற்று, அவ்விடத்தை விட்டும் மெதுவாக நழுவி விட்டனர்.

ஆண்டகை அவர்களின் சொற்பொழிவைக் கேட்பதற்கு, மனிதர்கள் மட்டுமல்லாது, நபிமார்களின் ஆன்மாக்களும், வானவர்களும், ஜின்களும் கூட வந்து குழுமினர். அபூ நஸ்ரு என்பவர் ஜின்களை 'வாஸிலாத்' பண்ணி வரவழைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். ஒரு நாள் அவை தாமதமாக வந்தன. அதற்கான காரணத்தை அவர் வினவிய பொழுது, ''அன்பு கூர்ந்து தாங்கள் எங்களை முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் சொற்பொழிவாற்றும் நேரத்தில், அழையாதீர்கள். ஏனெனில், நாங்களும் அவர்களின் சொற்பொழிவைக் கேட்கச் சென்று வருகிறோம்'' என்று விடையிறுத்தன. அது கேட்ட அவர் பெரிதும் வியப்புற்று, ''நீங்களுமா அங்குச் சென்று வருகின்றீர்கள்?'' என்று வினவினார். அதற்கு அவை, ''மனிதர்களை விட நாங்களல்லவா அதிகமாக

அவர்களின் பேச்சைக் கேட்கக் குழுமுகின்றோம். எங்களில் பலர் அவர்களின் கரம் பிடித்து பாவமன்னிப்புக் கோரி இஸ்லாத்தைத் தழுவியுமுள்ளோம்'' என்று கூறின.

ஒருநாள் ஆண்டகை அவர்கள் சொற்பொழிவாற்றும் பொழுது, ''நான் இன்று பேசுவதெல்லாம் 'காபு' மலைக்கு அப்பாலிருந்து வரும் ஆண்களுக்காகும். அவர்களின் கால்கள் விண்ணிலும் இதயம் 'ஹலரத் குத்ஸி' லும் இருக்கும். அவர்கள் அணிந்திருக்கும் தலையணிகள், இறைவன் பால் அவர்களுக்கு இஷ்க் (பேரன்பு) அதிகப்பட்டதும், எரிந்து சாம்பலாகி விடும்'' என்று கூறினார்கள். அவர்கள் இவ்வாறு கூறிய பொழுது, ஆண்டகை அவர்களின் காலடியில் வீற்றிருந்த, அவர்களின் மகனார் அப்துர் ரஸ்ஸாக் வானத்தை ஏறிட்டுப்பார்த்தார். அடுத்த கணம் அவர் மயக்கமுற்றுக் கீழே விழுந்தார். அவருடைய தலையணியும், ஜுப்பாவின் கழுத்துப் பட்டியும், நெருப்புப் பற்றி எரிந்தது. அதைக் கண்ட ஆண்டகை அவர்கள் தம் பேச்சு மேடையிலிருந்து கீழே இறங்கி, தங்களின் திருக்கரத்தால் அந்நெருப்பை அணைத்துவிட்டு, அதன் பின் தம் மகனை நோக்கி, ''மகனே! நீரும் அந்த ஆண்பிள்ளைகள் போன்று இருக்க வேண்டும்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

பின்னர் அபூ ஸர்ஆ என்பவர் அப்துல் ரஸ்ஸாக்கைத் தனியாகச் சந்தித்து, அவர் மயக்கமுற்றுக் கீழே விழுந்ததற்கும், தலையணி தீப்பற்றி எரிந்ததற்கும் காரணம் என்ன வென்று வினவினார். அதற்கு அவர், 'என் தந்தையார் சொற்பொழிவாற்றிய பொழுது, நான் விண்ணை அண்ணாந்து பார்த்தேன். விண்ணகம் முழுவதும் வானவர்கள் தலை தாழ்த்தி என் தந்தையாரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். திடீரென அவர்களின் தலையணியில் தீப்பற்றிக் கொள்ளவே, அவர்கள் முண்டி யடித்துக் கொண்டு, பெரும் இரைச்சல் செய்த வண்ணம், அங்குமிங்கும் ஓடவும், கீழே விழவும் செய்தனர். அதைக் கண்டு நானும் என்னை யறியாமல் மயங்கிக் கீழே விழுந்து விட்டேன்'' என்று பதிலிறுத்தார்.

மற்றொரு நாள் ஆண்டகை அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களின் உரையைக் கேட்பதற்காக அண்ணல் நபி (ஸல்) அவர்களும், தம் அருமைத் தோழர் புடைசூழ வந்திருந்தனர். அதைக் கண்டதும் ஆண்டகை அவர்கள் திடுக்குற்றனர். அவர்களின் பேச்சு தடுமாறியது. அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அருமைப் பேரரை நோக்கி, ''தடுமாற்றத்திற்குக் காரணம் என்ன?'' என்று வினவ, 'தங்களைக் கண்டதனால் என்னை அறியாமலேயே திடுக்கம் ஏற்பட்டது. அதன் காரணமாக நாத் தடுமாறியது நாயகமே!' என்று நவின்றார்கள். அது கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புன்னகை தம் முகத்திலே தவழ, அவ்விடத்தை விட்டும் அகன்றார்கள்.

ஆண்டகை அவர்களின் பேச்சைக் கேட்க வருவதைத் தங்களின் நீங்கா வழக்கமாகக் கொண்டிருந்தனர் கிள்ரு (அலை) அவர்கள். இதைப் பற்றி ஒருவர் கிள்ரு (அலை) அவர்களிடம் வினவிய பொழுது, ''மன் அராதல் பலாஹ ப அலைஹி பிமுஸலாமத்தி ஹாதல் மஜ்லிஸி'' (ஈடேற்றம் பெற விரும்புவோர் இப்பேரவையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவும்) என்று அவர்கள் பதில் மொழிந்தனர்.

வேறொரு நாள் ஆண்டகை அவர்களின் சொற்பொழிவைப் பத்தாயிரம் மக்கள் திரண்டிருந்து கேட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஷைகு அலீ இப்னு ஹீத்தீ என்பவர், முன் அணியில் அமர்ந்து, அதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரை ஒரு சிறு உறக்கம் ஆட்கொண்டது. உடனே ஆண்டகை அவர்கள் தம் பேச்சை நிறுத்தி, மற்ற எவரும் பேசி அவரின் தூக்கத்தைக் கலைக்கக் கூடாதென்று சைக்கினை செய்தார்கள். அதன்பின் ஆண்டகை அவர்கள், மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து, ஷைகு அலீ இப்னு ஹீத்தீ அவர்களின் அருகில் சென்று மரியாதையுடன் அமர்ந்திருந்தார்கள்.

சற்று நேரத்தில் அலீ இப்னு ஹீத்தீ விழித்ததும், ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''தாங்கள் சற்று முன் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டீர்களா? '' என்று வினவினார்கள். ''ஆம்'' என்று அவர் பதிலிறுத்தார். அது கேட்ட ஆண்டகை அவர்கள், ''அதனை நான் கண்ணுற்றே மேடை மீதிருந்து இறங்கி வந்து தங்களின் அருகே மரியாதையுடன் வீற்றிருந்தேன்'' என்று கூறிவிட்டு, மீண்டும் அவரை நோக்கி, ''அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தங்களுக்கு என்ன அறிவுரை பகர்ந்தார்கள்?'' என்று வினவினார்கள். அதற்கு அவர், ''தங்களைப் பற்றிப் பிடித்து ஒழுகுமாறு பணித்துவிட்டு மறைந்தனர்'' என்று விடையிறுத்தார். அப்பொழுது அங்குக் குழுமியிருந்த, பதினாயிர வருக்கும் ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. சிலர் மயக்கமுற்றார்கள்; சிலர் அச்சபையில் வைத்து இறந்து விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு ஹிஜ்ரி 521- ஆம் ஆண்டு முதற்கொண்டு, ஹிஜ்ரி 561 - ஆம் ஆண்டுவரை, அதாவது நாற்பதாண்டு காலம் அவர்கள் அருட்பேருரை நிகழ்த்தி வந்தார்கள். அவர்கள் பேசத்தொடங்கியதும், நானூறு அறிஞர்கள் அவர்கள் கூறுவதை எழுதத் தொடங்குவர். ★

★ அவை பின்னர் நூல் உருவில் ஆக்கப்பட்டன. அவையே 'ஃபுதூஹுல் கைப்', 'ஃபுதூஹுர் ரப்பானி' ஆகிய நூல்களாகும். ஆண்டகை அவர்கள் எழுதிய 'குன்யத்து தாலிபீன்' என்னும் நூல் மார்க்க சட்டதிட்டங்கள் பற்றியதாகும். எழுதப்பட்ட தம் பேச்சுக்களை ஆண்டகை அவர்கள் வாங்கித் திருத்திச் செப்பனிட்டுக் கொடுப்பர். அவை ஆயிரக் கணக்காகப் பிரதி செய்யப்பட்டு மக்களால் படிக்கப்பட்டன.

அவர்களின் அறிவுரைகளை, ஆன்மீக நல்லுரைகளைக் கேட்டு, இலட்சோப லட்சம் மக்கள் நேர்வழி பெற்றனர். மார்க்கத்தில் விலக்கப்பட்ட செயல்களை ஆற்றி வந்த ஓரிலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், அவர்களின் கரம் பிடித்துப் பாவ மன்னிப்புக் கோரி, இஸ்லாமிய அறநெறியில் அடியெடுத்து வைத்து நடந்தனர். ஐயாயிரம் பேர்களுக்கு மேற்பட்ட பிறமத்தினர் இறைமதமாம் இஸ்லாத்தைத் தழுவி ஈடேற்றம் பெற்றனர். எனவே தான், பேராசிரியர் மர்கோலியத் பிற்காலத்தில் இதைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''அவரின் பேச்சில் இரக்கமும், அன்பும் நிரம்பித் துளும்பின. நரகத்தின் வாயில்களை இறுக அடைத்துத் தாழ்ப்பாளிட்டு, சுவனத்தின் வாயில்களை மக்களுக்குத் தம் பேச்சின் மூலம் அவர் விரியத்திறந்து வைத்தார்'' என்று கூறினார்.

ஒருநாள் ஆண்டகை அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கு வந்தமர்ந்த ஸனான் என்னும் பெயரையுடைய பாதிரியார் ஒருவர், அவர்கள் பேசி முடிந்ததும் எழுந்து சென்று, ஆண்டகை அவர்களின் கரம் பற்றி இஸ்லாத்தைத் தழுவினார். அதன்பின் அங்கிருந்தவர்களை நோக்கி, ''மக்களே! நான் யமன் நாட்டைச் சேர்ந்தவன். இஸ்லாமே இணையற்ற சாந்தி மார்க்கம், இறைவனின் நேரிய வழி என்பதை நான் உணர்ந்த பொழுது, யமன் நாட்டில் சிறந்து விளங்கும் அறிவும், அடக்கமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற நல்லாரின் கரம் பிடித்துத் தான் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

''ஓரிரவு நான் அயர்ந்து உறங்கும் பொழுது, ஈஸா (அலை) அவர்கள் என் கனவில் திருத்தோற்றம் வழங்கி, 'நீர் பக்தாது மாநகரம் சென்று, அங்கு தவத்திரு வாழ்வு வாழ்ந்து வரும் முஹ்யித்தீன் அப்துல் காதிர் என்னும் அறவோரின் திருக்கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவும்! அவர்தாம் இப்பொழுது மண்ணிலுள்ளோரில் எல்லாம் மாண்பார்ந்தவர்' என்று கூறி மறைந்தனர். எனவே தான் ஈங்கு வந்தேன். இறை வழியாம் இஸ்லாத்தை ஏற்று ஈடேற்றம் பெற்றேன்'' என்று கூறினார்.

மற்றொரு நாள் பதின்மூன்று கிறிஸ்தவர்கள் ஆண்டகை அவர்களை அணுகி, இஸ்லாத்தைத் தழுவினர். எவரிடம் சென்று இஸ்லாத்தைத் தழுவுவது என்று அவர்கள் ஏங்கிக் கொண்டிருந்த பொழுது, ''பக்தாது மாநகரம் சென்று அங்கு வாழும் முஹ்யித்தீன் அப்துல் காதிர் என்னும் மேதகையின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவுங்கள்! ஏனையோரின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவுவதை விட, அவரின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவுவது தான் ஏற்றமானதாகும்'' என்று அசரீரி மூலம் தாங்கள் அறிவுறுத்தப்பட்டதாகவும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

தங்களின் ஆன்மீகப் பிரச்சாரத்தைப் பற்றி ஆண்டகை அவர்கள் ஒரு தடவை குறிப்பிடும் பொழுது, ''கானகம் சென்று எவரும் காணா விடத்துத் தனித்திருந்து தவம் செய்ய வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம். ஆனால் இறைவனுடைய விருப்பமோ, நான் மக்களிடையே வாழ்ந்து, அவர்களுக்கு அறவழியைக் காட்ட வேண்டுமென்பதாக இருந்தது. எனவே மக்களுக்கு அறவழியைக் காட்ட வேண்டுமென்னும் எண்ணம் அல்லும் பகலும் என் உள்ளத்தில் அலைமோதியது. அதன் காரணமாக என்னால் வாய்மூடி வெறுமனே இருக்க இயலவில்லை. அவ்விதம் இருப்பின், என் குரல்வளை நெறிக்கப்பட்டு விடும் போல் தோன்றியது. என் பேச்சில் இறைவன் ஒரு கவர்ச்சியைத் தந்தான். அதன் காரணமாக ஐயாயிரம் பேர் இஸ்லாத்தைத் தழுவவும், இலட்சோப லட்சம் பேர் நேர்வழி நடக்கவும் செய்தனர்'' என்று எடுத்துரைத்தார்கள்.

மேலும் அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''என் பாட்டனார் முஹம்மது (ஸல்) அவர்கள் என் கனவில் தோன்றி, 'நல்ல பேச்சு அனைத் திற்கும் நீர் என்னுடைய கலீபாவாக இருப்பீர். அறிவுள்ளோர் உம் சொல்லுக்கு வழிபட்டு நடப்பர். நீர் இஸ்லாத்தை நிலைப்படுத்துவீர். என் உம்மத்தினருக்கு உதவியாக இருப்பீராக!'' என்று இயம்பி மறைந்ததாக எடுத்துரைத்தார்கள்.

★★★

(8)

ஆண்டகை அவர்கள், தங்கள் கல்லூரியின் தலைமைப் பீடத்தில் அமர்ந்து திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் விரிவுரையும், மார்க்க சட்ட திட்டங்கள் பற்றிய விளக்கமும், இலக்கணம் பற்றிய பாடங்களும் நடத்தி வந்தது, பக்தாது மாநகரத்தின் வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க பொற்காலமாக விளங்கி வந்தது. அவர்களிடம் கல்வி பயில்வதற்காக இராக் நாட்டிலிருந்து மட்டுமல்ல, முஸ்லிம்கள் வாழும் பல்வேறு நாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்ததின் காரணமாக, அண்மை யிலிருந்த வீடுகள், விலைக்கு வாங்கப்பட்டு, கல்லூரி விரிவுபடுத்திக் கட்டப்பட்டு, அதற்கு 'மத்ரஸா காதிரிய்யா' என்னும் பெயரும் சூட்டப் பட்டது. அங்கு மாணவர்களுக்கு இலவசமாக உணவு வசதியும், இருப்பிட வசதியும் ஆண்டகை அவர்கள் செய்து கொடுத்தனர். அக் கல்லூரியின் அடுக்களை அங்கு வரும் ஆன்றோர்களுக்கும், அறிஞர் களுக்கும், பசித்தோர்களுக்கும் அன்னமிடும் அமுத சுரபியாக விளங்கி நின்றது. அன்புள்ளம் கொண்டோரின் காணிக்கைகள் மட்டுமின்றி, அதற்காக வாங்கப் பெற்ற நிலங்களிலிருந்து கிடைத்த வருவாயும் அதற்குப் பயன்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு நாளும் ஆண்டகை அவர்கள், இஸ்லாமியச் சட்டத் திட்டங்கள் பற்றிப் பாடம் நடத்துவார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும், பிற்பகலிலும், திருக்குர்ஆன் விரிவுரை பற்றியும், ஹதீஸ் விளக்கம் பற்றியும், அரபி இலக்கணம் பற்றியும், பாடம் நடத்துவார்கள். ளுஹர் தொழுகைக்குப் பின் திருக்குர்ஆனுக்கு விரிவுரை நிகழ்த்துவார்கள்.

ஆண்டகை அவர்களின், கல்லூரிக்குக் கல்வி பயில வந்த எவரும், தங்களின் கல்வியை நிறைவு செய்வதற்காக வேறு எந்தக் கல்லூரிக்கும் செல்ல வேண்டிய தேவை இல்லாதிருந்தது. அதற்குக் காரணம், மற்றக் கல்லூரிகளில், பல்வேறு பேராசிரியர்களால் போதிக்கப்பட்ட பதினான்கு வகைப் பாடங்களையும், ஆண்டகை அவர்களே நடத்தினார்கள் - அதுவும் மற்ற பேராசிரியர்களை விடத் திறம்பட நடத்தினார்கள். எனவே, அக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள், மற்றக் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களை விடச் சிறந்து விளங்கியதில் ஆச்சரியமில்லை.

அவர்களின் மாணவர்களில் ஒருவரான முஹம்மது அல் கஷ்ஷாப், பிற்காலத்தில் மாபெரும் இலக்கணக் கோடரியாக விளங்கினார். ஒரு நாள் ஆண்டகை அவர்களின் பேச்சைக் கேட்க, அவர் வந்திருந்த பொழுது, அவரின் அறிவின் ஆற்றலைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், தம்மிடம் வந்து கல்வி பயிலுமாறும், தாம் அவரை ஸீப்வைஹ் போன்று, மாபெரும் இலக்கணப் புலமை வாய்ந்தவராக ஆக்குவதாகவும் கூறினார்கள். அவ்விதமே அவர் செய்ய, அவ்விதமே அவர்கள் அவரை ஆக்கினார்கள்.

அவர்களிடம் ஓராண்டு காலம் கல்வி பயின்ற ஷைகு அபுல்ஹஸன், பிற மதரஸாக்களில் இருபதாண்டுகளில் பயின்று முடிக்கக் கூடிய பாடங்களை, அந்த ஓராண்டு காலத்தில் பயின்று தேர்ச்சியுற்றார். அவர்களின் மாணவரான அம்ரு இப்னு உதுமான், ஃபிக்ஹ் கலையில் தேர்ச்சி பெற்று, 'ஷாஃபியுஸ் ஸமான்' (அக்காலத்து ஷாஃபி (ரஹ்)) என்னும் பட்டத்தைப் பெற்றார். அவர்களின் மதரஸாவைப் பெருக்கித் தண்ணீர் தெளித்து வந்த ஷைகு அலீ இப்னுஹீத்தீ என்பவர், பிற்காலத்தில் மாபெரும் 'குத்பு' ஆகவும், ஷைகு பகா இப்னு பத்தூ என்பவர், 'அவ்த்தாது'களின் தலைவராகவும் விளங்கினர்.

ஆத்மீகத் துறையில் அவர்கள் ஆழ்ந்த பயிற்சி பெற்றிருந்தது போன்று, மார்க்க சட்டதிட்டத் துறையிலும் ஆழிய புலமை பெற்றிருந்ததன் காரணமாக, எந்தக் கேள்விக்கும் அவர்கள் உடனுக்குடன் பதில் அளித்து வந்தார்கள். மற்ற மார்க்க மேதைகளெல்லாம் கேள்வித் தாளை வைத்துக் கொண்டு, நாட்கணக்காக நூல்களைப் புரட்டிப் பார்த்து,

சிந்தித்துச் சிந்தித்துத் தங்களின் மண்டையை உடைத்துக் கொண்டிருந்த பொழுது, ஆண்டகை அவர்கள் வினாத்தாளைப் பெற்ற அடுத்த நொடியே, அதன் கீழே, அதற்கான சரியான பதிலை எழுதியது எல்லோருக்கும் சொல்லொணா வியப்பை நல்கியது.

ஒரு தடவை அஜமி ஒருவர் ஆண்டகை அவர்களை அணுகி, ''ஆண்டகையீர்! நான் ஒரு நூதனமான ஆணையிட்டு விட்டேன். இதுவரை எவருமே செய்யாத வணக்கத்தை நான் நிகழ்த்தினாலொழிய, நான் என் மனைவியை மணவிடுதலை செய்து விடுவதாக இறைவன் மீது ஆணையிட்டுக் கூறி விட்டேன். எந்த, எந்த வணக்கத்தை நான் சிந்தித்துப் பார்த்த போதினும், அவை அனைத்தும் ஆன்றோர்களால் செய்யப்பட்ட வணக்கமாகவே இருக்கிறது. இந்நிலையில் என்ன செய்வது என்று எனக்கு விளங்கவில்லை'' என்று கூறினார்.

உடனே ஆண்டகை அவர்கள், ''நீர் மக்கா சென்று கஃபாவை மூடி இருக்கும் திரையை அகற்றி விட்டு, அதனைப் பிறர் எவரும் சுற்றாத நிலையில், நீர் மட்டும் சுற்றி வாரும்! அவ்வித வணக்கத்தை இதுவரை எவரும் செய்யவில்லை. உம்முடைய ஆணையும் நிறைவேறி விடும். உம்முடைய மனைவியை மணவிடுதலை செய்ய வேண்டிய நிலையும் உமக்கு ஏற்படாது'' என்று கூறினார்கள்.

மற்றொரு தடவை ஒருவர் அவர்களை அணுகி, ''நான் அபூ யஸீத் பிஸ்தாமீ அவர்களை விடச் சிறந்த பண்பாளனாக இருந்தாலொழிய, என் மனைவியை மண விடுதலை செய்து விடுவதாக, இறைவன் மீது ஆணையிட்டுக் கூறிவிட்டேன். என்ன செய்வது? இதிலிருந்து நான் மீட்சி பெறுவதற்கு ஏதேனும் வழியுண்டா?'' என்று வினவினார். ''ஏன் அவ்வாறு ஆணையிட்டீர்?'' என்று அவர்கள் அவரைக் கேட்டார்கள். ''ஏதோ அறியாத் தனமாக, ஆத்திரத்தில் அவ்வாறு கூறிவிட்டேன்' என்று மறுமொழி பகர்ந்தார் அவர். அப்பொழுது ஆண்டகை அவர்கள், அவரை நோக்கி, ''நீர் உம்முடைய மனைவியை விடுதலை செய்ய வேண்டிய தேவை இல்லை'' என்று அமுதவாய் மலர்ந்தனர். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. ''எவ்வாறு? எவ்வாறு?'' என்று வியப்பு கலந்த மகிழ்ச்சியுடன் வினவி நின்றார் அவர்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''உம்மிடம் அபூ ஸயீத் பிஸ்தாமீயிடம் உள்ள பண்பாடுகள் அனைத்தும் உள்ளன. அது மட்டுமின்றி அவரிடம் காணக்கிடைக்கா அரும்பெரும் குணநலன் களும் பல்கிக் கிடக்கின்றன. அபூ யஸீத் பிஸ்தாமீ மார்க்க சட்ட திட்டங்களில் புலமை வாய்ந்தவரல்லர். நீரோ அவற்றில் புலமை பெற்று

விளங்குகின்றீர். அவரோ துறவறத்தை மேற்கொண்டவர். நீரோ இல்லறத்தை மேற்கொண்டுள்ளீர். அவருக்கோ வழித் தோன்றல்கள் கிடையாது. நீரோ குழந்தைகள் நிரம்பப் பெற்றுள்ளீர். இவையெல்லாம் அவர் பெற்றிராத நற்பேறுகள். எனவே நிச்சயமாக நீரே அவரை விடச் சிறந்தவர்'' என பதிலிறுத்தார்கள்.

ஆண்டகை அவர்கள் தம்மை மறந்த 'நாஸ்தி' நிலையில் இருக்கும் பொழுது கூட, அவர்களிடம் எவரும் வந்து மார்க்க சட்டதிட்டங்கள் பற்றி வினவின், முதலில் இமாம்களின் கருத்துக்களை எடுத்துரைத்துவிட்டு, அதன்பின் அது பற்றித் தங்களின் கருத்தை விரித்துரைப்பர். அவ்வித நிலையில், அவர்கள் ஒரு தடவை இருந்தபொழுது, அவர்களின் மாணவர்களில் ஒருவர் அவர்களை அணுகி, ''மணமுடித்துக் கொள்ளுதல் கட்டாயக் கடமைகளில் ஒன்றா?'' என்று வினவினர். அதற்கு ஆண்டகை அவர்கள், ''மார்க்க அறிஞர்களான இமாம்களில் சிலர் அதனைப் பெருமானாரின் வழிமுறை (சுன்னத்) என்று கூறுகின்றனர். இமாம் ஷாஃபியீ அவர்களும், அவர்களின் மாணவர் இமாம் ஹன்பல் அவர்களும் காம உணர்வு அதிகம் வாய்க்கப் பெற்றிராதவர்கள் மணமுடிக்காது இறை வழிபாட்டில் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர். இமாம் அபூ ஹனீஃபாவோ மணமுடித்தல் மாண்பாரும் பேரறம் என்று கூறிச் சென்றுள்ளனர். எனினும், நீ இறை அன்பில் ஈடுபட்டு அவனை வணங்குவதில் உன் நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருப்பாயாக!

''அதில் நீ தேர்ச்சி பெற்று விடின், பின்னர் நீ உன்னைப் பற்றி யாதொன்றும் சிந்திக்க வேண்டிய தேவை இல்லாது போய்விடும். இறைவனின் திருவுளப் பொருத்தம் இருப்பின், அவனே முன் நின்று உனக்குத் திருமணம் நிகழ்த்தியருள்வான்'' என்று மறுமொழி பகர்ந்தனர்.

இவ்வாறு கூறிய ஆண்டகை அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே இறைவனின் திருவுளத்திற்கேற்ப, பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறையில் நடப்பதற்காக, இல்லறத்தின் எழில் பூங்காவில் நுழைந்து இன்பம் நுகர்ந்து, எழிலார் திருமக்களை ஈன்றெடுத்திருந்தனர். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் கனவில் தோன்றி அறிவுரை நல்கிச் சென்றதற்கேற்ப, தம் ஐம்பத்தொன்றாம் வயதில் இல்லறச் சோலை புகுந்த ஆண்டகை அவர்கள், மதீனா சாஹிபா, ஸாதிகா, மூமினா, மஹ்பூபா என்ற நான்கு மனைவியரை மணந்து, இருபத்து ஏழு ஆண்மக்களையும், இருபத்திரண்டு பெண்மக்களையும் பெற்றெடுத்திருந்தனர்.

அல்லாஹ்வின் வணக்கத்தில் ஈடுபடுவதும், மக்களுக்கு அருட்பேருரை வழங்குவதுமான தவநெறியில் ஈடுபட்டிருந்த போதினும், ஒரு குடும்பத் தலைவர் தம் மனைவி மக்களுடன், எவ்விதம் நடந்து கொள்ள

வேண்டுமோ, அவ்விதமே அவர்கள் அணுவத்தனையும் குறை வைக்காமல் நடந்து கொண்டனர். அவர்கள் தம் மனைவிமார்களுடன் அன்பொழுக உறவாடினர்; தம் கண்மணி மக்களுடன் கொஞ்சிக்குலவி உரையாடினர். தம் மனைவிமார்களுக்கு அன்றாட வீட்டு வேலைகளில் உதவி புரியவும், கடைத்தெரு சென்று வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வரவும், மனைவிமார்களில் எவேரனும் நோய்வாய்ப்படின் அவர்களின் அருகமர்ந்து, அவர்களுக்குப் பணிவிடைகள் புரியவும் செய்தனர். அப்பொழுது அவர்களே வீட்டைப் பெருக்கவும், தண்ணீர் கொணரவும், அடுக்களையில் அமர்ந்து ரொட்டி சுடவும் செய்தனர். அவர்களின் மனைவிமார்களும், அவர்களுக்கு இளைத்துப் போகாது, அவர்களுக்குப் போட்டியிட்டுக் கொண்டு ஊழியம் புரிந்து வந்தனர்.

மனைவி மக்களோடு அவர்கள் இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி வந்த போதினும், உலக ஆசாபாசங்கள் அவர்களின் உள்ளத்தில் அணுவத்தனையும் இல்லாதிருந்தது. இது பற்றி அவர்கள் ஒரு தடவை குறிப்பிடும் பொழுது, ''எனக்கொரு மகவு பிறப்பின் அதனைக் கையிலெடுத்து இது என்பற்றிய வரையில் இறப்பெய்தியதேயாகும்'' என்றும் ''அது பற்றிய அன்பை என் உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்தி விடுவேன். பின்னர் அக்குழந்தை இறப்பெய்தின், அதன் காரணமாக எனக்கு அணுவளவும் கவலை ஏற்படாது'' என்றும் கூறினர்.

அவர்கள் இத்தகு தன்மை பெற்றிருந்தமையின், அவர்கள் அருட்பேருரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் வேளைகளில், அவர்களின் மக்களில் எவரேனும் இறந்துவிடின், அதற்காக அவர்கள் சிறிதேனும் அமைதி குலையாது, தங்களின் அருட்பேருரையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பர். அதன் பின் இறந்தவரை மக்கள் குளிப்பாட்டி வெண் துகில் போர்த்திக் கொணரின், ஆண்டகை அவர்கள் மேடை மீதிருந்து இறங்கி, இறந்தவருக்கான இறுதித் தொழுகையை நிகழ்த்துவர்.

தம் மக்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குத் தாங்களே முன் வந்து கல்வி புகட்டியதோடு மட்டுமல்லாது, பக்தாதில் அச்சமயத்தில் மாண்புற்று விளங்கிய, அறிவில் சிறந்த மேதைகளிடமும், அவர்களை அனுப்பிக் கல்வி பெறச் செய்தனர். அதன் காரணமாக அவர்களின் மக்களான ஷைகு அப்துல் வஹ்ஹாப், ஷைகு ஈஸா, ஷைகு அப்துர் ரஸ்ஸாக், ஷைகு மூஸா ஆகியோர் அறிவார்ந்த ஆன்றோர்களாகவும், சான்றோர்களாகவும் விளங்கி, நானிலத்தின் நாலா பகுதிகளுக்கும் சென்று தீன்சுடர் கொளுத்தி நின்றனர்.

அவர்களின் குடும்பம் பெரிய குடும்பமாகயிருந்ததால், அதன் செலவினங்களுக்காக அவர்கள் பெரும் வாணிபம் செய்தனர். தாம்

நிர்யாணம் அடைவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்வரை வாணிபம் செய்து வந்த அவர்கள், பின்னர் அதனைத் தம் அபிமானிகளிடம் ஒப் படைத்து விட்டனர். வாணிபம் செய்து கொண்டிருக்கும் பொழுது அதில் ஒரு பற்றறற்ற நிலையையே மேற்கொண்டனர்.

ஒருநாள் அவர்கள் தம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் பொழுது ஒருவர் வந்து அவர்களின் வியாபாரக் கப்பல்கள் புயலில் சிக்கிக் கொண்டதாகக் கூறினார். அதுகேட்ட அவர்கள், ''அல்ஹம்துலில்லாஹ்'' என்று கூறினர். அடுத்த நாள் மற்றொருவர் வந்து ''புயலில் சிக்கிய தங்களின் கப்பல் தப்பித்துக் கொண்டது'' என்று கூறினார். அதுகேட்டும் அவர்கள், ''அல்ஹம்துலில்லாஹ்'' என்று கூறினர்.

இவ்விரு நிகழ்ச்சிகளையும் கண்டு, பெரிதும் வியப்புற்ற ஒருவர் ஆண்டகை அவர்களை நோக்கி, ''தங்களின் கப்பல்கள் புயலில் தப்பிய செய்தி அறிந்து அல்ஹம்துலில்லாஹ் என்று தாங்கள் கூறியதைப் புரிந்து கொண்டேன். ஆனால் நேற்று ஒருவர் வந்து தங்களின் கப்பல்கள் புயலில் சிக்கிக் கொண்டன என்று கூறிய பொழுதும் தாங்கள், 'அல்ஹம்து லில்லாஹ்' என்று கூறியது தான் எனக்குப் புரியவில்லை!' என்று கூறிய பொழுது, ''கப்பல்களை இழந்ததற்காகவோ, அவற்றை மீளப் பெற்றதற் காகவோ நான் இறைவனைப் புகழவில்லை. இழப்புச் செய்தி அறிந்து, என் மனம் சிறிதேனும் துன்புறாது இறை நாட்டத்தை இனிமையுடன் ஏற்றுக் கொண்டது கண்டு இறைவனைப் புகழ்ந்து, அவனுக்கு நன்றி செலுத்தினேன். இரு எதிர் மாறான நிலைகளிலும், இறைவனின் சித்தமே தன் சித்தம் எனக் கொள்ளும் மனநிலையை எனக்குத் தந்த இறைவனை நான் என்றென்றும் புகழ்ந்து கொண்டிருப்பேன்'' என்று அவர்கள் கூறினர்.

இவ்வித மனோநிலையைப் பெற்றதன் காரணமாகவே, ஒரு தடவை அவர்கள் முகம் பார்க்கப் பயன்படுத்தி வந்த கண்ணாடியை உடைத்து, விட்ட அவர்களின் ஊழியன் நடுக்கத்துடன் அவர்களின் முன் வந்து அச் செய்தியை எடுத்துரைத்த பொழுது, ''தன்னையே தான் பார்த்துக் கொள்ள உதவும் அது உடைந்தது நல்லதேயாகும்'' என்று அவர்கள் கூறினர்.

★★★

(9)

ஆண்டகை அவர்கள் நடுத்தர உயரமும் பருமனும் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். செந்நிறத்துச் செம்மலாய் விளங்கிய அவர்கள் விரிந்த மார்பும், அகன்ற நெற்றியும், பெரிய தலையும் பெற்றிருந்தார்கள். அவர்களின் இருபுருவங்களும் சந்தித்துக் கொண்டன.

அவர்களின் அழகுத் திருமுகத்தில் எப்பொழுதும், ஒரு பேரொளி இலங்கிக் கொண்டிருந்தது. அவர்களின் மூக்கிலிருந்து நீர் சிந்து வதையோ, தொண்டையிலிருந்து காறல் வருவதையோ, உடலின் மீது ஈ அமர்வதையோ, எறும்பு ஊருவதையோ எவரும் கண்டதில்லை.

அறிவுத் துறையிலும், ஆத்மீகத் துறையிலும் அவர்கள் மாபெரும் பதவியை எய்தப் பெற்றிருந்த போதினும், எளிமையின் திருவுருவாக அவர்கள் விளங்கினர். தம்மினும் வயதில் சிறியவர்கள் மீது அன்பு செலுத்திய அவர்கள், தம்மினும் வயதில் பெரியவர்களுக்குப் பெரிதும் மரியாதை செலுத்தினர். அவர்களை எவரேனும் சந்திப்பின் - அவர் சிறியவராகவோ, பெரியவராகவோ இருந்தபோதினும் சரியே - முதல் 'ஸலாம்' அவர்களுடையதாகவே இருந்தது. ஏழை, எளியவர்களையும், அவர்கள் கௌரவித்தனர். அல்லாஹ்வே செல்வன்; ஏனையோர் அனைவரும் ஏழைகளே என்று அவர்கள் கருதினர்.

அவர்கள் தம் வாணாளில் எந்த அரசருடையவோ, அமைச்சரு டையவோ இல்லத்திற்குச் சென்றதும் கிடையாது. அரசர்களோ, அமைச்சர்களோ தம் இருப்பிடம் வரின், அவர்களுக்கு எழுந்து மரியாதை செய்ததும் கிடையாது. அவர்கள் உள்ளே வர அனுமதி வேண்டின், "வரச் சொல்!" என்றுகூறிவிட்டு, ஆண்டகை அவர்கள் தம் வீட்டின் உள்ளே சென்று விடுவர். அதன்பின் அவர்கள் வந்து அமர்ந்ததும், ஆண்டகை அவர்கள் உள்ளே இருந்து வெளியே வருவர். இவ்வாறு செய்து, அவர்கள் அரசருக்கோ, அமைச்சர்களுக்கோ ஆற்ற வேண்டிய மரியாதையைத் தவிர்ந்து கொள்வர்.

அவர்கள் அரசர்களுக்கு மடல் தீட்டும் பொழுது, "உம்மை அப்துல் காதிர் இன்ன, இன்ன விதமாக நடந்து கொள்ளுமாறு பணிக்கிறார். அவ்விதமே செயலாற்றுவது உம்மீது கடமையாகும்" என்று எழுதுவர். அதனை அரசர்கள் பெற்றதும், அதனைத் தம் இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டு அவ்விதமே செயலாற்றுவர்.

ஆண்டகை அவர்கள் பெரும்பாலும் நோன்பு நோற்றவர்களாகவே இருப்பர். அவர்களுக்குரிய நிலத்தில் பயிரிடப் பெற்ற கோதுமையை அரைத்துச் சுடப் பெற்ற ரொட்டிகளைக் கொண்டே அவர்கள் நோன்பு திறந்து வந்தனர். அவர்களுக்கென நான்கு அல்லது ஐந்து ரொட்டிகள் கொண்டு வந்து வைக்கப்படும். அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக அவர்கள் நறுக்கிக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது அவர்களின் ஊழியர் வெளியில் சென்று, "ஆண்டகை அவர்கள் நோன்பு திறக்கப் போகின்றார்கள் அவர்களுடன் சேர்ந்து உண்ண விரும்புவோர் வரலாம்" என்று கூவி அழைப்பர். அப்பொழுது பலர் வந்து அவர்களுடன் உண்ண

அமர்வர். அவர்களுடன் சேர்ந்து ஆண்டகை அவர்களும் உண்பார்கள். விருந்தினர்கள் இல்லையெனில், அவர்கள் உண்ணமாட்டார்கள்.

ஆண்டகை அவர்கள் எக்காலமும் ரொட்டியை மட்டும் உண்டு உயிர் வாழ்ந்து வரவில்லை. சில பொழுது அவர்கள் நல்ல உணவுகளையும் உண்டு வந்தார்கள். ஒரு நாள் ஒரு கிழவி ஆண்டகை அவர்கள் நடத்திய கல்லூரியில், தம் மகனையும் சேர்த்துக் கல்வி பயிற்றுவிக்குமாறு ஆண்டகை அவர்களைப் பெரிதும் வேண்டிக் கொண்டாள். அதற்கு ஆண்டகை அவர்கள் இணங்கி, அவ்வாறே செய்தார்கள். சில காலம் கழித்து, அவள் தன்மகனைக் காண வந்த பொழுது, அவன் மெலிந்து துரும்பாகி, காய்ந்த ரொட்டிகளை உண்டு கொண்டிருந்தான். அது கண்டு பெற்ற மனம் பித்தாகியது. பின்னர் அவள் ஆண்டகை அவர்களிடம் வந்தபொழுது, அவர்கள் பொறித்த கோழியை உண்டு கொண்டிருப் பதைக் கண்டதும், அவளுக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கு அளவில்லை. அவள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! தங்களைப் பெரிய மகாத்மா என்றும், மாமேதை என்றும் கூறுகிறார்கள். என் மகன் இங்கு தங்களிடம் ஓத வந்து, காய்ந்த ரொட்டிகளை உண்டு உருத் தெரியாது ஓடாகிவிட்ட பொழுது, தாங்கள் மட்டும் பொறித்த கோழியை உண்ணுவது எந்த நியாயத்தின் பாற்பட்டது'' என்று வினவினாள்.

அதுகேட்ட ஆண்டகை அவர்கள், ஒரு புன்முறுவலை உதிர்த்த வண்ணம், தாங்கள் மென்று கக்கியிருந்த அக்கோழியின் எலும்புகளை எல்லாம் ஒருங்கு சேர்த்து, ''மக்கிப்போன எலும்புகளை உயிர்ப்பிக்கக் கூடிய அல்லாஹ்வின் ஆணையினால் நீ உயிர் பெற்றெழுக!'' என்று கூறினார்கள். அடுத்தகணம் அக்கோழி, உயிர் பெற்றுக் கொக்கரித்துக் கொண்டு நின்றது. அதுகண்டு அக்கிழவிக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவளை நோக்கி, ''அம்மணீ! உம் மகன் இத்தகு தகுதியைப் பெற்றுவிடின், அவன் இதனை உண்பதற்கு யாதொரு தடையுமில்லை'' என்று கூறினார்கள்.

பிற்காலத்தில் அவளின் மகன் ஞானமார்க்கத்தில் நெடுஞ்தொலைவு சென்று, சிறப்புற்று விளங்கிய பொழுது, தம் மகனைப் பார்க்க மீண்டும் அவள் வந்த சமயம், ஆண்டகை அவர்களுடன் தம் மகனும் அமர்ந்து பொறித்த கோழியை உண்டுகொண்டிருப்பதை வைத்த கண்வாங்காது பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். அப்பொழுது ஆண்டகை அவர்களின் ஆணையின்படி, அவர்கள் தின்று குவித்திருந்த எலும்புகளை நோக்கி, உயிர் பெற்றெழுமாறு அவர் கூற, அவை ஒரு நொடியில் சேவலாக உருவெடுத்து 'கொக்கரக்கோ' என்று கூவியது. அப்பொழுது அக் கிழவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. தம் மகனை வாழ்த்தி,

ஆண்டகை அவர்களின் ஊழியத்திலேயே தொடர்ந்து இருக்குமாறு பணித்துவிட்டு விடை பெற்றாள்.

அவர்களுடைய உடையோ மிகவும் எளிமை வாய்ந்ததாக இருந்தது. ஆனால், அவர்கள் சிலபொழுது விலையுயர்ந்த உடைகளையும் அணிந்து வந்தனர். உடலை மறைப்பதற்கான ஒரு சாதனமாகவே அவர்கள், தங்களின் உடையைக் கருதினரேயன்றி, அலங்காரத்திற்கான சாதனமாக அவர்கள் அதனைக் கருதவில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன் மாதிரியைப் பின்பற்றி அவர்களும் நறுமணம் பூசிக் கொள்வர்.

அக்காலத்தில் வேற்று நாடொன்றில், சேணியன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அந்நாட்டு மன்னனுக்கு ஆண்டுதோறும் பட்டினும் மிருதுவான துணி ஒன்றை நெய்து கொடுத்து, ஆயிரம் பொற்காசுகளை அன்பளிப்பாகப் பெற்றுச் செல்வது வழக்கமாக இருந்து வந்தது. அத்துணியை நெய்வதோ எளிதான செயலல்ல. அதனை நெய்வதற்கு அவனும் அவனுடைய குடும்பத்தினரும், ஓராண்டுகாலம் உழைக்க வேண்டியதாயிருந்தது. இவ்வாறு அரும்பாடுபட்டு நெய்த துணியை, ஓராண்டு அரசன் என்ன காரணத்தாலோ வாங்க மறுத்துவிட்டான். அது கண்டு அச்சேணியனுக்கு அடி வயிற்றில் இடி விழுந்தது போல் இருந்தது. என்ன செய்வதென அறியாது புழுவாய்த் துடித்தான் அவன்.

அப்பொழுது அவன் மனைவி அவனுக்கு ஆறுதல் பல மொழிந்து, பக்தாது மாநகரம் சென்று அங்குத் தவக்கோலம் பூண்டு, ஆன்மீகப் பேரரசு நிகழ்த்திவரும் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்களைச் சந்திப்பின், அவர்கள் அதனை ஆயிரம் பொற்காசுகளுக்கு வாங்கிக் கொள்வர் என்று கூறினாள். அவ்வாறே அவன் சென்று ஆண்டகை அவர்களைச் சந்தித்துத் தன் அவல நிலையை எடுத்துரைத் ததும், மறுபேச்சின்றி அவர்கள் அவன் கூறிய விலைக்கு அதனை வாங்கிக் கொண்டனர்.

ஆயிரம் பொற்காசுகளை அள்ளிக் கொடுத்துத் துணியை வாங்கிய ஆண்டகை அவர்கள், தையற்காரனை அழைத்துவரச் செய்து, அதைக் கொண்டு தமக்கொரு 'ஜுப்பா' தைத்துத் தருமாறு பணித்தனர். அவன் அத்துணியை அளந்து பார்த்து விட்டு, ''பற்றாதே'' என்று கூறினான். அது கேட்ட ஆண்டகை அவர்கள், ''அதனால் பாதகமில்லை. கல்லூரி விரிப்பில் சிறிதளவு கிழித்து அத்துடன் சேர்த்து ஜுப்பா தை!'' என்று கூறினர். அவ்விதமே தையற்காரனும் செய்து கொடுத்தான். அதனை அணிந்து கொண்டு அவர்கள் அமர்ந்திருந்தனர்.

சேணியன் பக்தாது மாநகரம் சென்றதும், அங்கு ஆயிரம் பொற் காசுகளுக்கு ஆண்டகை அவர்கள் அதனை வாங்கிக் கொண்டதும், அரசன்

செவிப்பட்டதும், அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் வெஞ்சினத்திற்கும் அளவில்லை. அவர்கள் மீது படை நடத்தித் தாக்குதல் செய்ய விரும்பிய அரசனை, அமைச்சன் அமைதிப்படுத்தி, ''நேரில் சென்று கண்டு வந்து ஆவன செய்வோம்'' என்று கூறினான். அரசனும் அதற்கு ஒருவாறு இணங்கினான்.

விரைவில் அரசனும் அமைச்சரும் சாமான்யர் உருத்தாங்கி, பக்தாது மாநகரம் வந்து, அங்கு ஆண்டகை அவர்கள் அருள் போதம் செய்து வந்த கல்லூரியை நெருங்கினர். அங்கு அன்பின் திருவுருவமான ஆண்டகை அவர்கள், அந்த உயர்ந்த மென்மைத் துகிலால் தைக்கப்பட்ட 'ஜுப்பா' வை அணிந்திருப்பதையும், அதன் ஒரு பகுதியில் முரட்டு விரிப்புத் துணியொன்று இணைக்கப்பட்டிருப்பதையும் கண்டு, அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அதுபற்றி அவர்கள் ஆண்டகை அவர்களிடம் வினவியபொழுது, ''எனக்கு எல்லாத்துணிகளும் ஒன்றே'' என்று அவர்கள் அமைதியாகப் பதிலிறுத்தனர். அப்பொழுது தான் அந்த அரசனுக்கு ஆண்டகை அவர்களின் உண்மை மகாத்மியம் தெரியவந்தது.

மகாத்மாக்களுக்கெல்லாம் மகாத்மாவாக விளங்கிய ஆண்டகை அவர்கள் வெளியில் செல்லும் பொழுது, பெரும்பாலும் மார்க்க அறிஞர்களின் உடையணிந்தே கோவேறு கழுதையின் மீது ஏறிச் செல்வர். அப்பொழுது அவர்களின் முன் கொடி கொண்டு செல்லப்படும். அக் கொடியைத் தாங்கிச் செல்ல 'வலி' மார்கள் பலர் போட்டியிட்டு முன் பாய்வர். அப்பொழுது ஆண்டகை அவர்கள், அந்த வலிமார்களை நோக்கி ''பெரியோர்களாகிய தாங்கள் இவ்வாறெல்லாம் எனக்குச் செய்தல் கூடாது'' என்று கூறுவர். ஆனால் அவர்களோ, ''தங்களுக்கு இவ்வாறெல்லாம் ஊழியம் புரிந்து, நாங்கள் இறையண்மையை எய்த விரும்புகிறோம்'' என்று பதிலிறுப்பர்.

அவர்கள் 'ஜும்ஆ' தொழ மஸ்ஜித் நோக்கிச் செல்லும் பொழுது அவர்கள் செல்லும் வீதியின் இருமருங்கிலும் உள்ள மக்களெல்லாம், ''இறைவனே! இந்த ஷைகு அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகையின் பொருட்டால், எங்களின் விருப்பங்கள் அனைத்தையும் இனிதே நிறைவேற்றியருள்வாயாக!'' என்று இறைஞ்சுவர்.

ஒரு தடவை ஜும்ஆவின் போது ஆண்டகை அவர்களுக்குத் தும்மல் ஏற்பட்டதும் அவர்கள் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறினார்கள். அப் பொழுது அங்குக் குழுமியிருந்த மக்கள் அனைவரும் 'யர்ஹமுக்கல்லாஹ் வ யர்ஹமுஃபிக்கல்லாஹ்' (அல்லாஹ் உங்களுக்கு அருள்பாலிப்பானாக! உங்கள் பொருட்டால் யாவர்க்கும் இன்னருள் பாலிப்பானாக!) என்று முழங்கியது, அப்பள்ளி முழுவதும் எதிரொலி செய்தது. அப்பொழுது பள்ளியின் ஓர் அறையில் அமர்ந்திருந்த கலீபா முஸ்தன்ஜித் பில்லாஹ்,

''இது என்ன முழக்கம்?'' என்று அருகிருந்தவரை வினவினார். அவர்கள் அதற்கான காரணத்தைக் கூறினார்கள். அப்பொழுது கலீபாவுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் திடுக்கத்திற்கும் அளவில்லை.

ஆண்டகை அவர்களுக்குக் குற்றேவல் புரிய மக்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருந்தனர். அவர்கள் ஏதாவதொன்றைப் பணிக்க வேண்டியது தான். அடுத்த நொடியில் மக்கள் அதனை நிறைவேற்றிவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பர்.

ஆனால், ஆண்டகை அவர்களோ பெரும்பாலும், தம் அலுவல்களைத் தாமே செய்து கொள்வர். தமக்காக வேண்டி அவர்கள் பிறரைத் துன்புறுத்த விரும்புவதில்லை. பிரயாணத்தில் இருக்கும் பொழுதும் அப்படியே. தாமே மாவைப் பிசைந்து ரொட்டி சுடுவர். மற்றவர்கள் ஓடி வந்து தடுப்பின், ''நானும் உங்களைப் போன்ற மனிதன் தானே. எனக்காக வேண்டி நான் ஏன் உங்களுக்குத் தொல்லை தர வேண்டும்? என் பங்குக்கான பணியை நான் செய்கிறேன். இதில் என்ன தவறு உள்ளது?'' என்று கூறுவர்.

அவர்கள் எளிய உடையணிந்து, எளிமைத் தோற்றத்துடன் விளங்கிய போதினும், அவர்கள் எவரையும் ஏறிட்டுப் பார்ப்பின், அவர் நடுநடுங்கி விடுவார். அவர்களின் அன்பு அவர்களைச் சூழவிருந்த அனைவர் மீதும் சார்ந்திருந்தது. எனவே அவர்களில் ஒவ்வொருவரும், தங்களைத் தாம் ஆண்டகை அவர்கள், மற்றவர்களை விட அதிகமாக நேசிப்பதாக எண்ணிக் கொள்வர்.

எவரேனும் அன்பளிப்பாகப் பொற்காசுகளை அவர்களிடம் கொண்டு வந்து கொடுப்பின், அவர்கள் அவற்றைக் கைநீட்டி வாங்கிக் கொள்வதிலலை. தங்களின் தொழுகை விரிப்பின் கீழ் அவற்றை வைத்து விட்டுச் செல்லுமாறு பணிப்பர். அவர்களும் அவ்விதமே செய்வர். பின்னர் தங்களின் ஊழியர் வந்ததும், அவற்றை எடுத்து ரொட்டிக் கடைக்காரனுக்கும், காய்கறிக் கடைக்காரனுக்கும் கொடுக்க வேண்டிய கடனுக்குக் கொடுத்துவிடுமாறு கூறுவர். அரசர்களிடமிருந்து ஏதேனும் அன்பளிப்புகள் வரின். ''அவற்றைக் கோதுமை மாவு திரிக்கும் அபுல் பதஹ்விடம் கொடுத்து விடுங்கள்!'' என்று கூறுவர்.★

அன்பளிப்பாக அவர்களுக்கு ஏதேனும் பொருள்கள் வரின் அவற்றிற்குப் பிரதி செய்வதுடன், அவற்றைத் தம்முடன் இருப்பவர்களுக்கு

★ அவரிடமிருந்தே அவர்கள் கோதுமை கடன் வாங்கி ரொட்டி சுடச் செய்து தாங்களும் உண்டு விருந்தினர்களுக்கும் உணவளித்து வந்தார்கள் என்று ஒரு வரலாறு கூறுகிறது.

அப்பொழுதே பங்கிட்டளித்து விடுவர். அவர்களிடம் எவரேனும் வந்து கைநீட்டி வெறுங்கையுடன் திரும்பியதில்லை. அவர்களிடம், அவருக்குக் கொடுக்க எதுவும் இல்லையெனில், தாம் அணிந்திருக்கும் உடைகளில் ஒன்றைக் களைந்து அவருக்குத் தானம் செய்துவிடுவர்.

ஏழைகளுக்கு உணவளிப்பதிலும் அறம் செய்வதிலும் அவர்கள் பெரு மகிழ்வு கொண்டார்கள். ''உலகத்தின் கருவூலங்கள் அனைத்தும் எனக்குக் கொடுக்கப்பட்ட போதினும் நான் அவற்றை ஏழைகளுக்கு உணவளிப்பதில் செலவழித்து விடுவேன்'' என்று அவர்கள் ஒரு தடவை கூறியதாக இப்னு அல் நஜ்ஜார் கூறுகிறார். ''என்னுடைய கையில் துவாரம் இருப்பது போன்று தோன்றுகிறது. அதில் யாதொன்றையும் வைத்திருக்க என்னால் இயல்வதில்லை. என்னிடம் ஆயிரம்பொற்காசுகள் இருந்த போதினும், அவற்றைப் பொழுது விடிவதற்கு முன் பிறருக்குக் கொடுத்து முடித்து விடுவேன்'' என்று அவர்கள் மற்றொரு தடவை சொன்னார்கள். ''எனக்கு இரண்டு செயல்கள் அனைத்து நற்பண்பு களுக்கும் அடிப்படையாகத் தெரிகின்றன. அவை நற்குணமும், பசித் தோர்க்கு உணவளிப்பதுமாகும்'' என்று அவர்கள் வேறொரு தடவை கூறினார்கள்.

ஒரு நாள் ஆண்டகை அவர்கள், தம்முடைய பேரவையில் துன்பமே உருவினராய் ஒரு பக்கீர் வீற்றிருப்பதைக் கண்டு, அவருடைய துன்பத் திற்குக் காரணம் என்ன என்று வினவினர். அதற்கு அவர், ''நான் திஜ்லா நதியின் அக்கரைக்குச் செல்ல நாடித் தோணியில் ஏறச் சென்ற பொழுது, தோணிக்காரன் என் கையில் அதற்கான காசில்லாததைக் கண்டு, என்னை அதில் ஏற்றிக் கொள்ளாது சென்று விட்டான். எனவே நான் என் அவல நிலை நினைந்து மனமுடைந்தவனாய் வீற்றுள்ளேன்'' என்று கூறினார்.

அவர் இவ்வாறு கூறி வாய் மூடுமுன் ஒருவர் ஆண்டகை அவர்களின் திருமுன் வந்து, முப்பது பொற்காசுகள் உள்ள பை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். அதனை ஆண்டகை அவர்கள் அப்படியே, அந்த பக்கீரிடம் கொடுத்து, ''இதனைக் கொண்டு சென்று, அப்படியே அந்தத் தோணிக்காரனிடம் கொடுத்து, 'இனிமேல் எந்த பக்கீரையும் அவரிடம் காசில்லை என்ற காரணத்தால் தோணியில் ஏற்றாது செல்ல வேண்டாம் என்று கூறும்!'' என்று சொன்னார்கள். அத்துடன் நில்லாது தம்முடைய மேலங்கியைக் கழற்றி அந்த பக்கீருக்கு அணிவிக்கவும் செய்தார்கள். ★

★ அந்த மேலங்கி, பின்னர் ஒருவரால் இருபது பொற்காசுகளுக்கு வாங்கப்பட்டது என்று கூறுவர்.

இவ்வாறு வள்ளலுக்கு வள்ளலாக விளங்கிய ஆண்டகை அவர்கள், திருடர்கள் மீதும் அருளுள்ளம் படைத்தவர்களாக இருந்தனர். ஒரு தடவை ஆண்டகை அவர்கள் உறங்கும் பொழுது, அவர்களின் தலைப் பாகையைத் திருடிக் கொண்டு ஒருவன் ஓடினான். அரவம் கேட்டு விழித்தெழுந்த ஆண்டகை அவர்கள், அவன் அதன் காரணமாக பாவியாகிப் போவானே என்று வருந்தி, 'மல்லக் துக இய்யாஹா குல் கபில்த்து'' (நான் அதனை உனக்குடையதாய் ஆக்கிவிட்டேன். நீ அதனை ஏற்றுக்கொள்!) என்று கூறிய வண்ணம் அவன் பின்னே ஓடினர். ஆனால், அவர்கள் கூறியதைச் செவி கொடுத்துக் கேளாது சிட்டெனப் பறந்து விட்டான் அவன்.

அவர்கள் இரண்டாவது தடவை, ஹஜ்ஜு செய்யச் சென்ற பொழுது வழியில் ஹில்லா என்ற ஊரில் அவர்கள் இரவு தங்க நேரிட்டுவிட்டது. அப்பொழுது அவர்கள் அவ்வூரிலேயே மிகவும் ஏழையாக இருந்த ஒரு கிழவரின் சிறுகுடிலை நெருங்கி அவரின் அனுமதி பெற்று அதில் தங்கினர். இதனை அறிந்த அவ்வூர் செல்வர் களெல்லாம் ஓடோடி வந்து, தங்களின் மாளிகைகளுக்கு எழுந்தருள வேண்டுமென்று எவ்வளவோ வேண்டியும், ஆண்டகை அவர்கள் அதற்கு இணங்கவில்லை. எனவே, அவர்களை மரியாதை செய்யும் நோக்கத்துடன் ஏராளமான காணிக்கை களை அவர்களின் காலடியில் கொண்டு வந்து குவித்தனர்.

அடுத்த நாள் காலையில் ஆண்டகை அவர்கள், அங்கிருந்து புறப்படு முன், தம் சீடர்களை நோக்கி, ''இவற்றில் எனக்குரிய பங்கை நமக்கு இராத் தங்க வசதி செய்து தந்த இக்கிழவருக்கு அன்பளிப்புச் செய்கிறேன்'' என்று கூறினர். ''நாங்களும் அவ்விதமே செய்கிறோம்'' என்று சீடர்கள் ஒருமித்துக் கூறினார்கள். இதன் பின் அங்கு கிடைத்த அனைத்துக் காணிக்கைப் பொருள்களையும், அக்கிழவரிடமே ஒப்படைத்து விட்டு அங்கிருந்து கிளம்பினர். என்ன வியப்பு! அக்காணிக்கைப் பொருள்கள் சில ஆண்டுகளில் பல்கிப் பெருகி அக்கிழவரை அவ்வூரின் தலைசிறந்த சீமானாக ஆக்கிவிட்டது!!

''செல்வர்களை அனைவரும் நேசிக்கின்றனர். அவர்கள் செல்லு மிடமெல்லாம் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கப்படு கின்றன. ஆனால் ஏழைகளை இவ்வுலகில் ஏறிட்டுப்பார்ப்பார் எவரு மில்லை. நானாவது அவர்களை ஏறிட்டுப் பார்க்க வேண்டாமா? ஏறிட்டுப் பார்த்து அவர்களின் அவலம் துடைக்க வேண்டாமா?'' என்று அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். கூறியதற்கேற்பச் செயலாற்றவும் செய்வார்கள்.

ஒருநாள் வணிகர் ஒருவர் அவர்களை அணுகி, ''நான் 'ஜகாத்' நிதியன்றி, வேறொரு பெரும் நிதியை அறம் செய்வதெற்கென ஒதுக்கி

வைத்துள்ளேன். ஆனால், அதனைப் பெறுவதற்கு அருகதையானோரைத் தான் நான் காணேன். இந்நிலையில் நான் என் செய்வது?'' என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''நீர் அருகதை யுடையவர், அருகதையில்லாதவர் ஆகிய இருவருக்குமே அறம் செய்யும்! இறைவனும் உம்மீது மகிழ்வுற்று உம் தகுதிக்குத் தக்கவையாகவும் உம் தகுதிக்கு உயர்ந்தவையாகவும் உள்ள, அன்பளிப்புகளை உமக்கு வழங்கி யருள்வான்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

உலகிலே நிலவுகின்ற நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வகை நோய்களும், ஆண்டகை அவர்களின் அருட் பார்வை பட்ட மாத்திரமே ஓடி மறைந்தன. நோயாளர்களுக்கு ஓதிப் பார்ப்பதன் மூலமும், அவர்களைக் கையால் தடவுவதன் மூலமும், அவர்களுக்கு தஃவீஸ் எழுதிக் கொடுப்பதன் மூலமும், அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ் சுவதன் மூலமும், ஆண்டகை அவர்கள் நோயாளிகளுக்கு நலன் நல்கினார்கள்.

எவரேனும் நோய்வாய்ப்படின், அவரைப் போய்ச் சந்தித்து அவருக்கு ஆறுதல் கூறி, அவருக்காக அவர்கள் துஆ செய்வார்கள். அவர்களின் மாணவர் எவரும் நோய் வாய்ப்படின், அவரைத் தம் பிள்ளை போன்று கருதி ஆவன செய்வார்கள். நோயாளர் எவரும் வந்து, தங்களின் நோய் பற்றி முறையிடின், அவர்களுக்கு ஆவன செய்து நலப்படுத்த அவர்கள் சிறிதேனும் தயங்குவதில்லை. ஒருநாள் ஒருவர் ஆண்டகை அவர்களிடம் வந்து, ''என் மகனுக்குப் பதினைந்து தினங்களாக ஓயாக் காய்ச்சலாக இருக்கிறது'' என்று கூறினார். உடனே ஆண்டகை அவர்கள், ''நீர் உம் இல்லம் சென்று உம்மகன் காதில் வாயை வைத்து, 'உம்முல்தம் என்ற காய்ச்சலே! உன்னை ஹில்லாவென்னும் ஊருக்குப் போகுமாறு ஷைகு முஹ்யித்தீன் கூறினார்' என்று சொல்லும்!'' என்று கூறினார்கள். அவ்விதமே அவர் செய்ய, அடுத்த கணம் அவரின் மகனைப் பிடித்திருந்த காய்ச்சல் தொலைந்தது. பின்னர் விசாரித்ததில் ஹில்லா என்ற ஊரில் வாழ்ந்து வந்த ராபிலிகளுக்கு அக்காய்ச்சல் தொடுத்து விட்டதாகத் தெரிய வந்தது.

மற்றொரு நாள் ஒரு முரடன் அவர்களிடம் வந்து, தனக்கு ஒரு தாயத்து எழுதித் தரவேண்டுமென்றும் அதனைத் தான் அணிந்து கொண்டால் வாளினாலோ, வேலினாலோ வேறு எந்த ஆயுதத்தினாலோ தன்னை எவர் தாக்கினாலும், அத்தாக்குதல் தன் மீது படக் கூடாது என்றும் கூறினான். ''நல்லது. அவ்விதமே செய்து தருகிறேன்'' என்று கூறித் தம் அறைக்குள் நுழைந்த அவர்கள், அடுத்தநொடியில் ஒரு தாளைச் சுருட்டிக்

கொண்டு வந்து தஃவீஸ் முடிந்து கொடுத்து, "இந்தத் தஃவீஸை அணிந்து கொள்ளும். இதனை நீ அணிந்து கொண்டிருக்கும் காலமெல்லாம் எவருடைய எந்தவிதமான தாக்குதலும் உனக்கு யாதொரு தீங்கும் செய்யாது. ஆனால் அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பி, நீ அதனைப் பிரித்துப் பார்ப்பின் அதன் ஆற்றல் அனைத்தும் போய்விடும். அதன்பின் அதுவெறும் காகிதமேயன்றி வேறில்லை" என்றும் எச்சரிக்கை செய்தார்கள்.

மிகவும் மகிழ்ச்சியுடன் இல்லம் சென்ற அவன், அதனைத் தான் வளர்த்து வந்த கடாவின் கழுத்தில் கட்டி அதனை அறிவாளால் வெட்டினான். வெட்ட, வெட்ட அரிவாள் மழுங்கவும், மடங்கவும், செய்ததே ஒழிய, வெட்டவில்லை. இதுகண்டு அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இப்பொழுது அவனுடைய உள்ளத்தில் ஒருவித ஐயம் துளிர் விட்டது. தாயத்து வேண்டுமென்று கேட்ட அடுத்த விநாடியே அதில் ஏதோ எழுதிக் கொண்டு வந்து, அவர்கள் தந்துவிட்டார்களே. அவ்விதமானால் அவர்கள் அதில் என்ன தான் எழுதியிருப்பார்கள்? என்று எண்ணினான். அடுத்த கணம் அதனை விறுவிறுவெனப் பிரித்தான். அதில் அலிஃப் என்ற அரபிமொழியின் முதல் எழுத்தான ஒரு செங்குத்தான கோடு மட்டும் எழுதப்பட்டிருந்ததைக் கண்டதும், 'இந்த அலிஃபுக்கு இத்துணை ஆற்றலா?' என்று எண்ணினான். அடுத்த கணம் ஆண்டகை அவர்கள் கூறிய எச்சரிக்கையும், அவனுக்கு நினைவுக்கு வந்து அவனைக் கொல்லாது கொன்றது.

விறுவிறுவென ஆண்டகை அவர்களின் இருப்பிடம் நோக்கி நடந்து வந்தான். ஆண்டகை அவர்களைச் சந்தித்து, நடந்தவை அனைத்தையும் நவின்றான். அது கேட்ட ஆண்டகை அவர்கள், "அந்த அலிஃபுக்கு ஏதோ ஆற்றல் உள்ளது என்று எண்ணிக் கொண்டு நீ பேசுகிறாய். அந்த அலிஃபை எழுதுகிற கரத்திற்குப் பின்னணியாக ஒரு கரம் இருந்து கொண்டு அந்த அலிஃபை எழுதியது. அதுவே அல்லாஹ்வின் திருக்கரம். அக்கரம் அலிஃபை என்ன, ஒரு நுக்தாவை (புள்ளியை) வைத்தால் கூட, அந்த நுக்தா, அந்த அலிஃப்பை விட மிகவும் ஆற்றலுடையதாக ஆகிவிடும். ஆதலின் அந்த நுக்தாவை வைக்கக் கூடிய இறைவனுடைய திருக் கரத்திற்குத் தான் மாண்பு அனைத்தும் உரியது" என்று கூறி அவனை அனுப்பி விட்டார்கள்.

வேறொரு நாள் பிறமதத்தினர் ஒருவர், அவர்களை அணுகி, "தங்களின் உடல் முழுவதும், எனக்கு ஒளிமயமாகக் காட்சி வழங்கு

கிறது. ஆனால் தங்களின் இதயத்தில் மட்டும் ஒரு கரும்புள்ளியைக் காண்கின்றேனே. அதற்கான காரணம் என்ன?'' என்று வினவினார்.

''அதற்கான காரணம் நீர்தாம். நீர் இன்னும் இஸ்லாத்தைத் தழுவ வில்லையே என்று நான் கொண்ட கவலையே அக்கரும் புள்ளி'' என்று ஆண்டகை அவர்கள் பதிலிறுத்தார்கள்.

''நான் இஸ்லாத்தைத் தழுவி விட்டால், தங்களின் இதயத்திலுள்ள அக்கரும் புள்ளி மறைந்துவிடுமா?'' என்று வினவினார் அவர்.

''ஆம்'' என்று திடமாக மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

உடனே அவர் 'கலிமா'ச் சொல்லி இஸ்லாத்தைத் தழுவினார். அடுத்த கணம் அவரின் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த 'குஃப்ர்' என்ற இருள் அகன்றது. மறுகணம் அவர் ஆண்டகை அவர்களை ஏறிட்டுப் பார்த்தார். என்ன வியப்பு! ஆண்டகை அவர்களின் இதயத்தில் அவர் முன்னர் கண்ட கரும்புள்ளியைக் காணோம். அவர்களின் ஒவ்வோர் அணுவும் ஒளிமயமாகக் காட்சி வழங்கிக் கொண்டிருந்தது!

மற்றொரு நாள் ஒருவர் ஆண்டகை அவர்களை அணுகித் தமக்குத் தீட்சை வழங்குமாறு வேண்டிக் கொண்டார். ''மூன்று நாட்கள் நீர் 'ஹலால்' ஆன பொருள்களை உண்டு நோன்பு நோற்றபின், என்னிடம் வாரும். அதன்பின் நான் உமக்குத் தீட்சை வழங்குகிறேன்'' என்று கூறினார்கள் ஆண்டகை அவர்கள்.

சரி என்று கூறிச் சென்ற அவர் சரியாக ஒரு மாதம் கழித்துத் திரும்பினர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி ''உம்மை மூன்று நாட்கள் நோன்பு நோற்ற பின் வருமாறல்லவோ கூறினேன். இப்பொழுது முப்பது நாட்கள் கழித்து வந்துள்ளீரே. அதற்கான காரணம் யாது?'' என்று வினவினர்.

அதற்கு அவர் அழாக்குறையாக, ''நான் தாங்கள் கூறிய வண்ணம் நோன்பு நோற்பதற்காக, 'ஹலால்' ஆன உணவைத் தேடி இருபத்தேழு நாட்களாக எங்கணும் சுற்றி அலைந்தேன். கிடைக்கவில்லை. இறுதியாக, தண்ணீர் தான் கலப்படமற்றது. 'ஹலால்' ஆனது என்று முடிவுக்கு வந்து கடந்த மூன்று நாட்களாகத் தண்ணீரை மட்டும் அருந்தி, நோன்பு நோற்கவும், நோன்புதிறக்கவும் செய்து, இப்பொழுது தங்கள் முன் வந்து நிற்கிறேன்'' என்று பதிலுரைத்தார்.

அது கேட்டு ஆண்டகை அவர்களின் உள்ளம் உருகியது. கண்கள் பனிந்தன. தம் இருகரம் ஏந்தி இறைவனிடம் அவருக்காக இறைஞ் சினார்கள். அதன்பின் அவரை நோக்கி, ''நீர் பக்குவம் பெற்று விட்டீர். சென்று வருவீர்'' என்று வாழ்த்தி அனுப்பினார்கள்.

ஹிஜ்ரி 521 ஆம் ஆண்டில் ஒரு நாள் அபூ முஸஃப்பர் இப்னு ஹஸன் என்பவர் ஆண்டகை அவர்களின் ஆசான் ஹம்மாது தப்பஸ் (ரஹ்) அவர்களை அணுகி, தாம் எழுநூறு பொற்காசுகளுக்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு சிரியாவிற்கு வாணிபத்தின் பொருட்டுச் செல்ல விருப்பதாகக் கூறினார். அதுகேட்ட அவர்கள் ''நீர் இவ்வாண்டு வாணிபத்தின் பொருட்டு வெளியே காலெடுத்து வைக்க வேண்டாம்! மீறிச் செல்லின், உம்பொருள்கள் கொள்ளையடிக்கப்படுவதோடு, நீரும் கொலை செய்யப்படுவீர்'' என்று கூறினார்கள்.

பெரிதும் மனமுடைந்த அவர் ஆண்டகை அவர்களை அணுகி, நடந்ததை நவில, ''நலமே சென்று, நலமே திரும்பி வாரும்! உம்முடைய உயிருக்கோ, உடைமைகளுக்கோ யாதொரு தீங்கும் ஏற்படாது'' என்று கூறினார்கள்.

அவ்விதமே அவர் சிரியப் பயணத்தை மேற்கொண்டு, தாம் கொண்டு சென்ற பொருள்களை ஆயிரம் பொற்காசுகளுக்கு விற்றுத் திரும்பி வரும் வழியில், அலெப்போ நகரில் தங்க வேண்டி ஏற்பட்டது. அங்கு மலஜலம் கழிப்பதற்காக கழிப்பறைக்குச் சென்ற பொழுது, தம்மிடமிருந்த பொற்காசுகளில் இறை திருப்பெயர் பொறிக்கப்பட்டிருந்த தனால் அதனை ஆங்கிருந்த ஒரு மாடக் குழியில் வைத்துவிட்டுச் சென்றார். பின்னர் அதனை எடுக்க மறந்துவிட்டுத் தாம் தங்கியிருந்த இடத்திற்கு வந்தார். அப்பொழுது அவரை ஓர் உறக்கம் ஆட்கொண்டது. அதிலே தம்மை கொள்ளைக் கூட்டத்தினர் வந்து தாக்கித் தம் கழுத்திலே கத்தியை வைத்து அறுப்பது போன்று கனவு கண்டு, திடுக்குற்று விழித்தெழுந்து கழுத்தைத் தடவிப் பார்க்கும் பொழுது, அதிலே இலேசான காயம் ஏற்பட்டு இரத்தம் கசிந்து கொண்டிருப்பதைக் கண்டார். இப்பொழுது பண முடிப்பு பற்றிய நினைவு வரவே, அதனை அங்குமிங்கும் தேடினார். காணவில்லை. பின்னர் அதனை வைத்த இடம் நினைவுக்கு வர, அங்கு ஓடிப் போய்ப் பார்க்கும் பொழுது, அது அங்குப் பத்திரமாக இருந்தது.

அதனை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் அவர் பக்தாது திரும்பிய பொழுது, அவரின் முன் ஒரு மாபெரும் பிரச்சினை வந்துநின்றது. எவரைப் போய் முதலில் சந்திப்பது? 'வயதில் மூத்தவரான ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்களையா, இளையவரான முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களையா?' என்பது தான் அந்தப் பிரச்சினை.

இவ்விதச் சிந்தனையோடு அவர் சுல்தானி கடைவீதியில் செல்லும் பொழுது, ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்கள் எதிர்ப்பட்டு, 'அபுல் முஸஃப்பரே! நீர் முதலில் அப்துல் காதிரிடமே செல்லும்! அவர்

அல்லாஹ்வின் அன்பிற்குரிய நேசர். அவர் உமக்காக பதினேழு, பதினேழு முறையாக எழுபது தடவை இறைவனிடம் இறைஞ்சினார். அதன் காரணமாக விழிப்பில் நடக்க வேண்டியது உறக்கத்திலும், உண்மையில் நடக்க வேண்டியது, மறதியிலும் ஆனது'' என்று கூறினர். அவ்விதமே அவர் ஆண்டகை அவர்களிடம் வந்த பொழுது, வழியில் ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்கள் அவரைச் சந்தித்துக் கூறிய அனைத்தையும் அவரிடம் ஒன்று விடாது கூறி, ''ஆம்; நாம் உமக்காக இறைவனிடம் எழுபது தடவை இறைஞ்சி உயிர் இழப்பைக் கனவிலும், உடைமை யிழப்பை மறதியிலுமாக மாற்றியமைத்தோம்'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஆண்டகை அவர்களிடம், எவர் வந்து தம் குறைகளை எடுத்துரைத்து இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டினும், உடனே அவர்கள் அவ்விதமே செய்து வந்தார்கள். (ஒரு நாள் ஒரு பெண்மணி அவர்களை அண்மி தமக்கு மகப்பேறில்லாக் குறையை அழாக்குறையாக எடுத்து ரைத்தாள். சற்று நேரம் தலை குனிந்த வண்ணம் அமர்ந்திருந்த ஆண்டகை அவர்கள், பின்னர் தலையை நிமிர்த்தி, ''அம்மணீ! இல்லம் செல்லும்! உமக்கு மகப்பேறு ஏற்படும்'' என்று கூறினர். அவ்விதமே இல்லம் திரும்பிய அவர் அன்றிரவே கருத்தரித்தார்.

பத்துமாதம் கழித்துப் பிள்ளை பிறந்ததும், அது பெண் குழந்தையாக இருப்பதைக் கண்டு, அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை. இதனை அவர் தம் கணவரிடம் எடுத்துரைக்க, அவர் ஓடோடி வந்து ஆண்டகை அவர்களிடம் செய்தியைக் கூறித் தம் வருத்தத்தையும் தெரியப் படுத்தினார். அது கேட்ட ஆண்டகை அவர்கள், ''இல்லையே. அது ஆண் குழந்தையாகவல்லவா இருக்க வேண்டும். போய் நன்றாகப் பார்!'' என்று கூறினார்கள். அவ்விதமே அவர் வந்து பார்க்கும் பொழுது, அவருக்கு அவருடைய கண்களையே நம்ப இயலவில்லை. உண்மையில் அது ஆண்குழந்தையாகவே இருந்தது. அதற்கு ஆண்டகை அவர்கள் கூறிய வண்ணம், ஷஹாபுத்தீன் எனப் பெயர் சூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார்கள் பெற்றோர்கள்.

ஷஹாபுத்தீன் வயதேறப்பெற்ற பொழுது, தர்க்க நூல், தத்துவ நூல் ஆகியவற்றை விரும்பிப் படித்து வந்ததோடல்லாது, அவற்றில் சிலவற்றை மனனமும் செய்திருந்தார். அவற்றைப் படிப்பதில் அக்கரை செலுத்த வேண்டாமென்று அவருடைய சிறிய தந்தை எவ்வளவோ எடுத்துரைத்தும், அவர் கேட்கவில்லை. ஒரு நாள் அவரை அவரின் சிறிய தந்தை, ஆண்டகை அவர்களிடம் அழைத்துச் சென்று தம் குறையினை எடுத்துரைத்து, ஆவன செய்யுமாறு வேண்டினார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் ஷஹாபுத்தீனை நோக்கி, "நீர் என்ன என்ன தர்க்க, தத்துவ நூல்களை மனனம் செய்திருக்கிறீர்?" என்று வினவினார்கள். அதற்கு அவர், தாம் மனனம் செய்து வைத்துள்ள நூல்களின் பெயர்களைக் கூறினார்.

உடனே ஆண்டகை அவர்கள் தம் கையை ஷஹாபுத்தீனின் நெஞ்சில் வைத்துத் தடவ, அவர் மனனம் செய்திருந்த நூல்களெல்லாம் அடுத்த கணமே மறந்து போய் விட்டன. மறுகணம் அவ்விடத்தை மார்க்கம் பற்றிய ஞானம் ஆக்கிரமித்துக் கொண்டது. அப்பொழுது ஆண்டகை அவர்கள் ஷஹாபுத்தீனை நோக்கி, "இராக் நாட்டின் இறுதியாகப் புகழ்பெற்று விளங்கும் பெரியாராக நீர் விளங்குவீர்" என்று ஆசீர்வதித்தார்கள். அவ்விதமே அவர் பிற்காலத்தில் ஷஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ என்ற பெயருடன் சிறப்புற்று, ஏற்றமிகு இறைநேசச் செல்வராக விளங்கினார்.

ஒரு நாள் அவர் நவமணிகளை அள்ளி, அள்ளி மக்களுக்கு விநியோக்கவும் அவை அள்ள, அள்ளக் குறையாது அதிகப்பட்டுக் கொண்டிருக்கவும் அவரின் சீடர் நஜ்முத்தீன் கனவு கண்டு அக்கனவை தம் குருநாதர் ஷஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ இடம் வந்துகூற, "அது உண்மையான கனவேயாகும். அந்த நவமணிகளானவை நான் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களிடமிருந்து, தர்க்க, தத்துவ அறிவுகளுக்குப் பகரமாகப் பெற்ற மார்க்க, ஆத்மீக அறிவுகளாகும்" என்று அவர் கூறினார்.

ஒரு நாள் ஆண்டகை அவர்கள் திருமுன் பதின்மூன்று பேர்கள் வந்து, அமர்ந்தனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அப்பதின்மரையும் நோக்கி, "நீங்கள் உங்களின் மனத்திலுள்ள விருப்பங்களைக் கூறுங்கள்! நான் இறைவனிடம் இறைஞ்சிப் பெற்றுத் தருகிறேன்" என்று கூறினார்கள். அவ்வாறே அவர்களில் ஒவ்வொருவரும் தம் தம் விருப்பத்தை அவர்களிடம் எடுத்துரைத்தனர். ஒருவர் இறைவணக்கத்தைக் கேட்டார். வேறொருவர் இறையச்சத்தை வேண்டினார். மற்றொருவர் அறிவை விரும்பினார். பிறிதொருவர் அமைச்சர் பதவியை ஆசையுற்றார். வேறொருவர் 'குத்பு' ப் பதவி வேண்டுமென்று கூறினார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தம் உள்ளின் உள்ளிலே மறைந்து கிடந்த வேணவாவை எடுத்துரைக்க, அவற்றையெல்லாம் செவி தாழ்த்திக் கேட்டுக் கொண்டிருந்த ஆண்டகை அவர்கள், "அனைவருக்கும் நாம் உதவி செய்வோம். இவர்களும், அவர்களும் - ஏன்- அனைவருமே உம் நாயனின் அருட்பெரும் கொடையில் நின்றும் உதவியளிக்கப் பெறுவார்கள். அவ் அருட்பெருங் கொடை எவருக்கும் விலக்கப்பட்டதல்ல" என்ற கருத்துப் பொதிந்த இறைதிருவசனத்தை ஓதினார்கள். 'இவ்வாறு

ஓதியதன் மூலம், உங்களின் விருப்பங்கள் அனைத்தும் இறை சந்நிதானத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன' என்று அவர்கள் கூறாமல் கூறினார்கள்.

உண்மையில் அவர்களின் விருப்பங்கள் அனைத்தும், பிற்காலத்தில் அணுவத்தனையும் குறையாது நிறைவேறின. இறை வணக்கத்தை வேண்டியவர் அஸஜ் என்னும் இடத்தில் பூமியில் குழிதோண்டி அதில் முதல் தடவை பதினாறு ஆண்டுகளும், பின்னர் இரண்டாவது தடவை பதினாறு ஆண்டுகளும் 'கல்வத்' (தனித்து தியானத்தில்) இருந்தார். ''நான் இக்காலத்தில் பசியைப் பசிக்க வைத்தேன். தாகத்தை தாகிக்க வைத்தேன். உறக்கத்தை உறக்கத்திலாக்கினேன். விழிப்பை விழிப்பிலாக்கினேன். அச்சத்தை அச்சமுறச் செய்தேன்'' என்று அவரே கூறினார்.

இறையச்சத்தை விரும்பியவர் நோன்பு நோற்ற நிலையில் தண்ணீரை வாயில் வைத்து உமிழ்ந்தால், அது தொண்டைக்குள் இறங்கி இருக்குமோ என்ற அச்சத்தில், மீண்டும் அந்த நோன்பை 'களா'ச் செய்பவராக ஆகிவிட்டார்.

அறிவை விரும்பியவர், பிற்காலத்தில் பல்வேறு நூல்களையும் பயின்று, பேரறிஞராக விளங்கினார். ஒரு தடவை அவர், தாம் படித்த நூல்களையெல்லாம் விற்றதை மக்கள் குறை கூறிய பொழுது, ''நான் அவை அனைத்தையும் மனனம் செய்து கொண்டேன். வேண்டுமானால் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று அவர் பதிலிறுத்தார்.

அமைச்சர் பதவியை விரும்பியவர், தாம் விரும்பிய வண்ணம் அமைச்சர் பதவியைப் பெற்றார். 'குத்பு' பதவியை விரும்பியவர் தாம் இறப்பதற்கு ஏழு நாட்களுக்கு முன், அப்பேற்றினைப் பெற்றார். ஏனையோரும், தங்களின் விருப்பங்களைத் தங்களின் வாணாளிலேயே பெற்றனர்.

ஆண்டகை அவர்கள், தம் அன்பிற்குரியோர் எவர்க்கும் ஏற்படவிருக்கும் இன்னலை முற்கூட்டியே அறிந்து, அதனை இறைவனிடம் இறைஞ்சி மாற்றியருளவும் செய்தனர். அவர்களின் அன்பிற்குரிய ஒருவர் அவர்களை அணுகி, சென்ற இரவு தாம் தீய கனவு எழுபது தடவை கண்டு குளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, எழுபது தடவை குளித்தாகக் கூறிக் குறைபட்டுக் கொண்டார். அதுகேட்ட ஆண்டகை அவர்கள் ''உம் விதியில் நீர் எழுபது தடவை தகா ஒழுக்கத்தில் ஈடுபட்டு நரகம் புகுவீர் என்று எழுதப்பட்டிருந்தது. அதனை நான் கனவில் நிகழுமாறு இறைவனிடம் இறைஞ்சி மாற்றியமைத்தேன்'' என்று கூறினர்.

நம் அன்பிற்குரியவர்களிடம் மட்டுமல்லாது, ஏனையோரிடமும் கழிவிரக்கத்துடன் நடந்துகொள்ளும் அவர்கள், தம் சீடர்கள்

மார்க்கத்திற்கு மாறாகச் சிறிதளவு நடந்து கொண்ட போதினும், அதனைப் பொறுத்துக் கொள்வதில்லை. ஒரு தடவை அவர்கள் பள்ளிவாயிலின் நீர்த்தேக்கத்தருகில் அமர்ந்து, 'உளூ'ச் செய்து கொண்டிருக்கும் பொழுது, தம் அருகே அமர்ந்து உளூச் செய்துகொண்டிருந்த அபூபக்ர் என்ற 'வலீ' ஒருவர், விரல் இடுக்குகளிடையே கோதிக் கழுவாததைக் கண்டதும் சினமுற்று ஒழுங்காக 'உளூ'ச் செய்யுமாறு கூற, அவர் முன்னர் போன்றே தவறாகச் செய்ய உடனே அவரை அப்படியே தூக்கிப் பள்ளிவாசல் மதிலுக்கு வெளியே வீசி எறிந்தார்கள் அவர்கள்.

எறியப்பட்டவர் விழுந்த நிலையிலேயே கிடந்தார். அவரால் எழ இயலவில்லை. இதனைக் கேள்வியுற்ற அவரின் அன்னை ஓடோடி வந்து, அவரைத் தூக்கி நிறுத்த, அவர் எழுந்து நின்றார். அப்பொழுது அவர் அன்னை, அவர் அங்கு விழுந்து கிடந்த காரணத்தை வினவ, நடந்ததை நவின்றார் அவர்.

உடனே அவரது அன்னை ஆண்டகை அவர்களிடம் வந்து தம் மகனிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்டதற்கான காரணத்தை வினவ, "விலாயத் தகுதியை அடைந்த அவர், 'உளூ'ச் செய்யும் பொழுது, பேண வேண்டிய நபியின் வழி முறையாகிய விரல்களுக்கிடையே விரல்களை விட்டுக் கோதிக்கழுவும் முறையைக் கை நழுவ விட்டு விட்டாரே. அதைக் கண்டதும் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் அழகிய வழி முறையைப் பேணி ஒழுகத் தவறிய இவருக்கு, 'விலாயத்' ஒரு கேடா? என்று எண்ணித் தூக்கி எறிந்தேன். அத்துடன் அவரின் 'விலாயத்'தும் பறிபோய் விட்டது" என்று கூறினார்கள் ஆண்டகை அவர்கள்.

இதன்பின் பல ஆண்டுகளாக 'விலாயத்' பறிபோன நிலையில் தட்டுத் தடுமாறித் திரிந்தார் அவர். பலர் அவருக்காக ஆண்டகை அவர்களிடம் பல தடவை பரிந்துரைத்ததன் பேரில், அவர்கள் அவரை மன்னித்துத் தம் நெஞ்சோடு நெஞ்சாக ஆரப் புல்லினார்கள். அடுத்த கணம் அவர் 'விலாயத்' எய்தப் பெற்று, முந்தைய நிலையை எய்தினார். அவருடைய பதவி முன்பை விட, மும்மடங்கு அதிகமாகியது.

இவ்வாறு மார்க்கம் பற்றிய வரையில் பிறர் பற்றிக் கண்டிப்பாக இருந்த அவர்கள், அது பற்றித் தம்மை பற்றிய வரையிலும் மிகவும் கண்டிப்பானவர்களாகவே இருந்தனர். ஷரீஅத்தையோ, சுன்னத்துக் களையோ அவர்கள் அணுவேனும் பிசகாது பின்பற்றி ஒழுகினர். அவை மட்டுமன்றி, அவர்கள் பேணி நடந்த 'நஃபீல்' வணக்கங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல.

அவர்கள் ஒவ்வொரு நாளும், ஆயிரம் ரகஅத் நஃபீல் தொழுகை தொழுது வந்தார்கள். சூரத்து முஸம்மிலையும், சூரத்து ரஹ்மானையும் அதிகமதிகமாக ஓதிவந்தார்கள். சூரத்து இக்லாஸை நாளொன்றுக்கு ஒரு நூறு தடவை ஓதினார்கள். ஒவ்வோர் இரவிலும் 'அர்பயீனிய்யா' என்னும் அஸ்மாவை அறுநூற்று அறுபது தடவை ஓதினார்கள். பகலிலும் அவ்விதமே ஓதுவார்கள். நண்பகல் தொழுகைக்குப் பின்னும், பிற்பகல் தொழுகைக்குப் பின்னும், துஆ ஸைபியை ஓதுவார்கள். மேலும் ஸலவாத்துல் குப்ராவையும், அஸ்மாவுல் ஹுஸ்னாவையும், அஸ் மாவுந் நபியையும், ஒவ்வொரு நாளும் ஆயிரம் தடவை ஓதுவார்கள். இவ்வாறு வணக்கம் நிகழ்த்தித் தான், அவர்கள் இறையண்மையை எய்தி நின்றார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தனிப்பட்ட வணக்கமாகிய 'தஹஜ்ஜுத்' தொழுகையை அவர்கள், நாள் தவறாது தொழுது வந்தனர். தொழுது முடிந்தபின், துஆ ஸைபியை ஓதுவர். அத்தொழுகையை அனைவரும் தொழ வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஹிஜ்ரி 545-ஆம் ஆண்டு ரமலான் பிறை முதல் நாள், வெள்ளி இரவு நடுச்சாமத்தில் ஆண்டகை அவர்கள், தம் மதரஸாவின் முஅத்தினை பாங்கு சொல்லுமாறு கூறினர். அவ்விதமே அவரும் செய்தார். பின்னர் இரவில் மூன்றில் ஒரு பங்கு சென்று, இரண்டாவது பங்கின் இறுதி நேரத்தில், மீண்டுமொரு முறை அவரை அழைத்து, பாங்கு சொல்லுமாறு கூறினர். அவரும் அவ்விதமே செய்தார். அதன்பின் ஸஹ்ரின் துவக்க நேரத்தில் அவரை அழைத்து பாங்கு சொல்லுமாறு கூறினர். அவரும் அவ்விதமே மறு பேச்சின்றி செய்தார்.

விடிந்ததும் ஆண்டகை அவர்களின் சீடர்கள் சிலர், ஆண்டகை அவர்களை அணுகி, ''ஒரே இரவில் நள்ளிரவுக்குப்பின் மூன்று தடவை பாங்கு சொல்லப்பட்டதன் அகமியம் யாது?'' என்று வினவினர்

அதற்கு ஆண்டகை அவர்கள், ''முதல் பாங்கு சொல்லுமாறு நான் கூறிய நேரத்தில் அர்ஷ் குலுங்கியது. அப்பொழுது அர்ஷின் கீழிருந்து, ''லி யக்குமில் முகரபூனல் அஹ்யார்'' (பிரசித்தமான முகர்ரபீன்களான வானவர்கள் எழுக, தொழுக!) என்று ஒரு வானவர் சப்தமிட்டார். இரண்டாவது தடவை பாங்கு சொல்லுமாறு நான் கூறியபொழுது, ''லியக்குமில் அவ்லியாவுல் அப்ரார்'' (நன்றியுள்ள இறைநேசச் செல் வர்கள் எழுக, தொழுக!) என்று ஒரு வானவர் குரல் கொடுத்தார். நான் மூன்றாவது தடவை பாங்கு சொல்லுமாறு கூறிய சமயம், ''லியக்குமில் முஸ்தஃபிரூன பில் ஹஸ்ஹார்'' (ஸஹ்ர் நேரத்தில் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருவோர் எழுக, தொழுக!) என்று ஒரு வானவர் குரல்

கொடுத்தார். நான் இதனைக் கவனித்து மும்முறை பாங்கு சொல்லச் சொன்னதன் மூலம், அந்த மூன்று வகையினருக்கும் அவர்கள் தொழ வேண்டிய நேரத்தை எடுத்துரைத்தேன்'' என்று விளக்கம் பகர்ந்தார்கள்.

ஆண்டகை அவர்கள் 'லைலத்துல் ரகாயிப்' தொழுகையையும் நியமமாகத் தொழுது வந்தார்கள். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் தந்தையாகிய அப்துல்லாஹ்வின் திருநுதலில் இலங்கிக் கொண்டிருந்த நூரெ முஹம்மதிய்யா, ரஜப் முதல் நாள், வெள்ளி இரவு, ஆமினாவின் கருப்பையில் போய் தரித்தது. இது கி.பி. 570 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் நாள், வியாழன் பின்னேரம், வெள்ளி இரவில் நிகழ்ந்தது.

ஒவ்வோராண்டும், ரஜப் முதல் நாள் வெள்ளிக்கிழமை வராதாலால், ஒவ்வோராண்டும் ரஜப் முதல் வெள்ளிக்கிழமையை 'லைலத்துல் ரகாயிப்' எனப் பெயரிட்டு, அவ் இரவில் விசேடப் பிரார்த்தனை செய்வது ஹிஜ்ரி 3 ஆம் நூற்றாண்டில் பைத்துல் முகத்தஸில் தொடங்கப்பட்டது. சூஃபியாக்கள் இதனை, வணக்கத்திற்குரிய சிறந்த இரவாகக் கருது கிறார்கள். எனவே சூஃபியாக்களின் தலைவராகிய ஆண்டகை அவர் களும், அன்று சிறந்த வணக்கம் நிகழ்த்தியதில் வியப்பில்லை.

ஒருநாள் அவர்களின் சீடர்களில் சிலர் அவர்களை அணுகி, ''தங்களைப் போன்று நாங்களும் தொழுகிறோம், வணங்குகிறோம், நோன்பு நோற்கிறோம். ஆனால் தாங்கள் அடையும் 'ஹால்' (நிலைமை) களில் ஒன்றையேனும் நாங்கள் அடையப் பெறுகின்றோமில்லையே,'' என்று, தங்களின் ஆற்றாமையை எடுத்துரைத்தார்கள். அதுகேட்ட ஆண்டகை அவர்கள் புன்முறுவல் தம் முகத்திலே தவழ, ''நீங்கள், உங்களின் நற்செயல்களால் என்னை நெருங்குகிறீர்கள். ஆனால், எனக்கு இறைவனிடம் இருந்து கிடைக்கும் அருட்பேறுகளோ அளவிட இயலாததாகும். அவற்றை உங்களால் அடையப் பெற இயலாது. காரணம், இறைவன் என்னை நோக்கி, 'உம்மீது எனக்குள்ள உரிமையை வைத்து நான் கூறுகிறேன்: நீர் இதனை உண்ணத்தான் வேண்டும். இதனை அருந்தத்தான் வேண்டும், இதனைச் செய்யத்தான் வேண்டும் என்று ஆணையிட்டுக் கூறுகின்ற வரையில், நான் எதனையும் உண்ணவோ, அருந்தவோ, செய்யவோ மாட்டேன். எனவே அந்தப் பேரின்ப சாயுச்சிய நிலைகளான 'ஹால்'களையெல்லாம் இறைவன் எனக்குத் தந்தருளி யுள்ளான்'' என்று கூறினர்.

மற்றொரு நாள் ஷைகு முஹம்மது காயித் ரவானீ என்னும் பெரியார், ஆண்டகை அவர்களை அணுகி, ''தாங்கள் எந்த நற்பண்பின் காரணமாக இத் தகு உயர்நிலையை எய்தப் பெற்றீர்கள்?'' என்று வினவினர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''உண்மை பேசியதால் எய்தப் பெற்றேன். என் வாயிலிருந்து ஒரு போதேனும் உண்மையே அன்றிப் பொய்மை வெளிப்பட்டதில்லை'' என்று பதில் கூறினர்.

நாளுக்கு நாள் ஆண்டகை அவர்களின் 'நிலை' உயர்ந்து கொண்டே வந்தது. துவக்கத்தில் தமக்கு இராக் நாட்டின் ஆன்மீக ஆட்சி வழங்கப் பெற்றிருப்பதாகக் கூறினார்கள். இச்சமயத்தில் ஒருநாள் அவர்கள் ஷைகு மஃரூபுல் கர்க்கி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காகச் சென்றிருந்த பொழுது, 'மஃரூபே! தங்களுக்கு என் 'ஸலாம்' உண்டா வதாக! என்னை விடத் தாங்கள் ஒரு படித்தரத்தை அதிகமாகக் கடந்து விட்டீர்கள்'' என்று கூறினார்கள்.

பின்னர் ஒரு சமயம் ஆண்டகை அவர்கள், தம் சீடர்களை நோக்கி, ''நான் முன்பொரு தடவை, எனக்கு இராக் நாட்டின் ஆன்மீக ஆட்சி வழங்கப்பட்டிருப்பதாகக் கூறினேன். ஆனால், இப்பொழுதோ எனக்கு அகில உலகத்தின் நாடுகள், காடுகள், வனங்கள், வனாந்திரங்கள், மலைகள், கடல்கள் ஆகிய அனைத்தின் மீதும் (ஆன்மீக) ஆட்சி வழங்கப் பட்டுள்ளது என்று கூறுகிறேன்'' என்று அறிவித்தார்கள்.

இப்பொழுது அவர்கள் ஷைகு மஃரூபுல் கர்க்கி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிக்கச் சென்ற பொழுது, ''மஃரூபே! தங்களுக்கு என் ஸலாம் உண்டாவதாக! நான் இப்பொழுது தங்களை இரண்டு படித் தரங்கள் அதிகமாகக் கடந்து விட்டேன்'' என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள் ஒரு தடவை தம்மைச் சூழ வீற்றிருந்தவர்களை நோக்கி, ''என்னைக் கண்டவருக்கும், என்னைக் கண்டவரைக் கண்ட வருக்கும், என்னைக் கண்டவரைக் கண்டவரைக் கண்டவருக்கும், என்னைக் கண்டவரைக் கண்டவரைக் கண்டவரைக் கண்டவருக்கும், நன் மாராயம் உண்டா வதாக! என்னைக் காணாதவருக்கோ பேரிழப்பே அன்றி வேறில்லை.

''ஹல்லாஜ் சருகிவிட்டார். அவரைக் கைதூக்கிக் கரையேற்ற, அவரின் காலத்தில் எவருமில்லை. நான் அப்பொழுது உயிரோடிருந் திருப்பின், அவரைத் கைதூக்கிக் கரை சேர்ந்திருப்பேன். என் முரீதுகளில் எவரும் சருகி விடின், நான் அவர்களை உலக முடிவு நாள் வரையிலும் கைதூக்கிக் கரை சேர்த்துக் கொண்டிருப்பேன்.

''மண்ணின்மீது விண்வளைந்து கவிழ்ந்துள்ளது போன்று என் முரீதுகளின் மீது என்னுடைய கரங்கள் கவிழ்ந்துள்ளன. நான் எழுவானிலும், என் முரீது படுவானிலும் இருந்த போதினும் சரியே, அவர் போர்த்தப்படாமல் இருப்பின் நான் அவ்வரைப் போர்த்தி விடுவேன்.

''என் ஆன்மீகப் பேரரசின் வெற்றி முரசு எழுவானிலிருந்து படுவான் வரை முழங்கிக் கொண்டுள்ளது. அல்லலுற்றோரைக் காத்து ரட்சிக்கும் 'கௌது' ஆக நான் உள்ளேன்.

''முன்னோர்களின் கதிரவன்களெல்லாம் சாய்ந்து மங்கி, மறைந்து விட்டன. என்னுடைய கதிரவன் என்றும் நடுவானில் ஒளிவிட்டுச் சுடர் கொளுத்திக் கொண்டிருக்கும்.

''எல்லா ஆற்றலும் வாய்க்கப் பெற்ற இராஜாளி நான். வலிமார்களாகிய சிம்மங்களில், என் போன்று எவரே உளர்? பொழுது புலர்ந்ததும், அது எனக்கு 'ஸலாம்' சொல்லி, உலகில் அன்று நிகழவிருக்கும் செய்திகள் அனைத்தையும் கூறுகின்றது. ஒவ்வோராண்டும் தன்னில் நிகழவிருக்கும் செய்திகள் அனைத்தையும் என்னிடம் கூறியே தோன்றுகிறது. அவ்விதமே மாதங்களும், வாரங்களும், நாட்களும் செய்கின்றன. உலகில் நல்லோர் யார், தீயோர் யார் என்பதை நான் நன்கு அறிவேன். 'லௌஹுல் மஹ்பூல் பலகை'யை நான் பார்க்கிறேன். அதில் எழுதப்பட்டிருப்பதை நான் படிக்கிறேன். இறைவனின் அறிவுக் கடலில் மூழ்கிக் குளித்தவன் நான். அவனுடைய தியானக் கடலில் மூழ்கித் திளைத்தவன் நான். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக, நான் உலகில் உள்ளேன். அவர்களின் அனந்தரத்தைப் பெற்று நுகர்ந்து வருகிறேன். ஒவ்வோர் வலிக்கும், ஒரு நபியின் பாதமுண்டு. நானோ முழுமதி போன்ற முஹம்மது (ஸல்) அவர்களின் பாதார விந்தங்களில் வீற்றிருக்கிறேன்.

''எனது படையணியிலுள்ள குத்புமார்களே! நான் அருந்திய பின், எஞ்சி இருந்ததையே நீங்கள் அருந்தியுள்ளீர்கள். நான் எய்திய படித்தரத்தை என்ன, அதன் அண்மையைக் கூட நீங்கள் எய்தப் பெறவில்லை. உங்கள் அனைவருடைய தகுதிகளும் உயரியனவேயாயினும், அவை அனைத்'தையும் விட, என் தகுதி தனிப்பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். குத்புகள் அனைவருக்கும் என்னை இறைவன் அரசனாக்கி விட்டான். என் ஆன்மீக ஆட்சி அனைத்து நேரத்திலும் நடந்து கொண்டுள்ளது!''

இவ்வாறு அவர்கள் வெளிப்படையாகப் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்களின் ஆசான் ஹம்மாது (ரஹ்) அவர்கள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''அப்துல் காதிரே! நீரே உம்மைப்பற்றி இவ்வாறு துணிச்சலுடன் பேசுகின்றீரே, இறைவன் நீர் பேசியதற்கு எதிரிடையாக யாதேனும் செய்தாலும் செய்துவிடலாம் என்று நீர் அஞ்சியதாகத் தெரியவில்லையே?'' என்று கூறினர்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், தம் பாக்கியம் பெற்ற கையைத் தம் ஆசானின் நெஞ்சில் வைத்து, ''இதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது

என்பதைத் தங்களின் ஆன்மீக் கண்ணால் பாருங்கள்!'' என்று கூறினார்கள். அவ்விதமே ஹம்மாது (ரஹ்) அவர்களும் பார்த்தார்கள். பின்னர் ஆண்டகை அவர்கள், தம் ஆசானின் நெஞ்சை விட்டும் தம் கையை எடுத்தார்கள். அப்பொழுது ஹம்மாது (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் அளவில்லை. அதில் அப்படி என்ன அவர்கள் பார்த்தார்கள்? இறைவன் ஆண்டனை அவர்களுக்கு ஒரு தடவையல்ல, எழுபது தடவை அளித்த வாக்குறுதியைத் தான். அதைக் கண்டதும் ''நீர் கூறுவதில் தவறில்லை; நீர் கூறுவதில் தவறில்லை'' என்று இருமுறை கூறிவிட்டு, 'ஃதாலிக பளுலுல் லாஹி; யுஃத்தீஹி மையஷா உ; வல்லாஹு ஃதுல் பளுலில் அளீம்'' (இது அல்லாஹ்வுடைய அருளாகும். தான் விரும்பிய வர்களுக்கு அதனை அவன் வழங்குவான். அல்லாஹ் மாண்பாரும் அருள் நிறைந்தவன்) (28:4) என்ற திருவசனத்தை ஓதினார்கள்.

ஆண்டகை அவர்கள் மூலம், நாளொன்றுக்கு இருபது அற்புதங்கள் வீதம் வெளிப்பட்டு வந்தன. எனினும் அவற்றை, அவர்கள் மறைக்கிற வர்களாகவே இருந்தனர். அல்லாஹ்வுக்காகவே அன்றி, தமக்காக அற்புதங்களை வெளிப்படுத்துகிறவர் உலகாயதவாதியாக இருப்ப ரென்றும், அவர் இம்மையிலும், மறுமையிலும் முகம் கருமையடைந் தவராக ஆகிவிடுவார் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஆண்டகை அவர்களால் வெளியான அற்புதங்களோ அனந்தம். அவர்கள் மூலமாக அதிகமான அற்புதங்கள் வெளியாயின என்பதை இப்னு தைமிய்யாவே ஒப்புக் கொள்கிறார். இவ்வாறு அவர்கள் மூலம் அதிகமான அற்புதங்கள் வெளியானது, இறைவனின் வல்லமையை நிரூபிக்கவும், மக்களை நேர்வழிப்படுத்தி அல்லலுற்றோரின் அவதி நீக்குவதற்குமேயன்றி வேறில்லை.

ஹிஜ்ரி 555 ஆம் ஆண்டு, ஸபர் மாதம், மூன்றாம் நாள், ஆண்டகை அவர்கள் தம் சீடர்கள் புடைசூழத் தம் மதரஸாவில் வீற்றிருக்கும் பொழுது, திடீரென எழுந்து சென்று பாதக் குறடுகளைக் காலில் அணிந்த வண்ணம் 'உளூ'ச் செய்தார்கள். பின்னர் இரண்டு ரகஅத் தொழுதார்கள். அதன்பின் பேரொலி எழுப்பிய வண்ணம், தம் இரண்டு பாதக் குறடுகளையும் ஒன்றன்பின் ஒன்றாக விண்ணிலே வீசி எறிந்தார்கள். மேலே சென்ற அவை கீழே விழவில்லை. எங்கோ சென்று மறைந்து விட்டன. இதனை ஆங்கிருந்தோர் அனைவரும் பார்த்தார்கள் தாம். ஆனால் இதுபற்றி ஆண்டகை அவர்களிடம் வினவ எவருக்கும் துணிவேற்படவில்லை.

இதன்பின் மூன்று நாட்கள் கழிந்தன. நான்காவது நாள் ஒரு வாணிபக் கூட்டத்தினர், ஆண்டகை அவர்களின் திருமுன் வந்து காணிக்கைப்

பொருள்கள் அடங்கிய பொதி ஒன்றை அவர்களின் காலடியில் வைத்தனர். அதனை ஆண்டகை அவர்களிடமிருந்து, அவர்களின் சீடர்கள் பெற்றுச் சென்று, அவிழ்த்துப் பார்த்த பொழுது, அதில் காணிக்கைப் பொருள்களோடு, ஆண்டகை அவர்கள் சில நாட்களுக்கு முன் வீசி எறிந்த பாதக்குறடுகளும் இருந்தன.

அவற்றை வியப்புக் கண்களுடன், அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அவ்வணிகக் கூட்டத்தின் தலைவர் கூறினார்: ''கேளுங்கள் சகோதரர்களே! நாங்கள் ஸஃபர் மூன்றாம் நாள், எங்களின் வாணிபப் பொருள்களை ஒட்டகைகளில் ஏற்றிக் கொண்டு கானகத்தின் நடுவே வந்து கொண்டிருக்கும் பொழுது, திடீரெனக் கொள்ளைக் கூட்டத்தினர் தோன்றி, எங்கள் மீது தாக்குதல் நடத்தி, எங்களில் சிலரைக் கொன்று, எங்களின் வாணிபப் பொருள்கள் அனைத்தையும் கொள்ளையடித்துச் சென்று விட்டனர். அப்பொழுது நாங்கள் உள்ளங்கலங்கித் தத்தளித்து யாது செய்வதென அறியாத நிலையில், பக்தாதில் வீற்றிருந்து ஆன்மீகச் செங்கோல் நடத்திவரும் ஆண்டகை அவர்களை நினைவுகூர்ந்து ''அல் மதது யா முஹ்யித்தீன், அல் மதது யா முஹ்யித்தீன்'' (முஹ்யித்தீனே அபயம்; முஹ்யித்தீனே அபயம்) என்று அலறினோம். அடுத்த கணம் கொள்ளைக் கூட்டத்தினர் தாம் கொள்ளையிட்டுச் சென்ற பொருள்களைப் பங்கு வைத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து பேரிரைச்சல் கேட்டது. எங்களிடமிருந்து கொள்ளையிட்டுக் கொண்டு சென்ற கூட்டத்தினர் மீது, மற்றொரு பெரிய கொள்ளைக் கூட்டத்தினர் தாக்குதல் நடத்துகின்றனரோ, அதனால் இப்பேரிரைச்சல் ஏற்படுகிறதோ என்று எண்ணினோம். ஆனால், உண்மை அவ்வாறில்லை. எங்களிடமிருந்து, எங்களின் பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்ற சிலர், எங்களிடம் ஓடோடி வந்து, 'நாங்கள் உங்களிடமிருந்து கொள்ளை அடித்துச் சென்ற பொருள்கள், அதோ குவிந்து கிடக்கின்றன. அவற்றை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்! அவற்றை நீங்கள் எங்களுக்கு அன்பளிப்பாகத் தந்தால் கூட அவை எங்களுக்கு வேண்டாம்' என்று நாக்குழறக் கூறினர். அவர்களின் இந்தத் திடீர் மனமாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை அறியாதவர்களாய், நாங்கள் அங்கு சென்று பார்த்த பொழுது, அக் கொள்ளைக் கூட்டத்தினரில் இருவர் இறந்து கிடப்பதையும், அவர்களின் அருகே இந்தப் பாதக்குறடுகள் இரண்டும் கிடப்பதையும் கண்டு நிலைமையை உய்த்துணர்ந்து கொண்டு, எங்களின் பொருள்களையும் எங்களுக்கு அவற்றை மீட்டித் தந்த ஆண்டகை அவர்களின் இருபாதக் குறடுகளையும் எடுத்துக் கொண்டு இங்கு வந்தோம்'' என்று அவர் கூறியதைக் கேட்டு அனைவரும் ஆச்சரியக்கடலில் மூழ்கினர்.

இந் நிகழ்ச்சிக்குப் பின் ஒரு ரமலான் மாதத்தில் ஆண்டகை அவர்களின் சீடர்களும், அபிமானிகளும் ஒருவர் பின் ஒருவராக எழுபது பேர் வந்து தங்களின் இல்லத்திற்கு நோன்பு திறக்க வரவேண்டுமென்று ஆண்டகை அவர்களை வேண்டிக் கொண்டார்கள். அனைவருக்கும் ஆண்டகை அவர்கள் சரி, சரி என்று கூறினார்களே ஒழிய, ஒருவருக் கேனும், ''இன்னார் என்னை நோன்பு திறக்கத் தம் இல்லம் வருமாறு அழைத்துள்ளார். ஆதலின் பின்னால் பார்த்துக் கொள்வோம்'' என்று கூறவில்லை.

நோன்பு திறக்கும் வேளையில் ஆண்டகை அவர்கள், அந்த எழுபதின்மரின் இல்லமும் சென்று உணவருந்தியதோடல்லாது, தங்களுடைய மதரஸாவிலும் நோன்பு திறந்து உணவருந்தினார்கள். இச்செய்தி ஒரு நொடியில் பக்தாது மாநகரம் முழுவதும் பரவி, மக்களுக்கு அளவற்ற ஆச்சரியத்தை அளித்தது.

ஆனால், மதரஸாவின் ஊழியருக்கு இதில் சிறிதும் நம்பிக்கை ஏற்படவில்லை. ''ஆண்டகை அவர்கள் என் முன்னாலே தான் நோன்பு திறந்து விட்டு உணவுண்டார்கள். நான் தானே அவர்களின் திருமுன் உணவு கொண்டு போய் வைத்தேன். அவர்கள் இன்று முழுவதும் மதரஸாவிற்கு வெளியே அடியெடுத்தும் வைக்கவில்லையே? இந் நிலையில் அவர்கள் எவ்வாறு வெளியே சென்று, ஒருவர் வீட்டிலல்ல, எழுபது பேர்களின் வீடுகளிலும் ஒரே சமயத்தில் உணவருந்த இயலும்?'' என்று எண்ணினார்.

அவர் தம் உள்ளின் உள்ளே எண்ணியதைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், அவரைத் தனியே அழைத்து, ''ஊரார் உரைப்பது உண்மையேயாகும். நான் இங்கு நோன்பு திறந்து உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுதே, என்னை அழைத்த எழுபதின் மரையும் திருப்திபடுத்துவதற்காக, அவர்களின் இல்லம் சென்று நோன்பு திறந்து உணவருந்திவிட்டு, இங்குத் திரும்பினேன்'' என்று கூறினார்கள். அதுகேட்ட ஊழியர் ஆண்டகை அவர்களின் மாண்பினை அன்றே உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

மற்றொருவர் தம் அனுபவம் ஒன்றைக் கூறுகின்றார்.

''நான் ஆண்டகை அவர்களின் மதரஸாவில் தங்கிக் கொண்டும், அவர்களுக்கு ஊழியம் புரிந்தும் வந்தேன். ஹிஜ்ரி 553 ஆம் ஆண்டு, ஸஃபர் மாதத்தில் ஓரிரவு ஆண்டகை அவர்கள் தம் வணக்க அறையி லிருந்து வெளியே வந்தார்கள். உளூச் செய்வதற்காகச் செல்கின்றார்களோ என எண்ணிக் கொண்டு, தண்ணீர் பாத்திரத்தை எடுத்துச் சென்று அவர்கள்

வழக்கமாக 'உளூ'ச் செய்யும் இடத்தில் வைத்தேன். ஆனால் அவர்கள் அங்குச் செல்லாது, மதரஸாவின் வாயிலை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் அதனை நெருங்கியதும், அதன் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன. அவர்கள் அவ்வாயில் வழியாக வெளியேறினார்கள். நானும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றேன். அவர்கள் பக்தாது மாநகரின் வாயிலை நோக்கி விறுவிறுவென நடந்து சென்றார்கள். அதனை அவர்கள் நெருங்கியதும், அதன் கதவுகளும் தாமாகவே திறந்து அவர்களுக்கு வழிவிட்டன. அவர்களைப் பின் தொடர்ந்து நானும் சென்றேன். அவர்களைப் பின் தொடர்ந்து நான் செல்வது அவர்களுக்குத் தெரியாது என்று நான் எண்ணிக் கொண்டேன். நாங்கள் இருவரும் நகர வாயிலைக் கடந்ததும், அதன் கதவுகள் 'படார்' என்று சாத்தித் தாமாகவே தாளிட்டுக் கொண்டன.

''அதன் பின் சில எட்டுகள் தாம் எடுத்து வைத்திருப்போம். முன்பின் அறியாத புதிய நகரம் ஒன்றில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். அங்கிருந்த தவ மடம் ஒன்றில், ஆண்டகை அவர்கள் புகுந்தார்கள். அவர்களைக் கண்டதும், அங்கிருந்த அறுவர் எழுந்து நின்று, ஆண்டகை அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து, அவர்களைப் பெரிதும் மரியாதையுடன் வரவேற்றார்கள். நான் ஒரு தூணருகில் மறைந்து நின்றேன். அப்பொழுது உள்ளே முனகல் சப்தம் கேட்டது. சற்று நேரத்தில் அதுவும் நின்றது. அதன்பின் ஒருவர் அம்முனகல் சப்தம் கேட்ட இடத்திற்குச் சென்று, அங்கிருந்து ஒருவரைத் தம் தோளில் வைத்துத் தூக்கிச் சென்றார்.

''இதன்பின் நீண்ட பெரிய மீசையுள்ள ஒருவர், தலைவிரி கோலத்துடன் உள்ளே நுழைந்தார். அவருக்கு ஆண்டகை அவர்கள், அவருடைய மீசையையும் தலைமுடியையும் வெட்டுமாறு செய்து, அவரின் தலையில் ஒரு துணித்தொப்பியை அணிவித்து, அவருக்குக் 'கலிமா'ச் சொல்லிக் கொடுத்து, அவருக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகுத் திருப்பெயராகிய 'முஹம்மது' என்பதனையும் சூட்டினார்கள். பின்னர் அங்கிருந்த அறுவரை நோக்கி, ''இறந்தவரின் இடத்தில் இவரை நியமிக்குமாறு எனக்குப் பணிக்கப்பட்டுள்ளது'' என்று கூறினார்கள். ''நல்லது; நாங்கள் அதனை ஏற்றுக் கொண்டோம்'' என்று அவர்கள் அறுவரும் ஒருமித்துக் கூறினார்கள்.

''பின்னர் ஆண்டகை அவர்கள் அவ்விடத்தை விட்டும் புறப்பட, நானும் அவர்களின் பின்னே புறப்பட்டேன். நாங்கள் சில அடிகள் தாம் எடுத்து வைத்திருப்போம், பக்தாதின் நகர வாயிலை வந்தடைந்தோம். ஆண்டகை அவர்கள் அதனை நெருங்கியதும், அதன் கதவுகள் தாமாகவே திறந்து வழி விட்டன. அவ்வழியில் நானும் புகுந்தேன். அதன்பின் ஆண்டகை அவர்கள், மதரஸாவை நோக்கிச் சென்றார்கள். மதரஸாக்

கதவுகள் தாமாகவே திறக்க, ஆண்டகை அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். நானும் அவர்களின் பின்னே உள்ளே நுழைந்தேன். நான் நுழைந்ததும் கதவுகள் தாமாகவே இறுக மூடிக் கொண்டன. ஆண்டகை அவர்கள் தம் வணக்க அறைக்குள் நுழைந்தார்கள். நான் என் இடத்தில் போய் அமர்ந்தேன்.

''அன்றிரவு முழுவதும் எனக்கு உறக்கமே வரவில்லை. விடிந்ததும், பாடம் ஓதுவதற்காக ஆண்டகை அவர்கள் முன் நான் போய் அமர்ந்த பொழுது, சென்ற இரவு நடந்த நிகழ்ச்சியால் என் உள்ளம் அமைதி அற்றிருந்தது. அதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், 'மகனே! ஓது! உன் மீது யாதொரு குற்றமுமில்லை' என்று கூறினார்கள். அவர்களின் இச்சொல் எனக்குச் சற்றுத் துணிவை ஏற்படுத்த, நான் ஆண்டகை அவர்களை நோக்கி, 'ஷைகு அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக, தாங்கள் சென்ற இரவு நடந்ததை எனக்கு விளக்கிக் கூற வேண்டும்' என்று சொன்னேன்.

''அது கேட்ட ஆண்டகை அவர்கள் புன்முறுவல் தம் முகத்திலே தவழ, 'மகனே! சென்ற இரவு நீ கண்ட ஊர் நிஹாவந்தாகும். அங்கிருந்த ஆறுபேரும் உரபாக்களாவர். ஏழாமவர் நோயுற்று இறப்புப் படுக்கையில் கிடந்தார். அவருடைய இறப்பு நெருங்கிய பொழுது நாம் அங்கு சென்றோம். அவர் இறந்ததும், அவரை நல்லடக்கம் செய்வதற்காகத் தம் தோளிலே சுமந்து சென்றவர் கிள்ரு (அலை) அவர்கள் ஆவர்.

''இதன்பின் உள்ளே நுழைந்தவர், கிஸ்தன் தீனியாவிலுள்ள ஒரு கிறிஸ்தவர். அவர் நல்லவர். நேர்மையாளர். அவரை இஸ்லாத்திலாக்கி, இறந்தவருக்குப் பகரமாக நியமித்து வருமாறு இறைவன் ஆணை யிட்டான். அவ்விதமே செய்து வந்தேன்' என்றுகூறிய ஆண்டகை அவர்கள், தாம் உயிரோடிருக்கும் வரை இதனை எவரிடமும் கூற வேண்டாமென்று எனக்குப் பணித்தார்கள்.''

ஹிஜ்ரி 525 - ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்கள் இறப்பெய்தி, பக்தாது மாநகரிலுள்ள ஸௌனீஸியா அடக்க விடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டனர். இதன்பின் ஒரு நாள் ஆண்டகை அவர்கள் அங்கு சென்று, தம் ஆசானின் அடக்கவிடத்தைத் தரிசித்தனர். தரிசித்த அவர்கள் வெய்யிலின் கொடுமையையும், பொருட் படுத்தாது, தமக்குப் பின்னே, எத்தனையோ பேர் தகிக்கும் வெய்யிலில் தமக்காகக் காத்து நிற்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பாராது நெடுநேரம் வரை, அங்கு நின்று துக்கம் தோய்ந்த முகத்துடன் இறைவனிடம் கையேந்தி இறைஞ்சிக் கொண்டிருந்தனர். அதன்பின் மகிழ்ச்சியுடன் கையைக் கீழே போட்டுத் திரும்பினர்.

இதனை இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்த அவர்களின் சீடர்கள் அவர்களை அணுகி, அதற்கான காரணத்தை வினவ, ''நான் ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்களைக் கிரீடாதிபதியாக வீற்றிருக்கக் கண்டேன். எனினும் அவர்களின் வலக்கரம் சூம்பி இருந்தது. அதற்கான காரணத்தை நான் அவர்களிடம் வினவிய பொழுது, ''உம்மை நான் அன்றொரு நாள் ரலாபா ஆற்றில் தள்ளினேனல்லவா, அதன் பலன் இது' என்று கூறித் தம் தவற்றினை மன்னித்துத் தமக்காக, இறைவனிடம் பரிந்துரைக்குமாறு வேண்டிக் கொண்டார்கள்.

''நானும் அவ்வாறே மன்னித்து இறைவனிடம் அவர்களுக்காகப் பரிந்துரைத்து இறைஞ்சினேன். நான் இறைஞ்சியதற்கு இங்கு அடங்கப் பெற்றுள்ள ஐயாயிரம் 'வலி'மார்களும், தங்களின் அடக்கவிடங் களிலிருந்து 'ஆமீன்' கூறினார்கள். ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்களின் தவற்றினை இறைவன் மன்னித்து அவர்களின் கை முன்பு போல் நலமாகி, அவர்கள் தம் கரங்கள் இரண்டினையும் என் கரங்களோடு சேர்த்து இணைத்து 'முஸாபஹா' செய்யும் வரை, நான் என் கையைக் கீழே போட வில்லை. தம் கை முன்பு போன்று ஆனது கண்டு, ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி கொண்டார்கள். நானும் மகிழ்ச்சியுற்றேன்'' என்று கூறினார்கள்.

இச்செய்தி நொடியில் பக்தாது முழுவதும் பரவியது. ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்களின் சீடர்கள் இதுகேட்டு அதிர்ச்சியும் சினமும் கொண்டனர். அவர்களோ, தம் ஷைகின் மீது அளவற்ற பக்தி கொண்ட வர்கள். ஆண்டகை அவர்களின் மதரஸாவின் பக்கல் அவர்கள் செல்ல நேரிடின், தங்களின் முகத்தைத் துணியால் மூடி மறைத்துக் கொண்டே செல்வர். காரணம் வினவப்படின், ''அவர்களின் பார்வை எங்களின் மீது படுவதாலோ, எங்களின் பார்வை அவர்களின் மீது படுவதாலோ, நாங்கள் எங்களின் ஷைகின் மீது கொண்டுள்ள உறுதி குலைந்துவிட ஏதுவாகுமோ என்று அஞ்சியே அவ்விதம் செய்கிறோம்'' என்று கூறுவர். தம் ஷைகின் மீது அவ்வளவு பக்தி கொண்ட அவர்கள், அதற்கான ஆதாரத்தை ஆண்டகை அவர்களிடம் கேட்க வேண்டுமென்று கூடிப் பேசிக் கொண்டு, ஆண்டகை அவர்களின் திருமுன் வந்தமர்ந்தனர். எனினும் அவர்களுக்கு அதுபற்றி வினவ நாவு எழவில்லை.

இதனை உய்த்துணர்ந்து கொண்ட ஆண்டகை அவர்கள், வந்திருந்த வர்களை நோக்கி, ''நீங்கள் ஒருங்கு திரண்டு வந்த காரணத்தை நான் அறிவேன். உங்களில் இருவரைத் தேர்ந்தெடுங்கள்! அவர்களின் வாயி லிருந்து உண்மையை வெளியாக்க இறைவன் போதுமானவன்'' என்று கூறினர். அவ்விதமே அவர்கள் 'கஷ்பும் கராமாத்'தும் உள்ள இருவர்

களான, ஷைகு யூசுபுல் ஹமதானி (ரஹ்) அவர்களின் பெயரையும், ஷைகு அப்துர் ரஹ்மான் இப்னு மஸ்வூதுல் குரதீ (ரஹ்) அவர்களின் பெயரையும் குறிப்பிட்டு, 'இவர்கள் வாயிலாக உண்மை வெளியாகச் செய்யுங்கள்! எதிர் வரும் வெள்ளிக்கிழமைக்குள் இதனைத் தாங்கள் செய்து முடிக்க நாங்கள் அவகாசம் தருகிறோம்'' என்று கூறினர்.

அது கேட்ட ஆண்டகை அவர்கள், ''அத்தனை நாட்கள் அவகாசம் எனக்குத் தேவை இல்லை. சற்று நேரம் நீங்கள் இங்கு அமர்ந்திருங்கள்! நான் கூறியதன் உண்மை, நீங்கள் குறிப்பிட்ட அவ்விருவர் மூலமாக வெளிப்படும்'' என்று கூறி விட்டுத் தலையைச் சற்று நேரம் கீழே குனிந்த வண்ணம் வீற்றிருந்தனர். ஏனையோரும் அவ்விதமே வீற்றிருந்தனர்.

இவ்வாறு அவர்கள் சிறிது நேரம் தான் வீற்றிருந்திருப்பார்கள். ஷைகு யூசுபுல் ஹமதானி (ரஹ்) அவர்கள், காலில் செருப்பின்றி ஆண்டகை அவர்களின் மதரஸாவுக்கு ஓடோடி வந்து ''சற்று நேரத்திற்கு முன் எனக்கு இறைவன் ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்களைக் காட்டி அருளினான். அவர்கள் என்னை நோக்கி, 'யூசுபே! நீர் விரைந்து சென்று, ஷைகு அப்துல்காதிர் கூறியது முழுக்க, முழுக்க உண்மை' என்று அங்குக் குழுமியிருப்பவர்களிடம் நான் கூறியதாக அறிவித்து விடும்!'' என்று சொன்னதாக, மூச்சுத் திணறக் கூறினார்கள். அவர்கள் கூறி வாய் மூடுமுன், ஷைகு அப்துர் ரஹ்மான் இப்னு மஸ்வூதில் குரதீ (ரஹ்) அவர்களும் அங்கு விரைந்தோடி வந்து, ஷைகு யூசுபுல் ஹமதானி கூறிய வண்ணமே ஓர் எழுத்தும் வித்தியாசமின்றி எடுத்துரைத்தார்கள். அப்பொழுது ஷைகு ஹம்மாது (ரஹ்) அவர்களின் சீடர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும், நடுங்குக்கும் அளவில்லை. அவர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து, ஆண்டகை அவர்களின் கரம் பிடித்து, தாங்கள் செய்த குற்றத்தை மன்னித்து, மறக்குமாறு வேண்டிக் கொண்டபின், தம் இல்லம் திரும்பினார்கள்.

வேறொரு நாள் வாதி உஸ்கான் என்னும் இடத்தில், ஆண்டகை அவர்கள் தம் சீடர்களுடன் நடந்து கொண்டிருக்கும் பொழுது, ஒரு கிறிஸ்தவப் பாதிரியாருக்கும், சில முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டனர். வாக்குவாதத்திற்கான காரணம், அண்ணல் நபி (ஸல்) அவர்களை விட, ஈஸா (அலை) அவர்கள் மேலானவர்கள் என்று அப்பாதிரியார் கூறியதேயாகும். தம் கூற்றை நிலை நாட்ட, பாதிரியார் உணர்ச்சி வசப்பட்டு பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவரை அணுகிய ஆண்டகை அவர்கள், ''பாதிரியாரே! தாங்கள் எந்த ஆதாரத்தின் மீது அவ்விதம் கூறுகிறீர்கள்?'' என்று வினவினர்.

அதற்குப் பாதிரியார், "ஈஸா இறந்தோரை உயிர்ப்பித்திருக்கிறார். தங்களின் நபி அவ்விதம் எவரையும் உயிர்ப்பித்ததாக இல்லையே" என்று கூறினார்.

"அவ்வளவுதானே, அதனை நானே - எங்களின் நபியைப் பின்பற்று பவர்களில் ஒருவனாகிய நானே செய்து காட்டுகிறேன்" என்றனர் ஆண்டகை.

"செய்து காட்டின், நான் அடுத்த கணமே தங்களின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். இல்லையெனில் தாங்கள் என்னுடைய மார்க் கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார் பாதிரியார் ஆவேசமாக.

அதன்பின் அனைவரும் கிறிஸ்தவர்களின் அடக்கவிடம் ஒன்றிற்குச் சென்றார்கள். அங்கு அடக்கப் பெறுவதற்காக ஏதாவது வெற்றுடல் வந்திருக்கிறதா என்று பார்த்தார் பாதிரியார். ஒன்றும் வந்திராததைக் கண்டதும், அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை.

அவருடைய 'ஏமாற்றத்தை, அவரின் முகக்குறியால் அறிந்து கொண்ட ஆண்டகை அவர்கள், "இன்று இறந்தவரையன்றி, என்று இறந்தவரையும் நான் எழுப்பிக் காட்டுகிறேன்" என்றனர்.

அப்பொழுது பாதிரியார், ஆங்கிருந்து ஓர் அடக்க விடத்தைச் சுட்டிக் காட்டி, "இது ஓர் இசைவாணரின் அடக்கவிடம். அவர் இறந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அவரை முடியுமானால் உயிர் பெற்றெழச் செய்யுங்கள்!" என்று கூறினார்.

"பாடிக் கொண்டே உயிர்த்தெழச் செய்யவா அல்லது சாதாரணமாக உயிர்த்தெழச் செய்யவா?" என்று வினவினர் ஆண்டகை.

"பாடிக் கொண்டே உயிர்த்தெழச் செய்யுங்கள்!" என்றார் பாதிரியார் மிடுக்காக.

உடனே ஆண்டகை அவர்கள் அந்த அடக்கவிடத்தை அணுகி, "கும் பி இத்னில்லாஹ்" என்று கூறினர். அடுத்த கணம், அப்பாடகன், தான் பல ஆண்டுகளாகப் புதையுண்டு கிடந்த அடக்கவிடத்திலிருந்து, பாடிக் கொண்டே எழுந்து நின்றான். அவனை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார் பாதிரியார். அவருக்குத் தம் கண்களையே நம்ப இயலவில்லை.

இப்பொழுது ஆண்டகை அவர்கள் பாதிரியாரை நோக்கி, "பாதிரி யாரே! பார்த்தது போதுமா? அவரைத் திருப்பி அனுப்பலாமா?" என்று வினவினர்.

''சரி'' என்றார் பாதிரியார் ஈனக் குரலில்.

உடனே ஆண்டகை அவர்கள், ''இத்கில் பி இத்னில்லாஹ்'' என்று கூறினர். அவர்கள் அவ்வாறு கூறி வாய் மூடு முன், அவன் புதை குழிக்குள் ஆழ்ந்து மறைந்து விட்டான். அவனுடைய புதைகுழி முன்புபோல் தோற்றம் வழங்கியது.

இந்தக் கண்காணாக் காட்சியைக் கண்ட பாதிரியார், ஓடோடி வந்து ஆண்டகை அவர்களின் இருகரங்களையும் பற்றி, ''தங்களின் நபியே மேலானவர்; தங்களின் மார்க்கமே மேலானது'' என்று கூறி 'கலிமா'ச் சொல்லி இஸ்லாத்தைத் தழுவினார். அவர் பிற்காலத்தில் இறை நேசச் செல்வராக ஆனார் என்றும் கூறப்படுகிறது.

இத்தகு மாண்பார்ந்த ஆண்டகை அவர்கள், ''என்னுடைய 'உம்மத்து' களிலுள்ள மார்க்க விற்பன்னர்கள், பனீ இஸ்ராயீல்களுடைய நபி போன் றிருப்பர்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கேற்ப, விளங்கிய முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் ஓரிரவு அயர்ந்து உறங்கும் பொழுது, கனவொன்று கண்டார்கள். அதில் அண்ணலெம் பெருமான் முஹம்மது (ஸல்) அவர்கள், தங்களின் தோழர்கள் புடைசூழ வீற்றிருக் கின்றார்கள். அப்பொழுது இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் தம் தாடியைக் கை சேதத்துடன் பிடித்தவண்ணம் அங்கு தோன்றி, ''நாயகமே! தங்களின் திருப்பெயரர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் அவர்களிடம், இந்த பலவீனமான ஷைகைக் காத்தருளுமாறு பணி யுங்கள்!'' என்று வேண்டி நின்றார்கள்.

அப்பொழுது அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், ஆண்டகை அவர்களைப் புன்முறுவல் தம் முகத்திலே தவழ நோக்கி, ''என் அன்பு மகனே! இந்த ஷைகின் வேணவாவை நிறைவு செய்வீர்!'' என்று அமுதவாய் விண்டு மறைந்தார்கள்.

திடுக்குற்று விழித்தெழுந்த ஆண்டகை அவர்கள், நிலைமையை ஒருவாறு உய்த்துணர்ந்து கொண்டார்கள். அச்சமயம் ஹன்பலி மத்ஹ பானது மிகவும் பலவீனமான நிலையில் இருந்தது. சொற்பப் பேர்களே அதனைப் பின்பற்றி வந்தார்கள். இந்நிலை தொடருமாயின் அது பூண்டற்று ஒழிந்து விடும்போல் இருந்தது. தாம் அரும்பாடுபட்டு உண்டாக்கிய மத்ஹபு, பின்பற்றுவார் எவருமின்றி நசித்துப் போவதை எண்ணியும் பார்க்க இயலாத இமாம் அவர்கள், பெரிதும் கை சேதத்துடன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உதவியை வேண்டி நின்று, தம்மிடம் பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள் என்பதை விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், அடுத்த கணமே தம் ஆடைகளை

அணிந்து கொண்டு கிளம்பி விட்டார்கள். எங்கே? ஹன்பலி மத்ஹபினர் தொழுது வந்த பள்ளிவாயலுக்கு. ஏன்? வைகறைத் தொழுகையைத் தொழுவதற்காக.

ஹன்பலி மத்ஹபினரின் பள்ளிவாயிலிலோ, இதுகாறும் இமாம் ஒருவரே பாங்கு சொல்லித் தொழுவது வழக்கமாக இருந்து வந்தது. ஆண்டகை அவர்கள், அந்தப் பள்ளிவாயிலுக்குத் தம் சீடர்கள் புடை சூழ வந்திருக்கும் செய்தி, அந்த 'மஹல்லா' முழுவதும் ஒரு நொடியில் பரவி மக்கள் விழுந்தடித்துக் கொண்டு பள்ளிவாயில் நோக்கி ஓடோடி வந்தார்கள். பள்ளிவாயில் மக்கள் வெள்ளத்தால் நிரம்பித் துளும்பியது. அன்று முதல் மக்கள் ஹன்பலி மத்ஹபில் கூட்டம் கூட்டமாகச் சேரத் தொடங்கிவிட்டார்கள். ஹன்பலி மத்ஹப் புத்துயிர் பெற்றது. மறுமலர்ச்சியுற்றது.

இதன்பின்ஒரு நாள் ஆண்டகை அவர்கள், தம் சீடர்கள் புடைசூழ இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிக்கச் சென்றபொழுது, இமாம் அவர்கள், தங்களின் அடக்கவிடத்திலிருந்து எழும்பி ஆண்டகை அவர்களை நன்றிப் பெருக்கால் ஆரத்தழுவி வாழ்த்தி மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தனர்.

பின்னர் ஒரு நாள் ஆண்டகை அவர்கள், உறக்கத்திற்கும், விழிப்பிற்கும் இடையில் இருக்கும் பொழுது, இமாமுல் அஃலம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, "ஷைகு அப்துல் காதிரே! நீர் என்னுடைய மத்ஹபைத் தேர்ந்தெடுக்காது, அஹ்மது இப்னு ஹன்பலின் மத்ஹபைத் தேர்ந்தெடுத்த காரணம் என்ன? உம்முடைய பாட்டனார் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்களிடம் நான் இரண்டாண்டுகள் கல்வி பயின்றனவல்லவா? அந்த இரண்டாண்டுகள், நான் அவர்களிடம் கல்வி கற்றிராவிடின் நான் இறந்தவனாவேன் என்று கூறவில்லையா?" என்று வினவினர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், "இமாம் அவர்களே! இமாம் அஹ்மது இப்னு ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றுவோர் சொற்பப் பேர்களாகவே இருந்தார்கள். இந்நிலை நீடிப்பின், அது இவ் உலகில் இல்லாது ஒழிந்து விடுமோ என்ற ஐயமும், அச்சமும் ஏற்பட்டன. மேலும் இமாம் அஹ்மது இப்னு ஹன்பலும் ஓர் ஏழை (மிஸ்கீன்) நானும்ஓர் ஏழை. என் பாட்டனார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், 'இறைவனே! என்னை ஏழையாகவே வாழவைத்து, ஏழைகளுடனே இறக்கச் செய்து, ஏழைகளுடனே எழுப்புவாயாக!' என்று இறைஞ்சியுள்ளார்கள். எனவே இந்த இரண்டு காரணங்களுக்காகவே நான் ஷாஃபி மத்ஹபிலிருந்து இமாம் அஹ்மது இப்னு ஹன்பலின் மத்ஹபுக்கு மாறினேனேயன்றி வேறில்லை" என்று கூறினர்.

இதன்பின் ஆண்டகை அவர்களுக்கு இறைவன் 'கௌதுல் அஃலம்' என்னும் சிறப்புப் பெயர் சூட்டிக் கௌரவித்தான். இது அவர்களின் ஏனைய தொண்ணூற்றொன்பது பெயர்களுக்கு மேல், மணிமகுடம் போல் கதிர்விட்டு ஒளிர்ந்தது.

ஹிஜ்ரி 559- ஆம் ஆண்டில் ஆண்டகை அவர்கள், தங்களின் தவச் சாலையில் அமர்ந்து அறபோதம் செய்துகொண்டிருக்கும் பொழுது, ''கதமீ ஹாதிஹி அலா றக்கபத்தின் குல்லி வலிய்யின் லில்லாஹி (என்னுடைய பாதங்கள் வலிமார்களின் தோள் மீது இருக்கும்) என் தோளின் மீது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாதங்கள் தரிபட்டுள்ளன'' என்று கூறினர். இவ்வாறு ஆண்டகை அவர்கள் கூறியதும், அவர்களின் முன்னால், 'குத்பு'க்கான கொடி ஏற்றப்படுவதையும், அவர்களின் தலைமீது 'கௌது'க்கான மகுடம் சூட்டப்படுவதையும், உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலுமிருந்த, இறைநேசச் செல்வர்களும், தங்களின் ஞானக் கண்ணால் கண்டு தலை தாழ்த்தினர்.

ஆண்டகை அவர்களின் திருமுன் வீற்றிருந்த ஷைகு அலீ இப்னு ஹீதிய்யி (ரஹ்) அவர்கள் இப்பிரகடனத்தைச் செவியுற்றதும், சரேலென எழுந்திருந்து ஆண்டகை அவர்களின் திருப்பாதங்களைத் தங்களின் தோள்மீது ஆக்கிக் கொண்டனர். இவ்வாறே ஆங்கு வீற்றிருந்த ஆன்றோர்களும், சான்றோர்களும், ஒருவர் பின் ஒருவராக வந்து அப்பொற் பாதங்களைத் தங்களின் தோள் மீது தாங்கிப் புளகாங்கித முற்றனர்.

ஆண்டகை அவர்களின் இப்பிரகடனத்தை பதாயிஹில் இருந்த வண்ணம், ஞானோதயத்தின் மூலம் அறிந்த, சுல்தானுல் ஆரிஃபீன் சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களும், தங்களின் தோள்களைத் தாழ்த்தி, ''கௌதுல் அஃலத்தின் திருப்பாதங்கள், இந்தச் சின்ன அஹ்மதின் தோள் மீதிலும் இருக்கும்'' என்று கூறினர்.

குராஸானிலுள்ள குகை ஒன்றில் தவம் செய்து கொண்டிருந்த காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும் இப்பிரகடனத்தைச் செவியுற்றதும், ''கௌதுல் அஃலத்தின் பாதங்கள் என் கண்களிலும் தலையிலும் ஆகுக!'' என்று கூறித் தலைதாழ்த்தினர்.

ஆனால், ஷைகு சன்ஹா என்பவர், தாம் ஐம்பது தடவை ஹஜ்ஜு செய்த செருக்கினாலும், தம்மைப் பின்பற்றுவோர் நானூறு பேர் இருக்கின்றனர் என்ற மமதையினாலும் ''எமக்கும் இறையருள் உண்டு. அவரின் பாதங்களைச் சுமக்க எனக்குத் தேவையில்லை'' ,என்று இறுமாப்புடன் கூறினார்.அதன் காரணமாக அவருக்கு அக்கணமே 'விலாயத்' பறிபோயிற்று.

இதன்பின் அவர் ரூம் நாட்டு அழகி தெரீஸாவை மூன்று இரவுகள் கனவில் கண்டு, அவளின் அழகில் மயங்கி ரூம் நாடு சென்று, அவள் அவரை மணந்துகொள்ள இட்ட நிபந்தனைப்படி கிறிஸ்தவ மதத்தைத் தழுவவும், மஹருக்கு பகரமாக அவளின் மாளிகையின் வெளிப்புறத்தில் படுத்துறங்கி அவளின் ஊழியர் ஊற்றிய கூழினை அருந்தி, அவளின் பன்றிக் கூட்டங்களை மேய்க்கவும் செய்தார். அவரின் சீடர்கள் அவரை எவ்வளவோ வருந்தி அழைத்தும் அவர் வரவில்லை.

இதன்பின் அவரின் சீடர் ஷைகு பரீது தம் குருவின் பிழை பொறுத்தருளுமாறு கடும் தவம் செய்ய, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''நாம் அவரின் பிழை பொறுத்தோம். என் பெயரரைக் கண்டு பொறுக்க வேண்டுக!'' என்று பணிந்து விட்டு மறைந்தனர்.

அவ்வாறே அவர் பக்தாது மாநகரம் சென்று, ஆண்டகை அவர்களைக் கண்டு, தாம் கண்ட கனவை விண்டார். அது கேட்ட ஆண்டகை அவர்கள் அவரின் குருநாதரின் பிழை பொறுத்து, அவருக்கு நாற்பது 'வலி'மார் களின் 'விலாயத்' தைப் பெருமனத்துடன் வழங்கினார்கள். அடுத்த கணமே ஷைகு சன்ஹா தம் மயக்கம் நீங்கப் பெற்றார். பின்னர் தம் சீடர்களுடன் பக்தாது மாநகரம் வந்து, ஆண்டகை அவர்களின் தாள்களைத் தம் தலை மீது சூடி, அவர்களின் ஆசி பெற்று நலமே இல்லம் ஏகினர்.

எவ்வாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நபிமார்களின் அரசராய் விளங்கினார்களோ, அதே போன்று வலிமார்களின் அரசராய் விளங்கிய ஆண்டகை அவர்களின் தவச்சாலைக்கு, எத்தனையோ வலிமார்கள் வந்து, அதன் வாசலைப் பெருக்கித் துப்புரவு செய்வதைத் தங்களின் அரும் பெரும் பேறாகக் கருதவும் செய்தார்கள். ஆண்டகை அவர்களின் அனுமதியின்றி, அவர்கள் ஆண்டகை அவர்களின் தவச்சாலைக்குள் நுழைவதுமில்லை. உள்ளே சென்றதும், ஆண்டகை அவர்களின் அனுமதி யின்றி அவர்களின் திருமுன் அமர்வதுமில்லை.

ஆண்டகை அவர்களின் மகாத்மியத்தைப் பற்றி ஒருவர் பண்ணிசைக்கும் பொழுது,

மன்னர் மன்னர் மொய்த்து நின்று
மாண்பார் முஹ்யித்தீன் வாயல்
தன்னில் தன்னுடை முடிதாழ்த்தும்
தகுதிபெற்றுத் துலங்கினரே

அன்ன வாயல் தனைக் கண்டோர்
அக்கணம் புரவி இழிந்தவர்கால்
தன்னால் நடந்து வர்ராரேல்
தலையே நடந்து வந்திடுமே

என்று பாடினார்.

இத்தகு மாண்புடன் சிறப்புற்று விளங்கிய ஆண்டகை அவர்கள், அழிந்து போகும் இவ் உலக வாழ்வை நீத்து அழியாப் பெருவாழ்வை எய்தும் வேளையும் நெருங்கி வந்தது. ஹிஜ்ரி 561 - ஆம் ஆண்டு ரபீயுல் ஆகிர், முதல் பிறை அன்று, அவர்களின் உடல் நலன் குன்றத் தொடங்கியது. தம் இறுதியின் துவக்கம் அது என்பதை விளங்கிக் கொண்ட அவர்கள், தம் அருமைத் தலைமகன் அப்துல் வஹ்ஹாபை அருகழைத்து, இறைவன் ஒருவனுக்கே அஞ்ச வேண்டும் என்றும், அவனிடமே எது ஒன்றையும் கேட்க வேண்டும் என்றும், அவனிடமே தேவைகள் அனைத்தையும் ஒப்படைத்துவிட வேண்டும் என்றும், அவன் ஒருவன், ஒருவன், ஒருவன் என்று எப்பொழுதும் முழங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினர்.

நாளாக, ஆக ஆண்டகை அவர்களின் உடல் நலிவுற்றுக் கொண்டிருந்தது. அவர்களைக் காண்பதற்காக 'வலி'மார்களும், பெரியோர்களும் வந்து குவிந்த வண்ணமிருந்தனர். அவர்கள் அமர்வதற்கு இடமளித்து, அவர்களுக்கு மரியாதை செய்யுமாறு தம் மக்களுக்கு ஆண்டகை அவர்கள் பணித்தனர்.

இறுதியாக அவர்கள் இவ்வுலகில் வாழும் கடைசி நாளும் வந்தது. அன்று ஆண்டகை அவர்கள் குளித்துவிட்டுத் தொழுதார்கள். பின்னர் நெடுநேரம் 'ஸஜ்தா'வில் கிடந்தவர்களாகத் தங்களுக்கும், தங்களின் குடும்பத்தினருக்கும், முஸ்லிம்கள் அனைவருக்கும் இறைவனிடம் மன்றாடினார்கள். இதன்பின் அவர்கள் தம் மக்களை நோக்கி, ''நான் இங்கு உங்களுடன் அமர்ந்திருப்பதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நானோ அமரர்களுடன் அமர்ந்திருக்கிறேன். அவர்கள் வசதியாக அமர்நதிருக்க, அவர்களுக்கு மரியாதை செய்து இடம் கொடுங்கள்! இறைவனின் பேரருள் இந்த அறை மீது இறங்கிக் கொண்டுள்ளது. அது வந்து இறங்குவதற்கும் தாராளமாக இடமளியுங்கள்!'' என்று கூறினார்கள். அதன்பின், அன்று முழுவதும் அரூபிகளுக்கு 'ஸலாம்' கூறிய வண்ணம் இருந்தார்கள். அப்பொழுது அவர்கள், ''இறைவனின் சாந்தியும், ஆசியும் உங்கள் மீது ஆகுக! இறைவன் உங்களுடையவும், என்னுடையவும் பாவங்களை மன்னித்தருள்வானாக! இறைவனின் திருப்பெயரைக் கூறி உள்ளே வாருங்கள்! திரும்பிப் போய் விடாதீர்கள்!'' என்று கூறினார்கள்.

அதன்பின் சற்று நேரம் கழித்து, ''நான் இறப்பின் வானவரான இஸ்ராயீலுக்கோ, வேறு எந்த வானவருக்கோ அஞ்சவில்லை. இறைவன் உங்களுக்கெல்லாம் அளித்த நற்பேறுகளை விட, அதிகமான நற்பேறு களை என் மீது சொரிந்துள்ளான்'' என்று கூறினார்கள்.

பொழுதுபட்டு உலகை இருள் கௌவிக் கொண்ட பொழுது, அவர்கள் பெரும் சப்தமிட்டுக் கொண்டு, தங்களின் கைகளைப் பல தடவை நீட்டவும் மடக்கவும் செய்தார்கள். அதன்பின் தம் மக்களான அப்துர் ரஸ்ஸாக்கையும், மூஸாவையும் நோக்கி, ''இறைவன் உங்கள் மீது பேரருளைச் சொரிந்தருள்வானாக! இறைவனைப் பயபக்தியுடன் நினைவு கூர்ந்து தொழுது வாருங்கள்! அவனுடைய அழகிய நற்பண்புகளை உங்களுடையதாக ஆக்கிக் கொள்ளுங்கள்!'' என்று கூறினார்கள். அதன்பின், ''இதோ வந்து விட்டேன்; இதோ வந்துவிட்டேன். என் மீது அதிகமான அன்பைச் சொரிவாயாக!'' என மொழிந்தார்கள்.

இதன்பின் நினைவிழந்து, மயக்க நிலையிலான அவர்கள், மயக்கம் தெளிந்ததும், தம் அருகிருந்தோரை நோக்கி, ''எனக்கும் உங்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமை, வானுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள வேற்றுமை போன்றதாகும். என்னை ஏனையோர் போன்று நீங்கள் எண்ணிக் கொள்ள வேண்டாம்!'' என்று கூறினார்கள்.

இப்பொழுது அவர்களின் புதல்வர் அப்துர்ரஸ்ஸாக், தந்தையை அணுகி, ''அப்பா! இப்பொழுது உடம்புக்கு எவ்வாறுள்ளது?'' என்று வினவினார். அதற்கு, அவர்கள், ''என்னிடம் யாதொன்றும் கேட்க வேண் டாம்! நான் இறை நினைவில் மூழ்கியுள்ளேன்''என பதிலிறுத்தார்கள்.

அமைதியிழந்த அவர், சற்று நேரம் கழித்து மீண்டும் அதே கேள்வியை அவர்களிடம் கேட்ட பொழுது, ''என்னுடைய வியாதியைப் பற்றி எவருக்குமே தெரியாது. அது என்ன வியாதி என்று, மனிதர்களோ, ஜின்களோ, வானவர்களோ நிர்ணயித்துக் கூற இயலாது. இறைவன், தான் விரும்பியதைச் செய்யவோ, மாற்றியமைக்கவோ வல்லவன். இறுதி முடிவைக் கூறுபவன் அவனே ஆவான். அவனுக்கு மேல் எவருமில்லை. மனிதர்களோ தான் செய்த செயலுக்கு அவனிடம் கணக்குக் கூற வேண்டும். ஆனால் அவனோ, எல்லாம் வல்லவன். நான் இப்பொழுது அவனின் நற்பண்புகளின் இரகசியத்தை அறிந்து கொண்டேன். அவை எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்கின்றன'' என்று கூறினார்கள்.

இப்பொழுது அவர்களின் புதல்வர் அப்துல் ஜப்பார் தந்தையை அணுகி, ''அப்பா! உடல் வேதனையாக உள்ளதோ?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள், ''ஆம், மகனே! உடல் முழுவதும் வேதனையாக உள்ளது - இதயத்தைத் தவிர, அது இறை நினைவில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறது'' என்று பதில் கூறினார்கள்.

தம் இறுதி நெருங்கிவிட்டதை உணர்ந்த ஆண்டகை அவர்கள், ''நான் இறைவனிடம் காவல் தேடுகிறேன். அவனுக்கு இணை, துணை எவருமில்லை. எல்லாப் புகழும் அவனுக்கே உரியவை. அவன் என்றும் நிலைத்திருப்பவன். அவனை இறப்பால் யாதொன்றும் செய்ய இயலாது. அவனுடைய மாண்பு உயர்ந்தது. அவன் வல்ல நாயன், தன் படைப்பு களுக்கு இறப்பை நல்கி, அவன் தன் வல்லமையைக் காட்டுகிறான்'' என்று கூறி, ''லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்'' என்ற திருக்கலிமாவை மொழிந்தார்கள். பிறகு 'தஅஸ்ஸஸா' (உயர்வும், மாண்பும் மிகுந்த அவன்) என்னும் சொல்லைச் சரியான முறையில் இருமுறை உச்சரிக்க முற்பட்டு, முடியாது போகவே, மூன்றாவது முறை முயன்று அதனைச் சரியாக உச்சரித்தார்கள். இறுதியாக மூன்று முறை, ''அல்லாஹ், அல்லாஹ், அல்லாஹ்'' என்று கூறிய வண்ணம் அவர்களின் உயிர், அவர்களின் உடலை விட்டும் பிரிந்து விண்ணகம் சென்றது. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 561 ஆம் ஆண்டு ரபீயுல் ஆகிர் பிறை 11 - ஆம் நாள் (கி.பி 1166 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் தேதி) திங்கட் கிழமையிலாகும். அப்பொழுது அவர்களுக்கு வயது தொண்ணூற்று ஒன்று.

ஆண்டகை அவர்களைப் பற்றி அப்துல்லாஹ் யாபியீ யமனி (ரஹ்) அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''நபித் தோழர்களுக்கு அடுத்தபடியாக, 'வலி' மார்கள் அனைவரிலும், அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களே தலை சிறந்து விளங்குகிறார்கள்'' என்று கூறினார்கள்.

இந்த மதிப்பீட்டுக்கு ஏற்ற வண்ணமே, ஆண்டகை அவர்களும் தம்மைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ''நபித்தோழர்களில் கடைசிப் படித்தரத்திலுள்ளவரின் குதிரையின் கால் தூசிக்குக் கூட நான் நிகராக மாட்டேன்'' என்று கூறியுள்ளார்கள்.

பிற்காலத்தில் தோன்றிய ஞான மேதை அப்துல் கரீம் ஜீலி (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்கு, ஒப்பாரும் மிக்காரும், வலிமார்களில் எவரும் இருந்ததில்லை; இனி இருக்கப் போவது மில்லை'' என்று கூறிச் சென்றனர்.

'ரோஸெ மீதாக்'கில் அனைத்துப் படைப்புகளும் இறைவனின் திருமுன் அணியணியாக நிற்கும் பொழுது, முதல் அணியில் நபி

மார்களும், ரசூல் மார்களும் நின்றனர். இரண்டாவது அணியில் 'வலி' மார்கள் நின்று கொண்டிருந்தனர். மூன்றாவது அணியில் ஏனையோரும் நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் ஆன்மா இரண்டாவது அணியிலிருந்து முதல் அணிக்குச் சென்றது. அதைக் கண்ட நபிமார்கள் அந்த ஆன்மாவைப் பிடித்து இரண்டாவது அணியில் விட்டு, ''இதுதான் உமக்குரிய இடம். இங்கே இரும்!'' என்று கூறினார்கள். எனினும் அந்த ஆன்மா, மீண்டும் முதல் அணிக்கு வரவே, மீண்டும் அவ்விதமே செய்தார்கள். இவ்வாறு மூன்று தடவை நிகழ்ந்தது. பின்னரும் அது வரவே, அதனைப் பிடித்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முன் நிறுத்தினார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அந்த ஆன்மாவை நோக்கி, ''மகனே! இதுவே இங்கு உமக்குரிய இடம். எனினும் மறுமையில் நீர் என்னுடன் 'மகாமன் மஹ்மூதா' வில் இருப்பீர்'' என்று அருள்மொழி பகர்ந்தார்கள். இவ்வாறு ஒரு வரலாறு கூறுகிறது.

மறுமையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் 'லிவாவுல் ஹம்து'க் கொடியின் கீழ், எல்லா நபிமார்களும் இடம் பெறுவார்கள் என்றும் , அப்பொழுது, அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் 'லிவாவுல் ஷுக்ரு'க் கொடியின் கீழ், எல்லா 'வலி' மார்களும் இடம் பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விண்ணேற்றத்தின் பொழுது, 'ஸித்ரத்துல் முன்தஹா' வரை வந்த ஜிப்ரீல் (அலை), அதற்கு மேல் அணுவளவு கூட வந்தால் தம் இறக்கைகள் கருகிச் சாம்பலாகிவிடும் என்று கூறித், தம் ஆற்றாமையைத் தெரியப்படுத்திய பொழுது, இறைவன் அண்ணல் நபி(ஸல்) அவர்களைச் சுமந்து வர, அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் ஆன்மாவையே அனுப்பினான் என்றும், அந்த ஆன்மாவின் மீது இவர்ந்து 'காப கௌஸைனி' வரை வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அந்த ஆன்மாவை நோக்கி ''மகனே! என் பாதம் உம் தோள் மீது. உம் பாதம் 'வலி' மார்களின் தோள் மீது'' என்று கூறினர் என்றும், அதன் காரணமாகவே அண்ணல் நபி(ஸல்) அவர்களின் பாத அடையாளம் தம் தோள் மீது பதியப் பெற்றவர்களாக, ஆண்டகை அவர்கள், அவனியில் தோன்றினார்கள் என்றும், அதன் காரணமாகவே'' என் பாதங்கள் வலிமார்களின் தோள் மீது இருக்கும்'' என்று பின்னர் ஆண்டகை அவர்கள் பிரகடனப்படுத்தினார்களென்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது.

2. சுல்தானுல் ஆரிஃபீன் சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்)

உம்முல் உபைதா என்றும், ஃபதாயிஹ் என்றும் பெயர் பெற்றிருந்த ஊரில், அஹ்மது என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் இறைவனை அன்றி வேறொன்றையும் நாடாது, இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக, அவரைச் சிலர் ஜாஹிது (நிராசையாளர்) என்னும் அடைமொழியிட்டும், அவரின் மாண்பினை உணர்ந்த சிலர், அவரை 'கன்ஸுல் ஆரிஃபீன்' (ஞானிகளின் கருவூலம்) என்னும் சிறப்புப் பெயராலும் அழைத்து வந்தார்கள்.

ஓரிரவு அவர் பள்ளியில் 'தஹஜ்ஜுத்' தொழுது இறைவனை வழுத்திக் கொண்டிருந்த பொழுது, அவரை ஒரு சிறு உறக்கம் ஆட் கொண்டது. அப்பொழுது அவர் கனவொன்று கண்டார். அதிலே, ஒரு கடைத் தெரு காட்சியளிக்கிறது. அங்கு இறைவனின் ரஹ்மத் (பேரருள்) என்ற பொருளேயன்றி, வேறொன்றும் விற்கப்படவில்லை. அதனைத் தாம் செய்த நன்மைகள், வணக்கங்கள் ஆகியவற்றைக் கூறி வாங்கு வதற்காக வலிமார்கள் முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்பொழுது வானளாவிய பேரொளி ஒன்று பளிச்சிட்டு, இலங்கு கிறது. அப்பொழுது அசரீரி ஒன்று, ''என்னுடைய அன்பிற்குரிய நேசர் களே! உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்!'' என்று முழங்குகிறது.

அப்பொழுது அங்கு நின்று கொண்டிருந்த அனைவரும் அப் பேரொளியில் மூழ்கி மயக்கமுற்ற நிலையில், நின்று கொண்டிருக் கின்றார்கள். எனவே யாது வேண்டுவது, எதனைக் கேட்பது என்பதை அறியாதவர்களாய் அவர்கள் மௌனம் சாதிக்கின்றார்கள். அப்பொழுது அக்கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஜாஹிது அஹ்மது, ''இறைவ! எம்பெருமா! இங்கு உன்னுடைய அருள் நேசர்கள் உன்னுடைய 'ரஹ்மத்' என்னும் பேரருளைப் பெறுவதற்காகக் குழுமி நிற்கிறார்கள். இவர்களில் உனக்கு மிக மிக உவப்பானவர் யார்?'' என்று வினவுகிறார். இவ்வாறு

அவர் வினவியதற்குக் காரணம், அக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மாபெரும் இறைநேசச் செல்வர்களான மஹ்பூபுல் அஃலம் அலீ இப்னு ஹைத்தீ (ரஹ்), தாஜுல் ஆரிஃபீன் அபுல் வபா (ரஹ்) ஆகிய இருவரில் ஒருவரை இறைவன் கூறுவான் என்று தம் மனத்தில் எண்ணிக் கொண்டது தான்.

அப்பொழுது மீண்டும் அசரீரி, ''எனக்கு மிக மிக உவப்பானவர் இதோ வருகின்றார். அவருக்கு வழி விட்டு நில்லுங்கள்!'' என்று முழங்குகிறது.

அப்பொழுது வானவர்கள் கட்டியம் கூறி முன்னே வர மரகதத் தாலான பல்லக்கு ஒன்று விண்ணகத்திலிருந்து மண்ணகம் இறங்கு கின்றது. அதிலே அழகே உருவெடுத்த ஆணழகர் ஒருவர் வீற்றிருக் கின்றார். அவரை வானவர்கள் சூழ்ந்து நின்று, தஸ்பீஹூம், தம்ஹீதும், தஸ்லீலும், தக்பீரும் முழக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் அங்கு குழுமி நிற்கும் வலிமார்களை நோக்கி, ''வலிமார்களே! வழி விடுங்கள். விலகி நில்லுங்கள்! மஹ்பூபுல்லாஹ் வருகின்றார், மஃஷூக்குல்லாஹ் வருகின்றார்'' என்று கூறுகிறார்கள்.

அந்தப் பல்லக்கு பூமியை நெருங்கியதும், வலிமார்கள் அப்பல்லக்கை அணுகி, அதில் வீற்றிருந்த இளவழகருக்கு, ''அஸ்ஸலாமு அலைக்கும் யா மஹ்பூபுல்லாஹ்'' என்று ஸலாம் கூறுகின்றனர். அதற்கு அவர், ''வ அலைக்குமுஸ் ஸலாம் யா அவ்லியா அல்லாஹ்'' என்று மட்டும் கூறுகிறார். வேறு யாதொரு வார்த்தையும் பேசவில்லை. பல்லக்கு பறந்து வெகு தொலை சென்று விடுகின்றது.

இது கண்டு அங்கு குழுமி நின்ற வலிமார்களுக்கு ஏற்பட்ட ஏமாற் றத்திற்கு அளவில்லை. அவர் மீது அவர்களுக்கு ஒருவிதப் பொறாமையும் குரோதமும் ஏற்படுகிறது.

அப்பொழுது அசரீரி, ''என்னுடைய நேசர்களே! நீங்கள் அவர் மீது வீணே பொறாமையும், குரோதமும் கொள்ளாதீர்கள்! அவர் எனக்கு மிக மிக உவப்பானவர். அவர் என்னுடைய இரகசியங்களில் ஓர் இரகசியம்'' என்று கூறுகிறது. அப்பொழுது தான் வலிமார்கள் தம் தவற்றினை உணர்ந்து வருந்துகிறார்கள்.

இச்சமயத்தில் ஜாஹிது அஹ்மது இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! அந்தப் பசுங்கல் பல்லக்கில் வந்த அழகண்ணலின் திருப் பெயர் என்ன?'' என்று வினவுகிறார். ''அஹ்மதுல் கபீர்'' என்று விடை வருகிறது.

''இறைவ எம்பெரும! அவர் இவ்வுலகில் எங்கு வாழ்கிறார்? என்று கூறின், நான் அவரைச் சென்று காண ஏதுவாயிருக்கும்'' என்று வினயமாக வேண்டுகிறார்.

அப்பொழுது மீண்டும் அசரீரி முழுங்குகிறது, ''அவர் இப்பொழுது இருக்கும் இடம் அவரின் தந்தையின் முதுகந்தண்டு'' என்று.

''அப்படியா! அவரின் தந்தையார் பெயர் என்ன?'' என்று மீண்டும் வினவுகிறார் அவர்.

அதற்கு இறைவன், ''அஹ்மதே! அவரின் தந்தையின் பெயர் அபுல்ஹஸன் அலீ என்பதாகும். அவர் என் அருள் நேசர்களில் ஒருவர். அவர் யஹ்யா என்பவரின் புதல்வர். அவர் இப்பொழுது அரஃபாத் மலையில், என்மீது அளப்பரும் காதலுற்றுத் தம்மை மறந்த நிலையில் நின்று கொண்டிருக்கிறார். நீர் அவரிடம் சென்று, நீர் கண்ட காட்சியைக் கூறுவீராக!'' என்று பணிக்கிறான். இத்துடன் கனவு முடிகிறது.வைகறைத் தொழுகைக்கான அழைப்பு ஒலியும், அவருடைய செவியில் விழுகிறது.

திடுக்குற்று விழித்தெழுந்த ஜாஹிது அஹ்மதுக்கு ஏற்பட்ட வியப் பிற்கு அளவில்லை. உடனே தண்ணீர்த் தேக்கத்திற்குச் சென்று, 'உளூ'ச் செய்து வைகறைத் தொழுகையை ஏனையோருடன் தொழுதார். பின்னர் பொழுது புலரும் வரை இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, ஏத்தி இறைஞ்சி விட்டுப் பள்ளியை விட்டு வெளியே கால் எடுத்து வைத்தார். எங்கே? வீட்டுக்கா? இல்லை; இல்லை. அரஃபாத்திற்கு. வாகனத்திலா? இல்லை; இல்லை. கால் நடையாக. இறைபணியை நிறைவேற்றுவதற்கு மேலாக மறுபணி அவருக்கு இனிமேல் ஏது?

பல நாட்கள் நடந்து இறுதியாக அரஃபாத் வந்து சேர்ந்தார் அவர். அங்குள்ள 'ஜபலெ ரஹ்மத்' என்னும் மலை மீது ஒருவர் தம்மை மறந்த நிலையில், 'கிப்லா'வை நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும், அவர் தாம், இறைவன் குறிப்பிட்ட அபுல் ஹஸன் அலீயாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் அவரின் உள்ளத்தில் மிகைத்தது. விறுவிறுவென்று அவரை நோக்கிச் சென்ற அவர், அவரின் முன் தாழ்மையுடன் நின்று, ''அஸ்ஸலாமு அலைக்கும் யா அபுல் ஹஸன் அலீ'' என்று கூறினார். அதுகேட்டுத் தன்னுணர்வு பெற்ற அவர், ''வ அலைக்கு முஸ்ஸலாம் யா ஜாஹிது அஹ்மது'' என்று பதில் கூறினார்.

இதன்பின் ஜாஹிது அஹ்மது, அவரின் பின்புறம் வந்து, ''அஸ் ஸலாமு அலைக்கும், யாசையிது அஹ்மதுல் கபீர்'' என்று ஸலாம் கூறினார். அடுத்த கணம் அவருடைய முதுகந்தண்டிலிருந்து, ''வ அலைக்கு முஸ்ஸலாம் யா ஜாஹிது அஹ்மது. உம்மையும், உம்முடன்

அந்த 'ரஹ்மத்' விற்கப்படும் கடைவீதியில் நின்ற வலிமார்களையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!'' என்று தேனினும் இனிய குரலில் பதில் வந்தது. அதுகேட்டு ஜாஹிது அஹ்மதின் உள்ளம் பரவசமுற்றது.

பின்னர் ஜாஹிது அஹ்மது தாம் கண்ட காட்சியை விரிவாக அபுல் ஹஸன் அலீயிடம் எடுத்துரைத்தார். அதனைக் கேட்டு அபுல் ஹஸன் அலீயின் அகமும் முகமும் மலர்ந்தன.

இதன்பின் ஃபதாயிஹ் நகரில் வாழ்ந்து வந்த ஷைகு மன்சூர் என்னும் பெரியார் கனவொன்று கண்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தம் அருமைத் தோழர் புடைசூழ மதீனாவின் பள்ளிவாயிலிலே வீற்றிருக் கின்றார்கள். அப்பொழுது அவர்களின் அருகே அழகும், அருளும் ஒருங்கு சேர்ந்து உருவெடுத்தாற் போன்ற இளவல் ஒருவர், பணிவுடன் நின்று கொண்டிருக்கிறார். அவரின் கார் நிகர்த்த கரு முடியை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தரு நிகர்த்த செங்கரம் மெல்லத் தடவி விடு கின்றது. அதன்பின் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் தம் அண்மையில் வீற்றிருந்த ஒருவரை நோக்கி, ''மன்சூரே! இவர் என் அருமைத் திருப்பேரர். நான் எவ்வாறு நபிமார்களில் மாண்பு பெற்று விளங்குகின்றேனோ, அதே போன்று இவர் வலிமார்களில் மாண்பு பெற்று விளங்குவார். இவரால் என்னுடைய ஷரீஅத்தும், தரீக்கத்தும் சோபித்துத் துலங்கும். இவர் என்னுடைய பெருமைக்கோர் அணியாகவும், என்னுடைய இரகசியத்தின் இரகசியமாகவும் விளங்குவார். இவரை எவர் நேசிக்கின்றாரோ, அவரை நானும் நேசித்து மறுமையில் அவருக்காக இறைவனிடம் மன்றாடுவேன். இவரைப் பகைத்தோரை நானும் பகைப்பேன். இவர் இன்றிலிருந்து நாற்பதாவது நாள் என் வழித்தோன்றல் அபுல் ஹஸன் அலீயின் அன்புத் திருமகனாய், இந்த அவனியில் தோன்றுவார். இவரின் திருப்பெயர் அஹ்மதுல் கபீர் என்பதாகும். இவர் வளர்ந்ததும், இவரை ஷைகு அலிய்யுல் காரியுல் வாஸித்தீயிடம் ஆன்மீகக் கல்வி பயில விடுங்கள்! அவர் இறைவனிடம் நன்மதிப்புப் பெற்றவர்'' என்று திருவாய் மலர்ந்தனர்.

அதுகேட்ட ஷைகு மன்சூர், ''அல் அம்று அம்றுகும் யா ரசூலல் லாஹ்'' - (''நாயகமே! இது தாங்களிட்ட பணியாக இருக்கும்) எவ்வாறு நான் மாறு செய்வேன்?'' என்று பதற்றத்துடன் பதிலிறுத்தார். இத்துடன் கனவு கலைந்தது.

திடுக்குற்று விழித்தெழுந்த ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களுக்குத் தாம் கண்டது கனவா, நனவா என்று விளங்கவில்லை. அடுத்தகணம், ''ஆம்; அது கனவுதான். உண்மைக் கனவு தான்'' என்று தமக்கே தாம் கூறிக் கொண்டார்கள் அவர்கள். அப்பொழுது அவர்களுக்கு அளவற்ற

வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன. தமக்கு ஒரு மருகர் பிறக்கப் போகிறார். அவர் வலிமார்களின் அரசராய் விளங்கப் போகிறார் என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்திலே இன்பத் தேனை வார்த்தது. அவர்களுடைய கால்கள் அவர்களைத் தம் சகோதரி உம்முல் பரக்காத் பாத்திமாவின் இல்லம் நோக்கி இழுத்துச் சென்றன. தாம் கண்ட கனவைத் தம் சகோதரியிடமும் அவரின் அன்புக் கணவரிடமும் எடுத்துரைத்தார்கள் அவர்கள். அதைக்கேட்ட, அவ்விருவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தனர்.

இதன்பின் அவ் இன்ப வெள்ளத்தில் உருண்டோடிய வண்ணம், முப்பத்தொன்பது நாட்களும் கழிந்தன. அவற்றிற்குச் சிகரம் வைத்தாற் போன்று, நாற்பதாவது நாளும் தன் பொன்னிறக் கதிர்களைப் பரத்திய வண்ணம் புலர்ந்தது. அது ஹிஜ்ரி 512 ஆவது ஆண்டு, ரஜப் திங்கள் 27 ஆம் நாள். தந்தை வழியில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பதினெட்டாவது தலைமுறையில், அவர்களின் அருமைத் திருப்பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் குலக் கொழுந்தாக, தாய் வழியில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை முதன் முதலாக யத்ரிப்பில், தம் விருந்தினராக ஏற்று உபசரிக்கும் நற்பேறு பெற்ற அபூ ஐயூப் அன்ஸாரி (ரலி) அவர்களின் கொடி வழி பூத்த நறுமலராக, அன்றையத் தினம்,

வானவர் மகளிர் மலர்சொரிந் தேத்தி
வாழ்த்திய மாநிலத் தவரில்
தீனவர் களிப்ப ஏனையர் துதிப்ப
திகழொளி நறையொடும் பொலிய
கானமர் விலங்கும் அஞ்சிறைப் பறவை
கணங்களும் சோபனம் இயம்ப
வானவர் மகிமை பெருகு சுல்தானுல்
ஆரிபீன் பிறந்தன ரன்றே.★

சுல்தானுல் ஆரிஃபீன் சையிது அஹ்மதுல் கபீர் ரிபாயீ (ரஹ்) அவர்களின் மூதாதையர் ஹிஜ்ரி நான்காவது நூற்றாண்டு வரை, மானிலத்தின் மார்பிடமான மக்கமாக நகரிலே தான் வாழ்ந்து வந்தார்கள். மக்கமா நகரின் மீது படையெடுத்து, சொல்லொணா அட்டகாசங்கள் செய்து, இறை இல்லமாம் கஃபாவின் தென் கிழக்கு மூலையில் பதிக்கப் பெற்றிருந்த ஹஜருல் அஸ்வத் என்னும் விண்ணகத்துக் கருநிறக் கல்லைத் தம் தலைநகருக்குக் கொண்டு சென்ற கர்மீதிகளின் படையெடுப்பின்

★ இது குலாம் காதிறு நாவலர் இயற்றிய 'ஆரிபு நாயகப் புராணத்தி'லுள்ள ஒரு செய்யுள்.

போதுதான் இவர்களின் மூதாதை சையிது ஹஸன் ரிஃபாயீ அவர்கள், தம் குடும்பத்தினருடன் உந்துலூஸ் நோக்கிக் கிளம்பினர். அங்கு சென்று குடியேறிய அப்பெருந்தகையின் மாண்பினையும், மகத்துவத்தையும் உணர்ந்த மன்னர் முதல் மக்கள் ஈறாக, அனைவரும் அவர்களுக்குப் பெருமதிப்புச் செய்து கௌரவித்தார்கள்.

இதன்பின் அவர்களின் குலத்துதித்த சையிது யஹ்யா ரிஃபாயீ என்னும் பெரியார், இறைநேசச் செல்வராய் விளங்கினர். அவர்கள் ஹிஜ்ரி 409 ஆம் ஆண்டில் உந்துலூஸ் விட்டு நீங்கி, பஸராவில் வந்து குடியேறினர். சிறிது காலத்திற்குப் பின், அங்கு வாழ்ந்து வந்த இறைநேசச் செல்வர் ஹஸனுல் நஜ்ஜாரி அவர்களின் அன்புத் திருமகள், கற்பெலாம் திரண்ட காரிகை அஸீலத்துல் ஹஸீபா என்னும் ஆரணங்கை மண முடித்து, இல்லறத்தை நல்லறமாகச் செய்து வந்தனர். அவர்களின் அருமைத் திருமகனாக அபுல் ஹஸன் அலீ என்னும் பெரியார் தோன்றினர்.

அபுல் ஹஸன் அலீ இளம் பிராயத்தினராய் இருக்கும் பொழுது, அவர்களின் தந்தையார் சையிது யஹ்யா ரிஃபாயீ பஸரா விட்டு நீங்கி, இராக் நாட்டிலுள்ள ஃபதாயிஹ் என்னும் திருநகர் புகுந்து, அறவாழ்வு வாழ்ந்து வந்தனர். ஆண்டுகள் கடக்கக் கடக்க, அபுல் ஹஸன் அலீ அறிவும், ஆற்றலும், வணக்கமும், பொறையும் ஒருங்கே திரண்டு, இறை ஞானத்தில் மூழ்கிய ஏந்தலாய் விளங்கினர்.

அச்சமயத்தில் ஆங்கு தம்மைப் போன்று ஆத்மீகத் துறையில் சிறந்து விளங்கிய ஆன்றோர், ஷைகு அபூ ஸயீத் யஹ்யா (ரஹ்) அவர்களின் அன்புத் திருமகள் உம்முல் பரக்காத் பாத்திமாவின்* மாண்பாரும் குணநலன்களையும், அவரின் வணக்க, வழிபாடுகளையும், அவரின் முகத்தில் ஒளிர்ந்த அருட்களைக் கதிரைப் பற்றியும் கேள்வியுற்று, அவரே தம் மகனுக்கேற்ற துணைவி என முடிவு செய்து மணமுடித்து வைத்தனர்.

இளம் தம்பதிகளான, அபுல் ஹஸன் அலீயும், பாத்திமாவும் இல்லறச் சோலை புகுந்து, இனிதே வாழ்ந்து வரும் பொழுது, ஒரு நாள் அவர்களின் வாழ்விலே ஓர் ஊடல் ஏற்பட்டது. அதனைப் பொறாத பாத்திமா, தம் தந்தையிடம் வந்து முறையிட்டுச் சென்றார்.

★ அவரின் பெயர் ஆயிஷா என்றும் அவரின் தந்தையின் பெயர் அபூபக்ர் ரிஃபாயீ என்றும், அக்குலத்தின் மூலவரான ரஃபீ உத்தீன் என்பவரின் பெயரால், அக்குலத்தின் தோன்றல்கள் அனைவரும் ரிஃபாயீ என்று அழைக்கப்பட்டனர் என்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது.

ஷைகு அபூ ஸயீது யஹ்யா (ரஹ்) அவர்கள், தம் தவமடத்தில் மாணவர்கள் புடை சூழ வீற்றிருக்கும் பொழுது, ஆங்கு அவர்களின் அருமை மருகர் வந்து 'ஸலாம்' உரைத்து அமர்ந்தனர். மருகரின் ஸலாத்திற்கு பதில் கூடக்கூறாது, தம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர் மாதுலர். இது ஆங்கு வீற்றிருந்த அவர்களின் மாணவர்களுக்குப் பெருவியப்பை நல்கியது.

இதன்பின் சில நிமிடங்கள் தாம் கழிந்திருக்கும். ஷைகு அபூஸயீது யஹ்யா (ரஹ்) அவர்கள் எழுந்து, நின்று தங்களின் மருகரின் ஸலாத்திற்கு பதிலுரைத்து, அவருக்கு அளவற்ற மரியாதை செய்தனர். குருநாதரின் இச்செயல் அவர்களின் மாணவர்களுக்கு, முன்னைவிடப் பன்மடங்கு வியப்பை நல்கியது.

இதனை அவர்களின் முகக் குறியால் விளங்கிக் கொண்ட ஷைகு அவர்கள், தம் மாணவர்களை நோக்கி, ''தங்களின் வியப்பிற்கான காரணத்தை நான் உணர்வேன். இன்று காலை என் அருமைத் திருமகள் பாத்திமா என்னிடம் வந்து தம் கணவர் மீது குறை கூறிய பொழுது, என் மனம் பெரிதும் வருந்தியது. அது என் மருகர் மீது சினமாகவும் மாறியது. எனவே தான், அவர் கூறிய ஸலாத்திற்கு பதில் கூட உரைக்காது என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். எனினும் அடுத்த கணம் அவரின் முதுகந்தண்டில் தரிபட்டிருக்கும் விலை மதிக்கவொண்ணா முத்தை நினைத்ததும், என் சினமெல்லாம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது. அம்முத்திற்கு மரியாதை செய்யும் முகத்தான், நான் இப்பொழுது எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்தேன்'' என்று கூறினர்.

ஷைகு அவர்களின் இக்கூற்று மாணவர்களின் புருவங்களை மேலேறச் செய்து, ''என்ன அந்த முத்து? என்ன அந்த முத்து?'' என்று அவர்களைக் கேட்பது போல் கேள்விக் குறியாக அமைந்தது.

அப்பொழுது ஷைகு அவர்கள் தம்மாணவர்களை நோக்கி, ''அந்த நன்முத்தே, என்குலம் தழைக்க வரும் குணமுத்து, குவலயமே போற்றவரும் தவமுத்து, நலமெலாம் திரண்ட அருள்முத்து, அல்லாஹ்வின் ஆணிமுத்து அஹ்மதுல் கபீர்'' என்று அருள்வாய் மலர்ந்தனர். அது கேட்டு மாணவர்கள் வியப்பால் வாய் பிளந்தனர்.

அபுல் ஹஸன் அலீயின் முதுகந்தண்டிலிருந்த அந்த நன்முத்து, பின்னர் அபுல் பரக்காத் பாத்திமாவின் கருவறையில் புகுந்து விளைந்து, மனிதகுல மாமுத்தாக வெளிப்பட்ட பொழுது, அதனுடைய வலக்கரம் தொழும் பொழுது தக்பீர் கட்டியது போன்று, அதனின் நெஞ்சிலும், இடக்கரம் அதன் இன உறுப்பை மறைத்துக் கொண்டும் இருந்தன.

இச்செய்தி ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களின் செவிப்பட்டதும் பெரிதும் மகிழ்ந்த அவர்கள், அக்குழந்தையின் இடக்கரத்தை அதன் இன உறுப்பை விட்டும் நீக்குமாறும், அதன்பின் என்ன நிகழ்கிறது என்பதைத் தம்மிடம் வந்து கூறுமாறும் மருத்துவப் பெண்ணிடம் கூறினர்.

அவ்விதமே மருத்துவப்பெண் செய்ய, மீண்டும் அக்குழந்தையின் இடக்கரம் அதன் இன உறுப்பை மறைத்து நின்றது. இதனை மருத்துவப் பெண் வந்து ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களிடம் கூறியபொழுது, ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியில் மூழ்கி, ''அல்ஹம்து லில்லாஹில்லதீ அளுஹர ஃபீ பைத்தினா நூரல் ஹுதல் முஹம்மதிய்யி'' (முஹம்மது (ஸல்) அவர்களின் நேர்வழியாகிய பேரொளியை, நம் இல்லத்தில் பரிணமிக்கச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என்று நன்றியில் தோய்ந்த இறைதுதி பாடினர்.

பிறந்த மூன்று நாட்கள் வரை, அன்னையின் மார்பிலிருந்து சிறுவர் பால் அருந்தாததும், நான்காவது நாள் அன்னையின் வலது மார்பகத்தில் இருந்து மட்டும் பால் அருந்தியதும் இடது மார்பகத்தில் பால் அருந் தாததும், பின்னர் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களின் செவியில் எத்தி வைக்கப்பட்டதும், அவர்களின் மகிழ்ச்சி முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகியது. தம் மருகர் இறையருள் பெற்ற நல்லடியார் என்பதை எண்ணி எண்ணி அவர்களின் உள்ளம் மகிழ்வு பூத்து மலர்ந்தது.

சின்னஞ்சிறு வயதிலேயே சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ ஆண்டகை அவர்கள், தம் வயதொத்த சிறுவர்களை விட்டும் மாறுபட்ட வர்களாக விளங்கினர். அவர்கள், மற்றச் சிறுவர்களுடன் சேர்ந்து விளை யாடுவதில்லை. தம் வீட்டு வாசலில் ஏழை எளியவர்களின் குரல் கேட்டதும், தாம் உண்டு கொண்டிருந்த ரொட்டியை அவர்களிடம் கொடுத்து விடுவதும், வெற்றுடலுடன் எவரேனும் ஏழைச்சிறுவர் தம் இல்லம் வரக்கண்டால், உடனே தாம் அணிந்திருக்கும் சட்டையைக் கழற்றி அச்சிறுவருக்கு அணிவிப்பதும், நோயாளிகளுக்கு உணவளிப் பதும், பள்ளிவாயிலில் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைப்பதும், பெரியோர்களின் பேச்சுக்களை உற்றுக் கவனித்துக் கேட்பதும் அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்தது. இதற்கு மூலகாரணம், ஒரு நாள் அவர்கள் ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு, ஒரு குதிரைக் குட்டியை விரட்டிச் சென்ற பொழுது, 'அஹ்மதுல் கபீர்! நீர் இதற்காகப் படைக்கப்பட வில்லை' என்ற அசரீரியை அவர்கள் மும்முறை செவியுற்றதேயாகும்.

தங்களின் நான்காவது வயதிலேயே, அன்பு அன்னையையும், ஏழாவது வயதிலேயே அருமைத் தந்தையையும் இழந்த ஆண்டகை அவர்கள், தம் மாமா ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களின் அரவணைப்பில்

தம் இளமையைக் கழித்து வந்தனர். ஏழாவது வயதிலேயே திருக்குர் ஆன் முழுவதையும் மனனம் செய்து விட்ட தம் மருகரை, அந்தக் காலத்தில் பஸரா நகரில் சிறப்புற்று விளங்கிய அலீ இப்னுல் காரீ என்னும் பெரியாரிடம் ஒப்படைத்து, மார்க்கக் கல்வி பயிலுமாறு செய்தனர் மாதுலர். அவரிடமே,

வானவர் மகிழ்வு கற்ப
மண்ணவர் ஒழுக்கம் கற்பத்
தீனவர் ஒருமை கற்பத்
தெவ்வினர் அறிவு கற்பப்
போனவர் புனிதம் கற்பப்
பொலியுநர் தெளிவு கற்ப
வானவர் புகழ்கல் தானுல்
ஆரிஃபீன் கல்வி கற்றார்.

இவ்வாறு அலீ இப்னுல் காரீயிடம் பயின்று வரும் பொழுது, கல்வியில் முதன்மையாக விளங்கிய ஆண்டகை அவர்கள், தம் ஆசானுக்கு ஊழியம் செய்து, அவருடைய அன்பைப் பெறுவதிலும் முதன்மை பெற்று விளங்கினார்கள்.

ஒருநாள் ஆண்டகை அவர்கள் பள்ளியில் வீற்றிருக்கும் பொழுது, அவ்வழியே சென்ற ஒரு தர்வேஷ் கூட்டத்தினர், ஆண்டகை அவர்களின் அருள்தவழும் திருமுகத்தைக் கண்டதும், உள்ளுணர்வு ஏற்பட்டுப் பின்வருமாறு கூறலானார்கள். அவர்களில் ஒருவர், ''இறைவன் தூயவன். அவனின் பாக்கியம் பெற்ற மரம் முளையிட்டுவிட்டது'' என்று கூறினார். இரண்டாமவர், ''அது விரைவில் தளிர்த்து வளர்ந்து, கொப்பும் கிளையும் நீட்டிப் பரவும்'' என்று இயம்பினார். மூன்றாமவர் ''அதன் செழுநிழல் எங்கணும் நீண்டு பரவிக் குடை பிடிக்கும்'' என்று மொழிந்தார். நான்காமவர், ''அது பூத்துக் காய்த்துப் பழுத்துக் குலுங்கும்'' என்று பகர்ந்தார். ஐந்தாமவர், ''மனிதர் இதிலிருந்து வியத்தகு நிகழ்ச்சிகள் தோன்றுவதைச் செவியுற்று, இதனைத் தேடித் திரிந்து வந்துசேர்வர்'' என்று சொன்னார். ஆறாமவர், ''அண்மையில் இதனுடைய மாண்பும், மகத்து வமும் மிகவும் பிரபல்யமாகும்'' என்ற புகன்றார். ஏழாமவர், ''இதற்குப் பல வாயல்கள் ஏற்படும். இதற்குப் பல தோழர்கள் தோன்றுவார்கள்'' என்று உரைத்தார். அவர்கள் கூறியவை அனைத்தும் ஆண்டகை அவர்களின் செவியிலும் விழுந்தன.

அலீ இப்னு காரீயின் பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் பொழுது, ஒரு சம்பவம் நிகழ்ந்தது. செல்வர் ஒருவர் வீட்டில் நடந்த விருந் தொன்றிற்கு அலீ இப்னு காரீயும் அழைக்கப்பட்டிருந்தார். அலீ இப்னு

காரீ, தம் மனம் உவந்த மாணவர் சையிது அஹ்மதுல் கபீரையும் தம்முடன் அவ்விருந்திற்கு அழைத்துச் சென்றிருந்தார். அங்கு பல ஆன்றோர்களும், சான்றோர்களும் வந்திருந்தனர். விருந்து முடிந்ததும், இசையமிர்தம் வழங்கப் பெற்றது. பாவாணன் ஒருவன் சிறு பறை முழக்கிய வண்ணம், பேரின்பப் பாடல்களைப் பொழிந்து தள்ளினான். அதுகேட்டுச் சொக்கி மகிழ்ந்த அவ்வான்றோர்களும், சான்றோர்களும், தன்னுணர்வற்றுப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தனர். அப்பொழுது காலணிகள் கழற்றி வைக்கப்பட்டிருந்த இடத்தில் தம் ஆசானின் காலணிகளைக் கையில் வைத்துக் கொண்டு பணிவோடு வீற்றிருந்த இளவல் சையிது அஹ்மதுல் கபீர் (ரஹ்) அவர்கள், ஒரே பாய்ச்சலாக அப்பாவாணன் மீது பாய்ந்து, அவன் கையிலிருந்து சிறு பறையைப் பறித்து, அதிலுள்ள தோலைக் கழித்து, அதனைப் பூமியில் வீசி உடைத்தெறிந்தனர். உடனே பாட்டும் நின்றது. இசை அரங்கும் முடிவுற்றது.

இசை திடீரென நின்றதும், தன்னுணர்வு பெற்ற பெரியார்கள் பாவாணனை நோக்கி, ''என்ன காரணம்? என்ன காரணம்?'' என்று ஏக்கத்துடன் வினவினர். காரணத்தை அவன் கூறவே, ''இத்தகு சிறுவனை ஏன் இங்கு அழைத்து வந்தீர்?'' என்று அவர்கள் அனைவரும் அலீ இப்னு காரீயைக் கடிந்தனர். அப்பொழுது அவர், அவர்களை நோக்கி, ''என் மாணவர் நல்லாரில் நல்லார்.நலமெலாம் திரண்ட நம்பி. எனவே அவர் காரணமின்றி எதுவும் செய்யார். எனவே அவரிடமே அதற்கான காரணத்தைக் கேளுங்கள். அவர் பதில் கூறாவிடின் நான் கேட்கிறேன்'' என்றார் அமைதியாக.

அவர் அவ்வாறு கூறி வாய் மூடுமுன், அங்கு நின்று கொண்டிருந்த இளவல் அப்பெரியார்களை நோக்கி, ''நான் அந்தச் சிறு பறையை உடைத் தெறிந்த பொழுது, அவர் என்ன எண்ணிக் கொண்டிருந்தார் என்பதை அவரிடமே கேளுங்கள்!'' என்று அப்பாடகனைச் சுட்டிக் காட்டினர்.

அப்பொழுது ஒருவர் அவனை அவ்வாறே வினவ, அதற்கு அவன், ''நேற்றிரவு விருந்தொன்று நடைபெற்றது. அதிலே நான் பாடப் பாடச் சிலர் குடிவெறியில் ஆடத் தொடங்கி, இறுதியில் தன்னுணவற்றுக் கீழே விழுந்து புரண்டனர். அவர்களே போன்று தான் இவர்களும் குடித்துவிட்டுப் புரள்கின்றார்களோ என்று எண்ணினேன். அக்கணமே தான் இவர் என் மீது பாய்ந்து என் கையிலிருந்த சிறு பறையை உடைத்தெறிந்தார்'' என்று கூறினான்.

அப்பொழுது தான் அலீ இப்னு காரீயின் மாணவர் சிறியரல்லர், சீரியர் என்பதை அங்கிருந்த அனைவரும் உணர்ந்தனர். அடுத்த கணம் அவர்களின் கரமெடுத்துத் தங்களின் கண்களில் ஒற்றித் தங்களின் அன்பையும், மரியாதையையும், அவர்களுக்குத் தெரியப்படுத்தினர்.

இதன்பின் பல ஆசான்களை அணுகி ஆன்மீகக் கல்வி பயின்ற ஆண்டகை அவர்கள், அதற்குத் தகுந்த வண்ணம் செயலாற்றத் தொடங்கினார்கள்; தனித்திருந்து இறைத்தியானத்தில் மூழ்கித் திளைத்தார்கள். இவ்வாறு ஓராண்டு காலம் உருண்டோடியது.

பின்னர் ஆண்டகை அவர்கள் இறைநேசச் செல்வர்களை அணுகி, அவர்களுக்கு ஊழியம் செய்து, அவர்களின் அன்பையும், அறவுரைகளையும் பெற்றார்கள். இதைப் பற்றி அவர்கள் பிற்காலத்தில் குறிப்படும் பொழுது, இவ்வாறு செய்வது போற்றத் தகுந்த செயல் மட்டுமின்றி கடமையுமாகும் என்று கூறினார்கள்.

இறுதியாக ஆண்டகை அவர்களை, அவர்களின் மாமா ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள் வாஸித் என்னும் நகருக்கு அழைத்துச் சென்று, அங்கு சிறப்புற்று விளங்கிய ஆன்மீகச் செல்வர் ஷைகு அலிய்யுல் காரீயுல் வாஸித்தி (ரஹ்) அவர்களிடம் அறிமுகப்படுத்தி, ஆண்டகை அவர்கள் பிறப்பதற்கு முன் தாம் கண்ட கனவையும் விண்டனர். அதுகேட்டுப் பெரிதும் மகிழ்ந்த வாஸித்தி (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களைத் தம் சீடர் குழுவில் சேர்த்துக் கொண்டு, அவர்களுக்காக இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சினர். ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள் நீர் மல்கும் கண்களுடன், ''ஆமீன், ஆமீன் யா ரப்பில் ஆலமீன் பி ஹக்கி நபிய்யிக்கல் ஹரமைன்'' என்று ஆமீன் கூறினர்.

பல ஆண்டுகள் வாஸித்தி (ரஹ்) அவர்களிடம் காலடியில் அமர்ந்து, ஷரீஅத், தரீக்கத், ஹகீக்கத், மஃரிபத் ஆகிய கல்விகளையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்த ஆண்டகை அவர்களுக்கு, 'கிர்க்கா' அணிவித்து, 'அபுல் அலமைன்' என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்தனர் ஆசான்.

ஆசானின் ஆசியுடன் இல்லம் திரும்பிய தம் மருகரை அன்போடு வரவேற்று மகிழ்ந்தனர் மாதுலர் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள். ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களும் சாமான்யரல்லர். அவரும் இறைவனின் அருள்பெற்ற இறைநேசச் செல்வராவர். ரிஃபாயியா தரீக்காவின் மாபெரும் ஷைகாக விளங்கிய அவர்களுக்கு, வனவிலங்குகளும் அடிபணிந்து நடந்தன. வெளியூர் சென்று விட்டு இல்லம் திரும்பிய அவர்களின் அண்டை வீட்டினர் ஒருவரை, வனம் வாழ் புலி ஒன்று தாக்கி, அவரின் வலக்கரத்தில் கடித்து முறித்து விட்டது. இதனை அவர் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களிடம் வந்து முறையிட்ட பொழுது அவர்கள் அந்தப் புலியை அழைத்துக் கண்டித்ததோடு அப்பகுதியில் அது நடமாடக் கூடாதென்றும் கண்டிப்பான ஆணை பிறப்பித்தனர்.

பின்னர் கைமுறிபட்ட இடத்தில், 'யா ஹையு, யா கையூம் யா தல் ஜலாலி வல் இக்ராம்' என்று ஓதித் தம் உமிழ்நீரை எடுத்துத் தடவினர். அடுத்த கணம் அவர் நலன் பெற்றார்.

மற்றொரு சமயம் ஒருவர் அவர்களிடம் வந்து, ''இறை காதல் யாது?'' என்று வினவினார். அது கேட்டு உணர்ச்சி மீக்குற்ற அவர்கள், ''இறை காதல் என்னும் மதுவை நான் அருந்தின், அவனைத் தவிர உள்ள அனைத்தையும் முற்றிலும் மறந்து, அவனின் நினைவிலேயே மூழ்கி இலயித்திருப்பேன். வேறொன்றிலும் என் மனம் திரும்பாது'' என்று கூறிவிட்டுப் பின்வரும் கவிதையை உரத்த குரலெடுத்துப் பாடினர்.

''இன்னல் பிலாத வமா பிஹா மினஷ்ஷஜரி
லௌ பில் ஹவா அதஷத் லம் தர்வி பில்மத்ரி''.

இறை காதல் மிகுந்திடின் ஊர்களும், அவற்றிலுள்ளவைகளும் மரங்களும், மழை பெய்வதைக் கொண்டு வேட்கை தீரப் பெறாது.

''லௌதாக்கத்தில் அர்ளு ஹுப்பல்லாஹி லஷ்தக்லத்
அஷ்ஜாருஹா பில்ஹவா ஃபீஹா அனித்தமரி''

பூமியானது இறை காதல் மீக்குறின், அதன் மீது வளர்ந்துள்ள மரங்களெல்லாம் பழுத்துக் குலுங்காது. அக்காதலிலே இலயித்திருக்கும்.

''வஆத அக்ஸானுஹா ஃபர்தன் பிலாவரகின்
மின்ஹர்ரி நாறில்ஹவா தர்மீன பிஷ்ஷஹரி''

அந்த மரங்களின் கிளைகளெல்லாம், இலைகளின்றி வெறுமையாய் இருக்கும். காரணம், அந்தக் காதல் நெருப்பு அந்தக் கிளைகளைப் பற்றிப் பிடித்தெரியும்.

''லைஸல் ஹதீத வலா மும்மல் ஜிபாலி இதா
அக்வா அலல்ஹுப்பி லில்பாரி மினல் பஷரி''

உயரிய மலைகளும், இரும்பும், இறைக் காதலில் மனிதரை மிகைத்துவிடின், மலை, மலையாயும் இரா; இரும்பு, இரும்பாயும் இரா.

இவ்வாறு பாடிவிட்டு அங்கு ஓங்கி வளர்ந்து நின்று கொண்டிருந்த மரத்தின்மீது அவர்கள் தம் மூச்சை விட அது அடுத்தகனம் தீப்பற்றி எரிந்தது. கேள்வி கேட்டவர் திகைத்து நின்றார்.

இத்தகு மாண்பாளருக்கு ஏராளமான ஆன்மீக மாணவர்கள் இருந்தனர். அவர்களிடமெல்லாம் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள் தமக்குப் பின் தம் இடத்தில் அமர்பவர் தம் மருகர் தாம் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது அவர்களின் மருகர் அவர்களிடம் வந்து

தமக்கு தீட்சை (பைஅத்) நல்கி அருளுமாறு வேண்டிய பொழுது, அவர்களுக்கு ஓர் இனம் தெரியாத திடுக்கம் ஏற்பட்டது. ''மாமேருவுக்கு மணற்குவியல் தீட்சை நல்குவதா, என்ன? நான் தங்களுக்கு தீட்சை நல்க அருகதையற்றவனாயிற்றே'' என்று கூறினார்கள். எனினும் தம்மருகரின் வற்புறுத்தலின் மீது, அவர்களுக்குத் தீட்சை வழங்கினார்கள்.

சில நாட்கள் சென்ற பின் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள், தம் மருகரையே தம் கலீபாவாக நியமித்துவிட்டு, தாம் ஒதுங்கி இறைத் தியானத்தில் முழுக்க, முழுக்க ஈடுபட்டிருக்கப் போவதாகக் கூறிய பொழுது, அவர்களின் மனைவியார் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.தம் மகனே அப்பதவியைப் பெற வேண்டுமென்று அவர் அடம்பிடித்தார். இந்நிலையில் என்ன செய்வதென்று ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களுக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் அவர்கள் தம் மகனை அழைத்து, அவரிடம் ஒரு புறாவைக் கொடுத்து, அதனை எவரும் காணா இடத்திற்குக் கொண்டு சென்று அறுத்து வருமாறு பணித்தனர். அவ்வாறே மருகரிடமும் ஒரு புறாவைக் கொடுத்து அறுத்துவருமாறு கூறினர். சற்று நேரத்தில் அதனை அறுத்துக் கொண்டு திரும்பிய மகன், ''அப்பா! அதனை நான் எவரும் காணாத இடத்தில் அறுத்துக் கொண்டு வந்தேன்'' என்றார். ''நல்லது, மகனே! சென்று வா!'' என்று அவர்கள் தம் மகனை முகமலர அனுப்பி வைத்தனர்.

அதன்பின் மருகர் தம் கையிலிருந்த புறாவை அறுக்காது கொண்டு வந்ததைக் கண்ட மாதுலர், ''என்ன! புறாவை அறுத்துக் கொணரவில்லையா?'' என்று வினவியபொழுது, ''நானும், எவரும் காணாத இடத்தைத் தேடி அலைந்து திரிந்தேன். எனினும் நான், அத்தகு இடத்தைக் காணேன். எங்குப் பார்த்தாலும், இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பதையே கண்டேன்'' என்று கூறித் தம் ஆற்றாமையை மருகர் வெளிப்படுத்தினர்.

அடுத்த நாள் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள் தம் மகனை அழைத்து, அவரிடம் ஓர் அரிவாளைக் கொடுத்து, புல்அறுத்துக் கொண்டு வருமாறு பணிந்தார்கள். அவரும் அவ்விதமே செய்தார். ஆனால் சற்று நேரம் கழித்து, அதே அலுவலில் அவர்கள் தம் மருகரை அனுப்பி வைத்த பொழுது, வெறுங்கையுடன் அவர்கள் வந்து, ''நான் என் செய்வேன்? புல்லை அறுக்க நான் முனைந்த போதெல்லாம் அப்புல், 'படைப்புகளை அழகாகப் படைத்து, அவற்றைப் பரிபாலிக்கும் இறைவன் தூயவன்' என்று இறைவனின் துதிபாடுவதைச் செவியுற்றேன். எனவே அவ்வற்றை அறுக்காது திரும்பிவிட்டேன்'' என்று கூறினர்ர்கள்.

மூன்றாம் நாள் மீன் வேட்டைக்கு அவர்கள் தம் மகனையும், மருகரையும் தனித்தனியாக அனுப்பிய பொழுது, மகன் ஏராளமான மீன்களைப் பிடித்துக் கொண்டுவர, மருகரோ வெறுமனே திரும்பி வந்தார்கள். அதற்கான காரணம் வினவப்பட்ட பொழுது, ''நான் அவற்றைப் பிடிக்க முயலுந்தொறும், முயலுந்தொறும் 'அனைத்தையும் படைத்த ஆதிபரனே! உனக்கே எல்லாப்புகழும்' என்று அவை இறைவனைத் துதிப்பது என் செவியில் விழுந்தது. எனவே அவற்றைப் பிடிக்காது திரும்பிவிட்டேன்.'' என்று பதிலிறுத்தார்கள் அவர்கள்.

இதன்பின் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள் தம் மனைவியாரை அழைத்து, நடந்த அனைத்தையும் நவின்று, தம் இடத்தில் அமரத் தம் தனயனைவிடத் தம் மருகரே முழுக்க, முழுக்கத் தகுதியானவர் என்று கூற, அவர் மறுவார்த்தை பேசாது அதனை ஏற்றுக் கொண்டார். பின்னர் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களுக்குக் 'கிலாஃபத்' வழங்கி, இஸ்முல் அஃலத்தையும் இரகசியமாக எடுத்துரைத்துத் தம் இடத்தில் அவர்களை அமர்த்தி, மகிழ்வு பூத்தார்கள். அதே ஆண்டில் அவர்களின் ஆன்மா அமைதியுடன் இறைவனிடம் சென்றது.

இப்பொழுது ஆண்டகை அவர்களுக்கு இருபத்தேழு வயது ஆகியது. அவர்களுடைய எண்ணமெல்லாம் தனித்து இருந்து இறை வனைத் துதித்துக் கொண்டிருப்பதையே விரும்பியது.

இச்சமயத்தில் அவர்கள் இறைவனைப் பல தடவை கனவில் கண்டனர். ஒரு தடவை அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவ எம் பெரும! நான் எவ்வாறு உன்னை வந்தடைவது?'' என்று வினவினர். அதற்கு அவன், ''நீர் உம்மை ஒழித்துவிட்டு என்னிடம் வாரும்'' என்று விடையிறுத்தான்.

விடிந்தெழுந்ததும் அவர்களின் கால்கள் அவர்களை ஃபதாயிஹ்வின் அண்மையிலுள்ள காடொன்றிக்கு இழுத்துச் சென்றது. அங்குள்ள ஆற்றங்கரை ஒன்றில் அவர்கள் வீற்றிருந்து, ஊண், உறக்கமின்றி தவம் செய்தார்கள். முஹ்யித்தீன் ஆண்டகை வீற்றிருந்து தவம் செய்த அதே குகையில் வீற்றிருந்து தவம் செய்தார்கள். 'இஷா' (இரவு)த் தொழு கைக்குச் செய்த உளூவைக் கொண்டே, சுப்ஹு (வைகறை)த் தொழு கையும் தொழுதார்கள்.

பாரென விசும்பா மென்ன
  பகலென இரவா மென்ன
வேரென மரமா மென்ன
  விலங்கெனப் பறவை யென்னக்

காரென வேனி லென்னக்
கைப்பென இன்பா மென்ன
நீரென ஒன்றும் தோற்றா
நிலையினும் பன்னாள் நின்றார்.*

இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் கடும் தவம் செய்து புடம்போடப் பெற்ற பொன்னே போல் ஆன ஆண்டகை அவர்கள், பின்னர் தங்களின் முப்பத்தொன்பதாவது வயதில் ஃபதாயிஹ் மீண்டார்கள். மீண்ட அவர்கள் மிகவும் அடக்கத்துடன் ஒதுங்கி இருந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இவ்விதம் இரண்டாண்டுகள் கழித்தபின், இறை இல்லமாகிய கஃபாவைத் தரிசித்து, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான 'ஹஜ்'ஜுக் கடமையினை இனிதே நிறைவேற்றி வர அவர்களின் உள்ளம் நாடியது. அதற்கான காலம் அண்மியதும், அவர்கள் எவரிடமும் கூறாது மக்கமா நகர் புறப்பட்டு விட்டார்கள். வழியில் அவர்களைக் கண்ட ஷைகு யஃகூப் என்னும் சீரியர் ஆண்டகை அவர்களை நோக்கி, "ஆண்டகையீர்! தாங்கள் எங்கே செல்கின்றீர்கள்?" என்று வினவினர். "இறைவனளவில் என்னை அழித்துக் கொள்வதற்காக மக்கமா நகர் செல்கின்றேன்" என்று மறுமொழி பகர்ந்தார்கள் ஆண்டகை. தாமும் அவர்களுடன் வருவதாக அவர்கூற, முதலில் மறுத்த ஆண்டகை அவர்கள், மீண்டும் அவர் வேண்டவே, அதற்கு இணங்கினார்கள். இதன்பின் இருவரும் முன் பின்னாக நாற்பது அல்லது ஐம்பது எட்டுக்கள் தாம் எடுத்து வைத்திருப்பார்கள். அதற்குள் அவர்கள் மக்கமா நகர் வந்து சேர்ந்து விட்டார்கள். அது கண்டு ஷைகு யஃகூப் அவர்கள் அளவற்ற ஆச்சரியம் அடைந்தார்கள்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் ஷைகு யஃகூபை நோக்கி, "யஃகூபே! இவ்விதம் குறுக்கு வழியில் கஃபாவை அடைவதை நான் விரும்பவில்லை. எனவே நான் ஃபதாயிஹ் மீண்டு, முழுத் தொலைவையும் காலால் நடந்து வரவே விரும்புகின்றேன்" என்று கூறினார்கள்.

அதன்பின் கண்களில் நீர் துளும்ப அவர்கள், "இறைவ எம்பெரும! இவ்வித அற்புதம் என்னை மகிழ்விக்கவில்லை. அன்பிற்குரிய நண்பனுடன் இவ்விதம் நடந்து கொள்ளுதல் கூடாது" என்று கூறிய வண்ணம் அழுது புலம்பினார்கள். பின்னர் மக்கமா நகருக்குள் செல்லாது ஃபதாயிஹ்வுக்கே மீண்டு விட்டார்கள்.

★ இது 'ஆரிஃப் நாயகப் புராண'த்திலுள்ள ஒரு செய்யுள்.

இதன்பின் அவர்கள் தம் சீடர்களுடன் 'ஹஜ்'ஜுச் செய்வதற்காகக் கால்நடையாக மக்கா புறப்பட்டனர். வழியெங்கணும் அவர்கள் சிறுபறை (தாயிரா) முழக்கிக் கொண்டே சென்றனர். மக்காவிற்குள்ளும் அவர்கள் அவ்விதமே செல்ல அவர்களை அவ்விதம் செய்யா வண்ணம் மக்காவின் ஷரீஃப் தடுத்தார். சினம் மீக்குற்ற ஆண்டகை அவர்கள், தம் சிறு பறையை விண்ணை நோக்கி வீச, அது கஃபாவைச் சுற்றிச் சுற்றி வந்து பேரொலி எழுப்பி முழங்கியது. அது கண்டு அவர்களின் மாண்பினை உணர்ந்து அவர்களுக்குப் பெரிதும் மரியாதை செய்தார் ஷரீஃப். இதன்பின் ஹஜ்ஜுக் கிரியைகளை ஒழுங்கே நிறைவேற்றிவிட்டு, அவர்கள் தாயகம் திரும்பினர்.

பின்னர் தங்களின் பாட்டனார் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிக்க விரும்பிய அவர்கள், நடந்து மதீனமா நகர் வந்து, தங்களின் பாட்டனாரின் புனித மிகு அடக்கவிடத்தின் முன் கைகட்டி நின்று, ''அஸ்ஸலாமு அலைக்கும் யா ஜத்தீ'' (பாட்டனாரே) என்று அவர்களுக்கு ஸலாம் உரைத்தனர். அப்பொழுது, ''வஅலைக்கு முஸ்ஸலாம் யா வலதீ'' (மகனாரே) என்னும் பதில் அவ் அடக்கவிடத்திலிருந்து வெளி வந்ததும், அங்கிருந்தோர் அனைவருக்கும் தம் செவிகளையே தம்மால் நம்ப இயலவில்லை. ஆனால், அதைவிட மேலான மற்றொரு வியப்பு அதன்பின் தொடர இருக்கின்றது என்பதை அவர்களில் எவரும் அறிந்திருக்க முடியாது.

ஆண்டகை அவர்கள் பின்னர் மிகவும் மரியாதையுடன் இனிய குரலெடுத்து பின்வரும் கவியைப் பாடினர்.

''பிஹாலத்தில் புவுதி ரூஹி குந்து உர்ஸிலுஹா
துஹப்பிலுல் கப்ர மின்னீ வஹிய நாயிபத்தீ
பஹாதி ஹி ஹாலத்துல் அஸ்பாஹி கத் ஹலரத்
பம்துத் யமீனக கை துஹ்லா பிஹாஷபத்தீ.''

தொலைவில் நானே வாழ்ந்தக் கால்
    துய்ய நுந்தம் கப்ரதனை
பலமுறை முத்தமிட வெண்ணிப்
    பண்பாய் அனுப்பினன் என் ஆன்மா

ஈங்கு இன்று அவ்வான்மா
    என்றன் உடலை இழுத்துவந்து
பாங்காய் நுந்தம் திருமுன்னர்
    பணிவே மிகுந்து நின்றதுவே.

எனவே என்கண் மணியனையீர்!
எழிலார் தங்கள் வலக்கரத்தைக்
கனிவாய் நீட்டின் என் அதரம்
கணத்தில் முத்திக் கனம் பெறுமே.

இவ்வாறு ஆண்டகை அவர்கள் நெஞ்சுருகி, நைந்துருகிப் பாடி, நின்றபொழுது, திடீரென அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகுத் திருக்கரம் வெளிப்பட்டது. அதனைப் பக்திப் பெருக்கில் மூழ்கிய வண்ணம் ஆண்டகை அவர்கள் ஆசைதீர முத்தி முகர்ந்தனர். மறுகணம் அது மறைந்தது.

இத்திருக்காட்சியை, கோடி கோடியாய்க் கொண்டு போய்க்குவித்த போதினும், காணக்கிடைக்கா இந்த மாண்பாரும் காட்சியை, அங்கிருந் தோர் அனைவரும் தம் கண்களால் கண்டு களிகூர்ந்தனர்.★ ஆண்டகை அவர்களோ, கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தோட, "இறைவ எம் பெரும! எனக்கு உன் மீது நம்பிக்கையும், உள அமைதியையும் நிரப்பமாக வழங்கியருள்வாயாக! உன்னுடைய மகோன்னதத்தையும், உன்னுடைய அருட்பெரும் தூதர் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் மாண்பினையும், அறியும் அரிய பேற்றினை எனக்கு நல்கியருள் வாயாக!" என்று இறைஞ்சி நின்றனர்.

இதன்பின் மக்கா சென்று, அதன் அண்மையிலுள்ள அரஃபாத் மலை மீதேறி, அங்கு நாற்பது நாட்கள் ஊண், உறக்கமின்றி அல்லாஹ்வின் நினைவில் ஆண்டகை அவர்கள் மூழ்கித் திளைத்தனர். அப்பொழுது,

பெருகிக் கிடக்கும் ரஹ்மத்தாம்
பிரள யத்தில் எம்பெருமான்
உருகிக் கிடந்து தாமின்றி
ஒன்றாய் நிற்கும் முவ்வேளை
கருகிக் கிடந்த விடயங்கள்
கழன்ற வதனால் ஒருபெரியோன்
அருகிக் கிடந்த நகையோடும்
ஆங்கு தஜல்லி ஆயினனே.

மாற்றம் காட்டி ஜலாலோடு
ஜமாலும் காட்டி மறைவற்ற
தோற்றம் காட்டிக் கதிரிருளும்
சுடரும் காட்டிச் சுடர்கொண்ட

★ அப்பொழுது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் கூட அங்கு இருந்ததாக அபுல் ஹஸனா கூறுகிறார்.

வேற்றம் காட்டித் தனக்குரிய
வியலும் காட்டி அப்பெரியோன்
நாற்றம் காட்டி சுல்தானுல்
ஆரி ஃபீனென் றழைத்தனனால்

இவ்வாறு இறைவன் ஆண்டகை மீது அளவற்ற மகிழ்வுற்று , அவர்களை சுல்தானும் ஆரிஃபீன் என்னும் அழகுத் திருப்பெயரிட்டு அழைத்ததோடு அமையாது, மீண்டும் மகிழ்ச்சி மீக்குற்று அவர்களை கௌதுல் அஃலமே என்றும் அழைத்துக் கௌரவித்தான். அதன் பின் அவர்களை நோக்கி, ''நீர் என்னுடைய அன்பிற்குரிய நண்பர். நான் உம்மீது அன்பு செலுத்துகின்றேன். நீரும் என் மீது அளவற்ற அன்பு செலுத்துகின்றீர். உம்முடைய உள்ளத்தில் நானும் உள்ளேன். என்னுடைய உள்ளத்தில் நீரும் உள்ளீர். என் பேரருள் உம் மீது என்றென்றும் சார்ந்துள்ளது'' என்று அருண்மொழி பகர்ந்தான். அதன்பின் பல்வேறு அகமிய இரகசியங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினான்.

அடுத்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அன்புத் தோழர் புடை சூழ அங்குத் திருத்தோற்றம் வழங்கினர். அவர்களைக் கண்ணுற்றதும் ஆண்டகை அவர்களின் உள்ளமும், உடலும் பூரித்துப் புளகாங்கிதமடைந்தன. அவர்களின் திருமுன் சென்று, ''என்னரும் தந்தையீர்! அஸ்ஸலாமு அலைக்கும்'' என்று பணிவோடும் பாசத்தோடும் கூறி நின்றனர்.

''என்னரும் மைந்த! வ அலைக்குமுஸ்ஸலாம்'' என்று பதிலிறுத்த அண்ணல் நபி (ஸல்)அவர்கள், தம் அருமைப் பேரரை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து, புன்முறுவல் பூத்த வண்ணம், ''மகனே! நீர் இன்றிருந்து சுல்தானுல் ஆரிஃபீன் ஆனீர். மேலும் மஹ்பூபு ரப்பில் ஆலமீனும் ஆனீர். இனிமேல் நான் உம்மைப் பற்றி நபிமார்கள், வலிமார்கள், நல்லோர்கள், பெரியோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் ஆகிய அனைவர் முன்னிலும் வைத்துப் பெருமிதமுறுவேன்'' என்று திருவாய் மலர்ந்து, தம் செம்பவள இதழை அவர்களின் நெற்றியில் ஒற்றி முத்தமிட்டனர். அதன்பின் தம் செங்கமல வலக்கரத்தை அவர்களின் நெஞ்சில் வைத்து, ''இறைவனே! உன் அன்பையும், அகமிய அறியையும் இவருக்கு அதிகரிப்பாயாக!'' என்று இறைஞ்சினர். இறைஞ்சியபின் தம் தோழர்கள் புடைசூழ மதீனா திரும்பினார்.

ஆண்டகை அவர்களும் அரஃபாத் மலையிலிருந்து இறங்கி, வாஸித் நகர் நோக்கிச் செல்லும்பொழுது, மறைவான உலகத்து மாந்தர் (ரிஜாலுல் கைப்) அணியணியாக அவர்களின் திருமுன் வந்து நின்று, ''நீரே சுல்தானுல் ஆரிஃபீன்' என்று வாயார வாழ்த்தினார்கள். ''நீரே மஹ்பூபு ரப்பில் ஆலமீன்' என்று மனமாரப் போற்றினார்கள்.

பின்னர் ஆண்டகை அவர்கள், வாஸித்தை அடைந்த பொழுது, அங்கிருந்த வலிமார்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும் ஓடோடி வந்து அவர்களின் திருக்கரங்களை முத்தமிட்டு, ''சுல்தானுல் ஆரிஃபீனே! வருக, வருக!! மஹ்பூபு ரப்பில் ஆலமீனே!! வருக, வருக!! நுங்கள் வரவு நல்வரவாகுக!'' என்று வரவேற்புரை வழங்கினார்கள்.

சிலநாட்கள் வாஸித் மக்கள் சொரிந்த அன்பு மழையில் நனைந்து தொப்பலாடிய ஆண்டகை அவர்கள், பின்னர் அவர்களிடம் பிரியா விடை பெற்றுத் தங்களின் தாயகமான ஃபதாயிஹ்வை நோக்கி அடி பெயர்ந்தார்கள். அப்பொழுது,

காடும் மலையும் அகல்நதியும்
கணம்கொள் விலங்கும் புள்ளினமும்
மாடும் மரமும் சுல்தானுல்
ஆரி ஃபீனென் றழைத்தனவே.

ஃபதாயிஹ்வை அடைந்த அவர்களை ஆன்றோர்களும் சான்றோர் களும் எதிர்கொண்டு, ''சுல்தானுல் ஆரிஃபீனே! மஹ்பூபு ரப்பில் ஆலமீனே!!' என்று வாழ்த்தி வரவேற்று நின்றனர். அங்குள்ள அடக்க விடத்திற்கு (கப்ருஸ்தானுக்கு) அவர்கள் சென்ற பொழுதும், அங்கும் இந்த ஒலியே மண்ணறைகளிலிருந்து வெளிவந்தது.

ஒருநாள் அவர்கள் தம் இல்லத்தில் அமர்ந்து இறைவனைத் தியானித்துக் கொண்டிருக்கும் பொழுது, ''சுல்தானுல் ஆரிஃபீனே! நாம் உமக்களித்த பட்டமளிப்பு பற்றிய விவரங்களை மக்களுக்கு எடுத் துரையும்'' என்று இறைவனிடமிருந்து அவர்களுக்குத் திருச்செய்தி வந்தது. எனினும், அடக்கத்தின் திருவுருவான ஆண்டகை அவர்கள், அவ்விதம் செய்யாது வெறுமனே வீற்றிருந்தார்கள். மீண்டும் இறைவனி டமிருந்து அச்செய்தி வந்தது. மீண்டும் மௌனம். இவ்வாறு ஒரு தடவை யல்ல, இரு தடவையல்ல, எழுபது தடவைகள் இறைவனிடமிருந்து அச்செய்தி திரும்பத் திரும்ப வந்தபின் தான், ஆண்டகை அவர்கள் அதனை மக்களுக்கு எடுத்தோதினார்கள். அப்பொழுது மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கும், வியப்பிற்கும் அளவில்லை.

இதன்பின் மக்களுக்கு ஆன்மீக போதம் அருளுமாறு இறைவன் அவர்களைப் பணித்தான். அவ்வாறே அவர்கள் தம் மாமாவின் தவச் சாலையில் வீற்றிருந்து, மக்களுக்கு அறபோதம் வழங்கினர். அதனைக் கேட்டு, அதன்படி நடந்து, இம்மையிலும் மறுமையிலும் எழில் வாழ்வு எய்த விரும்பி, அத்தவச்சாலையை நோக்கிச் சாரிசாரியாக மக்கள் வந்து குழுமினர். குழுமி அவர்களின் ஆன்மீக அறிவுரைகளை மாந்தி,

அகக்கண் திறக்கப்பட்டனர். ஃபதாயிஹில் இருந்து அறபோதம் வழங்கியதோடு, மட்டுமல்லாது ஆண்டகை அவர்கள் பற்பல ஊர் களுக்கும் சென்று மக்களுக்கு ஆத்ம ஞானப் பயிற்சி வழங்கினர்.

அவர்கள் தம்மிடம் வந்து கையை நீட்டுபவர்களுக்கெல்லாம் தீட்சை நல்கிவிடுவதில்லை. எவரேனும் அவர்களிடம் தீட்சை பெறவிரும்பி வரின், அவரை அவர்கள் தம்முன் அமரச் செய்து அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்கள் தொண்ணூற்றொன்பதையும் ஓதுவர். ஓதி முடிந்ததும் அவரை நோக்கி, 'நான் ஓதிய அல்லாஹ்வின் திருப்பெயர்கள் தொண் ணூற்றொன்பதில் எந்தப் பெயரைக் கேட்டாவது உம்முடைய உள்ளம் துளும்பியதா?' என்று வினவுவர். ''ஆம்; இன்ன பெயரைச் செவியுற்றதும் என் உள்ளமும் உடலும் ஒருங்கு சேர்ந்து துளும்பின'' என்று அவர் கூறின், அதற்கேற்ப அவர்கள் அவருக்கு அருளுரை பகர்ந்து, தீட்சை நல்குவர். மாறாக, அவற்றில் ஒன்றேனும் தம் உள்ளத்தைத் துளும்பச் செய்யவில்லை என்று அவர் கூறின், மீண்டும் ஒரு முறை அவர்கள் அத் தொண்ணூற்றொன்பது திருப்பெயர்களையும் ஓதுவர். அதன்பின் முன்னர் கேட்ட அதே கேள்வியையே அவரிடம் கேட்பர். அவர் மீண்டும் இல்லை என்ற பதிலை அளிப்பின், மூன்றாவது முறை அவர்கள் அவற்றை ஓதுவர். மூன்றாவது முறையும் அதே பதில் அவருடைய வாயிலிருந்து வெளி வந்தால், அவர் ஆத்ம ஞானப் பயிற்சி பெற அருகதையற்றவர் என்பதை விளங்கிக் கொண்டு, ''நீர் இதற்காகப் படைக்கப் பெறவில்லை. உமக்கு நேர்வழிகாட்டுவது அல்லாஹ்வின் பால் இருக்கும்'' என்று கூறி அவரை அனுப்பி விடுவர்.

ஆண்டகை அவர்களிடம் பாமரர் முதல் பண்டிதர் வரை வந்து பைஅத் (தீட்சை) பெற்றுச் சென்றனர். ஒரு சமயம் பாமரர், ஒரு நூற்று இருபது பேர் அவர்களின் திருமுன் வந்து தங்களுக்கு ஆன்மீக வழியைக் காட்ட வேண்டுமென்று வேண்டி நின்றனர். சற்று நேரம் தலைகுனிந் திருந்த ஆண்டகை அவர்கள், தம் உடல் செந்நிறம் மாறி மஞ்சன் நிறமானதும், தம் தலையை உயர்த்தி அவர்களை ஏறிட்டுப் பார்த்தனர். அப்பொழுது அவர்களின் கண்ணிலிருந்து வெளிப்போந்த சுடர் அந்த ஒரு நூற்று இருபது பேர்களின் உள்ளங்களிலும் ஊடுருவிப் பாய்ந்து, அவற்றை ஆட்கொண்டது. அடுத்த கணம் அவர்கள் அனைவரும் அறிவுத் தெளிவு பெற்ற ஆன்மீக ஞானிகளாக மாறிவிட்டனர்.

இப்பொழுது ஆண்டகை அவர்களின் திருவாயிலிருந்து, ''இறந் தோரை உயிர்பெற்றெழவும், உயிர் வாழ்வோரை இறக்கவும் செய்ய வல்லவன் இறைவன் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இருள் நிறைந்த ககன வெளியில், ஒரு நூற்று இருபது விண்மீன்கள் இப்பொழுது ஒளி சிந்துகின்றன'' என்ற மகிழ்ச்சி மொழி வெளிவந்தது.

பின்னர் அங்கிருந்து தம் மருகர் ஒருவரை நோக்கி, ''இறைவன் எனக்கு ஒவ்வொரு நாளும் ஒரு நூற்று இருபது பாமரர்களை ஆன்மீக அறிஞர் களாக மாற்றியமைக்குமாறு அருட்கட்டளை பிறப்பித்துள்ளான். எனவே அத்தகு மனிதர்களை நீர் என்னிடம் ஒவ்வொரு நாளும் அழைத்து வாரும்!'' என்று அவர்கள் கூறினர்.

இதன்பின் ஆண்டகை அவர்களைத் தரிசிக்க வந்த ரூமின் அமீர் ரஜப் முஹம்மது என்பவர், ஆண்டகை அவர்களின் அருட் பார்வை பட்டதும் அகத்தெளிவு பெற்று அவர்களின் காலடிகளில் வீற்றிருப்பதினும் அரசபாரம் பெரிதல்லவெனக் கருதித் தம் முடி துறந்து, ஆண்டகை அவர்களின் சீடர்களில் ஒருவராகி விட்டார். பின்னர் ஷாமுடைய அமீர் ஷைகு இஸ்மாயீலும், இராக்குடைய அமீர் ஷைகு ஹாரூனும் முடி துறந்து ஆண்டகை அவர்களின் ஆன்மீக மாணவராயினர்.

இப்பொழுது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஹீத் நகரில் பாவச் செயல் களில் உழன்று கொண்டிருந்த ஓர் இளவல், தம் பாவம் நினைந்து வருந்தி, அதனைப் போக்கிக் கொள்ள வழியில்லையா என்று பல ஊர்களுக்கும் சென்று, ஷைகு அதிய்அலி இப்னு ஹைத்தி, ஷைகு அப்துர் ரஹீம், சையிது மன்சூர் ரிபாயீ முதலிய ஒரு நூற்று இருபது வலிமார்களிடம் வினவ, ''உம்முடைய நெற்றியில் நீர் பாவி (ஸகாவத்) என்று எழுதப் பட்டுள்ளதை எங்களால் அழிதெழுதுதல் இயலாது. ஆதலின் நீர் இவ்விடத்தை விட்டு அகன்று விடும்!'' என்று கூறி விட்டனர்.

பின்னர் அவர் ஃபதாயிஹ் வந்து ஆண்டகை அவர்களின் தவச்சாலையை நண்ணித் தம் அவலம் போக்குமாறு அவர்களை அழுத கண்ணும் கெஞ்சிய நாவுமாய் வேண்டி நின்றார். அது கேட்ட ஆண்டகை அவர்கள், அவரை முகமலர வரவேற்றுத் தம் முன் அமரச் செய்து, அவரைச் சற்று நேரம் உற்றுப் பார்த்த வண்ணம் இருந்தனர். பின்னர் தம் திருக்கரத்தால் அவரின் நெற்றியைத் தடவி, அவரின் கரம் பிடித்து அவருக்குத் தீட்சை வழங்கித் தம் சீடர் குழுவில் அவரை இணைத்தனர்.

சில காலம் ஆண்டகை அவர்களின் தவச்சாலையில் இருந்த அவர், பின்னர் அவர்களிடம் விடை பெற்றுத் தம் தாயகம் திரும்பிய பொழுது, தாம் முன்னர் கண்ட 'வலி' மார்களையெல்லாம் போய்ச் சந்தித்தார். அப் பொழுது அவருடைய நெற்றியில் ஸகாவத் (பாவி) என்ற சொல் மறைந்து, ஸஆதத் (நல்லார்) என்ற சொல் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு, அதற்கான காரணத்தையும் அறிந்து, அவர்கள் வியப்புக் கடலில் மூழ்கிய வண்ணம் அவர் மீது பாராட்டுரை பொழிந்தனர்.

ஆண்டகை அவர்களின் தவச்சாலைக்கு மக்கள் தீட்சை பெறுவதற் காகவும், நோய் நீங்கப் பெறுவதற்காகவும், தங்களின் நாட்டங்கள்

நிறைவேறுவதற்காகவும் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். ஒருவர் நோய்வாய்ப்பட்ட பொழுது, அவரை அவரின் மைந்தர், அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ ஆண்டகையின் தவச்சாலைக்கு அழைத்து வந்தார். அப்பொழுது அவரின் தந்தையின் உள்ளத்தில் தம்மைத் தம் மகன் அபா யஸீதில் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்திற்கு அழைத்துச் செல்ல வில்லையே என்னும் எண்ணம் ஏற்பட்டது.

அப்பொழுது அவரை ஒரு சிறு தூக்கம் ஆட்கொண்டது. அதில் கனவொன்று கண்டார். மக்கள் பெரும் திரளாகக் கூடியிருக்கிறார்கள். அவர்களின் நடுவே சங்கை வாய்ந்த ஒரு பெரியார் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அபா யஸீது பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்களின் திருமுன் சென்று, அவர்களுக்கு 'ஸலாம்' உரைக்கிறார் அவர். ஸலாத்திற்கு பதில் உரைத்த அவர்கள், அவரை நோக்கி, ''அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ அவர்களின் தவச்சாலை உமக்குப் பற்றாது போயிற்றா? அதனை விட்டு நீங்கி என்னுடைய அடக்கவிடத்திற்கு வர விரும்பினீரே, நீர்? இது வென்ன பேதமை! இப்பொழுது நானும் நீரும் அவர்களின் தவச் சாலையில் தான் இருக்கிறோம்'' என்று கூறுகிறார்கள்.

திடுக்குற்று விழித்தெழுந்த அவருக்கு ஒரு நொடியில் நோயெல் லாம் மாயமாய் மறைந்துவிட்டது. இதன்பின் பெரிதும் உள்ளச்சத்துடன், அவர் ஆண்டகை அவர்களின் திருமுன் சென்ற பொழுது, ஆண்டகை அவர்கள் அவரைப் புன்முறுவலுடன் வரவேற்று, ''இறைவன் உமக்கு நேர்வழி காட்டுவானாக! இறைவன் உம்மைத் தன் அருள் நேசரின் கூட்டத்தில் சேர்த்தருள்வானாக!'' என வாழ்த்தினார்கள்.

ஆண்டகை அவர்களுக்குப் பேரும் புகழும் நாளுக்கு நாள் வளர்ந் தோங்கி வருவதைக் கண்டு, வாஸித்தில் பிரபலம் பெற்று விளங்கிய இப்னுல் முஹ்தஷிம் என்பவருக்கு, ஆண்டகைமீது ஒரு வித வெறுப்பும், காழ்ப்பும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அவர்கள் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றியதாகக் கூறப்படுவதைத் தம்மால் ஏற்றுக் கொள்ள இயலாது என்று அவர் வெளிப்படையாகக் கூறவும் செய்தார்.

இது ஆண்டகை அவர்களின் செவிப்பட்டதும், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைத் திருப்பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றியவனே ஆவேன். இதற்கு என் பாட்டியார் பாத்திமா ப(த்)தூல் (ரலி) அவர்களே சான்று பகர்வார்கள். எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன்'' என்று கூறிவிட்டு வெறுமனே இருந்துவிட்டார்கள்.

அடுத்தநாள் வைகறையில் இப்னு முஹ்தஷிம், ஆண்டகை அவர்களின் தவச்சாலைக்கு அழுத கண்களுடன் வந்து, தம் பவம் பொறுத் தருளுமாறு வேண்டி நின்றார்.

அவர் சிறு குழந்தை போன்று தேம்பித் தேம்பி அழுவதைக் கண்ட அருளிதயத்து ஆண்டகை அவர்கள், அவரின் கண்ணீரைத் தம் திருக் கரத்தால் துடைத்து, ''சகோதரரே! உம்மீது எவ்விதக் குற்றமுமில்லை. பேரருளாளனாகிய அல்லாஹ் உம் பவம் பொறுக்கப் போதுமானவன்'' என்று ஆறுதல் கூறினார்கள்.

அப்பொழுது இப்னு முஹ்தஷிம் அங்கிருந்தோரை நோக்கி, ''நான் செய்த சண்டாளத்தனத்தை என் சொல்வேன்? சென்ற இரவு நான் கனவொன்று கண்டேன். லிவாவுல் ஹம்து என்னும் கொடி ஆரோகணித்துப் பறந்து கொண்டிருக்கிறது. அதன் கீழே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நடுநாயகமாக நின்று சொண்டிருக்கிறார்கள். அவர்களின் வலப்புறத்தில் பாத்திமா (ரலி) அவர்களும் இடப்புறத்தில் சையிது அஹ்மதுல் கபீர் (ரஹ்) அவர்களும் நின்று கொண்டிருக்கிறார்கள். அதைக் கண்டதும் நான் செய்த தவறை எண்ணி, எனக்கேற்பட்ட திடுக்கத்திற்கு அளவில்லை. நானும் அக்கொடி நிழலில் தரிபட எண்ணி, பாத்திமா (ரலி) அவர்களிடம் முறையிட, அவர்கள் என்னுடைய முறையீட்டை ஏற்றுக் கொள்ளாது புறக்கணித்துவிட்டார்கள். அதன்பின் அவர்கள் சையிது அஹ்மதுல் கபீர் அவர்களை நோக்கி, 'நீர் என் வழித்தோன்றலல்ல என்று வாய் கூசாது கூறிய இவர் இப்பொழுது என்முன் முகம் கூசாது வந்து என்னிடம் உதவி தேடுகிறார். அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீர் அவருக்காக என்னிடம் பரிந்துரைத்தாலன்றி, நான் அவருக்காக உதவப் போவதில்லை' என்று கூறினார்கள்.

''இதன்பின் சையிது அஹ்மதுல் கபீர் அவர்கள் என் மீது இரங்கி, என் கையைப் பிடித்துக் கொண்டு, தம் பாட்டியார் பாத்திமா (ரலி) அவர்களிடம் சென்று, எனக்காகப் பெரிதும் மன்றாடினார்கள். அதன் பின் அவர்கள் என்னை மன்னித்தார்கள். அப்பொழுது அவர்களின் திருவாயிலிருந்து ''சையிது அஹ்மதுல் கபீர் என் ஈரக்குலையின் ஒரு துண்டு'' என்னும் சொற்கள் இன்பத்தில் தோய்ந்து வெளிவந்தன'' என்று கூறினார்.

பின்னர் அவர் மீண்டும் மீண்டும் தம் பவம் பொறுத்தருளுமாறு ஆண்டகை அவர்களை வேண்ட, ''முஹ்தஷிமுடைய மகனே! இறைவன் எங்களுக்கும் உமக்கும் பிழை பொறுத்தருள்வானாக! நம் அனைவரையும் மறுமையில் லிலாவுல் ஹம்து என்ற கொடியின் கீழ் ஆக்குவானாக!'' என்று கூறி இறைஞ்சினார்கள்.

ஒருநாள் ஆண்டகை அவர்கள் ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்த பொழுது, அவர்கள் மீது பொறாமை கொண்ட சிலர், வாயால் கூறக் கூசும் வசை மொழிகளை அவர்கள் மீது பொழிந்து தள்ளினர். அதுகேட்டுச் சிறிதேனும் சினமுறாத ஆண்டகை அவர்கள், அத் தீயோரை அணுகி, ''அன்பரீர்! இந்த அடிமையை ஏற்று ஆட்கொள்ளுங்கள். என் தவறுகளைப் பொறுத்து என் மீது தயை புரியுங்கள்!'' என்று கூறி அவர்களின் கரங்களை முத்தமிட்டார்கள்.

இதுகண்டு அத் தீயோர்க்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ''தங்களைப் போன்ற பொறுமையாளரை நாங்கள் தரணியிலேயே கண்டதில்லையே. எங்களின் வசைக் கணைகள் தங்களின் முகவிதானத்தில் ஒரு சிறு வடுவையேனும் உண்டு பண்ணவில்லையே. என்ன விந்தை இது!'' என்று அவர்கள் கூறிய பொழுது, ''எல்லாம் தங்களின் நல்லாசியாலும் இறையருளாலும் தாம் நிகழ்ந்தன'' என்று ஆண்டகை அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொருவர் ஆண்டகை மீது காழ்ப்பு மீக்குற்று, அவர்களை வாயில் வந்தபடி எல்லாம் திட்டி ஒரு மடல் எழுதி அதனை ஆண்டகை அவர்களின் சீடர் ஒருவரின் கையில் கொடுத்து, அதனை ஆண்டகை அவர்களிடம் சேர்த்துவிடுமாறு கூறினார். கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறியாத, அச்சீடர் அவ்விதமே செய்ய, ஆண்டகை அவர்கள் அதனைப் பிரித்துப் பார்த்ததும், அதிலே முதலில் எழுதப்பட்டிருந்தது, ''அடே தஜ்ஜாலே!'' என்பதாகவே இருந்தது. ஆண்டகை அவர்கள், அவர் மீது அணுவத்தனையும் வருத்தமோ, விரோதமோ கொள்ளாது, அவருக்கு அன்பளிப்பாகப் பணம் அனுப்பியதோடு, அவருக்குத் தம் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருமாறு செய்தார்கள்.

பின்னர் அவர் பைத்தியம் பிடித்து அலைந்து, ஆண்டகை அவர்களின் திருமுன் அழைத்துவரப்பட்ட பொழுது, அவருக்காக இறைவனிடம் இறைஞ்சி, அவருக்கு நலன் ஏற்படுமாறும் செய்தார்கள். பின்னர் அவர் ஆண்டகை அவர்களிடம் தம் பிழை பொறுத்தருளுமாறு வேண்டியதோடு, தீட்சையும் பெற்று அவர்களின் காலடியில் அமர்ந்து தம் வாணாள் முழுதும் பணிபுரிந்து வந்தார்.

இவரே போன்று ஆண்டகை அவர்கள் மீது வசைமாரி பொழிந்து கடிதம் எழுதிய ஷைகு இப்ராஹீமுல் புஸ்தீ என்பவருக்கு ஆண்டகை அவர்கள் எழுதிய கடிதம், நம் உள்ளத்தை உருக்குவதாக உள்ளது. ''மாண்புமிகு ஷைகு இப்ராஹீமுல் புஸ்தீ அவர்களுக்கு யாதொரு பயனுமற்ற சின்னஞ்சிறு அஹ்மது மிகவும் தாழ்மையுடன் எழுதும் கடிதம். பேரருளாளனாகிய இறைவன் என்னிடம் சில பண்புகளை

அமைத்து, என்னைப் படைத்துள்ளான். தாங்கள் என்மீது அருள்கூர்ந்து எனக்காக இறைவனிடம் இறைஞ்ச வேண்டுகிறேன். என் மீது அன்போடும், கருணையோடும் நடந்து கொள்ளுமாறும் தங்களைப் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.''

இக்கடிதத்தைப் படித்ததும் ஷைகு இப்ராஹீமுல் புஸ்தீயின் மூளையில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அலறித் துடித்த வண்ணம் ஓடியவர் எங்கோ சென்று இறந்து விட்டார்.

இவ்வாறு அறிவீனர்கள், அவர்களின் மாண்பினை அறியாது, பொறாமையுற்று, அவர்களைப் பற்றிப் பிதற்றித் திரிந்தார்களேயன்றி, அறிவாளிகள் அவர்களின் மாண்பினை அறிந்து, அவர்களைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவர்களைத் தரிசித்து நற்பேறு பெறுவதற்காக, அவர்களின் தவ மடத்திற்கு அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். அவ்விதம் வந்துபோய்க் கொண்டிருந்தவர்களில் ஒருவர் கிள்ரு (அலை) அவர்கள்.

கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்கும், சுல்தானுல் ஆரிஃபீன் சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களுக்கும் இடையே நாற்பத்திரண்டு வயது வித்தியாசம் இருந்தது. எனினும் வயதில் மூத்தவரான கௌதுல் அஃலம் அவர்கள், அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களைப் பெரிதும் மதித்தனர். அவர்களின் அன்னையைத் தம் சகோதரி எனக் கொண்டு, அவர்களைத் தம மருகர் என்றே குறிப்பிட்டு வந்தனர்.

ஒரு தடவை ஷைகு கிள்ரு என்பவர், கௌதுல் அஃலம் அவர்களைத் தரிசிப்பதற்காக பக்தாது வந்த பொழுது, ஃபதாயிஹ் சென்று சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களையும் சந்திக்க வேண்டுமென்ற எண்ணம் அவரின் உள்ளத்தில் ஊசலாடிற்று. இதனை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட கௌதுல் அஃலம் அவர்கள், ஷைகு கிள்ரை நோக்கி, ''நீர் இப்பொழுது சையிது அஹ்மதுல் கபீரைக் காண்பீர்'' என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் கூறி வாய் மூடுமுன், கௌதுல் அஃலம் அவர்களின் பக்கத்தில் மாண்பார்ந்த ஒருவர் அமர்ந்திருக்கக் கண்டு, எழுந்து சென்று அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்தார் ஷைகு கிள்ரு. அதற்கு பதில் கூறிய ஆண்டகை அவர்கள், ''ஷைகு கிள்ரே! ஷைகு அப்துல் காதிர் அவர்களை இறைநேசச் செல்வர்களின் ஏந்தலாகக் கண்டவர்கள், என்னையும் காண ஆசையுறுவர் தாம். ஆனால் நான் அவர்களின் பேரரசில் வாழும் ஒரு குடிமகனேயன்றி வேறில்லை'' என்று கூறிவிட்டு மறைந்து விட்டனர்.

இது நிகழ்ந்து வெகுகாலத்திற்குப் பின், ஷைகு கிள்ரு, ஆண்டகை அவர்களைக் காண்பதற்காக ஃபதாயிஹ் சென்ற பொழுது, தாம் முன்னர் பார்த்த அதே அருள் உருவினர், அங்கு வீற்றிருப்பதைக் கண்டனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, "ஷைகுகிள்ரே! நீர் முன்னர் ஒரு தடவை என்னைப் பார்த்தது உமக்குப் போதாதா?" என்று அன்புடன் வினவி அவரை உபசரித்தனர்.

மற்றொரு தடவை அபுல் பத்ஹ் வாஸ்தி என்பவர், கௌதுல் அஃலம் அவர்களைக் காண பக்தாது வந்து, அவர்களின் திருமுன் வீற்றிருக்கும் பொழுது, "தாம் ஃபதாயிஹ் சென்று சையிது அஹ்மதுல் கபீர் அவர்களிடம் தீட்சை பெற்றால் நலமாயிருக்குமே" என்று தம் உள்ளின் உள்ளே எண்ணினார்.

இதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட கௌதுல் அஃலம் அவர்கள், "அபுல் ஃபத்ஹே! நீர் நினைப்பது சரியேயாகும். நீர் ஃபதாயிஹ் சென்று, என் மருகர் சையிது அஹ்மதுல் கபீரிடமே தீட்சை பெற்றுக் கொள்ளும்! அவரே உம்முடைய ஆன்மீகக் குரு" என்று கூறினர்.

பின்னர் சற்று நேரம் தலை குனிந்திருந்த கௌதுல் அஃலம் அவர்கள், அபுல் ஃபத்ஹை ஏறிட்டுப் பார்த்து, "உலாயிக்க அலா ஹுதன் மிர்ரப்பிஹிம் வஉலாயிக்க ஹுமுல் முஃப்லிஹூன் - (அந்தக் குழுவினர் தம் இறைவனின் நேரிய பாதையில் உள்ளனர். மேலும் அவர்கள் வெற்றி பெற்றுக் கொண்டனர்) என்னும் இறைவசனம் இதோ உம் வதனத்தில் ஒளிர்வதை நான் காண்கிறேன். ஆதலின் நீர் என் மருகரிடமே சென்று தீட்சை பெறும்!" என்று அருண்மொழி பகர்ந்தனர்.

பின்பு ஒரு சமயம் கௌதுல் அஃலம் அவர்கள் சையிது அஹ்மதுல் கபீர் (ரஹ்) அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "ஷரீஅத், தரீக்கத், ஹகீக்கத், மஃரிபத் ஆகிய நான்கு கடல்களும் ஒன்று சேர்ந்த மாபெரும் கடல் அவர்கள். அவர்களின் மாண்பினை வாயால் எடுத்துரைக்க இயலாது. எனக்குப் பின் அவர்களே கௌதுல் அஃலமாக விளங்குவர்" என்று கூறினர்.

கௌதுல் அஃலம் அவர்கள் மீது சையிது அஹ்மதுல் கபீர் ஆண்டகை கொண்டிருந்த மதிப்போ அளவிடற்பாலதாகும். "அருள் பெற்ற பகுதாதில் வாழும் எங்கள் அருமை முஹ்யித்தீனின் மாண்பினை முற்றிலும் உணர்ந்தவர், இத்தரணியில் எவர் உளர்? கோடி கோடி விண்மீன் ககன வெளியில் மின்னிடலாம். ஆனால் செங்கதிரோன் ஒன்றே ஒன்றுதான். அதன்முன் விண்மீன்கள் எம்மாத்திரம்? அத்தகு செஞ்சுடர்ச் செல்வரே எங்களின் பகுதாது நாயகர்" என்று அவர்கள் கௌதுல் அஃலம் அவர்கள் மீது புகழ்மாலை தொடுத்தார்கள்.

ஹிஜ்ரி 559 ஆம் ஆண்டில் கௌதுல் அஃலம் அவர்கள் தங்களின் எண்பத்தொன்பதாவது வயதில் இறை ஆணைப்படி, ''என்னுடைய பாதங்கள் அகிலம் முழுதும் உள்ள அனைத்து வலிமார்களின் தோள்மீது இருக்கின்றன'' என்று பிரகடனப்படுத்திய பொழுது ஃபதாயிஹில் இருந்த சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களும் அப்பிர கடனத்தைத் தங்களின் ஞானச் செவியால் செவியுற்று, அடுத்த கணமே 'கௌதுல் அஃலம் அவர்களே! தங்களின் செங்கமலப் பாதங்கள் இரண்டும் அடியேன், இந்தச் சின்ன அஹ்மதுவின் தோள்கள் மீதும் ஆகக் கடவது'' என்று கூறித் தங்களின் தோள்களைத் தாழ்த்தினார்கள் என்றால், கௌதுல் அஃலம் அவர்கள் மீது சையிதுல் அஹ்மதுல் கபீர் (ரஹ்) அவர்கள் கொண்டிருந்த பக்தியை என்னென்று கூறுவது?

ஒரு தடவை ஒருவர் ஆண்டகை அவர்களின் தவமடத்திற்கு வந்து, தாம் கௌதுல் அஃலம் அவர்களைத் தரிசிக்க பகுதாது சென்று வர விரும்புவதாகக் கூறிய பொழுது, ''நல்லது அவசியம் சென்று வாரும்! நீர் பகுதாது மண்ணில் மிதித்ததும் பகுதாது நாயகர் அவர்களின் தவச்சாலை சென்று, அவர்களைத் தரிசித்து விட்டுத் தான் மறுவேலை பார்க்க வேண்டும். இவ்விதம் அவர்கள் உயிரோடிருக்கும் பொழுது மட்டுமல்ல, நிர்யாணமடைந்த பின்னும் எவரும் செய்யத் தவறின் அவரின் பதவி பறிக்கப்படும், நிலை குலைக்கப்படும்'' என்று அவருக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அனைவருக்கும் ஆண்டகை அவர்கள் அருள் எச்சரிக்கை புரிந்தார்கள்.

மற்றொரு தடவை ஷைகு அப்துல்லாஹ் என்பவர், ஆண்டகை அவர்களின் தவச்சாலைக்கு வந்து, அங்கு சில நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஒரு நாள் தாம் பகுதாது சென்றதையும், அங்கு கௌதுல் அஃலம் அவர்களைச் சந்தித்ததையும், அவர்களின் காரணமகிமையையும் வாயினிக்க ஆண்டகை அவர்களிடம் கூறினார். அதனை அவர்கள் தம் செவியினிக்க, உளம் இனிக்கக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கு வந்த ஆண்டகை அவர்களின் சீடர் ஒருவர், தம்குருநாதர் முன் வேறொருவரின் புகழை எவரோ ஒருவர் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டு, ''இங்கு வைத்து இவற்றையெல்லாம் கூறக் கூடாது'' என்று அவர் மீது சீறிச் சினந்தார். அது கேட்டு ஆண்டகை அவர்களின் கண்கள் அனற்பிழம்பாயின. ஏறிட்டுப் பார்த்தார்கள் அவரை. அடுத்த கணம் அவர் உயிரற்றுக் கீழே சாய்ந்தார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அங்கு வீற்றிருந்தவர்களை நோக்கி, ''கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் எய்தி நிற்கும் ஆன்மிக உச்சத்தை, இன்றையத் தினம் எய்தப்

பெற்றோர் இவ்வவனியில் எவருமிலர், அவர்களுக்கு நிகராக எவரும் இல்லாதது மட்டுமல்ல, அவர்களுக்கு இரண்டாவதாகவும் ஒருவரும் இல்லை. ஷரீஅத் என்னும் கடல் அவர்களின் வலப்புறமும், ஹகீக்கத் என்னும் கடல் அவர்களின் இடப்புறமும் உள்ளன. அந்த இருகடல்களில், அவர்கள் எதிலிருந்து அள்ள எண்ணுகின்றார்களோ- அதிலிருந்து அவர்களின் மக்களுக்கு ஊட்டுவார்கள். அவர்கள் பற்றி எச்சரிக்கையாய் நடந்துகொள்ளுங்கள்!'' என்று கூறினார்கள். பின்னர் அங்கிருந்த சிலரை நோக்கி,''அவருடைய உடலை, எவருடைய கண்களுக்கும் தெரியாமல் எடுத்துச் சென்று புதைத்துவிடுங்கள்'' என்று வெறுப்போடு கூறினார்கள்.

கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்குப் பின், அவர்களின் இடத்தில், அதாவது கௌதுல் அஃலம் என்னும் மாபெரும் பதவியில் ஆண்டகை அவர்களை அமர்த்த இறைவனின் திருக்கரம் விரைவில் வேலை செய்யத் தொடங்கியது. அண்ணல் நபி (ஸல்) அவர்களை உயிரோடும், உடலோடும், 'அர்ஷ்' வரை ஏற்றி, காத்தமுன் நபியாக்கப் பரிபக்கவப்படுத்தியது போன்று அவர்களின் பேரரின் ஆன்மாவைத் தன்பால் அழைத்து, கௌதுல் அஃலமாக ஆக்க அவன் ஆவன செய்தான். இதைப் பற்றி ஆண்டகை அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''நான் என் பாட்டனார் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழி முறைகளை அணுவத்தனையும் தவறாது பின்பற்றும் வழக்கமுடையவன். எனவே, இறைவன் தன் அளப்பரும் கருணையினால் எனக்கு இந்தப் பேற்றினை வழங்கினான். இத்தகைய பேறு எனக்கு எட்டுத் தடவை - மூன்று தடவை வியாழன் இரவிலும், ஐந்து தடவை வெள்ளி இரவிலும் கிடைத்தது'' என்று கூறினார்கள்.

இந்த விண்ணேற்றத்தின் போது இறைவன் ஆண்டகை அவர் களுக்குத் தொண்ணூற்றொன்பது திருப்பெயர்களைச் சூட்டிக் கௌர வித்தான். அப்பொழுது ஆண்டகை அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! நீ எனக்கும் என் வழித்தோன்றல்களுக்கும், என் ஆன்மீக வழியைப் பின்பற்றுகிறவர்களுக்கும் தனிப்பெரும் கருணை காட்டுவதாக, அருட்பெரும் திருவருள் சுரப்பதாக வாக்குறுதியளிப் பாயாக!'' என்று கண்ணீரும் கம்பலையுடன் இறைஞ்சினார்கள். ஒரு தடவையல்ல; ஒரு நூற்று இருபது தடவைகள். ஒவ்வொரு தடவையும் அவர்கள் இவ்வாறு இறைஞ்சும்பொழுதும் ''அவ்விதமே செய்கிறேன்'' என்று இறைவன் உறுதியளித்த போதினும், ஆண்டகை அவர்கள் தம் இறைஞ்சுதலை விடவில்லை. ஒரு நூற்று இருபது தடவை இறைஞ்சி, ஒரு நூற்று இருபது தடவை இறைவன் உறுதியளித்தபின் தான் ஆண் டகை அவர்கள் அமைதியுற்றுத் தம் இறைஞ்சுதலை நிறுத்தினார்கள்.

அப்பொழுது தேனினும் இனிய அசரீரி ஒன்று பின்வருமாறு ஒலித்தது:

''இவரின் காலம் தன்னில்இவர்
நிகராம் குத்பு உலகிலில்லை
இவரின் காலம் தன்னில் இவர்
நிகராம் கௌதும் ஒருவரில்லை.

தந்தை வழியில் ஹுஸைனிய்யாய்
தாயின் வழியில் ரிஃபாயீயாய்
வந்த இந்த கௌதின்மேல்
வல்லோன் ஸலாமும் ஆகுகவே!''

இதனைச் செவியுற்ற ஆண்டகை அவர்கள், உவகைக் கடலில் மூழ்கினார்கள்.

கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்குப் பின், பதினாறு ஆண்டு காலம் கௌதுல் அஃலம் பீடத்தில் அமர்ந்து, ஆன்மீகச் செங்கோல் செலுத்தினார்கள் சுல்தானுல் ஆரிஃபீன் சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்கள். இச்சமயம் இறைவன் அவர்களின் மீது அன்பு மீக்குற்று, அவர்களுக்கு இன்னும் இருபத்து நான்கு திருப்பெயர்களைச் சூட்டி, அவற்றை மக்களுக்கு எடுத்துரைக்குமாறும் பணித்தான்.

ஆண்டகை அவர்களின் திருச்சந்நிதானத்திற்கு எண்ணற்ற இறைநேசச் செல்வர்கள், இறைஞானம் பெறுவதற்காக நாள்தோறும் வந்த வண்ணமாக இருந்தார்கள். அவர்களைக் காண்பதற்கு கிள்ரு (அலை) அவர்கள் கூட அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் மாபெரும் இறைநேசச் செல்வர் ஷிஹாபுத்தீன் சுஹரவர்தி (ரஹ்) அவர்கள், கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்து, ''சையிது அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ அவர்களைப் பற்றித் தங்களின் கருத்து என்ன?'' என்று வினவிய பொழுது, இறைவனின் அந்த மறைவான நல்லடியாரின் திருவாயிலிருந்து பளிச் சென்று பதில் வந்தது: ''அவர் போன்ற இறைநேசச் செல்வரை, இறையன்பில் மூழ்கித் திளைக்கும் இறைக் காதலரை நான் கண்டேனில்லை. அவர் இக்காலத்து குத்பாக உள்ளார். அவரின் ஆன்மீக ஆட்சி, கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்), ஷைகு அபா இஸ்ஹாக்குல் காஸஜ்வானி (ரஹ்), தாஜுல் ஆரிஃபீன் அபுல் வபா (ரஹ்), ஷைகு மன்சூர் இப்னு அபூபக்ர் ரிஃபாயீ (ரஹ்), சையிது யஹ்யா மஃஷூக்குல்லாஹ் (ரஹ்), மஃரூபுல் கர்க்கி (ரஹ்) ஆகியோரின் ஆன்மீக ஆட்சி போன்று என்றும் நிலைத்திருக்கும்'' என்று.

மற்றொரு நாள் ஆண்டகை அவர்களின் சகோதரி மகன் சையிது ஜலீல் என்பவர் தம் மாமாவைக் காணச் சென்ற பொழுது, அவர்களின் அறையில் எவரோ ஒருவர் அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருப்பதைக் கதவிடுக்கின் வழியே கண்டார். பின்னர் அவர் வாயில் வழியே வெளி வராது, அந்த அறையின் மதிலைப் பிளந்து மின்னென மறைந்து விட்டதையும் கண்டார்.

இதன்பின் உள்ளே சென்ற மருகர் தம் மாமாவை நோக்கி, ''தங்களுடன் நெடுநேரமாகப் பேசிக் கொண்டிருந்தாரே அவர் யார்?'' என்று வினவினார். ''அவரை நீ பார்த்தாயோ?'' என்று ஆண்டகை வின வினர். ''ஆம்'' என்று பதிலுரைத்தார் மருகர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் தம் மருகரை நோக்கி, ''அவர் பஹ்ருல் முஹீத் என்னும் கடலைப் பாதுகாக்க இறைவனால் நியமிக்கப்பட்டுள்ள நான்கு அவ் தாதுகளில் ஒருவர். மூன்று நாட்களாக இறைவன் அவர் மீது வெறுப் படைந்துள்ளான். எனினும் இச்செய்தி அவருக்குத் தெரியாது'' என்று கூறினர்.

''ஏன் இறைவன் அவர் மீது வெறுப்படைந்துள்ளான்?'' என்று வினவினார் மருகர்.

''மூன்று நாட்களுக்கு முன் அங்கு கடும் மழை பெய்தது. அது கண்டு இவர், ''பெய்ய வேண்டிய இடத்தில் பெய்யாது, கடலில் வந்து பெய்கின்றதே இப்பேய் மழை'' என்று எண்ணினார். பின்னர் தம் தவற்றை உணர்ந்து, தம் பிழை பொறுத்தருளுமாறு இறைவனிடம் வேண்டினார். எனினும் இறைவன் அவரின் பிழை பொறுக்கவில்லை'' என்று கூறினார்கள் ஆண்டகை.

''இறைவன் அவர் மீது கொண்டுள்ள வெறுப்பையும், அவரின் பிழை பொறுக்காததையும் தாங்கள் அவர்களிடம் கூறினீர்களா?''

''இல்லை; அதனை அவரிடம் எடுத்துரைக்காது நாணம் என் நாவுக்குத் தாளிட்டது.''

''அவ்விதமாயின், தாங்கள் அனுமதியளிப்பின், நான் அதனை ஆற்றுகின்றேன்.''

''அப்படியா! நல்லது; உன் சட்டைக் கழுத்தை உன் தலைக்குமேல் உயர்த்து!''

அவ்விதமே அவர் செய்தார். என்ன வியப்பு! அடுத்த கணம் அவர் பஹ்ருல் முஹீத்தின் நடுவில் அமைந்த ஒரு தீவில் நின் றுகொண்டிருந்தார். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. எனினும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, அத்தீவிற்குள் நடந்துசென்றார். அங்கே ஒரு

பெரியார் நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் தாம் சற்றுமுன் தம் மாமாவின் அறையில் பார்த்த அதே மனிதர் தாம் என்பதை விளங்கிக் கொண்ட அவர் அப்பெரியாரை அணுகி அவருக்கு ஸலாம் உரைத்து, நிலைமையை எடுத்துரைத்தார்.

அதுகேட்டு அப்பெரியாரின் தளர்வுற்ற உடலெல்லாம் அதிர்ந்தது. ''மகனே! அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கேட்கிறேன். நீ எனக்கோர் உதவி செய்கின்றாயா?'' என்று தளதளத்த குரலில் வினவினார் அவர்.

''செய்கிறேன்'' என்றார் ஜலீல்.

''நீ நான் அணிந்திருக்கும் இந்த கிர்க்காவை எடுத்து, நன்கு முறுக்கி என் கழுத்திலிட்டு இறுக்கி, என்னை முகம் குப்புற ஆக்கிக், கல்லிலும், கரடிலும், முள்ளிலும், செடியிலும் இழுத்துச் செல்ல வேண்டும். அல்லாஹ்வுக்கு மாறு செய்பவனுக்கு, அல்லாஹ்வின் நாட்டத்தில் குறை காண்பவனுக்கு இதுவே சரியான தண்டனையாகும்'' என்று கூறினார் அவர்.

அவ்விதமே செய்தார் ஜலீல். அப்பொழுது, '''ஜலீல்! நிறுத்தும். உம் இழுப்பை! ஏழுவானங்களிலும் உள்ள அமரர்கள் அனைவரும், அவருக்காக இறைவனிடம் அழுது மன்றாடுகின்றார்கள். அதன் காரணமாக இறைவன் அவரின் பவம் பொறுத்து அவரைப் பொருந்திக் கொண்டான்''. என்று அசரீரி முழங்கியது.

அதனைச் செவியுற்றதும் ஜலீல் மயங்கிக் கீழே விழுந்தார். பின்னர் உணர்வுப் பெற்று அவர் கண் விழித்த பொழுது, தாம் தம் மாமாவின் தியான அறையில் இருப்பது அவருக்குத் தெரியவந்தது. அப்பொழுது அவரின் மாமா அவரைநோக்கி, ''மருகரே! இதிலிருந்து நீர் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். இறைவனின் பேரபிமானத்தை ஒருவனுக்கு ஈட்டித்தருவது, அவனுடைய நாட்டத்திற்கு அடிமைத் தனத்துடன் தலைசாய்ப்பதேயாகும். அதற்கு மாறாக நடந்து கொள்வது, இறை முனிவை ஈட்டித் தரும் என்பதை நீர் ஒருபோதும் மறந்து விட வேண்டாம்!'' என்று அருள்போதம் செய்தார்கள்.

உண்மையில் ஆண்டகை அவர்கள், அல்லாஹ் அவர்களுக்கு எதை நல்கினானோ, அதனைப் பொருந்திக் கொள்பவர்களாகவே இருந்தார்கள். அல்லாஹ்வின் நாட்டம் எதுவோ, அதுவே அவர்களின் நாட்டமாக இருந்தது. அல்லாஹ்வின் நாட்டத்திற்குத் தலைசாய்ப்பதே வணக்கங்களி லெல்லாம் மாபெரும் வணக்கம் என்று அவர்கள் கருதினார்கள். இதன் காரணமாகப் பணிவும், பொறுமையும், அவர்களின் நீங்காத நற்பண்பு களாக அமைந்தன.

ஒருவர் ஆண்டகை அவர்களைத் தம் இல்லத்திற்கு விருந்துண்ண வருமாறு அழைத்தார். அவ்விதமே அவர்கள் சென்ற பொழுது, அவர் அவர்களைப் போகுமாறு கூறிவிட்டார். அதன்பின் மீண்டும் அவர் அவர்களிடம் வந்து விருந்துண்ணத் தம் இல்லம் வருமாறு அழைத்தார். அவ்விதமே அவர்கள் செய்தார்கள். அப்பொழுதும் அவர் அவர்களைத் திரும்பிப் போகுமாறு கூறிவிட்டார். இவ்வாறு இரண்டு தடவை அல்ல, மூன்று தடவை செய்தபின், நான்காவது தடவை அவர்களை அழைத்து அவர்கள் தம் இல்லம் வந்ததும், அவர்களை இருக்கையில் அமர்த்தி, ''அல்லாஹ்வுக்காகத் தாங்கள் என் பிழை பொறுத்தல் வேண்டும். தங்களைப் போன்ற ஒருவரை நான் காணவில்லை'' என்று நீர் மல்கும் கண்களுடன் கூறினார். ஆண்டகை அவர்கள் அவரைப் பெருமனத்துடன் மன்னித்ததுடன், ''என்னைப் போன்ற ஒருவரைப் பார்க்கவில்லை என்று கூறினீரே, நாயை நீர் பார்க்கவில்லையா? எசமானன், அதனை எத்தனை தடவை விரட்டியடித்த போதினும், அதனை அவன் அழைக்க, அழைக்க விசுவாசத்துடன் அது அவனிடம் திரும்பி வருகின்றதல்லவா?'' என்று கூறினார்கள்.

மற்றொரு நாள் பக்கீர் ஒருவர் ஆண்டகை அவர்களையும், அவர்களின் சீடர்கள் சிலரையும் விருந்துண்ணத் தம் இல்லம் அழைத்தார். அவ்வாறே அவர்கள் அங்கு சென்ற பொழுது, அவ் இல்லம் வறுமையின் இருப்பிடமாக இருப்பதைக் கண்டார்கள். தம் இல்லத்தில் வந்து அமர்ந்த அவர்களுக்கு, அந்த பக்கீர் உணவு எதுவும் கொண்டு வந்து கொடுக்கவில்லை. அவரிடம் இருந்தால் அல்லவா அவர் கொண்டு வந்து கொடுப்பார்?

அப்பொழுது ஆண்டகை அவர்களின் சீடர்களில் ஒருவர் அவரை நோக்கி, ''உம்மிடம்·எவ்வித உணவும் இல்லா நிலையில் ஏன் எங்களை வீணே விருந்துக்கழைத்து அலைக்கழித்தீர்?'' என்று வினவினார்.

அதற்கு அந்த பக்கீர் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, ''நான் என் செய்வேன்? தங்களுக்கு விருந்து வைக்க வேண்டுமென்று எனக்கு நெடுநாட்களாக ஆசையாக இருந்தது. ஆனால் என் கையிலோ அரைக் காசுமில்லை. எனினும் தங்களுக்கு விருந்தழைப்பு விடுத்துவிட்டேன். தாங்கள் என் இல்லத்திற்கு வந்து, என் நிலைமையை நேரில் கண்டு இரங்கி, இறைவனிடம் இறைஞ்சினால், அதன் பொருட்டாலாவது இறைவன் எனக்கு வளவாழ்வு நல்க மாட்டானா என்ற ஆசையின் காரணமாகவே அவ்விதம் செய்தேன்'' என்று கூறினார். அவரின் இச்சொல் அனைவரின் உள்ளத்தையும் நெகிழ்வித்தது. ஆண்டவனை அவர்கள் தம் இருகரம் ஏந்தி, அவருடைய பிழை பொறுத்து, அவருக்கு

வளவாழ்வை வழங்கி அருளுமாறு இறைவனிடம் இறைஞ்சினார்கள். சீடர்களும், அந்தப் பக்கீரும் 'ஆமீன்' கூறினார்கள். இறைவன் அவர்களின் இறைஞ்சுதலை ஏற்றான். சில நாட்களில் அந்தப் பக்கீர் பணக்காரராகி விட்டார்.

ஓர் ஆண்டு ரமலான் மாதத்தில் ஒருவர் ஆண்டகை அவர்களை நோன்பு திறந்ததும், உணவுண்ணத் தம் இல்லம் வருமாறு வேண்டிக் கொண்டார். அதற்கு அவர்களும் இணங்கினார்கள். பள்ளிவாயிலிலேயே நோன்பு திறந்து, மஃரிப் தொழுகையை 'ஜமாஅத்'துடன் தொழுது, அதன் சுன்னத் தொழுகையையும், அதன்பின் அவ்வாபீன் தொழுகையையும், தொழுவது ஆண்டகை அவர்களின் வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் விருந்தளிப்பவரோ, ஆண்டகை அவர்களை மஃரிபின் ஃபர்ளையும், சுன்னத் தொழுகைகளையும் தொழவிட்டாரே யொழிய அவ்வாபீன் தொழுகையைத் தொழவிட்டாரில்லை. அவசரப் படுத்தி அவர் அவர்களைத் தம் இல்லம் அழைத்துச் சென்றார். இல்லம் வந்தடைந்ததும், அவர்களை வாயிலிலேயே நிறுத்திவிட்டு, அவர்கள் அமர்வதற்கு இருக்கையைத் தயார் செய்ய உள்ளே நுழைந்தவர், அங்கு தம் மனைவி மக்களையும், உறவினர்களையும் கண்டதும், ஆண்டகை அவர்களை அடியோடு மறந்துவிட்டு, உறவினர்களின் நலம் விசாரிப்பதிலும், அவர்களை உபசரிப்பதிலும் அவர்களோடு அமர்ந்து உணவுண்பதிலும் ஈடுபட்டார்.

பின்னர் 'இஷா'த் தொழுகைக்கான அழைப்பொலி கேட்டதும், பள்ளி சென்று தொழுவதற்காக வெளியே வந்த அவர், வாயிலில் ஆண்டகை அவர்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும், ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கித் தாம் அவர்களை அழைத்து வந்ததை அறவே மறந்து விட்டதாக அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறித் தம்மை மன்னித்து அருளுமாறும், தம் இல்லம் வந்து உணவுண்ணுமாறும் பெரிதும் வேண்டிக் கொண்டார்.

அருள் உள்ளம் படைத்த ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''மகனே! அதற்காக வருந்தாதீர்! அல்லாஹ்வின் நாட்டப்படி நடப்பது அனைத்தும் நன்மைக்காகவே இருக்கும். இப்பொழுது 'இஷா'த் தொழுகைக்கான நேரம் நெருங்கி விட்டது. ஆதலின் பள்ளி சென்று இஷாத் தொழுகையையும், தராவீஹ் தொழுகையும் தொழுது விட்டு வந்து உணவுண்போம்'' என்று பணிவோடும், கனிவோடும் கூறினார்கள்.

ஆண்டகை அவர்கள் பணிவு மட்டுமின்றி, பெரிதும் மன அடக்கமும் வாய்ந்தவர்களாகவும் விளங்கினார்கள். கோடை காலம் ஒன்றில், வைகறைத் தொழுகையைத் தொழுதுவிட்டு, வழக்கமாக ஓதும்

'வஜீஃபா'க்களை ஓதிய அவர்கள், பின்னர் தம்மைச் சூழ வந்தமர்ந்த பக்கீர்களுக்கு நண்பகல் வரை, அரும்பெரும் அருளுரை நிகழ்த்தினார்கள். உரை நிகழ்த்திக் கொண்டுவரும் பொழுதே, அவர்களின் வாயும் நாவும் உலர்ந்துவிட்டன. எனினும் எவரிடமும் தண்ணீர் கொண்டு வருமாறு அவர்கள் கேட்கவில்லை.

உரை நிகழ்த்திவிட்டு, இல்லம் திரும்பிய பொழுது, அடுப்பில் மாவு பிசைந்த பாத்திரத்தில், மாவு அடியில் தங்கிய தண்ணீர் இருப்பதைக் கண்டு, அதை எடுத்து அவர்கள் அருந்த எண்ணினர். அப்பொழுது அவர்களின் நஃப்ஸ் (மன இச்சை) அவர்களை நோக்கி, ''இவ்வளவு நேரம் என்னைப் பாடாய்ப்படுத்தித் தாகவிடாயால் என்னைத் தவிக்க விட்டுவிட்டு, இப்பொழுது எனக்குக் குளிர்ந்த நீர் கூடத் தராது மாவு குழைத்த பாத்திரத்திலுள்ள மண்டித் தண்ணீரைத் தர எண்ணுகிறீரே' என்று வினவியது. நஃப்ஸின் இந்த இடக்கு மொழியைக் கேட்டதும், ''இத்துணை உத்தண்டமா உனக்கு? எனக்கு அடிமையாய் இருப்பதற்கு மாறாக, என்னை உனக்கு அடிமைப்படுத்த எண்ணுகின்றாயா, என்ன?'' என்று கூறி, அன்று மட்டுமல்ல, அதன்பின் பல நாட்கள்வரை அவர்கள் நீர் அருந்தவே இல்லை.

அவர்கள் ஒரே நேரத்தில் உண்பதற்காக இரண்டு வகை உணவுகளைச் சேமித்து வைத்ததில்லை. அவர்கள் தம் வாணாளில் சூடான ரொட்டியை உண்டதுமில்லை. காரணம், அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அதிகச் சூடான உணவை உண்ண வேண்டாமென்று கூறியிருப்பதேயாகும். அவர்கள் பெரும்பாலும், உண்டதெல்லாம் காய்ந்த அரிசி ரொட்டி தான். அரை ரொட்டி அல்லது ஒரு ரொட்டி உண்பார்களே அன்றி அதற்கு மேல் அவர்கள் உண்ணுவதில்லை. ''உண்டால் எனக்கு வயிறு நிரம்பி இரவில் வணக்கம் செய்யா நிலை ஏற்பட்டு விடும்'' என்று அவர்கள் கூறுவர்.

உண்ணும் பொழுது அவர்கள் தம் இரு முழங்கால்களையும், தம் இரு கட்கங்களுக்குக் கீழாக வைத்துக் கொண்டு உண்பர். உண்டபின், தாங்கள் உணவுண்ட பாத்திரத்தைக் கழுவிக் குடிப்பர். அவ்விதம் குடிக்கும் பொழுது இவ்விதம் ஒருவன் செய்யின், அந்தப் பாத்திரம் அவனை நோக்கி, 'நீ என்னை ஷைத்தானை விட்டும் தூய்மைப்படுத்தியது போன்று, இறைவன் உன்னை பாவங்களை விட்டும், வெண்குட்டத்தை விட்டும் தூய்மைப்படுத்துவான்' என்று கூறுமென அண்ணல் நபி(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்த ஹதீஸையும் அங்கிருப்போருக்கு எடுத்துரைப்பர்.

தம் சீடர்களுடன் அமர்ந்து நோன்பு திறக்கும் பொழுது, சிதறிக் கிடக்கும் பொருள்களை ஒருங்கு சேர்த்துக் கழுவி வைத்துக் கொண்டு,

அடுத்த நாள் அவற்றைக் கொண்டு நோன்பு திறக்கவோ, நோன்பு திறந்த பின் உண்ணவோ செய்வார்கள். அப்பொழுது அவர்களின் சீடர்கள் அவர்களை நோக்கி, "பேரீச்சம் பழத்தைக் கொண்டு நோன்பு திறப்பது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி என்பது தாங்கள் அறியாததன்று. அவ்விதம் இருக்க, தாங்கள் ஏன் இவற்றைக் கொண்டு நோன்பு திறக்கிறீர்கள்?" என்று வினவின், "உண்மை தான், தாங்கள் அதைக் கொண்டு நோன்பு திறவுங்கள்!" என்று அவர்கள் கூறிவிடு வார்கள்.

சில பொழுது பக்கீர்கள் ஆண்டகை அவர்களுக்கு நோன்பு திறக்க, பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்து கொடுப்பின், அவற்றில் ஒன்றை மட்டும் இறைவனின் திருப்பெயர் கூறி அருந்தி, நோன்பு திறப்பார்கள். அப்பொழுது அவர்கள், அவற்றைக் கொண்டு வந்தவர்களை நோக்கி, "உங்களுடைய திருப்திக்காக வேண்டி அதனை எடுத்து உண்டேன்" என்று கூறுவார்கள்.

எவரேனும் அவர்களுக்கு அன்பளிப்பாகப் பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்து கொடுப்பின், அவற்றில் கெட்டுப் போனவற்றைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்து உண்பார்கள். அப்பொழுது அவர்களின் திருவா யிலிருந்து, "இதுவே எனக்கு உவப்பாகவும், உவமையாகவும் உள்ளது" என்னும் பணிவில் தோய்ந்த பாகு மொழி வெளிவரும்.

ஒரு ரமலான் மாதத்தில் ஷைகு முஜர்ரத்துல் அக்பர் என்பவர் அவர்களுக்கு நோன்பு திறக்க நாள்தோறும் பேரீச்சம்பழங்கள் கொண்டு வந்து கொடுத்து வந்தார். அதனை நாள்தோறும் தின்று நோன்பு திறப் பதால், அதன் மீது ஆவல் அதிகமாகி விடுமோ என்று அஞ்சிய ஆண்டகை அவர்கள், அதன்பின் அதனை உண்பதையே விட்டொழித்துவிட்டார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகுத் திருப்பெயரான 'அஹ்மது' என்பதனைச் சூட்டப் பெற்ற, நற்பேற்றினாலோ என்னவோ, அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அணுவத்தனை வழிமுறை களையும் பின்பற்றி ஒழுகினார்கள். அழகற்ற பெயர்களையுடையவர் களுக்கு, அழகான பெயர்களை அண்ணல் நபி(ஸல்) அவர்கள் சூட்டியது போன்று, ஆண்டகை அவர்களும் செய்தார்கள். "உங்களின் மக்களுக்கு முஹம்மது, மன்சூர் ஆகிய பெயர்களைச் சூட்டுகள்! இப்பெயர்களை உடையவர்களின் வாழ்வில் ஷைத்தான் நுழைய வழியில்லை" என்று அவர்கள் கூறினார்கள்.

மலசலம் கழிக்கும் பொழுது, சூரியனையோ, சந்திரனையோ, முன்னோக்கியோ, பின்னோக்கியோ அவர்கள் அமர மாட்டார்கள். உளூச்

செய்தபின், ஷஹாதத் கலிமா ஓதுவது அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்து வந்தது. இவ்விதமே செய்யுமாறும், அவர்கள் தம் சீடர்களுக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

பெரியவர்களாய் இருந்த போதினும், சிறியவர்களாய் இருந்த போதினும், தாம் காண்போர் அனைவருக்கும் அவர்களே முதலில் 'ஸலாம்' உரைப்பர். குழந்தைகளைக் காணின், குழந்தைகளோடு குழந்தையாக அவர்களும் ஆகிவிடுவர். ''நானும் உங்களோடு விளையாட வரவா?'' என்று அன்பொழுக வினவுவர்.

ஆனால் சற்று வயது வந்த இளவல்கள் விளையாடிக் கொண்டிருக்கும் இடத்திற்கு அவர்கள் எதிர்பாரா வண்ணம் சென்றுவிடின், ''நான் உங்களின் விளையாட்டைக் கெடுத்து விட்டேன். என்னை மன்னியுங்கள். நீங்கள் நான் வருவதைச் சிறிதேனும் பொருட்படுத்தாது விளையாடிக் கொண்டிருங்கள்!'' என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டும் விரைந்து சென்று விடுவார்கள்.

ஒருமுறை அவர்கள் தெருவில் செல்லும் பொழுது, சிறுவர்கள் சச்சரவு செய்து கொண்டிருப்பதைக் கண்டதும், உடனே தலையிட்டு அவர்களிடையே சமரசம் செய்து வைத்தார்கள். அதன்பின் அவர்கள் ஒரு சிறுவனை நோக்கி, ''நீ யாருடைய மகன்?'' என்று வினவினார்கள். அதற்கு அவன், ''வீண் பேச்சுப் பேசாது நீங்கள் உங்களின் அலுவலைப் பார்த்துக் கொண்டு செல்லுங்கள்'' என்று வெடுக்கெனக் கூறினான். அதுகேட்டு அவர்கள், ''நீ எனக்கு நல்லொழுக்கத்தைக் கற்பித்தாய், அதற்காக அல்லாஹ் உனக்கு நற்கூலி அருள்வானாக!'' என்று வாழ்த்தினார்கள்.

அன்பே உருவாய் அமைந்த ஆண்டகை அவர்கள், எவரேனும் நோயுற்றதாகக் கேள்விப்படின், அவர்களின் இல்லம் சென்று நோய் பற்றி விசாரித்து, அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுவார்கள். வெளியூர்களிலுள்ள பக்கீர்களில் எவரும் நோயுற்றதாகக் கேள்விப்படின், அவர்களிடம் நோய் பற்றி விசாரிப்பதற்காக வெளியூர்களுக்குச் சென்று, இரண்டு மூன்று நாட்கள் அவர்களுடன் தங்கியிருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்துவிட்டு ஊர் திரும்புவார்கள்.

கண்தெரியாதவர்கள், முதியோர்கள் ஆகியவர்களைத் தெருவில் காணின், அவர்களின் கரம் பற்றி, அவர்கள் செல்ல வேண்டிய இடத்தைக் கேட்டறிந்து, அங்கே அவர்களை அழைத்துச் சென்று விட்டு விட்டு, அவர்களின் கரங்களைப் பிடித்து முத்திமிட்டு தமக்காகத் 'துஆ'ச் செய்யுமாறு வேண்டுவார்கள். ''முதியோரைக் கௌரவிக்கும் ஒருவனுக்கு, அவனுடைய முதுமைப் பருவத்தில், அவனைக் கௌரவிக்க இறைவன்

இளைஞர்களை ஏற்படுத்துவான்'' என்னும் நபி மொழியையும் அவர்கள் தம் சீடர்களுக்கு எடுத்துரைப்பார்கள்.

முஸ்லிம்களில் மட்டுமல்லாது, யூதர்களிலும், கிறிஸ்தவர்களிலும் இருந்த வயதான ஆண்களுக்கும், விதவையான பெண்களுக்கும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிவைப்பார்கள். அவர்களுக்கு அன்பு ஊழியமும் செய்வார்கள். அது கண்டு அவர்கள் ஆண்டகை அவர்களுக்கு, 'ஏழைகளின் தந்தை' என்று பட்டம் சூட்டியதோடு, அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தை தழுவினர்.

ஆண்டகை அவர்கள் குளிர்காலம் ஒன்றில் உளூச் செய்து கொண்டிருக்கும் பொழுது, நெடுநேரம் வரை நீட்டிய கையை, நீட்டிய வண்ணமே இருந்தார்கள். இதற்குக் காரணம், ஒரு கொசு வந்து அவர்களின் கையில் அமர்ந்து, அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி உண்டு கொண்டிருந்ததேயாகும். அப்பொழுது முஅஸ்ஸின் யாஃகூப், ஆண்டகை அவர்களின் கரங்களை முத்தமிட அங்கு ஓடோடி வந்தார். அதுகண்டு கொசுவும் வெருண்டோடிவிட்டது.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், யாஃகூப்பை நோக்கி, ''என்ன யாஃகூப்! ஒரு சின்னஞ்சிறு பிராணியை வீணே விரட்டிவிட்டீரே'' என்று கூறினார்கள்.

''என்ன, என்ன''என்று ஏக்கத்துடன் வினவினார் யாஃகூப்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''ஒரு கொசு வந்து என் கையில் அமர்ந்து, தனக்குரிய உணவை அருந்திக் கொண்டிருந்தது. நீர் வந்ததும் அது வெருண்டோடி விட்டது'' என்று வருத்தத்துடன் கூறினார்கள்.

அவர்கள் மீது கொசு வந்து அமரின், அதனைத் தாமும் விரட்டு வதில்லை. பிறரையும் விரட்ட அனுமதிப்பதில்லை. ''இறைவன் என்னுடைய இரத்தத்தில் அதனுடைய இரணத்தை வைத்திருக்கிறான். நீங்கள் ஏன் அதனை விரட்டுகின்றீர்கள்?'' என்று அவர்கள் கூறிப் பிறரைத் தடுத்துவிடுவார்கள்.

அவர்கள் வெளியில் செல்லும்பொழுது, வெட்டுக்கிளி முதலியவை அவர்கள் மீது வந்து அமரின், அவை பறந்து போகா வண்ணம் அசையாது நிழலில் போய் நிற்பார்கள். ''என்னைக் கொண்டு அது நிழல் தேடுகிறது. அதனை அது நன்கு அனுபவிக்கட்டுமே'' என்று அவர்கள் கூறுவார்கள்.

ஒருமுறை தரையில் கிடந்த தம் சட்டையின் கைக்குள் பூனைக்குட்டி ஒன்று அயர்ந்து படுத்துறங்குவதைக் கண்ட அவர்கள், அப்பூனைக் குட்டியின் உறக்கத்தைக் கலைக்க விரும்பாது, அப்பகுதியை மட்டும்

கத்திரியால் வெட்டித் துணித்து மீதிப் பகுதியை மட்டும் எடுத்து அணிந்து கொண்டு, வைகறைத் தொழுகை தொழ வேகமாகப் பள்ளி சென்றார்கள். பின்னர் தொழுதுவிட்டு, தவமடம் திரும்பிய பொழுது, பூனைக்குட்டி சட்டைக் கையை விட்டு அகன்று விட்டதைக் கண்டு, அந்தச் சட்டைக் கையை எடுத்துத் தம்முடைய சட்டையில் இணைத்துத் தைத்துக் கொண்டார்கள்.

ஃபதாயிஹ்வில் சிரங்கு பிடித்த நாய் ஒன்று அங்குமிங்கும் அலைந்து திரிந்தது. அதனை எவர் எங்கு காணினும் விரட்டியடித்தனர். இதைக் கண்ட ஆண்டகை அவர்களின் அருள் உள்ளம் இரங்கியது. அதனைப் பிடித்துக் கொண்டு கானகம் சென்று, அங்குக் குடிசை ஒன்றை அமைத்து, அதில் வைத்து அதற்கு மருந்து, எண்ணெய் ஆகியவை தடவி மருத்துவம் செய்தார்கள். இறையருளால் நான்கு நாட்களில் அது நலன் பெற்றதும், அதனைக் குளிப்பாட்டி ஊருக்குக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது மக்கள் அவர்களை நோக்கி, ''ஏன் இந்த நாயின் பொருட்டு இவ்வளவு துன்பங்களை மேற்கொண்டீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''நீர் ஏன் அந்நாய் மீது இரங்கவில்லை? அந்நாய் மீது ஏற்பட்ட நோயால் நீர் சோதிக்கப்படுவதைக் கொண்டு, நீர் பயப்படவில்லையா?'' என்று இறைவன் என்னிடம்கேட்பின், நான் என்ன பதிலுரைப்பது? எனவே தான் அவ்வாறு செய்தேன்'' என்ற அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

சில பொழுது அவர்கள் நோயுற்ற அல்லது காயமுற்ற நாய்களுக்குப் பின்னே சுற்றிக் கொண்டு திரிவார்கள். அவர்களைக் கண்டு அவை வெருண்டோடுமானால், ''ஏ முபாரக்! சற்று நில்! நான் உன் உடலிலுள்ள புண்ணுக்கு மருந்து தடவ விரும்புகிறேன்'' என்று அவர்கள் கூறுவார்கள்.

மனிதர்களுக்கு மட்டுமின்றித் தாம் சந்திக்குக்கும் ஆடு, மாடு, ஒட்டகம், நாய் முதலான அனைத்துப் பிராணிகளுக்கும் அவர்கள் 'ஸலாம்' கூறுவார்கள். பன்றியைக் கண்டால், 'அன் இம் ஸபாஹ்!' (நல்ல விடியற்காலை; குட் மார்னிங்) என்று சொல்வார்கள். இதைப் பற்றி அவர்களிடம் வினவப் பட்ட பொழுது, ''என் ஆன்மாவுக்கு நல்ல பேச்சுக் களையே பழக்கமாக்கி வைத்திருக்கிறேன்'' என்று கூறுவார்கள்.

அவர்களின் அன்புள்ளம் திருடர்களுக்குப் பரிவு காட்டியது. ஒரு பஞ்சகாலத்தில், ஓரிரவு திருடன் ஒருவன், திருடுவதற்காக அவர்களின் இல்லம் நுழைந்ததும், அங்கு ஆண்டகையைக் கண்டதும், அஞ்சி நடுங்கி விட்டான். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவனை நோக்கி, ''அஞ்சாதே, அப்பா! அதோ உனக்குத் தேவையான கோதுமை இருக்கிறது. ஆனால், அதனை மாவாக்கி ரொட்டி செய்து உண்ண உனக்குச் சிரமமாயிருக்கும். ஆதலின் உனக்கு மாவு தேவைப்படின் ,

அதோ மாவு இருக்கிறது. உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்!'' என்று கூறி மாவு இருக்கும் இடத்திற்கு அவனை அழைத்துச் சென்று, அவனுக்குத் தேவையான மாவை மூட்டையாகக் கட்டிக் கொடுத்தார்கள். அத்துடன் நில்லாது அவனுக்குக் காவலாக ஊரின் எல்லை வரை சென்று அவனை வழி அனுப்பி வைத்தார்கள்.

அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''என் வீட்டினுள்ளே நுழைந்ததும், என்னைக் கண்டு நீ நடுங்கினாய், உனக்கு அத்திடுக்கத்தை நான் ஏற்படுத்தியதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டினார்கள்.

இப்பொழுது அத்திருடனுக்கு நடப்பதெல்லாம் நனவா, கனவா என்று விளங்கவில்லை. எனினும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''சரி; மன்னித்தேன்'' என்று கூறினான்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''இப்பொழுது தான் என் மனம் அமைதியுற்றது. இதே போன்று, இறைவன் உன்னுடைய மனத்தையும் அமைதியுறச் செய்வானாக!'' என்று வாழ்த்தினார்கள்.

இல்லம் சென்ற அவருடைய வாழ்விலே பெரிய மாறுதல் ஏற்பட்டது. சில நாட்களில் அவர் ஆண்டகை அவர்களின் தவமடம் திரும்பி வந்து, அவர்களின் கரம் பிடித்து மன்னிப்புக் கோரி, நேர்வழி பெற்றுப் பிற்காலத்தில் பெரிய மகானானார்.

மற்றொரு நாள் அவர்கள் வைகறை நேரத்தில் தொழுவதற்காகப் பள்ளி சென்ற பொழுது, ஒரு யூதன் அவர்களை, அவர்களின் சீடர்களில் ஒருவர் என எண்ணிக் கொண்டு, அவர்களைப் பள்ளி செல்லாது வழி மறித்தான். அவர்கள் எவ்வளவோ முயன்றும், அவர்களை அவன் பள்ளி செல்ல அனுமதிக்கவில்லை. சிறிது இருள் நீங்கியதும், அவர்களின் திருமுகத்தை அவன் உற்றுப் பார்த்த பொழுது, அவனுக்கு ஏற்பட்ட திடுக்கத்திற்கு அளவில்லை. மயக்கமுற்றுக் கீழே விழுந்தான்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், அவனைத் தூக்கி எடுத்து, ''யூதரே! நான் உம்மைத் திடுக்குறச் செய்ததற்காக நீர் என்னை முதலில் மன்னித்தருள்வீராக!'' என்று கூறி அவரின் கரங்களைப் பிடித்துக் கொண்டு வேண்டினார்கள். அதன்பின் அவரை நோக்கி, ''நீர் இச்செய்தியை எவரிடமும் எடுத்துரைக்கக் கூடாது. அதனால் உமக்குத் தீமை ஏற்படலாம்'' என்று அருள் எச்சரிக்கையும் செய்தார்கள்.

நாணத்தால் முகம் வெளுத்து, அவர் இல்லம் நோக்கிக் கிளம்பிய பொழுது, அவன் பெயரையும், அவனுடைய இல்லம் இருக்கும்

இடத்தையும், அவனுக்கு எத்தனை மனைவி, மக்கள் என்பதையும் பற்றி அவர்கள் விசாரித்தறிந்தார்கள்.

இதற்கிடையே ஆண்டகை அவர்களை, அவர்களின் சீடர்கள் பள்ளியில் காணாது ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தனர். தாம் தாமதித்து வந்ததற்காக, அவர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, விரைந்து சென்று வைகறைத் தொழுகையைத் தொழ வைத்த ஆண்டகை அவர்கள், பின்னர் தாம் வழக்கமாக ஓதிவரும் 'வழீஃபா'க்களையெல்லாம் ஓதி முடித்துவிட்டுத் தங்களின் தவமடம் திரும்பினார்கள்.

உடனே தவமடத்தின் கருவூலக்காப்பாளரை அழைத்து, ''இன்ன இடத்தில், இன்ன பெயருள்ள யூதர் ஒருவர் வாழ்ந்து வருகிறார். அவருக்கு ஒரு மனைவியும், ஆறு குழந்தைகளும் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் உடுப்பும், ஓராண்டுக்குப் போதுமான உணவும் கொண்டு போய்க் கொடுத்து வாரும்!'' என்று ஆணையிட்டார்கள். அதன்பின் அவரின் காதோடு காதாக, ''அவரை நான் திடுக்குறச் செய்ததற்கு, இது பகரமாக இருக்குமென்றும், நான் செய்த தவறைப் பொறுத்து எனக்கு மன அமைதியை வழங்குமாறு நான் அவரிடம் வேண்டிக் கொண்டதாகவும் அவரிடம் கூறும்!'' என்றும் சொன்னார்கள்.

அவ்விதமே செய்தார் கருவூலக்காப்பாளர். பலன்: சில நாட்கள் கழித்து, அந்த யூதர், தம் மனைவி மக்களுடன் ஆண்டகை அவர்களின் திருமடம் வந்து, அவர்களின் கரம்பிடித்து இஸ்லாத்தைத் தழுவினார்.

ஓர் இரவு ஆண்டகை அவர்களின் தவமடத்தில் இருந்த இரண்டு பக்கீர்களுக்கிடையே, கடன்பற்றிப் பெரிய தகராறு ஏற்பட்டது. வெளியே சென்ற ஆண்டகை அவர்கள் தவமடத்திற்குள் நுழைந்ததும், தகராறு திடீரென நின்றது. எனினும் ஒருவர் மற்றொருவர் மீது கொண்ட வஞ்சம் நீறு பூத்த நெருப்பாக அவர்களின் நெஞ்சகத்திலே தகித்துக் கொண்டிருந்தது.

ஸஹர் நேரத்தில் ஆண்டகை அவர்கள், தஹஜ்ஜுத் தொழுவதற்காக 'உளூ'ச் செய்யச் சென்ற பொழுது, தம்மிடம் கடன் வாங்கிய பக்கீர் தான் அவரென எண்ணி, பாயில் படுத்திருந்த பக்கீர் அவர்கள் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அடி அடியென்று அடித்தார். கீழே குப்புற வீழ்த்தி மிதி மிதியென்று மிதித்தார். இவ்வளவுக்கும் ஆண்டகை அவர்கள் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை.

பின்னர் அந்த பக்கீருக்குத் தாம் அடித்துக் கொண்டிருப்பது எவரெனத் தெரிய வந்ததும், அவர் திடுக்கமும் திகிலும் அடைந்து மயங்கிக் கீழே விழுந்தார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் ஓடோடிச் சென்று தண்ணீர் கொணர்ந்து, அவரின் முகத்தில் தெளித்து, அவரின் மயக்கத்தைத் தெளியவைத்து, அவரின் தலையைத் தம்தொடை மீது தூக்கி வைத்து, ''மகனே! ஒன்றுக்கும் கலங்காதீர். என் உயிரின் மீது ஆணையாக, நீர் எனக்கு நன்மையே அன்றித் தீமை செய்யவில்லை. இதற்காக இறைவன் உமக்கு நற்கூலி நல்குவானாக!'' என்று ஆறுதல் மொழி கூறினார்கள்.

பின்னர் அவர் நன்கு மயக்கம் தெளிந்ததும், தம் தலையைத் தரையிலே புரட்டித் தம்மை மன்னித்தருளுமாறு வேண்டினார். அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''அருளாளனாகிய அல்லாஹ், உம்மையும் என்னையும், நம் அனைவரையும் மன்னித்து ஆட்கொள்வானாக! நீர் என்னை அடிக்குந்தோறெல்லாம், நான் உம்மை மன்னித்தருளுமாறு தான் இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டிருந்தேன்'' என்று கூறினார்கள். சில காலம் கழித்து, அவர் இறந்தபொழுது ஆண்டகை அவர்களே, அவரை நல்லடக்கம் செய்வதற்கான அனைத்து அலுவல்களையும் செய்ததோடு, அவருடைய 'ஜனாஸா' தொழுகையையும் தலைமை தாங்கி நடத்தினார்கள்.

மற்றோர் இரவு இரண்டு பக்கீர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்ச் சண்டை, கைச்சண்டையாகியது. அப்பொழுது அங்கு வந்த ஆண்டகை அவர்கள், அவர்களை விலக்கிவிட முயன்ற பொழுது, அவர்களையே அந்த பக்கீர்களில் ஒருவர் அடித்து விட்டார். எனினும் ஆண்டகை அவர்கள், அதற்காக வருந்தவில்லை. தம்மிடம் அவர் வந்து மன்னிப்புக் கேட்ட பொழுது, அவரைப் பெருமனத்துடன் மன்னித்ததோடு, அவர்களுக் கிடையேயுள்ள தகராறை நன்முறையில் தீர்த்துவைத்து, அவ் இருவருக்காகவும் இறைவனிடம் இருகரம் ஏந்தி இறையஞ்சவும் செய்தார்கள்.

வேறோர் இரவு ஆண்டகை அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகைக்கு 'உளூ'ச் செய்வதற்கு ஊருக்கு வெளியே கடலோரமாக இருந்த ஓர் ஈச்சமரத்தோப்பிற்குச் சென்றார்கள். கடலில் கப்பல் ஒன்று கிடந்தது. அதில் கூலி ஆட்களை ஏற்றிக் கொண்டிருந்தான் கங்காணி. ஆண்டகை அவர்களைக் கண்டதும், அவர்களையும் கூலி ஆள் என எண்ணிக் கொண்டு, கப்பலில் ஏறிக் கொள்ளுமாறு கூறினான் அவன். மறுவார்த்தை பேசாது ஆண்டகை அவர்களும் கப்பலில் ஏறிக்கொண்டார்கள். பொழுது விடிந்தபொழுது, கப்பல் பத்ரிய்யா என்ற ஊரை அடைந்தது.

அப்பொழுது அவ்வழியே ஒரு பக்கீர் கூட்டம் வந்தது. அதிலிருந்து பக்கீர் ஒருவர் ஆண்டகை அவர்களை இலக்குக் கண்டு கொண்டு, அவர்களுக்கு மரியாதையுடன் 'ஸலாம்' உரைத்து, கரம் தழுவியதுடன்,

தம்முடன் வந்த ஏனைய பக்கீர்களுக்கும் அவர்களை அறிமுகப் படுத்தினார். அடுத்தகணம் அவர்கள் அனைவரும், அவர்களுக்குப் பெரும் மரியாதை செய்து, 'ஸலாம்' உரைத்து அவர்களின் முன் கைகட்டி நின்று கொண்டிருந்தனர்.

இதைக் கண்டதும் கங்காணிக்கும் கப்பலில் இருந்த வணிகர் களுக்கும் ஏற்பட்ட திகிலுக்கும், திடுக்கத்திற்கும் அளவில்லை. வணிகர்கள் ஆண்டகை அவர்களின் முன்வந்து, தங்களை மன்னித் தருளுமாறு வேண்டிக் கொண்டனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள், அவர்களை நோக்கி, ''எசமானர்களே! உங்களின் விருப்பத்தை நான் நிறைவேற்றினேன். அதன் காரணமாக, நான் நன்மையை ஈட்டிக் கொண்டேன். நான் தவமடத்தில் வேலையில்லாமல், வெறுமனேதான் இருக்கிறேன். ஆதலின் நான் யாதேனும் வேலை செய்ய வேண்டு மென்றால், உடனே என்னை அழைத்து வேலை வாங்குங்கள்! நான் நீங்கள் அழைத்த மறுகணமே வரத் தயாராயுள்ளேன். நோயாளிகளையும் பலவீனர்களையும், வேலையுள்ளவர்களையும், வலுக்கட்டாயமாக வேலைக்கு இழுத்துச் செல்லாதீர்கள்! அதனால் பாவமே மிஞ்சும்.'' என்று கூறினார்கள். பின்னர் அவர்கள் பெரிதும் வேண்டிக் கொண்டதன் பேரில், அவர்களின் பிழை பொறுத்து அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சினார்கள்.

பின்னர் கங்காணி வந்து, தாம் அவர்களை எவரென அறியாது கப்பலில் ஏற்றியதால், தம்மையே முழுக்குற்றமும் சாரும் என்றும், எனவே, தம்மை மன்னிக்குமாறும் வேண்ட, ''பேரருளாளனாகிய அல்லாஹ் உம் பிழை பொறுத்தருள்வானாக!'' என்று கூறி, அவருக்காக இறைவனிடம் இறைஞ்சியதோடு, ''நாம் இருவரும் இம்மையிலும் மறுமையிலும் அன்புச் சகோதரர்கள் என்பதற்கு அல்லாஹ்வே சான்று'' என்று கூறினார்கள். பின்னர் அவர் தம் பதவி துறந்து ஆண்டகை அவர்களின் தவமடம் வந்து, அவர்களிடம் தீட்சை பெற்று, ஆன்மீக வழியில் அடியெடுத்து வைத்து நடக்கலானார்.

ஆண்டகை அவர்கள் வெளியூர் சென்று விட்டு ஊர் திரும்பும் பொழுது, வெறுங்கையுடன் திரும்புவதில்லை. செல்வர்கள் தம் மனைவி மக்களுக்குப் பழங்கள், தின்பண்டங்கள் ஆகியவற்றை வாங்கி வருவது போன்று, அவர்கள் காட்டில் கிடக்கும் சுள்ளிகளையும், காய்ந்த கழிகளையும், பொறுக்கிக் கட்டாகக் கட்டித் தம் தலைமீது சுமந்து வந்து, ஊரிலுள்ள ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் கொடுத்து உதவுவார்கள்.

அவர்களிடம் பணமோ, வேறு பொருள்களோ இருக்கும் பொழுது, அவற்றை வாரி, வாரி ஏழை எளியவர்களுக்கு வழங்கும் இயல்புடைய

அவர்கள், அவை தம்மிடம் இல்லாத பொழுது, எவரேனும் உதவி தேடித் தம்மிடம் வரின், ''என் செய்வது? என்னிடம் உமக்குத் தர யாதொன்றும் இல்லையே. உமக்காக இறைவனிடம் 'துஆ'ச் செய்கிறேன். நீர் விரும்பு வரை, எவர் மூலமாவது உமக்குத் தர அல்லாஹ் போதுமானவன். இவ்விதச் சூழலில் அண்ணல் நபி (ஸல்) அவர்களும், இவ்வாறே செய்துள்ளார்கள்'' என்று கூறி அவருக்காக 'துஆ'ச் செய்து அனுப்புவார்கள்.

போலி வேடதாரிகளைக் கண்டால், அவர்களுக்குப் பிடிக்காது. ஓர் இளைஞன் சூஃபிகளின் உடையணிந்து கொண்டு, தெருக்களில் சுற்றித் திரிவதைக் கண்டு அவனை அழைத்து, ''மகனே! நீ அணிந்திருப்பது எவர் களின் உடை என்பதை அறிவாயாக! நபிமார்களுடைய உடை, வலிமார்களுடைய உடுப்பு. எனவே உன்னுடைய செயலும் அவர்களின் செயலுக்கு ஒப்ப இருக்கட்டும். அவ்விதம் இருக்க உன்னால் இயலாததாயின், பொதுமக்கள் போன்று உடையணிந்து கொள்வாயாக! அதில் யாதொரு தவறுமில்லை'' என்று அன்பில் தோய்ந்த அருளுரை பகர்ந்தார்கள்.

இவ்வாறு பிறரிடம் இதமாக அறிவுரை பகர்ந்த அவர்கள், ஒரு தடவை தம் மகன் அபூ ஸாலிஹுவை நோக்கி, ''மகனே! நீ, நான் செய்வது போன்ற பழக்க வழக்கங்களை மேற்கொள்ளவும், வணக்க வழிபாடுகளில் ஈடுபடவுமில்லையாயின் நான் உனக்குத் தந்தையு மில்லை; நீ எனக்கு மகனுமில்லை'' என்று கண்டிப்பு மிகுந்த குரலில் கூறினார்கள்.

அவர்கள், முரட்டுத் துணியையே அணிந்து வந்தார்கள். ''ஒருவன் அணிந்திருக்கும் துணி மெல்லியதாய் இருப்பின், அவனுடைய ஈமானும் (இறை நம்பிக்கையும்) மெல்லியதாய் இருக்குமே அன்றித் திடமாக இருக்காது'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கோடை காலத்தில் ஒரு விதச் சட்டை, குளிர்க்காலத்தில் ஒரு விதச் சட்டை என்று அணிவதில்லை. எல்லாக் காலத்திற்கும் ஒருவிதச் சட்டையையே அணிந்து வந்தார்கள். அவர்கள் தம் உடையைத் தாமே துவைத்துக் கொள்வார்கள். ஆற்றில் இறங்கி நின்று, அதனை அலசிக் கசக்கிப் பிழிந்து தூய்மைப்படுத்துவார்கள். பின்னர் அதனை விரித்துப் பிடித்து வெய்யிலிலே நின்று காய வைத்து, அதனை அணிந்து கொள்வார்கள்.

இதைக்கண்டு அவர்களின் சீடர்கள் வருத்தமுற்று, அவர்களுக்கு உதவி செய்ய ஓடோடி வந்து, ''எங்களிடம் அப்பணியைத் தாருங்கள்!

செய்கிறோம்'' என்று வேண்டின், ''ஊழியனுக்கு ஊழியம் செய்ய ஊழியன் தேவையா? நானே ஓர் ஊழியனாக இருந்து கொண்டு மற்றவர்கள் எனக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது முறையாகுமா?'' என்று கூறிவிடுவார்கள்.

மற்றொரு தடவை இவ்வாறே அவர்களின் சீடர்கள் அவர்களிடம் ஓடோடி வந்து அவர்களின் துணியைத் தாங்கள் துவைத்துத் தருவதாகக் கூறிய பொழுது, ''பணியாளர்கள் செய்வதை விட என் பணியைச் சிறப்பாகச் செய்யும் வழியை நான் அறிவேன். அது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் அருமை மகள் பாத்திமா (ரலி) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்ததாகும். திரிகையில் மாவு அரைத்துத் தம் கைகளும் காய்த்து விட்டன வென்றும், எனவே போரில் கிடைத்த அடிமைப் பெண்களில் ஒருத்தியைத் தமக்குத் தருமாறும், பாத்திமா (ரலி) அவர்கள் தம் தந்தையிடம் வேண்டிய பொழுது, அவர்கள் அவ்விதம் செய்யாது, 'நான் ஒரு திக்ரைச் சொல்லித் தருகிறேன். அதனை நீர் வழக்கமாக ஓதிவரின், பிறரின் உதவியின்றியே உம் அலுவல்கள் அனைத்துமே இலகுவாக முடிந்துவிடும்' என்று கூறி, 'நீர் படுக்கைக்குச் செல்லுமுன் 'ஸுப்ஹானல் லாஹ்' என்ற தஸ்பீஹை முப்பத்து மூன்று தடவையும், 'அல்ஹம்து லில்லாஹ்' என்ற தஹ்மீதை முப்பத்துமூன்று தடவையும், 'அல்லாஹு அக்பர்' என்ற தக்பீரை முப்பத்து நான்கு தடவையும் ஓதிக் கொள்ளும்!'' என்றும் கூறினார்கள். என் பாட்டியாருக்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்த அம்முறையை நானும் வழக்கமாகப் பின்பற்றி வருகிறேன்'' என்றும் கூறினார்கள்.

அவர்கள் பக்கீர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது தாகம் ஏற்படின், தண்ணீர் இருக்கும் இடம் சென்று தண்ணீர் அருந்திவிட்டு மீள்வர். இதைக் கண்டு பக்கீர்கள் வருத்தமுற்று, ''எங்களிடம் தண்ணீர் கொணரச் சொன்னால், நாங்கள் கொணரமாட் டோமா?'' என்று கூறின், ''என் உயிர் மீது ஆணையாக, நீங்கள் என் கண் மணியனையவர்கள்.உங்களிடம் வேலை வாங்கியவர்களில் ஒருவனாக அல்லாஹ் என்னை ஆக்காதிருப்பானாக!'' என்று பதில் கூறுவர்.

தம் தவமடத்தில் பாயில் படுத்துறங்கும் ஆண்டகை அவர்கள், சில பொழுது வெறுந்தரையிலும் தம்மைத் தம் கிர்க்காவால் போர்த்திக் கொண்டு படுத்துறங்குவார்கள். ஒரு தடவை அவர்கள் இவ்வாறு அங்கு படுத்துறங்கும் பொழுது, தம் சீடர்களுடன் அங்கு வந்த ஷைகு அலிய்யுல் காரீ(ரஹ்) அவர்கள் தம் சீடர்களை நோக்கி, ''இங்கு இவர்கள் தம் கிர்க் காவால் தம் உடலைப் போர்த்திக் கொண்டு வெறுந்தரையில் படுத்துறங்கு கிறார்கள். ஆனால், முஹம்மதிய்யத்தான இருகொடிகள் அவர்களின்

தலைமாட்டிலும், கால்மாட்டில் நிறுவப்பட்டு, வானளாவ உயர்ந்து நிற்பதை நான் காண்கிறேன்'' என்று கூறி ஆண்டகை அவர்களை வாயாரப் புகழ்ந்தார்கள்.

இவ்வாறு முரட்டு உடை அணிவதையும், காய்ந்த ரொட்டி உண் பதையும், கட்டாந்தரையில் படுத்துறங்குவதையும் வழக்கமாகக் கொண்டிருந்த ஆண்டகை அவர்கள், திடீரென உயர்தரமான மெல்லிய உடைகளை அணியத் தொடங்கினார்கள். அவற்றைச் சில நாட்கள் அணிந்தபின் ஏழைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கவும் செய்தார்கள்.

அவர்கள் அணிந்திருந்த அழகிய உயரிய உடைகளைக் கண்டு பக்தாதின் அமீர் ஒருவர், அவ்வித உடைகளைத் தாமும் அணிந்து மகிழ எண்ணி, நாட்டின் நாலா பக்கங்களில் ஆட்களை அனுப்பித் தேடியும் அவருக்குக் கிடைக்கவில்லை.

அவர்கள் உயர்தரமான உடை அணிவதோடு மட்டுமல்லாது, உயர் தரமான உணவு வகைகளை உண்டு, பஞ்சு மெத்தைகளில் படுத்துறங் கவும் தொடுத்ததைக் கண்டு, அவர்களின் சீடர்களுக்கும், குறிப்பாக அவர்களின் மருகர் ஷைகு அலிக்கும் பெரிதும் வியப்பேற்பட்டது.

இதனை அவர்களின் முகக்குறியால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், ஒருநாள் அவர்களை நோக்கி, இவ்விதம் கூறினார்கள்: ''என்னுடைய இப்போதைய போக்கைக் கண்டு நீங்கள் வியப்பும் திகைப்பும் அடைகிறீர்கள். நான் எதையும் நானாகச் செய்யவிலலை. என் துறவு நிலையைக் கண்டு, என் மீது இரங்கி, 'போதும் உம் துறவு நிலை. இனிமேல் நன்றாக உண்ணும், உடுத்தும், உறங்கும்' என்று இறைவன் பணித்தான். நான் மறுத்துரைத்தேன். எனினும் அவன் கேட்கவில்லை. மீண்டும், மீண்டும் வற்புறுத்திக் கூறி, 'நீர் இன்ன நேரத்தில் இன்ன உணவை உண்ண வேண்டும். நீர் இன்ன நேரத்தில், இன்ன உடை உடுத்த வேண்டும்' என்றும் நிர்ணயித்துத் தன்மீது ஆணையிட்டுக் கூறினான்.

''நானோ அவனின் அடிமை, அவனிட்ட பணியைச் செய்வதே என் னுடைய கடமை, எதிர்த்துப் பேசுவது மடமை எனக்கருதி அவனிட்ட, ஆணைக்குத் தலைசாய்த்தேன். இதுவே என்னுடைய இப்போதைய நிலைமை.

''என்னுடைய இரகசியத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்புத் தோழர்களுக்கு அடுத்த படித்தரத்திலுள்ள, மிகவும் மேலான இறைநேசச் செல்வர்களில் சிலரில் நானும் ஒருவன்.

''நீங்கள் என்னுடைய இப்போதைய நடை, உடைகளைக் கவனித்து, என்னைப் பின்பற்ற வேண்டாம். என்னுடைய முந்தையத் துறவு நிலையைப் பின்பற்றுங்கள்!''

ஒரு தடவை அவர்களின் சீடர்களில் ஒருவர் அவர்களிடம் வந்து, ''தாங்கள் ஒரு 'குத்பு' ஆக இருக்கிறீர்கள்'' என்று கூறியபொழுது, ''உம்முடைய ஷைகை குத்பிய்யத்தை விட்டும் தூய்மைப்படுத்தி வையும்!'' என்று அவர்கள் கூறினார்கள்.

''அவ்விதமானால் தாங்கள் ஒரு 'கௌது' ஆக இருக்கிறீர்கள்'' என்று அவர் கூறிய பொழுது, ''உம்முடைய ஷைகை கௌதியத்தை விட்டும் தூய்மைப்படுத்தி வையும்!'' என்று அவர்கள் கூறினார்கள். இதன் பொருள், 'என்னை நீ குத்பு என்றும் சொல்லவேண்டாம்! கௌது என்றும் சொல்ல வேண்டாம்!' என்பதேயாகும். இவ்வாறு ஆண்டகை அவர்கள், அடக்கத்துடன் கூறித் தாம் இந்தப் படித்தரங்களையெல்லாம் கடந்து நிற்பதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்கள்.

எவரேனும் தம்மைப் புகழ்ந்துரைப்பின், அந்தப் புகழுரை அல்லாஹ்விடத்திலும் அவனுடைய திருத்தூதரிடத்திலும், அங்கீகரிக்கப்பட வேண்டுமே என்று அஞ்சுவார்களே யொழிய, அது கேட்ட அவர்கள் மகிழ்ச்சியுறுவதில்லை. ஸையிது ஹஸன் ஷீஜாரி (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களின் திருமுன் வந்தமர்ந்து, அவர்கள் மீது தாம் எழுதி வைத்திருந்த சில புகழ்ப்பாக்களைப் பாடிய பொழுது, ''என் சிறிய தந்தையின் மகனே! இந்தப் புகழ்ப்பாக்களை, அல்லாஹ்வும், அவனுடைய திருத்தூதரும் ஏற்றுக் கொள்வார்களாயின், இந்த வாணிபத்தை ஆதாயம் நல்கிய வாணிபமாகக் கொள்ளலாம்'' என்று ஆண்டகை அவர்கள் அடக்கத்துடன் கூறினார்கள்.

அன்றிரவு ஸையிது ஹஸன் ஷீஜாரி (ரஹ்) அவர்கள் கனவொன்று கண்டனர். அதில் பாத்திமா (ரலி) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''நீர் என் மகன் அஹ்மதைப் புகழ்ந்துரைத்த வாணிபம் ஆதாயத்தை அளித்து விட்டது. அது அல்லாஹ்வுடையவும், அவனுடைய திருத்தூதருடையவும் அங்கீகாரத்தைப் பெற்று விட்டது. இந்த நற்செய்தியை என் பிள்ளையிடம் போய்க் கூறி, அவருக்கு என் ஸலாமும் உரைப்பீராக!'' என்று கூறி மறைந்தனர்.

அடுத்த நாள் ஸையிது ஹஸன் ஷீஜாரி (ரஹ்) அவர்கள் ஆண்டகை அவர்களின் திருமுன் சென்று, ஸலாம் உரைத்த பொழுது புன் முறுவலுடன் பதிலுரைத்த ஆண்டகை அவர்கள் ''நீர் கண்ட காட்சியை எடுத்துரைத்து, என் மனத்தை மகிழ வையும்!'' என்று கூறினர்.

அப்பொழுது ஸையிது ஹஸன் ஷீஜாரி (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

ஆண்டகை அவர்களின் மாண்பு அளவிடற்பாலதாயிருந்தது. ஃபதாயிஹ்வின் அண்மையில் உள்ள யூனியா என்னும் ஊரில், ஷைகு இஸ்மாயீல் என்னும் செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்கு அழகிய பூங்கா ஒன்று இருந்தது. அதனை விலைக்கு வாங்க எண்ணி, விலைக்குக் கேட்டார் கத்தீபு ஜமாலுத்தீன் என்பவர். ஒரு தடவையல்ல, பல தடவைகள். எனினும், ஷைகு இஸ்மாயீல் அதற்கு இணங்கவில்லை.

அப்பூங்காவை எவ்வாறாவது பெற வேண்டுமென்று விரும்பிய கத்தீபு ஜமாலுத்தீன் இது பற்றி தம் ஆன்மீக ஆசான் ஸையிது அஹ்மது கபீர் (ரஹ்) அவர்களிடம் கூறி, அவர்கள் மூலமாக அதனைப் பெறலாமென்று எண்ணி ஃபதாயிஹ் சென்று ஆண்டகை அவர்களைக் கண்டு தம் வேணவாவை எடுத்துரைத்தார்.

''நல்லது; நானே வந்து உமக்காக அவரிடம் பரிந்துரைத்து, அதனை வாங்கித் தருகிறேன்'' என்று கூறி யூனியா கிளம்பிவிட்டார்கள் ஆண்டகை.

யூனியா சென்ற அவர்கள், ஷைகு இஸ்மாயீலின் இல்லம் சென்ற பொழுது, அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. கார் பெற்ற தோகையெனக் களிப்புற்று, ஆண்டகை அவர்களை வரவேற்று உபசரித்த அவர், அதன்பின் ஆண்டகை அவர்களை நோக்கி, ''வந்த அலுவல் யாதோ?'' என்று வினயமாக வேண்டி நின்றார்.

''உம்முடைய பூங்காவை விற்பதானால், அதனை எனக்குத் தாரும்! அதற்குத் தகுந்த விலை தருகிறேன்'' என்று ஆண்டகை அவர்கள் கூறினார்கள்.

அதுகேட்டு அவர் முகம் சாம்பியது, ''ஷைகு அவர்களே! நான் அதனைப் பெரிதும் நேசிக்கிறேன். அதனை நான் விற்க விரும்பவில்லை'' என்று அவர் கூறினார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''அதற்கு நீர் என்ன விலை கேட்டாலும் தருகிறேன். எனக்கு அதனைத் தருவீராக!'' என்று கூறினார்கள்.

அதற்கு அவர், ''ஷைகு அவர்களே! என்னை மன்னியுங்கள்!'' என்று அழாக் குறையாகக் கூறினார்.

இப்பொழுது ஆண்டகை அவர்களுக்கோ என்ன செய்வதென்றே விளங்கவில்லை. ''நாம் அதனை கத்தீபு ஜமாலுத்தீனுக்கு வாங்கிக்

கொடுப்பதாக வாக்குறுதியளித்துவிட்டோமே. என்ன செய்வது?'' என்று அவர்கள் கவலை மீக்குற்று, தலை கவிழ்ந்த வண்ணம் வீற்றிருந்தார்கள்.

அது கண்டு பெரிதும் திடுக்குற்ற ஷைகு இஸ்மாயீல், தம் மீது வருத்த முற்றுத் தான் ஆண்டகை அவர்கள் இவ்வாறு வீற்றிருக்கின்றார்களோ என எண்ணி, ''ஷைகு அவர்களே! என்னுடைய பூங்காவுக்குப் பிரதியாக நான் கேட்பதைத் தருகின்றீர்களா?'' என்று வினவினார்.

'எது கேட்டாலும் தருகிறேன்'' என்று திடமாகப் பதில் கூறினார்கள் ஆண்டகை அவர்கள்.

அப்பொழுது ஷைகு இஸ்மாயீல், ''என்னுடைய பூங்காவுக்குப் பிரதியாக சுவனப் பூங்காவின் நடுவே அமைந்த ஓர் ஒய்யாரமான மாளிகையை எனக்குத் தர வேண்டும்'' என்று கூறினார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''உலகத்துப் பொருளுக்குப் பிரதியாக வானத்துப் பொருளைக் கேளாதீர்! அதற்குப் பிரதியாக இங்குள்ள எப்பொருளை வேண்டுமானாலும் கேளும்! தருகிறேன்'' என்று கூறினார்கள்.

ஆனால் ஷைகு இஸ்மாயீலோ, தாம் கேட்டதே வேண்டுமென்று அடம் பிடித்தார்.

ஆண்டகை அவர்கள் சற்று நேரம் தலை கவிழ்ந்து வீற்றிருந்தார்கள். அதன்பின் தம் தலையை நிமிர்த்தினார்கள். அப்பொழுது அவர்களின் உடல் முழுவதும் மஞ்சள் நிறமாகத் தோற்றமளித்தது. அவர்கள் ஷைகு இஸ்மாயீலை நோக்கி, ''நல்லது உம்முடைய பூங்காவுக்குப் பதிலாக சுவனப் பூங்காவின் நடுவே அமைந்த ஒரு மாளிகை உமக்குத் தரப்படும்'' என்று கூறினார்கள்.

அதுகேட்டுப் பெரிதும் மகிழ்வுற்ற ஷைகு இஸ்மாயீல், ''அதற்கான கிரயப் பத்திரம் எழுதித் தாருங்கள்!'' என்று வினயமாக வேண்டினார்.

உடனே ஆண்டகை அவர்கள், மையும் தாளும் கொண்டு வரச் செய்து, பின்வருமாறு கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள்.

''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்,

அல்லாஹ்வின் அடிமையும், அபுல் ஹஸன் அலீயின் மகனுமான அஹ்மது, அப்துல் முன்யிமுடைய மகன் இஸ்மாயீலுக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இஸ்மாயீலுக்குச் சொந்தமாக யூனியாவில் இருக்கும் பூங்காவிற்குப் பதிலாக, அல்லாஹ்வின் பேரருளால் கீழே கண்ட சுவர்க்கத்துத் தோட்டத்தைக் கிரயம் பண்ணிக் கொடுக்கப்பட்டது.

ஜன்னத்துல் அதன், ஜன்னத்துல் மவுவா, ஜன்னத்துல் குல்து, ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் ஆகிய இந்த நான்கு சுவன எல்லைகளுக்கும் உட்பட்ட தோட்டமும், அதன் நடுவேயுள்ள மாளிகையும், அங்குள்ள மலைகள், ஆறுகள், ஹூருல் ஈன் என்னும் கண்ணழகிகள், வில்தான் என்னும் ஊழியச் சிறுவர்கள் முதலியனவாகும்.

இவற்றை இஸ்மாயீல் என்றென்றும் ஆண்டு அனுபவித்துக் கொள்வாராக! இதற்கு சாட்சி: அல்லாஹுத் தஆலா.பிணை: அடியில் கையெழுத்திட்டிருப்பவன்.''

இங்ஙனம்,
பத்திரம் எழுதியவனும் பிணை நின்றவனுமான
அஹ்மது.

பத்திரத்தைப் பெற்று இஸ்மாயீல் அகமகிழ்ந்தார். யூனியாவிலுள்ள தோட்டத்தைப் பெற்று, கத்தீபு ஜமாலுத்தீன் உளம்பூரித்தார். ஆண்டகை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஃபதாயிஹ் திரும்பினார்கள்.

பின்னர் ஷைகு இஸ்மாயீல் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது, அந்தக் கிரயப்பத்திரத்தைத் தம்முடன் வைத்துத் தம்மை நல்லடக்கம் செய்யுமாறு தம் மக்களுக்கு இறுதி உரை பகர்ந்தார். அவ்வாறே அவர் இறந்ததும், அவருடைய மக்கள் செய்தார்கள். அடுத்த நாள் அவரின் அடக்க விடத்தின் மீது ''கத் வஜதனா மா வ அதனா ரப்பனா ஹக்கா'' (நமக்கு நம்முடைய இறைவன் வாக்களித்ததை நாம் உண்மையாகப் பெற்றுக் கொண்டோம்) என்னும் திருமறை வசனம் பொறிக்கப்பட்டிருந்ததை மக்கள் கண்டதும், அவர்களால் தம்முடைய கண்களையே நம்ப இயலவில்லை.

ஆண்டகை அவர்களிடம் தீட்சை பெறுவதற்காக மட்டுமல்லாது, தம்முடைய தொல்லைகள், நோய்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து அவர்களிடமிருந்து நிவாரணம் பெறுவதற்காகவும் மக்கள் அவர்களின் தவச்சாலைக்கு நாள்தோறும் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் ஆண்டகை அவர்கள், தம் கையினாலேயே தஃவீஸ் எழுதிக் கொடுத்து வந்தார்கள். எழுதுவதற்கு மையில்லாத போது, அவர்கள் வெள்ளைக் காகிதத்தில் வெறும் எழுது கோலால் எழுதிக் கொடுப்பார்கள். பார்வைக்கு அதில் யாதோர் எழுத்தும் தெரியாது.

எனினும், அதனையும் மக்கள் மனநிறைவுடன் பெற்றுச் சென்று நலன் பெற்று வந்தனர்.

ஒருநாள் மை தோய்க்கப்படாத வெறும் எழுது கோலால் எழுதப் பெற்ற தஃவீஸை அவர்களிடமிருந்து பெற்றுச் சென்ற ஒருவர் அவர்களைச் சோதிக்க விரும்பி, சில நாட்கள் கழிந்து, அதே வெள்ளைத் தாளை அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து, அதில் தமக்கு தஃவீஸ் எழுதித் தருமாறு வேண்டிக் கொண்டார். அதனை வாங்கிப் பார்த்த அவர்கள் அவரை நோக்கி, ''மகனே! இது வெறும் வெள்ளைத் தாள் அல்லவே. இதில் ஏற்கனவேயே எழுதப்பட்டுள்ளதே'' என்று கூறி அவரிடம் அதனைத் திருப்பிக் கொடுத்தார்கள். அது கண்டு அச்சமும் அத்துடன் வெட்கமும் அடைந்தார் அவர்.

மற்றொரு நாள் அவர்களின் ஆன்மீக மாணவர்களான மஆல் இப்னு யூசுஃப் என்பவரும், அப்துல் முன் இம் என்பவரும், ஃபதாயிஹை அடுத்த ஒரு மலைச்சாரலில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அப்துல் முன் இம் மஆலை நோக்கி, ''நம் ஆசான், நமக்குப் போதித்துத் தந்தவற்றை நீர் பின்பற்றி வருவதனால், உமக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன?'' என்று வினவினார். அதற்கு மஆல், ''நம் ஆசான் நம்மை நோக்கி, ''நீங்கள் ஒன்றை விரும்பின், அதனை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுங்கள் என்று அவர்கள் நமக்கு அறிவுரை பகரவில் லையா? ஆதலின் அவனே நம் நாட்டத்தை நிறைவேற்றித் தரப்போது மானவன். நம்மால் ஆவது ஒன்றுமில்லை'' என்று பதில் கூறினார்.

அதற்கு அப்துல் முன் இம், ''நான் இப்பொழுது ஒன்றை நாடுகின்றேன். நாம் இருவரும் நரகத்திலிருந்து விமோசனம் பெற்றவர்கள் என்று எழுதப்பட்ட பத்திரம் ஒன்று இப்பொழுது விண்ணிலிருந்த வந்து நம் முன் விழ வேண்டும்'' என்று கூறினார்.

அதற்கு மஆல், ''இறைவன் நாடினால் அது நடக்கும். அது அவனுக்கு இயலாத செயலல்ல. ஆனால், இப்பொழுதுள்ள கேள்வி யெல்லாம், நாம் அதற்குத் தகுதியானவர்கள் தாமா, அல்லவா என்பதே யாகும்'' என்று மறுமொழி பகர்ந்தார்.

இவ்வாறு அவர் கூறி வாய் மூடுமுன், விண்ணிலிருந்து ஒரு தாள் வந்து அவர்களின் முன் விழுந்தது. அதனை அவர்கள் கையிலெடுத்துப் பார்த்த பொழுது, அதில் யாதொன்றும் எழுதப்பட்டிராததைக் கண்டு பெரிதும் ஏமாற்றமுற்று, அதனை ஆண்டகை அவர்களிடம் கொண்டு வந்து காட்டினர். வேறு ஒன்றும் கூறவில்லை.

அதனைக் கையில் வாங்கிப் படித்ததும் ஆண்டகை அவர்களின் கண்கள் குளமாயின. குப்புற வீழ்ந்து இறைவனைத் துதி செய்த பின், தம்

தலையை உயர்த்தி, ''எல்லாப் புகழும் இறைவனுக்கே! அவன் என்னுடைய ஆன்மீக மாணவர் இருவருக்கும் இவ்வுலகில் வைத்தே நரக விமோசனப் பத்திரம் வழங்கி, அதனை நான் கையில் வாங்கிக் கண்ணால் பார்க்கவும் வழி செய்துள்ளான்'' என்று கூறினார்கள்.

அது கேட்டு அவர்கள் இருவரும், ''ஷைகு அவர்களே! அதில் ஒன்றும் எழுதப்படாமல் இருக்கத் தாங்கள் இவ்வாறு கூறுகின்றீர்களே'' என்று வியப்புடன் வினவினர்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''என் மக்களே! 'குதுரத்' என்ற கை, மை கொண்டு எழுதாது, 'நூரானியத்' என்ற ஒளியாலேயே எழுதும், அதிலே, உங்கள் இருவருக்கும் நரக விமோசனம் வழங்கியுள்ளதாக ஒளி எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது'' என்று பதிலிறுத்தார்கள்.

பின்னர் அவர்கள் இருவரில் அப்துல் முன் இன், முதலாவதாக இறந்தார். அவரே அப்பத்திரத்தை விரும்பினவராதலின் அவருடைய கஃபனில் அது வைக்கப்பட்டு அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

ஆண்டகை அவர்கள் ஒருநாள் தம் சீடர்களை நோக்கி, ''ஒவ்வோர் இறைநேசச் செல்வரும், ஒரு நபியின் இதயத்தைப் பெற்றிருக்கிறார்கள். நான் என் பாட்டனார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் இதயத்தைப் பெற்றுள்ளேன்'' என்று கூறினர்.

நபிமார்களைப் பற்றியும், வலிமார்களைப்பற்றியும், அவர்கள் குறிப் பிடும் பொழுது, ''நபி ஒரு மரமென்றால், அதன் அடியில் முளைக்கும் புற்பூண்டுகளே வலிமார்களாவர். ஒரு மரத்தின் கீழே ஏராளமான புல் பூண்டுகள் முளைப்பது போன்று, ஒரு நபியின் கீழே ஏராளமான வலிமார்கள் இருப்பார்கள்'' என்று கூறினார்கள்.

மூன்று பண்புகள் ஒருவரிடம் குடிகொண்டிருந்தால், அவர் வலியாக முடியாது. அவை தீயகுணம், பெருமை, கஞ்சத்தன்மை என்று அவர்கள் கூறினார்கள்.

நபித் தோழர்களைப் பற்றியும், வலிமார்களைப் பற்றியும், அவர்கள் பேசும் பொழுது, ''வலிமார்கள் நபித் தோழர்களின் படித்தரத்தை எய்தப் பெறமாட்டார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் உறவு கொண்டு, நூரெ முஹம்மதிய்யா தம் நெஞ்சங்களிலே பாயப் பெற்றதன் காரணமாக, நபித் தோழர்களின் படித்தரம் மிகவும் மாண்புடையதாகும். அவர்களை எவராலும், எந்த வணக்கத்தாலும் எட்டிப்பிடிக்க இயலாது'' என்று கூறினார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் தம் தவமடத்தில் இருக்கும் பொழுது', ஒருவர் அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வுக்கு ஐயாயிரம் பெயர்கள் இருக்

கின்றது'' என்று கூறினார். அது கேட்டு அங்கிருந்த சீடர்களின் புருவங்கள் மேலேறின. அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''ஏன் அல்லாஹ்வின் பெயர்கள் இவ்வளவு தான் என்று வரையறுத்துக் கூறிவிட்டீர்? உலகில் இறைவனின் படைப்புகள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவ்வளவு படைப்புகளுடையவும் எண்ணிக்கை அளவும், உலகில் மணல்களும், இலைகளும் எவ்வளவு இருக்கின்றனவோ, அவ்வளவு எண்ணிக்கை அளவும் அல்லாஹ்வுக்குப் பெயர்கள் இருக்கின்றனவே'' என்று கூறினர். அதுகேட்டுச் சீடர்களின் வாய்கள் வியப்பால் திறந்து கொண்டன.

வேறொரு நாள் ஷைகு அலீ இப்னு உதுமான் என்னும் பெரியார், அவர்களை அணுகி, '''ஒவ்வொரு தரீக்காக்காரர்களும், ஒவ்வொரு திக்ரைச் சொல்லிக் கொடுக்கிறார்களே, உண்மையில் திக்ருகளில் மேலான திக்ரு தான் எது?'' என்று வினவினார், அடுத்தகணம் அவர்களின் வாயிலிருந்து ''லா இலாஹ இல்லல்லாஹ¬ என்னும் கலிமாவே திக்ருகளிலெல்லாம் மேலான திக்ராகும். இவ்வாறே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பல தடவை கூறியுள்ளனர்'' என்னும் பதில் வந்தது.

இதன்பின் அவர்கள் அவரைத் தனியே அழைத்துச் சென்று, ''உதுமானின் மகனே! திக்ருகளில் மேலானது கலிமா தையிபாவாக இருந்த போதினும், அதனை மனத்திற்குள்ளே பாராயணம் பண்ணுவது மாண்புடையதாகும், இறைவனும் தன்னுடைய திருமறையில், 'உம்முடைய ரப்பைக் கவலையோடும், அச்சத்தோடும், வார்த்தைகள் வெளிப்படா வண்ணம் காலையிலும் மாலையிலும் திக்ரு செய்யும்! நடுவிலும் மறந்துவிடாதீர்!' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவுரை பகர்கின்றான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களும் தம் தோழர்களை நோக்கி, 'நீங்கள் செவிடனையோ மறைவானவனையோ அழைக்கவில்லை. அவன் செவியுறுவோனாகவும் உங்களை நெருங்கியவனுமாகவும் உள்ளான்' என்று கூறியிருக்கிறார்கள்.

''மேலும் அவர்கள் 'கைருல் திக்ரி அல் கஃபிய்யு' (திக்ருகளில் மாண்புடையது, உள்ளத்தின் உள்ளே செய்யும் திக்ரு கஃபீயேயாகும்) என்றும் மொழிந்துள்ளார்கள். அந்த திக்ரு கஃபீயின் காரணமாக, அல்லாஹ் அல்லாத அனைத்தும், உள்ளத்திலிருந்து அகற்றப்பட்டு, உள்ளம் பளிங்கு போல் ஒளிர்கிறது. அதில் ஆன்மீக இரகசியங்கள் பளிச்சிடுகின்றன.''

''மார்க்க அறிஞர்கள் தாம் கற்ற கல்வி மூலம் செயலாற்றி, அதன் காரணமாக ஆன்மீகத் தெளிவு பெறுகின்றார்கள். ஆனால், ஆன்மீக

ஞானிகள், இறைவனை அல்லும் பகலும் அனவரதமும் ஜெபித்து அதன் காரணமாக ஆன்மீக இரகசியங்களை அறியவருகிறார்கள். ஓர் அரசரின் அவைக்கு இரு புகழ்பெற்ற ஓவியர்கள் ஒரே சமயத்தில் வந்து, சேர்ந்தார்கள். ஒருவர் சீனாவிலிருந்து; மற்றொருவர் ரோம நாட்டிலிருந்து இருவரும் தம் தம் திறமையைப்பற்றிப் பெரிதும் எடுத்துரைத்தார்கள். அவர்களில் எவர் திறமையாளர் என்பதை அறிவதற்காக, அரசர் ஓர் ஏற்பாடு செய்தார். எதிர் எதிரே உள்ள இரண்டு சுவர்களை அவர்களிடம் காட்டி, ''இதோ இரு சுவர்கள் இருக்கின்றன. இவற்றில் நீங்கள் உங்களின் கைத் திறனைக் காட்டி ஓவியம் தீட்டுங்கள்! எவர் சிறந்த ஓவியம் தீட்டு கின்றாரோ, அவருக்குப் பரிசில் வழங்கப்படும்'' என்று கூறினார். ஒருவர் தீட்டும் ஓவியத்தை மற்றவர் பாரா வண்ணம், இரு சுவர்களுக்கும் இடையே நீக்க முடியாது திரையிடப்பட்டது. ''கெடு, ஒரு மாதம்'' என்றும் கூறப்பட்டது.

''ரோம நாட்டு ஓவியர், பலவித வண்ணங்களால், அற்புதமான ஓவியம் ஒன்றைத் தீட்டினார். ஆனால் சீனநாட்டு ஓவியரோ, தனக்குரிய சுவரில் யாதொரு ஓவியமும் தீட்டவில்லை. பல்வேறு மூலிகைகளாலும், மருந்துகளாலும், அதனைத் தேய்த்துப் பளிங்கு போல் பளபளப்பாக்கிக் கொண்டிருந்தார்.

''குறித்த தவணையும் வந்தது. அரசர் தம் அமைச்சர் பிரதானி களுடன், அவற்றைப் பார்த்துப் பரிசில் வழங்க வந்தார். உடனே திரை நீக்கப்பட்டது. முதலில் அனைவருடைய பார்வையும் ரோம நாட்டு ஓவியர் வரைந்திருந்த ஓவியத்தின் மீது பாய்ந்தன. திரும்பி சீன நாட்டு ஓவியரின் சுவரை நோக்கினார்கள். என்ன வியப்பு! அதே ஓவியம் அதிக ஒளியுடன், அச்சுவர்களில் பிரதிபலித்தது. சீனநாட்டு ஓவியரின் அறிவை அனைவரும் வியந்தார்கள். சுண்ணாம்பு தடவப்பட்ட சுவரைப் பளிங்கை விடப் பள பளப்பாகிய அவரின் கைத்திறனைப் பாராட்டினார்கள். முதற்பரிசு சீன நாட்டு ஓவியருக்கு வழங்கப்பட்டது. இரண்டாம் பரிசுதான் ரோம நாட்டு ஓவியருக்குக் கிடைத்தது.

''இரண்டாம் பரிசு பெற்ற ரோம நாட்டு ஓவியருக்கு, மார்க்க அறிஞர் களை உவமை கூறலாம். அவர்கள் பல்வேறு நூல்களைப் பயின்று, ஆன்மீக ஞானத்தை எய்தப் பெறுகின்றனர். ஆனால், முதல் பரிசுபெற்ற சீன நாட்டு ஓவியரோ, தம் உள்ளத்தை திக்ரினால் கழுவித் தூய்மைப் படுத்திப் பளிங்கு போல் ஆக்குகின்றனர். அதன் காரணமாக அதில் ஆன்மீக இரகசியங்கள் பிரதிபலிக்கின்றன. அல்லாஹ்வே 'தஜல்லி' ஆகிறான்'' இவ்விதம் இறைஞான போதம் வழங்கினார்கள்.

அவர்கள் தம் தவமடத்தில் திங்கள், வியாழன் தவிர, ஏனைய நாட்கள் ஃபிக்ஹு,தப்ஸீர், ஹதீது ஆகியவற்றைத் தம் சீடர்களுக்குக்

கற்றுக் கொடுப்பார்கள். திங்களும், வியாழனும், ளுஹர் தொழுகைக்குப் பின் நாற்காலியில் அமர்ந்து மக்களுக்கு அறபோதம் வழங்குவார்கள். ஓரிலட்சம் பேர்களுக்கு மேல் அதைக் கேட்டு நன்மையடைவார்கள்.

அவர்கள் தம் தரீக்காவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''நம்முடைய தரீக்கா மூன்று செயல்களின் மீது நிர்மாணிக்கப்பட்டதாகும். அவை (1) எதனையும் பிறரிடம் கேளாதிருப்பது, (2) தானாக வருவதைத் தட்டாமல் ஏற்றுக் கொள்வது, (3) நாளைக்கென எதனையும் சேமித்து வைக்காதிருப்பது'' என்று கூறினார்கள்.

மேலும், ''இரவில் விண்ணிலிருந்து இறையருள் பொழிகிறது. அதனை விழித்திருந்து வணங்குகிறவர்கள் எய்தப் பெறுவார்கள்.

''தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள்! வாலிலுள்ள உரோமங்களில் கடைசி உரோமமாக இருங்கள்! ஏனெனில் அடி விழுவதெல்லாம் தலையில் தான்'' என்றும் அவர்கள் அருள் உரை நிகழ்த்தினார்கள்.

அவர்கள் தம் சீடர் அப்துஸ் ஸமீஉ (ரஹ்) அவர்களுக்கு எழுதிய அறவுரைகள் 'ஹிகமுர் ரிஃபாயீ' என்னும் பெயருடன் விளங்குகின்றன. அதில் ஆண்டகை அவர்கள் அருமை அருமையான அருள்ஞான உரைகளை வாரி வழங்கியுள்ளார்கள். அவற்றில் சில வருமாறு:

''ஒருவன் அனைத்தையும் இறைவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு அமைதியாய் இருப்பின், அவனுக்கு எவரும் உதவி செய்யத் தேவை இல்லை; இறைவனே அவனுக்கு உதவி செய்வான்.''

''ஓர் இறை நம்பிக்கையாளன் அழுது கண்ணீர் வடித்து இறைவனிடம் மன்றாடின் அவனுக்குத் தீங்கிழைப்பவன் பாரசீகப் பேரரசர் குஸ்ரூவாக இருந்தபோதினும் தூள் தூளாக்கப்படுவான்.''

''ஒருவன் தனக்கு ஆற்றல் உண்டு என்று எண்ணுவது மடமையாகும். அவ்விதமானால், அவன் மரணத்தை வெற்றி கொள்ளலாமே?''

''நபியே! அல்லாஹ்வும் உம்மைப் பின்பற்றியொழுகும் இறை நம்பிக்கையாளர்களும் உமக்குப் போதுமானவர்கள்'' என்று இறைவன் அண்ணல் நபி(ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறுகிறான். இங்கு இறை நம்பிக்கையாளர்கள் என்று இறைவன் கூறுவது, 'வலி' மார்களையே ஆகும். அவர்கள், இறைவனிடம் தனிச்சிறப்பைப் பெற்றவர்கள். அவர்களே அல்லாஹ்வின் திருக்கூட்டத்தினர். அவர்களைக் கொண்டே அல்லாஹ் 'ஷரீஅத்' மட்டுமின்றி, ஹகீகத்தையும் உலகில் வளர்த்துப் பாதுகாக்கிறான். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மாண்பினை அவர்களே அகிலமெங்கணும் பறை முழக்குகிறார்கள்.''

''பெரியார்களின் பேச்சுகளில் நமக்கு ஐயம் ஏற்படின், அவர்களின் பேச்சுக்கு தவறான பொருள் கொள்ளாது, நல்ல பொருளையே காண முயலவேண்டும். ஹல்லாஜ் (ரஹ்) அவர்களின் காலத்தில், நான் உயிரோடிருந்திருப்பின், அவர்களைக் கழுவிலேற்றும்படியான 'பத்வா' வில் நானும் கைச்சாத்திட்டு விட்டு, அவர்களைக் கழுவிலேற் றாமல் காப்பாற்றுவதற்கான அத்தனை ஆதாரங்களையும் சேகரித்துச் சமர்ப்பிப் பதோடு அவர்களைக் கழுவிலேற்றாது செய்ய அவர்கள் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருமாறு செய்திருப்பேன். பேரருளாளனாகிய அல்லாஹ்வின் அருள் வாசல் என்றும் அடைக்கப் படுவதில்லையே''.

இவ்வாறு, அருமை அருமையான கருத்துக்களைத் தம் சீடருக்கு எடுத்துரைத்து, அறபோதம் செய்த ஆண்டகை அவர்கள், தங்களின் அற போதங்களைப் பின்பற்றக் கூடிய முதல் சீடராக அவர்களே இருந்தார்கள். பணிவும், பொறுமையும் அவர்களின் உள்ளத்தைத் தங்களின் இல்லமாகக் கொண்டிருந்தன. இறை நாட்டத்திற்கு அவர்களின் தலை எப்பொழுதும் சாய்த்து நின்றது.

ஒரு தடவை இறைவன் அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''அஹ்மதே! உம்முடைய நாட்டம் என்ன? கூறும்! நிறை வேற்றித் தருகிறேன்'' என்று சொன்னான். அதற்கு அவர்கள்''இறைவ எம்பெருமா! உன் விருப்பமே என் விருப்பம். உன் நாட்டமே என் நாட்டம்'' என்றனர் அடக்கத்தோடு. அது கேட்ட இறைவன் மகிழ்ச்சியுற்று, ''நீர் நாடியுள்ளவை அனைத்தையும், நீர் நாள்தோறும் என்னிடம் கேட்கும் ஆயிரம் இறைஞ்சுதல்களையும், நான் உமக்கு நிறைவேற்றித் தருவேன்'' என்று நன்மாராயம் பகர்ந்தான்.

ஒருநாள் ஆண்டகை அவர்கள் தம் சீடர்களை நோக்கி, ''நீங்கள் எவரை உங்களைவிட மேலானவர் என்று கருதுகின்றீர்களோ, அவரிடம் குறைகாணினும், அதனை அவரிடம் எடுத்துரைக்கச் சிறிதேனும் தயங்காதீர்கள்!'' என்று கூறினர். அப்பொழுது அவர்களின் சீடர் ஒருவர், எழுந்து நின்று, ''ஷைகு அவர்களே! பாவிகளாகிய நாங்கள் தங்களின் சீடர்களாக இருப்பது தங்களின் தகுதிக்குப் பெரும் குறையாக உள்ளதே. நாங்கள் என் செய்வோம்?'' என்று கூறினார்.

அவரின் இச்சொல் அங்கிருந்த அனைவரின் உள்ளத்தில் ஈட்டி எனப்பாய அவர்கள் 'கோ' வென்று அலறி விட்டார்கள். ஆண்டகை அவர்களும் கண்ணீர் வடித்து, ''தோழர்களே! நான் உங்களைவிட அணுவத்தனையும் உயர்ந்தோனல்லன். நான் உங்களின் ஊழியனே அன்றி வேறல்லேன்'' என்று பணிவோடு கூறினார்கள். அதுகேட்டுச் சீடர்களின் அழுகைக் குரல் முன்னைவிட அதிகமாகியது.

ஆண்டகை அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழி முறையைப் பின்பற்றி, தம் இருபத்து மூன்றாவது வயதில், தம் உறவினரான கதீஜா என்ற காரிகையை மணமுடித்து, இல்வாழ்க்கை நடத்தினர். அவர் சில ஆண்டுகளுக்குப் பின் இறந்து விடவே, அவரின் தங்கை ராபிஆவை மணமுடித்து வாழ்ந்தனர். அவரும் சில ஆண்டுகள் கழித்து இறந்து விடவே, அவர்கள் நஃபீஸா என்ற பெண்ணை மணமுடித்து வாழ்ந்தனர்.

தம் மூன்று மனைவியர் மூலம் முஹம்மது, ஸாலிஹ், அப்பாஸ் என்ற மூன்று ஆண்மக்களும், சில பெண்மக்களும் பிறந்தனர். அவர்களெல்லாம், ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்டனர். தந்தவன் மீண்டும் பெற்றுக் கொண்டான் என்ற முறையில் அந்த இறப்புகளையெல்லாம், இழப்புகளாகக் கருதாது ஆண்டகை அவர்கள் அமைதி காத்தனர்.

இச்சமயத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஆண்டகை அவர்களின் நண்பர் ஒருவர், ஓரிரவு ஆண்டகை அவர்கள் 'மக்அது சித்கு' என்னும் உன்னதமான இடத்தில் அமர்ந்திருப்பதாகக் கனவு கண்டார். இத்தகு கனவை அவர் ஒரு தடவையல்ல, இதற்கு முன் பல தடவைகள் கண்டுள்ளார். எனவே இச்செய்தியைக் கூற அவர் ஆண்டகை அவர்களின் இல்லம் வந்தபொழுது, அங்கு அவர் கண்ட காட்சி அவரின் குலையை நடுங்க வைத்தது. அங்கு அவர் அப்படி என்ன கண்டார்? அவர்களின் மனைவி அவர்கள் மீது வசைமாரி பொழிந்து அடுப்பில் தீதள்ளும் சூட்டுக் கோலால் அவர்களின் தோளிலும், முதுகிலும் அடித்ததைத் தான் கண்டார். அதன் காரணமாக ஆண்டகை அவர்கள் அணிந்திருந்த சட்டையும், சில இடங்களில் கரிந்துவிட்டது. ஆண்டகை அவர்களோ, யாதொரு வார்த்தையும் பேசாது, அமைதியின் அடைக்கல பூமி போல் விளங்கினார்கள். அதற்குக் காரணம், அண்ணல் நபி(ஸல்)அவர்கள் ''எவன் தன் மனைவியின் வசைகளையும், அவள் செய்யும் நோவினைகளையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டானோ, அவனை அல்லாஹ் நரகத்தை விட்டும் விடுதலையாக்கி சுவனத்தை அவனுக்கு உரிமையாக்குவான். அவனின் இருபது லட்சம் தீமைகளை அழித்து, அவனுக்கு இருபது லட்சம் நன்மைகளை எழுதுவான். அவனுக்கு இருபது லட்சம் படித்தரங்களை உயர்த்துவான். அவனுடைய உடலிலுள்ள உரோமத்தின் எண்ணிக்கை அளவு, அவன் ஓராண்டு காலம் வணக்கம் செய்த பலனை அவனுக்கு வழங்குவான்'' என்ற பொன் மொழியை உளத்தில் கொண்டதேயாகும்.

இதனை அறியாது, ஆண்டகை அவர்களின் நண்பர், ஆண்டகை அவர்களின் சீடர்களிடம் ஓடோடிச் சென்று நடந்ததை நீர் மல்கும் கண்களுடன் நவின்றார். அதுகேட்ட அவர்களில் ஒருவர் ''நாமும் பக்கீர். ஆண்டகை அவர்களும் பக்கீராய் இருக்கிறார்கள். அவளை மண நீக்கம்

செய்வதென்றாலும், மஹரைக் கொடுத்தல்லவா மண நீக்கம் செய்ய வேண்டும். மஹரோ ஐந்நூறு தீனாராகவல்லவா உள்ளது. இந்நிலையில் நாம் என் செய்வது?'' என்று தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினார்.

உடனே வெளியே சென்ற அவர், சில பிரமுகர்களைச் சந்தித்து, நடந்ததைக் கூறி, ஐந்நூறு தீனார்களைச் சேகரித்து, ஆண்டகை அவர்களின் திருமுன் வைத்து, ''தங்களைச் சூட்டுக் கோலால் அடித்தவளுக்கான மஹறாக இருக்கும். ஏற்று ஆவன செய்ய வேண்டுகிறேன்'' என்று வினயமாகக் கூறி நின்றார்.

அதுகேட்ட ஆண்டகை அவர்கள் புன்முறுவல் தம் முகத்திலே தவழ, ''அவளின் வசைகளையும், அடிகளையும் நான் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டிராவிடின், நீர் என்னை 'மக்அது ஸித்கு' என்ற இடத்தில் கண்டிருக்கமாட்டீர்'' என்று கூறினார்கள்.

ஆண்டகை அவர்கள் நறுமணத்தைப் பெரிதும் விரும்பினார்கள். அவர்களின் சொற்பொழிவு 'மஜ்லிஸ்'களில், கஸ்தூரியும், அம்பரும் சவ்வாதும் கமகமவென மணம் வீசும். ரோஜாவும், மல்லிகையும் நறுமணத்தை அள்ளி வீசும் மலர்களையும், நறுமணப் பொருள்களையும் அவர்கள் வாரி, வாரி வந்திருப்போருக்கு வழங்குவார்கள்.

பேரின்ப இசை நிகழ்ச்சிகள் நடக்கும் பொழுது, அவர்கள் அவ்விதமே செய்வார்கள். ஒரு பேரின்ப இசை நிகழ்ச்சியின் போது, அவர்கள் தொண்ணூறு மணங்குக்கு அதிகமாக கஸ்தூரியையும், அம்பரையும், சவ்வாதையும், மக்களுக்கு வாரி வழங்கினார்கள்.

பேரின்ப இசையினை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். அதில் தம்மை மறந்து சொக்கி மகிழ்ந்தார்கள். அது கண்ட சிலர் ஆண்டகை அவர்களை அணுகி, 'இசை கேட்பது ஆகுமா?' என்று வினவினர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''ஆகும்; இறை இன்பத்தை, இறை பக்தியை, மக்களின் உள்ளத்தில் புகுத்தக் கூடிய இசையைக் கேட்பது ஆகும். மற்றவை ஆகாது. காய்ச்சல், உள்ளவன் குளிர்ந்த நீரை அருந்தக் கூடாது என்றும், கண்நோய் உள்ளவன் பேரீச்சம் பழம் புசிக்கக் கூடாது என்றும், மருத்துவக் கலை கூறுகிறது. ஆனால், அந்தக் 'கூடாது' என்பது எல்லாருக்குமல்ல. அது போன்று, பொதுவாக இசையைக் கேட்பது எங்களுக்கு ஆகும்'' என்று அவர்கள் ஆணித்தரமாகப் பதிலுரைத்தார்கள். கேள்வி கேட்டவர்கள் மறு வார்த்தை பேசவில்லை.

ஆண்டகை அவர்கள் நிதானமான உயரமும், நிதானமான பருமனும் உடையவர்களாய் இருந்தனர். உடல் மாந்தளிர் நிறமாக இருந்தது. தலைமுடியும், கண்களும், மிகவும் கறுப்பாக இருந்தன. மார்பிலும் கருமையான உரோமம் முளைத்திருந்தது. வட்டமான முகம் வாய்க்கப்

பெற்றிருந்தனர். அவர்களின் தாடி, இரு கன்னங்களிலும் இலேசாக முளைத்திருந்தது. அவர்களை முதலில் பார்ப்பவர்களுக்கு ஒரு விதத் திடுக்கம் ஏற்படும். எனினும், அவர்களோ, எப்பொழுதும் புன்முறுவல் பூத்தவர்களாகவே இருந்தனர்.

இத்தகு இயல்பினரையே இறைவன் தன்னுடைய ''கௌதுல் அஃலமாக ஆக்கிப் பின்னர் சில காலம் சென்ற பின், ''என்னுடைய பாதம் அனைத்து வலிமார்களின் புயங்களின் மீதிருக்கும்'' என்று கூறுமாறு பணித்தான். இறை ஆணையை ஏற்று அவர்களும்,'' கதமீ ஹாதிஹி அலா ரகபத்தி குல்லி வலிய்யின் லில்லாஹித் தஆலா'' என்று கூறினர். அடுத்த கணம், அனைத்து வலிமார்களும், தங்களின் சிரம் சாய்த்துத் தங்களின் புயங்களைத் தாழ்த்திக் கொடுத்து, ஆண்டகை அவர்களின் ஆன்மீகச் சக்ராதிபத்தியத்தை மனஉவப்புடன் ஏற்றுக் கொண்டனர், இருவரைத் தவிர. அவ் இருவரின் 'விலாயத்'தும் நொடியில் பறிக்கப்பட்டது.

இதன்பின் சிலகாலம் ஆன்மீகச் சக்ராதிபத்தியத்தைத் திறம்பட நிகழ்த்திய ஆண்டகை அவர்கள், தம் அண்மை நெருங்கிவிட்டதை உணர்ந்து தம் இறுதி உரையை மக்களுக்கு நிகழ்த்திவிட விரும்பி, அனைவரையும் ஒருங்கு கூட்டினர். அப்பொழுது அவர்கள், மக்களை நோக்கி, பின்வருமாறு பேசினர்: ''திட்டமாக, என் இறுதி அண்மி விட்டது. இங்கே வந்திருப்பவர்கள், நான் கூறுவதை நன்கு செவியேந்தி, இங்கு வராதவர்களுக்கு அதனை எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆடவன் ஒருவன் தனிமையில் தனக்கு உரியவளல்லாத பெண்ணுடன் இருப்பின், அவனை விட்டும், நானும் என் குருநாதர் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களும், என் பாட்டனார் அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அல்லாஹ்வும் விலகி விடுவோம். முகவரை கீறப்படாத இளவலுடன் தனித்திருந்தாலும் அப்படியே.

''மேலும் எவனொருவன் 'வலி'மார்களிடையே பாகுபாடு செய்தாலும் முஸ்லிம்களை 'ஷரிஅத்'தை விட்டு விலகுமாறு செய்தாலும் அநியாயக்காரனுக்கு உதவி செய்தாலும் அநியாயம் செய்யப்பட்டவனுக்கு உதவி செய்யலாமல் இருந்தாலும் மெய்யைப் பொய்யாக்கவும் பொய்யை மெய்யாக்கவும் மடையர்கள் போன்று உரையாடவும் செயலாற்றவும் செய்தாலும் அவனை விட்டும் நான் நீக்கிவிடுவேன்; என் குரு நாதர் ஷைகு மன்சூர் (ரஹ்) அவர்களும் நீங்கிவிடுவார்கள்; அண்ணல் நபி (ஸல்) அவர்களும் நீங்கிவிடுவார்கள். அல்லாஹ்வும் நீங்கி விடுவான். நான் என் இறுதி உரையை நிகழ்த்திவிட்டேன். அல்லாஹ்வே இதற்கு நற்சான்று''.

''எவன் 'பைஅத்'தை முறிக்கின்றானோ அதற்கான தீமையை அவன் நுகர்ந்தே தீருவான்''

இவ்வாறு பேசி முடித்து, இல்லம் சென்ற ஆண்டகை அவர்களுக்கு, நாளுக்கு நாள் உடல் நலிவுற்று வந்தது. இச்சமயத்தில் தெருவில் பக்கீர் ஒருவர் பாடிக் கொண்டு சென்ற பின்வரும், இனிய கீதம் ஒன்று அவர்களின் செவியில் விழுந்தது.

"கதிரோன் விழ இருள்சூழ
 ககனம் எங்கும் முகில் குழும
இதயம் தவித்து ஏங்குதையோ
 யானும் யாது செய்வேனோ?

பிணைக்கப்பட்ட புறாவைப் போல்
 பெரிதும் துடித்து என்இதயம்
இணையில்லாத இசை தனையே
 எழுச்சியுடனே கூவுதையோ.

தலையின் மேலே இடிமேகம்
 தாளின் கீழே ஆழ்கடலே
நிலையில்லாத இந்நிலையில்
 நானும் நின்று தவிக்கின்றேன்.

அனைத்துப் பேரும் தனைநீங்கி
 அழகாய் இல்லம் ஏகுங்கால்
எனக்கோ தளையும் நீங்கவில்லை
 என்தலை சீவப் படவுமில்லை.

செத்தேனாயினும் சாவதனில்
 சுகத்தைக் கண்டு செத்திருப்பேன்.
அத்தன் அதையும் செய்யவில்லை
 அன்போ டென்தளை நீக்கவில்லை.

தளையை நீக்கி அவன் என்னைத்
 தனியாய் விடுதலை செய்திருப்பின்
இளையா தெவர்க்கும் எழிலுடனே
 இன்பச் சுவனம் புகுந்திருப்பேன்".

இதனைச் செவியுற்ற ஆண்டகை அவர்கள் 'ஆ' வென்று அலறிக் கீழே சாய்ந்தார்கள். இதன்பின் அவர்களின் நிலையே மாறுதலடைந்தது. சரியாக உணவு உண்ணவோ, நீர் அருந்தவோ செய்யவில்லை. அதன் காரணமாக நாளுக்கு நாள், உடல் பலவீனமுற்றுக் கொண்டே வந்தது. வயிற்று வலியும், வயிற்றுப் போக்கும் அவர்களை வாட்டி வதைத்தன. இச்சமயத்தில் அவர்களைக் காண வந்த ஒருவர், அவர்களின் நிலையை உணர்ந்து "ஊர்வலம் தொடங்கி விடுமோ?" என்று வினவினார். மரண ஊர்வலத்தைப் பற்றியே அவர் வினவுகின்றார் என்பதை விளங்கிக்

கொண்ட ஆண்டகை அவர்கள், 'ஆம்' என்று ஒரு சொல்லில் பதிலுரைத் தார்கள். "ஏன்?" என்று மறு சொல்லில் வினவினார் அவர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், "மக்கள் மீது இறைவன் முனிவுற்று இறக்கி வைக்கும் துன்பங்களையும், துயரங்களையும், வேதனை களையும், சோதனைகளையும், என் மீது ஏற்றுக் கொண்டு, அவை அவர்களைத் தாக்காது நான் தாங்கிக் கொண்டேன். அதன் காரணமாக, என் உடல் நலிவுற்று, இறப்பை விரைவில் அழைத்து அணைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று' என்று கூறி, தம் தலையைத் தரையிலே புரட்டி, "இறைவ எம்பெரும! என்பவம் பொறுத்தருள்வாய்! மக்கள் மீது சோதனைகளை இறக்காது, அவற்றை என்மீது இறக்கியருள்வாய்!!" என்று கண்ணீர் வடித்துக் கதறி அழுது இறைஞ்சினார்கள்.

அவர்களுக்கு ஏற்பட்ட வயிற்றுப் போக்கு, இருபது நாட்களாகியும் இம்மியளவும் குறையாது நீடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவர்களின் உறவினர்கள், அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய பொழுது, "இதுவரை என் தசைகளும் கொழுப்புகளும் கரைந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நாளை என் மூளை உருகி வெளியே வரும். அத்துடன் என் உயிரும், என் உடலை விட்டும் வெளியேறி இறை சந்நிதானத்தை அடைந்து விடும்" என்று கூறினார்கள். அது கேட்டு ஆங்கிருந்தோர் அனைவரும் 'கோ' வென்று அலறினர்.

அடுத்த நாள் அவர்கள் கூறிய வண்ணமே, அவர்களின் மூளை உருகி வெண்ணிறத்தில் மூன்று தடவை வெளியானது. அப்பொழுது அவர்கள் தம் அருகில் இருந்த தம் சீடர்களை நோக்கி, "நான் அறிவுறுத்திய வண்ணம் செயலாற்றி வாருங்கள்! இறைவனின் அழைப்போலை எனக்கு வந்து விட்டது. நான் செல்கிறேன்." என்று கூறினார்கள். அடுத்த கணம் அவர்களின் திருவாய் 'கலிமா'வை முணுமுணுத்தது. கண்கள் தாமாகவே இறுக மூடிக் கொண்டன. அறுபத்து ஆறு ஆண்டு காலம் அவர்களின் உள்ளத்தில் ஆட்சி செய்த, அவர்களின் ஆன்மா, அவர்களின் உடலை விட்டு நீங்கி, இறை சந்நிதானத்தை எய்தியது. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 578 ஜமாதுல் அவ்வல் பிறை இருபத்திரெண்டு பிற்பகல் (கி.பி. 1183 செப்டம்பர் 23 - ஆம் நாள்) வியாழக்கிழமையில் ஆகும். அடுத்த நாள் அவர்களின் உடலம், அவர்களின் பிறந்தகமான ஃபதாயிஹ்வில் மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆண்டகை அவர்கள் நிர்யாணம் அடைந்தபின், அவர்களின் தங்கை ஸித்துன் னஸபின் மகன் ஷைகு அலீ அவர்களே, ஆண்டகை அவர்களின் கலீபாவாக அமர்ந்து ரிபாயிய்யா தரீக்காவை வளர்த்தனர்.

3. ஷைகு நஜ்முத்தீன் குப்ரா (ரஹ்)

இளமையில் இவர்களோ சிறந்த சொற்செல்வராக இருந்தனர். அவர்களின் வாயிலிருந்து அடுக்குச் சொற்கள் 'நான் முந்தி, நீ முந்தி' என்று அருவி கொட்டினாற்போன்று வந்து கொண்டிருந்தன. வாக்கு வாதத்தில் அவர்களை எதிர்த்து நிற்பவர்கள் எவரும் இல்லாது இருந்தனர். ஒரு நொடியில் எதிரியை மடக்கி முறியடித்துவிடும் ஆற்றல் அவர்களிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. மணிக்கணக்காக எதிரி பேசிக் கொண்டே சென்று பேச்சை முடிப்பார். அதன் பின் அவர்கள் எழுந்து நின்று, ஒரு சி ல நிமிடங்கள் தான் பேசுவர். கை தேர்ந்த சிற்பியின் சிற்றுளி, பாறாங்கல்லை ஒரு நொடியில் இரண்டாகப் பிளக்கச் செய்வது போன்று, எதிரியின் வாதங்களெல்லாம், அவர்களின் ஆணித்தரமான வாயாப்பின் முன் துகள் துகளாகச் சிதறிவிடும்.

எனவே, அவர்களுடன் வாதம் செய்ய இயலாது, அவர்களின் நண்பர்கள் எல்லாம் வெருண்டோடுவர். எனவே அவர்களை அவர்கள், 'அல் தாம்மத்துல் குப்ரா' என்னும் பட்டப் பெயரால் அழைத்தனர். அதன் பொருள் 'மாபெரும் பீடை' என்பதாகும். ஆம்; அவர்களுக்கு அவர்கள் மாபெரும் பீடையாக, அவர்களின் வாதங்களையெல்லாம் மாய்த் தொழிக்கும் பீடையாகத் தான் இருந்தார்கள். ஆனால் பின்னர் அவர்கள் ஷைகு அபுந் நஜீப் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களின் தாள் அமர்ந்து, அவர்களின் அன்பிற்குரிய ஆன்மீக மாணவராக இருந்த பொழுது, அவர்கள் தம் மாணவரை 'ஷைகுல் ஃபிர்தௌஸ்' (சுவனத்தின் தலைவர்) என்று அழைத்தார்கள். அதன் காரணமாக அவர்களின் பள்ளித் தோழர் களெல்லாம் அவர்களை, ஃபிர்தௌஸி என்று அழைக்காலானார்கள்.

இதன்பின் அவர்கள் ஆன்மீகத்தில் மிகவும் பெரிய படித்தரத்தை அடைந்த பொழுது, மக்கள் அவர்களை 'வலீ தராஷ்' (இறைநேசச் செல்வர்களை உண்டுபண்ணுபவர்) என்று அழைத்தார்கள். இவ்வாறு தம் நண்பர்களால் 'அல் தாம்மத்துல் குப்ரா' என்றும், ஆசிரியரால் 'ஷைகுல் ஃபிர்தௌஸ்' என்றும், சகமாண வர்களால் 'ஃபிர் தௌஸி' என்றும், உலக

மக்களால் 'வலீ தராஷ்' என்றும் அழைக்கப் பெற்ற அவர்களுக்கு, அவர்களின் தந்தை உமர் சூட்டிய பெயரோ அஹ்மது என்பதாகும். பிற்காலத்தில் அவர்கள் மார்க்கத்தின் மிகப்பெரும் விண்மீன் போன்று ஒளி வீசியதன் காரணமாக, அவர்கள் 'நஜ்முத்தீன் குப்ரா' என்று அழைக்கப் பெறும் பேறு பெற்றார்கள்.

அவர்கள் குவாரிஸ்மிலுள்ள கிவாக் என்ற ஊரில், ஹிஜ்ரி 540 ஆம் ஆண்டில் பிறந்தனர். இளமையில் பல்வேறு நாடுகளிலும் சுற்றித் திரிந்த அவர்கள், எகிப்து நாடு வந்த பொழுது, அங்குப் புகழுடன் வாழ்ந்து வந்த ஷைகு ரூஸ்பி ஹான் அல் வஸ்ஸான் அல் மிஸ்ரியின் தவமடம் சென்று, அவர்களின் முன் தாள் மடித்து அமர்ந்து, தம்மையும் அவர்களின் மாணவர் குழுவில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினர். அவர்களின் முகத்தோற்றத்தையும், அடக்க உணர்வையும் கண்ட அப்பெரியார், அவர்களைத் தம் மாணவராக ஏற்றுக் கல்வி போதித்து வந்தனர். இவ்வாறு தொடங்கிய குரு - சீடர் தொடர்பு விரைவில் , மாமனார் - மருகர் தொடர்பாக மாறியது. அவர்களின் அறிவுக் கூர்மையையும், அரிய நற்பண்புகளையும் கண்ட அப்பெரியார், அவர்களுக்குத் தம் அருமை மகளை மணமுடித்து வைத்து மகிழ்ந்தனர்.

இதன்பின் அவர்கள் தப்ரீஸில் வாழ்ந்து வந்த இமாம் அப்துந் நஸர் ஹஃப்தாவின் மார்க்கச் சொற்பொழிவுகளைப் பற்றிக் கேள்வியுற்று அவர்களிடம் சென்று, ஃபிக்ஹுக் கலையைப் பயின்றனர். அதில் பெரிதும் தேர்ச்சியுற்ற அவர்கள், மார்க்கத்தின் பல்வேறு சட்டதிட்டங்கள் பற்றிப் பெரிதும் ஆய்வு நிகழ்த்தி, 'ஸரஹுல் ஸுன்னா வல் மஸாலீஹ்' என்னும் பெயருடன் ஒரு நூல் எழுதினர். அதில் அவர்கள் கூறிய பல கருத்துக்கள் மக்களிடையே பெரும் தர்க்க வாதங்களைக் கிளப்பிவிட்டன.

இச் சமயத்தில் அவர்கள், ஷைகு பாபா ஃபரஜ் என்னும் சூஃபியைச் சந்தித்தனர். அவர்களின் ஆழிய அறிவையும், மார்க்க பக்தியையும் கண்ட அந்த ஷைகு, அவர்களை சூஃபிகளின் பாட்டையில் திருப்பிவிட்டனர். இதன்பின் ஷைகு அபுந் நஜீப் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களை அடைந்து, அவர்களிடம் சுஹ்ரவர்தியா தரீக்காவில் தீட்சையும் கிலாஃபத் பதவியும் பெற்றனர்.

இதன்பின் அவர்கள் எகிப்து வந்து தம் மாமனாரைச் சந்தித்த பொழுது, தம் மருகர் ஆன்மீகத் துறையில் அடைந்திருக்கும் பயிற்சி களைக் கண்டு வியந்து, அவர்களை அவர்களின் தாயகமான குவாரிஸ்ம் சென்று ஆன்மீகப் பணிபுரியுமாறு பணித்தார். அவ்வாறே அவர்கள் தம் மனைவியையும் மகன் ஜன்னாபையும் அழைத்துக் கொண்டு, குவாரிஸ்ம் திரும்பி, அங்கு ஒரு தரீக்காவைத் துவங்கினர். அதுவே இன்று

குப்ரவிய்யா அல்லது தஹபிய்யா அல்லது ஃபிர்தௌஸிய்யா என்று அழைக்கப்படுகிறது.

அவர்கள் ஆன்மீகத்தில் அடைந்த உச்சநிலையும், அவர்கள் ஆற்றிய அற்புதங்களும், மக்களைப் பெரிதும் கவர்ந்து நின்றன.

'ஏக் ஸமானா ஸுஹ்பத்தெ பாஅவ்லியா
பெஹத்த ரஸ் ஸத்ஸாலதா அத் பேரியா

என்று ஃபார்ஸியில் ஒரு கவிதை உண்டு. அதன் பொருள், ''வலிமார்களுடன் சிறிது காலம் தொடர்பு கொண்டிருப்பது, நூறாண்டு வெறுமனே வணக்கம் செய்வதை விட மேலானதாகும்'' என்பதாகும். இந்த அடிகளில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கு, அவர்கள் முற்றிலும் பாத்திரமானவர்களாக இருந்தனர். அவர்களுடன் தங்கியிருந்தவர்கள் மட்டுமின்றி, அவர்கள் 'ஜத்பு' நிலையில் இருக்கும் பொழுது, அவர்களின் கடைக்கண் பார்வை பெற்றவர் கூட விலாயத்தை எய்தப் பெற்றார்கள். இதன் காரணமாகவே அவர்களுக்கு 'வலிமார்களை உண்டு பண்ணுபவர்கள்' என்று பொருள்படும், 'ஷைகுல் வலீ தராஷ்' என்ற பட்டமும் ஏற்பட்டிருந்தது.

அவர்கள் தம்மை மறந்த 'ஜத்பு' நிலையில் இருக்கும் பொழுது, அவர்கள் கடைக் கண் பார்வைப்பட்ட மனிதர்கள் மட்டுமல்லாது, மிருகங்கள் கூட விசேடத் தன்மையைப் பெற்றன. ஒரு நாள் அவர்கள் தம்மை இறைவனளவிலே அழித்துக் கொண்டு தன்னுணர்வற்ற நிலையில், தம் தவமடத்தில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். திடீரென அவர்கள், தம் தவமடத்தின் வாயிலிலே வந்து நின்றார்கள். அப்பொழுது தெருவிலே ஓடிக் கொண்டிருந்த ஒரு நாயின் மீது அவர்களின் பார்வைபட்டது. அவ்வளவு தான், அந்த நாய்க்கு ஒருவித மயக்க நிலை ஏற்பட்டது. அதன்பின் அதனுடைய போக்கே மாறி விட்டது. மஸ்துப் பிடித்தது போன்று அது, தன்னிலை மறந்து நடந்து சென்றது. அதைக் கண்ட மற்ற நாய்களெல்லாம் குரைக்காது, அதன் முன் மரியாதையுடன் வந்து தங்களின் முன்னங்கால்களை, அதன் முன்னங் கால்களின் மீது வைத்து 'பை அத்' செய்வது போன்று செய்து, அதனைச் சூழச் சற்றுத் தொலைவில் பணிவுடன் நின்றன. சில நாட்களுக்குப் பின் அந்நாய் இறந்து விட்டது. அதனை அறிந்த அவர்கள், அதை எடுத்துப் புதைத்து விடுமாறு தம் சீடர்களுக்குப் பணிந்தார்கள்.

அவர்கள் தம் தவமடத்தில் அமர்ந்து தம் சீடர்களுக்கு ஆன்மீகப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கும் பொழுது தான், காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், அம்மேதகையின் மாண்பினைப்பற்றிக் கேள்வி

யுற்று சஞ்சர் வந்து ஞான சந்திப்பைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று மஜ்துத்தீன் பக்தாதியும் சஞ்சர் வந்து அவர்களின் ஆன்மீக மாணவரானார். அவரே ஃபரீதுத்தீன் அத்தாரின் ஆசிரியர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

அவர்கள் தம் தவமடத்தில் அமர்ந்து பல நூல்களை எழுதினார்கள். திருக்குர்ஆனுக்கு 'அய்னுல் ஹயாத்' என்னும் பெயருடன், அவர்கள் ஒரு சிறந்த விரிவுரை எழுதியுள்ளார்கள். அதனுடைய முதற்பகுதி லெனின் கிராடிலுள்ள நூல் நிலையத்தில் இப்பொழுது இருக்கிறது. அவர்கள் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைப்பவர்களுக்கு உதவியாக, ஃபார்ஸியில் 'ஸிஃபத்துல் ஆதாப்' என்ற பெயருடன் ஒரு நூலை எழுதியுள்ளார்கள்.

அது மங்கோலிய மாவீரன் செங்கிஸ்கான், மத்திய ஆசியாவில் சூறாவளியென படை நடாத்திச் சென்று, தன்வாள் வலிமையால் அதனை வென்று அரசோச்சிக் கொண்டிருந்த காலம். அவனுடைய கழுகுப் பார்வை குவாரிஸ்ம் நாட்டின் மீதும் பாய்ந்தது. அதன்மீது தாக்குதல் நடத்தத் தீர்மானித்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான் அவன். அப்பொழுது அவனுக்கு சஞ்சரில் அமர்ந்து ஆன்மீகச் செங்கோல் நடாத்தி வந்த ஷைகு நஜ்முத்தீன் குப்ரா (ரஹ்) அவர்களின் நினைவு வந்தது. அவர்களின் மாண்பினைப் பற்றி ஏற்கனவே அவன் கேள்வி யுற்றிருந்தானாதலின், அவர்களைத் தமக்கு அப்படையெடுப்பில் உறுதுணையாக ஆக்கிக் கொள்ள விரும்பினான்.

ஒருநாள் அவர்கள் தம் தவமடத்தில் அமைதியாக வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஒருவன் சாதாரண உடையில் வந்து அவர்களின் அருகமர்ந்து அவர்களின் காதோடு காதாக ஏதேதோ கூறினான். அவர்கள் அவன் கூறிய அனைத்திற்கும் 'முடியாது, முடியாது' என்று கூறும் முறையில், தம் தலையை அசைத்தார்கள். மீண்டும் மீண்டும் அவன் வலியுறுத்தவே அவர்கள் ''உன்னுடைய அரசர் இந்நாட்டின் மீது படையெடுக்கத் தீர்மானித்திருப்பதாயும், எனவே அதற்கு முன் நான், இந்நகரை விட்டு நீங்கி, அவருடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புவ தாகவும் நீ கூறுகிறாய். அவ்விதம் அவர் விரும்புவது அவருக்கு அழகாக இருக்கலாம். ஆனால் அவ்விதம் செய்வது எனக்கு அழகுமல்ல; தகுமானதுமல்ல, என்று அவரிடம் சென்று கூறிவிடு!'' என்று சொல்லி எழுந்தார்கள். அவனும் பெரிதும் ஏமாற்றமுற்று வெளியே சென்றான்.

அதன்பின் தம் சீடர்களை அணுகிய அவர்கள், சீடர்களை நோக்கி, ''கிழக்குப் பகுதியில் மாபெரும் தீ நாக்கு நீட்டி எறிந்து, மேற்குப் பகுதியையும் சுட்டெரிக்க முனைந்து கொண்டுள்ளது. எனவே, நீங்கள்

உங்களின் பிறந்தகத்துக்கு விரைந்து செல்லுங்கள்!'' என்று சூசகமாகக் கூறினார்கள். அது கேட்டு அவர்களில் பெரும்பாலோர், தம் தம் ஊர்களுக்கும் பயணமாயினர். சிலர் மட்டும் அவர்களுடன் தங்கியிருந்தனர்.

ஹிஜ்ரி 618 ஆம் ஆண்டு ஜமாதில் அவ்வல் மாதம் 10 ஆம் நாள். குவாரிஸ்ம் நாட்டின் வரலாற்றிலேயே இரத்தக்கறை படிந்த நாள் அது. மங்கோலிய மாவீரன் செங்கிஸ்கான் தன் மாபெரும் படையுடன் குவாரிஸ்ம் நாட்டின் மீது படையெடுத்தான். அப்பொழுது எழுபத்தெட்டு வயதை எய்தியிருந்த நஜ்முத்தீன் குப்ரா (ரஹ்) அவர்களும், அன்று தான் தம்முடைய இறுதி நாள் என்பதையும் உணர்ந்தார்கள். இறை பாதையில் தம்முடைய இன்னுயிரைத் தியாகம் செய்யக் கூடிய தருணம் வந்து விட்டது என்பதை உணர்ந்த அவர்கள், தம் தளர்வுற்ற கரத்திலே ஒளி மிக்க வாளேந்திப் போர்க்களம் புகுந்து வீரப் போர் செய்து உயிர் நீத்தார்கள். செங்கிஸ்கானும், அவனுடைய படைவீரர்களும் தம் கொடுவாட்களினால் கொன்று குவித்த ஆறு லட்சம் பேர்களின் உடலங்களின் நடுவே அவர்களின் பொன்னுடல், ஒளி முத்தெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது கண்டுபிடித்து எடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

4. உதுமான் ஹாரூனி (ரஹ்)

ஒரு குருவும், அவரின் சீடரும், தங்களின் பயணத்தின் போது, திமிஷ்கிலுள்ள பள்ளிவாயிலுக்கு வந்து சேர்ந்தனர். வந்து சேர்ந்ததும் உளூச் செய்து தொழுத பின், ஆங்கு அடங்கப் பெற்றுள்ள நபிமார்களின் அடக்கவிடங்களைத் தரிசித்தனர். ஆங்கு 12,000 நபிமார்கள் அடங்கப் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்றிருந்தார்களாதலின், அவர்கள் அனைவருக்கும் சேர்த்து 'பாத்திஹா' ஓதினர்.

பின்னர் அவர்கள் பள்ளியின் ஒரு மூலையில் வந்தமர்ந்தார்கள். அப்பொழுது அவர்களைச் சூழப் பல தர்வேஷ்களும் வந்தமர்ந்தார்கள். ஆன்மீகம் பற்றி உரையாடல் தொடங்கியது. ஆன்மீகத்தின் பல்வேறு படித்தரங்களைப் பற்றியெல்லாம் அவர்கள் பேசினார்கள். அப்பொழுது அங்கு வீற்றிருந்த ஒரு வலி மற்றவர்களை நோக்கி, ''இங்கு வீற்றிருக்கின்ற ஒவ்வொருவரும், தம் தம் ஆன்மீக ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும்'' என்று கூறினார். அதற்கு எல்லாரும் இசைந்தார்கள்.

உடனே குரு, தம் தொழுகைப் பாயின் கீழே கையை விட்டு தங்க நாணயங்கள் சிலவற்றை எடுத்து, ஒரு தர்வேஷிடம் கொடுத்து, கடைத்தெரு சென்று, அங்கு வீற்றிருக்கும் அனைவருக்கும் போதுமான அளவு 'ஹல்வா' வாங்கி வருமாறு கூறினார். அவருக்குப் பக்கத்தில் வீற்றிருந்த மற்றொரு வலியோ, தன் அண்மையில் இருந்த தலையணைக் கட்டை மீது தம் கையை வைத்தார். அடுத்த கணம் அது தங்கப் பாளமாக மின்னியது. இவ்வாறு ஒவ்வொருவரும் தம்தம் ஆன்மீக ஆற்றலை வெளிப்படுத்தி ஒவ்வோர் அற்புதத்தை நிகழ்த்தினார்கள்.

அப்பொழுது குருவை விட்டும் சற்று விலகிப் பணிவோடு வீற்றிருந்த சீடர் மட்டும், எதுவும் செய்யாது வெறுமனே இருந்தார். தம் குருவின் முன்னிலையில், மரியாதையின்றி எதனையும் செய்துவிடக் கூடாது என்னும் அடக்க உணர்வே அவரை அவ்வாறு இருக்குமாறு செய்தது.

இதனை விளங்கிக் கொண்ட குரு தம் சீடரை, அவரின் பெயர் சொல்லி அழைத்து, ''நீ ஏன் இதே போன்று எதுவும் செய்யவில்லை?'' என்று வினவினார்.

இப்பொழுதும் அவரின் அடக்க உணர்வு அவரின் ஆற்றலை வெளிப்படுத்த அவருக்குத் தடை விதித்தது. எனினும் தம் குருவின் ஆணையைச் சிரமேற் கொண்டு தம் சட்டைப் பையில் கையை விட்டு, நான்கு குர்ஸ் நாணயங்களை எடுத்து, பசியோடு அங்கு வீற்றிருந்த ஒரு தர்வேஷின் கையில் கொடுத்தார். அதைக் கண்டு அங்கு வீற்றிருந்த இருவர். ''ஆன்மீக ஆற்றலைப் பெற்றிராதவர்கள், தங்களை தர்வேஷ் என்று கூறிக் கொள்வதற்கே அருகதையற்றவர்கள்'' என்று கூறினர். அதுகேட்டு, குருவும் சீடரும் தம் மனத்திற்குள்ளே சிரித்துக் கொண் டார்கள். அவ்வாறு சிரித்துக் கொண்ட அந்த குருவும் சீடரும் யார்? அவர்கள் தாம் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களும், அவர்களின் சீடர் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும் ஆவர்.

இருவரும் சிரித்துக் கொண்டதில் பொருள் இல்லாமல் இல்லை. இருவரும் அந்த தர்வேஷ்களின் அறியாமையைப் பற்றித் தான் சிரித்துக் கொண்டார்கள். தமக்குப் பின், தம் மாணவர் தம்மைவிடச் சிறந்து விளங் குவார் என்பதை அறியாது, அந்த தர்வேஷ்கள் ஏதோ உளறுகின்றனரே என்று எண்ணி குரு நகைத்தார்கள். தாம் தம் குருவின் ஆணைக்கிணங்கி, தம் பை காலியாக இருந்த போதினும், தம் ஆன்மீக ஆற்றலால் அதிலிருந்து தங்கக்காசுகளைத் தம் குரு போன்று எடுத்துக் கொடுத்தால், தம் குருவுக்கு சங்கைக் குறைவு செய்ததாக ஆகிவிடும் எனக்கருதி, வெள்ளிக் காசுகளை எடுத்துக் கொடுக்க, அதனை அறியாது அந்த தர்வேஷ்கள் ஏதோ பிதற்றுகின்றனரே என்று சீடர் நகைத்தார்!

காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களின் ஆன்மீக குருவான உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், அலீ (ரலி) அவர்களின் பதினொன் றாவது தலைமுறையில் குராஸான் நாட்டில், நீஷாப்பூரின் அண்மை யிலுள்ள ஹாரூனில், ஹிஜ்ரி 530 -ஆம் ஆண்டில் பிறந்தனர். அவ்வூர் இப்பொழுது ஹாரூனாபாத் என்று வழங்கப்படுகிறது.

வயதேறப் பெற்றதும் அவர்கள் ஹாஜி ஷரீஃப் சிந்தனி (ரஹ்) அவர்களை அணுகி, அவர்களின் ஊழியத்தில் மூன்றாண்டுகள் இருந்து, ஆன்மீகப் பயிற்சி பெற்றனர். இதன்பின் ஹாஜி ஷரீஃப் சிந்தனி (ரஹ்) அவர்கள், உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களுக்கு, சிஷ்திய்யா தரீக்காவில் கிலாஃபத் நல்கி, இஸ்முல் அஃலத்தையும் கற்றுக் கொடுத்தனர்.

தம் குருநாதரை விட்டு நீங்கிய அவர்கள், ஆன்மீகத்தில் உயரிய படித் தரங்களை எய்தப் பெறுவதற்காக, அல்லும் பகலும் அருட்பாடுபட்டனர். பகலில் ஒரு தடவையும், இரவில் ஒரு தடவையும் குர்ஆனை ஓதி முடித்த அவர்கள், இரவில் சிறிது நேரமே தூங்கினர். வயிறு நிரம்ப அவர்கள் ஒரு போதும் உண்டதே இல்லை.

ஒரு தடவை அவர்கள் வைகறைத் தொழுகையில் நிற்கும் பொழுது, "உதுமானே! உம் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீர் வேண்டியதைக் கேளும்!" என்று அசரீரி ஒலித்தது. அதுகேட்ட அவர்கள், "எனக்கு ஒன்றும் வேண்டாம். உன்னை அறியும் ஆற்றலை மட்டும் தா!" என்று கூறினர். அப்பொழுது மீண்டும், 'உம் இறைஞ்சுதல் ஏற்றுக் கொள்ளப் பட்டது" என்று அசரீரி முழங்கியது. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட நன்றி உணர்வுக்கு அளவில்லை.

உடனே அவர்கள் தரையிலே குப்புற வீழ்ந்து, "இறைவ, எம்பெரும! எம் பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தின் பாவங்களை மன்னித்து விடு, மன்னித்துவிடு!" என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுது, இறைஞ் சினார்கள். அப்பொழுது அசரீரி மீண்டும் முழங்கியது. "நாம் அவர்களில் முப்பதாயிரம் பேர்களின் பாவங்களை மன்னித்துவிட்டோம்" என்று.

எனினும், அவர்கள் மன நிறைவுறவில்லை. நண்பகல், பிற்பகல், பொழுதடைந்த நேரம், இரவு, வைகறை ஆகிய நேரங்களில் தொழும் தொழுகைகளிலும் அவர்கள், அவ்வாறே அழுது கெஞ்சி இறைஞ் சினார்கள். ஒவ்வொரு வேளைத் தொழுகையிலும், முப்பதாயிரம் பேர்களின் பாவங்களை மன்னித்ததாக இறைவன் கூறினான். அன்று மட்டும் 1,50,000 பேர்களின் பாவங்கள் இறைவனால் பொறுக்கப்பட்டன. இவ்வாறு ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து வந்தது.

அவர்கள் எழுபது ஆண்டு காலமாக, அதாவது ஏழு வயதிலிருந்து, பெரும்பாலும் நோன்பு நோற்றவர்களாகவே இருந்தார்கள்.

"எவனிடத்தில் மூன்று குணங்கள் இருக்கின்றனவோ, அவனை அல்லாஹ் நேசிக்கின்றான். அவை (1) கடல் போன்ற கொடை, (2)கதிரவனைப் போன்ற கருணை, (3)பூமியைப் போன்ற பணிவு" இவ்வாறு அவர்கள் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பார்கள். இவ்விதம் கூறிக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது, இறைவனின் பேரருளைப் பெறுவதற்காக அத்தகு நற்பண்புகளைத் தம்முடையதாகவும் அவர்கள் ஆக்கிக் கொண்டார்கள்.

அவர்கள் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர். ஒரு தடவை அவர்கள் தம் மாணவர் ஒருவருடன் பக்தாது செல்லும் வழியில், ரேயில்

தங்கினர். அங்கு அவர்கள் தங்கிய இடத்தின் அண்மையில் தீ வணங்கு பவர்களின் மாபெரும் நெருப்புக் குண்டம் இருந்தது. அதில் அவர்கள் ஒவ்வொரு நாளும் இருபது வண்டி விறகுகளை எரித்துத் தீ மூட்டி அதனை வணங்கி வந்தார்கள்.

ஒரு மரத்தின் நிழலில் தம் தொழுகை விரிப்பை விரித்துத் தொழுத அவர்கள், தொழுது முடித்ததும், தம் சீடரை நோக்கி, ''நோன்பு திறக்க ஏதாவது உணவு தயாரிப்பாயாக!'' என்று கூறினர்.

அவ்விதமே உணவு தயாரிக்க நெருப்புக் கொணர்வதற்காக, அவர் அந்தத் தீக்குண்டத்தை அணுகிய பொழுது, அங்கு வீற்றிருந்த தீ வணங்கு பவர்கள் அவரை நோக்கி, ''போ, போ! இது எங்களின் தெய்வம், தரமுடியாது'' என்று கூறினார்கள்.

அதுகேட்டு வருத்தமும் ஏமாற்றமும் உற்ற அவர்கள், தம் குருவிடம் வந்து நடந்ததைக் கூற, அவர்கள் மீண்டும் ஒருமுறை உளூச் செய்து கொண்டு, தம் மாணவர் பின் தொடர, அத்தீக் குண்டத்தை நோக்கிச் சென்றார்கள். அங்கு யக்ஷா என்னும் கிழவர் தம் மடி மீது ஏழு வயதுக் குழந்தை ஒன்றை வைத்துக் கொண்டு, இரும்பாலான சிம்மாசனத்தின் மீது அமர்ந்திருந்தார். அவரைச் சூழப் பலர் வீற்றிருந்து சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த தீயை வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவர்கள் வயோதிகரை நோக்கி, ''நீங்கள் நெருப்பை வணங்குகின்றீர்களே. அதனால் உங்களுக்கு என்ன பயன் ஏற்படப் போகிறது? அது இறைவனின் படைப்புகளில் மிகவும் பலவீனமானது. சிறிதளவு தண்ணீரை எடுத்து அதன் மீது தெளித்தாலே போதும், அது அணைந்து விடும். அதற்கு மாறாக, அகிலங்களையெல்லாம் படைத்துப் பரிபாலிக்கும் வல்லவனை வணங்கினால், உங்களுக்கு எவ்வளவோ நற்பலன்கள் ஏற்படுமே?'' என்று பரிவும் கனிவும் நிறைந்த சொற்களால் கூறினர்.

அதுகேட்ட அந்த முதியவர், ''எங்களுடைய மதத்தில் தீ முக்கிய இடம் வகிக்கிறது. அதுவே எங்களுக்கு மோட்ச சாம்ராஜ்ஜியத்தை அளிக்க வல்லது என்று நாங்கள் நம்பி அதனைத் தொழுது வருகிறோம்'' என்று கூறினார். உடனே அவர்கள், ''சரி, நீங்களும், உங்களின் மூதாதையரும் பன்னூறு ஆண்டுகளாக அதனைத் தொழுது வருகிறீர்களே, அதில் உங்களின் கையை விடுங்கள். அது உங்களுக்கு மோட்ச சாம்ராஜ்ஜியத்தை நல்கக் கூடியதாயிருப்பின், அது உங்களின் கையைச் சுட்டெரிக்காது'' என்று கூறினர்.

'அது எப்படி சுட்டெரிக்காதிருக்கும். நெருப்பின் இயல்பே சுட்டெரிப்பது தானே.' என்று பதில் கூறினார் அந்தக் கிழவர்.

''உண்மைத் தான் . ஆனால் அந்த இயல்பை அதற்கு அளித்தவன் இறைவன். அவனுடைய ஆணையன்றி அது அணுவத்தனைப் பொருளையும் சுட்டெரிக்காது'' என்று கூறிய அவர்கள், அக்கிழவரின் மடி மீதிருந்த குழந்தையை 'வெடுக்' கென எடுத்து அணைத்துக் கொண்டு, ''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால், ''யா நாரு கூனி, பர்தன் வஸலாமா'' (நெருப்பே! நீ நலமான குளிர்ச்சியாகக் குளிர்ந்துவிடு) என்று கூறிக் கொண்டு அந்நெருப்புக் குண்டத்தில் இறங்கினர்.

அதுகண்டு அந்த முதியவரின் உடலே நடு நடுங்கியது. எவரோ வழிப் போக்கர் வந்து தம்மிடம் விதண்டாவாதம் பேசியதோடு, மட்டுமல்லாது, தம் சின்னஞ்சிறு மகனையும் கௌவிக் கொண்டு, தீயினுள் குதித்துவிட்டாரே. ''ஐயோ, என் துன்பமே! நான் என் செய்வேன்'' என்று கூறிக் கண்ணீர் விட்டு அழுதார் அவர். அங்கு வீற்றிருந்த அவரின் சீடர்களும் பெரும் கூக்குரலிடத் துவங்கிவிட்டார்கள்.

தீக்குண்டத்தில் குதித்த அவர்கள், நான்கு மணி நேரமாக, அதை விட்டும் வெளியே வரவில்லை. அந்த நான்கு மணி நேரமும், நான்கு யுகங்கள் போன்று கழிந்தது வெளியே வீற்றிருந்தவர்களுக்கு. ஆனால் தீயினுள் குதித்தவர்களுக்கோ, நான்கு நிமிடங்கள் போன்று ஓடி மறைந்தது.

நான்கு மணி நேரம் கழித்து, உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், தம் மார்பிலே குழந்தையை அணைத்த வண்ணம், மகிழ்ச்சி வதனத்தினராய் வெளியே வந்த பொழுது, அங்கு நின்று கொண்டிருந்த தீ வணங்குபவர்களால் தம் கண்களையே நம்ப இயலவில்லை. முதுகிழவரோ ஓடோடிச் சென்று, தம் சின்னஞ்சிறு மகனை வாரி அணைத்து, ஆயிரம் முத்தங்களை அவனின் முகத்தில் சொரிந்து, ''என் கண்மணி மகனே! நெருப்பில் என்ன செய்தாய்?'' என்று வினவினார். அதற்கு அச்சிறுவன், ''அப்பெரியாருடன் சுவனப் பூங்காவில் சுற்றித் திரிந்தேன்'' என்று பதில் கூறியதும், தந்தைக்குத் தம் காதுகளையே நம்ப இயலவில்லை.

இதன்பின் அங்கிருந்த தீ வணங்குபவர்கள் அனைவரும், உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களின் கரம் பற்றி இஸ்லாத்தைத் தழுவினர். யக்ஷா, அப்துல்லாஹ் ஆனார். அவரின் மகன் இப்ராஹீம் ஆனார். நெருப்புக் குண்டம் இருந்த இடத்தில், அல்லாஹ்வைத் தொழுவதற்கான பள்ளி வாயில் நிர்மாணிக்கப்பட்டது.

ஏறத்தாழ இரண்டரை ஆண்டு காலம், ரேயில் தங்கி இருந்து, ஆன்மீகச் செங்கோல் செலுத்திய பின், அப்துல்லாஹ்வைத் தம்முடைய பிரதிநிதியாக நியமித்து விட்டு, பக்தாது வந்த அவர்கள், அங்குள்ள காஜா ஜுனைதுல் பக்தாதியின் பள்ளிவாயிலில் வந்து அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது முப்பத்திரண்டு வயதை எய்திய ஒருவர், அவர்கள் முன் வந்து 'ஸலாம்' உரைத்து, தாள் மடித்து அமர்ந்தார். வந்த விவரத்தை வினவிய பொழுது, தாம் அவர்களின் கரம்பிடித்து தீட்சை பெற வந்ததாகக் கூறினார்.

தாம் இதுகாறும் எதிர்பார்த்திருந்த அவர் தம் முன் வந்து அமர்ந்தது கண்டு பெரிதும் மகிழ்வுற்ற அவர்கள், ''போய் இரண்டு ரகஅத் நஃபில் தொழுகை தொழுதுவிட்டு வாரும்!'' என்று பணித்தார்கள். அவ்விதமே அவர் செய்து விட்டு, அவர்களின் முன் பயபக்தியுடன் வந்து அமர்ந்ததும், ''நல்லது; கிப்லாவை முன்னோக்கிய வண்ணம் அமர்ந்து சூரா பகராவை ஓதும்!'' என்று அவர்கள் கூறினார்கள். அவ்வாறே அவர் அமர்ந்து இனிய குரலெடுத்து அதனை ஓதினார். பின்னர் அவர்கள் அவரை நோக்கி, ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது இருபத்தியொரு தடவை 'ஸலவாத் ஓதும்!'' என்று சொன்னார்கள். அவ்விதமே அவர் செய்தார். பிறகு 'ஸுப்ஹானல்லாஹ்' என்னும் தஸ்பீஹை அறுபது தடவை ஓதுமாறு அவர்கள் பணிக்க அவ்வாறே அவர் செய்தார்.

உடனே உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள் எழுந்து, அவரின் கையைப் பிடித்த வண்ணம், வானத்தை அண்ணாந்து பார்த்து, ''வாரும்! நான் உம்மை அல்லாஹ்வின் திருச் சந்நிதானம் வரைக்கும் கொண்டு போய் சேர்க்கிறேன்'' என்று கூறினர். அதன்பின் அவர்கள், பக்கீர்கள் அணியும் நான்கு முனைகளுள்ள தொப்பியை அவரின் தலையில் சூட்டி, போர்வை ஒன்றால் அவரைப் போர்த்திக் கீழே அமருமாறு கூறினர். அவ்விதமே அவர் அமர்ந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நம்முடைய தரீக்காவில் முதன் முதலாகப் புகுகின்றவர்கள், ஓரிரவு ஒரு பகல் துறவு நிலையை மேற்கொள்ள வேண்டும். நீரும் அவ்விதமே செய்து விட்டு நாளை வாரும்!'' என்று கூறினர்.

அவ்வாறே செய்து விட்டு, அடுத்த நாள் அவர் அவர்களை அடைந்த பொழுது, ''சூரா இக்லாஸை நாலாயிரம் தடவை ஓதும்!'' என்று பணித்தனர். அவர் அவ்விதமே ஓதி முடித்ததும், வானத்தை அண்ணாந்து பார்க்குமாறு கூறினர். அவ்வாறே அவர் அண்ணாந்து பார்த்த பொழுது, ''எது வரையில் தெரிகிறது?'' என்று அவர்கள் வினவினார்கள். ''அர்ஷு வரை'' என்றார் அவர். பின்னர் அவர்கள் அவரை நோக்கி, ''கீழே பாரும்!'' என்றனர். அவ்விதமே அவர் பார்க்க, ''எதுவரையில்

தெரிகிறது?'' என்று அவர்கள் வினவினர். ''அதள பாதாளம் (தஹ் தஸ்ஸரா) வரை'' என்றார் அவர்.

''நல்லது நீர் இப்பொழுது சூரா இக்லாஸை மீண்டும் ஆயிரம் முறை ஓத வேண்டும்!'' என்று பணித்தார்கள். அவ்வாறே அவர்கள் ஓதி முடித்ததும், அவர்கள் அவரை நோக்கி வானத்தை மீண்டும் அண்ணாந்து பார்க்குமாறு கூறினார்கள். அவ்வாறே அவர் பார்த்த பொழுது, ''இப்பொழுது எது வரை தெரிகிறது?'' என்று வினவினார்கள் அவர்கள். ''மாண்பார்ந்த திரை வரை'' என்று பதிலிறுத்தார் அவர். ''கண்களை மூடும்!'' என்றார்கள் அவர்கள். கண்களை அவர் மூடினார். ''இப்பொழுது திறவும் '' என்றார்கள் அவர்கள். திறந்தார் அவர். தங்களின் இரு விரல்களையும் காட்டி, ''இப்பொழுது உமக்கு என்ன தெரிகிறது?'' என்று அவர்கள் அவரை வினவினார்கள். ''பதினொண்ணாயிரம் கிரகங்களையும் நான் காண்கிறேன்'' என்று அவர் பதில் கூறினார். இதைக் கேட்டதும் அவர்கள் மகிழ்வுற்று, ''இப்பொழுது உம் அலுவல் முடிந்து விட்டது'' என்று கூறிச் சற்றுத் தொலைவிலிருந்த ஒரு செங்கல்லைத் தூக்குமாறு அவரைப் பணித்தார்கள். அவ்வாறே அவர் செய்தபோது, அதன் கீழே பல பொற்காசுகள் மின்னின. அவற்றை எடுத்துச் சென்று ஏழைகளுக்கு தர்மம் செய்துவிட்டு வாரும்!'' என்று கூறினார்கள். அவ்விதமே அவர் செய்து விட்டு வந்த பொழுது, ''நம்முடன் சில காலம் இரும்!'' என்று பணித்தார்கள். ''தங்களின் பணி, தலைமேற் கொண்டேன்'' என்றார் அவர். அந்த 'அவர்' யார்? அவரே காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள்.

இதன் பின் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களின் ஊழியத்தில் ஒரு நாளல்ல, இரண்டு நாட்களல்ல, இருபது ஆண்டுகள் இருந்தார்கள்.

பக்தாதில் சில காலம் தங்கியிருந்த பின், உதுமான் ஹாரூனி (ரஹ்), தம் மாணவர் காஜா முயீனுத்தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்களையும் அழைத்துக் கொண்டு, மக்காவுக்குப் புறப்பட்டார்கள். வழியில் ஓரூரை அவர்கள் அடைந்தனர். அங்கு அவர்கள் சில தர்வேஷ்களைக் கண்டனர். அந்த தர்வேஷ்களோ, இறை காதலில் மயக்குற்று, தன்னுணர்வற்றுக் கிடந்தனர். அவர்களின் அருகில் அவர்கள் சில நாட்கள் இருந்த போதினும், அவர்கள் இறைபோதை தெளியப் பெறவில்லை.

அவர்கள் இருவரும் மக்காவை அடைந்த பொழுது, உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், கஃபாவின் முன்னால் வைத்து, தம் மாணவரின் கையைப் பிடித்து, அவர்களை இறைவனிடம் ஒப்படைத்து, அவர்களுக்காக இறைவனிடம் பரிந்துரை செய்து இறைஞ்சினார்கள்.

அப்பொழுது ''நாம் முயீனுத்தீனை ஏற்றுக் கொண்டோம்'' என்று அசரீரி முழங்கியதை இருவரும் செவியுற்றார்கள்.

பின்னர் அவர்கள் இருவரும், மதீனா சென்று அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் கைகட்டி நின்றனர். அப்பொழுது குரு, தம் சீடரை நோக்கி, ''அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் பணிவுடன் ஸலாம் உரையும்!'' என்று கூறினர். அவ்விதமே அவர்கள் செய்ய, ''மண்ணிலும், கடலிலும் உள்ள இறைபக்தர்களின் தலைவ! உமக்கும் ஸலாம் உண்டாவதாக'' என்று அசரீரியாக பதில் வந்தது. அது கேட்ட உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், தம் சீடர் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களை நோக்கி, ''இப்பொழுதுதான் நீர் பரிபூரணத் தன்மையை எய்தப் பெற்றீர்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தனர்.

இதன் பின் அவர்கள் இருவரும், மதீனாவை விட்டு நீங்கித் தம் பயணத்தைத் தொடங்கினார்கள். பயணத்தின் போதும், தம் குருநாதரின் படுக்கை விரிப்பையும், தண்ணீர்க் கேத்தலையும் தம் தலை மீது சுமந்து கொண்டு சென்றார்கள். சீடர் அவர்களுடன் மற்றொரு தர்வேஷூம் சேர்ந்து கொண்டார். ஊஷ் என்ற ஊரில் அவர்கள் ஒரு மாபெரும் இறைநேசச் செல்வரை அவரின் தவமடத்தில் சென்று சந்தித்தார்கள். அங்கு சென்ற எவரும், வெறும் கையுடன் திரும்பியது கிடையாது. உணவில்லா தவருக்கு உணவும், உடையில்லாதவருக்கு உடையும் அங்கு கிடைத்து வந்தன. சரியான உடையின்றி எவரும் அவரிடம் வரின், உடனே அவர் தம்முடைய உடையைக் கழற்றி அவரிடம் கொடுத்து விடுவார். அவருக்கு வேறொரு உடை இறைவனிடமிருந்து அடுத்த கணம் கிடைத்து விடும். அவருடன் அவர்கள் மூவரும் சில நாட்கள் தங்கியிருந் தார்கள். அப்பொழுது அவர், அவர்களை நோக்கி, ''தர்வேஷ்களே! உங்களுக்குக் கிடைப்பது அனைத்தையும், இறை வழியில் செலவழித்து விடுங்கள்! பொருளைச் சேமித்து வைக்க வேண்டாம்! ஏழைகளுக்கு உணவளியுங்கள்! அவ்விதம் செய்வதன் மூலம் நீங்கள் இறைநேசத்தை எய்தப் பெறுவீர்கள்'' என்று அறிவுரை பகர்ந்தார்.

இதன்பின் அவரிடமிருந்து விடைபெற்றுத் தம் பயணத்தைத் தொடங்கிய குருவும், சீடரும் படக்ஷான் வந்து சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் ஜூனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களின் கலீபாக்களில் ஒருவரைச் சந்தித்தார்கள். அவருக்கு ஏறத்தாழ நூறு வயதிருக்கும். எப்பொழுது பார்த்தாலும், அவர் இறைத்தியானத்தில் மூழ்கி இருந்தார். அவருக்கு ஒரு கால் துண்டிக்கப்பட்டிருந்தது. அதற்கான காரணத்தை அவரிடம் வினவப்பட்ட பொழுது, ''ஒரு நாள் இச்சை மிகைத்துப் பள்ளியை விட்டும் வெளியே செல்ல எண்ணி நான் காலை வெளியே எடுத்து

வைத்தேன். அப்பொழுது "நீயோ இறை காதல் மீக்குற்றிருப்பதாகக் கூறிக் கொள்கிறாய். அவனுக்கு நீ செய்து கொடுத்த உறுதிப் பிரமாணத்தை உடைத்தெறிந்து விட்டு வெளியே ஏன் காலெடுத்து வைக்கிறாய்?" என்று ஒரு சப்தம் கேட்டது. அடுத்த கணம் என் கால் துண்டிக்கப்பட்டுக் கிடந்தது. இது நிகழ்ந்து நாற்பதாண்டுகளாகி விட்டன. மறுமையில் நான் இறைவனின் நல்லடியார்களின் முன்பு என் முகத்தை எவ்வாறு காட்டுவேன் என்பதை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டுள்ளேன்" என்று கூறினார் அவர்.

இதன்பின் புகாரா சென்ற அவர்கள், அங்கு வாழ்ந்த பல இறைநேசச் செல்வர்களையும் சந்தித்தனர். பின்னர் பக்தாது வந்த அவர்கள் அங்கு சில காலம் தங்கியிருந்து விட்டு, மீண்டும் தம் பயணத்தை மேற்கொண் டனர். சீவிஸ்தானில் அவர்கள் இருவரும் பயணம் செய்து கொண்டி ருக்கும் பொழுது, ஒரு தவமடத்தில் சத்ருத்தீன் முஹம்மது அஹ்மது (ரஹ்) அவர்களைச் சந்தித்தனர். அவர்களோ தம் தவமடத்திற்கு வரும் எவருக்கும் யாதேனும் கொடுக்காது அனுப்புவதில்லை. அவற்றை அவர்கள் இறைவனிடமிருந்தே பெற்று வழங்கினார்கள். அவர்கள் எவரைப் பார்த்தாலும், "என்னுடைய ஈமான் ஸலாமத்துக்காக இறைவனிடம் இறைஞ்சுங்கள்! நான் என்னுடைய அடக்கவிடத்துக்கு, ஈமான் ஸலாமத்துடன் சென்றால்தான் நான் என்னுடைய வாழ்வை வெற்றியுடன் முடித்துத் திரும்புவதாக எண்ணுவேன்" என்று கூறுவார்கள்.

அடக்கவிடத்தில் ஏற்படும் துன்பங்களைப் பற்றி எவரேனும் அவர்களிடம் கூறின், அவர்களின் உடலெல்லாம் நடுங்கும். கண்களி லிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடும். இவ்வாறே ஏழு நாட்கள் அவர்கள் தொடர்ந்து அழுது கொண்டிருப்பார்கள். இடை இடையே வானத்தை அண்ணாந்து பார்த்து அழுவார்கள். இதைப் பார்த்து" என்ன! இத்தகு விேனாதமான மகானாக இவர்கள் இருக்கிறார்கள்" என்று குருவும் சீடரும் பேசிக் கொண்டார்கள்.

அழுகை ஓய்ந்ததும் அவர்கள், அவ் இருவரையும் நோக்கி, "எனது அன்பிற்குரியவர்களே! நான் ஒரு நாள் இறந்தேயாக வேண்டும். இஸ்ராயீல் (அலை) என் பின்னே வந்து கொண்டே இருக்கிறார். கேள்வி கேட்கப்படும் மறுமை நாள் ஒன்று நிச்சயமாக வரத்தான் போகிறது. இந்நிலையில் எவ்வாறு ஒருவன் உறங்கவோ, சிரிக்கவோ, மகிழவோ இயலும்? புதை குழியில் ஏற்படவிருக்கும் துன்பங்களையும், துயரங் களையும் நீங்கள் அறிய வருவீர்களாயின், நீங்கள் நீரில் உப்புக் கரைவது போன்று கரைந்து விடுவீர்கள்" என்று கூறி அழுதார்கள்.

அங்கிருந்து நீங்கி அவர்கள் இருவரும் திமிஷ்கை வந்தடைந்த பொழுது தான் நாம் துவக்கத்தில் கூறிய சம்பவம் நிகழ்ந்தது. இதன் பின் பல நாடுகளிலும் சுற்றித்திரிந்து, பல இறைநேசச் செல்வர்களைச் சந்தித்து அளவளாவிய பின், மீண்டும் அவர்கள் பக்தாதை அடைந்தார்கள்.

அப்பொழுது உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள் தம் சீடரை நோக்கி, ''நான் இங்கு தனியாக இருக்க விரும்புகிறேன். ஆதலின் நீர் போய் விட்டுப் பொழுது விடிந்ததும் வந்து சேரும்! நான் உமக்குச் சில அரிய ஞானார்த்த இரகசியங்களை வெளிப்படுத்துகிறேன். அவை உமக்கும், உம்மைப் பின்பற்றுபவர்களுக்கும் பயனுடைத்தாயிருக்கும்'' என்று கூறினர்.

அன்றிரவு முழுவதும் இறை தியானத்திலே ஈடுபட்டிருந்தார்கள் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள். அவ் இரவில் எந்த எந்த ஞானார்ந்த இரகசியங்களை எல்லாம் தம் சீடருக்குப் போதிக்க வேண்டும் என்பது பற்றி இறைவன் அவர்களுக்கு உள்ளுணர்வின் மூலம் அறிவித்தான்.

விடிந்ததும் சீடரை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தார்கள். சீடர் அவர்களின் முன் வந்து 'ஸலாம்' கூறி நின்றதும், ''முயீனுத்தீன்! அமரும்! நான் கூறுவதை எழுதிக் கொள்ளும்!'' என்று கூறி மள மளவென்று சொல்லிக் கொண்டே சென்றார்கள் அவர்கள். காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும் அவற்றை எழுதினார்கள். அது மொத்தம் பதினெட்டு அத்தியாயங்கள் வந்தது. அதுவே பிற்காலத்தில் 'அனீசு அர்வாஹ்' என்னும் பெயருடன் நூலுருவில் வெளி வந்தது.

இதன்பின் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள் தம் சீடரை நோக்கி, ''முயீனுத்தீன்! நான் இதனை உமக்காகவே அருளிச் செய்தேன். இதில் கூறப்பட்டிருக்கும் அறவுரைகளை நீர் ஒழுங்காகப் பேணி ஒழுகி வர வேண்டும். தம் குருவின் ஆணைகளைச் சிரமேற்றாங்கிச் செயலாற்று கின்றவனே, அவரின் உண்மையான ஆன்மீக வாரிசாவான். இவற்றை நீர் உம்முடைய ஆன்மீக மாணவர்களுக்கும் சிறப்பாக எடுத்துப் போதித்து வாரும்! அவ்விதம் செய்து வருவீராயின், நீர் மறுமை நாளின் போது இறைவன் முன்னிலையில் வெட்கப்பட வேண்டியதில்லை'' என்று கூறி ஒரு கைத்தடி, போர்வை, காலணி, தொழுகை விரிப்பு ஆகியவற்றை அவர்களிடம் ஒப்படைத்து, ''இவை அனைத்தும் அண்ணல் நபி (ஸல்) அவர்களால், எங்களின் ஆன்மீக மூதாதையருக்கு அருளப்பட்டவை யாகும். அவற்றை நான் இதுகாறும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்து, இப்பொழுது உம்மிடம் ஒப்படைத்து விட்டேன். இவற்றை நீரும் பத்திரமாக வைத்திருந்து, இறுதியில் தகுதியாளர் கிடைக்கும் பொழுது அவரிடம் ஒப்படைத்து விடும். மனிதர்களிடமிருந்து எதனையும் எதிர்

பார்க்க வேண்டாம்! அவர்களிடமிருந்து எதனையும் கேட்கவும் வேண்டாம்! முடிந்த மட்டும் அவர்களை விட்டும் ஒதுங்கி இருப்பீராக!''

இவ்வாறு அறிவுரை வழங்கிய உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், தம் சீடர் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களின் தலையிலும் கண்களிலும் முத்தமிட்டு, ''நான் உம்மை இறைவனிடம் ஒப்படைத்து விட்டேன்'' என்று உணர்ச்சி மீக்குற்றுக் கூறினார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 582 (கி.பி.1186) ஆம் ஆண்டில் ஆகும். அப்பொழுது காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களுக்கு வயது ஐம்பத்திரண்டு.

உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களுக்கு ஏராளமான ஆன்மீக மாணவர்கள் இருந்த போதினும், அவர்களில் நால்வருக்கே அவர்கள் 'கலீபா' பதவி வழங்கினர். அவர்கள் (1) காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்), (2) நஜ்முத்தீன் ஸக்ரா (ரஹ்), (3) ஷைகு ஸஃதி லங்கோச்சி (ரஹ்), (4) ஷைகு முஹம்மது துர்க் (ரஹ்) ஆகியோர் ஆவர். இவர்களில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களைப் பற்றி, அவர்கள் அடிக்கடி, ''முயீனுத்தீன் ஹஸன் மஹ்பூபுல் ஹக் ஹே'' (முயீனுத்தீன் ஹஸன் அல்லாஹ்வின் அருள் நேசர்) என்று கூறுவர்.

இருபதாண்டுகள் இடைவிடாத் தொடர்புக்குப் பின், குருவும் சீடரும் பிரிந்தார்கள். அப்பொழுது இருவர் கண்களும் குளமாயின.

பின்னர் பல ஆண்டுகளுக்குப் பின் சீடரின் நினைவு வரவே அவர்கள் இந்தியா வந்து தம் சீடரைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இதன் பின் மக்கா வந்தடைந்த உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், இறையில்லத்தை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாய், அந்தப் புனித நகரிலேயே தங்கிவிட்டார்கள். இறை இல்லத்தின் அருகிலேயே இருபத்தைந்து ஆண்டு காலம் வாழ்ந்து,

ஆதியே போற்றி! ஓங்கும்
    அமலனே போற்றி! மாறா
நீதியே போற்றி!! வாழ்வி
    னிருமலா நந்த போற்றி!
சோதியே போற்றி!! நான்காம்
    சுருதியின முடிவே போற்றி!!!
நாதியே போற்றி! நித்ய
    நாதனே போற்றி!! போற்றி !!!

துய்யனே போற்றி! அன்பார்
சுகானந்தப் பொருளே போற்றி!!
மெய்யனே போற்றி!!! ஆளும்
விமலனே, பரனே போற்றி!
கையனே போற்றி!! மிக்காம்
கருணை வாரிதியே போற்றி!!!
அய்யனே பெரியாய் போற்றி!
அரியவா போற்றி!! போற்றி !!!

நித்தனே போற்றி! மாறா
நிராமயப் பொருளே போற்றி!!
சுத்தனே போற்றி!!! மாவத்
துவிதவான் முடிவே போற்றி!
அத்தனே போற்றி!! மீறும்
ஆனந்த மயனே போற்றி!!!
சுத்தனே போற்றி! எங்கள்
காரணா லயமே போற்றி!!!

போதனே போற்றி! போதப்
புராதனப் பொருளே போற்றி!!
நாதனே போற்றி!!! நாத
நாயகச் சுடரே போற்றி!
நீதனே போற்றி!! நீத
நிராதர வஸ்தே போற்றி!!!
வேதனே போற்றி! வேத
விதிமுடி வினனே போற்றி!!

துரியனே போற்றி! நிற்கும்
துறையினர் இறையே போற்றி!!
உரியனே போற்றி!!! எல்லாம்
உடையமுன் முதலே போற்றி!
அரியனே போற்றி!! மூவா
அநாதியாம் பரமே போற்றி!!!
பெரியனே போற்றி! ஏத்தும்
பெருந்தகாய் போற்றி!! போற்றி!!! ★

★ இவை நாகூர் முஹம்மது நயினா மரைக்காயர் இயற்றிய "தேவார மஞ்சரி'யில் உள்ள கவிதைகளாகும்.

என்று இறைவனை போற்றிப் புகழ்ந்து பாடிப் பரவசமுற்று வணங்கிக் கொண்டிருந்த அவர்கள், ஹிஜ்ரி 607 -ஆம் ஆண்டு ஷவ்வால் பிறை 6 அன்று நிர்யாணமடைந்து, இறை சந்நிதானத்தை எய்தினார்கள். அவர்களின் பூத உடல் ஜன்னத்துல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

5. தகிய்யுத்தீன் முஹம்மது இப்னு அஹ்மது அல் யூனீனி (ரஹ்)

மன்னாதி மன்னர்களும் அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்தார்கள். அவர்களின் தரிசனத்திற்காக மகுடாதிபதிகள் அவர்களின் தவமடத்தின் வாசலில் காத்துக் கிடந்தார்கள். திமிஷ்கின் மாமன்னர் அல் மாலிக் அல் ஆதியின் திருமகன், அல் மாலிக் அல் அஷ்ரஃப், அவர்களுக்கு அளவற்ற மரியாதை செலுத்தினார். ஒரு தடவை அவர்கள் 'உளூ'ச் செய்து விட்டு தரையில் வெறுங்காலுடன் நடந்து வரத் தயங்கி நின்ற பொழுது, அங்கு வந்த அவ் இளவரசர் உடனே தம் தலைப்பாகையைக் கழற்றி விரித்து, ''இது தூய்மையானது, இதன் மீது நடந்து வாருங்கள்!'' என்று அன்பும் பக்தியும் ததும்பக் கூறினார். அவர் மட்டும் இவ்வாறு செய்யவில்லை. முன்னர் திமிஷ்கை ஆண்ட அல் மலிக் அல் ஸாலிஹ் இஸ்மாயீலும் இவ்வாறே அவர்களுக்கு மரியாதை செய்தார். இவ்வளவுக்கும் அவர்கள் ஓர் அகிலமாளும் பேரரசர் அல்லர். ஆன்மீகப் பேரரசர்.

அண்ணலெம் பெருமான் முஹம்மது (ஸல்) அவர்களின் அருமைத் திருப்பெயரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழி வந்த ஒரு குடும்பத்தினர், பால்பக் மாவட்டத்தைச் சேர்ந்த யூனீன் என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்தார்கள். அக்குடும்பத்தில் தோன்றிய அஹ்மது என்பவரின் அருமைத் திருமகவான ஒரு குழந்தை ஹிஜ்ரி 572 ஆம் ஆண்டு ரஜபுமாதம், ஆறாம் நாள் (கி.பி. 1177 - ஆம் ஆண்டு ஜனவரி7 -ஆம் நாள்) பிறந்தது. அதற்குப் பெற்றோர்கள், எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அழகுத்திருப் பெயராகிய 'முஹம்மது' என்பதனைச் சூட்டி அகமகிழ்ந்தனர். பிற் காலத்தில் அப்பெயருடன், அவர்களின் சிறப்புப் பெயராகிய தகிய்யுத்தீன் என்பதும் இணைந்து கொண்டது.

குழந்தை வயதேறப் பெற்றதும், அதனைப் பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி பயிற்றுவித்தனர். குர் ஆனை ஓதி முடித்ததும் அவருக்கு மார்க்கக் கல்வி போதிக்க விரும்பிய பெற்றோர்கள், அவரை

முஅஃபகத்தீன் அப்துல்லாஹ் பின் அஹ்மது அல் மக்திஸி அவர்களிடம், அழைத்துச் சென்று மார்க்கச் சட்ட திட்டங்களை போதிக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். அவரும் அவ்வாறே செய்தார்.

மார்க்கச் சட்டதிட்டங்களைக் கற்றுத் தேர்ந்த முஹம்மது (ரஹ்) அவர்கள் ஹதீதுக் கலையைப் படிக்க விரும்பி, ஹாஃபிஸ் அப்துல் கனி அவர்களை அணுகி, அவர்களின் காலடியில் அமர்ந்து அதனைக் கற்றனர்.

ஆசிரியர், அவர்கள் மீது கொண்டிருந்த மதிப்போ அளப்பரியதாக இருந்தது. எவரும் அவரிடம் வந்து ஹதீது பற்றி ஏதேனும் கேள்வி கேட்பின், உடனே அவர் தம் மாணவர் முஹம்மது (ரஹ்) அவர்களின் பக்கல் திரும்பி, ''இது பற்றி நீர் என்ன கூறுகிறீர்?'' என்று வினவுவர். உடனே அவர்கள் அதற்கான விடையைக் கூறுவர். அப்பொழுது ஆசிரியர் முகத்திலே புன்முறுவல் தவழ, கேள்வி கேட்டவரை நோக்கி, ''இது தான் நீர் கேட்டதற்கான சரியான விடை'' என்று கூறுவர்.

ஹதீதுக் கலையில் தம் காலத்தில், தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனும்படிச் சிறந்து விளங்கிய அவர்கள், ஹுமைதீ தொகுத்த ஸஹீஹ் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய இரண்டு உண்மையான ஹதீது நூல்களையும் மனனமாக்கி இருந்தார்கள். இவற்றை வேண்டும் பொழுது மள,மள வென்று ஒப்புவிப்பார்கள். இவற்றைத் தவிர்த்து அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்களின் 'முஸ்னத்' என்னும் ஹதீதுத் திரட்டிலும் பெரும்பாலான பகுதி அவர்களுக்கு மனனம்.

அவர்களுக்கு அபார நினைவாற்றல் இருந்தது. அதன் காரணமாக அவர்கள் ஒரே இருப்பில் அமர்ந்து, எழுபது ஹதீதுகளை மனனமாக்கி விடுவர். சூரா அன்ஆமை ஒரே நாளிலும் ஹரீரி எழுதிய 'மகாமா'வை அரை நாளிலும், ஸஹீஹ் முஸ்லிமை நான்கு மாதங்களிலும் அவர்கள் மனனமாக்கினர்.

ஒரு தடவை முஸ்னதை அவர்களிடம் படித்துக் காட்டப்பட்ட பொழுது, அவற்றில் சில ஹதீதுகளை அவர்கள் குறித்துக் கொண்டார்கள். பின்னர் அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''நான் இவற்றையெல்லாம் மனனம் செய்யவில்லை. எனவே இவற்றைக் குறித்துக் கொண்டேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

இம் மூன்று ஹதீது நூல்களைத் தவிர்த்து, அவர்கள் ஏனைய உண்மையான ஹதீது நூல்களையும் கற்றுத் தேர்ச்சியுற்றிருந்தனர். எனவே எவரும் அவர்களிடம் வந்து ஒரு ஹதீதைக் கூறி, அது உண்மையானதா, அல்லவா என்று வினவின், அடுத்த கணமே அவர்கள் அது உண்மை யானது அல்லது பொய்யானது என்று கூறிவிடுவர்.

அரபி மொழியிலும், இலக்கணத்திலும் அவர்களுக்கு அபார ஞானம் இருந்தது. அவற்றை அவர்கள் ஷைகு தாஜுத்தீன் அல் கிந்தியிடம் கற்றுத் தேர்ந்தனர். அல் கிந்தியும் அவர்களிடம் அபார மதிப்பு வைத்திருந்தார். அவரிடம் கல்வி பயிலுவதற்காக அவரின் முன் அரசர்கள் வந்து முழத் தாளிட்டு அமர்ந்திருந்த போதினும், அவர் முஹம்மது (ரஹ்) அவர்களுக்கே அதிக மதிப்பளித்து வந்தார்.

அவர்கள் ஆன்மீகக் கலையைப் பயின்றது, தம் உறவினராக அப்துல்லாஹ் அல் யூனீனி (ரஹ்) அவர்களிடமாகும். கிர்க்கா அணிவிக்கப் பெற்றது அப்துல்லாஹ் அல் யூனீனி (ரஹ்) அவர்களின் ஆசான் அப்துல் லாஹ் ஃபதாயிஹி (ரஹ்) அவர்களால் ஆகும். அப்துல்லாஹ் அல் யூனீனி (ரஹ்) அவர்களுடன் இருந்து, அவர்கள் கற்ற ஆன்மீகக் கல்வியும், பெற்ற ஆன்மீகப் பயிற்சியும் அனந்தம். இவையே அவர்களைப் பிற்காலத்தில் மாபெரும் ஷைகாக ஆக்க உறுதுணையாக விளங்கின.

தம் ஆசானுக்குப் பின் அவர்களின் ஆசனத்தில் அமர்ந்து, ஆன்மீகச் செங்கோல் செலுத்தத் தொடங்கிய ஆண்டகை அவர்கள் மக்களுக்கு அறவழியை, அல்லாஹ்வின் வழியைக் காட்டியருளினார்கள். அவர் களின் சொற்பொழிவைக் கேட்பதற்காக மக்கள் நாலா திசைகளிலிருந்தும் கூட்டம், கூட்டமாகத் திரண்டு வந்தனர்.

திமிஷ்கில் அல் மாலிக் அல் அஷ்ரஃப் ஆட்சி செய்து கொண்டி ருக்கும் பொழுது, அங்கு வருகை தந்த எகிப்து மன்னர் அல் மாலிக் அல் காமில், ஆண்டகை அவர்களைத் தாம் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு அல் மாலிக் அல் அஷ்ரஃபைக் கேட்டுக் கொண்டார். அவ்வாறே திமிஷ்கிலுள்ள 'மகிழ்ச்சி மாளிகை'யில் இருவரும் சந்தித்துப் பல்வேறு விஷயங்கள் பற்றி உரையாடினர். அப்பொழுது கனமான பொருளால் குற்றவாளியைச் சிரச்சேதம் செய்வது பற்றிய பிரச்சினை எழுந்தது. அப்பொழுது அல் மாலிக் காமில், 'அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குற்றமிழைக்கப்பட்டவனின் வாக்கு மூலத்தை மட்டும் ஆதாரமாக வைத்துக் கொண்டு, குற்றவாளியின் தலையை இரண்டு கற்களுக் கிடையே வைத்து நசுக்குமாறு ஆணையிட்டார்கள் என்று ஒரு ஹதீதைக் கூறினார்.

அதுகேட்ட ஆண்டகை அவர்கள் 'இல்லை; இல்லை. குற்ற வாளியும் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். அதன் பின்னரே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவ்விதம் தீர்ப்பளித்தனர்'' என்றும், இந்த ஹதீது ஸஹீஹ் முஸ்லிமில் உள்ளது என்றும் கூறினர்.

''அப்படியா! நான் அதனைப் பார்த்ததில்லையே. என்னிடம் ஸஹீஹ் முஸ்லிமின் சுருங்கிய பாதிப்புத் தான் உள்ளது'' என்று கூறி, ஸஹீஹ்

முஸ்லிமின் விரிவான பதிப்பைக் கொண்டு வருமாறு ஆணையிட்டார் அல் மாலிக் அல் காமில்.

ஒரு நொடியில் ஐந்து தொகுதிகளாக இருந்த ஸஹீஹ் முஸ்லிமின் விரிவான பாதிப்பு கொணரப்பட்டது. ஒரு தொகுதியை அல் மாலிக் அல் காமிலும் மற்றொரு தொகுதியை அல் மாலிக் அல் அஷ்ரஃபும், வேறொரு தொகுதியை அல்மாலிக் அல் ஸாலிஹுவும், பிறிதொரு தொகுதியை இமாதுத் தீனும் எடுத்துக் கொண்டு, அவற்றைப் புரட்டிப் பார்த்தனர். இறுதியாக எஞ்சியிருந்த தொகுதியை, ஆண்டகை அவர்கள் எடுத்துப் புரட்டியது தான் தாமதம். அவர்கள் விரும்பிய ஹதீது அவர் களின் கண்முன் பளிச்சிட்டது. அதனை அவர்கள் அல் மாலிக் அல் காமிலிடமும், ஏனையோரிடமும் காட்டினர். அது அவர்கள் கூறிய வண்ணமே இருப்பது கண்டு, அங்கிருந்த அனைவருக்கும் ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இதன் பின் ஆண்டகை அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர் களுக்குப் பெரிதும் மரியாதை செய்த அல் மாலிக் அல் காமில், அவர்களை எவ்வாறாவது தம் நாட்டிற்கு அழைத்துச் சென்று, தம்முடன் வைத்துக் கொள்ள விரும்பினார். இதனை எவ்வாறோ உய்த்துணர்ந்து கொண்ட அல் மாலிக் அல் அஷ்ரஃப், அவர்களை இழக்க மனமில்லாது, உடனே அவர்களை அவர்களின் ஊரான யூனீனுக்கு அனுப்பி வைத்து விட்டார்.

இச் செய்தி அல் மாலிக் அல் காமிலுக்குத் தெரிய வந்ததும், இதுபற்றி அவர் அல் மாலிக் அல் அஷ்ரஃபிடம் விசாரித்த பொழுது, ''ஆமாம்! அவர்கள் தம் ஊரைவிட்டுப் பிரிய விரும்பாதவர்கள். நம் அழைப்பின் மீது இங்கு வந்தார்கள். எனவே அவர்களை, அவர்களின் ஊருக்கு அனுப்பிவைத்து விட்டேன்'' என்று கூறினார் அவர்.

எனினும் தாம் அவர்களுக்குப் போதிய சங்கை செய்யவில்லையே என்று வருந்திய அல் மாலிக் அல் காமில், அவர்களின் பின்னே ஏராளமான தங்க நாணயங்களைத் தம்முடைய அன்புக் காணிக்கையாக அனுப்பிவைத்தார். ஆனால் ஆண்டகை அவர்களோ, தம்மிடம் தமக்குப் போதுமான பொருள் இருப்பதாகக் கூறி, அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

பால்பக்கின் அரசர் அல் மாலிக் அல் அம்ஜதும், ஆண்டகை அவர்கள் மீது அபார பக்தி செலுத்தி வந்தார். அவர் அடிக்கடி வந்து ஆண்டகை அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் உரையாடி மகிழ்ந்து வந்தார். ஹிம்ஸியின் மன்னர் அல்மாலிக் அல் முஜாஹிதும் ஆண்டகை அவர் களைச் சந்தித்து, அளவளாவுவதைத் தமக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதி வந்தார்.

ஹிஜ்ரி 655- ஆம் ஆண்டில் ஆண்டகை அவர்கள், திமிஷ்க் வந்து, அங்குள்ள காஸிய்யூன் மலையடிவாரத்திலுள்ள ஷைகு அலீ அல் குரைஷியின் தவமடத்தில் தங்கிய பொழுது, அப்பொழுது, திமிஷ்கைக் கைப்பற்றி ஆண்டு வந்த சுல்தான் ஸலாஹுத்தீனின் கொள்ளுப்பேரர் அல் மலிக் அல் அஸீஸ் அங்கு வந்து, அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்ததோடு, "தங்களுடைய தேவைகளைக் கூறுங்கள்! நான் அவற்றைச் செய்து தரக் காத்துள்ளேன்" என்று மிகவும் வினயமாகக் கூறினார்.

ஆனால் அரசர்களுடன் தொடர்பு கொள்வதை ஆண்டகை அவர்கள் பெரிதும் வெறுத்து வந்தனர். சில பொழுது அவர்கள் அரசர்களுடன் தொடர்பு கொண்டார்களென்றால், அது பொதுமக்களின் நன்மையை முன்னிட்டேயன்றி வேறில்லை. ஒரு நாள் அவர்கள், அல் மாலிக் அல் அஷ்ரஃபிடம் பொதுமக்களின் விண்ணப்பங்கள் அடங்கிய ஒரு கத்தைக் காகிதங்களைக் கொடுத்த பொழுது, அவற்றை ஒன்றின் பின் ஒன்றாக எடுத்துப் படித்துப் பெரிதும் களைப்படைந்து ஓய்ந்து விட்டார் அவர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, "தாங்கள் மக்களின் விண்ணப்பங்களைப் பார்த்து, அவற்றை நிறைவேற்றி வைப்பீர்களென்ற நம்பிக்கையோடு தான், நான் தங்களைச் சந்திக்க வந்துள்ளேனேயன்றி வேறில்லை. இல்லையெனில் நம்மிருவருக்கிடையே உள்ள தொடர்பு இத்துடன் முற்றுப் பெறும்" என்று கூறினர்.

அது கேட்டுப் பெரிதும் திடுக்குற்றுப் போன அரசர், ஆண்டகை அவர்களை நோக்கி, "நான் அவற்றைப் படித்துப் பெரிதும் களைப் படைந்து போனதன் காரணமாக, அவற்றைக் கீழே வைத்து விட்டுச் சிறிது ஓய்வு கொண்டேனேயன்றி வேறில்லை. தங்களின் திருக்கரத்தின் மூலமாக வந்த விண்ணப்பங்களை நான் உதாசீனம் செய்வேனா என்ன?" என்று கூறி, அவை அனைத்திலும் மளமளவென்று கைச்சாத்திட்டார் அவர்.

சிற்றரசர்களும், பேரரசர்களும் போட்டியிட்டுக் கொண்டு, அவர்களைத் தரிசிப்பதற்காக அவர்களின் இல்லத்திற்கு வந்து சென்றது, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இத்தகு பேறு தமக்குக் கிடைத்தது, நம்முடைய ஆன்மீக ஆசான் அப்துல்லாஹ் யூனீனி (ரஹ்) அவர்களின் ஆசியினால் தான் என்று அவர்கள் கூறி, பின்வரும் நிகழ்ச்சியை எடுத்துரைத்தார்கள்:

"என்னுடைய ஆன்மீக ஆசான் அப்துல்லாஹ் யூனீனி (ரஹ்) அவர்களின் மனைவிக்கு, அவரின் முந்திய கணவரின் மூலமாக ஒரு மகள் பிறந்திருந்தாள். அவள் பருவமெய்திய பொழுது, அவளை எனக்கு

மணமுடித்து வைக்குமாறு தம் மனைவியிடம் என் ஆசான் கூறினார்கள். அதற்கு அவர், "அவரோ ஏழையாயிற்றே, அவரிடம் யாதொரு சொத்து சொகமும் இல்லையே. இந்நிலையில் நான் அவருக்கு என் அருமை மகளை மணமுடித்து வைத்து, அவள் அவதிப்படுவதை என்னால் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க இயலுமா, என்ன? ஆதலின் அவளை ஒரு நல்ல இடத்திலேயே மணமுடித்து வைக்க விரும்புகிறேன்" என்று கூறினார்.

அப்பொழுது என் ஆசான் தம் மனைவியை நோக்கி, "நான் கூறியபடி செய்! அவள் ஒரு நல்ல வீட்டில் வசதியுடன் வாழ்வதையும், அவளின் கணவருக்குக் குற்றூழியம் செய்வதற்காக அடிமைகளெல்லாம் அங்கு வருவதையும், நான் என் மனக்கண்ணால் காண்கிறேன்" என்று கூறினார். இதன் பின்னே தம் மகளை எனக்கு மணமுடித்துத் தர முன்வந்தார் அவர்களின் மனைவி."

ஆண்டகை அவர்களைத் தரிசிப்பதற்காக வரும் அரசர்கள், அவர்களுக்கு ஏராளமான காணிக்கைகளை வழங்குவர். ஆனால் அவர்களோ, தமக்குப் போதுமான அளவை மட்டும் எடுத்துக் கொண்டு, ஏனைய வற்றைத் திருப்பிக் கொடுத்து விடுவர். அப்பொழுது அவர்கள், "நான் பொதுக் கருவூலத்திலிருந்து எனக்குத் தேவைப்பட்டதற்கு மேல் அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை" என்று கூறுவர்.

அல் மலிக் அல் அஷ்ரஃப், ஆண்டகை அவர்களின் பிறந்த ஊராகிய யூனீனையே அவர்களுக்கு மானியமாக வழங்கிய பொழுது, அப் பத்திரத்தை வாங்கி அவர்கள் கிழித்தெறிந்து விட்டார்கள். அதுபற்றி அல் மலிக் அல் அஷ்ரஃப் தம் வருத்தத்தை அவர்களிடம் தெரியப்படுத்திய பொழுது, "நான் பொதுக் கருவூலத்திலிருந்து எனக்குத் தேவைப் பட்டதற்கு மேல், அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை" என்றே அவரிடமும் கூறினார்கள்.

ஒருவர் அவர்களுக்கு ஏதேனும் காணிக்கை வழங்கின், அது அவரால் 'ஹலால்' ஆன முறையில் ஈட்டப்பட்டதாயிருந்தாலொழிய, அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அமீர்களிடமிருந்தோ, அமைச்சர் களிடமிருந்தோ உணவுப் பொருள் போன்றவற்றையே அன்றி வேறு எவ்வித உயர்தரமான பொருளையும் காணிக்கையாக அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

சில பொழுது அவர்கள் அரசர்களுக்கும், ஏனையோருக்கும் தின்பண்டங்களை அன்பளிப்பாக அனுப்பி வைப்பர். அவற்றை அவர்கள் பெரும் பாக்கியமாக (பரக்கத்தாக)க் கருதி, இருகரம் கொண்டும் வாங்கிக்

கொள்வர். ஒரு தடவை ஆண்டகை அவர்கள், அல் மலிக் அல் காமிலுக்கு பாலால் செய்யப்பட்ட பண்ணியம் ஒன்றை அனுப்பி வைத்த பொழுது, அவற்றை இரு கைகொண்டும் வாங்கிக் கொண்ட அவர், பாலையோ, பாலால் செய்யப்பட்ட பண்ணியங்களையோ உண்ணாது, அவர் பல்லாண்டுகளாகப் பத்தியம் காத்தபோதினும், உடனே அதனை 'பரக்கத்' திற்காக எடுத்து உண்ணத் தொடங்கி விட்டார். உண்ட அவசரத்தில் அது அவரின் தாடியிலும் உடையிலும் சிதறி விட்டது.

அவர்கள் பற்றிய வரையில் பேரரசர்களே இவ்வாறு நடந்து கொண்டார்களெனில், சிற்றரசர்களைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும், அரசப் பிரதிநிதிகளைப் பற்றியும் கூறவும் வேண்டுமோ? ஆண்டகை அவர்கள் காலாலிட்ட பணியை, அவர்கள் தலையால் செய்ய எப்பொழுதும் தயாராயிருந்தார்கள்.

இச் சமயத்தில் இப்னு அபில் ஹதீத் என்பவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலணி ஒன்றைத் தம்முடைய பாரம்பரியக் கருவூலமாகப் பேணிப் பாதுகாத்து வந்தார்; அதனை அரசர்களிடம் கொண்டு போய்க் காட்டி அன்பளிப்புகள் பெற்று வந்தார். அவர் திமிஷ்க் வந்து, அதனை அரசர் அல் மலிக் அல் அஷ்ரஃபிடம் காட்டிய பொழுது, அது கண்டு பெரிதும் வியப்பும் மகிழ்ச்சியும் உற்ற அவர், அதனை ஆண்டகை அவர்களிடமும் காட்ட விரும்பினார். எனவே அவர் தம் அமைச்சர்களை நோக்கி, ''ஆண்டகை அவர்கள் திமிஷ்கிற்கு வருவார்களென்று நாம் நெடுநாட்களாக எதிர்பார்த்திருந்தோம். அவர்கள் வரவில்லை. இப்பொழுது அவர்களை இங்கு வரவழைக்க நல்ல வாய்ப்பு ஒன்று வந்துள்ளது. இச்செய்தியை நாம் அவர்களுக்கு எழுதி, அவர்களை இங்கு வருமாறு வேண்டிக் கொண்டால் ஒரு வேளை, இந்தப் புனிதப் பொருளைத் தரிசிப்பதற்காக அவர்கள் இங்கு வருகை தரலாம். அவர்களைத் தரிசிப்பதற்கான நல்வாய்ப்பும் நமக்கு ஏற்படும்'' என்று கூறினார். அவ்வாறே ஆண்டகை அவர்களுக்கும் மடல் தீட்டப்பட்டது.

மடலைக் கண்டதும், முற்றும் துறந்த மேதையாகிய ஆண்டகை அவர்களுக்கும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலணியைக் கண்ணுற்றுத் தம் கண்களிலே ஒற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. திமிஷ்க் புறப்பட அவர்கள் தயாரானார்கள். அப்பொழுது அவர்களின் வயோதிக அன்னை, அவர்களை நோக்கி, ''மகனே! அண்ணல் நபி(ஸல்) அவர்களின் புனித காலணியைக் கண்ணுற வேண்டுமென்று எனக்கும் ஆசையாக உள்ளது. என் செய்வேன்? இந்தத் தள்ளாத வயதில், என்னால் திமிஷ்க் வர முடியுமா, என்ன?'' என்று கூறிச் சலித்துக் கொண்டார்.

அருமை அன்னைக்கு ஆறுதல் கூறிவிட்டு திமிஷ்க் வந்த, ஆண்டகை அவர்களை, திமிஷ்கின் மன்னர் அல் மலிக் அல் அஷ்ரஃப் பெரிதும் மரியாதையுடன் வரவேற்று, அந்தப் புனிதக் காலணியைக் காட்டினார். உவகை மீக்குற அதனைக் கண்ணுற்ற ஆண்டகை அவர்கள் தாம் திமிஷ்குக்கு ப் புறப்பட்டு வரும் பொழுது தம் அன்னை கூறிய செய்தியை அல் மலிக் அல் அஷ்ரஃபுக்கு எடுத்துரைத்தனர்.

அதுகேட்ட அல் மலிக் அல் அஷ்ரஃப், ''அதற்கென்ன? அதற்கான ஏற்பாடு செய்வோம்'' என்று கூறி, அப்புனிதக் காலணியை ஆண்டகை அவர்களின் அன்னையிடம் காட்டி வருவதற்காக யூனீன் அனுப்பி வைத்தார்.

யூனீன் சென்று அதனை ஆண்டகை அவர்களின் அன்னையிடம் காட்டிவிட்டு, திமிஷ்க் திரும்பிய இப்னு அபில் ஹதீதுக்கு, அல் மலிக் அல் அஷ்ரஃப் தகுந்த அன்பளிப்புகள் வழங்கி மகிழ்வித்தார்.

அடுத்த ஆண்டும், அந்தப் புனிதக் காலணியை எடுத்துக் கொண்டு, இப்னு அபில் ஹதீத், திமிஷ்க் வந்த பொழுது, அல் மலிக் அல் அஷ்ரஃபின் உள்ளத்தில் ஒரு சபலம் தட்டியது. அவர் இப்னு அபில் ஹதீதை நோக்கி, ''நீர் அந்தப் புனிதக் காலணியில் பட்டாணிக் கடலை அளவு ஒரு சிறு பகுதியை வெட்டி எனக்குத் தருகின்றீரா? அதற்காக நான் உமக்குத் தகுந்த அன்பளிப்புச் செய்கிறேன். நான் இறந்தபொழுது, அதனை என் கஃபன் துணியில் வைத்து, நல்லடக்கம் செய்யப்பட விரும்பு கிறேன்'' என்று கூறினார்.

அரசரின் இவ்வேண்டுகோள் இப்னு அபில் ஹதீதின் உள்ளத்தை இளகச் செய்தது. ''நல்லது; அதற்கான அன்பளிப்பு எவ்வளவு தரு கிறீர்கள்?'' என்று வினவினார் அவர்.

''முப்பதாயிரம் திர்ஹங்கள் தருகிறேன்'' என்றார் அரசர்.

அரசரின் இப் பதில் இப்னு அபில் ஹதீதின் உள்ளத்தை ஒரு குலுக்குக் குலுக்கியது. அவரால் அவரின் செவிகளையே நம்ப இயலவில்லை. எனினும் சமாளித்துக் கொண்டு, அதற்கு ஒப்புதல் வழங்கினார் அவர். அடுத்த நாள் ஷைகு மார்களின் முன்னிலையில் வைத்து அதனை வெட்டி எடுத்துக் கொள்வதென்றும், அப்பொழுது அதற்குரிய தொகையைக் கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்றிரவு இப்னு அபில் ஹதீதுக்கு உறக்கமே வரவில்லை. எதிர்பாராப் பெரும் பொருள் தம்மிடம் வரப் போவதை எண்ணி, எண்ணி, மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தார்

அவர். அதே பொழுதில் அல் மலிக் அல் அஷ்ரஃபுக்கும் உறக்கமே வர வில்லை. சிந்தனையில் மூழ்கி அவரும் தம் படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தார்.

திடீரென படுக்கை விட்டெழுந்த அவர், தம் ஏவலாளர் ஒருவரை இப்னு அபில் ஹதீதிடம் அனுப்பி, தாம் வேண்டிய பொருள் தமக்கு வேண்டாமென்று கூறிவரச் செய்தார். இப்பொழுது இப்னு அபில் ஹதீதின் நிலையோ பரிதாபத்திற்குரியதாக ஆகியது. சற்று நேரத்திற்கு முன் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த அவர், இப்பொழுது சொல்லொணாத் துன்பத்திற்காளானார்.

அடுத்த நாள் காலையில் அவர் சோகமே உருவாக அரண்மனை வந்த பொழுது அரசர் அல் மலிக் அல் அஷ்ரஃப், அவரை நோக்கி, ''இப்னு அபில் ஹதீத்! என்னுடைய திடீர் மனமாற்றம், உமக்குப் பெரும் ஏமாற்றத்தை உண்டு பண்ணியிருக்கலாம். நான் சென்ற இரவு இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது, திடீரென எனக்கு ஓர் எண்ணம் பளிச்சிட்டது. அப்புனிதக் காலணியிலிருந்து ஒரு சிறு பகுதியை வெட்டி எடுத்துக் கொளின், அவ்விதமே மற்ற அரசர்களும் செய்ய முன் வருவார்களல்லவா? அவ்விதமாயின் அப்புனிதக் காலணியின் நிலை என்னாவது? இறுதியாக அது ஒன்றுமே இல்லாது அழிந்தொழிந்து விடு மல்லவா? அதற்கு மூல காரணம் நானாக அல்லவா இருக்க வேண்டி இருக்கும்? என்று எண்ணினேன். உடனே ஒரு திடுக்கம் என்னை ஆட் கொண்டது. எனவே தான் நள்ளிரவிலேயே, உமக்கு நான் கேட்ட பொருள் வேண்டாமென்று செய்தி கூறி அனுப்பினேன். இதற்காக நீர் கவலைப்பட வேண்டாம்! நான் உமக்குத் தருவதாக வாக்களித்த தொகையை ஒரு காசு கூடக் குறைக்காது இதோ தருகிறேன். இது உமக்கு என்னுடைய அன்பளிப்பாக இருக்கட்டும்'' என்று கூறி, முப்பதாயிரம் திர்ஹங்கள் அடங்கிய ஒரு பணப்பையை அவரிடம் எடுத்துக் கொடுத்தார். அப்பொழுது இப்னு அபில் ஹதீதுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை.

பொற்கிழி பெற்று இல்லம் மீண்ட இப்னு அபில் ஹதீத் பின்னர் தம்மிடமிருந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலணியைப் பல அரசர்களிடமும் எடுத்துச் சென்று காட்டி அன்பளிப்புகள் பெற்று வாழ்ந்து வந்தார். ஹர்ரானில் வைத்து, அவரை இறப்பு அண்மிய பொழுது, தமக்கு அல் மலிக் அல் அஷ்ரஃப் செய்த நன்றியை மறக்கவில்லை. அதற்குப் பிரதி செய்யும் முறையில், அந்தப் புனிதக் காலணியை அல் மலிக் அல் அஷ்ரஃபிடமே ஒப்படைக்கத் தகுந்த ஏற்பாடு செய்துவிட்டு உயிர் நீத்தார் அவர்.

தாம் எந்தப் பொருளில் ஒரு சிறு பகுதியை விரும்பினாரோ, அந்தப் பொருளே, சிந்தாமல் சிதறாமல் தம்மிடம் வந்ததைக் கண்டு, பெரிதும் மகிழ்ந்த அல் மலிக் அல் அஷ்ரஃப், அதனை வைப்பதற்கென ஒரு மண்டபத்தையே எழுப்பி, அதில் அதனை மரியாதையுடன் வைத்துப் பேணிப் பாதுகாத்தார். அப்புனிதக் காலணியைப் பொதுமக்களும், தரிசித்து மகிழ்வதற்காக, அம்மண்டபம் ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் ஆகிய நாட்களில் திறந்து வைக்கப்பட்டது.

தம் ஆசானுக்குப் பின் ஆன்மீகத் துறையில் தனிப் பெரும் செங்கோல் செலுத்தி வந்த ஆண்டகை அவர்களை, அரசர்கள் மட்டுமல்லாது ஆன்றோர்களும், சான்றோர்களும் அடிக்கடி வந்து சந்தித்து அளவளாவி வந்தார்கள். அவர்கள் ஆண்டகை அவர்களுக்கு அளித்த மதிப்போ, அளப் பரியதாக இருந்தது. அவர்களின் திருவாக்குக்கு மறுவாக்கு அவர்கள் கூறுவதில்லை. அவர்கள் பேசுவதற்கு முன் அவர்கள் வாய் திறந்து பேசுவதுமில்லை. பக்கீர்களில் சிலர் அவர்களின் முன் அமர்வது மில்லை. அவர்களின் ஆணையைச் சிரமேல் தாங்கிச் செயலாற்றுவதற்குத் தயாராக அவர்களின் முன் கைகட்டி நின்று கொண்டிருந்தார்கள்.

ஒரு தடவை ஷைகு உதுமான் அல் அத்வீ என்னும் நல்லவர் ஒருவர் திமிஷ்கிற்கு வருகை தந்த பொழுது, ஆண்டகை அவர்களும், அந் நகரிலேயே இருந்தார்கள். அப்பொழுது அமைச்சர் அமீனுத் தௌலா, ஆண்டகை அவர்களை அணுகி, ''ஷைகு உதுமான் அல் அத்வீ என்னும் பெரியார் இந்நகருக்கு வருகை தந்துள்ளார்கள். அவர்களுக்கும், அவர் களுடன் வந்திருக்கும் பக்கீர் குழுவினருக்கும் தாங்கள் விருந்தளிப்பின், அது அவர்களுக்குச் செய்த மிகப் பெரும் கௌரவமாயிருக்கும்'' என்று வினயமாக எடுத்துரைத்தார்.

அதற்கு ஆண்டகை அவர்களும் ஒப்புதல் நல்கி, விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்நகரில் வாழ்ந்து வந்த பல ஷைகுமார்களுக்கும் அவ்விருந்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்புகள் அனுப்பப்பட்டன. குறித்த நேரத்தில் ஷைகு உதுமான் அல் அத்வீயும், அவரின் பக்கீர் குழுவினரும், ஏனைய ஷைகுமார்களும் விருந்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஷைகு உதுமான் அல் அத்வீயும் ஆண்டகை அவர்களும் அருகருகே அமர்ந்திருந்தனர். அப்பொழுது அனைவர் முன்பும் உணவுகள் கொண்டு வந்து பரத்தப்பட்டன. ஆண்டகை அவர்கள் உண்ணத் தொடங்கினார்கள். ஏனையோரும் உண்ணத் தொடங்கினார்கள். ஆனால் ஷைகு உதுமான் அல் அத்வீ மட்டும் உண்ணவில்லை. அவர்கள் வெறுமனே வீற்றிருந் தார்கள்.

இதனைக் கவனித்த அமைச்சர் அமீனுத் தௌலாவுக்கு என்ன வென்றே விளங்கவில்லை. அவர், தம் இருப்பிடத்திலிருந்து மெதுவாக எழுந்து சென்று ஆண்டகை அவர்களை அணுகி, ''ஷைகு உதுமான் அல் அத்வீ உண்ணாதிருக்கிறார்கள். அவர்களை உண்ணச் சொல்லுங்கள்!'' என்று கூறினார். அதற்கு ஆண்டகை அவர்கள், ''நாம் அவர்களைக் கௌரவிப்பதற்காகவும், அவர்களின் வருகையால் ஏற்படும் நற் பேற்றினை (பரக்கத்தை) பெறுவதற்காகவும் இந்த விருந்தை ஏற்பாடு செய்தோம். அதனை உண்பதும், உண்ணாததும் அவர்களின் விருப் பத்தைப் பொறுத்தது. அதில் நாம் தலையிடக் கூடாது'' என்று கூறிவிட்டார்கள்.

விருந்து முடிவுற்றது. அனைவரும் விடைபெற்றுத் தம், தம் இருப்பிடம் சென்றடைந்தார்கள். அப்பொழுது பக்கீர் குழுவைச் சேர்ந்த ஒருவர் தம் ஆசான் ஷைகு உதுமான் அல் அத்வீயை அணுகி, ''ஷைகு அவர்களே! தாங்களும் ஷைகு தகிய்யுத்தீன் முஹம்மது யூனூனி அவர்களும், சரிசமானமான தகுதியிலுள்ளவர்கள். அப்படியிருக்க, அவர்கள் உண்ணும் பொழுது, தாங்கள் உண்ணாதிருந்த காரணம் என்ன?'' என்று வினவினார்.

அதற்கு ஷைகு உதுமான் அல் அத்வீ அவர்கள், ''இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். உணவு கொண்டு வந்து பரத்தப்பட்ட பொழுது நான் அவர்களைக் கவனித்தேன். அவர்கள் ஒளிச்சுடராகக் காட்சி வழங்கினர். தம் முன் வைக்கப்பட்ட உணவை அவர்கள் எடுத்துத் தம் வாய் அருகில் கொண்டு சென்ற பொழுது, அந்த உணவும் ஒளிர்ந்தது. அத்தகு தகுதியை நான் பெற்றிராததனால், நான் அவர்களுடன் சேர்ந்து சரிசமமாக உண்பது சரியல்லவெனக் கருதி உண்பதைத் தவிர்ந்து கொண்டேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

ஆண்டகை அவர்களிடம் கல்வி பயில்வதற்காக நான்கு மத்ஹபினரும் வந்து கொண்டிருந்தனர். ஹம்பலி மத்ஹபைச் சேர்ந்த ஷரஃபுத்தீன் முஹம்மது பின் அதா, ஆண்டகை அவர்கள் மீது கொண்டிருந்த பக்தியோ, அளப்பரியதாக இருந்தது. எனவே ஆண்டகை அவர்களின் அருகே இருந்து அவர்களின் அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்ற அடங்கா அவாவின் காரணமாக, அவர் தம் தாயகம் விட்டுக் குடிபெயர்ந்து வந்து யூனீனிலேயே தங்கிவிட்டார்.

பிற்காலத்தில் 'காலியுல் குலாத்' ஆக விளங்கிய அவரின் மகன் ஷம்சுத்தீன் அப்துல்லாஹ் அல் ஹனஃபீக்கு, ஆண்டகை அவர்களே, குர்ஆனை ஓதிக் கொடுத்தனர். அவர் குர்ஆன் ஓதி முடித்ததும், அவரின் தந்தை ஆண்டகை அவர்களை அணுகி, ஹம்பலி மத்ஹபின் சட்ட

நூல்களான முக்னியையோ, கிரக்கீயையோ, தம் மகனுக்கு ஓதிக் கொடுக்குமாறு வேண்டிக் கொண்ட பொழுது, ''வேண்டாம்! அவர் 'குதூரி' யை ஓதட்டும். வருங்காலத்தில் அவர் ஹனஃபீ மத்ஹபில் தலைசிறந்து விளங்குவார்'' என்று நன்மாராயம் பகர்ந்தனர். அவ்வாறே அவர் 'குதூரி' யையும், ஏனைய ஹனஃபி மத்ஹபின் நூல்களையும் ஓதி அந்த மத்ஹபின் தலை சிறந்த இமாமாக விளங்கினார். இவ்வாறே ஆண்டகை அவர்கள் செய்த முன்னறிவிப்புகள், அப்படி அப்படியே நிகழ்ந்தன. ஷாஃபி மத்ஹபில் சிறந்து விளங்குவார் என்று அவர்கள் நன்மாராயம் நவின்ற பலர், அவ்விதமே பிற்காலத்தில் சிறந்து விளங்கினார்கள்.

அவர்களின் ஆசிக்கு ஆளானவர்கள் சிறந்து விளங்கியது போன்று, அவர்களின் முனிவுக்கு ஆளானவர்களும் துன்புற்று இழிந்தனர். பால்பக் மாநிலத்தின் ஆளுநராக, ஐம்பதாண்டுகளாக இருந்து ஆட்சி செய்து வந்தார் மலிக் அல் அம்ஜத். அப்பொழுது எகிப்து நாட்டு அமைச்சர் ஷாவாரின் உறவினர் என்று கூறிக் கொண்டு ஒருவர் அவரிடம் வந்து, வேலை வேண்டிய பொழுது, வாரிசின்றி இறப்பவரின் சொத்துக்களைப் பரிபாலிக்கும் வாரியத்தின் தலைவராக அவரை நியமித்தார் மலிக் அல் அம்ஜத்.

ஒரு தடவை மலிக் அல் அம்ஜத் வெளியூர் சென்றிருந்த பொழுது, ஒருவர் இறக்கவே, அவருக்கு வாரிசில்லை என்று கூறி, அவரின் சொத்துக் களைக் கைப்பற்றி அரசாங்க உடைமையாக ஆக்கிக் கொண்டார் புதிய வாரியத் தலைவர். இதனை அறிந்த ஆண்டகை, அந்தப் புதிய வாரியத் தலைவரை அழைத்து வரச் செய்து, இறந்தவருக்குப் பல வாரிசுகள் இருக்கிறார்களென்றும், அவர்களைத் தமக்கு நீண்டகாலமாக நன்கு தெரியுமென்றும், எனவே இறந்தவரின் சொத்துக்களை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும் பெரிதும் இதமாக எடுத்துரைத்தனர்.

அதற்கு அவர், ''இறந்தவர் எவராயிருந்த போதினும், அவரின் சொத்துக்களைக் கைப்பற்றி அரசாங்க உடைமையாக்க வேண்டுமென்று ஆளுநர் எனக்கு ஆணையிட்டுச் சென்றுள்ளார். ஆதலின் அவரின் ஆணையை நான் அணுவத்தனையும் தவறாது செயலாற்றுவேன்'' என்று கூறினார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''இதுவென்ன அநியாயமாக இருக்கிறது. வாரிசின்றி இறப்பவரின் சொத்துக்களை அரசாங்க உடைமை யாக்குவது தானே முறை. இப்பொழுது இறந்தவருக்கு வாரிசுகள் இருக்கிறார்களே'' என்று கூறினர்.

அதற்கு அவர், ''அதுவெல்லாம் எனக்குத் தெரியாது. இறந்தவரின் சொத்துக்களைக் கைப்பற்றி, அரசாங்க உடைமையாக்குமாறு ஆளுநர் எனக்குக் கண்டிப்பான ஆணைப்பிறப்பித்துச் சென்றுள்ளார். அதனை நிறைவேற்றுவது தான் என்னுடைய கடமை'' என்று இறுமாப்புடன் கூறினார்.

அதுகேட்டு ஆண்டகை அவர்களுக்குக் கடும் சினம் ஏற்பட்டது. ''எழுந்து செல்! இங்கு இருக்காதே! அல்லாஹ் உன்னுடையவும், உன் ஆளுநருடையவும் கைகளைத் துண்டிப்பானாக!'' என்று முனிந்தனர்.

இதன்பின் சில நாட்கள் தாம் ஆயின. பால்பக் திரும்பிய ஆளுநர் மலிக் அல் அம்ஜத், வாரியத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கினார். பதவி நீக்கம் பெற்று, திமிஷ்க் சென்ற அவர் முக்கியமான பத்திரம் ஒன்றில் பொய்க் கையெழுத்திட்ட குற்றம் சாட்டப்பட்டு கை துண்டிக்கப்பட்டார்!

மலிக் அல் அம்ஜதின் நிலையும், பரிதாபத்திற்கிடமாகியது. ஹிஜ்ரி 628 ஆம் ஆண்டில், திமிஷ்க் மன்னர் மலிக் அல் அஷ்ரஃப், அவரை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கினார். இதன் பின் அவர் திமிஷ்க் சென்று, அங்கிருந்த தம் 'இன்பமாளிகை'யில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, அது அவருக்குத் துன்ப மாளிகையாக ஆகிவிட்டது. ஒருநாள் அவரின் அடிமை ஒருவன் அவரை வாளினால் வெட்டி, அவரின் புயத்தைச் சரித்தான். அதன்பின் அவன் அவரை மீண்டும் வாளினால் வெட்ட, அதன் காரணமாக அவர் இரண்டு நாட்கள் கழித்து உயிர் நீத்தார்.

ஒரு தடவை ஆண்டகை அவர்களின் மைத்துனர் ஒருவர் யூனீன் வந்து அவரின் ஒன்று விட்ட சகோதரரின் இல்லத்தில் தங்கியிருந்தார். இதனை அறிந்த ஆண்டகை அவர்கள் அவரைக் காண்பதற்காக அங்கு சென்றனர். தாம் சென்று காண்பதற்குப் பதிலாக ஆண்டகை அவர்களே தம்மைக் காண்பதற்காக வந்து விட்டதைக் கண்ட அவர்களின் மைத்துனர் அளவற்ற மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று, அவர்களின் இரு கைகளையும் தம் கண்களில் ஒற்றி, அவர்களை உயரிய ஆசனத்தில் அமர்த்தி அவர்களின் காலடியில் வெறுத்தரையில் வீற்றிருந்தார்.

அப்பொழுது அங்கு பித்துக்குளி பக்கீர் ஒருவரும் இருந்தார். அவர்மீது ஆண்டகை அவர்களின் மைத்துனருக்கு அபார மதிப்பு. ஆண்டகை அவர்கள் அங்கு வந்த பொழுது, அவர் நாற்காலியில் அமர்ந் திருந்தார்.

ஏற்கனவே ஆண்டகை அவர்கள் ஏற்பாடு செய்திருந்த வண்ணம், அவர்களின் ஊழியர் ஷம்சுத்தீன் ஆட்டுத் தலைகளைப் பொறித்துக் கொண்டு வந்தார். அவற்றை உண்பதற்காக அனைவரும் அமர்ந்தனர்.

அப்பொழுது அந்தப் பித்துக்குளி பக்கீரையும் உண்பதற்கு அழைத்த பொழுது, அந்தப் பித்துக்குளி பக்கீர் அதனை ஏற்றுக் கொள்ளவோ, மரியாதையுடன் மறுத்துரைக்கவோ செய்யாது தம் விரல்களால் தம் மூக்கைப் பிடித்துக் கொண்டு 'உக், உக்' என்று ஒலி எழுப்பினார்.

அறுசுவை உண்டி வந்திருக்க, அதனை அருவருப்போடு அவர் கருதியதைக் கண்டு ஆண்டகை அவர்களுக்குக் கடும் சினம் ஏற்பட்டது. ''அல்லாஹ் உம் மூக்கைத் துண்டிப்பானாக!'' என்று கூறினர்.

அதுகேட்ட அந்தப் பித்துக்குளி பக்கீர் வெகுளியுடன், அவ்விடத்தை விட்டும் வெளியேறினார். என்ன பரிதாபம்! அவர் அன்று பொழு தடைந்த பின் சாலை வழியே சென்று கொண்டிருந்த பொழுது, குடித்து விட்டு எதிரே வந்த வீரன் ஒருவன் அவரின் மூக்கைத் தம் குறுவாளினால் துண்டித்து விட்டான்! இவ்விரு நிகழ்ச்சிகளைத் தவிர்த்து, ஆண்டகை அவர்கள் எவர் மீதும் சினமுற்று முனிந்ததாக வரலாறே கிடையாது.

எளியோர்க்கு எளியாராக விளங்கிய அவர்கள் சில பொழுது தமது சென்ற கால நிகழ்ச்சிகளைப் பிறரிடம் எடுத்துரைப்பார்கள். ஒரு தடவை அவர்கள் கூறினார்கள்: ''நான் இளமையில் கல்வி பயின்று கொண்டி ருக்கும் பொழுது, வாரிசுரிமை பற்றிய சட்டதிட்டங்களை ஆழமாகப் பயில விரும்பினேன். அக்கலையில் பெரிதும் தேர்ச்சியுற்ற ஆசிரியர் ஒருவர் ஹர்ரானில் இருப்பதாகக் கேள்வியுற்று, அவரிடம் சென்று அக்கலையைப் பயில, அடுத்த நாள் ஹர்ரான் புறப்பட இருந்தேன். அப்பொழுது என் ஆன்மீக ஆசான் ஷைகு அப்துல்லாஹ் யூனூனி (ரஹ்) அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர்கள் என்னை பைத்துல் முகத்தஸிற்குப் போகுமாறு பணித்திருந்தார்கள். இப்பொழுது எனக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. குர்ஆனை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். அதன் பக்கங்களைத் திறந்ததும், என் கண்களில் முதன் முதலாகத் தென்பட்ட திருவசனம், 'உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்காத இவர்களை நீங்கள் (அவசியம்) பின்பற்றுங்கள்! அவர்கள் தாம் நேரான வழியில் செல்லுகின்றவர்கள்' (36: 21) என்பதாக இருந்தது.

''என் ஆன்மீக ஆசான் ஷைகு அப்துல்லாஹ் யூனூனி அவர்கள், யாதொரு பிரதிப் பயனையும் எதிர்பாராது இம்மடலை எழுதியுள் ளார்கள். மேலும் அவர்கள் நேரான வழியில் செல்லுகின்றவர்கள் என்பதில் ஐயமில்லை'' என்று எனக்கே நான் கூறிக் கொண்டு அவர்கள் பணித்திருந்த வண்ணம் பைத்துல் முகத்தஸ் சென்றேன்.

அங்குச் சென்ற என்னை, அங்குள்ளோர் பெரிதும் வரவேற்று வாரிசுரிமை பற்றிய சட்டதிட்டங்களையும், ஏனையவற்றையும்

பயில்வதற்காக என்னிடம் வந்தார்கள். நான் அவர்களுக்கு அவற்றைப் போதித்து வந்தேன்.

''எனக்கு முன்பின் தெரியாத ஒரு மனிதர், ஒவ்வொரு நாளும் நான் பாடம் நடத்தும் பொழுது, அங்கு வந்து அமரும் வழக்கமுடையவராய் இருந்தார். ஒருநாள் நான் அவரை நோக்கி, ''ஒவ்வொரு நாளும் தாங்கள் இங்கு வந்து கொண்டிருப்பதைக் காண்கின்றேனே. தங்களுக்கு எந்த ஊர்?'' என்று வினவினேன். 'ஹர்ரான்' என்று அவர் பதில் மொழிந்தார்.

''அப்படியா! அங்கு வாரிசுமைச் சட்டதிட்டங்கள் பற்றிய கலையில் மிகவும் தேர்ச்சியுற்ற ஆசிரியர் ஒருவர் உள்ளதாகக் கேள்வியுற்றுள்ளேன். அவரைத் தங்களுக்குத் தெரியுமா?'' என்ற வினவினேன்.

''அது கேட்ட அவர், 'தாங்கள் குறிப்பிடும் நபர் நான் தான்' என்று அடக்கத்துடன் கூறினார்.

''எனக்கோ வியப்புத் தாங்க முடியவில்லை. என்ன! நான் தங்கள் முன்னிலையில் வைத்து வாரிசுரிமை பற்றிய சட்டதிட்டங்களைப் பல நாட்களாகப் போதித்து வருகிறேன். வெறுமனே வீற்றிருந்து அதனைக் கேட்டுக் கொண்டிருந்தீர்களேயொழிய, யாதொன்றும் கூறினீர் களில்லையே'' என்று சொன்னேன்.

''அதற்கு அவர், 'தாங்கள் சரியாகத் தான் போதித்தீர்கள். யாதொரு தவறும் இழைக்கவில்லை' என்று பதில் கூறினார்.

''பின்னர் நான் அவருடன் அன்புடன் பழகி, அவரிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். அதன்பின் அவரை நோக்கி, 'தாங்கள் இங்கு வந்துள்ள அலுவல்யாதோ?' என்று வினவினேன்.

''அதற்கு அவர் 'வாணிபத்தின் பொருட்டு இங்கு வந்த என் உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். அவருடைய வாணிபப்பொருள்களை அரசாங்கம் கைப்பற்றி வைத்துள்ளது. அவற்றை மீட்டிச் செல்வதற்காக இங்கு வந்துள்ளேன்' என்று கூறினார்.

''பைத்து முகத்தஸின் ஆளுநர் ஜமாலுத்தீன் அப்துர் ரஹீம் இப்னு ஷீது என்பவர் என் அத்தியந்த நண்பராக இருந்தார். அவர் என்னைக் காண வந்த பொழுது, இவரின் விஷயத்தை அவரிடம் எடுத்துரைத்து, ஆவன செய்யுமாறு கூறினேன். அடுத்த கணமே அவற்றை அவரிடம் ஒப்படைக்குமாறு ஆணைப்பிறப்பித்தார் ஆளுநர். அவற்றைப் பெற்றுக் கொண்டு அன்றிரவே ஹர்ரான் புறப்பட்டார் அவர்.''

மற்றொரு தடவை அவர்கள் தம் இளமையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றையும் பின்வருமாறு எடுத்துரைத்தார்கள்:

''இளமையில் எனக்கு இருமலும் காய்ச்சலும் ஏற்பட்டுப் பெரிதும் துன்புற்றேன். அப்பொழுது இரு பக்கீர்கள் என்னிடம் வந்து, 'என்ன நோய்?' என்று வினவினர். நான் என்னைப் பீடித்திருந்த நோய்களைக் கூறினேன். அப்பொழுது அவர்களில் ஒருவர், மற்றவரை நோக்கி, 'நீர் இவற்றில் ஒன்றை எடுத்துக் கொள்ளும்! நான் மற்றொன்றை எடுத்துக் கொள்கிறேன்' என்று கூறினார். ஒருவர், தாம் இருமலை எடுத்துக் கொள்வதாகக் கூறினார். மற்றொருவரோ தாம் காய்ச்சலை ஏற்றுக் கொள் வதாகக் கூறினார். அடுத்த கணமே, அவர்கள் தேர்ந்தெடுத்த நோய் அவர் களைத் தொற்றிக் கொண்டது. நான் நலன் பெற்றேன். இருமல் நோய் வாய்ப்பட்டவர் சில நாள் கழித்து இறந்தார். காய்ச்சல் நோய்வாய்ப் பட்டவர் சிறிது காலம் சென்று நலன் பெற்றார்''

ஆண்டகை அவர்கள் பெரிதும் நன்றி உணர்வு உடையவர்களாகவும் இருந்தனர். தமக்கு அணுவத்தனை நன்மை செய்தவர்களையும் மறவாது, பிரதி செய்வதில் அவர்கள் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். இதுபற்றிய நிகழ்ச்சி ஒன்றை இமாதுத்தீன் கூறுகிறர்: ''ஒரு தடவை அவர்கள் திமிஷ்க் வந்து பள்ளிவாயலில் தங்கியிருந்த பொழுது, ஒருவர் அவர்களுக்குச் சொந்தமான கொடி முந்திரிப்பழத் தோட்டத்திலிருந்து கிடைத்த முன்னூறு திர்ஹங்களைக் கொண்டு வந்தார். அவற்றை நான் வாங்கி, அவர்களின் தொழுகை விரிப்பின் கீழ் வைத்தேன். அப்பொழுது குருடர் ஒருவர் அவ்வழியே வந்ததைக் கண்ட அவர்கள், என்னை அழைத்து அந்தப் பணத்தை எடுத்து அந்தக் குருடரிடம் ஒப்படைக்குமாறு கூறினர். அவ்விதமே நான் செய்தேன். அவை செப்பு நாணயங்கள் என்றும், அவற்றை நானே அவருக்குக் கொடுப்பதாகவும் அவர் கருதிக் கொண்டு, அவர் என்னை வாழ்த்தினார். அவை வெள்ளி நாணயங்கள் என்று கூறியதும், அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. அம்மகிழ்ச்சியில் அவர் அவற்றைக் கீழே கொட்டி விடுவார் போன்ற நிலை ஏற்பட்டது. பின்னர் நான் அவரிடம் அவற்றை ஆண்டகை அவர்கள் தரச் சொன்னதாகக் கூறியபொழுது, அவர்களை வாழ்த்திவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்றார் அவர்.

''மற்றொரு நாள் ஒருவர் வந்து ஆண்டகை அவர்களுக்கு ஓர் உயர்வான கம்பளித் துணியைக் காணிக்கை நல்கிச் சென்றார். அதனை நான் அவர்களின் அனுமதி பெற்று, சட்டை தைத்து அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தேன். அதனை அவர்கள் சிறிது நேரம் அணிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அதே குருடர் அவ்வழியே தட்டுத் தடுமாறி வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் ஆண்டகை அவர்கள் தாம் அணிந்திருந்த அச் சட்டையைக் கழற்றி என்னிடம் தந்து, 'இமாத்! இதனை அவரிடம் கொடுத்துவிடும்!' என்று கூறினார்கள். நானும் அவ்விதமே செய்தேன்.

''வேறொரு நாள் நான் அவர்களுடன் இருக்கும் பொழுது, அக்குருடர் அவ்வழியே வந்தார். அப்பொழுது ஆண்டகை அவர்கள், தம் அருகிலிருந்த பொருள் ஒன்றை எடுத்து, என்னிடம் தந்து அதனை அவரிடம் கொடுக்குமாறு கூறினர். அவ்விதமே நான் செய்தேன்.

''அக்குருடர் மீது ஆண்டகை அவர்கள் கொண்டிருந்த பரிவும் இரக்கமும் என்னைப் பெரிதும் வியப்புறச் செய்தன. இதைப்பற்றி அவர் களிடம் வினவி அறியப் பெரிதும் அவாவுற்ற நான், ஒரு நாள் அவர்கள் மகிழ்ச்சியோடிருக்கும் பொழுது அவர்களை அணுகி, 'ஷைகு அவர்களே! தாங்கள் அக்குருடர் மீது தனிப்பட்ட அன்பு செலுத்தக் காரணம் யாது?' என்று வினவினேன்.

''அப்பொழுது ஆண்டகை அவர்கள் புன்முறுவல் தம் முகத்திலே தவழ, 'இமாத்! முன்பொரு சமயம் நான் ஸாலிஹிய்யா மலையிலிருந்து இறங்கி, பாரதீஸ் வாயில் வழியாக திமிஷ்கிற்குள் புகுந்து கொண்டி ருந்தேன். அப்பொழுது எனக்கு மலசலம் கழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அஸ்ஹாரிய்யா மதரஸாவின் அண்மையிலுள்ள கழிப்பறை சென்று மலசலம் கழித்து விட்டு, அங்கிருந்த தொட்டியிலிருந்து தண்ணீர் எடுத்துத் துப்புரவு செய்தேன். பின்னர் பார்க்கும் பொழுது அத் தொட்டியின் அடியில் எலிப் புழுக்கைகள் நிரம்பிக் கிடப்பதைக் கண்டேன். இந்நிலையில் எனக்கு என்ன செய்வதென்றே விளங்க வில்லை. அப்பொழுது அங்கு வந்த இந்த மனிதர், அப்பொழுது - அவர் குருடராக இருக்கவில்லை - என் நிலையைப் பார்த்துவிட்டு, ஆற்றிலிருந்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு வந்து என்னிடம் தந்தார். அத்தண்ணீரைக் கொண்டு நான் மீண்டும் துப்புரவு செய்து கொண்டேன். அப்பொழுது அவருக்குக் கொடுப்பதற்கு என்னிடம் யாதொன்றும் இல்லை. அவர் அப்பொழுது செய்த நன்றிக்குப் பிரதியாக, அவரைக் காணும் பொழுது நான் அவருக்கு என்னலான சிறு உதவிகளைச் செய்து வருகிறேன். அவ்வளவு தான்' என்று கூறினார்கள். அதுகேட்டு நான் வியப்பில் ஆழ்ந்தேன்''.

ஒருவர் செய்த நன்மையை நினைவு கூர்ந்து, அவர் மீது அன்பு செலுத்தும் மனப்பான்மையை அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர் தப்பித் தவறி தவறிழைத்துவிடின், அதனை மன்னித்தருளும் பெருந்தன்மையும் அவர்களிடம் குடி கொண்டிருந்தது. இப்பண்பைத் தாம் தம் ஆசானிட மிருந்து கற்றுக் கொண்டதாக அவர்கள் கூறிப் பின்வரும் நிகழ்ச்சி ஒன்றையும் எடுத்துரைத்தார்கள்:

''என் ஆன்மீக ஆசான் ஷைகு அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள் திமிஷ்க் வந்து, அல் ருப்வா என்ற இடத்தில் தங்கி இருந்தார்கள். அப்

பொழுது திமிஷ்க் மன்னர் அல் மலிக் அல் ஆதில் திமிஷ்கில் இல்லை. அவருக்குப் பதிலாக அவரின் பிரதிநிதியாக அல் முஃத்தமித் திமிஷ்கில் இருந்து ஆட்சி செய்து வந்தார்.

''ஷைகு அவர்கள் திமிஷ்க் வந்திருப்பதை அறிந்த அல் மலிக் அல் ஆதிலின் மனைவியும், பெண் மக்களும் அவர்களை அடிக்கடி வந்து சந்தித்து வந்தனர். இதைக் கண்டு பெரிதும் பீதியுற்ற அல் முஃதமித், இச்செய்தி அரசருக்குத் தெரியவரின், அவர் தம்மைக் கண்டிக்க நேருமோ என்று பெரிதும் அஞ்சினார். தம் மனக் குழப்பத்தை என்னிடம், எடுத்துரைத்து, ஷைகு அவர்களை திமிஷ்கை விட்டும் விரைவில் சென்று விட ஏற்பாடு செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

''அப்பொழுது ஷைகு அவர்கள் கழிப்பறை சென்றிருந்தார்கள். சற்று நேரம் கழித்து வெளியே வந்த அவர்கள், 'உளூ' ச் செய்து இரண்டு 'ரகஅத்' தொழுதார்கள். அதன் பின் என்னை நோக்கி, 'வா! போவோம்' என்று கூறிப்புறப்பட்டுவிட்டார்கள். எங்கே? யூனீன் நோக்கி.

''நான் யாதொன்றும் அவர்களிடம் கூறாமலேயே, அல் முஃத்தமித் என்னிடம் கூறிய அனைத்தையும் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்டு, அவர்கள் திமிஷ்கை விட்டுப் புறப்பட்டது எனக்கு அளவற்ற வியப்பை அளித்தது.

''ஆண்டுதோறும் ஷைகு அவர்களுக்குக் குளிர்காலத்தில் போர்த்திக் கொண்டு தொழ ஒரு கம்பளிப் போர்வையை அல் முஃதமித் அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்தது. அவ்வாண்டும் அவர் அவ்வாறே அதனை அனுப்பி வைத்ததோடு, தம் மீது ஷைகு அவர்கள் வருத்த முற்றிருப்பின், அவ்வருத்தத்தை நீக்கியருளுமாறு வேண்டி எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவ்விதமே நான் அப்போர்வையை எடுத்துச் சென்று ஷைகு அவர்களிடம் கொடுத்து, 'ஷைகு அவர்களே! முபாரிஸுத்தீன் அல் முஃத்தமித் தங்களின் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டு இந்தக் காணிக்கையைத் தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்' என்று வினயமாகக் கூறி நின்றேன்.

''ஷைகு அவர்கள் என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அமைதி ததும்பும் முகத்துடன் என்னிடம் கூறினார்கள்: 'முஹம்மதே! ஒருவர் தம் வாணாளில் ஒரேயொரு தடவை மட்டும் நன்மை செய்துவிட்டு, மற்ற நாட்களெல்லாம் எனக்குத் தீமை இழைத்த போதினும், நான் அவரை எனக்கு நலன் நல்குபவராகக் கருதுவேனே யொழிய, ஒரு போதும் தீமை இழைத்தவராகக் கருத மாட்டேன். ஆனால் முஃதமிதோ தம் வாணாளெல்லாம் எனக்கு நன்மை செய்தவர். ஒரேயொரு தடவை

மட்டும் தவறு செய்து விட்டார். அதற்காக நான் அவர் மீது ஒரு போதும் வருத்தமுறப் போவதில்லை என்று கூறிவிடும்.''

இத்தகு பண்பாளரிடம், ஆண்டகை அவர்களும் பயிற்சி பெற்றதன் காரணமாக பண்பில் சிறந்து விளங்கினார்கள். ஒரு தடவை ஆண்டகை அவர்களின் ஊழியர் ஒருவர் பால்பக் நதி ஓரமாகச் சென்று கொண்டிருந்த பொழுது, ஆங்கு ஓரிடத்தில் இப்னு ஷிஹாப் என்பவன் நின்று கொண்டு ஆண்டகை அவர்களை, ''நன்றாய் இருப்பாரா? நாசமாய்ப் போகாரா?'' என்று வாயில் வந்த வண்ணம் ஏசிச் கொண்டிருந்தான். இதனைப் பொறுக்க இயலாத அவர், நேரே ஆளுநரிடம் சென்று செய்தியைக் கூற, உடனே அவர் தம் பணியாளரை அனுப்பி அவனைச் சிறை செய்தார்.

இச்செய்தியை ஊழியர் வந்து ஆண்டகை அவர்களிடம் கூறிய பொழுது, அவர்கள் துடிதுடித்துவிட்டார்கள். ''என்ன காரியம் செய்தீர்? என்ன காரியம் செய்தீர்?'' என்று அவர்கள் தம் ஊழியர் மீது சீறிச் சினந்தார்கள். ''தங்களை வாயில் வந்த வண்ணம் அவன் திட்டினான். அதனை என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எனவே தான் ஆளுநரிடம் போய்க் கூறினேன்'' என்று ஊழியர் சொன்னார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''அதுவெல்லாம் சரி தான்! இப்னு ஷிஹாபுக்கு வயோதிகத் தாய் ஒருவர் இருக்கிறாரே. அவர் எனக்கு யாதொரு தீமையும் இழைக்கவில்லையே. இப்னு ஷிஹாப் சிறை செய்யப்பட்ட செய்தியை அறியவரின் அவர் துன்புறுவாரே. இதற்கு நீர் என்ன கூறுகிறீர்?'' என்று தம் ஊழியரை மடக்கி விட்டு உடனே ஆளுநருக்கு ஆள் அனுப்பி இப்னு ஷிஹாபை விடுதலை செய்யச் செய்தார்கள்.

மாபெரும் குத்பாக இருந்த அவர்கள் மூலமாக இறைவன் பற்பல அற்புதங்களை வெளியாக்கி, அவர்களின் மாண்பினை மக்கள் உணருமாறு செய்தான். ஆனால் அவர்களோ, தாமாகவே அற்புதங்கள் ஆற்றுவதை விரும்பாதவர்களாக இருந்தார்கள். அற்புதங்கள் ஆற்றுவதைப் பற்றி ஒரு தடவை அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''இறைவன் நபிமார்களுக்கு தங்களின் அற்புத ஆற்றலை வெளியாக்குமாறு கட்டளையிட்டான். ஆனால் 'வலி' மார்களுக்கோ, அதனை மறைக்குமாறே கட்டளை யிட்டுள்ளான்'' என்று கூறினார்கள்.

ஒருநாள் ஒருவர், அவர்களின் முன்னிலையில் வைத்து 'வலி' மார்களின் அற்புதங்களைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நான் இளமையில் என் ஆன்மீக ஆசான் ஷைகு அப்துல்லாஹ்வுடன் இருக்கும் பொழுது, அவர்களுடன் பல

துறவிகளும் இருந்தார்கள். நான் என் ஆசானை நோக்கி, 'இன்று திமிஷ்கிலிருந்து, இன்னார் இன்னார் தங்களிடம் இந்த விஷயம் பற்றி வினவுவதற்காக வருகிறார்கள். இன்று ஹிம்ஸிலிருந்து இன்னார் இன்னார் வருகிறார்கள். இன்று எகிப்திலிருந்து இன்னார் இன்னார் இந்த விஷயம் பற்றித் தங்களிடம் வருகிறார்கள்' என்று கூறுவேன். இவை அனைத்தும் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவரும். நான் கூறிய வண்ணமே நடக்கும்.

''இதைக்கண்டு அத்துறவிகள் பெரிதும் வியப்புறுவார்கள். 'நாங்கள் எவ்வளவோ நோன்பு நோற்கிறோம். வணக்கம் செய்கிறோம். எங்களுக்கு இவையெல்லாம் தென்படவில்லையே. இவர் மட்டும் பின் நிகழ்வதை முன்னறிவிப்புச் செய்கிறாரே. இவருக்கு மட்டும் இவை எவ்வாறு தெரிய வந்தன?' என்று தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள்.

''இதுபற்றி அவர்கள் ஒரு நாள் என் ஆசானிடம் கேட்டும் விட்டார்கள். அதற்கு என் ஆசான், ''இவையெல்லாம் ஒருவர் நோற்கும் நோன்பாலும், நிகழ்த்தும் வணக்கத்தாலும் அவருக்கு ஏற்படுபவை யல்ல. இவை இறைவன் தான் விரும்பியவர்களுக்கு அளிக்கும் அருட்கொடை'' என்று இரத்தினச் சுருக்கமாகப் பதிலுரைத்தார்கள்'' என்று கூறினர்.

இளமையிலேயே இறைவன் அவர்களின் வாழ்வை அற்புதம் வாய்ந்ததாக ஆக்கினான். ஒரு தடவை திருடு பற்றிய பேச்சு எழுந்த போது, ஆண்டகை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''நான் இளமையில் ஒரு தடவை திருடியுள்ளேன். என் அன்னை எங்கள் வீட்டு மாடக்குழியில் பதின்மூன்று திர்ஹங்களை வைத்திருந்தார். அவற்றை நான் ஒவ் வொன்றாக எடுத்துச் செலவழித்து விட்டேன். ஒரு நாள் என் தந்தையார் என்னை நோக்கி, ''உன் அம்மாவுக்கு உடை தேவைப்படுகிறது. அவர் மாடக்குழியில் பதின் மூன்று திர்ஹங்கள் வைத்துள்ளார். அவற்றை எடுத்துச் சென்று அவருக்கு ஓர் உடை வாங்கிக் கொடு!'' என்று கூறினர். அதுகேட்டு என் மூளை சக்கரம் போல் சுழன்றது. எனக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. வேண்டா வெறுப்பாக மாடக்குழி சென்று அதில் என் கையை வைத்தேன். என்ன வியப்பு! அதில் பதின்மூன்று திர்ஹங்கள் இருந்தன'' என்று கூறினார்கள்.

ஒரு தடவை மலிக்குல் அஷ்ரஃப் ஆண்டகை அவர்களை நோக்கி, ''நான் தாங்கள் அற்புதம் ஆற்றுவதைக் காண விழைகிறேன்'' என்று கூறினார். அது கேட்டு ஆண்டகை அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். பின்னர் அவர்கள் அவரிடமிருந்து விடை பெற்றுப் பிரியும் பொழுது, அவர் ஓடோடிச் சென்று அவர்களின் காலணிகளை எடுத்துக் கொண்டு வந்து, அவர்களின் கால்களின் முன் வைத்தார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''தாங்கள் விரும்பியது நிகழ்ந்து விட்டது. தாங்களோ மலிக் ஆதிலின் அருமைத் திருமகனார் மலிக் அல் அஷ்ரஃப் ஆவீர்கள். நானோ யூனீனைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதன். என்னுடைய காலணிகளைத் தாங்கள் தூக்கிக் கொண்டு ஓடி வருகிறீர்கள்? இதைவிட வேறு அற்புதம் என்ன வேண்டி யுள்ளது?'' என்று கூறினார்கள். மலிக் அல் அஷ்ரஃப் மறுவார்த்தை பேசவில்லை.

உண்மையில், அரசர்களும், அமைச்சர்களும் அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்தது, அவர்கள் ஆற்றிய மாபெரும் அற்புதமாகவே இருந்தது. அரசர்கள் தம்மைக் காண வந்துவிட்டார்களே என்பதற்காக அவர்கள் வழக்கமாகச் செய்து வரும் வணக்கங்களை ஒரு போதும் ஒத்தி போட்டது கிடையாது. ஒரு நாள் மலிக் அல் ஸாலிஹின் அமைச்சர் அமீனுத் தெளலா, ஆண்டகை அவர்களைக் காண வந்த பொழுது, அவரை அவர்கள் எழுந்து நின்று வரவேற்கவில்லை. இதைக் கண்ட அவர்களின் மகன் அப்துல் காதிர், தம் அருகிருந்த ஒருவரிடம் இதைப்பற்றிக் குறைபட்டுக் கொண்டார். அத்துடன் நிற்காது, அமைச்சர் சென்றதும் தம் தந்தையை அணுகி, ''தந்தையே! அமைச்சர் தங்களைக் காண வந்த பொழுது, அவரைத் தாங்கள் எழுந்து நின்று கூட வரவேற்கவில்லையே '' என்று வெள்ளையாக வினவினார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், தம் மகனை ஒரு முறைக்கு இருமுறை ஏறிட்டுப் பார்த்து விட்டு, ''மகனே! அரசரிலும், அமைச்சரிலும் யார் பெரியவர்?'' என்று வினவினர். ''அரசர்'' என்று பதில் கூறினார் மகன்.

''மகனே! ஒரு நாள் அரசர் மலிக் அல் அஷ்ரஃப் என்னைக் காண வந்த பொழுது நான் என் அறையில் ஒருக்கணித்துப் படுத்திருந்தேன். வந்தவர், நின்று கொண்டே என்னிடம் பேச வேண்டியதைப் பேசி விட்டுப் போய் விட்டார். அவரோ மாபெரும் மன்னர் மலிக் அல் ஆதிலின் திருமகன், அவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இவர் எம்மாத்திரம்?'' என்று ஆண்டகை அவர்கள் அமைதியாகப் பதிலுரைத்தார்கள்.

ஆண்டகை அவர்களிடம் மக்கள் தங்களுக்கேற்படும் பல்வேறு ஐயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக அடிக்கடி வந்து கொண்டிருந்தனர். சில பொழுது ஆண்டகை அவர்கள், அவர்களின் ஐயங்களைத் தம் உள்ளுணர்வால் உணர்ந்து, அவர்கள் கேட்குமுன்பே அவற்றிற்கான விளக்கத்தை எடுத்துரைத்து வந்தார்கள். சில பொழுது அவர்கள் தம் ஐயத்தைக் கேட்ட பின், அதற்கான விளக்கத்தைக் கூறினார்கள்.

ஒரு நாள் ஆண்டகை அவர்கள் திமிஷ்கிலுள்ள பள்ளிவாயிலில் அமர்ந்திருக்கும் பொழுது, ஒருவர் அவர்களை அணுகி, ''ஷைகு அவர்களே! நான்கு இமாம்களிடையே உள்ள வேற்றுமைகள் என்ன?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள், ''இந்தப் பள்ளிவாயிலுக்கு நான்கு வாயில்கள் இருக்கின்றனவல்லவா? அவை போன்று தான், நான்கு இமாம்களும் ஆவர். இந்த வாயில்களில் எந்த வாயில் வழியாக ஒருவர் நுழையினும் அவர் பள்ளிவாயிலுக்குள் வந்து விடுவார். அதே போன்று, ஒருவர் இந்த நான்கு இமாம்களில் எவரைப் பின்பற்றிய போதினும், நேர்வழி பெற்று விடுவார்'' என்று கூறினார்கள்.

நேரில் மட்டுமின்றி கனவிலும் அவர்கள் திருத்தோற்றம் வழங்கித் தம் நேசர்களின் ஐயங்களைத் தீர்த்து வந்தார்கள். தமக்கு மார்க்கம் பற்றிய ஐயங்கள் ஏற்படும் போதெல்லாம் தாம் ஆண்டகை அவர்களை நினைத்துக் கொள்வதாகவும், அப்பொழுது அவர்கள் கனவில் திருத் தோற்றம் வழங்கி ஐயவிளக்கம் வழங்கியதாகவும், ஒரு தடவை மக்கள் தம்மிடம் வந்து மார்க்கம் பற்றிய ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்ட தாகவும், அதற்கு யாது பதில் கூறுவதென அறியாது தாம் திணறிக் கொண் டிருந்த பொழுது, ஆண்டகை அவர்கள் தம் கனவில் காட்சி வழங்கி, அதற்கான பதிலைத் தமக்கு எடுத்துரைத்ததாகவும் ஒருவர் கூறினார்.

தாயிர் நாயிஸிலிருந்து ஷைகு உதுமான் என்பவர் தம் பக்கீர் குழுவுடன் ஆண்டகை அவர்களைக் காண்பதற்காக பால்பக் வந்தார். வரும் வழியில் அவர் தம் சீடர்களை நோக்கி, ''ஆண்டகை அவர்கள் தம் மேலங்கியைக் கழற்றி விட்டு, வெறு மேனியுடன் என்னைத் தம் நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துப் பின்னர் தம் மேலங்கியை எனக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டும். அதனை நான் அணிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்'' என்று கூறினார்.

அவர்கள் பால்பக் வந்தடைந்து, ஆண்டகை அவர்களைக் கண்ட பொழுது, அவர்களுக்கு ஆண்டகை அவர்கள் விருந்துபசாரம் செய்து மகிழ்வித்தனர். விருந்துண்டு முடிந்ததும், அவர்கள் பக்கீர்களை நோக்கி, ''நீங்கள் போகலாம், ஷைகு உதுமான் மட்டும் இங்கு இருக்கட்டும்'' என்று கூறினர்.

அவ்விதமே அவர்கள் சென்ற பின், ஆண்டகை அவர்கள் தம் மேலங்கியைக் கழற்றிவிட்டு, வெறும் மேனியுடன் தம் நெஞ்சோடு நெஞ்சாக ஷைகு உதுமானை அணைத்து அதன் பின் தம் மேலங்கியை அவரிடம் கொடுத்து, ''ஷைகு உதுமானே! இதனை அணிந்து கொள்ளும்!

இது கிழிந்து விடின், நீர் அணிந்து கொள்ள நான் வேறொன்று தருகிறேன்'' என்று கூறினர். அப்பொழுது ஷைகு உதுமானுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இதே போன்ற தம்முடைய அனுபவம் ஒன்றை நஸ்ருல் மர்தவீ என்பவர் கூறுகிறார்:

''நான் பால்பக்கிலுள்ள ஹம்பலி பள்ளிவாயலில் மாணவர்களுக்குக் குர்ஆன் ஓதிக் கொடுத்து வந்தேன். எனக்குப் பத்து திர்ஹம் கடன் ஏற்பட்டு விட்டது. என்ன செய்வதென்றே எனக்கு விளங்கவில்லை. எங்காவது சென்று வேலை செய்து பொருளீட்டி, அக்கடனை தீர்க்கலாமென்று எண்ணினேன். ஒருநாள் வைகறைத் தொழுகையைத் தொழுது விட்டு , பள்ளிவாயிலின் மேற்குப் பகுதியில் அமர்ந்திருந்தேன். ஆண்டகை அவர்களோ, கிழக்குப் பகுதியில் அமர்ந்து ஓதிக் கொண்டிருந்தார்கள். ஓதி முடிந்ததும், ஒருவரை என்னிடம் அனுப்பி அழைத்துவரச் சொன்னார்கள். நான் சென்றேன். என்னைக் கண்டதும், ''நீர் இன்னாரிடம் சென்று நான் சொன்னதாகப் பத்துத் திர்ஹம் வாங்கிக் கொள்ளும்!' என்று கூறினார்கள். அவ்விதமே நான் செய்தேன். என் கடனும் தீர்ந்தது, கவலையும் தொலைந்தது.''

இவ்வாறு கூறும் நஸ்ருல் மர்தவீக்கு இளைக்காது, இப்ராஹீம் இப்னு முஹம்மது தம் அனுபவம் ஒன்றைக் கூறுகிறார்:

''மலிக் அல் ஸாலிஹ் இஸ்மாயீல் என்னிடம் ஒரு மடலைத் தந்து, அதனை பால்பக் எடுத்துச் சென்று ஆண்டகை அவர்களிடம் கொடுத்து விட்டு வருமாறு கூறினார். அவ்விதமே நான் பால்பக் சென்று ஆண்டகை அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்த பொழுது, அதனைப் பிரித்து அரைவாசியே படித்திருப்பார்கள். திடீரென என்னை ஏறிட்டுப் பார்த்து, 'உமக்குக் குழந்தை இல்லையா?' என்று வினவினார்கள். 'இல்லை இப்பொழுது என் மனைவி நிறை கர்ப்பிணியாக உள்ளாள்' என்று கூறினேன்.

''இதன்பின் அவர்கள் தொழச் சென்று விட்டார்கள். திங்களன்று பிற்பகல் நேரத்தில் முஅத்தின் பாங்கு சொல்லும் பொழுது, அவர் 'அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்' என்று கூறியதும், ஆண்டகை அவர்கள், தம் கைகளை விண்ணை நோக்கி உயர்த்தி, ''இறைவனே! அவளைப் பிரசவிக்கச் செய்!' என்று இறைஞ்சினார்கள்.

''பின்னர் நான் ஊர் அடைந்த பொழுது, என் மனைவி ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்திருந்தாள். 'எப்பொழுது குழந்தை பிறந்தது?'

என்று நான் அவளிடம் வினவிய பொழுது, 'திங்கட்கிழமை, பிற்பகல் தொழுகைக்கு முஅத்தின் பாங்கு சொல்லும் பொழுது, அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்'' என்று கூறியதும் பிறந்தது' என்று பதில் கூறினாள்''.

மற்றொரு நாள் ஒருவர் ஆண்டகை அவர்களைக் காண வந்த பொழுது, ''உம்முடைய தாய் தந்தையர் மீது இறைவன் பேரருள் பாலிப்பானாக!'' என்று கூறி, அவரின் தாய் தந்தையரின் பெயர்களை அவர்கள் சொன்னார்கள்.

அது கேட்டுப் பெரிதும் வியப்புற்ற அவர், ''ஷைகு அவர்களே! பக்கீர்கள் அற்புதங்கள் ஆற்றுவதைப் பற்றிக் கேள்வியுற்றுளேனே அன்றி, நேரடியாகக் காணவில்லை. இப்பொழுது நேரடியாகக் கண்டேன்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்.

அப்பொழுது தெருவில் ஒருவன் மொச்சைப் பயறு விற்றுக் கொண்டு சென்றதைச் செவியுற்ற ஆண்டகை அவர்கள், தம்மைக் காண வந்தவரை நோக்கி, ''ஒரு காகிதத்தை எடுத்துச் சென்று, மொச்சைப் பயிறு வாங்கி வந்து உம்முடைய சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும்! நான் ஏதாவது அற்புதமான செயலாற்றும் பொழுது, அவற்றில் ஒவ்வொன்றாக எடுத்து என்னிடம் தாரும்!'' என்று வேடிக்கையாகக் கூறி விட்டு, ''அண்ணல் நபி (ஸல்)அவர்களின் அமுத மொழியாகிய ஒரு ஹதீதைச் சொல்வது உலகம் நிறைய அற்புதங்களைச் செய்து காட்டுவதை விட மேலானதாகும்'' என்று இயம்பினார்கள்.

ஒரு தடவை ஆண்டகை அவர்கள், ஸஹீஹ் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம் ஆகியவற்றிலுள்ள ஹதீதுகளையும், அவற்றைச் சொன்னவர்களின் பெயர்களையும் மளமளவென்று ஒப்புவித்துக் கொண்டிருந்த பொழுது, ஒரு ஹதீதைக் கூறியவரின் பெயர் மட்டும் நினைவுக்கு வராமல் தடுமாறியது. அப்பொழுது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து, அடுத்த கணம் அதனைக் கூறிவிட்டு மீண்டும் மளமளவென்று ஒப்புவிக்கலானார்கள்.

அவர்கள் ஓதி முடிந்ததும், அவர்களின் ஊழியர் இப்னு பாக்கீ, அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! தங்களுக்கு ஏதேனும் ஒரு பெயர் மறந்துவிடின் வானத்தை அண்ணாத்து பார்த்து, அதன்பின் அதனைக் கூறுகிறீர்களே. இதன் மர்மம் என்ன?'' என்று வினவினார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''எனக்கு ஒரு பெயர் மறந்துவிடின், நான் வானத்தை அண்ணாந்து பார்க்கிறேன். அங்கு அது வரையப் பட்டிருப்பது என் கண்களில் பளிச்சிடுகிறது. உடனே நான் அதனைக் கூறிவிடுகிறேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

''ஆண்டகை அவர்களுக்கு 'இஸ்முல் அஃலம்' தெரிந்திருந்தது. அதன் காரணமாக அவர்கள் பல அற்புதங்களை ஆற்றினர்'' என்று கூறும் அபுல் ஃபிதா இஸ்மாயீல் மேலும் கூறுகிறார்:

''நான் ஹிஜாஸ், இராக், எகிப்து ஆகிய நாடுகளிலெல்லாம் சுற்றுப் பயணம் செய்துள்ளேன். ஆனால் ஆண்டகை அவர்களுக்கு நிகரான ஒருவரை நான் கண்டதில்லை. ஒரு நாள் அவர்கள் என்னை நோக்கி, 'ஷைகு இஸ்மாயீலே! நான் சில பொழுது, நீர் என்னுடைய தொழுகை விரிப்பில் அமர்ந்து, 'ஹஜ்' ஜுக் கடமைகளை ஆற்றுவது போன்று காண்கிறேன். எனக்கோ வயதாகிவிட்டது. பயணம் செய்ய இயலா வண்ணம் என் உடல் தளர்ந்து விட்டது. எனவே எனக்குப் பதிலாக நீர் 'ஹஜ்' ஜு செய்து விட்டு வாரும்! தரை மார்க்கமாகச் செல்ல வேண்டாம்! கடல் மார்க்கமாகச் செல்லும்! பிரயாணம் வசதியாயிருக்கும்' என்று கூறினர்.

''நான் அதற்கு இணங்கினேன். ஆனால் அவர்கள் கூறியதற்கு மாறாகத் தரைமார்க்கமாகச் செல்ல விரும்பி, சில அரபிகளுடன் உடன்பாடு செய்து, அவர்களிடம் அச்சாரமாக ஒரு நூற்று ஐம்பது திர்ஹங்களைக் கொடுத்தேன். ஆனால் அவர்களோ, அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, என்னிடம் சொல்லாமல் புறப்பட்டு விட்டார்கள்.

''இதனை நான் ஆண்டகை அவர்களிடம் வந்து கூறிய பொழுது, 'தரைமார்க்கமாகப் போக வேண்டாமென்று நான் உம்மிடம் கூறவில்லையா?' என்று வினவினர்.

''ஆம், அது எனக்குத் துன்பம் தரும் என்று தங்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது?'' என்று நான் வினவினேன். அதற்கு அவர்கள், 'உம்முடைய இந்தக் கேள்வி, நீர், நான் கூறியதைக் கேளாது மாறு செய்ததை விட எனக்கு மிகவும் வியப்பை அளிக்கிறது' என்றார்கள்.

''இதன்பின் அவர்கள் கூறிய வண்ணம் நான் கடல் வழியாக 'ஹஜ்' ஜுப் பயணத்தை மேற்கொண்டேன். நாங்கள் கப்பலிலிருந்து கரை இறங்கிய பகுதி, ஓர் ஈச்சமரச் சோலையாக இருந்தது. அங்கு ஒரு சுனையும் இருந்தது. என்னைக் கண்டதும் ஆங்கு இருந்த கறுப்பு நிற மனிதர் ஒருவர், என்னை நோக்கி வந்து எனக்கு 'ஸலாம்' உரைத்து, 'மகிழ்ச்சி யோடிருங்கள்! பிரயாணம் வசதியாக இருக்கும்' என்று கூறினார்.

''ஹஜ்' ஜுப் பயணத்தை முடித்துக் கொண்டு, நான் தாயகம் திரும்பிய பொழுது, ஆண்டகை அவர்களைப் போய்ச் சந்தித்தேன். பிரயாணத்தைப் பற்றி அவர்கள் விசாரித்தார்கள். அதன்பின் அவர்கள் என்னிடம் திடீரென அந்த ஈச்சமரச் சோலை பற்றியும், அங்கிருந்த நீக்ரோ

பற்றியும், கேட்டார்கள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. வியப்புக் கண்களுடன் அவர்களைப் பார்த்தேன்.

''அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி, 'உம்மைவிட்டுப் பிரிந்தபின், அவர் என்னிடம் வந்து நீர் வசதியாக வந்து கரையிறங்கிய தாகக் கூறினார். அவர் 'அப்தால்' களில் ஒருவர்' என்று இயம்பினர்.

''மற்றொரு தடவை ஆண்டகை அவர்கள் என்னை ஓர் அலுவலின் நிமித்தம் எகிப்துக்கு அனுப்பி வைத்தார்கள். ஒவ்வொரு தங்குமிடத்திலும், எனக்கு முன்பின் தெரியாத ஒருவர் வந்து என்னை வரவேற்று, எனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்தார். நான் ஸஃப்த்துல் ஹின்னாவை அடைந்த பொழுது, அங்கு ஒரு பள்ளிவாயில் இருப்பதைக் கண்டேன். அங்கு ஒரு மேசையும் தண்ணீர்க் குடங்களும் இருந்தன. நான் அதற்குள் நுழைந்த பொழுது, ஒருவர் என்னிடம் வந்து, 'இது தொழுவதற்கான இடம். ஓய்வு கொள்வதற்கான இடமல்ல' என்று கூறினார்.

''அப்பொழுது ஆங்கிருந்த ஒரு முதியவர் என்னை நோக்கி, உமக்கு யார் யாரைத் தெரியும்? என்று வினவினார். அதற்கு நான் ஸாலிஹிய்யாவின் சில ஷைகுமார்களுடையவும், பால்பக்கிலுள்ள சில ஷைகுமார்களுடையவும் பெயர்களைக் கூறிவிட்டு, இறுதியாக ஆண்டகை அவர்களின் பெயரைக் கூறினேன்.

''அது கேட்ட அவர் மகிழ்ச்சி மீக்குற்று, 'உமக்கு ஆண்டகை அவர்களைத் தெரியுமா? அவர்களிடம் தானே நான் மார்க்க சட்டதிட்டங்களைப் பயின்றேன்' என்று கூறி, எனக்குப் பெரிதும் உபசாரம் செய்து, அங்கு என்னை இராத் தங்க வைத்து விருந்தும் அளித்தார்.

''பின்னர் நான் கெய்ரோ சென்று, ஆண்டகை அவர்கள் பணித்த பணியை நிறைவேற்றி விட்டுப் பால்பக் திரும்பி ஆண்டகை அவர்களைச் சந்தித்து, வழியில் எனக்கு நடந்த உபசாரங்களையெல்லாம் எடுத்துரைத்தேன். அது கேட்டு அவர்கள் 'இறைவனே! நீ எனக்களித்த உன் அருட்பெரும் கொடைகளை, நான் என்னென்பேன். நானோ யூனீனைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதன்' என்று நீர் மல்கும் கண்களுடன் கூறினர்.

''இதன் பின் நான் அவர்களுடன் பல்வேறு விஷயங்கள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தேன். உரையாடலின் போது, நான் அவர்களை நோக்கி ஒரு குத்பைச் சந்திக்க வேண்டுமென்று நான் நீண்ட நாட்களாகக் கொண்டிருந்த அவாவை எடுத்துரைத்தேன். அதுகேட்ட அவர்கள் புன்முறுவல் பூத்த வண்ணம் பின்வருமாறு கூறினார்கள்.

''ஒரு ஷைகிடம் பக்கீர் ஒருவர் ஊழியம் புரிந்து வந்தார். ஒருநாள் அவர் தம் ஷைகை நோக்கித் தாம் ஒரு குத்பைப் பார்க்க விழைவதாகவும், அவரைத் தமக்குக் காட்டியருளுமாறும் வேண்டிக் கொண்டார். அதற்கு அந்த ஷைகு. 'அவர் இன்ன இடத்தில் ஆண்டுக்கொரு தடவை தம் குழுவினரிடையே தோன்றுகிறார்'' என்று கூறினார்.

''அவரைச் சந்திக்க வேண்டுமென்ற பேராவல் உந்த, அந்தப் பக்கீர் தம் ஷைகிடம் விடைபெற்று, அவ்விடத்திற்குப் புறப்பட்டார். அவர் பல நாட்களுக்குப் பின் அவ்விடத்தை அடைந்த பொழுது, ஆங்குச் சில பக்கீர்கள் வீற்றிருப்பதைக் கண்டு, அவர்களிடம் தாம் வந்த அலுவலைக் கூறினார்.

''அது கேட்ட அவர்கள் கைகளை நெறித்துக் கொண்டு, 'சற்றுமுன்பாக வந்திருக்கக் கூடாதா? இன்று தானே அவர்கள் இங்கிருந்து புறப்பட்டார்கள். இனி அவர்கள் அடுத்த ஆண்டு தான் இங்கு வருவார்கள்' என்று கூறினர். அப்பொழுது அந்தப் பக்கீருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. எனினும் மனம் தளர்வுறாது குத்பை எவ்வாறும் கண்டே தீர்வது என்ற மன உறுதியுடன் அங்கேயே தங்கி விட்டார்.

''ஓராண்டு உருண்டோடியது. ஓரிரவு ஆங்கிருந்த பக்கீர்கள் அனைவரும் ஒருமித்து எழுந்து நின்றார்கள். அப்பொழுது இந்தப் பக்கீர் அவர்களை நோக்கி, 'ஏன் நீங்கள் அனைவரும் எழுந்து நிற்கிறீர்கள்?' என்று வினவினார். 'இதோ குத்பு வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை வரவேற்க எழுந்து நிற்கிறோம்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். இச்செய்தி அவரின் உடல் முழுவதும் ஒருவித அதிர்ச்சியாக ஊடுருவிப் பாய, அவரும் அளவற்ற மகிழ்ச்சியுடன் 'விருட்' டென்று எழுந்து நின்றார்.

''குத்பும் வந்தார்கள். அவர்களை வரவேற்க பக்கீர்கள் அனைவரும் முன் சென்றார்கள். இந்த பக்கீரும் சென்றார். ஏறிட்டுப் பார்த்தார் குத்பை. என்ன வியப்பு! தம்முடைய ஷைகாவே அவர்கள் இருந்தார்கள். அவருக்குத் தம் கண்களையே, தம்மால் நம்ப இயலவில்லை. கண்களைக் கசக்கிவிட்டு மீண்டும் பார்த்தார் குத்பை. ஆம் அவர்கள் அவரின் ஷைகே ஷைகு தான்.

''அப்பொழுது அவர் தம் ஷைகை அணுகி, 'தாங்கள் தாமா அவர்கள்?' என்று காதோடு காதாக வினவினார். அதற்கு அந்த ஷைகு, தம் ஊழியரை நோக்கி 'ஆம்; நான் தான் அவர்' என்று பதிலிறுத்தார்கள்.

''ஏன் இதனைத் தாங்கள் முன்னரே என்னிடம் கூறவில்லை?' என்று வினவினார் ஊழியர்.

''கூறியிருப்பின் நீ நம்பமாட்டாயே?'' என்று பதிலிறுத்தார் ஷைகு''.

இந்த வரலாற்றைக் கூறித் தாம் எவரென அவருக்கு உணர்த்திய ஆண்டகை அவர்களின் தகுதி, நாளுக்கு நாள் உயர்ந்து வந்தது. விரைவில் அவர்களின் தகுதி அவர்களின் ஆன்மீக ஆசான் அப்துல்லாஹ் யூனீனி (ரஹ்) அவர்களின் தகுதியை விட மேலாகியது.

ஓரிரவு யூசுப் இப்னு முஹம்மது என்பவர் படுத்துறங்கும் பொழுது, ஆண்டகை அவர்களையும், அவர்களின் ஆசான் அப்துல்லாஹ் யூனீனி (ரஹ்) அவர்களையும் படுத்திருப்பது போன்று கனவில் கண்டார். இருவர் நெஞ்சிலும் தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்கள் குவித்து வைக்கப் பட்டிருந்தன. ஆனால் அவர், ஆண்டகை அவர்களின் நெஞ்சிலிருந்த நாணயங்களைப் போய்த் தொட்டுப் பார்த்த பொழுது, அவற்றின் மீது முத்திரை பதிப்பிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். பின்னர் அப்துல்லாஹ் யூனீனி (ரஹ்) அவர்களின் நெஞ்சின் மீது குவிக்கப்பட்டிருந்த நாணயங்களை அவர் தொட்டுப் பார்த்த பொழுது, அவற்றின் மீது முத்திரை பதிப்பிக்கப்படாதிருப்பதைக் கண்டு வியப்புற்றார். இதைப் பற்றி அவர் கனவிலேயே ஆண்டகை அவர்களிடம் வினவிய பொழுது, ''என்னுடைய ஆன்மீக நிலை வெளிப்படையானதும், அந்தரங்கமானதும் ஆகும். ஆனால் அவர்களின் ஆன்மீக நிலையோ அந்தரமங்கான தேயாகும்'' என்று கூறினர். விடிந்தெழுந்ததும், அவர் ஆண்டகை அவர் களிடம் சென்று, தாம் கண்ட கனவைக் கூற, ''அது சரியானதேயாகும்'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஆண்டகை அவர்களின் வாணாள் முடிவுறும் நிலையை எய்திக் கொண்டிருந்தது. அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஆறு திருமணங்கள் செய்து ஈன்றெடுத்த மக்களில் பலர் அவர்களுக்கு முன்பே இறைவன் பால் சென்று விட்டனர். தம் முடிவும் அண்மிக் கொண்டிருப்பதை அறிந்து அவர்கள், தம் நேரத்தைப் பெரும்பாலும் இறைத் தியானத்தில் கழித்து வந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் தம் மகன் அபுல் ஹுஸைன் அலீயை அருகழைத்து, ''மகனே! நீ ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்களின் வழி வந்தவன்'' என்று திடுதிடுப்பெனக் கூறினர். தம் வம்சா வழியைப் பற்றி எவரிடமும் பகிரங்கரமாகக் கூறாத அவர்கள், இப்பொழுது அதனைத் தம் மகனிடம் கூறியதற்குக் காரணம், நபியின் வழித்தோன்றல்களுக்கு 'ஜகாத்' பொருள் விலக்கப்பட்டது (ஹராம்) என்பதை அவருக்கு உணர்த்துவதற்காகவேயாகும்.

இச்சமயத்தில் அமீர் ஸைஃபுத்தீன், ஆண்டகை அவர்களிடம் ஒடோடி வந்து, தார்த்தாரியர்கள் சிரியாவின் மீது படையெடுத்து வருவதைப் படபடப்புடன் கூறினார். அது கேட்டு அணுவத்தனையும் அமைதி குலையாத ஆண்டகை அவர்கள், ''அவர்களின் படையெடுப்பு முறியடிக்கப்படும். அவர்கள் தோற்றோடுவார்கள்'' என்று கூறினர்.

அது கேட்டு மகிழ்ச்சி கொண்ட அமீர் ஸைஃபுத்தீன், தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு அவர்களை வேண்டிக் கொண்டார். உடனே அவர்கள் தம் கைகளை உயர்த்தி அவருக்காக இறைஞ்சினார்கள் அவர்களின் இறைஞ்சுதல் அரபி போன்றோ, துருக்கி போன்றோ இல்லை. இதன்பின் அவர்கள் அவரை நோக்கி, ''நீர் இனிமேல் என்னைக் காணமாட்டீர்'' என்று கூறினார்கள். அது கேட்டு அவரின் கண்கள் பணித்தன.

ஆண்டகை அவர்கள் கூறிய வண்ணம் தார்த்தாரியர்கள் 'ஐன் ஜாலூத்' என்னும் இடத்தில் நடந்த போரில் படுதோல்வியுற்று, தலைவிரி கோலமாக வெருண்டோடினர். ஆண்டகை அவர்களும் ஹிஜ்ரி 658 - ஆம் ஆண்டு, ரமலான் ஒன்பதாம் நாள் (கி.பி. 1260 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதி) நிர்யாணமடைந்தனர். அன்றே அவர்களின் பொன்னுடல் பால்பக்கிலுள்ள அவர்களின் ஆன்மீக ஆசான் அப்துல்லாஹ் யூனீனி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்திற்கு அண்மையில் மண்ணறையில் சேர்க்கப்பட்டது.

6. சிந்தா ஷாஹ் மதார் (ரஹ்)

சுல்தான் இப்ராஹீம் ஷர்கீயின் தலைநகரான ஜவன்பூரிலுள்ள ஜாமிஆ மஸ்ஜிது, தொழுவதற்காக வந்த மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்து கொண்டுள்ளது. அப்பொழுது அங்குத் தொழுவதற்காக வந்த பெரியார் ஒருவர், இமாம் தொழுவதற்காகத் தக்பீர் கட்டியவுடன், தாமும் அவரைப் பின் தொடர்ந்து தக்பீர் கட்டித் தொழாது திரும்பி விடுகிறார். இது ஆங்கிருந்தோரிடையே பெரிய பரபரப்பை உண்டு பண்ணுகிறது. தொழுது முடிந்ததும் அவர்கள், ஒருவர் மற்றவரைப் பார்த்து, ''என்ன காரணம்? என்ன காரணம்?'' என்று வினவிக் கொள்கிறார்கள்.

இச்செய்தி அப்பொழுது தொழுகையில் கலந்து கொண்ட மலிக்குல் உலமாவின் செவியேறியதும், அவர் அப்பெரியாரை அணுகி, ''முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாகப் பள்ளிவாயில் வந்து தொழ வேண்டும் என்று தானே பள்ளிவாயில்கள் நிர்மாணிக்கப்பட்டு, அங்குக் கூட்டுத் தொழுகை தொழுவது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்கூட்டுத் தொழுகையில் கலந்து தொழுவதற்காகப் பள்ளிவாயில் வந்த தாங்கள், அதில் கலந்து கொள்ளாது திரும்பிவிட்ட காரணம் என்ன?'' என்று வினவினார்.

அப்பொழுது அப்பெரியார், மலிக்குல் உலமாவை நோக்கி, ''தாங்களோ கற்றறிந்த மேதை. தங்களுக்கு 'லா ஸலாத்த இல்லா பி ஹுளூரில் கல்பி (மனம் ஒருமித்து ஈடுபடாத தொழுகை நிரப்பமுடைய தாகாது) என்னும் வாசகம் தெரியாததல்ல. ஆன்மீக வாதிகள் தொழுது முடியும் வரையில், அதில் தன் மனத்தை ஒருமித்துப் பதிய வைப்பது கடமையாகும். குறைந்தது தக்பீர் கட்டும் நேரத்திலாவது ஒருவர் தம் மனத்தை அதில் பதியவைப்பது இன்றியாமையாததாகும். அந்த அளவுகூட ஒருவர் தம் மனத்தை அதில் பதிய வைக்கவில்லையாயின், அவரின் பின்னே நின்று தொழுவது அறிவாளிகளுக்கு அழகல்ல. ஆனால், பாமரர்களுக்கு அவ்வாறில்லை. அவர்களுக்கு அது பற்றி விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது'' என்று கூறினர்.

அதுகேட்ட மலிக்குல் உலமாவின் புருவங்கள் மேலேறின. தனியாக இமாமைச் சந்தித்து, அது பற்றி விசாரித்தார். அதற்கு அந்த இமாம், ''ஆம்; அந்தப் பெரியார் கூறுவது முழுக்க முழுக்க உண்மை தான். நான் தக்பீர் கட்டும் பொழுது என் மனம், என் குதிரையைப் பற்றி நினைந்துக் கொண்டிருந்தது'' என்று கூறி, அப்பெரியாரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அப்பெரியார் யார்?

மதீனமா நகரிலே வாழ்ந்து வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழித் தோன்றல்கள் பனூ உமையாக்களின் கொடுமை தாங்க இயலாது அங்கிருந்து கிளம்பி, ஹலப் என்னும் நகரில் வந்து குடியேறி வாழ்ந்து வந்தார்கள்.அங்கு இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய சையிது அலீ ஹலபீயும், இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய பீபி ஹாஜரா என்ற பாத்திமா என்னும் மங்கையும் இல்லறச் சோலை புகுந்து இன்ப வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் இன்ப வாழ்விற்கோர், இன்பம் சேர்க்கும் முறையில் ஹிஜ்ரி 442 ஆம் ஆண்டு, ஷவ்வால் மாதம், முதல் நாள், திங்கட்கிழமை வைகறையில், ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்கு பதீயுத்தீன் என்னும் அழகுப் பெயரிட்டுப் பெற்றோர்கள் அருமை பெருமையாக வளர்த்து வந்தார்கள்.

பதீயுத்தீன் ஆறுமாதக் குழவியாக இருக்கும் பொழுது, ஹலபு நகரிலும், அதன் சூழலிலும் வானம் பொய்த்தத்தன் காரணமாகக் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் ஆங்கு வாழ்ந்து வந்த பலர் ஆங்கிருந்து வலசை கிளம்பி, நீலநதிபாயும் வளமார் எகிப்து நாடு நோக்கிச் சென்றனர். அவர்களைப் பின் தொடர்ந்து, பச்சிளங்குழந்தை பதீயுத்தீனையும் தூக்கிக் கொண்டு, அவர்களின் பெற்றோர்களும் சென்றதில் எவ்வித வியப்புமில்லை.

பதீயுத்தீனுக்கு ஐந்து வயது நிறைந்த பொழுது, அவரை அவரின் பெற்றோர்கள், அங்கு சிறப்புற்று விளங்கிய ஹுஸை பத்துஷ் ஷாமி என்பவர் நடத்தி வந்த பள்ளியில் சேர்த்துக் கல்வி பயில வைத்தனர். கல்வி பயில்வதற்காகச் சிறுவர் பதீயுத்தீன் பள்ளி செல்லுந்தோறெல்லாம், ''அத்ரிகூ ஹாதா வலியுல்லாஹ்'' (வழி விடுங்கள்! இவர் அல்லாஹ்வின் வலியாவார்) என்று அசரீரி முழங்கும். ஆசிரியர் ஹுஸை பத்துஷ் ஷாமியின் கனவிலும் ஒருவர் அடிக்கடி தோன்றி, ''பதீயுத்தீன், அல்லாஹ் வுக்கு உவந்த வலியாவார்'' என்று நன்மாராயம் நவின்று வந்தார்.

இவற்றின் காரணமாக, ஆசிரியர் ஹுஸை பத்துஷ் ஷாமி, பதீயுத்தீன் மீது அதிக அன்பு செலுத்திக் கல்வி பயிற்றுவித்தார். பதீயுத்தீனும் ஏனைய மாணவர்களை விட விரைவில் கல்வி பயின்று, பதினான்கு வயதிற்குள், வெளிப்படையான எல்லாக் கல்விகளையும் கற்றுச் சிறப்புற்று விளங்கினார்.

இச்சமயம் பதீயுத்தீன் அயர்ந்து படுத்துறங்கும் பொழுது கனவொன்று கண்டனர். அதில் எழிலாரும் திருமேனி வாய்க்கப் பெற்ற ஏந்தல் ஒருவர் தோற்றம் வழங்கி, ''பதீயுத்தீனே! நீர் மக்கா, மதீனா ஆகிய இரு நகரங்களுக்கும் செல்லும். பேரருளாளனாகிய அல்லாஹ் அங்கு உமக்கு மேலான பதவியைத் தரப் போதுமானவன்'' என்று அருள்மொழி பகர்ந்து விட்டு மறைந்தார்.

கனவு கண்டு விழித்த இளவல் பதீயுத்தீன், தாம் கண்ட கனவைத் தம் பெற்றோர்களிடம் கூறி, அவர்களின் அனுமதி பெற்று, புண்ணியப் பதிகளான மக்கா, மதீனா நோக்கிப் புறப்பட்டனர்.

மக்கா வந்தடைந்த அவர்கள், கஃபாவை இடம் சுற்றி வருதல், 'உம்ரா' செய்தல் ஆகிய வணக்கங்களில் ஈடுபட்டு, தம் பெரும்பாலான நேரத்தைக் கழித்து வந்தார்கள். இவ்வாறு இருக்கும் பொழுது, 'பதீயுத்தீனே! உம் பாட்டனார் முஹம்மது (ஸல்) அவர்கள், உம் வரவை எதிர் நோக்கி வெகு ஆவலுடன் காத்துக் கொண்டுள்ளார்கள். ஆதலின் நீர் மதீனா செல்லும்!'' என்று உருத்தோற்றமின்றி ஒரு சப்தம் முழங்கு வதைச் செவியுற்றார்கள்.

இதன்பின் அங்கிருந்து மதீனா நோக்கிப் புறப்பட்ட அவர்கள், பல நாட்கள் கழித்து மதீனா வந்து சேர்ந்தனர். மதீனா வந்து சேர்ந்த அவர்கள், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் அடங்கப் பெற்றுள்ள 'ரௌலா ஷரீஃபை' அண்மிய பொழுது, 'அஸ்ஸலாமு அலைக்க இப்னீ', அஹ்லன் மர்ஹபா'' (என் மகனே! உமக்கு என் ஸலாம் உண்டாவதாக! உம் வருகைக்கு நான் நன்மாராயம் கூறுகிறேன்) என்று ரௌலா ஷரீஃபின் உள்ளிலிருந்து ஓர் ஒலி கேட்டது. அதற்குப் பதிலுரைத்துவிட்டு, நெடுநேரம் அங்கு நின்ற வண்ணம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்து கொண்டிருந்தார்கள் அவர்கள்.

அன்றிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தம் மருகர் அலீ (ரலி) அவர்களுடன், பதீயுத்தீன் அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, பதீயுத்தீனை, அலீ (ரலி) அவர்களிடம் அறிமுகப்படுத்தி வைத்து, ''இவர் உம் வழியில் தோன்றியவராவார். 'ரோஸெ மீதாக்' அன்று இறைவன் இவரைத் தனியாகத் தேர்ந்தெடுத்து 'மதாருல் ஆலமீன்' என்று பட்டம் சூட்டிக் கௌரவித்துள்ளான். இவருக்கு நீர் ஆன்மீக அறிவை வழங்கி , இவரின் இதயத்தைப் பரிபாலனம் செய்யும்!'' என்று பணித்தனர். உடனே அலீ (ரலி) அவர்கள் பதீயுத்தீனைத் தம் நெஞ்சோடு நெஞ்சணைக்க, பதீயுத்தீனின் உள்ளம் ஆன்மீக அறிவால் நிரம்பித் துளும்பியது.

இதன்பின் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் பேரரை நோக்கி, ''பதீயுத்தீனே! மதாருல் ஆலமீனே!! நீர் மக்கா சென்று 'ஹஜ்'ஜு செய்து விட்டு, ஹிந்துஸ்தான் சென்று, அங்கு வாழும் மக்களை இஸ்லாத்தின் பால் அழைத்து நேர்வழி காட்டும்! அங்கு கன்னோஜ் என்னும் நகரின் அருகாமையில் உள்ள, ஒரு காட்டில், ஒரு துப்பரவான ஏரி உள்ளது. அதிலிருந்து 'யா அஸீஸ்' என்ற சப்தம் ஓயாது வெளிவந்து கொண்டுள்ளது. அப்பகுதியே நீர் வாழ்ந்து, அடக்கமாகும் இடமாகும். உம் பொருட்டால் அக்காடு நகரமாகிவிடும்'' என்று நன்மாராயம் பகர்ந்தனர். இதிலிருந்து அவர்களுக்கு மதார் ஷா என்ற பெயர் ஏற்பட்டது. பின்னர் அவர்கள் நீடு வாழ்ந்ததால், நீடு வாழ்பவர் என்று பொருள்படும் சிந்தா என்ற அடை மொழியும் அவர்களின் பெயருடன் சேர்க்கப்பட்டது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆசி பெற்ற ஆண்டகை அவர்கள், மீண்டும் மக்கா வந்து ஹஜ்ஜுக் கடமைகளை நிறைவேற்றி விட்டு, பாய்மரக்கப்பலில் ஏறி ஹிந்துஸ்தானுக்குப் புறப்பட்டனர். கப்பலில் வைத்தே, தம் 'தப்லீக்' பணியை ஆண்டகை அவர்கள் துவக்கினர். ஆனால், ஆண்டகை அவர்கள் எவ்வளவோ இதமாக இஸ்லாமிய அறநெறியை கப்பலில் உள்ள அவர்களுக்கு எடுத்தோதிய போதினும் அவர்கள் கூறிய அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆயின.

இப்பொழுது கடுமையான சூறாவளி சுழற்றிச் சுழற்றி வீசியது. கப்பலையும், கப்பலிலுள்ள உயிர்களையும் காப்பாற்ற, மீகாமன் எவ்வளவோ முயன்றும், அவனுடைய முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின. கப்பல் ஒரு நொடியில் கவிழ்ந்தது. அதிலிருந்தோர் அனைவரும் - பதினொருவரைத் தவிர்த்து மற்றவர் கடலில் மூழ்கிச் செத்தார்கள். அந்தப் பதினொருவர் மட்டும், ஓர் உடைந்த பலகையைப் பிடித்துக் கொண்டு கடலிலே மிதந்து வந்தார்கள். எனினும் அவர்களும், கடுமையான தாகத்தால் ஒருவர் பின் ஒருவராகச் செத்து மடிந்தார்கள். இறுதியாக எஞ்சியவர்கள் ஆண்டகை அவர்கள் மட்டுமே.

நலமே கரை சேர்ந்த ஆண்டகை அவர்களை இரு அப்தால்கள் சந்தித்து, அவர்களை ஒரு மலையடிவாரத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு விடை பெற்றுச் சென்றனர். அதன் அருகே ஒரு பூங்கா இருந்தது. அதில் ஆண்டகை அவர்கள் சற்று அயர்ந்து படுத்துறங்கினர். இச் சமயத்தில் அவர்கள் கனவொன்று கண்டனர்.

அழகே உருவாய் அமைந்த இளவல் ஒருவர், அவர்களின் முன்தோன்றி, ''பதீயுத்தீனே! உம் வரவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் வீற்றிருக்கிறார்கள்'' ' என்று கூறுகிறார். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''என் பெயர் உமக்கு

எவ்வாறு தெரியும்?'' என்று வியப்புடன் வினவுகிறார்கள். அதற்கு அவர், புன்முறுவல் பூத்த வண்ணம், ''உம் பெயரா எனக்குத் தெரியாது. அதுதான் ஈருலகமும் தெரிந்த பெயராக உள்ளதே'' என்று கூறிவிட்டு, ''இந்தப் பூங்காவிற்குள் நுழையும்!'' என்று கூறிவிட்டுச் சென்று விடுகிறார்

அவ்வாறே ஆண்டகை அவர்கள் பூங்காவிற்குள் நுழைந்த பொழுது அங்கு ஓர் அழகிய மாளிகை தென்படுகிறது. அதில் ஒன்றன் பின் ஒன்றாக ஏழு வாயில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வாயிலிலும் ஒவ்வோர் அழகாரும் இளவல் நின்று ஆண்டகை அவர்களை வரவேற்று, 'ஸலாம்' கூறி வழியனுப்பி வைக்கிறார்.

இவ்வாறு ஏழு வாயில்களையும் கடந்து ஆண்டகை அவர்கள், சென்ற பொழுது, ஆங்கிருந்த மண்டபம் ஒன்றில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அரியாசனத்தில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களைச் சூழ, அவர்களின் அன்புத் தோழர்கள் அணியணியாய் அமர்ந்திருக்கின்றனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆண்டகை அவர்களைச் சாடையால் தம்மிடம் வருமாறு அழைத்துத் தம் அருகே அமர்த்திக் கொள்கின்றனர்.

சற்று நேரம் கழிந்தது. ஒருவர் ஒரு கையில் உணவும், மற்றொரு கையில் உடையும் ஏந்தியவராய் அங்கு வருகிறார். அவர் கொண்டு வந்த உணவில் ஒன்பது பிடியை அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆண்டகை அவர்களுக்கு உண்ணக் கொடுக்கிறார்கள். அதனை உண்டதும், ஆண்டகை அவர்களுக்கு அர்ஷ் முதல் தஹ்த்தஸ்ஸரா வரையுமுள்ள அனைத்தும் தெளிவாகத் தெரியவருகின்றன.

அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''பதீயுத்தீனே! இனிமேல் உமக்கு உணவு, நீர், ஆகியவற்றின் தேவையிராது'' என்று கூறி, தம் கையால் அவர்களுக்கு உடையுடுத்தி, முகத்திற்குத் திரையுமிட்டு, தலைக்குப் பாகையும் அணிவிக்கின்றனர். இத்துடன் கனவு கலைகிறது.

விழித்தெழுந்த ஆண்டகை அவர்கள் தமக்களிக்கப்பட்ட நற்பேறுகளுக்கு நன்றி செலுத்துவதற்காக, இரண்டு 'ரகஅத்' தொழுது விட்டு, ஆங்கு வீற்றிருக்கும் பொழுது, கிள்ரு (அலை) அவர்கள் தோன்றி ஆண்டகை அவர்களுக்கு இஸ்முல் அஃலத்தைக் கற்றுக் கொடுத்தனர். பின்னர் பாயஸீத் பிஸ்தாமீ (ரஹ்) அவர்களின் ஆன்மா தோன்றி தைபூரியா தரீக்காவில் அவர்களுக்கு தீட்சை வழங்கியது.

இதன்பின் ஆண்டகை அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, அஜ்மீர் வந்தடைந்தனர். அவ்வூரின் கீழ்ப்பகுதியிலுள்ள ஒரு மலையின்

அடிவாரத்தைத் தம் வணக்கத்திற்கு ஏற்ற இடமாகக் கண்டு, அங்கு சிலகாலம் தங்கி வணக்கத்தில் ஈடுபட்டிருந்தனர்.*

பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய ஏரிக்கரையைத் தேடி, அவர்கள் எங்கணும் அலைந்து திரிந்தனர். இறுதியாக அவர்கள் ஓரிடத்தை அடைந்த பொழுது, அங்கு ''யா அஸீஸ், யா அஸீஸ்'' என்று ஒலி முழங்குவதைக் கேட்டு, அங்குமிங்கும் திரும்பிப்பார்த்தனர். சற்றுத் தொலைவில் ஓர் ஏரி தென்பட்டது. அதன் அலையின் ஓசையே அவ்வாறு ஒலிக்கின்றது என்பதை விளங்கிக் கொண்டு, அதனை அணுகி, அதில் 'உளூ'ச் செய்து இரண்டு 'ரகஅத்' தொழுதுவிட்டு, அதன் அருகாமையில் தங்கித் தவம் செய்தனர். இடைக்கிடையே அதன் சூழலில் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று, மக்களுக்கு இஸ்லாமிய அறநெறியைப் போதித்து, அவர்களை இஸ்லாத்தில் இணைத்தனர்.

ஆண்டகை அவர்கள் அவ்விடத்தில் வந்து தங்கிய சிறிது காலத்திற்குள், அந்த ஏரியும் வற்றி, அந்த ஏரியிலிருந்து வெளிவந்த 'யா அஸீஸ்' என்ற ஓசையும் நின்றது. அங்கு ஆண்டகை அவர்களின் சீடர்கள், தம் குருநாதர் தங்குவதற்கென ஒரு சிறு குடில் எழுப்பினர். அதுவே ஆண்டகை அவர்களின் தவமடமாகியது. அதைச் சூழ அவர்களின் சீடர்கள் தம் மனைவி, மக்களுடன் வந்து குடியேறி வாழ்ந்து வரலானார்கள். நாளடைவில் காடாக இருந்த அப்பகுதி, ஊராகப் பரிணமிக்கலாயிற்று. அதற்கு ஆண்டகை மக்கன் பூர் என்று பெயர் சூட்டினார்கள்.

இச்சமயம், அப்பகுதியில் வாழ்ந்து வந்த தேவு ஒன்று ஆண்டகை அவர்களை அணுகி, இஸ்லாத்தைத் தழுவியதுடன் தம்மை எப்பொழுதும் அவர்களின் ஊழியத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டது. அதற்கிணங்கிய ஆண்டகை அவர்கள், அத்தேவினை நோக்கி, மக்கன்பூரைத் துப்புரவாக வைத்துக் கொள்ளும் பணியைச் செய்து வருமாறு ஆணையிட்டார்கள். அவ்விதமே அதுவும் செய்து வரலாயிற்று.

இப்பொழுது ஆண்டகை அவர்களுக்கு மீண்டும் 'ஹஜ்' ஜு செய்ய வேண்டுமென்ற ஆசை மிகைக்கவே, அவர்கள் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்று, 'ஹஜ்'ஜு செய்த பின் மதீனா சென்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ரௌளா ஷரீஃபை தரிசித்தார்கள்.

★ அங்கு ஒரு கட்டடம் எழுப்பப்பட்டு அது 'மதார் சாஹிப் ஸரா' என்று அழைக்கப்படுகிறது. அங்கு ஆண்டுதோறும், ஜமாதுல் அவ்வல் மாதம், பதினெட்டாம் நாள் 'உர்ஸ்' நடைபெறுகிறது.

பின்னர் முஹர்ரம் முதல் நாள் அன்று, கர்பலா வந்துசேர்ந்த அவர்கள், ஹுஸைன் (ரலி) அவர்களின் அடக்க விடத்தைத் தரிசித்து, அழுது கண்ணீர் வடித்து, ஆற்றொணாத் துக்கத்தில் மூழ்கினர். பத்து நாட்கள் அங்குத் தங்கியிருந்த அவர்கள், அங்கிருந்து புறப்படும் பொழுது, தம் பாட்டனாரின் அடக்கவிடத்தின் அருகில் நின்று, "என்னுடைய பேரன்பிற்குப் பாத்திரமானவர்களே! நான் என்னுடைய ஆன்மாவைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். தங்களின் சின்னஞ்சிறு அடிமையாகிய நான் இப்பொழுது தங்களைவிட்டுப் பிரியப் போகிறேன்" என்று நாத் தழதழக்கக் கூறினார்கள்.

பின்னர் அங்கிருந்து நஜஃப் வந்து சேர்ந்த அவர்கள், அங்கு அடங்கப் பெற்றிருக்கும் பெரியோர்களின் அடக்கவிடங்களையெல்லாம் தரிசித்த பின், தம் பிறந்த நகரமாகிய ஹலப் வந்து சேர்ந்தார்கள். அதன் சூழலில் இருந்த ஸனார் என்னும் பகுதியில் வாழ்ந்து வந்த தம் சிறிய தந்தை சையிது அப்துல்லாஹ்வின் ஆண்மக்கள் மூவரையும் சந்தித்து, அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு, மீண்டும் ஹிந்துஸ்தான் நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் குராஸான் வந்தடைந்து அங்கு அடங்கப் பெற்றிருக்கும் பெரியோர்களின் அடக்கவிடங்களைத் தரிசித்து, அங்கேயே சிறிது நேரம் வீற்றிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் சீடர்களில் ஒருவர் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்காக வெளியே சென்ற பொழுது, அங்கு வாழ்ந்து வந்த நஸீருத்தீன் என்ற குத்பைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவரை அணுகி அவருக்கு 'ஸலாம்' உரைத்துத் தம் குருநாதர் அந்நகருக்கு எழுந்தருளியிருப்பதையும் எடுத்துரைத்து, அவர்களின் மாண்பினைப் பற்றியும் வெகுவாக விரித்தோதினார் சீடர்.

அதுகேட்ட அவர், "நானோ உயரிய படித்தரத்தில் உள்ளவன். தாழ்ந்த படித்தரத்திலுள்ளோர் தாம் இத்தகையோரைப் போய்ச் சந்தித்து அவர்களுக்கு ஊழியம் புரிந்து, மேலான பதவியைப் பெற முயல வேண்டும். என் போன்றவர்களுக்கு அது அழகல்ல. நானோ இறை காதலில் மூழ்கி மயக்கம் கொண்டவனாயுள்ளேன்" என்று கூறினார்.

இதனை ஆண்டகை அவர்களின் சீடர் வந்து ஆண்டகை அவர் களிடம் வருத்தத்துடன் கூறிய பொழுது, அவர்கள் புன்முறுவல் முகத் திலே தவழ, தம் சீடரை நோக்கி, "இதற்காக நீர் ஏன் கவலைப்படுகிறீர்? அவரின் 'குத்புப்' பதவி பறி போய் விட்டது. விரைவில் அவர் உம்மிடம் வந்து சேருவார்" என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் கூறி வாய் மூடுமுன், அந்த குத்பு தலைவிரி கோலமாய் ஆண்டகை அவர்களின் திருமுன் வந்து கைகட்டி, பின்வரும் கருத்தமைந்த நான்கு பாடல்களைப் பாடினார்.

''வலிமார்களுக்கெல்லாம் நாயகமானவர்களே! நான் தங்களை இழிவுக்கண்களுடன் பார்த்ததனால், அதற்கான தண்டனையைப் பெற்றுக் கொண்டேன்.

''தங்களோ அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழியில் தோன்றி யவர்கள். மேலும் தாங்கள் இறைவனின் அருள் நேசர்களில் ஒருவர் என்பதிலும் எனக்கு அணுவத்தனையும் ஐயமில்லை.

''தாங்களோ இறைவனின் பேரொளி பாயப் பெற்றவர்கள். நானோ மண்ணாங்கட்டிக்கு நிகராக உள்ளேன். ஆதலின் இந்த அடிமை செய்த குற்றத்தை மன்னித்தருளுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

''தங்களின் அருட்கண் பார்வை என் மீது படின், என் பவம் நீங்கி, நான் முன்னர் இருந்த நிலையை எய்தப் பெறுவேன் என்று ஆதரவு வைத்தவனாகத் தங்கள் முன் வந்து நிற்கிறேன்.''

இவற்றைக் கல்லும் கரைந்துருகும் வண்ணம் அவர் பாடித் தம் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரை ஆண்டகை அவர்களின் பாத கமலங்களில் காணிக்கையாக வைத்தார்.

ஆண்டகை அவர்கள் அவரை அருளொழுகும் கண்களுடன் நோக்கி, ''நீர் என் சீடரிடம் சென்று மன்னிப்புக் கேட்டு, அவரின் நொந்த மனத்தைக் குளிர்விப்பின், நீர் முன்னர் பெற்றிருந்த பதவியை எய்தப் பெறுவீர்'' என்றனர். அவ்வாறு அவர் செய்ய, அடுத்த கணம் அவர் இழந்த குத்புப் பதவி மீண்டும் அவரை வந்தடைந்தது.

இதன்பின் ஆண்டகை அவர்கள் குராஸானை விட்டு நீங்கித் தம் சீடர்கள் புடைசூழ நடந்து வந்து, அங்கு ஓரிடத்தில் தங்கி இறை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது அங்கு வாழ்ந்து வந்த ஜின்களின் அரசர், 'இமாதுல் முல்க் ஆண்டகை அவர்களின் மாண்பினை அறிந்து, அவர்களின் திருமுன் மரியாதையுடன் வந்து நின்று 'ஸலாம்' கூறி, ''ஆண்டகையீர்! இந்த பக்கீரையும் தங்களைப் போன்ற இறைநேசச் செல்வராக்குவது தங்களுக்கு இயலாத செயலல்ல'' என்று மிகவும் வினயமாக எடுத்துரைத்தார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''வலா துஹிப்புத் துன்யா பதகூனூ மினல் காஸிரீன்'' (நீங்கள் உலகை நேசித்து நஷ்டவாளர்களாக ஆகிவிட வேண்டாம்) என்று கூறினர்.

அதுகேட்டு அவர் நடுக்கம் கொண்டவராய், ''ஆண்டகையீர்! தாங்கள் கூறுவது முழுக்க முழுக்க உண்மை என்பதில் ஐயமில்லை.

எனினும் நான் என் செய்வேன்? நான் உலக ஆசாபாசங்களில் மூழ்கி, அதிலிருந்து வெளியேற இயலா வண்ணம் மயக்குற்று உள்ளேனே'' என்று அழுங்குரலில் கூறினார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''வல்லாஹு காலிபுன் அலா குல்லி காலிபின்'' (அல்லாஹ் மிகைக்கிறவன்; அனைத்தையும் மிகைத்து ஆளுகிறவன்) என்று கூறினர்.

அதற்கு அவர், ''நான் மறதியில் சிக்குண்டவனாக உள்ளேனே. என் செய்வேன்?'' என்று கூறித் தம் ஆற்றாமையை வெளியிட்டார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''வலா தக்னத்தூ மின் ரஹ்மத்தில்லாஹி ஃப இன்னஹு அர் ஹமுர் ராஹிமீன்'' (நீங்கள் இறைவனின் பேரருளில் அவ நம்பிக்கை கொண்டு விட வேண்டாம்! அவன் அருளாளர்களிலெல்லாம் அருளாளன்) என்று கூறினர்.

அதற்கு அவர், ''என் அரசும், அதற்கான பொறுப்பும் என்னைச் சூழ்ந்து வளைந்து கொண்டுள்ளனவே. அவற்றை விட்டும் அப்புறப்பட என்னால் இயலவில்லையே. இந்நிலையில் நான் என் செய்வேன்?'' என்று கூறி அழுதார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''கைருல் கினா கினன்னஃப்ஸி, வ கைருஸ் ஸாதித் தக்வா'' (சீமான் தனத்தில் மேலானது, ஒருவன் தன் நஃப்ஸை அதன் போக்கில் போகவிடாது தடுத்து நிறுத்து வதும், நீண்ட வழிப் பயணத்திற்காக தக்வா (பயபக்தி) என்ற தங்கரிப்பைச் செய்து கொள்வதுமேயாகும்) என்று கூறினர்.

ஆண்டகை அவர்களின் இவ்விறுதிச் சொல் அவருக்கு அறிவுத் தெளிவை அளித்தது. ஆண்டகை அவர்களிடம் விடைபெற்றுச் சென்ற அவர், தம் மகளுக்கு முடிசூட்டி, அவளிடம் அரசை ஒப்படைத்து விட்டு, ஆண்டகை அவர்களிடம் மீண்டும் வந்து, அவர்களிடம் தீட்சை பெற்று அவர்களின் ஊழியத்தில் சேர்ந்து விட்டார்.

பின்னர் ஆண்டகை அவர்கள் மாவராவுன் நகர் என்ற ஊரை அடைந்த பொழுது, அங்கு காஜியாகப் பணியாற்றி வந்த மள்ஹர் என்பவர், ஆண்டகை அவர்களை வந்து சந்தித்து அவர்களுடன் பல்வேறு விஷயங்கள் பற்றி வாக்கு வாதம் செய்தார். அவர்களின் கேள்விகளுக்ெல்லாம் ஆண்டகை அவர்கள் சரியான வாயாப்புக் கொடுத்தனர். இறுதியாக அவர் ஆண்டகை அவர்களை நோக்கி, ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'திருமணம் செய்து கொள்வது என் வழி முறை (சுன்னத்)' என்று

கூறியிருக்க, தாங்கள் திருமணம் செய்து கொள்ளாதது ஏன்? மேலும் தாங்கள் உணவுண்ணாத காரணம் என்ன?'' என்று வினவினார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''அத்துன்யா யவ்முன்லீ வ அன ஃபீஹா ஸாயிமுன்'' (இவ் உலக வாழ்வு எனக்கு ஒரு நாள் வாழ்வாகவே உள்ளது. அதில் நான் நோன்பு நோற்றவனாக உள்ளேன்) என்று பதிலிறுத்தார்கள்.

இந்த ஒரு பதில் மூலமாக அவர்கள் அவரின் இரு கேள்விகளுக்கும் பதிலளித்துவிட்டார்கள். எவ்வாறெனின், நோன்பில் மூன்று செயல்கள் கடமையாக (ஃபர்ளாக) உள்ளன. அவை: (1) நோன்பு நோற்பதாக நிர்ணயம் கொள்ளுதல், (2) உண்ணவோ, அருந்தவோ செய்யாதிருத்தல், (3) மனைவியை மருவாதிருத்தல். எனவே உலக வாழ்வையே அவர்கள் நோன்பாகக் கொள்ளும் பொழுது, அவர்களுக்கு உண்பதும், அருந்துவதும், மணமுடித்து மனைவியை மருவுவதும் ஆகாததாகி விடுகிறது.

ஆண்டகை அவர்களின் இப்பதில், காஜி மள்ஹறைப் பெரிதும் வியப்படையச் செய்தது. அடுத்த கணம் அவர் ஆண்டகை அவர்களின் கரம் பற்றி தீட்சை பெற்றார்.

இதன்பின் ஆண்டகை அவர்கள் தம் சீடர்களுடன் காலபி நகரை வந்தடைந்தனர். அது அச்சமயத்தில் டில்லி பாதுஷா பைரோஷ் ஷாவின் ஆட்சியின் கீழ் இருந்தது. அதன் ஆளுநராக மஹ்மூது ஷாவின் புதல்வர் காதிர்ஷா என்பவர் இருந்து வந்தார். அவர் அங்கு வாழ்ந்து வந்த ஷைகு ஸிராஜ் என்பவரிடம் பெரிதும் ஈடுபாடுடையவராக இருந்தார். அவரைப் பின் தொடர்ந்து, அந்நகர மக்களும் ஷைகு ஸிராஸுக்குப் பெரிதும் மரியாதை செலுத்தி வந்தனர்.

ஆண்டகை அவர்கள் காலபி வந்து அங்கு சில காலம் தங்கியிருந்தார்கள். அவர்கள் தம் ஊர் வந்து தங்கியிருப்பதை, அவ்வூர் மக்கள் அறிய வந்ததும், அவர்களைத் தரிசிக்கச் சாரி சாரியாக வரலாயினர். நாளுக்கு நாள் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகப்பட்டு வந்தன. இச்செய்தி ஆளுநர் காதிர் ஷாவின் செவி சேர்ந்ததும், அவரும் ஆண்டகை அவர்களை வந்து தரிசித்தார். ஒரு நாள் வந்தவர் மறுநாளும் வந்தார்; மறுநாளும் வந்தார். இவ்வாறு தொடர்ந்து வரலானார்.

இச் செய்தி ஷைகு ஸிராஸுக்குத் தெரிய வந்ததும், அவருக்கு ஆண்டகை அவர்கள் மீது வீண் பொறாமை ஏற்பட்டது. ஆளுநர் காதிர் ஷா, ஆண்டகை அவர்களிடம் செல்வதை எவ்வாறாவது தடுத்து நிறுத்த முயன்றார்.

இதனை அறிந்த காதிர் ஷா, ஷைகு ஸிராஸை ஆண்டகை அவர்களிடம் அழைத்துச் செல்லின், அவர் அவர்களின் மாண்பினை உணர்ந்து, தாம் கொண்ட வீண் பொறாமையை விட்டொழிப்பார் என்று எண்ணி, நண்பகலில் ஆண்டகை அவர்களைக் காணச் சென்றார். அவ் வேளையில் ஆண்டகை அவர்கள், 'ஜலாலியத் மகாமில்' தரிபட்டிருப் பார்களாயின், அவர்களைக் காண எவரையும் அனுமதிக்காத இமாதுல் முல்க், ஆளுநரையும் அவ்விதமே அனுமதிக்கவில்லை.

இது கண்டு வெகுண்ட ஆளுநர், "இனி மேல் இந்தப் பக்கீர் கூட்டம், என் நாட்டின் எல்லைக்குள் இருக்கக் கூடாது. இக்கணமே இதைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டுச் சென்று விட வேண்டும்" என்று கண்டிப்பான உத்திரவிட்டுச் சென்றார்.

அவ்விதமே ஆண்டகை அவர்கள் செய்தார்கள். ஆனால் காதிர்ஷா வுக்கோ உடல் முழுதும் கொப்புளங்கள் கிளம்பி விரைவில் அவர் இறப்பெய்தினார். காலபி நகரின்மீது ஹோசிங் என்பவன் படையெடுத்து அதனைப் பிடித்துக் கொண்டான்.

இப்பொழுது அண்மையிலுள்ள ஜவ்ன்பூரில், சுல்தான் இப்ராஹீம் ஷர்கீ ஆட்சி செய்து வந்தார். அவரின் அமைச்சராக அறிவில் சிறந்த மீர் சையிது ஸத்ரெ ஜஹான் என்பவர் பணியாற்றி வந்தார். அவர் குத்பு மீர் சையிது அஷ்ரஃப் ஜஹாங்கீர் (ரஹ்) அவர்களை அணுகி, 'பைஅத்' பெற விரும்பினார். ஆனால் அவர்களோ, 'நீர் 'பைஅத்' பெறுவது என்னிட மல்ல, வேறொரு பெரியாரிடம். அவர்கள் விரைவில் ஹிந்துஸ்தான் வருவர். நான் இப்பொழுது 'ஹஜ்'ஜு செய்ய மக்கா செல்கின்றேன். நானும் அவர்கள் வருவதற்குள் இங்கு திரும்பி வந்து விடுவேன். அப்பொழுது அவர்களைச் சந்தித்து 'பைஅத்' பெற்றுக் கொள்ளும்!" என்று கூறிவிட்டு மக்கா புறப்பட்டனர்.

அவர்கள் மக்கா சென்று, 'ஹஜ்'ஜு செய்துவிட்டுத் திரும்பிய பொழுது, ஆண்டகை அவர்கள் காலபி நகர் வந்து தங்கியிருந்தனர். இதனை அவர்கள் அமைச்சர் ஸத்ரெ ஜஹானிடம் தெரியப்படுத்திய பொழுது, அவருக்கு என்னசெய்வதென்றே விளங்கவில்லை. அதற்குக் காரணம், ஜவ்ன்பூர் அரசர் இப்ராஹீம் ஷர்கீக்கும், காலபியின் ஆளுநர் காதிர்ஷாவுக்கும் நல்லுறவு இல்லாமல் இருந்ததேயாகும்.

எனவே அவர் ஆண்டகை அவர்களுக்கு ஒரு மடல் எழுதினார். அதில் அவர் அங்கு வந்து அவர்களைத் தரிசிக்கத் தாம் பெரிதும் ஆவலுடையவராய் இருப்பதையும், எனினும் சூழ்நிலை அவரை அவ்விதம் செய்யா வண்ணம் தடுத்து நிறுத்துவதையும், அவர்கள் ஆணையிடின் மறுகணமே தாம் வகித்து வரும் அமைச்சர் பதவியைத்

துறந்து, அவர்களின் காலடியில் வந்து அமர்ந்து அவர்களுக்குக் குற்றூழியம் செய்யத் தயாராக இருப்பதையும் எடுத்துரைத்தார்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''நாம் ஹிந்துஸ்தான் மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக அனுப்பப்பட்டுள்ளோம். எவர் நம்மிடம் நேர்வழி பெறுவார்களோ, அவர்களின் பெயர்கள் அனைத்தும், நம்மிடமுள்ள குறிப்பேட்டில் பதியப் பெற்றுள்ளன. அதில் உம்முடைய பெயரும் இருக்கிறது. ஆதலின் நீர் அங்கேயே இரும்! நாம் விரைவில் அங்கு வந்து சேர்வோம்'' என்று பதில் வரைந்தனர்.

இம்மடலைப் பெற்றதும் அமைச்சர் ஸத்ரெ ஜஹானுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. இறைவனுக்குத் தம் நன்றியைச் செலுத்தும் விதத்தில், அவர் தம் கருவூலத்திலிருந்து ஓர் இலட்சம் ரூபாய் வரை எடுத்து ஏழை எளியவர்களுக்கு வழங்கினார்.

பின்னர் ஆண்டகை அவர்கள், ஜவ்ன்பூர் வந்த பொழுது, அவர்களைச் சந்திக்க அமைச்சர் ஸத்ரெ ஜஹானும், அரசரின் இளவல் அஷ்ரஃப் கானும் சென்றனர். அவர்களுடன் சேர்ந்து நகர மக்கள் ஓரி இலட்சம் பேர்களும் சென்றிருந்தனர். ஆண்டகை அவர்கள் ஒரு சிறு அறையில் தங்கியிருந்ததால், முதலில் அமைச்சர் ஸத்ரெ ஜஹானுக்கு மட்டும் அவர்கள் பேட்டியளித்தார்கள்.

அமைச்சர் அறைக்குள் நுழைந்ததும் ஆண்டகை அவர்கள் தாம் வழக்கமாக அணிந்து வரும் முகத்திரையை நீக்க, அவர்களின் முகத்திலிருந்து வெளியான பேரொளியைப் பார்க்க இயலாது, அமைச்சர் குப்புற வீழ்ந்தார். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''சையிதே! தலையை உயர்த்தும்! இப்பொழுது மூஸா (அலை) அவர்கள் மீது பாய்ந்த பேரொளி உம்மீதும் பாய்ந்து விட்டதோ?'' என்று வின வினார்கள். அதற்கு அவர் யாது பதில் கூறுவதென அறியாது விக்கி, விக்கி அழுதார்.அது கண்ட ஆண்டகை அவர்கள், ''இந்த அழுகை உமக்கு விரைவில் மகிழ்ச்சியாக மாறும். நீர் இறைவனின் பேரருளை எய்தப் பெறுவீர். வெளியே சென்று அமரும்! நாமும் அங்கு கூடியிருக்கும் மக்களைச் சந்திப்பதற்காகச் சில நொடிகளில் வந்து சேர்கிறோம்'' என்று கூறினார்கள்.

அவ்வாறே ஆண்டகை அவர்கள் வெளியே வந்து, தமக்கெனப் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து, மக்களுக்கு அறிவுரை பகர்ந்தார்கள். அவர்களின் அறிவுரை மக்களின் உள்ளங்க்ளைக் கௌவிப்பிடித்துக் கண்களிலிருந்து கண்ணீரை அருவியென ஓடச் செய்தது. அன்றையத் தினமே அங்கு குழுமியிருந்த ஓரி இலட்சம் மக்களும் ஆண்டகை அவர்களிடம் 'பைஅத்' பெற்றனர்.

அப்பொழுது அமைச்சர் ஸத்ரெ ஜஹான் தம் பதவியைத் துறந்து, ஆண்டகை அவர்களின் ஊழியத்தில் இருக்க எண்ணம் கொண்டு, தம்முடைய எண்ணத்தை ஆண்டகை அவர்களிடம் எடுத்துரைத்த பொழுது, "வேண்டாம்! நீர் அமைச்சர் பதவியிலேயே இரும்! உம்மால் மக்கள் ஏராளமான நன்மைகளைப் பெற்று வருகிறார்கள். மக்களுக்கு அந்த நற்பேறுகளை இல்லாமல் ஆக்குவது நல்லதல்ல. மேலும் நீர் இறைவனின் நல்லடியார்களுக்கு உதவியாய் இருப்பின், இறைவனும் உமக்கு உதவியாய் இருப்பான். உலகைத் துறந்த உத்தம ஞானிகள் எய்தும் பேற்றினை நீர் உலகில் வாழ்ந்து, உலக மக்களுக்கு நன்மை செய்வதன் மூலம் எய்தப் பெறுவீர்" என்று அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

இங்கும் காலபியில் நடந்ததே நடந்தது. ஜவ்ன்பூர் அரசர் இப்ராஹீம் ஷர்கீ ஆண்டகை அவர்களின் மாண்பினை உணர்ந்து அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்ய, அதுகண்டு பொறாமை கொண்டார் மலிக்குல் உலமா காஜி ஷஹாபுத்தீன். ஆண்டகை அவர்களைப் பற்றி அவர் இல்லாததையும், பொல்லாததையும் கூறி, அரசரின் உள்ளத்தில் நச்சு வித்தைத் தூவினார். ஆனால், அவற்றில் ஒன்றேனும் முளையிடா ததைக் கண்ட அவர், ஆண்டகை அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டு அவர்களை மடக்கி, அவர்களைப் போலி என்று ஊரறிய, உலகறியச் செய்து விட வேண்டுமென்னும் தீய எண்ணத்துடன் இரண்டு கேள்விகளை அவர்களிடம் அனுப்பி வைத்தார்.

ஆண்டகை அவர்கள் சையிது தாஹிர் என்பவர் மீது அளவற்ற அன்பு செலுத்தி வந்தார்கள். இதனை ஒரு குறையாகக் கண்ட அவர், "சையிது தாஹிருக்கு மட்டும் தங்களின் திருமுன் அடிக்கடி போக வர அனுமதி கிடைக்கிறதே. ஏனையோருக்கு ஏன் அவ்விதம் அனுமதி தரப்படு வதில்லை?" என்று வினவினார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "அல் உலமாவு வரஸத்துல் அன்பியாயில் (உலமாக்கள் நபிமார்களின் வாரிசாவர்) என்று அருளிச் செய்துள்ளார்களே அந்த உலமாக்கள் நாங்கள் கற்ற கல்வியைக் கற்றவர்களா அல்லது வேறு வகைக் கல்வியைக் கற்றவர் களா?" என்று மறுகேள்வி விடுத்தார்.

இக்கேள்விகளுக்கு பதிலாக, ஆண்டகை அவர்கள் பின் வருமாறு பதில் எழுதி அனுப்பினார்கள்.

(1) "இறைவனின் அருள் நேசராகிய வலிமார்கள், அவனளவில் தங்களை அழித்து (ஃபனாவாக்கி), அவனளவிலே தரிபட்டவர்களாக (பகாவாக) உள்ளனர். இந்நிலையில் அவர்களின் அனைத்து நாட்டமும், அவனளவிலே உள்ளது. எனவே, அவர்கள் எண்ணுவதும், செயலாற் றுவதும் இறைவனின் நாட்டப்படி நடக்கின்றனவேயன்றி, அவர்களின்

நாட்டப்படி நடப்பதில்லை. எனவே சையிது தாஹிர் என் முன் வர அனுமதி வழங்கப்படுவது இறைவனின் நாட்டப்படியே அன்றி வேறில்லை.''

(2) '' உலமாக்கள் நபிமார்களின் வாரிசாவர்' என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளது உண்மை தான். இறைவன் தன் சொந்த அடிமைகளுக்குச் சில அறிவுகளைக் கற்றுக் கொடுக்கிறான். அதற்கு 'இல்முல்லதுன்னீ' என்று பெயர். அதனை எவ்விதச் சிரமமுமின்றி அவர்கள் இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களின் தகுதியைச் சாதாரண மக்களால் அறிந்து கொள்ள இயலாது. அகக்கண் படைத்தவர் களாலேயே அறிய இயலும். அவர்களுக்கு ஆதிமுதல், அந்தம் வரையுள்ள அனைத்துச் செய்திகளும் அவ்வப் போது தெரிய வருகின்றன.

''நீர் கற்றிருக்கும் கல்விக்கோ, 'இல்முல் லாஹிறி' (வெளிப் படையான கல்வி) என்று பெயர். இதனால் 'இல்முல் லதுன்னி'யை எய்தப் பெற இயலாது. ஆனால் இறைவன் நாடினால் அதுவும் கிடைக்கும்.''

ஆண்டகை அவர்களின் இப்பதில் காஜி ஷிஹாபுத்தீனின் மூளையைச் சக்கரம் போல் சுழலச் செய்தது. அவர்களுடன் இணக்கமாகப் போக விரும்பிய அவர், அவர்களைத் தம் இல்லத்திற்கு விருந்துண்ண வருமாறு மடல் விடுத்தார். அம்மடலில் ''கதிரவனின் பேரொளியை எந்த நாவால் புகழ்ந்துரைக்க இயலும்? அது எங்களின் இல்லத்தின் வாயிலிலும் சுவரிலும் ஒளி வீசுகிறது''. என்னும் கருத்தமைந்த கவிதை ஒன்றையும் பொறிந்திருந்தார்.

அதனைக் கண்ணுற்ற ஆண்டகை அவர்கள், ''இதனை காஜி ஷிஹாபுத்தீன் நல்ல எண்ணத்துடன் எழுதவில்லை. அவருக்கு என் மீதுள்ள குரோதம் இன்னும் நீங்கிய பாடில்லை'' என்று கூறி, அவரின் விருந்தினை ஏற்றுக் கொள்ள மறுத்து, பின்வரும் கருத்தமைந்த கவிதை யினை அவருக்கு எழுதி அனுப்பினார்கள்:

'காதல் (இஷ்க்) என்ற கதிரவன் அனைத்தின் மீதும் ஒளி வீசுகின்றது தான். ஆனால் கற்களெல்லாம் மாணிக்கக் கற்களாக ஒளிர்வதில்லை.''

இப்பதிலைக் கண்டதும் காஜி ஷிஹாபுத்தீனின் மூளை மீண்டும் சுழலத் தொடங்கியது. ஆண்டகை அவர்கள் தம் இல்லம் எழுந்தருள மாட்டார்கள் என்பதை நன்கு விளங்கிக் கொண்ட அவர், அல் குத்பு சையிது அஷ்ரஃப் ஜஹாங்கீர் ஸமனானி (ரஹ்) அவர்களை அணுகித் தம் அவல நிலையை எடுத்துரைத்தார்.

அதுகேட்ட குத்பு அவர்கள் துடித்து விழுந்து, "என்ன காரியம் செய்தீர் நீர்? எவரை இலேசு கண்டு பகைத்துக் கொண்டீர் நீர்?" என்று கடிந்து, உடனே ஆண்டகை அவர்களிடம் சென்று, மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுமாறு அறிவுரை பகர்ந்தார்கள்.

அவ்விதமே அவர் ஆண்டகை அவர்களிடம் வந்த பொழுது, "பக்கீர் சையிது அஷ்ரஃப் ஜஹாங்கீரின் அறிவுரையின் பேரில் தான் இங்கு வந்துள்ளீர். அவர் உம்மீது இரங்கி இங்கு உம்மை அனுப்பி வைத்துள்ளார்." என்று ஆண்டகை அவர்கள் கூறியதும், அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. கதவைத் தாளிட்டுக் கொண்டு தமக்கும் சையிது அஷ்ரஃப் ஜஹாங்கீர் (ரஹ்) அவர்களுக்கும் நடந்த பேச்சு வார்த்தை, இவர்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது என்று பெரிதும் வியப்புற்ற அவர், இனியும் நெருப்போடு விளையாடக் கூடாது என்று எண்ணித் தம்மை மன்னிக்குமாறு கண்ணீரும் கம்பலையுமாய் வேண்டினார். அவ்விதமே ஆண்டகை அவர்களும் செய்தார்கள்.

ஒரு நாள் அவ்வூரைச் சேர்ந்த ஷைகு ஈஸா என்பவர் ஆண்டகை அவர்களை அணுகி, "தாங்கள் யாதொன்றும் உண்பதில்லை என்று கேள்விப்படுகின்றேனே. அதற்கான காரணம் யாது? அது தங்களால் எவ்விதம் சாத்தியப்படுகிறது?" என்று வினவினார். அவரின் இக்கேள்வி ஆண்டகை அவர்களைப் புன்முறுவல் பூக்கச் செய்தது. அவர்கள் ஷைகு ஈஸாவை நோக்கி, "நான் நாள்தோறும் திருக்குர்ஆனை ஓதிவருகிறேன். அதன் எழுத்துக்கள் என் உடலுக்கும், அதன் கருத்துக்கள் என் ஆன்மாவுக்கும் உணவாக உள்ளன" என்று பதிலுரைத்தார்கள். அவர்களின் இப்பதில் ஷைகு ஈஸாவின் கண்களை வியப்பால் விரியச் செய்தது.

அது கண்ட ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, "யூசுஃப் (அலை) அவர்களின் காலத்தில் மிஸ்ரில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட பொழுது, மிஸ்ர் மக்கள் யூசுஃப் (அலை) அவர்களின் பேரழகைக் கண்களால் பருகிப் பசியும் தாகமும் தீரப் பெற்றனர் என்று நீர் கேள்வியுறவில்லையா? அது போன்று இறைகாதலில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கும் ஒருவரையும் பசியாலோ, தாகத்தாலோ யாதொன்றும் செய்ய இயலாது என்பதை அறிவீராக!" என்று பதிலுரைத்தார்கள்.

மற்றொரு நாள் கன்னோஜிலிருந்து ஒரு குழு வந்து ஆண்டகை அவர்களைச் சந்தித்து, "தாங்களோ அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பப் பெற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழித் தோன்றலாக உள்ளீர்கள். எங்கள் ஊரில் வாந்தி பேதி பரவி, மக்களின் உயிர் போக்கி வருகிறது. அதனால் எங்கள் ஊரே அழிந்து போய் விடுமோ என்று அஞ்சுகிறோம். தாங்கள் இறைவனிடம்

இறைஞ்சி, அப் பீடையை எங்கள் ஊரை விட்டும் நீக்கி அருள வேண்டும்'' என்று அழுத கண்களுடன் வேண்டி நின்றது.

அது கண்டு ஆண்டகை அவர்களின் அருள் உள்ளம் செந்நீர் வடித்தது. உடனே அவர்கள் காஜி ஷிஹாபுத்தீனை அழைத்து, ''நீர் இவர்களுடன் கன்னோஜ் சென்று, அங்கு நிலவி வரும் வாந்தி பேதியை நீக்கியருளுமாறு இறைவனிடம் இறைஞ்சும்! இன்ஷா அல்லாஹ், அது நீங்கி விடும்'' என்று கூறினர். அவ்விதமே அவர் செய்ய, அடுத்தகணம் அவ்வூரைப் பீடித்த பீடை அகன்றது.

சில காலம் ஜவ்ன்பூரில் தங்கியிருந்த பின், ஆண்டகை அவர்கள் மக்கன்பூர் புறப்பட ஆயத்தமானார்கள். இதனை அறிந்த சுல்தான் இப்ராஹீம் ஷர்கி முதல் ஊர்மக்கள் அனைவரும் பெரிதும் வருந்தினர். ஜவ்ன்பூரிலேயே தங்கியிருக்குமாறும், அவர்களுக்கு அனைத்து வசதி களும் செய்து தருவதாகவும் கூறினர். அதற்கு ஆண்டகை அவர்கள், தம்முடைய செயல் அனைத்தும் இறைவனின் ஆணைப்படியே நடக்கின்றனவே அன்றி தம் விருப்பப்படி நடக்கவில்லை என்றும், இறைவன் நாடினால் மீண்டுமொரு முறை, தாம் ஜவ்ன்பூருக்கு வருவதாகவும் கூறி, அரசரிடமும், அவ்வூர் மக்களிடமும் பிரியா விடை பெற்றுப் புறப்பட்டார்கள்.

வழியில் நவ்வாஹ¬ என்ற ஊரை அவர்கள் அடைந்து, அங்குச் சில நாட்கள் தங்கியிருந்த பொழுது, அவ்வூரிலுள்ள சூனியக்காரர்கள் தங்களுக்குப் போட்டியாக, அவர்கள் அவ்வூருக்கு வந்து விட்டார்களோ, அதன் காரணமாகத் தங்களின் பிழைப்புக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சி, அவர்களைக் கொல்ல சூனியம் செய்தனர். அவர்கள் செய்த சூனியத்தால் ஆண்டகை அவர்களுக்கு யாதொரு கேடும் ஏற்பட வில்லை. அதற்கு மாறாக, அவர்களுக்கே கேடாக முடிந்தது. அது கண்டு திடுக்குற்ற அவர்கள் ஆண்டகை அவர்களின் திருமுன் வந்து தங்களின் பிழை பொருத்தருளுமாறு பெரிதும் வேண்டி நின்றனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள், அந்தச் சூனியக்காரர்களை நோக்கி, ''உங்களின் வினை உங்களையே சுட்டது. இனிமேல் நீங்கள் எவருக்கும் சூனியம் செய்வதில்லை என்று உறுதி கூறின் நான் உங்களுக்கு யாதொரு தீங்கும் ஏற்படாது விலக்கி விடுகிறேன். இல்லையேல் என்னைக் கொல்ல நீங்கள் செய்த சூனியம், உங்களைக் கொல்லாது விடாது'' என்று கூறினர். அது கேட்டு நடுங்கிப் போன அவர்கள், அவ்விதமே ஆண்டகை அவர்களிடம் உறுதிமொழி கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

பின்னர் ஆண்டகை அவர்கள் அங்கிருந்து கிளம்பி ஸத்ஹறன் என்ற ஊரை அடைந்த பொழுது, அவ்வூரில் வாழ்ந்து வந்த துறவி ஒருவர்

ஆன்மீகம் பற்றிச் சில கேள்விகளை ஆண்டகை அவர்களுக்கு வட மொழியில் எழுதியனுப்பினார். அவற்றிற்கு ஆண்டகை அவர்கள் வடமொழியிலேயே பதில் எழுதித் தம் மாணவர் சையிது அபுல் ஹஸன் காஜா தைபூரியிடம் அனுப்பியதோடு, அவர்களிடம் சில கேள்விகளைக் கூறி, அவற்றிற்கான பதில்களை அவரிடமிருந்து பெற்று வருமாறும் ஆணையிட்டார்கள்.

தம் கேள்விகளுக்கான சரியான பதில்களை ஆண்டகை அவர்கள் வடமொழியிலேயே எழுதியிருப்பதைக் கண்டு, அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. பின்னர் ஆண்டகை அவர்களின் கேள்விகளை, அவர்களின் மாணவர் கூறிய பொழுது, அவற்றிற்குப் பதில் கூற அறியாது திணறினார் அவர்.

இதன்பின் ஆண்டகை அவர்களின் மாணவருடன், ஆண்டகை அவர்களைக் காண வந்த அவர், ஆண்டகை அவர்களை நோக்கி, ''பெரியீர்! தாங்கள் ஆணையிட்டால் தாங்கள் அமர்ந்திடப் பொன்னால் ஒரு மேடை செய்து தரக் காத்திருக்கிறேன்'' என்று வினயமாகக் கூறினார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், அவரின் கண்களை மூடிக் கொள்ளுமாறு கூறிப் பின்னர் திறக்குமாறு கூறினர். அவ்விதமே அவரும் செய்தார். என்ன வியப்பு! அவர் பார்வை எட்டிய தொலைவு வரை, எங்கணும் பொன்மயமாகக் காட்சி வழங்கியது. பின்னர் அவர்கள் அவரைக் கண்களை மூடித் திறக்குமாறு கூறினர். அவ்வாறே அவர் செய்ய, அனைத்தும் மாயமாய் மறைந்து விட்டன. அப்பொழுது அவருடைய முகத்தில் வியப்பின் அறிகுறி பளிச்சிட்டது.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''இதில் வியப் படைவதற்கு ஒன்றுமில்லை. உமக்குப் பொன் என்பது மதிப்பிற்குரிய பொருளாக இருக்கலாம். ஆனால் எனக்கோ பொன்னும் மண்ணும் ஒன்றேயாம்'' என்று கூறினர். இப்பதில் அவரை முன்னை விட அதிகமாக வியப்படையுமாறு செய்தது. அக்கணமே அவர் ஆண்டகை அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினார்.

இறுதியாக ஆண்டகை அவர்கள் மக்கன்பூர் புறப்பட்டு வரும் பொழுது வழியில் காஜா மக்தூம் என்னும் பெரியாரும், அவர்களுடன் சேர்ந்து கொண்டார். அவர்கள் மக்கன்பூர் வந்த பொழுது, அவ்வூரில் வானம் பொய்த்துக் கடும் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் வந்து ஆண்டகை அவர்களிடம் முறையிடவே, ஆண்டகை அவர்கள் அவ்வூர் அதிகாரியான யாசீன் என்பவரிடம் தம் கைத்தடியைக் கொடுத்து,

''இதனை எடுத்துச் சென்று, இன்ன இடத்தில் ஊன்றும்! அவ்விடத்திலிருந்து தண்ணீர் குமிழியிட்டு வெளிவரும்'' என்று கூறினர். அவ்விதமே அவர் செய்ய, தண்ணீர் குமிழியிட்டு வெளிப் போந்தது. மக்கள் வாய்க்கால் வெட்டி அத்தண்ணீரைத் தங்களின் வயல்களில் பாய்ச்சி விவசாயம் செய்தனர். அதன் காரணமாக நாடு செழித்தது. மக்கள் நலமுற்றார்கள். அன்று ஒலித்தோடிய அச்சுனை, இன்றும் ஒலித்தோடிக் கொண்டே உள்ளது.

இப்பொழுது மக்கள் ஆண்டகை அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களிடம் வந்து இஸ்லாத்தைத் தழுவவும், தீட்சை பெறவும் செய்தார்கள். ஒரு தடவை மூவர் அவர்களிடம் வந்தனர். அவர்களில் ஒருவர் போர் வீரர். மற்றொருவர் நற்குணவான். வேறொருவர் ஞானி. இம்மூவரையும் ஆண்டகை அவர்கள், தனித்தனியே அழைத்து, அவர்களின் அறிவுக்கேற்ற வண்ணம் அறவுரை பகர்ந்து, தீட்சை நல்கி, கிர்க்காவும் அணிவித்தார்கள்.

ஷாஹ் பஸ்லுல்லாஹி பதக்ஷானி என்பவர் குத்பு அஷ்ரஃப் ஜஹாங்கீர் (ரஹ்) அவர்களின் திருமுன் வந்து தாள் மடித்து அமர்ந்து தீட்சை பெற நாடிய பொழுது, ''நீர் சிந்தா ஷாஹ் மதார் (ரஹ்) அவர்களைச் சந்தித்து, அவர்களின் கரம் பிடித்து தீட்சை பெற்றுக் கொள்ளும்! அவர்கள் தாம் உமக்குரிய ஷைகு ஆவர்'' என்று கூறிவிட்டனர்.

அவ்விதமே அவர் ஆண்டகை அவர்களை வந்து சந்தித்துத் தம் விருப்பத்தைத் தெரிவித்த பொழுது, ''நீர் நம்முடைய தரீக்காவில் புக நாடுகிறீர். இதுவோ கரையற்ற பெருங்கடலாக உள்ளதே. இதில் மூழ்கி முத்துக் குளிக்க விரும்பின், பல வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்படுமே'' என்று கூறினர். அதற்கு அவர், எதற்கும் தயாராகவே தாம் வந்திருப்பதாகவும், எதையும் தாங்கும் இதயம் பெற்று வந்திருப்பதாகவும் கூறித் தமக்குத் தீட்சை வழங்குமாறு வேண்ட, ஆண்டகை அவர்களும் அவ்விதமே செய்தனர்.

இதன்பின் குத்பு அஷ்ஃரப் ஜஹாங்கீர் (ரஹ்) அவர்களும், ஆண்டகை அவர்களை வந்து தரிசித்து, அவர்களுடன் சில காலம் இருந்தனர். ஆண்டகை அவர்களைப் பற்றி அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''நான் சையிது பதீயுத்தீன் குத்பு சிந்தாஷாஹ் மதார்(ரஹ்) அவர்களைத் தரிசித்து அவர்களுடன் ஊரிலும், பிரயாணத்திலும் சிறிது காலம் இருந்து வந்தேன். அவர்கள் தன்னிகரற்ற தனிப்பெரும் வலியாவர். அவர்களைப் போன்றோரை நான் முன்னரோ, பின்னரோ பார்த்ததில்லை'' என்று வாயார்ந்து எடுத்துரைத்தார்கள்.

ஓரிரவு ஷாஹ் லுத்புல்லாஹ் என்பவர் அயர்ந்து உறங்கும் பொழுது, கனவொன்று கண்டார். அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத் தோற்றம் வழங்கி, "லுத்புல்லாஹ்வே! நீர் குத்பு சிந்தா ஷாஹ் மதாரை அணுகி, ஈருலகப் பேற்றினையும் பெற்றுக் கொள்வீராக!" என்று அறிவுரை பகர்ந்தனர். அவ்விதமே அவர் ஆண்டகை அவர்களை அணுகி அவர்களின் அருட்கண் பார்வை பட்ட மாத்திரத்திலேயே இறைகாதல் மிகுந்து தன்னுணர்வற்ற நிலையில் ஆனார்.

ஒருநாள் ஆண்டகை அவர்கள் தம் சீடர்களுடன் வீற்றிருக்கும் பொழுது, திடீரென அவர்களின் கையில் தண்ணீரித் துளிகள் வந்து விழுந்து, அதன் காரணமாக அவர்களின் சட்டையின் கை நனைந்தது. இதனைக் கண்டு வியப்புற்றனர் அவர்களின் மாணவர்கள். எனினும், அது பற்றி அவர்களிடம் வினவுவது மரியாதைக் குறைவெனக் கருதி வாளாவிருந்தனர். இதனை அவர்களின் முகச்சாடையால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், தம் சீடர்களை நோக்கி, "இது பற்றி நீங்கள் விரைவில் விளங்க வருவீர்கள்" என்று கூறினர்.

அவ்வாறே சில நாட்கள் கழித்து ஒருவர் ஆண்டகை அவர்களை அணுகி, அவர்களின் தாள்களில் தாம் கொண்டு வந்த காணிக்கைகளை வைத்து, "ஆண்டகையீர்! நான் சில நாட்களுக்கு முன், என் சரக்குகளைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு நடுக்கடலில் வரும் பொழுது, அகோரப் புயல் வீசிக் கப்பல் தாழ்ந்து விடும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது நான் தங்களின் பொருட்டு என்னையும், என் சரக்குகளையும் காத்தருள் புரியுமாறு இறைவனிடம் இறைஞ்சி மன்றாடினேன். திடீரெனப் புயல் தணிந்தது. நாங்கள் நலமே கரை வந்து சேர்ந்தோம். அந்த நன்றிக்குப் பிரதியாக நான் கொண்டு வந்த சரக்குகளில் பாதியைத் தங்களுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்துள்ளேன். அன்பு கூர்ந்து ஏற்றருள்க!" என்று வேண்டி நின்றார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் தம் சீடர்களை நோக்கி, "குத்பு அஸ்ஜா நமி ஜுன்பத்" (குத்பானவர் தம் இல்லத்தை விட்டும் அகல மாட்டார்) என்று கூறினர். இதன் பொருள் அவர் தம் இடத்தில் அமர்ந்து கொண்டே, அனைத்து அலுவல்களையும் செய்து முடிப்பார் என்பதேயாகும்.

இதன் நடுவே ஆண்டகை அவர்களுக்கு, சுல்தான் இப்ராஹீம் ஷர்கி, ஜவ்ன்பூர் வருமாறு மடலுக்கு மேல் மடல் எழுதிக் கொண்டிருந்தார்; அத்துடன் ஏராளமான காணிக்கைகளையும் அனுப்பிக் கொண்டிருந்தார். முன்னர் ஜவ்ன்பூர் மக்களிடம், அவ்வூருக்குத் தாம் மீண்டும் ஒரு தடவை வருவதாக அளித்திருந்த வாக்குறுதியை நினைவு கூர்ந்து, ஆண்டகை

அவர்களும் ஜவ்ன்பூருக்குப் புறப்பட்டனர். வழியில் அவர்கள் லக்னோ வந்து சேர்ந்தனர். அப்பொழுது லக்னோவே திரண்டு வந்து அவர்களுக்கு வரவேற்பளித்தது. அவ் வரவேற்பில் கலந்து கொண்டவர்களில், ஷைகு மீனாயி என்ற நல்லாரும் ஒருவர்.

ஒரு நாள் லக்னோ மக்களில் பலர் பல தேவைகளின் பொருட்டு ஆண்டகை அவர்களைக் காண வந்த பொழுது, ஆண்டகை அவர்கள், அவர்களை நோக்கி, ''நாம் ஷைகு மீனாயியை லக்னோவின் குத்பாக நியமித்துள்ளோம். நீங்கள் அவரிடம் சென்று உங்களின் நாட்டங்களை எடுத்துரைத்து பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறி, காஜி ஷிஹாபுத் தீனிடம் தம் தொழுகை விரிப்பைக் கொடுத்து, அதனை அவரிடம் ஒப்படைத்து விட்டு வருமாறு பணித்தனர்.

அவ்வாறே காஜி ஷிஹாபுத்தீன் அதனைப் பெற்றுக் கொண்டு, மக்கள் பின் தொடர ஷைகு மீனாயியின் இல்லம் சென்று, ஆண்டகை அவர்கள் அவரை லக்னோவின் குத்பாக நியமித்திருக்கும் நற்செய்தியை எடுத்துரைத்து, அவர்கள் தந்த தொழுகை விரிப்பையும் அவரிடம் ஒப்படைக்க, அவர் அதனைத் தம் தலைமீது வைத்துக் கொண்டு, வந்திருந்த மக்களின் நாட்டங்களை நிறைவேற்றி அருளுமாறு இறைவனிடம் இறைஞ்சினர். பின்னர் ஆண்டகை அவர்களின் திருச்சமூகம் வந்து தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், அவர்களுடன் கூடவே இருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தார்.

பின்னர் லக்னோவை விட்டு நீங்கி, ஆண்டகை அவர்கள் ஜவ்ன்பூரின் எல்லையை வந்தடைந்த பொழுது, ஜவ்ன்பூர் அரசர் இப்ராஹீம் ஷர்க்கி தம் அமைச்சர் பெருமக்கள் புடை சூழ வந்து அவர்களை நகருக்குள் அழைத்துச் சென்று, அவர்களுக்கென அமைக்கப்பட்ட இல்லத்தில் அவர்களைத் தங்க வைத்துப் பெரிதும் மரியாதை செய்தார். அங்கேயே அவர்கள் பல ஆண்டுகள் தங்கியிருந்தார்கள்.

இதன்பின் மக்கன்பூர் வந்து, அங்கு வெகுகாலம் வாழ்ந்து, மக்களுக்கு அறவழியை, அல்லாஹ்வின் வழியைக் காட்டி, அவர்களை அவ்வழியில் சேர்த்து வந்த ஆண்டகை அவர்களுக்கு இறுதி நெருங்கியது ஹிஜ்ரி 838 ஆம் ஆண்டு, ஜமாதுல் அவ்வல் மாதம், முதல் நாள். ஆண்டகை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''நான் இவ் உலகு நீத்து அல்லாஹ்வை அடையும் நாள் அண்மிவிட்டது. எனக்குப் பதிலாக, என்னுடைய இடத்தில், என்னுடைய கலீபாவாக சையிது அபூ முஹம்மது காஜா அவர்களை நியமிக்கிறேன். நீங்கள் அவருக்கு அடி

பணிந்து ஒழுகி வாருங்கள்!'' என்று கூறித் தங்களின் தலைப்பாகையைக் கழற்றி அவர்களின் தலைமீது வைத்து, அவர்களுக்கு ஆன்மீக முடி சூட்டினார்கள். அப்பொழுது மாணவர்களின் கண்கள் குளமாயின.

தாம் அவர்களை விட்டும் பிரியப்போவதை நினைந்து மக்கள் வருந்துகின்றார்கள் என்பதை விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், ''அல்லாஹ்வின் அருள் நேயர்கள் இறப்பதென்பது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாறுகின்றதேயன்றி வேறில்லை என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா, என்ன? பேரருளாளனாகிய அல்லாஹ் எனக்கு நீண்ட வாணாளைத் தந்து, என்னை இவ் உலகில் வாழ வைத்தான். அது போதாதா? ஆதலின் என்னை மகிழ்ச்சியுடன் அல்லாஹ்வின் பால் அனுப்பி வையுங்கள்!'' என்று ஆறுதல் கூறினார்கள்.

அப்பொழுது அவர்களின் கலீபா சையிது அபூ முஹம்மது காஜா அர்கூனும், ஏனைய சீடர்களும் ஆண்டகை அவர்களை நோக்கி, ''நாங்கள் எங்கள் பிறந்தகம் விட்டு இங்கு வந்து, தங்களின் வாயிலைக் காத்து இது காறும் வாழ்ந்து வந்தோம். அதன் காரணமாக நாங்கள் நற்பேறு பெற்று வந்தோம் என்பதில் ஐயமில்லை. இப்பொழுதோ தாங்கள் எங்களைத் தனியே விட்டுப் பிரியப் போகிறீர்கள்'' என்று கூறினர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''ஒன்றிற்கும் கவலைப் பட வேண்டாம்! உங்களுக்கு உணவளித்துப் பரிபாலித்து வருமாறு, சுல்தான் இப்ராஹீம் ஷர்கீயிடம் கூறிவிட்டுச் செல்கிறேன்'' என்று சொன்னார்கள்.

அதற்கு அவர்கள் அனைவரும் ஒருமித்து, ''எங்களுக்கு அல்லாஹ்வின் ஆதரவே போதுமானதாகும்'' என்று முழங்கினர்.

அது ஆண்டகை அவர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியை நல்க, ''நல்லது. நீங்கள் அனைவரும் இவ்வூரிலேயே வாழ்ந்து வாருங்கள்! அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ் உங்களுக்குப் போதுமானவன்'' என்று கூறினார்கள்.

பின்னர் ஆண்டகை அவர்கள், தம் சீடர்களை நோக்கி, ''ஷாஹ் யாசீன் சுனையிலிருந்து புதுக்குடங்களில் தண்ணீர் எடுத்து வந்து தயாராக வைத்திருங்கள்!'' என்று கூறினார்கள்.

அப்பொழுது சீடர்கள் அவர்களை நோக்கி, ''தங்களை எவர் குளிப்பாட்டி, சுஃபனிடுவது? தங்களின் ''ஜனாஸா'த் தொழுகையை எவர் இமாமாக நின்று நடத்துவது?'' என்று வினவினர். அதற்கு ஆண்டகை அவர்கள், ''ஹிஸாமுத்தீன்'' என்று ஒரே சொல்லில் பதிலிறுத்தார்கள். அது கேட்டு சீடர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

அதற்குக் காரணம், ஹிஸாமுத்தீன் அப்பொழுது ஜவ்ன்பூரில் இருந்ததேயாகும்.

ஜமாதுல் அவ்வல் மாதம், பதினேழாம் இரவு, ஆண்டகை அவர்கள் தம் தியான அறையில் நுழைந்து வணக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது அவர்களின் உயிர் வெண்ணெய்யிலிருந்து உரோமத்தை எடுப்பது போன்று, வெகு எளிதாகப் பிரிந்தது. அப்பொழுது அவர்களுக்கு வயது முந்நூற்றித் தொண்ணூற்றாறு.

அடுத்த நாள் அவர்களைக் குளிப்பாட்டி கஃபனிட்டு நல்லடக்கம் செய்ய ஹிஸாமுத்தீனைக் காணோமே என்று மக்கள் தவித்துக் கொண்டிருந்த பொழுது திடீரென ஹிஸாமுத்தீனும் ஜவ்ன்பூரிலிருந்து வந்து சேர்ந்து விட்டார். அதன் பின் அவர், ஆண்டகை அவர்களின் ஆணைக்கிணங்க, ஆண்டகை அவர்களைக் குளிப்பாட்டி, கஃபனிட்டு, அவர்களின் ஜனாஸாத் தொழுகையைத் தலைமை தாங்கி நல்லடக்கம் செய்தார்.

ஆண்டகை அவர்களின் அடக்கவிடம், இப்பொழுதும் கான்பூரிலிருந்து நாற்பத்தைந்து மைல் தொலைவிலுள்ள மக்கன்பூரில் உள்ளது. அங்கு ஆண்டுதோறும் ஆண்டகை அவர்களின் நினைவு நாள் விழா (உர்ஸ்), ஜமாதுல் அவ்வல் மாதம், பதினேழாம் நாள் இரவு நடந்து வருகிறது.

ஆண்டகை அவர்களின் அடக்கவிடத்தின் மீது அவர்களின் 'முரீது'களில் ஒருவரான சுல்தான் இப்ராஹீம் ஷர்கீ கட்டடம் எழுப்பியுள்ளார்.அதன் மீது உயரமாக மண்டபம் எழுப்புமாறு சுல்தான் ஆணையிட, அதற்கு மாறாகச் சிற்பி சிறிது உயரக் குறைவாக மண்டபம் எழுப்பியுள்ளதைக் கண்டு சுல்தான் சினந்தார். அப்பொழுது சிற்பி, சுல்தானை நோக்கி, ''இங்கே அடங்கப் பெற்றிருக்கும் ஆண்டகை அவர்கள் என் கனவில் தோன்றி, மண்டபத்தை மிகவும் உயரமாகக் கட்ட வேண்டாமென்றும், அது நிதானமான உயரத்துடன் இருந்தால் போதுமென்றும் ஆணையிட்டுச் சென்றார்கள். அவ்விதமே கட்டி முடித்தேன்'' என்று கூறினார்.

அன்றிரவு ஆண்டகை அவர்கள் சுல்தானின் கனவில் தோன்றி, தாமே நிதானமான உயரத்தில் மண்டபம் எழுப்பினால் போதுமென்று சிற்பியிடம் கூறியதாகவும், எனவே சிற்பி மீது வீணே சினமுற வேண்டாமென்றும் கூறி மறைந்தார்கள்.

பின்னர் ஆண்டகை அவர்களின் அடக்கவிடத்தின் பரிபாலனத்திற்காக, முகலாய மன்னர் ஹுமாயூன் சில கிராமங்களை மானியம்

வழங்கினார். அதற்கான காரணத்தை அவரே தம் வரலாற்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''ஹிஜ்ரி 944 ஆம் ஆண்டு, முஹர்ரம் மாதம், முதல் நாள், எனக்கும் ஷேர்கானுக்கும் நடந்தபோரில், ஷேர்கான் வெற்றி பெற்றது ஸிந்தா ஷா மதார் (ரஹ்) அவர்களின் பேரருளினாலும், பேருதவியினாலுமேயாகும். இதற்குச் சில நாட்களுக்கு முன், எங்களின் படையினர் மக்கன்பூரில் புகுந்து அநியாயமாகக் கொள்ளையடிக்கலாயினர். அதன் காரணமாகப் போர் நடந்த அன்று கம்பளி உடையணிந்த ஓரிலட்சம் பக்கீர்கள், கைகளில் மிகப் பெரும் கழிகளுடன் எங்கிருந்தோ வந்து, ஷேர்கானின் படையினருடன் சேர்ந்து எங்களைத் துவம்சம் செய்து விட்டனர். அதன் காரணமாக நாங்கள் தோல்வியுற்றோம். அப்பொழுதே நான் அடுத்த தடவை ஸிந்தா ஷா மதார் (ரஹ்) அவர்களின் பேரருளினால் வெற்றி பெறுவேனாயின் அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்து, அதற்குச் சில கிராமங்களை மானியம் வழங்குவதாக நேர்ச்சை செய்து கொண்டேன். அவ்விதமே நான் வெற்றி பெற்றதும், என்னுடைய நேர்ச்சையை நிறைவேற்றினேன்.''

பிற்காலத்தில் முகலாயப் பேரரசர் அவரங்கஜீப், மக்கன்பூர் வந்து ஆண்டகை அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்தார். அப்பொழுது அவர்களின் அடக்கவிடத்தின் வாயில், எப்பொழுதும் பூட்டப்பட்டிருப்பதை அறிந்து, அதன் பரிபாலகர்களின் அனுமதி பெற்று, மக்கள் அவ் அடக்க இடத்தைத் தரிசிக்க இயலும் வண்ணம், அதன் நான்கு புறங்களிலும் சன்னல்களை அமைத்தார். அந்தச் சன்னல்களின் அருகே நின்று தான் மக்கள் இன்றும், ' பாத்திஹா' ஓதி வருகிறார்கள். ஆண்டகை அவர்களின் அடக்கவிடத்தின் அருகில், பெரிய பள்ளிவாயில் ஒன்றையும் அவ்ரங்கஜீப் நிர்மாணித்தார்.

ஆண்டகை அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிக்கப் பெண்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களின் நினைவு நாள் விழாவின் போது, ஒரு பெண், ஆண் உடை தரித்து அங்கு சென்று ஆண்டகை அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்து வெளியே வந்த பொழுது, அவளின் உடலில் கொப்புளங்கள் கிளம்பி உயிர் நீத்தாள் என்றும், இதனைத் தாம் கண்களால் கண்டதாகவும் 'லஹீருல் ஆஷிகீன்' என்ற நூலில் மௌலானா ஷா லஹீர் அஹ்மது அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஆண்டகை அவர்கள் நிர்யாணமடையும் பொழுது, அவர்களுக்கு 1442 கலீபாக்களும், எண்ணற்ற 'முரீது'களும் இருந்தனர். தம்மிடம் அல்லது தம் கலீபாக்களிடம் 'பைஅத்' பெறுபவர்களுக்குத் தாம் ஏழு

தலை முறை வரை பிணை நிற்பதாயும், உலக முடிவு நாள் வரை தம் 'தரீக்கா' பெருகிக் கொண்டே செல்லுமென்றும், அதில் பெரும் பெரும் மகான்களெல்லாம் தோன்றுவார்களென்றும், ஆண்டகை அவர்கள் கூறிச் சென்றதற்கேற்ப, அவர்களின் 'தரீக்கா' நாள் தோறும் பெருகிக் கொண்டு செல்கிறது. அதில் பல மகான்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

7. முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்)

அந்தலுஸின் (முஸ்லிம் ஸ்பெய்னின்) அழகுத் திருநகரான முர்ஸிய்யாவில் வள்ளல் ஹாத்திம் தாயியின் வழிவழி வந்த, ஷைகு அலீ அரபி என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நீண்ட நாட்களாக மகப்பேறு இல்லாது இருந்தது. மகப் பேறு வேண்டி அவர் நோற்ற நோன்புகளும், செய்த வணக்கங்களும் கொஞ்சமல்ல. ஐம்பது வயதாகியும், அவருக்கு மகப்பேறு இல்லை. ஒரு நாள் அவர் துன்பமே உருவாகத் தம் இல்லத்தில் வீற்றிருக்கும் பொழுது, அங்கு வந்த மஜ்தூப் (இறைக் காதலில் மூழ்கித் தன்னுணர்வற்ற இறைநேசச் செல்வர்) ஒருவர் அவரை நோக்கி, ''ஷைகு அலீ! ஒன்றிற்கும் கவலைப்பட வேண்டாம். நீர் பக்தாது மாநகரம் சென்று அங்கு ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வரும் அப்துல் காதிர் முஹ்யீத்தீனிடம் உம் அவலம் எடுத்துரைப்பின் அவர் ஆவன செய்வார், இறையருளால் உமக்கு மகப்பேறுண்டாகும்'' என்று கூறினார்.

அவர் கூறிய வண்ணமே நீண்ட தொலைவுப் பயணத்தை மேற் கொண்டு, பக்தாது மாநகரம் வந்து சேர்ந்த ஷைகு அலீ, முஹ்யீத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் திருச் சமூகம் நண்ணி, அழாக் குறையாகத் தம் அவலம் எடுத்துரைத்தார். தம் வாழ்வுப் பயணத்தின் இறுதி எல்லைக் கல்லை நெருங்கிக் கொண்டிருந்த அப்பெருந்தகை அவர்கள், தம் முன்வந்து தாள் மடித்து வீற்றிருந்த ஷைகு அலீயை, ஒரு முறைக்கு இருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''உம் விதிப் பலகையில் மகப்பேறு எழுதப்பட்டில்லையே'' என்று கூறினர்.

இச் செய்தி ஷைகு அலீயின் உள்ளத்தில் இடி விழுந்தது போன்றிருந்தது. எனினும் மனம் தளராது ஆண்டகை அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! என் விதியில் மகப்பேறு எழுதப்பட்டில்லையாயின் நான் இவ்வளவு தொலைவு, பயணம் செய்து, தங்களின் திருச்சமூகம் வந்திருக்கமாட்டேனே. என்னவோ என் விதியில் மகப்பேறு இருக்கப் போய்த்தான் நான், தங்களின் திருச்சமூகம் வந்துள்ளேன்'' என்று வினயமாகக் கூறினார்.

அவரின் அறிவார்ந்த இப்பதில், ஆண்டகை அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் அவரைக் கனிவோடு நோக்கி, ''ஷைகு அலீ! கவலைப்படாதீர்கள்! என்னுடைய விதியில் எனக்கு ஒரு குழந்தை என் முகுகந்தண்டில் இன்னும் பாக்கியுள்ளது. அதனை நாம் உமக்குத் தருகிறோம். நீர் என் பின்னே வந்து என் முதுகோடு உம் முதுகை வைத்து உரசுவீராக!'' என்று கூறினர். அவ்விதமே அவரும் செய்தார்.

இதன் பின் ஆண்டகை அவர்கள் அவரைத் தம்முன் அழைத்து, அமரச் செய்து, ''ஷைகு அலீ! உமக்குச் சுப சோபனம் உண்டாவதாக! உமக்கு ஓர் அறிவார்ந்த ஆண் குழந்தை பிறக்கப் போகிறது. அவருக்கு முஹம்மது முஹ்யித்தீன் எனப் பெயரிடுவீராக! அவர் தம் காலத்தில் குத்பாக (குத்புஸ் ஸமானாக) விளங்குவார். அவருடைய புகழ் மணம் அகில உலகமும் பரிணமிக்கும்'' என்று அருள்வாய் மலர்ந்தனர்.

ஆண்டகை அவர்கள் முன்னறிவிப்புச் செய்த வண்ணம், ஷைகு அலீயின் அருமந்த மைந்தராக முர்ஸிய்யாவில், ஹிஜ்ரி 560 -ஆம் ஆண்டு, ரமலான் பிறை 27 அன்று, (கி.பி. 1165 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் நாள்) திங்கள் இரவு, முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் பிறந்தனர். அப்பொழுது முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் நிர்யாணமடைந்து ஐந்து மாதங்கள் ஆகியிருந்தன.

இச்சமயத்தில் முர்ஸிய்யாவை முஹம்மது இப்னு ஸைத் இப்னு மர்தானிஷ் என்னும் சுல்தான் ஆட்சி செய்து வந்தார். அவரின் அமைச்சராகவே இப்னு அரபி (ரஹ்) அவர்களின் தந்தை பணியாற்றி வந்தார் என்று அல் காரீ அல் பகுதாதி கூறுகிறார். அது எவ்வாறிருந்த போதினும், அவர்களின் தந்தை வழி உயரிய சமூகத் தகுதியைப் பெற்றதாகவும், மார்க்கப் பேணுதலுள்ளதாகவும் விளங்கியது.

அவர்களின் தந்தையின் உடன் பிறந்தார் அபூ முஹம்மது அப்துல்லாஹ் இப்னு முஹம்மது இப்னு அல் அரபி, உயரிய ஆன்மீக உச்சத்தை எய்தி நின்றவர் - கதவைத் தாளிட்டுக் கொண்டு, தம் அறையில் இருக்கும் அவர், திடீரென இப்னு அரபி (ரஹ்) அவர்களை நோக்கி, ''வைகறை வந்து விட்டது'' என்று கூறுவார்.

''சிறிய தந்தையே! தாங்களோ அறைக்குள் கதவைத் தாளிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வாறு அது தங்களுக்குத் தெரிய வந்தது?'' என்று இப்னு அரபி (ரஹ்) அவர்கள் வினவுவர்.

அதற்கு அவர், ''மகனே! இறைவன் அர்ஷின் கீழே இருந்து தென்றலை வைகறையில் வீசச் செய்கிறான். அது சுவனத்தில் வீசிப் பின்னர் உலகத்தில் வீசுகிறது. அது வீசுவது, ஒவ்வோர் இறை நம்பிக்கையாளருக்கும் தெரியும்'' என்று அவர் கூறுவார்.

அவர்களின் தாய் வழியும் மாண்புடையதாக விளங்கியது. அவர்களின் தாயின் உடன் பிறந்தார் இருவரும், சிறந்த ஆன்மீக மேதைகளாக விளங்கினர். அவர்களில் ஒருவரின் பெயர் அபூ முஸ்லிம் அல் சுல்வானி ஆவார். நீண்ட நேரம் நின்று தொழுவதால் தம் கால்கள் வலியெடுத்துத் தம்மைத் தொழுகையை விரைவில் முடிக்குமாறு செய்யின், தம் கால்களை அடிப்பதற்காக அவர் கழிகளைப் பகலில் செதுக்கி வைத்துக் கொள்வார். இரவில் தம் கால்கள் இடக்குப் பண்ணின், அவற்றை அக்கழிகள் ஒடியும் வரை அடிப்பார். ''என்னுடைய வாகன மிருகத்தை விட உங்களையே நான் அதிகமாக அடிக்க வேண்டும்'' என்று கூறிக் கொண்டே அடிப்பார்.

மேலும் அவர், ''நபித் தோழர்கள், நபி பெருமானார் (ஸல்) அவர்களைத் தங்களுக்கே முழுக்க முழுக்க உரியவர்களாக்கிக் கொள்ள விரும்புகின்றார்களா, என்ன? இறைவன் மீது ஆணையாகக் கூறு கின்றேன். தங்களுக்குப் பின்னால் வந்தவர்களும், நபி பெருமானார் (ஸல்) அவர்களுடைய நட்புக்கும், தோழமைக்கும் உரியவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள் என்பதை உணரும் வண்ணம், நான் நபி பெருமானார் (ஸல்) அவர்களை மிக மிக நெருங்கிச் செல்வேன்'' என்று அவர் கூறுவார்.

அவரின் இளவல் யஹ்யா இப்னு யுகான் என்பவர், முதலில் தெலம்ஸன் நகரின் அரசராக இருந்தார். ஒரு நாள் அவர், அபூ அப்துல்லாஹ் அல் தூனிஸி என்னும் இறைநேசச் செல்வரைச் சந்தித்த பொழுது, அவர் அவரை நோக்கி, ''நான் இப்பொழுது அணிந்திருக்கும் இந்த விலையுயர்ந்த ஆடைகளோடு தொழுதல் கூடுமா?'' என்று வினவினார். அதற்கு அந்த இறைநேசச் செல்வர் சிரித்துக் கொண்டு, ''நான் உம்முடைய பலவீனமான அறிவையும், உம்மைப் பற்றி நீர் அறியாத் தன்மையையும், உம்முடைய ஆன்மீக சூன்யத்தையும் எண்ணிப் பார்க்கும் பொழுது எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. செத்த பிராணியை மோந்து, மோந்து பார்த்துவிட்டுப் பின்னர் அழுக்கோடு கூடிய அதன் மாமிசத்தைக் கடித்துத் தின்று விட்டு, சிறு நீர் பெய்யும் பொழுது மட்டும் அந்தச் சிறுநீர் தன் உடல் மீது படக் கூடாதென்று கருதித் தன் ஒரு காலைத் தூக்கிக் கொள்ளும் நாய் போன்று தான் நீர் என் கண்களில் தென்படுகிறீர். மார்க்க சட்ட திட்டங்களுக்கு மாறான அத்தனையையும் செய்து, ஏழைகளின் சாபச் சுமையைத் தலையில் சுமந்து கொண்டிருக்கும் நீர், உம்முடைய உடைகளைப் பற்றி என்னிடம் வினவுகிறீர்'' என்று பதிலிறுத்தார்கள். அதுகேட்ட அரசர் நீர் மல்கும் கண்களுடன் தம்முடைய வாகனத்திலிருந்து இறங்கித் தம் அரசப் பதவியைத் துறந்து அந்த இறைநேசச் செல்வரின் தாளில் அமர்ந்து, ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்து நடந்தார்.

இத்தகு நல்லார்கள் பிறந்த குடும்பத்திலே தோன்றிய இப்னு அரபி (ரஹ்) அவர்கள், தம் எட்டு வயது வரை முர்ஸிய்யாவிலேயே வாழ்ந்தனர். இப்பொழுது முர்ஸியா மீது அல்முஹத் அரச பரம்பரையினர் படை எடுத்து இப்னு மர்தானிஷின் ஆட்சியை வீழ்த்தி, அதனைக் கைப் பற்றினர். எனவே அவரின் குடும்பத்தினர் முர்ஸியாவை விட்டு நீங்கி, செவில்லியில் குடியேறினார்கள். செவில்லியின் அரசரான அபூ யஃகூப் யூசுஃப், இப்னு அரபி (ரஹ்) அவர்களின் தந்தையான அலீ மீது தனி அன்பு செலுத்தி, அவருக்கு அரசாங்கத்தில் உயர்பதவி ஒன்றை வழங் கினார்.

முதலில் தம் தந்தையிடமே திருக்குர்ஆனை ஓதிய இப்னு அரபி (ரஹ்) அவர்கள், பின்னர் மாலிக் மத்ஹபின் அடிப்படை சட்டதிட்டங் களையும் தம் தந்தையிடமே பயின்றனர். செவில்லி வந்த பின், திருக்குர் ஆன் விரிவுரையையும், 'அல்காஃபீ'யையும், அபூபக்ர் இப்னு கலாஃபி யிடமும், ஹதீதுக் கலையை முஅல்லிஃப் அபுல் ஹஸன் ஷரீஹிடமும், மாலிக் மத்ஹபின் விரிவான சட்டதிட்டங்களை அபுல் காசிம் ஷர்ராத் திடமும் பயின்றனர். இதன்பின் 'கிதாபுத் தைஸிரி'யை அபூபக்ர் முஹம்மதிடம் பயின்ற அவர்கள், இப்னு ஸர்கூன், அபூ முஹம்மது அப்துல் ஹக் அல் அஸ்தி ஆகிய ஆசிரியர்கள் நடத்திய கல்விக் கூடங்களுக்குச் சென்று, அறிவமுதருந்தினர். அவர்கள் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்குத் தாம் போதித்த கல்வியைப் பிறருக்குப் போதிக்கவும் அனுமதி இதழ் வழங்கிக் கௌரவித்தார்கள்.

இப்னு அரபி (ரஹ்) அவர்களின் அறிவுக் கூர்மையும், அபார நினைவாற்றலும், மாசு மறுவற்ற மாணிக்க நற்குணங்களும், செவில்லி யில் வாழ்ந்து வந்த முதியோர்களையும், அவர்களை மதித்து மரியாதை செய்யுமாறு செய்தது. அவர்கள் இளைஞர் இப்னு அரபி (ரஹ்) அவர்களை ஹதீதுகளுக்கு விளக்கம் பகருமாறு கூறி, அவர்கள் கூறும் விளக்கங்களைத் தாழ்மையுடன் செவி தாழ்த்திக் கேட்டுக் கொண்டி ருந்தார்கள்.

விரைவில் அவர்களின் பேரும் புகழும் நாடெங்கணும் பரவவே, பலர் அவர்களைத் தம் செயலராக ஆக்கிக் கொள்ள விழைந்தனர். அவர்களும் ஒரு சிற்றரசரின் கீழ் வேலைக்கமர்ந்து, சில காலம் செயலாற்றினர். அவ்வாழ்க்கை அவர்களுக்கு ஒத்து வராததால், அவர்கள் அப்பதவியைத் துறந்தனர்.

அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்ற செல்வாக்கு மிகுந்த பெரியாரான முஹம்மது இப்னு அப்தூன் தம் அருமை மகள் மர்யமை அவர்களுக்கு மணமுடித்துத் தர முன் வந்தார். அவர்களும் அதற்கு

இசைந்து, மர்யமின் தளிர்க்கரம் பற்றி இல்லற வாழ்க்கையில் இனிதே புகுந்தனர்.

மர்யம், இப்னு அரபி (ரஹ்) அவர்ளின் இயல்புக்கேற்ற மனைவியாக இருந்தார். அவரைப்பற்றி இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தாம் எழுதிய 'புத்தூ ஹாத்துல் மக்கிய்யா'வில் பின் வருமாறு கூறுகிறார்கள்:

''ஆன்மீக ஞானியாகிய என்னுடைய மனைவி மர்யம், ஒருநாள் என்னை அணுகி, 'நான் உறங்கும் பொழுது, உயிரோடு பார்த்திராத ஒருவரைக் கண்டேன். அவர் என்னை நோக்கி, 'ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்க விரும்புகின்றாயா?'என்று வினவினார். அதற்கு நான் 'ஆம்; ஆனால், அதனை எவ்வாறு எய்தப் பெறுவது என்பதை நான் அறியேன்' என்று பதிலிறுத்தேன். அதற்கு அவர், 'அதனை நம்பிக்கை, உறுதி, பொறுமை, தீர்மானம், உண்மை ஆகிய ஐந்து பண்புகளால் எய்தப் பெறலாம்' என்று கூறினார் எனச் சொன்னார். அதற்கு நான்,'ஆம்; இது தான் ஆன்மீக மேதைகளின் வழிமுறை' என்று கூறினேன்.

''அதன்பின் நான், அவரை நோக்கி 'இத்தகு ஆன்மீக அனுபவத்தை நான் பெறவில்லையே' என்று கூறினேன். அதற்கு என் மனைவி, தாம் இத்தகு அனுபவம் பெற்ற ஒருவரைப் பார்த்திருப்பதாகக் கூறி, அவரின் நிலை பற்றி என்னிடம் எடுத்துரைத்தார். ஆனால் அவர் கூறியதிலிருந்து அம்மனிதர் வலுவாய்ந்த பண்புடையவராக எனக்குத் தெரியவில்லை''.

இளமையிலிருந்தே இப்னு அரபி (ரஹ்) அவர்கள், ஆன்மீக இயல்பு வாய்க்கப் பெற்ற ஆன்மீகவாதிகளுடன் உறவாடுவதில் மகிழ்ச்சி கொள்பவர்களாக இருந்த போதினும் ஹிஜ்ரி 580 ஆம் ஆண்டிலேயே, அதாவது அவர்களுக்கு இருபது வயதாக இருக்கும் பொழுதே, அவர்கள் ஆன்மீகத் துறையில் ஈடுபடலாயினர். அதன் காரணமாக அவர்களுக்குப் பல ஆன்மீக அனுபவங்கள் ஏற்பட்டன. இப்பொழுது அவர்களுக்கும், இப்னு ருஷ்துக்கும் இடையே கார்டோவாவில் வைத்து சந்திப்பும் நிகழ்ந்தது.

மாபெரும் தத்துவ ஞானியும், கிரேக்க அறிஞருமான அரிஸ் டாட்டிலின் நூல்களுக்கு அருமையான விளக்கம் எழுதியவரும் அவரே. மனித இனத்தின் மிகவும் சம்பூரணமான அதிமேதை என்றும், அறிவு மார்க்கத்தை நிறுவியவர் என்றும், இறைவனால் மனித இனத்தின் அறிவு உச்சத்தை எய்தப் படைக்கப்பட்டவரென்றும், ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தவரும் ஆவர் இப்னு ருஷ்த். அவரைச் சந்திக்க இளம் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் சென்ற காட்சியை இதோ அவர்களே வர்ணிக் கிறார்கள்:

''ஒருநாள் நான் கார்டோவாவிலுள்ள அபுல் வலீத் இப்னு ருஷ்தின் இல்லம் சென்றேன். அவர் எனக்கு இறைவன் அளித்த ஆன்மீக அறிவிப்பு களையும், காட்சிகளையும் பற்றிக் கேள்வியுற்று, என்னைக் காண விழைந்துள்ளார். என்னுடைய தந்தையோ, அவரின் நெருங்கிய நண்பர். தம் வேணவாவை அவர் என் தந்தையிடம் கூற, என் தந்தையார் ஓர் அலுவலின் நிமித்தம் என்னை அவரிடம் அனுப்பி வைப்பது போன்று, இச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்துள்ளார். இது எனக்குப் பின்னரே தெரிய வந்தது. அப்பொழுது எனக்குத் தாடி, மீசை கூட ஒழுங்காக முளைக்க வில்லை.

''நான் அவரின் இல்லம் நுழைந்ததும், அவர் எழுந்து வந்து என்னை வரவேற்று, தம் அன்பை என் மீது சொரியும் வண்ணம், என்னை ஆரத்தழுவி அமரச் செய்தார். அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'ஆம்' என்று கூறினார். இது, நான் அவரை விளங்கிக் கொண்டேன் என்று அவர் கருதி, மகிழ்ச்சி பூப்பது போல் இருந்தது. அவரின் மகிழ்ச்சிக்கான காரணம் என்னவென்பதை விளங்கிக் கொண்ட நான் 'இல்லை' என்றேன்.

''அப்பொழுது அவருடைய முகபாவமே மாறிவிட்டது. அது அவர் என்னைப் பற்றிக் கொண்ட கருத்தில் சிறிது ஐயம் கொண்டதை அறிவிப்பது போல் இருந்தது.

''அதன் பின் அவர் என்னை நோக்கி, 'தெய்வீக அறிவிப்புகள் மூலமாகவும், ஆன்மீகக் காட்சிகள் வாயிலாகவும் நீர் என்ன முடிவு களைக் கண்டு பிடித்துள்ளீர்?' என்று வினவினார்.

''ஆம்; இல்லை என்று கூறிய நான் ''இந்த 'ஆம்' என்பதற்கும் 'இல்லை' என்பதற்கும் இடையில், ஆன்மாக்கள் உடலிலிருந்து பிரிந்து பறக்கின்றன. கழுத்துக்கள் உடலிலிருந்து பிரிக்கப்படுகின்றன'' என்று பதிலிறுத்தேன்.

''இதன்பின் அவர், தாம் என்னைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தையும், என் தந்தையார் என் பற்றிக் கொண்டுள்ள கருத்தையும் ஒப்பு நோக்குவதற்காக என் தந்தையாரிடம் என்னைப் பற்றி விசாரித்ததாகவும் அறியலானேன்.

''இப்னு ருஷ்த் ஆராய்ச்சியிலும் தத்துவ விசாரணையிலும் நிபுணர் என்பதில் ஐயமில்லை. அவர் என்னைப் பற்றி ஒருவரிடம் குறிப்பிடும் பொழுது, 'ஒன்றுமே அறியாத நிலையில் ஆன்மீகத் தனிமையில் ஈடுபட்டு, அதிலிருந்து அனுபவங்களை அள்ளிக் கொண்டு வந்த ஒருவரின் காலத்தில் வாழ்ந்து அவரைப் பார்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்ததற்காக, நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். நான்

ஆய்ந்து கண்ட முடிவுகளையே அவர் அனுபவித்து அறிந்துள்ளார். இத்தகு ஆன்மீக அனுபவங்களைப் பெற்று, இறைவனுடைய கதவுகளைத் திறந்த ஒருவர் வாழ்ந்த காலத்தில், என்னையும் வாழச் செய்த இறைவனுக்கே எல்லாப் புகழும்! அவரை என் கண்களால் காணும் பேற்றினை எனக்கு வழங்கிய இறைவனுக்கே எல்லாப் புகழ்ச்சியும்!!' என்று அவர் கூறியதாகப் பின்னர் அறியலானேன்.

''மற்றொருமுறை நான் அவரைச் சந்திக்க விரும்பினேன். அவர் தன்னுணர்வற்ற நிலையில் இருந்தபொழுது, அவரைச் சந்திக்கும் வாய்ப்பினை இறைவன் எனக்கு அளித்தான். அப்பொழுது, எனக்கும் அவருக்கும் இடையில் ஒளியாலான திரை குறுக்கிட்டது. அத்திரை யினூடே நான் அவரைப் பார்த்தேன். ஆனால் அவரோ, நான் அங்கு வந்ததை அறியவுமில்லை; என்னைப் பார்க்கவும் இல்லை. அவர் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். அப்பொழுது நான், 'அவரின் தியானம், நான் எங்கு சென்றுள்ளேனோ, அங்கு அவரை அழைத்துச் செல்லாது' என்று எனக்குள்ளே கூறிக் கொண்டேன். இதன்பின் நான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறவில்லை.''

மேலும் அவர்கள் கூறுகிறார்கள்: ''நான் இளமையில் சந்தித்த ஆன்மீக ஞானி அபூ யஃகூப் ஷைகு அல்வமியாவார். அவர் மாபெரும் இறைநேசச் செல்வர் அபூ மத்யன் (ரஹ்) அவர்களின் தோழராக இருந்தார். அவரைப் பற்றி அபூமத்யன் (ரஹ்) அவர்கள் குறிப்பிடும் பொழுது, 'அவர் கப்பலுக்கு நங்கூரம் போன்றவர்' என்று புகழ்ந்து கூறியிருந்தார்கள். ஃபெஸ்ஸின் ஆளுநர் பதவி அவருக்கு வழங்கப்பட்ட பொழுது, அவர் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ஏழைகளைக் கண்டால், அவருடைய முகம் மகிழ்ச்சியால் மலரும். ஓர் ஏழையை அவர் தம் மடிமீது தூக்கிவைத்திருந்ததை நான் கண்ணால் கண்டுள்ளேன். தம்மைப் பின்பற்றியவர்களுக்கு அவர் பணியாளன் போன்று ஊழியம் புரிந்து வந்தார்.

''ஒரு நாள் நான் அவரைக் கனவில் கண்டேன். அப்பொழுது அவரின் நெஞ்சு பிளந்தது போன்றிருந்தது. அதிலிருந்து கதிரவனின் ஒளிபோன்ற ஒளி வெளிவந்து கொண்டிருந்தது. அவர் என்னைத் தன்னருகே அழைத்தார். நான் கையில் சில வெள்ளைப் பாத்திரங்களுடன் அவரை அணுகினேன். அவற்றில் அவர் விளிம்புவரை பாலை நிரப்பினார். அவர் அவற்றை நிரப்ப, நிரப்ப நான் அப்பாலை அருந்தினேன். அவரிடமிருந்து நான் அடைந்த இந்த ஆன்மீகப் பேரருள் அற்புதமானதாகும்.

''பின்னர் நான் அவரை முதன் முதலாகச் சந்தித்த பொழுது, ஒருவர் தொழுது கொண்டிருக்கும் பொழுது, அவர்முன் செல்லாது நாற்பது

ஆண்டுகள் காத்திருப்பது நன்று' என்ற ஹதீதைக் கூறி, அதற்கான விளக்கத்தைக் கேட்டார். அதற்கு நான் சரியான விளக்கம் கூறினேன். அதுகேட்டு அவர் மகிழ்ந்தார்.

''அவரின் முன் நான் அமர்ந்திருக்கும் பொழுது என் உடலெல்லாம் நடுங்கும். இதைக் கவனித்த அவர், என் திடுக்கத்தை நீக்க, என்னுடன் அன்போடு உரையாடுவார். அது என்னுடைய திடுக்கத்தை குறைப்பதற்குப் பதிலாக அதிகப்படுத்தி விடும்.

''அவர் என்மீது அதிக அன்பு வைத்திருந்தார். அதனை அவர் வெளியே காட்டிக் கொள்வதில்லை. என்னைப் பிறர் மத்தியில் வைத்துக் குறை கூறுவார். இதன் காரணமாக, மற்றவர்கள் என்னுடைய ஆன்மீக அபிவிருத்தியைப் பற்றிச் சிறிதாகக் கருதலாயினர். எனினும், நான்தான் ஏனையவர்களை விடக் கல்வியில் சிறந்து விளங்கினேன். இதனைப் பிற்காலத்தில் அவரே ஒப்புக் கொண்டார்.

''ஒரு நாள் என்னையும் மற்றொரு மாணவரையும் தம்முடன் செவில்லிக்கு மூன்று மைல் தொலைவிலுள்ள மலைக்கு வருமாறு கூறினார். அவ்விதமே நாங்கள் சென்றோம். அங்கிருந்து திரும்பி வரும் பொழுது, அவர் குதிரை மீதமர்ந்த வண்ணமே அபூமத்யன் (ரஹ்) அவர்களின் நற்பண்புகளையும், அவர்கள் ஆற்றிவரும் அற்புதங்களையும், விரிவாக எடுத்துரைத்துக் கொண்டு வந்தார். நான் அவற்றை கவனமாகக் கேட்டுக் கொண்டே வந்தேன். திடீரென அவர் தம் குதிரையை வேகமாகச் செலுத்தினார். நானும் அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டே, அவர் பின்னே ஓடினேன். ஓரிடத்தில் அவர் குதிரையை நிறுத்தி, 'திரும்பிப்பார்!' என்று கூறினார். திரும்பிப்பார்த்தேன். வந்த வழியோ முட்புதர்கள் அடர்ந்ததாக இருந்தது. அப்பொழுது அவர், 'உன் கால்களையும் உடைகளையும் பார்!' என்று கூறினார். பார்த்தேன். அவற்றில் அணுவத்தையும் முள் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'நாம் அபூ மத்யன் (ரஹ்) அவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தோமல்லவா? அதனால் ஏற்பட்ட பாக்கியம் இது. நீயும் ஆன்மீக வழியில் அடியெடுத்து வைத்து நடந்தால், நிச்சயமாக சாயுச்சிய பதவியை எய்தப் பெறுவாய்'' என்று கூறினார்.

''மற்றொரு நாள் நான் மாலைத் தொழுகை தொழுதபின், அவருடன் அமர்ந்திருந்தேன். அவர் அபூ மத்யன்(ரஹ்) அவர்களின் மாண்பினைப் பற்றி எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது வெளியே நான் ஆற்றவேண்டிய நான்கு அலுவல்கள் இருந்ததனால் எழுந்து போக விரும்பினேன். என் நிலையை உணர்ந்து கொண்ட அவர், என் அமைதி

யின்மைக்கான காரணத்தை வினவினார். நான் கூறினேன். அதற்கு அவர், 'நீ இப்பொழுது சென்றால், அந்த நான்கு அலுவல்களில் ஒன்றேனும் நடக்காது. இங்கு அமைதியாக அமர்ந்து நான் கூறுவதைக் கேட்டுக் கொண்டிரு! உன் அலுவல்கள் நான்கும் நன்கு நிறைவேற நான் உத்திர வாதமளிக்கிறேன்' என்று கூறினார். அவ்விதமே நான் செய்தேன். பொழுதடைவதற்குச் சற்றுமுன், அவர் என்னை நோக்கி, ' நீ இப்பொழுது உன் இல்லம் செல்லலாம். நீ மஃரிப் தொழுவதற்கு முன்னாலேயே அவை நிறைவேறியிருப்பதைக் காண்பாய்'' என்று கூறினார். உண்மையில் அவ்விதமே நிகழ்ந்திருந்தது.

''எனக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால், நான் அவரை நினைத்துக் கொள்வேன். உடனே அவர் என்முன் இருப்பது போன்றும், நான் என் பிரச்சினையை அவரிடம் கூறுவது போன்றும், அவர் பதில் கூறுவது போன்றும் தோன்றும். இவ்வாறு, இரவிலும் பகலிலும் நிகழ்வ துண்டு. நான் இதனை அவரிடம் கூறியுள்ளேன்.

''நான் செவில்லியில் இருக்கும் பொழுது, அடக்கவிடங்களில் என்னுடைய பெரும்பாலான நேரத்தைக் கழித்து வந்தேன். இதனை அறிந்த அவர், 'இப்பொழுதெல்லாம் இப்னு அரபி உயிரோடுள்ள வர்களுடன் உறவாடுவதில்லை; இறந்தவர்களுடன் தாம் உரையாடிக் கொண்டுள்ளார்'' என்று கூறியதாகக் கேள்வியுற்றேன்.

''ஒருநாள் நான் அடக்கவிடத்தில் அமர்ந்திருக்கும் பொழுது, நான் எவருடன் உறவாடுகின்றேன் என்பதை அவர் நேரில் காண்பதற்காக, அவரை அழைத்துவர ஆள் அனுப்பினேன். அவரும் வந்தார். அப் பொழுது நான் அடக்கவிடத்தில் தலை குனிந்து அமர்ந்து ஆன்மாக் களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவர் என் அருகில் வந்து அமர்ந்தார். நான் அவரைப் பார்த்தேன். அவருடைய நிறமே மாறி விட்டது. அவரின் தலைமீது இறங்கிய பாரத்தின் காரணமாக அவரால் தம் தலையை உயர்த்த இயலவில்லை. நான் அவரைப் பார்த்து முறுவலித்தேன். அவர் நுகர்ந்து கொண்டிருந்த துன்பத்தின் காரணமாக, அவரால் முறுவலிக்க இயலவில்லை. நான் ஆன்மாக்களுடன் மேற் கொண்ட உரையாடலை முடித்ததும், அவருக்கேற்பட்ட வேதனையான அனுபவமும் ஒரு முடிவுக்கு வந்தது. இதன்பின் அவர் என்னுடைய புருவமத்தியில் முத்தமிட்டார். அப்பொழுது நான் அவரை நோக்கி, 'இறந்தவர்களுடன் உரையாடியவர் தாங்களா? நானா?' என்று வினவினேன்.

''நான் ஆன்மீகத் துறையில் அடியெடுத்து வைத்த புதிதில், செவில்லிக்கு அபூ ஜஃபர் அல் யுர்யானீ என்ற இறைநேசச் செல்வர்

வந்தார். நான் அவரைக் காணச் சென்றேன். நான் சென்ற காரணத்தை, அவர் விளங்கிக் கொண்டு, 'இறைவழியில் செல்ல நீர் தீர்மானித்து விட்டீரா?' என்று வினவினார். அதற்கு நான், 'அடியான் தீர்மானிக்கலாம். ஆனால் இறைவனல்லவோ அதனை நிறைவேற்றித் தரவேண்டும்' என்று வினயமாகப் பதிலிறுத்தேன். அதற்கு அவர், 'நீர் உலகத் தொடர்பு அனைத்தையும் விட்டொழித்து, இறைவன் ஒருவனையே உம்முடைய உற்ற நண்பனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்! இடைத் தரகரின் உதவியின்றி நீரே இறைவனுடன் நேரடியாக உரையாடலாம்' என்று கூறினார்.

''அவர் எப்பொழுதும் 'உளூ'வுடன், 'கிப்லா'வை முன்னோக்கியே அமர்ந்திருப்பார். எப்பொழுது பார்த்தாலும் அவர், இறைவனின் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டே இருப்பார். அவர் உறங்கும் பொழுது கூட, அவருடைய நா இறைவனின் திருப்பெயரை உச்சரித்து உசும்பிக் கொண்டிருப்பதை நான் பார்த்துள்ளேன்.

''ஒரு நாள் ஒருவன் அவரைக் கொல்ல நாடிக் கத்தியுடன் பாய்ந்த பொழுது, அவர் தம் தலையைக் குனிந்து கொடுத்தார். அவருடைய தோழர்கள், அவனைப் பிடிக்க முயன்ற பொழுது, 'வேண்டாம்! அவன் விரும்பியதைச் செய்து கொள்ளட்டும், விட்டு விடுங்கள்!' என்று கூறினார். அவன் அவரைக் குத்த, கத்தியை ஓங்கிய பொழுது, அதனை அவனுடைய கைப்பக்கம் வளையுமாறு இறைவன் செய்து விட்டான். அதுகண்டு பயந்து, அவன் அவரின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

''அவருக்கும் எனக்கும் இடையே, ஒருவரின் ஆன்மீக நிலையைப் பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அவருடன் வாதித்து விட்டு நான் வெளியே வந்தபொழுது முதன்முதலாக கிள்ரு (அலை) அவர்களைக் கண்டேன். ஷைகுல் உர்யானீ கூறியது தான் சரி என்றும் நான் கூறியது தவறு என்றும் அவர்கள் என்னிடம் எடுத்துரைத்தார்கள். அப்பொழுது நான் ஆன்மீகப் பாதையில் பரிபக்குவப்படவில்லை.

''நான் பழகிய ஆன்மீக மேதைகளில், இரண்டு பெண்மணிகளும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் பெயர் ஷம்ஸ். மற்றொருவரின் பெயர் பாத்திமா.

''ஏழைகளின் அன்னை என்று அழைக்கப்பட்ட ஷம்ஸின் இயற்பெயர் யஸ்மீனா என்பதாகும். அவர் மர்ச்சேனா என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார். தம் ஆன்மாவின் மீது அவர் போன்று ஆதிக்கம் செலுத்தியவரை நான் கண்டறியேன். எண்பது வயது மூதாட்டியாகிய அவர், என்

மீது அதிக அன்பு செலுத்தினார். என்னுடைய ஆன்மீக நிலையையும் அவர் நன்கு அறிவார். எனவே அவர் தம் ஆன்மீக இரகசியங்களை என்னிடம் எடுத்துரைப்பார். அது கேட்டு நான் மகிழ்வேன்.

''அவரை நான் அடிக்கடி சந்தித்து அளவளாவி வந்தேன். ஒரு நாள் நானும் அல் மவ்ரூரியும், அவரைச் சந்திக்கச் சென்றோம். அவருடன் நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அவர் மறுபக்கல் திரும்பி, 'அலி! கைக்குட்டையை எடுத்துக் கொண்டு திரும்பி வா!' என்று உரத்துக் கத்தினார். அப்பொழுது நான் அதற்கான காரணத்தை அவரிடம் வினவினேன். அதற்கு அவர் 'அலீ ஒரு தண்ணீர்த் தேக்கத்தின் அருகில் அமர்ந்திருந்து விட்டுக் கிளம்பும் பொழுது தம்முடைய கைக்குட்டையை மறந்து வைத்து விட்டுப் புறப்பட்டு விட்டார். நான் அதனை அவருக்கு நினைவுறுத்தினேன். அவர் திரும்பிச் சென்று, அதனை எடுத்துக் கொண்டு வந்துகொண்டிருக்கிறார்' என்று கூறினார்.

''ஒரு மணி நேரத்திற்குப் பின் அலீ வந்து சேர்ந்தார். வழியில் என்ன நிகழ்ந்தது என்று நாங்கள் அவரிடம் வினவினோம். 'ஒரு நீர்த் தேக்கத்தின் அருகில் என் கைக்குட்டையை மறந்து வைத்துப் புறப்பட்டு விட்டேன். அப்பொழுது அதனை நினைவுபடுத்தி, ஷம்ஸின் குரல் கேட்டது. திரும்பிச் சென்று, அதனை எடுத்துக் கொண்டு திரும்பினேன்' என்று அவர் கூறினார்.

''செவில்லியில் வாழ்ந்து வந்த பாத்திமா என்ற மூதாட்டியை நான் சந்தித்த பொழுது, அவருக்குத் தொண்ணூற்று ஐந்து வயதுக்கு மேலிருக்கும். அவர் தம் கையில் சிறு பறையை வைத்து முழக்குவதில் மகிழ்ச்சியடைவார். நான் அவரிடம் அதற்கான காரணத்தை வினவிய பொழுது, 'என் மீது தன் அருட்பார்வையைத் திருப்பி என்னைத் தன்னுடைய நேசர்களில் ஒருவராக ஆக்கி, என்னைத் தனக்காகவே பயன்படுத்தி வரும் அல்லாஹ்வை நினைத்து மகிழ்வுறுகிறேன். அவன் என்மீது பெரிதும் பொறாமையுள்ளவனாக இருக்கிறான். அவனை மறந்துவிட்டு, வேறொன்றின் மீது நான் கவனத்தைச் செலுத்தின், அவன் எனக்குத் துன்பத்தைத் தருகிறான்'' என்று கூறினார்.

''அவர் என்னை நோக்கி, 'நான் தான் உன்னுடைய ஆன்மீக அன்னை. உன்னை ஈன்ற அன்னையின் ஒளி நானேயாவேன்' என்று கூறுவார்.

''என் அன்னை அவரைக் காண வரும் பொழுது, அவர் என்னை அவரிடம் சுட்டிக் காட்டி, 'இவர் என்னுடைய மகன். உன்னுடைய தந்தை. ஆதலின் இவரை, வெறுக்காது மரியாதையுடன் நடத்து!' என்று கூறுவார்.

''அவர் கிழவியாக இருந்த போதினும், சிறிதளவு உணவே உண்ட போதினும் நான் அவருடன் அமர்ந்திருக்கும் பொழுது, அவரின் முகத்தைப் பார்ப்பதற்கே எனக்கு நாணமாக இருக்கும். அது ரோஜா நிறமாகவும், மென்மையாகவும் இருந்தது.

''துவக்கத்தில் அவர் தரியில் நூல் நூற்று, உயிர் வாழ்ந்து வந்தார். பின்னர் கையால் நூல் நூற்கத் தொடங்கினார். அவ்விதம் அவர் செய்யத் தொடங்கிய அக்கணமே, அவரின் விரலை இறைவன் முடமாக்கி விட்டான். அதிலிருந்து தெருவிலே வீசி எறியப்படும் உணவுப் பொருள்களைப் பொறுக்கி எடுத்து உண்டு வந்தார்.

''அவர் தம் தந்தையின் இல்லத்தில் வாழ்ந்து வரும் இளம்பருவத் திலேயே, ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்து நடக்கலானார். அவரின் பெற்றோர்கள் அவரை நல்லவர் ஒருவருக்கு மணமுடித்து வைத்தார்கள். அவரின் கணவருக்கு இறைவன் தொழுநோயைக் கொடுத்தான். எனினும் அவருக்கு ஊழியம் செய்து இருபத்து நான்கு ஆண்டுகாலம், அவரோடு மகிழ்ச்சியுடன் இல்வாழ்க்கை நடத்தி வந்தார். அதன்பின் அவரின் கணவர் இறந்து விட்டார்.

''அவர் உண்பதற்கு ஏதாவது உணவுப் பொருள் தெருவில் கிடைக்காவிடின், இறைவன் தன்னுடைய நபிமார்களையும் வலிமார்களையும் சோதிப்பது போன்று, தம்மையும் சோதித்துத் தன் அருண்மாரியைத் தம் மீது சொரிவதற்காக அவர், அவனுக்கு நன்றி செலுத்துவார். அப்பொழுது அவருடைய நா, 'இறைவனே! நீ உன்னுடைய அருள் நேசர்களை நடத்துவது போன்று, என்னையும் நடத்துவதற்காக நான் உனக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்' என்று கூறிக் கொண்டிருக்கும்.

''அவர் வாழ்ந்து, வணக்கம் செய்வதற்காக, நானும் இரு நண்பர்களும் சேர்ந்து ஈச்சந்தட்டியினால், அவருக்குச் சிறு குடில் ஒன்று எழுப்பிக் கொடுத்தோம். அதில் அவர் குடி புகுந்த இரவிலேயே அவரின் விளக்கில் எண்ணெயில்லாது போய்விட்டது. இதற்கு முன் இவ்வாறு எப்பொழுதுமே நிகழ்ந்ததில்லை. அவர் என்னிடம் சிறிது எண்ணெய் கேட்பதற்காகக் கதவைத் திறந்த பொழுது, வாசலில் இருந்த தண்ணீர்த் தொட்டியில் கையை விட்டு, எண்ணெய் என எண்ணி அள்ளி விளக்கில் விட்டார். விளக்கு எரியலாயிற்று. பின்னர் விளக்கு வெளிச்சத்தில் வெளியே வந்து பார்க்கும் பொழுது, அங்கு எண்ணெய்யின் அடை யாளமே இல்லை. அந்த எண்ணெய் இறைவன் தமக்களித்த அருட் கொடை என்று அவர் எண்ணிக் கொண்டார்.

''முஸ்லிம் ஜின்கள் சில, அவருடன் இருப்பதற்கு அவரின் அனுமதியை வேண்டின. ஆனால் அவரோ, அனுமதி மறுத்து, அவற்றை மறைந்திருக்குமாறு பணித்தார்.

''எனக்கு இறைவன் அளித்த திருக்குர்ஆன் அத்தியாயம், 'சூரா ஃபாத்திஹா' வாகும். நான் விரும்பும் எப்பொருள் மீதும் நான் அதன் ஆற்றலைப் பிரயோகிப்பேன்' என்று அவர் ஒரு தடவை என்னிடம் கூறினார்.

''ஒருநாள் நான் அவருடன் இருக்கும் பொழுது ஒரு பெண் அவரிடம் வந்து செவில்லியிருந்து இரண்டு நாள் தொலைவிலுள்ள சிடோனியாவுக்குச் சென்ற தன் கணவன், அங்கு ஒரு பெண்ணை மணமுடித்துக் கொள்ளப் போவதாகத் தான் கேள்வியுற்றதாகவும், அதனைத் தன்னால் தாங்க இயலவில்லை என்றும், கண்ணீருடன் கூறினாள். அப்பொழுது நான் பாத்திமாவை நோக்கி, அவளுக்காகப் பரிந்துரைத்து, இவைனிடம் இறைஞ்சுமாறு வேண்டினேன். அதற்கு அவர், 'நான் இதற்காக இறைவனிடம் இறைஞ்சமாட்டேன். எனினும் சூரா ஃபாத்திஹாவை அனுப்பி, அவரை இங்கு அழைத்து வரச் செய்கிறேன்' என்று கூறினார்.

''நல்லது; அவ்விதமே செய்யுங்கள்!' என்று கூறிய நான், 'பிஸ்மில் லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்று ஓதினேன். உடனே அவர் சூரா ஃபாத்திஹாவை ஓதி முடித்தார். அதன்பின் அவர், 'சூரா பாத்திஹாவே! நீ சிடோனியா சென்று, இவளின் கணவனைத் தேடிக் கண்டு பிடித்து, இங்கே இழுத்து வா! ஒரு நிமிடமும் தாமதிக்காதே!' என்று கூறினார்.

''இது நடந்த மூன்றாம் நாள், அப்பெண் பாத்திமாவிடம் வந்து, 'தன் கணவர் இல்லம் திரும்பி விட்டார் என்று கூறித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். அப்பொழுது நான் அவளை நோக்கி, 'உன் கணவரை இங்கு அழைத்து வா!' என்று கூறினேன். அவர் வந்ததும், 'நீர் சிடோனியாவில் மணமுடித்துக் கொள்வதாகக் கேள்வியுற்றோமே. திடீரென இங்கு திரும்பி வந்துவிட்டீரே, காரணம் என்ன?'' என்று வினவினோம்.

''அதற்கு அவர், 'ஒரு பிற்பகலில் மணமுடிக்க அரசாங்கப் பதிவுத் துறை அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனத்தில் ஏதோ உறுத்தியது. என் மூளையே குழம்பியது. ஆற்றொணாத் துக்கத்தின் வாய்ப்பட்டேன். உடனே அவ்விடத்தை விட்டகன்று, பொழுது படும் நேரத்தில் ட்ரியானா வந்து சேர்ந்தேன். செவில்லி செல்லும் படகு, படகுத் துறையில் புறப்படத் தயாராக நின்றது. அதில் ஏறிக் கொண்டேன். அடுத்தநாள் முழுவதும் பிரயாணம் செய்து இன்று காலை இங்கு வந்து சேர்ந்தேன். என்னுடைய பெட்டி, படுக்கையெல்லாம்,

சிடோனியாவிலேயே கிடக்கின்றன. ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என்று எனக்கே விளங்கவில்லை' என்று கூறினார்.

''ஒரு பெருநாள் இரவு பள்ளிவாயிலில் வைத்து, முஅத்தின் அவரைச் சவுக்கால் அடித்துவிட்டார். முஅத்தினை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, சினத்தோடு அவர் வெளியேறினார். வைகறையில் அந்த முஅத்தின் 'பாங்கு' சொல்வதைச் செவியுற்றதும், 'இறைவனே! உன் திருப்பெயரை உச்சரித்து மக்களெல்லாம் உறங்கும் பொழுது, அவர்களைத் தொழ அழைக்கும் அவர் மீது நான் சினமுற்றதற்காக, என்னையும் குறை கூறாதே! அவரையும் தண்டித்து விடாதே!' என்று இறைஞ்சினார்.

''பெரு நாள் தொழுகை தொழுத பின், மார்க்க விற்பன்னர்களெல்லாம் சுல்தானை, அவரின் அரண்மனையில் சந்தித்துத் தம் மரியாதையைச் செலுத்திப் பரிசில் பெறச் சென்ற பொழுது, அந்த முஅத்தினும், அவர்களோடு சேர்ந்து சுல்தான் முன்னிலையில் போய் அமர்ந்தார். இதனைக் கண்ணுற்ற சுல்தான் கடும் சினம் கொண்டு, அவரைத் தண்டிக்க முற்பட்ட பொழுது, ஒருவர் அவருக்காக சுல்தானிடம் பரிந்துரை செய்ததன் பேரில் அவர் தண்டிக்கப்படாது வெளியே விரட்டியடிக்கப்பட்டார். இச்செய்தி அம்மூதாட்டிக்குத் தெரியவந்ததும், 'நான் அவருக்காக இறைவனிடம் இறைஞ்சி இராவிடின், அவர் சிரச்சேதம் செய்யப்பட்டிருப்பார்' என்று கூறினார்.

''அவர் என்னைப் பற்றிக் கூறும் பொழுது, 'என்னைக் காண வருபவர்களிலெல்லாம் நான் அதிகமாக விரும்புவது இப்னு அரபியைத் தான்' என்று கூறுவார்.

''அதற்கான காரணம் யாது என்று ஒருவர் அவரிடம் வினவிய பொழுது, 'நீங்களெல்லாம் என்னைப் பார்க்க வரும்பொழுது, உங்களின் ஒரு பகுதியை வேறு அலுவல்களில் செலுத்திவிட்டு, மற்றொரு பகுதி யுடன் தான் வருகிறீர்கள். ஆனால் இப்னு அரபி அப்படியல்ல. தம்முடைய முழுமையையும் இங்குக் கொண்டு வருகிறார். எழுந்தாலும், அமர்ந்தாலும் அப்படியே. இங்கு சிறிதும், அங்கு சிறிதுமாக, அவர் இருப்பதில்லை. ஆன்மீக வழியில் அடியெடுத்து வைப்பவர்கள் இவ்வாறு தான் இருக்க வேண்டும்' என்று பதிலிறுத்தார்.

''இறைவன் அம்மூதாட்டிக்குத் தன்னுடைய அரசாங்கத்தையே கொடுத்த போதினும், அதனை அவர் ஏற்றுக் கொள்ளாது, 'நீ தான் எனக்கு வேண்டும். வேறொன்றும் எனக்கு வேண்டாம்' என்று கூறி விட்டார்.

''நான் செவில்லியில் இருந்த பொழுது, சந்தித்த மற்றொரு இறை நேசச் செல்வி ஜைனப் அல் கல் இய்யா ஆவார். பேரழகும் பெருந்திருவும்

வாய்க்கப் பெற்ற அவர், உலகைத் துறந்து ஆன்மீக வழியில் அடியெடுத்து வைத்து நடந்து, மிகவும் உயர்ந்த படித்தரத்தை எய்தப் பெற்றார். அவரை நான் மக்காவிலும் சந்தித்துள்ளேன். மக்காவிலிருந்து பைத்துல் முகத் தஸுக்குச் சென்ற குழுவில், அவரும் எங்களுடன் வந்தார். அணுவத் தனையும் நேரம் தவறாது தொழுவதில் அவர் போன்று ஒருவரை நான் கண்டறியேன். அவர் இறைத்தியானத்தில் ஈடுபடும் பொழுது விண் ணிலே அந்தரமாகக் கிளம்பி விடுவார். பின்னர் தியானம் முடிந்தபின் தான் கீழே வருவார்.

''சுல்தான் காஸிம் அல் தௌலாவின் அடிமைப்பெண்ணாகிய இறைநேசச் செல்வி ஒருவரையும் நான் அறிவேன். வெகு தொலை யையும், அவர் மிகவும் விரைவில் கடந்து விடுவார். அடிக்கடி அவர், இரவும், பகலும் சேர்த்து, நோன்பு நோற்ற போதினும், அவருடைய உடல் வலுவுடன் இருந்தது. அவர் பிரயாணத்திலிருக்கும் பொழுது, மலை களுடனும், மரங்களுடனும் உரையாடிக் கொண்டே செல்வார்.

''மர்ச்சேனாவைச் சேர்ந்த அப்துல் மஜீத் பின் ஸல்மா என்னும் இறைநேசச் செல்வரையும் நான் அறிவேன். அவர் மூதாட்டி ஷம்ஸுக்குப் பெரிதும் ஊழியம் செய்து வந்தார்.ஓரிரவு அவர் தம் தொழுகை விரிப்பில் அமர்ந்து இறைவனைத் தியானித்துக் கொண்டிருக்கும் பொழுது, கதவு பூட்டப்பட்டிருந்த போதினும், எவரோ ஒருவர் தம் இல்லம் நுழைந்தது போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. உடனே அவரை நோக்கி, அவர் ஓடினார். உடனே, வந்தவர் அவரை நோக்கி, 'இறை அண்மையைப் பெற்றுள்ள ஒருவரை நீர் பயமுறுத்த முயலாதீர்! அவரின் அமைதியைக் குலைக்கவும் உம்மால் இயலாது' என்று கூறினார். அப்பொழுது அவரை எவரென விளங்கிக் கொண்ட அப்துல் மஜீத், 'அப்தால்கள் என்போர், எதன் காரணமாக அப்பதவியை எய்தப் பெறுகிறார்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர், 'அபூத்தாலிப் அல்மக்கீ தம்முடைய 'கூத்துல் குலூப்' என்ற நூலில் குறிப்பிட்ட பசித்திருத்தல், விழித்திருத்தல், வாய்மூடி இருத்தல், தனித்திருத்தல் ஆகிய நான்கு பண்புகளால் அவற்றை எய்தப் பெறுகிறார்கள் என்று கூறினார். இவ்வாறு கூறிவிட்டு அவர், அப்துல் மஜீதின் கையைப் பிடித்துக் கொண்டு, இறைவனைத் துதித்த வண்ணம், அவ் இரவிற்குள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றார். வைகறையில் மெய்வெள்ளை தோன்றும் நேரத்தில், அவர் அப்துல் மஜீதை, அவரின் இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்து விட்டுச் சென்றுவிட்டார். சில பொழுது அவர் இரவு நேரத்தில், அப்துல் மஜீதைக் காண வருவார். அப்தால்களில் ஒருவரான அவரின் பெயர் முஆத் இப்னு அஷ்ராஸ் என்பதாகும்.

''அபூ மத்யன் (ரஹ்) அவர்களுக்குப் பதினெட்டு ஆண்டுகள் ஊழியம் புரிந்து வாழ்ந்து வந்த அபூ அஹ்மது அல் ஸலவீ என்பவர் செவில்லிக்கு வந்த பொழுது, நான் அவருடன் தொடர்பு கொண்டேன். ஒரு மாத காலம் வரையில் அவருடன் நான் இரவில் இப்னு ஜர்ராதின் பள்ளியில் தங்கியிருந்தேன். ஓரிரவு நான் 'உளூ'ச் செய்து தொழுவ தற்காகப் பள்ளியின் மேல் தளத்திற்குச் சென்ற பொழுது, அங்கு அவர் உறங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது பேரொளி ஒன்று விண்ணி லிருந்து இறங்கி, அவர் மீது படிந்திருப்பதைக் கண்டேன். சற்று நேரம் அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன். அந்த ஒளி அவரிலிருந்து விண் ணுக்குச் சென்றதா? விண்ணிலிருந்து அவர் மீது வந்து படிந்ததா? என்று என்னால் திடமாகக் கூற இயலவில்லை. நான் வியப்புக் கண்களுடன் அவரையே பார்த்துக் கொண்டு நின்ற பொழுது, அவர் திடீரென எழுந்து 'உளூ' ச் செய்து தொழலானார்.

''அவர் அழும் பொழுது அவரின் கண்களிலிருந்து தரையில் விழும் கண்ணீரை எடுத்து, நான் என் முகத்தில் தடவிக் கொள்வேன். அது கஸ்தூரி மணம் கமழும். என் அருகே வரும் மக்களும், 'என்ன! உம் உடலிலிருந்து அற்புதமான கஸ்தூரி மணம் வருகிறதே. எங்கு அதனை வாங்கினீர்?'' என்று வினவுவர்.

''செவில்லியில் வாழ்ந்து வந்த அபூ அப்துல்லாஹ் இப்னு ஜைனுல் யபரீ என்பவரையும் நான் அறிவேன். ஆனால், அவரைப் பெரும்பாலோர் அறியமாட்டார்கள். அவர் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் நூல்களை விரும்பிப் படித்து வந்தார். ஓரிரவு அவர், கஸ்ஸாலி (ரஹ்) அவர்களைக் கடுமையாகத் தாக்கி அபுல் காசிம் இப்னு அல் ஹம்தீன் எழுதிய நூலைப் படித்துக் கொண்டிருந்த பொழுது, திடீரென அவருடைய கண்கள் குருடாயின. உடனே அவர் சுஜூதில் விழுந்து தாம் இனிமேல் இத்தகு நூல்களைப் படிப்பதில்லை என்று இறைவனிடம் ஆணையிட்டு அழுது கெஞ்சி, இறைஞ்சிய பொழுது மீண்டும் அவருக்குக் கண்பார்வை ஏற்பட்டது. அவர் போன்றே அவருடைய இளவலும் இருந்தார். அவர் இறந்த பொழுது, 'ஜைனுடைய மக்களுக்கு இரண்டு சுவர்க்கங்கள்' என்று அசரீரி முழங்கியது.

''இப்னு ஹம்தூன் என்பவர், கார்டோவாவின் காஜியாக இருந்தவர். அவரே கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் நூல்களை எரிக்குமாறு ஆணை யிட்டதுடன், அவர்கள் மீது வசைமாரி பொழிந்தவர். இதற்குச் சிறிது காலத்திற்குப் பின் அவர் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களைக் கனவில் கண்டார். அவர்கள் ஒரு பன்றியைச் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்கிறார்கள். அப்பொழுது அவர், அவர்களை அணுகி அந்தப்

பன்றியைப் பற்றி விசாரிக்கிறார். அதற்கு அவர்கள், 'இந்தப் பன்றி தான் இப்னு ஹம்தூன் என்பவனாவான். என் முனிவுக்கு ஆளாகி, இத்தகைய நிலையை அடைந்தான்' என்று பதிலிறுக்கிறார்கள். இத்துடன் கனவு கலைந்தது.

''அபுல் அப்பாஸ் அஹ்மது இப்னு முன்திர் என்னும் இறைநேசச் செல்வரையும் நான் அறிவேன். செவில்லியில் மாலிக் மத்ஹபைப் பின்பற்றியவர் அவர் ஒருவராகவே இருந்தார். ஏதாவது மார்க்கப் பிரச்சினை குறுக்கிடும் பொழுது, அவருக்கு அதனைத் தெளிவுபடுத்த, அங்கு எவரும் இல்லாததால், இமாம் மாலிக் (ரஹ்) அவர்களே, அவருக்குத் திருத்தோற்றம் வழங்கி, அவருக்கு அவற்றைத் தெளிவுபடுத்தி வந்தனர். மனிதர்கள் மட்டுமல்லாது, ஜின்களும் அவருக்குத் தம் மரியாதையைச் செலுத்துவதற்காக அவரின் இல்லம் வந்து கொண்டிருந்தன. அவர் பரம ஏழையாயிருந்த போதினும், எவர் எதை அவரிடம் கொடுப்பினும், அதனை அவர் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

''நான் சந்தித்து அளவளாவிய மற்றொரு இறைநேசச் செல்வர், ஷைகு அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு அல்முஜாஹித் ஆவார். அவர், தாம் பகலில் எண்ணிய எண்ணங்கள், செய்த செயல்கள், பேசிய பேச்சுகள் ஆகிய அனைத்தையும் பற்றித் தாமே விசாரணை நடத்தி, தாம் தவறு செய்திருப்பின், தம்மைத் தாமே அதற்காகக் கண்டித்து, அதற்குப் பிராயச்சித்தமாக, இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரிவிட்டுத் தான் உறங்கச் செல்வார். பின்னர் விழிந்தெழுந்து நள்ளிரவில் தொழுவார்.

''ஒருநாள் அவருக்குச் சிறிது பணம் தேவைப்பட்டது. அவரிடம் ஒரு பழைய ஆடை தான் இருந்தது. அதைத் தரகரிடம் கொடுத்து விற்று வருமாறு கூறினார். தரகர் அதைப் பெற்றுச் சென்று, மக்களிடம் காட்டிய பொழுது, ஒரு செல்வர் அதனை எழுபது பொற்காசுகளுக்கு விலைக்குக் கேட்டார். அவரை ஷைகிடம் அழைத்துச் சென்ற பொழுது, 'என்ன விலைக்கு அதனை விற்றீர்?' என்று ஷைகு வினவினார். நிலைமையைத் தரகர் கூறிய பொழுது, ஷைகின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. 'இப்னு முஜாஹிதின் மார்க்கத்தின் விலை இவ்வளவு தானா?' என்று திரும்பத் திரும்பக் கூறினார். பின்னர் தரகரிடமிருந்து தம்முடைய உண்மை விலை அதுவல்ல. நான் இதனை விற்க மாட்டேன். உம் பணத்தை எடுத்துச் செல்லும்!' என்று கூறினார். ஷைகு கூறியதற்கிணங்கி, அந்தச் செல்வர் தம் பணத்தை அழுத கண்களுடன் எடுத்துச் சென்று அதனை ஏழை, எளியவர்களுக்கு வழங்கி விட்டார். பின்னர் ஷைகின் தேவையை இறைவன் எதிர்பாரா வகையில் நிறைவு செய்தான்.

''ஒரு நாள் அவர் பள்ளியில் தொழுது விட்டு இல்லம் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது, முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் அவரைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். வீட்டு வாயிலை அடைந்ததும், அவர் தம் பின்னே வந்து கொண்டிருந்தவரை நோக்கி, 'உமக்கு என்ன வேண்டும்?' என்று வினவினார். அதற்கு அவர், 'எனக்கு உம்மிடமிருந்து யாதொன்றும் வேண்டாம்' என்று கூறினார்.

''இதன்பின் அவர் தம் இல்லம் நுழைந்து கதவைத் தாளிட்டு விட்டு, உள்ளே அடியெடுத்து வைத்து நடந்தார். என்ன வியப்பு! அந்த மனிதர் அங்கே தம்முன் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது அவர், அந்த மனிதரை நோக்கி, 'கதவு பூட்டப்பட்டிருக்க நீர் எவ்வாறு உள்ளே வந்தீர், அதுவும் அனுமதியின்றி?' என்று வினவினார். அதற்கு அவர், 'ஷைகு அவர்களே! நான் மனிதனல்ல. உங்களைத் தீமைகளிலிருந்து காப்பதற்காக, உங்களுடன் இருக்குமாறு இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட வானவன்' என்று பதிலிறுத்தார். அது கேட்டு ஷைகு அல் முஜாஹிதின் கண்கள் குளமாயின.

''அவரின் இல்லத்தில் அவரைச் சூழ நூல்கள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும். இறைவனை வணங்கி, வழுத்தி முடிந்ததும், அவர் அவற்றில் ஏதாவதொன்றை எடுத்துப் படித்துக் கொண்டிருப்பார். ஒரு நாள் அவரை, அவரின் இல்லம் வந்து சந்தித்த கலீபா அபூ யஃகூப், அவரை நோக்கி, 'தாங்கள் எவ்வாறு இங்கு தனிமையில் வாழ்ந்து வருகிறீர்கள்?' என்று வினவினார். அதற்கு அவர், 'இறையண்மை என் தனிமையை நீக்கி விட்டது. அவன் எப்பொழுதும் என்னுடன் இருக்கும்பொழுது, எனக்குத் தனிமை என்பது ஏது? நான் இறைவனுடன் உரையாட விரும்பின், குர்ஆனை எடுத்துக் கொள்வேன். அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் உரையாட விரும்பின், ஹதீது நூல்களை எடுத்துக் கொள்வேன். நபித்தோழர்களுடன் உரையாட விரும்பின் அவர்களின் வரலாற்று நூல்களை எடுத்துக் கொள்வேன். அவ்விதம் இருக்கும் பொழுது எனக்குத் தனிமை ஏது?' என்று பதிலிறுத்தார்.

''இதன்பின் கலீபா, அவருடன் சிறிது நேரம் உரையாடி விட்டு, அவரிடமிருந்து விடைபெறும் பொழுது, ஆயிரம் பொற்காசுகள் நிரம்பிய பெட்டி ஒன்றை அவருக்கு அன்பளிப்புச் செய்ய முன் வந்தார். அவற்றிற்கான தேவை தமக்கு இல்லை என்று அவர் கூறிய பொழுது. 'அல்லாஹ்வைத் தவிர்த்து அனைத்தும் தேவையுடையவையே' என்று கலீபா கூறினார்.

''அதற்கு அவர், 'ஆம், உண்மை தான். அவ்விதமாயின் தாங்கள் அதனை என்னை விட, அதிகத் தேவையுள்ள அதன் உரிமையாளர்களிடம்

திருப்பிக் கொடுத்து விடலாமே' என்று கூறினார். இவ்வாறு கூறி அது மக்களிடமிருந்து அநியாயமாக வசூலிக்கப்பட்டது என்பதைக் கூறாமல் கூறினார் அவர். அதுகேட்டுப் பெரிதும் வெட்கமுற்ற கலீபா, அதனை அங்கேயே விட்டு விட்டுச் சென்று விட்டார்.

''அது அவ்விடத்திலேயே ஷைகு அல் முஜாஹித் இறக்கும் வரை, அதாவது பன்னிரண்டு ஆண்டு காலம் கிடந்தது. இந்த விஷயம் கலீபா அபூ யஃகூபின் மகனான சுல்தான் அபூ இஸ்ஹாக்குக்குத் தெரிய வந்ததும், அவர் ஷைகு அல் முஜாஹிதின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டதோடு, அப்பணத்தை எடுத்து, அல் முஜாஹிதின் குடும்பத்தில் ஏழைகளாக உள்ளவர்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்தார்.

''நான் என் வாணாளில் ஒரு தடவையேனும் அபூ மத்யன் (ரஹ்) அவர்களைச் சந்திக்கவில்லை. எனினும் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்ற அவா என் உள்ளத்தில் என்றென்றும் நீறு பூத்த நெருப்புப் போல் இருந்து வந்தது. ஒரு நாள் நான் செவில்லியிலுள்ள என் இல்லத்தில் மஃரிப் தொழுகையைத் தொழுது முடித்த சமயம், அது அடங்காது கொழுந்து விட்டெரியலாயிற்று. எரிந்து என் செய்ய? அபூ மத்யன் அவர்கள் வாழ்ந்து வந்த பூகியாவோ, அண்மையிலா இருந்தது? செவில் லிக்கும் அதற்கும், நாற்பத்தைந்து நாள் பயணத் தொலைவாயிற்றே.

''இதன் பின் நான் இரண்டு ரகஅத் சுன்னத் தொழுகை தொழுது முடித்து, 'ஸலாம்' கொடுத்தேன். அப்பொழுது ஒருவர் வந்து எனக்கு 'ஸலாம்' உரைத்து, தாம் பூகியாவில் வாழ்ந்து வரும் ஷைகு அபூமத்யன் அவர்களிடமிருந்து செய்தி கொண்டு வந்திருப்பதாகக் கூறினார்.

''அப்படியா! எப்பொழுது அவர்களைச் சந்தித்தீர்கள்?'' என்று நான் அவரை வினவினேன்.

''அதற்கு அவர், 'மஃரிப் தொழுகையை அவர்களுடன் தொழுது விட்டுத் தான் புறப்பட்டு வந்தேன்'' என்று பதிலிறுத்தார்.

''அவரின் இப்பதில் என்னைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தியது. எனினும், என் வியப்பை அடக்கிக் கொண்டு, 'என்ன செய்தி கொண்டு வந்தீர்கள்?' என்று ஆவலுடன் வினவினேன்.

''அதற்கு அவர், 'தாங்கள் அவர்களைச் சந்திக்கப் பெரிதும் ஆவலுடன் இருக்கின்றீர்களாம். ஆன்மாவால், இருவரும் ஒருவர் மற்றொருவரைச் சந்தித்துக் கொள்ளலாமென்றும், ஆனால் உடலால் ஒருவர் மற்றொருவரைச் சந்திக்க இயலாதென்றும், அத்தகு சந்திப்பை இறைவன் அனுமதிக்க மறுத்து விட்டானென்றும், தங்களிடம்

கூறிவருமாறு அவர்கள் என்னைப் பணித்தார்கள்' என்று கூறினார். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை.

''அபூ மத்யன் அவர்களிடமிருந்து செய்தி கொணர்ந்த அவரின் பெயர் மூஸா அபூ இம்ரான் அல் ஸத்ரனி என்பதாகும். அவர் ஓர் இறைநேசச் செல்வராவார். அவருடன் நான் நீண்ட நேரம் உரையாடி, ஆன்மீகம் பற்றிய பல செய்திகளை அறிந்தேன். துவக்கத்தில் அவர் ஒரு செல்வராக இருந்தார். பின்னர் தம் செல்வத்தையெல்லாம் துறந்து, இறைவழியில் அடியெடுத்து வைத்து நடக்கலானார். இறைவன் அவரைத் தம் 'அப்தால்'களில் ஒருவராக ஆக்கினான். தாம் விரும்பும் இடத்திற்கு ஒரு கணத்தில் செல்லும் ஆற்றலையும் இறைவன் அவருக்கு வழங்கினான்.

''அபூ மத்யன் அவர்களின் மற்றொரு மாணவர் அபூ முஹம்மது அப்துல்லாஹ் இப்னு அல் மௌரூரியையும் நான் சந்தித்து அளவளாவி யுள்ளேன். அவரும் ஓர் இறைநேசச் செல்வர். நான் கிரானடா சென்றிருந்த பொழுது, அவரும் எதிர்பாரா வண்ணம் அங்கு வந்து சேர்ந்தார். அவரின் மாண்பினை அறிந்த மக்கள், அவரைக் காணத் திரள் திரளாகச் சென்றனர். ஒருநாள் ஒருவரின் இல்லத்தில் அவருக்கு விருந்தளிக்கப்பட்டது. விருந்தளிப்பவரின் மகன், அன்று வைகறையிலேயே வெளியூர் சென்று விட்டதால், அவ்விருந்தில் அவரும் கலந்து கொள்ள இயலாது போய் விட்டதே என்று விருந்தினரும், விருந்தளிப்பவரும் வருந்தினர். தேனும் தயிருமே உணவாகக் கொண்டு வந்து வைக்கப்பட்டன.

''அவர்களின் வருத்தத்தைக் கண்ட அல் மௌரூரி, 'அவர் வெளியூர் சென்றிருப்பதைப் பற்றி வருந்தாதீர்கள்! நான் அவருக்காக உண்ணுகிறேன். அவர் எங்கிருந்த போதினும் உண்டு பசிதீர்ந்தவர் போன்று ஆகி விடுவார்' என்று கூறினார். அவரின் இச்சொற்கள் அனைவருக்கும் ஐயத்தை ஏற்படுத்தின. எனினும் எல்லாரும் உண்டனர். அல் மௌரூரியும் உண்டார். அதிகமதிகமாக உண்டார். உண்டு முடிந்ததும், 'வெளியூர் சென்றுள்ளவர் வயிறு நிரம்ப உண்டுவிட்டார். இனிமேல் அவர் உண்டால் இறந்துவிடுவார்' என்று கூறினார். இது அங்கிருந்தோர் அனைவருக்கும் பெருவியப்பை ஏற்படுத்திவிட, இதன் உண்மையைப் பார்த்து விட வேண்டுமென்று, எல்லோரும் மாலை வரை அங்கேயே அமர்ந்திருந்தனர்.

''மாலையில் அவர் இல்லம் திரும்பிய பொழுது, அவர் காலையில் எடுத்துச் சென்ற கட்டமுதை அப்படியே திருப்பிக் கொண்டு வந்திருப் பதைக் கண்டு, அதற்கான காரணத்தை அவர்கள், அவரிடம் ஆவலோடு வினவினார்கள். அதற்கு அவர், 'சகோதரர்களே! இன்று நூதனமான விஷயம் ஒன்று நிகழ்ந்தது. நான் இன்று இன்ன ஊருக்குப் போய் அமர்ந்த

பொழுது என் தொண்டையில் தேனும் தயிரும் ஊற்றப்பட்டது போன்று உணர்ந்தேன். என் வயிறு நிரம்பும் வரை ஊற்றப்பட்டேன். இதற்கு மேல் ஊற்றப்படின் நான் இறந்து விடுவேன் என்ற நிலைவரும் வரை, ஊற்றப்பட்டேன். இப்பொழுது கூட என் வயிறு நிறைந்துள்ளது. ஏப்பம், ஏப்பமாக வந்து கொண்டிருக்கிறது' என்று கூறினார். அது கேட்டு அங்கிருந்தோர் முன்னைவிடப் பன்மடங்கு வியப்பெய்தினர். இத்தகு பெரியாரைச் சந்திக்கும் நற்பேறு தங்களுக்குக் கிடைத்ததற்காகப் பெரிதும் மகிழ்ச்சியுற்றனர்.

''ஒரு தடவை அவர், மூதாட்டி ஷம்ஸைக் காண வந்திருந்தார். அன்று புதன்கிழமையாக இருந்தது. அப்பொழுது அம்மூதாட்டி அவரை நோக்கி, 'அபுல் ஹஸன் இப்னு கைத்தூன் நாளை இங்கு வந்து என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவருக்குக் கடிதம் எழுதி இங்கு வரச் செய்யும்!' என்று கூறினார். அபுல் ஹஸனோ இருபத்தொரு மைல் களுக்கு அப்பாலுள்ள, கர்மோனா என்ற இடத்தில் சிறுவர்களுக்குக் குர்ஆன் ஓதிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''அப்பொழுது, அபூ முஹம்மது அல் மௌரூரி, இது சாதாரண மனிதர்கள் செய்யக் கூடிய வழி முறையாயிற்றே'' என்று கூறினார்.

''அவ்விதமாயின் நாம் என் செய்வது?'' என்று வினவினார் அம்மூதாட்டி.

''அதற்கு அவர், 'நான் என் ஆன்மாவை ஒருமைப்படுத்தி அவர் மீது செலுத்தி அவரை இங்கு வரச் செய்கிறேன்' என்று கூறினார்.

'நல்லது; செய்யும்!' என்று கூறினார் அம்மூதாட்டி.

''அவ்விதமே தம் ஆன்மாவை ஒருமைப்படுத்தி, அவர் மீது செலுத்திய அவர், சற்று நேரத்திற்குப் பின் அம்மூதாட்டியை நோக்கி, 'இன்ஷா அல்லாஹ்! அவர் நாளை இங்கு வருவார்' என்று கூறினார்.

''அடுத்த நாள் காலையில், அபூ முஹம்மது அம்மூதாட்டியிடம் வந்த பொழுது, 'என்ன! இன்னும் அபுல் ஹஸன் வரவில்லையே' என்று கூறினார் அவர்.

''அப்பொழுது அபூ முஹம்மது 'நான் அதனை மறந்து விட்டேன். எனினும் பாதகமில்லை. நான் அதனை ஒழுங்கு செய்துவிடுகின்றேன்' என்று கூறி, மீண்டும் தன் ஆன்மாவை ஒருமைப்படுத்தி, அபுல் ஹஸன் பால் செலுத்தினார் அவர். என்ன வியப்பு! நண்பகலுக்குச் சற்று முன்பாக அபுல் ஹஸன் அங்கு வந்து சேர்ந்து விட்டார்.

''அப்பொழுது அபூ முஹம்மது அங்கிருந்தவர்களை நோக்கி, 'நடந்தவற்றை அவரிடமே கேளுங்கள்!' என்று கூறினார்.

அவ்விதமே அவர்கள் கேட்க, அவர்பின் வருமாறு கூறினார்.

''புதன்கிழமை பிற்பகல் என் உள்மனம் என்னை மூதாட்டி ஷம்ஸைப் போய்க் கண்டு வருமாறு கூறியது. எனவே நான் சிறுவர்களை நோக்கி, அடுத்த நாள் பள்ளிக்கு வரவேண்டாமென்று கூறினேன். ஆனால் அடுத்த நாள் அதனை அறவே மறந்து விட்டுப் பள்ளிக்குச் சென்றேன். சிறுவர்களும் நான் கூறியதை மறந்துவிட்டுப் பள்ளிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் பாடங்களை எழுதக் கற்பலகையையும் எடுத்துவிட்டார்கள். அப்பொழுது என் உள் மனம், என்னை உடனே மர்ச்சேனோவுக்குப் புறப்பட்டு போய் மூதாட்டி ஷம்ஸைக் காணுமாறு உந்தியது. நானும் சிறுவர்களை இல்லம் செல்லுமாறு கூறிவிட்டு, இங்கு புறப்பட்டு வந்தேன்' என்று கூறினார்.

''அது கேட்ட அவர்கள் பெரிதும் வியப்புற்று. மர்ச்சேனாவில் நடந்த செய்தியை அவரிடம் எடுத்துரைத்த பொழுது, அவருக்கு ஏற்பட்ட வியப்பை அளவிட முடியவில்லை.

''செவில்லியிலிருந்து ஆறுமைல் தொலைவிலுள்ள ஷூபர்புல் என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்த அபுல் ஹஜ்ஜாஜ் என்ற இறைநேசச் செல்வரையும் நான் அறிவேன். அவருடன் நான் பத்தாண்டுகள் பழகியுள்ளேன். பருவமடைவதற்கு முன்பே ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்த அவர், தம் வாணாளில் பெரும்பாலான பகுதியைக் கானகத்திலேயே கழித்திருந்தார். அவர் ஆற்றிய பல அற்புதங்களை நான் நேரில் கண்டுள்ளேன். நீரின் மேல் நடக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களில், அவரும் ஒருவர். அவருடன் எப்பொழுதும் முஸ்லிமான ஜின்கள் இருந்து வந்தன.

''ஒரு நாள், நானும், அல் மௌரூரியும் அவரைக் காணச் சென்றோம். நான் அல் மௌரூரியை அவரிடம் அபூ மத்யனின் தோழர் என்று அறிமுகப்படுத்திய பொழுது, அவர் புன்முறுவல் பூத்த வண்ணம், 'அப்படியா! என்ன வியப்பாக உள்ளது!! நேற்றுத் தானே அபூமத்யன் இங்கு வந்து என்னுடன் அளவளாவி விட்டுச் சென்றார்கள்' என்று கூறினார். அபூ மத்யன் (ரஹ்) அவர்கள் வாழ்ந்த பூகியாவுக்கும் அவ்விடத்திற்கும் இடையே நாற்பத்தைந்து நாள் பயணத் தொலைவு இருந்தது என்பதை நாம் இங்கு நினைவு கூர வேண்டும்.

''ஒரிவு அவர் ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் சமயத்தில், அவரின் இல்லத்தில் சில திருடர்கள் புகுந்து, அங்கிருந்த பொருள்களைச் சுருட்டி மூட்டைக் கட்டிக் கொண்டு கிளம்பிய பொழுது, அவர்களுக்கு வெளியே

போகும் வாயில் தெரியவில்லை. மூட்டையைக் கீழே வைத்த பொழுது, வாயில் தெரிந்தது. மீண்டும் மூட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பிய பொழுது மீண்டும் வாயில் தெரியவில்லை. இவ்வாறு பல தடவைகள் நிகழ்ந்தது. இறுதியாக அவர்கள், அந்த மூட்டையை அங்கேயே போட்டு விட்டு, தாம் செய்த தீச்செயலுக்கு வருந்திய வண்ணம் வெளியேறி னார்கள். அத் திருடர்களில் ஒருவனே என்னிடம் இதனைக் கூறினான்.

''நான் சந்தித்த மற்றோர் இறைநேசச் செல்வர், அபூ முஹம்மது அப்துல்லாஹ் அல் கத்தான் என்பவராவர். அவர், எவர் தவறு செய்யினும், அதனைப் பகிரங்கமாகக் கண்டிக்கத் தவறுவதில்லை. ஒரு தடவை அவர், அரசரையும், அரசாங்க ஊழியர்களையும், பெரிதும் கண்டித்துப் பேசிய பொழுது, அவரைப் பிடித்துச் சிரச்சேதம் செய்யுமாறு பணித்தார் அரசர்.

''அவர் சிறை செய்யப்பட்டு, அமைச்சர் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பொழுது, அவர் அமைச்சரை நோக்கி, 'இறைவனின் விரோதியே! உன் ஆன்மாவின் எதிரியே!! நீ ஏன் என்னைச் சிறை செய்தாய்?' என்று வினவினார். அதற்கு அமைச்சர், 'இறைவன் உன்னை என் கைப்பிடியில் ஆக்கியுள்ளான். நீ இன்னும் ஒரு நாளைக்கு மேல் இவ் உலகில் வாழமாட்டாய்' என்று கூறினார். அதற்கு அவர், 'இறைவன் எனக்குக் குறிப்பிட்ட தவணையை எவராலும் கூட்டவோ, குறைக்கவோ இயலாது. நீயா என்னைக் கொல்ல நினைக்கிறாய்? நானல்லவா உன்னுடைய ஈமச்சடங்கில் கலந்து கொள்வேன்!' என்று கூறினார்.

''அவரின் இந்தப் பதில் அமைச்சரின் தலையை ஒரு குலுக்குக் குலுக்க, அவர் அவரைச் சிறையிலடைக்குமாறும், அவரைச் சிரச்சேதம் செய்வது பற்றி அரசரிடம் ஆலோசனை கலப்பதாகவும் கூறினார்கள்.

''அன்றிரவு அவர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பொழுது, 'உண்மையான இறை நம்பிக்கையாளன், இந்த உலகமாகிய சிறையில் உள்ளான். அதன் ஒரு பகுதி தான் இச்சிறை' என்று கூறினார் அவர்.

''அடுத்தநாள் அமைச்சர் அரசரிடம் நடந்தவற்றைக் கூறிய பொழுது, அவரை அரசவைக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டார் அரசர். அவ்வாறே அவர் அழைத்து வரப்பட்டதும், அவரின் பெயரையும் குலத் தையும் பற்றி விசாரித்த அரசர், ஏகத்துவம் பற்றி அவரிடம் வினவினார். அதற்கு அவர் திருக்குர்ஆனின் திருவசனங்கள் சிலவற்றை எடுத்துரைத்து ஆற்றிய பேருரை அரசரை மெய்சிலிர்க்க வைத்தது.

''இதன்பின் அரசியல் பற்றி, அவருடன் உரையாடிய அரசர், தம் அரசாங்கத்தைப் பற்றி அவருடைய கருத்தை வினவ, அவர் சப்தமிட்டுச் சிரித்து விட்டு, 'நீர் உம்மை ஓர் அரசன் என்று கூறிக் கொள்கிறீர். ஆனால் நீர் எத்தகைய அரசன் எனில், இறைவன் தன் திருமறையில், 'அவர்களுக்கு முன் ஓர் அரசன் இருக்கிறான். அவன் மரக்கலங்கள் அனைத்தையும் அக்கிரமமாக அபகரித்துக் கொள்கிறான்' (18:79) என்று கூறிய அரசனைப் போன்றவரே ஆவீர். அவன் இப்பொழுது நரகத்தில் உழன்று கொண்டிருக்கிறான்' என்று கூறிவிட்டு, அங்கிருந்த அமைச்சர்களையும் மார்க்க மேதைகளையும் கடுமையாகச் சாடினார்.

''அதுகேட்டு வாயடைத்து வீற்றிருந்த அரசர், பின்னர் அவரை நோக்கி, அபூ அப்துல்லாஹ்! நீர் நம்முடைய அரசவையில் அமர்ந்து பணி யாற்றுவீராக!' என்று வேண்டினார். அதற்கு அவர், 'நான் ஒரு போதும் அவ்விதம் செய்ய மாட்டேன். உம்முடைய அரசவையும், அரண்மனையும் தவறாக ஈட்டப்பட்டவையாகும். என்னை இங்கு வற்புறுத்தி அழைத்து வரப்படவில்லையாயின், ஒரு போதும் வந்திருக்க மாட்டேன். உம்மை விட்டும், உம் போன்றவர்களை விட்டும், இறைவன் என்னைக் காத்தருள் புரிவானாக!' என்று கூறினார். அரசர் அவரை மன்னித்து, அன்பளிப்புச் செய்ய, அந்த அன்பளிப்புகளை ஏற்றுக் கொள்ள மறுத்து, அவர் அரசவையை விட்டும் வெளியேறினார். அந்த அன்பளிப்பு களை, அவரின் குடும்பத்தினரிடம் கொடுக்குமாறு அரசர் ஆணையிட்டார். வெகு விரைவில் அமைச்சர் இறப்பெய்தினார். அவருடைய ஈமச்சடங்கில் கலந்துகொண்ட அவர், 'நான் கூறியது நிறைவேறி விட்டது' என்று சொன்னார்.

''ஓரிரவு நான் அவரை என் இல்லத்திற்கு விருந்துண்ண அழைத் தேன். அவ்வாறே அவர் என் இல்லத்திற்கு வந்து அமர்ந்திருந்த பொழுது, அரசாங்கத்தில் ஊழியம் புரிந்த என் தந்தை உள்ளே நுழைந்தார். என் தந்தை வயோதிகராக இருந்ததால், அவரே என் தந்தைக்கு முதலில் 'ஸலாம்' கூறினார். தொழுது முடிந்ததும், உணவருந்த அமர்ந்தோம். என் தந்தையும் நற்பேறு கருதி விருந்தில் கலந்து கொண்டார். அப்பொழுது அவர் என் தந்தையை நோக்கி, 'மகிழ்ச்சியற்ற வயோதிகரே! இறைவன் முன் நாணமுறும் நேரம் உமக்கு இறப்பு வராது என்று நீர் எண்ணிக் கொண்டிருக்கிறீரா, என்ன?'' என்று வினவினார்.

''அதன்பின் அவர் என்னைச் சுட்டிக் காட்டி 'நீர் உம்முடைய மகனிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அவரோ இளைஞர். எனினும் தம் ஆசை அனைத்தையும், அடக்கி இறை பாதையில் அடி எடுத்து வைத்து நடந்து சென்று கொண்டிருக்கிறார். நீரோ அதள பாதா

ளத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறீர்'' என்று இடித்துரைத்தார். அது கேட்டு என் தந்தை தம் நிலையை உணர்ந்து அழுதார். நானோ திடுக்கிட்டேன்.

''நான் அபூ முஹம்மது மஹ்லூஃப் அல் கபாயிலி என்னும் இறைநேசச் செல்வரையும் சந்தித்து, அளவளாவியுள்ளேன். அவர் கார்டோ வாவில் வாழ்ந்து வந்தார். ஒரு தடவை நான் அவரைக் கண்டு, அவரின் 'துஆ'வைப் பெறுவதற்காக, என் தந்தையையும் அழைத்துச் சென்றேன். காலையிலிருந்து மாலை வரை, நாங்கள் அவரின் இல்லத்திலேயே இருந்தோம். அவர் எங்களுக்கு உணவும் அளித்தார்.

''அவரின் இல்லத்திற்குள் நுழைந்ததும், அவரைக் காண்பதற்கு முன்பே, அங்கு ஒருவித ஆன்மீக அனுபவத்தை நம்மால் நுகர இயலும். அவர், விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைவருக்காகவும், கடலிலே உள்ள மீன்களுக்காகவும், இறைவனிடம் இறைஞ்சுவார்.

''ஒரு தடவை அவர் தம் இல்லத்தில் கிணறு தோண்டினார். அதனைத் தோண்ட, வெளிநாட்டுக் கைதி ஒருவரை ஏற்பாடு செய்திருந் தார். அப்பொழுது அவர், 'இவர் எனக்குக் கிணறு தோண்ட உதவி செய்கிறார். இவர் இஸ்லாத்தைத் தழுவ நான் இறைஞ்ச வேண்டும்' என்று கூறினார். அவ்விதமே அன்றிரவு அவர் இறைஞ்சவும் செய்தார்.

''அடுத்த நாள், அந்த அயல்நாட்டார் தாம் சென்ற தினம் விட்டுச் சென்ற வேலையை மீண்டும் தொடர வந்த பொழுது, தாம் இஸ்லாத்தைத் தழுவி விட்டதாக அவரிடம் கூறினார்.

''அதுகேட்ட அவர், அதற்கான காரணத்தை வினவிய பொழுது, 'சென்ற இரவு நான் கனவொன்று கண்டேன். அதில் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''வணங்குதற்குரியோன் அல்லாஹ் ஒருவனென்றும், தாம் அவனின் தூதர் என்றும் நம்பிக்கை கொள்ளுமாறு கூறினர். நானும் அவ்வாறே செய்தேன். அதன்பின் அவர்கள் என்னை நோக்கி, அபூ முஹம்மது மஹ்லூஃபின் பரிவுரையின் மீது, தாம் என்னை, இஸ்லாத்தில் ஏற்றுக் கொண்டதாகக் கூறினர்' என்று பதிலுரைத்தார்.

''ஒரு நாள் நான் அவரைச் சந்தித்து விட்டு இல்லம் திரும்பினேன். அன்றிரவு நான் கனவொன்று கண்டேன். நான் ஒரு வெட்ட வெளியில் நிற்கிறேன். விண்ணிலே மேகங்கள் குழுமியுள்ளன. திடீரென நான் குதிரைகளின் கனைக்கும் சப்தத்தையும் குளம்புகளின் ஒலியையும் செவியுறுகிறேன் ஏராளமானோர் குதிரைகள் மீதும், வெறுங்காலுடனும் விண்வெளியில் மேலிருந்து இறங்கி நிரம்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அவர்களின் நடுவே, நீண்ட தாடியும், நரைமயிரும் உள்ள

ஒருவர், தம் கையைக் கன்னத்தில் வைத்த வண்ணம் நின்று கொண்டிருக்கிறார். நான் அவரை அணுகி, விவரம் வேண்டுகிறேன். அதற்கு அவர், 'ஆதம் (அலை) அவர்கள் முதற் கொண்டு, முஹம்மது (ஸல்) அவர்கள் வரை உள்ள ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களும் வந்திருக்கிறார்கள்' என்று கூறுகிறார். 'அவ்விதமாயின் தாங்கள் யார்?' என்று நான் வினவுகிறேன். அதற்கு அவர் 'நான் ஆதுகளின் திருநபி ஹூது' என்று மறுமொழி பகர்கிறார். 'ஏன் இத்தனை பேர்களும் வந்திருக்கிறார்கள்?' என்று அடுத்து நான் வினவுகிறேன். 'அபூ முஹம்மது நோயுற்றுள்ளார். அவரைக் காண்பதற்காக வந்தோம்' என்று அவர் பதிலிறுக்கிறார். இத்துடன் கனவு கலைந்தது.

''வைகறையில் நான் விழித்தெழுந்த பொழுது, அபூ முஹம்மதின் உடல் நிலைபற்றி விசாரித்தேன். அவர் சென்ற இரவு நோயுற்றதாகக் கேள்வியுற்றேன். இதன்பின் சில நாட்கள் கழித்து அவர் இறந்து விட்டார்.

''மர்ச்சேனாவைச் சேர்ந்த அல்ஹாஜ் அபூ முஹம்மது அப்துல்லாஹ் அல் புர்ஜானியையும் நான் அறிவேன். அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டை, அணுவத்தனையும் தவறாது பின்பற்றுபவர். ஒரு நாள் அவர் என்னிடம், 'அல்லதீன ஆத்தைனா ஹுமுல் கிதாப யத்லூனஹு ஹக்க திலாவத்திஹி' - 2:121 (எவருக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோமோ அவர்கள் இதனைக் கிரமப்படி ஓதுவார்கள் என்னும் திருவசனத்தை ஓதிக்காட்டி 'ஏன் அவர்கள் அதனை கிரமப்படி ஓதுவார்கள் என்று இறைவன் கூறுகின்றான்?' என்று வினவினார்.

''அதற்கு நான், 'தாங்களே அதற்கான விளக்கத்தைக் கூறுங்கள்!' என்று வினயமாகச் சொன்னேன்.

''அப்பொழுது அவர் புன்முறுவல் பூத்த வண்ணம், 'அவர்கள் இறையருளுக்குப் பாத்திரமான பின் இது வந்தது. எனவே இதனைக் கிரமப்படி ஓத இறைவனின் திருவருள் உதவி செய்யத் தானே செய்யும்' என்று மறுமொழி பகர்ந்தார்.

''சிந்திப்பவர்கள் இதில் ஆழிய கருத்துக்கள் பொதிந்து கிடப்பதைக் காண்பார்கள். இமாமுடைய பதவியைப் பற்றி, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறும் பொழுது, 'அது உங்களுக்கு வழங்கப்படின், நீங்கள் உதவி செய்யப்படுவீர்கள். நீங்கள் அதனை விரும்பிக் கேட்பின், நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்' என்று குறிப்பிட்டுள்ளதும், இத்துடன் ஒப்பு நோக்கத்தாகும்.

''செவில்லியில் வாழ்ந்து, செருப்புத் தைக்கும் தொழிலைச் செய்து வந்த ஸாலிஹ் அல் கர்ராஸ் என்னும் இறைநேசச் செல்வருக்கும்,

எனக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. நாங்கள் இருவரும், ஒருவர் மற்றொருவரைப் பெரிதும் நேசித்தோம். தமக்குத் தெரிந்தவர்களின் செருப்பை அவர் தைத்துக் கொடுக்க மாட்டார். அதற்குக் காரணம், தம் உண்மை நிலையை, அவர்கள் அறிய ஏதுவாகி விடுமோ என்ற அச்சம் தான். எனவே தமக்குத் தெரியாத, தம்மை எவரென்று அறியாத வெளியூர் வாசிகளின் செருப்புகளையே, அவர் தைத்துக் கொடுத்து வந்தார்.

''ஒரு நாள் என் நண்பர் ஒருவர், அவரிடம் சிறிது நேரம் பேச வேண்டும் என்பதற்காகத் தம்முடைய செருப்பை வேண்டுமென்றே பழுதாக்கிக் கொண்டு, என்னையும் அழைத்துக் கொண்டு, அவரிடம் சென்றார். நான் அவரின் கண்களில் படாது சற்று மறைவாக இருந்து கொண்டேன். என் நண்பர் அவருக்கு 'ஸலாம்' உரைத்துத் தம் செருப்பைத் தைத்துத் தருமாறு அவரை வேண்டிக் கொண்டார். அதற்கு அவர், 'ஏற்கனவே ஒருவர் தம் செருப்பைத் தந்து, அதனைத் தைப்பதற்கான கூலியையும் தந்து விட்டுச் சென்றுள்ளார். நான் இப்பொழுது அவ்வேலையில் ஈடுபட்டுள்ளேன்' என்றார். 'பாதகமில்லை. அவ்வேலையை முடித்துவிட்டு என் வேலையை எடுத்துக் கொள்ளுங்கள்!' என்றார் நண்பர். 'அதற்குள் நான் இறந்து விட மாட்டேன் என்பதற்கு என்ன உறுதி உள்ளது? ஆதலின் நீர் உம்முடைய செருப்பை வேறொருவரிடம் எடுத்துச் செல்லலாம்' என்றார் அவர். 'அதனை வேறு எவரிடமும் கொடுக்க விரும்பவில்லை. அதனைத் தாங்கள் தாம் செய்து தர வேண்டும். தாங்கள் அதனை முடிக்கும் வரை, நான் இங்கேயே அமர்ந்திருக்கிறேன்' என்றார் நண்பர். 'நான் கூற வேண்டியதைக் கூறிவிட்டேன். அதற்கு மேல் நீர் இங்கு இருக்க விரும்பினால், அது உம்முடைய விருப்பத்தைப் பொறுத்தது' என்றார் அவர்.

''அங்கு சற்று நேரம் வீற்றிருந்த நண்பர், அவரை நோக்கி, 'அதனைத் தைக்கக் கூலி என்னவாகும்?' என்று நாசூக்காக வினவினார். 'அரைக்கால் திர்ஹம் ஆகும்' என்றார் அவர். 'நான் தங்களுக்கு கால் திர்ஹம் தருகிறேன். அதனைத் தைத்துத் தாருங்கள்!' என்றார் நண்பர். அதற்கு அவர் 'நான், எனக்கு இன்றைக்குத் தேவையானதை ஈட்டிக் கொண்டு விட்டேன்.அதற்கு மேல் தேவை இல்லை. தேவையுள்ளவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். நீர் தாராளத் தன்மையுடையவராயிருந்தால், அவர்களைப் போய்ப் பார்த்து, அதனைக் கொடும்! என்னை வீணே தொந்தரவு படுத்த வேண்டாம்!' என்று முடிவாகக் கூறிவிட்டுத் தம் கையிலிருந்த வேலையில் கவனத்தைச் செலுத்தலானார்.

''நண்பர் என்னிடம் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார். நான் அவரை நோக்கி, 'நீர் மீண்டும் அவரிடம் சென்று 'இறைவனுக்காக அதனை

எவ்விதக் கூலியும் பெறாமல் தைத்துத் தருமாறு கூறும்!' என்று ஆலோசனை பகர்ந்தேன்.

''அவ்விதமே நண்பர் செய்ய, 'நீராக இதனைக் கூறவில்லை. எவரோ ஒருவர் இவ்விதம் கூறுமாறு உம்மிடம் சொல்லியிருக்கிறார்கள்' என்று மொழிந்து தலையை நிமிர்த்திப் பார்த்தார். நான் அங்கு நிற்பதைக் கண்டதும், நிலைமையை ஒருவாறு விளங்கிக் கொண்டு, 'நல்லது; உம் செருப்பை வைத்து விட்டுப் போம்! பிற்பகலில் வாரும்! நான் அப்பொழுது உயிரோடிருந்தால், அதனை உம்மிடம் திருப்பித் தருகிறேன். நான் இறந்து விட்டால், அதனைப் பக்கத்துக் கடைக்காரரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளும்!' என்று கூறினார்.

''பின்னர் அவர் என்னைத் தனியாக அழைத்துச் சென்று, 'நண்பர்கள் ஒருவரோடொருவர் இவ்வாறு தானா நடந்து கொள்வது? ஒருவர் விரும்பாத செயலை, இவ்வாறு தானா அவர் மீது திணிப்பது? இனிமேல் நீர் இவ்விதம் செய்யாதீர்! என் நிலைமை பற்றி எவரிடமும் கூறாதீர்! நான் எவரும் அறியப்படாத நிலையில் இருப்பதையே விரும்புகிறேன் என்று சொன்னார். நான் அவர் போன்ற மனிதரைப் பார்த்ததே இல்லை. பின்னர் அவர் தனிமையை விரும்பிக் கானகம் சென்று விட்டார்.

''நாற்பது ஆண்டு, கானகத்தில் கடும் தவம் செய்து, பின்னர் செவில்லி வந்து நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து வந்த பெர்பர் இனத்தைச் சேர்ந்த ஸாலிஹ் அல் அதவியுடனும் நான் தொடர்பு கொண்டுள்ளேன். இரவு பகலாக அவர் திருக்குர்ஆனையே ஓதிக் கொண்டிருப்பார். அவருடன் நான் பல ஆண்டுகள் பழகிய போதினும், அவர் என்னுடன் பேசிய வார்த்தைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

''ஓராண்டு அரஃபாத் நாள் அன்று செவில்லியில் தான் இருந்தார். அவ்வாண்டு 'ஹஜ்'ஜு செய்யச் சென்ற ஒரு மனிதர், அவரை ஹஜ்ஜு அன்று அங்கு வைத்துப் பார்த்ததாகக் கூறினார்.

''அவர் 'உளூ'ச் செய்யும்பொழுது, அவருடைய நிறம் நாணத்தாலும், அச்சத்தாலும் மாறுதலடைந்து விடும். ஒரு நாள் இதுபற்றி அவரிடம் வினவிய பொழுது, 'பாவியாகிய நான் அல்லாஹ்வின் முன் செல்லும் பொழுது, எவ்வாறு நாணமுறாமலும் அச்சமுறாமலும் இருக்க இயலும்?' என்று அவர் கூறினார்.

''ஒரு நாள் அவர் 'உளூ'ச் செய்து, ஒரு நாற்காலியில் அமர்ந்து, தம் முகத்தையும் கைகளையும் துடைத்துக் கொண்டிருக்கும் பொழுது, நான் அவரின் முன் போய் நின்றேன். அவர் என்னை ஏறிட்டுப் பார்த்தார். அது நான் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்த துவக்க காலம்.

அப்பொழுது நான், சில ஆன்மீக அனுபவங்களைப் பெற்றிருந்த போதினும், அவற்றை நான் எவரிடமும் எடுத்துரைக்கவில்லை. அவர் என்னை நோக்கி, 'மகனே! நீ தேனைச் சுவைத்த பின் காடியைச் சுவைக்காதே! அல்லாஹ் உனக்கு ஒரு வழியைக் காண்பித்துள்ளான். அதில் நீ உறுதியாக இருப்பாயாக!' என்று கூறிவிட்டு, 'உனக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?' என்று விசாரித்தார். 'இரண்டு சகோதரிகள்' என்று நான் பதிலிறுத்தேன். 'அவர்கள் இருவருக்கும் மணம் முடிந்து விட்டதா?' என்று அவர் அடுத்து வினவினார். 'இல்லை அவர்களில் ஒருவருக்கு அமீர் அபுல் அலா இப்னு கஸூனை மணம் பேசியுள்ளது' என்று கூறினேன். அப்பொழுது அவர் 'அத்திருமணம் நிகழ்வுறாது. அந்த மணமகன் இறந்துவிடுவார். உன் தந்தையும் இறந்துவிடுவார். அதன் பின் நீ தான் உன் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும்.'

'உம் உறவினர்கள், உம்மை உலகின் பக்கல் திருப்பப் பெரிதும் முயல்வர். உம் குடும்பத்தைக் காப்பாற்ற நீர் உழைக்க வேண்டுமென்று கூறுவர். அவர்கள் கூறுவதற்கெல்லாம் மயங்கிவிடாதீர்! அவர்களிடம், 'தொழுது வருமாறு, நீர் உம்முடைய குடும்பத்தினரை ஏவும்! அதன் மீது உறுதியாக இரும்! (இதற்காக) நாம் உம்மிடம் யாதொன்றையும் கேட்க வில்லை. உமக்கு வேண்டியவற்றையெல்லாம் நாமே கொடுக்கின்றோம். முடிவான நன்மை பரிசுத்தத் தன்மைக்குத் தான்' (20: 132) என்னும் திருவசனத்தை ஓதிக் காட்டும்!' என்று கூறினார்.

''அவர் கூறிய வண்ணமே, மணமகன் அவ்வாண்டு முடிவதற்குள் இறந்தார். என் தந்தையும் இறந்தார். ஆறு ஆண்டுகள் கழித்து என் அன்னையும் இறந்தார்.

''குடும்பத்தினர் என்னிடம் வந்து, குடும்பத்தைக் காப்பாற்று வதற்காக உலகவாழ்வில் ஈடுபடுமாறு பெரிதும் என்னை வற்புறுத் தினார்கள். அப்பொழுது,

'அவர்கள் இறைவழியிலிருந்து என்னைத் திருப்ப முயல்கிறார்கள். நான் எவ்வாறு அவ்வழியை விட்டு நீங்க இயலும்? உண்மை என்ற விடியற்காலை வெளிச்சத்திற்குப் பின், தவறு என்ற இருளைத் தவிர வேறு என்ன உள்ளது? ஆதலின் நீங்கள் சொல்வது போல் என்னால் செய்ய இயலாது'

என்னும் கருத்தமைந்த கவி என் நாவிலிருந்து வெளி வந்தது.

''இதன் பின் அரசர் என்னை அரசாங்கப் பணியில் ஈடுபடுத்த விரும்பி, தலைமை நீதிபதி யஃகூப் அபுல் காசிம் இப்னு தகீயை என்னிடம் அனுப்பி வைத்தார். நான் அவர் கூறிய ஆலோசனையை

ஏற்றுக் கொள்ளவில்லை. ஸாலிஹ் அல் அதவீ கூறிய அறிவுரையே என் செவியில் நீங்காது ஒலித்துக் கொண்டிருந்தது.

''பின்னர் அரசரே என்னை அழைத்து, என் சகோதரிகளின் நிலைமையை விசாரித்து, அவர்களுக்குத் தாம் தகுந்த மணமக்களைத் தேடி மணமுடித்து வைப்பதாகக் கூறினார். நானே அப்பணியைச் செய்து விடுவதாகக் கூறினேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'எனக்கும் ஒரு கடமையுள்ளதல்லவா? அதற்காகக் கூறுகின்றேன்' என்று சொன்னார். பின்னர் அவர் தம் வாயில் காப்போனை நோக்கி, 'இவரிடமிருந்து பகலிலேனும் இரவிலேனும் எச் செய்தி வந்த போதினும், உடனே என்னிடம் வந்து அதனைத் தெரிவிக்க வேண்டும்' என்று கூறினார். சில நாட்கள் கழித்து, அவரிடமிருந்து ஒரு தூதுவர் என்னிடம் வந்து, என் சகோதரிகளின் திருமண விஷயத்தில் அரசர் உதவி செய்ய விரும்புவதை மீண்டும் கூறி என் இணக்கத்தை வேண்டினார்.

''நான் நன்றியுடன் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டு என் குடும்பத்தை அழைத்துக் கொண்டு, பாஸ் சென்று, அங்கு என் சகோதரிகளை மணமுடித்துக் கொடுத்தேன்''.

இவ்வாறு தாம் சந்தித்து அளவளாவிய இறைநேசச் செல்வர்களைப் பற்றித் தாம் எழுதிய 'ரூஹுல் குத்ஸ்' என்ற நூலிலும், 'அல் துர்ரத்துல் ஃபாஹிரா' என்று நூலிலும் கூறிக் கொண்டே செல்கிறார்கள் இப்னு அரபி (ரஹ்) அவர்கள். இச்சந்திப்புகளின் காரணமாக, அவர்களின் ஆன்மீக அறிவு நாளுக்கு நாள் மெருகேறிக் கொண்டே வந்தது. அவர்களை மக்கள் பெரிதும் மதிக்கத் தொடங்கினர். ஆன்மீகம் பற்றி அவர்கள், மார்க்க மேதைகளுடன் வாக்குவாதம் நிகழ்த்தினார்கள். அல் கய்யூம் (நிலையானவன்) என்ற இறைவனின் பண்பை, மனிதன் அடைய முடியாதென முஃதஸிலாக் கொள்கையையுடைய மாபெரும் ஷைகு, அபூ அப்துல்லாஹ் இப்னு ஜுனைது அல் கப்ரஃபீகி கூறுகின்றாரெனக் கேள்வியுற்று, அவரின் இருப்பிடத்திற்குச் சென்று, அவரின் மாணவர்களின் மத்தியிலேயே வைத்து, அவருடன் தொடர் வாக்குவாதம் நிகழ்த்தி, அவரை அவர்கள் வென்றார்கள்.

முப்பது வயது வரை அவர்கள் வெளிநாடு சென்றதில்லை. ஹிஜ்ரி 590 ஆம் ஆண்டிலே தான் அவர்கள் முதன் முறையாகக் கடல் கடந்து, தூனிஸ் சென்றனர். அங்கு வைத்தே அவர்கள், இப்னு கஸிய்யி எழுதிய 'கல் அல் நஃலைன்' (காலணிகளைக் கழற்றுதல்) என்ற நூலைப் படிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. பின்னர் அவர்கள் அதற்கு ஒரு பெரிய விரிவுரை எழுதினார்கள்.

தூனிஸில் வைத்தே அவர்களுக்கும், கிள்ரு (அலை) அவர்களுக்கும் இடையே இரண்டாவது சந்திப்பு நிகழ்ந்தது.

''மற்றொரு சமயம் நான் தூனிஸ் துறைமுகத்திலுள்ள ஒரு படகில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது எனக்கு வயிற்று வலியாக இருந்தது. கப்பலில் இருந்த அனைவரும் உறங்கி விட்டனர். நான் கப்பலின் ஓரத்திற்கு வந்து, கடல் அலைகளைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது கடலின் மீது எவரோ நடந்து வருவது போன்றிருந்தது. ஆம்; அவர் நடந்தே வந்தார். கப்பலை நெருங்கியதும், கப்பலில் ஒரு கால் வைத்தார். அது நனையாமல் இருந்தது. அதன்பின் மறுகாலை எடுத்து வைத்து ஏறினார். அதுவும் நனையாமல் இருந்தது. கப்பலில் நின்று, சற்ற நேரம் உரையாடி விட்டு எனக்கு 'ஸலாம்' கூறி விட்டுப் பிரிந்தார். அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில், ஒரு கலங்கரை விளக்கம் இருந்தது. அதனை அவர் இரண்டு, மூன்று எட்டில் அடைந்து விட்டார். அங்கிருந்து அவர் இறைவனைத் துதி செய்து கொண்டிருந்த ஒலி, என் செவிகளை வந்தடைந்தது. விடிந்ததும் நான் கப்பலிலிருந்து இறங்கி ஊருக்குள் சென்றேன். அப்பொழுது ஒருவர் என்னைச் சந்தித்து, கப்பலில் கிள்ரு (அலை) அவர்களுடன் நிகழ்ந்த சந்திப்பு, எவ்வாறிருந்ததென்றும், அவர் என்னிடம் என்ன வினவினார் என்றும், அதற்கு நான் என்ன விடையிறுத்தேன் என்றும் விசாரித்தார்''.

இதன்பின் இப்னு அரபி (ரஹ்) தூனிஸிலுள்ள பல்வேறு இறை நேசச் செல்வர்களையும், அறிஞர்களையும் சந்தித்து அளவளாவினர். தூனிஸில் உள்ள மர்ஸா இதூன் என்ற பகுதியில் வாழ்ந்து வந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் அபூ முஹம்மது ஜர்ரா அல் முராபித் என்பவரையும், அவர்கள் சந்தித்தனர். அவர் அங்கிருந்த முக்கியமானவர்களில் ஒருவராக இருந்தார். சிறந்த இறைநேசச் செல்வராக இருந்த அவர் அப்துல் அஸீஸ் மஹ்தவீயுடைய ஆன்மீக ஆசானாகவும் இருந்தார். எனினும், ஆசானின் மாண்பினை மாணவர் நன்கு அறியவில்லை. அதற்குக் காரணம், ஆசான் பிறரிடம் தம்முடைய மாண்பை வெளிப்படுத்தாது மறைத்து வந்ததேயாகும்.

அபூமத்யன் (ரஹ்) அவர்களின் பேச்சைக் கேட்டே, ஆன்மீகப் பாதையில் ஈர்க்கப்பட்டவர் ஜர்ரா அல் முராபித் ஆவார். அவர் மீது அபூமத்யன் (ரஹ்) அவர்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். ஒரு தடவை அபூமத்யன் (ரஹ்) அவர்கள் பெச்சீனா என்ற இடத்திற்கு வந்திருந்த பொழுது, ''எனக்கு மட்டும் ஜனாஹ் (சிறகுகள்) இருப்பின், நான் ஜர்ராவிடம் பறந்து சென்றிருப்பேன்'' என்று கூறினார்கள்.

அவரைக் காண இப்னு அரபி (ரஹ்) அவர்கள், தம்முடைய ஷைகு களான அபூ யஃகூப், அபூ முஹம்மது அல் மௌரூரி ஆகிய இருவரையும் பின்பற்றி, கொதிக்கும் வெய்யிலில் வெறுங்காலுடனே நடந்து சென்றார்கள். அவர்கள் பாதித் தொலை தான் சென்றிருப்பார்கள். அப்பொழுது ஒரு மனிதர் எதிர்ப்பட்டு, தாம் ஷைகு அல் ஜர்ரா அல் முராபித்திடமிருந்து வருவதாகவும், அவர் அவர்களைக் காலணிகளை அணிந்து வருமாறு கேட்டுக் கொண்டதாகவும், அவர்கள் வருவதற்கான காரணத்தை அவர் நன்கு அறிந்திருப்பதாகவும், அவர்களுக்காக அவர் உணவு தயாரித்து வைத்திருப்பதாகவும் சொன்னார்.

அவர்கள் அவரின் இல்லத்தை நெருங்கிய பொழுது, வயதின் காரணமாகத் தளர்ந்திருந்த அவர், கழி ஊன்றிய வண்ணம் தள்ளாடித் தள்ளாடிச் சற்றுத் தொலைவு நடந்து வந்து, அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தம் இல்லம் அழைத்துச் சென்றார். அவருடன், அவர்கள் சில நாட்கள் தங்கி, ஆன்மீகம் பற்றி உரையாடினர். அவர்கள் அவரின் இல்லத்தில் இருக்கும் பொழுது, அவரின் பேரருளால் ஒருவர் தம் பாதகங்கள் நனையா நிலையில் கடலில் நடந்து செல்வதைத் தம் கண்களால் கண்டனர். அவரை விட்டு அவர்கள் விடைபெறும் பொழுது, தம்முடைய உண்மை நிலையைத் தம் மாணவர் அப்துல் அஸீஸ் அல் மஹ்தவீயிடம் தெரிவிக்க வேண்டாமென்று, அவர் பெரிதும் வற்புறுத்தி அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இப்பொழுது வட ஆப்பிரிக்காவில் அல்முஹத் அரச பரம்பரை யினருக்கும், அவர்களின் எதிரிகளுக்கும் இடையே தொடர்ந்து போர் நடந்து வந்ததால், இப்னு அரபி (ரஹ்) அவர்கள், உந்துலுஸ் திரும்பினர். வழியில் அவர்கள், தல்மஸின் என்னும் இடத்தில் தங்கிய பொழுது, அங்கு வாழ்ந்து வந்த அபூ அப்துல்லாஹ் அல் தர்த்தூஸி என்பவரைச் சந்தித்து உரையாடினர். உரையாடலினூடே அவர் அபூ மத்யன் (ரஹ்) அவர்களைக் குறை கூறியதைக் கண்டு, இப்னு அரபி (ரஹ்) அவர்களின் உள்ளம் பெரிதும் வருந்தியது. அவர்கள் அவரை வெறுக்கலாயினர்.

அன்றிரவு அவர்கள் அயர்ந்து உறங்கும் பொழுது, கனவொன்று கண்டனர். அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''நீர் ஏன் அவரை வெறுக்கிறீர்? அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவர் நேசிப்பதற்காக, நீர் ஏன் அவரை நேசிக்கக் கூடாது?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! இப்பொழுதிருந்தே நான் அவ்விதம் செய்கிறேன்'' என்று பதிலிறுத்தனர்.

விடிந்தெழுந்ததும், சில பொற்காசுகளையும், அழகிய உடைகளையும் எடுத்துக் கொண்டு, அபூ அப்துல்லாஹ் அல் தர்த்துஸின் இல்லம் சென்று, அவருக்கு அவற்றை அன்பளிப்புச் செய்து, தாம் கண்ட கனவையும் விண்டனர். அதுகேட்ட அவர், தம் மீது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொண்ட அன்பையும், தாம் இதுகாறும் செய்து வந்த தவற்றினையும், எண்ணிக் கண்ணீர் வடித்தார். அடுத்த கணம் அவர், அபூ மத்யன் (ரஹ்) அவர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பு அன்பாகவும், மதிப்பாகவும் மலரத் தொடங்கியது.

பின்னர் உந்துலூஸின் துறைமுகமாகிய தரிஃபாவில் அவர்கள் வந்து இறங்கியதும், அவர்களை வரவேற்க அவ்வூரைச் சேர்ந்த அப்துல்லாஹ் அல் கலஃபத் வந்திருந்தார். அவர், அவர்களை அன்போடு வரவேற்று, தம் இல்லம் அழைத்துச் சென்று, அவர்கள் படகில் வைத்து என்ன உணவு உண்ண விரும்பினார்களோ, அந்த உணவையே அவர்களின் முன் வைத்து உண்ணுமாறு வேண்டிக் கொண்டார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நான் இங்கு, இன்று வந்து இறங்குவது தங்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது? இந்தக் குறிப்பிட்ட உணவைத் தாங்கள் எனக்காகச் சமைத்து வைக்கக் காரணம் என்ன?'' என்று வினவினர். அதற்கு அவர், ''தாங்கள் இன்று வந்து கரை இறங்கு கின்றீர்கள் என்பதையும், தங்களுக்கு இந்த உணவு மிகவும் பிடித்தமானது என்பதையும், நான் உள்ளுணர்வின் மூலம் அறியவந்தேன்'' என்று பதிலிறுத்தார்.

இதன்பின் செவில்லி திரும்பிய அவர்களுக்கு மற்றொரு வியப்பு காத்திருந்தது. அங்கு அவர்கள் முன்பின் பார்த்தறியாத ஒருவர் அவர்களைச் சந்தித்து, அவர்கள் எழுதி எவருக்கும் காட்டாது வைத்திருந்த கவிதை ஒன்றை, அப்படியே ஓர் எழுத்துக் கூட விடாது, அவர்களிடம் பாடிக் காட்டினார். அது கேட்டுப் பெரிதும் வியப்புற்ற அவர்கள், 'இதனை இயற்றியவர் யார்?'' என்று அவரிடம் வினவினார்கள். ''முஹ்யித்தீன் இப்னு அரபி'' என்று அவர் பதில் கூறினார். ''எப்பொழுது இது தங்களுக்குக் கிடைத்தது?'' என்று அவர்கள் வினவினர். ''நெடுந் தொலையில் நான் இருந்த போதினும், அவர் இதனை இயற்றிய அன்றே எனக்குக் கிடைத்தது'' என்று அவர் விடையிறுத்தார், ''எவ்வாறு?'' என்று அவர்கள் மீண்டும் வினவினர்.

அதற்கு அவர், ''ஓரிரவு நான், என் சகோதர சூஃபிகளுடன் இவ்வூரின் கிழக்குப் பகுதியில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு பக்கீர் வந்து எங்களுடன் அமர்ந்தார். எங்களுடன் சற்று நேரம் உரையாடி விட்டு, இக்கவிதையைக் கூறினார். இக்கவிதை

எங்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததால், நாங்கள் அதனை எழுதிக் கொள்ள விரும்பினோம். அப்பொழுது நாங்கள் அவரை நோக்கி, 'அதனை யார் இயற்றியது?' என்று வினவினோம். அதற்கு அவர், அதனை இப்னு அரபி, இப்னு முதன்னாவின் பள்ளியில் வைத்து எழுதியதாகக் கூறினார். 'அப்படியா! அந்த இடத்தைப் பற்றி நாங்கள் கேள்வியுற வில்லையே. அது எங்கு உள்ளது?' என்று வினவினோம். அது தூனிஸில் இருப்பதாகவும், அவர் இதனை அப்பொழுது தான், அங்கு வைத்து இயற்றியதாகவும் கூறினார்'' என்று சொன்னார்.

இதன்பின் ஒரு நாள் அவர்கள் ரோட்டா என்ற சிற்றூருக்கு நடந்து சென்றார்கள். அவ்வூரில் ஹஸன் என்ற இறைநேசச் செல்வரின் தவமடம் ஒன்று இருந்தது. அதுவே அவ்வூரின் பள்ளி வாசலாகவும் இருந்தது. அங்கு இரவு நேரங்களில், பல புனித ஆத்மாக்கள் வருவதாகவும் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. வழியில் தாடியில்லாத ஓர் இளைஞரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

அன்று வெள்ளிக்கிழமையாதலால், விரைவில் அவ்வூரை அடைந்து, அங்கிருந்த பள்ளியில் இரண்டு 'ரகஅத்' காணிக்கைத் தொழுகை தொழுது மதிலில் சாய்ந்து தம்முடைய கையை நெஞ்சில் அடித்த வண்ணம், ''முத்து நிகர் பற்களால் அவன் தன்னுடைய முகத்தின் பரிபூரண அழகை வெளிப் படுத்திக் கொண்டுள்ளான். காலத்தால் அவனைக் கட்டுப்படுத்த இயலாது. எனினும் என் நெஞ்சம் அவனைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது'' என்னும் கருத்தமைந்த கண்ணிகளை வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அபூ அப்துல்லாஹ் முஹம்மது இப்னு அஷ்ரஃப் அல் ரண்டி என்னும் இறைநேசச் செல்வர், இப்னு அரபி (ரஹ்) அவர்களை அணுகி, ''நீர் எவர் என்பதை மறைக்க முயன்று கொண்டிருக்கிறீரோ?'' என்று வினவினார். அதற்கு அவர்களும், ''தாங்களும் அவ்விதமே தங்களை மறைக்க முயன்று கொண்டிருக்கவில்லையா?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் பதிலிறுக்காது புன்முறுவல் பூத்தனர்.

உயர்ந்த செல்வக் குடும்பத்தில் பிறந்த அல் ரண்டி ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்து, உயரிய படித்தரத்தை எய்தப் பெற்றார். ஓரிரவு ஒரு மனிதர், ஒரு மலையில் வீற்றிருந்த பொழுது, மலையின் மீது ஒளித்தூண் போன்று ஒன்று நிற்பதைக் கண்டார். அதனை ஏறிட்டுப் பார்க்க அவரின் கண்கள் கூசின. எனினும் சமாளித்துக் கொண்டு, அவர் அதனை அணுகிய பொழுது, அது அல் ரண்டியாகவே இருந்தது. அவர் மலை மீது நின்று தொழுது கொண்டிருந்தார்.

மற்றொரு தடவை அவர் காட்டின் நடுவே சென்று கொண்டிருந்த பொழுது, திருடர்கள் அவரை வழி மறித்து, ''நீர் அணிந்திருக்கும் துணி களைக் களைந்து தாரும்!'' என்று அவரை அதட்டினர். அதற்கு அவர், ''நான் இறைவனுக்கு மாறான செயலைச் செய்வதில் உங்களுடன் ஒத்துழைக்க இயலாது. நீங்கள் விரும்பின் அவற்றைக் களைந்து கொண்டு செல்லுங்கள்!'' என்று கூறிவிட்டு, அவர்களை ஒரு பார்வை பார்த்தார். அடுத்த கணம் அவர்களை ஒருவிதத் திடுக்கம் ஆட்கொள்ள, அவர்கள் அவ்விடத்தை விட்டும் வெருண்டோடி விட்டார்கள்.

இத்தகு மாண்பாளரைத் தம் நண்பர் அல் ஹபஷிக்கு அறிமுகப்படுத்த விரும்பி, அவரை அழைத்துக் கொண்டு, இப்னு அரபி (ரஹ்) அவர்கள் ரண்டாவுக்கு வந்தனர். அங்கு ஒரு ஜனாஸாத் தொழுகையில் அவரை எதிர்பாரா வண்ணம் சந்தித்து, அல் ஹபஷியை அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தனர். இறந்தவரை நல்லடக்கம் செய்த பின், இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அவரை அழைத்துக் கொண்டு, தாம் தங்கியிருந்த அறைக்குச் சென்றனர். அப்பொழுது மூவரும் சேர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபொழுது, அல் ரண்டி செய்யும் அற்புதத்தைக்காண அல் ஹபஷி பெரிதும் விரும்பினார். இதனை இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அல் ரண்டியிடம் கூற, அவரும் அதற்கு இணங்கினார்.

பொழுதடைந்ததும் மூவரும் தொழுதனர். அப்பொழுது வீட்டு உரிமையாளர் விளக்குக் கொணரத் தாமதித்ததால், அறை முழுதும் இருட்டாக இருந்தது. உடனே அல்ரண்டி அருகில் கிடந்த ஒரு புல் கற்றையைத் தம் 'கலிமா' விரலால் தட்டி, 'இதோ நெருப்பு' என்று கூறினார். உடனே அது தீப்பற்றி எரிந்தது. அந்த நெருப்பைக் கொண்டு, அவர்கள் விளக்கை ஏற்றிக் கொண்டனர். சில பொழுது அவர், அடுப்பி லிருந்து நெருப்பைத் தம் கைகளால் எடுப்பார். எனினும் நெருப்பு அவருடைய கையைச் சுடாது.

அவர் கல்வியறிவில்லாதவராக இருந்தார். எப்பொழுதும் அழுது கொண்டே இருப்பார். ஒருநாள் அதற்கான காரணத்தை இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அவரிடம் வினவிய பொழுது, ''நான் ஒருவனைச் சபித்து விட்டேன். அதன் காரணமாக அவன் இறந்துவிட்டான். அதனை நினைத்து வருந்திக் கண்ணீர் வடித்துக் கொண்டுள்ளேன்'' என்று பதிலிறுத்தார் அவர்.

மற்றொரு தடவை அவர் நிகழ்த்திய அற்புதம் ஒன்றை இதோ இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

''ஒரு தடவை நாங்கள் மர்ச்சேனா என்ற ஊருக்கு வெளியே அவருடன் இருந்தோம். தொழ நேரம் வந்தது. அப்பொழுது தொழும் திசை பற்றி எங்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அப்பொழுது அவர் தம் 'கலிமா' விரலால் ஒரு திசையைச் சுட்டிக்காட்டி, 'இது தான் கிப்லா. அதோ கஃபா இருக்கிறது' என்று கூறினார். நாங்கள் அத்திசை நோக்கித் தொழுதோம். என்ன வியப்பு!

''நான் கஃபாவை என் கண் முன்னால் பார்த்தேன். மக்கள் அதைச் சுற்றி வருவதையும் பார்த்தேன். கஃபாவின் அருகே எனக்கு அறிமுகமான சிலர் சென்று கொண்டிருப்பதையும் பார்த்தேன். நாங்கள் தொழுது முடித்ததும், எங்களின் கண்முன் காட்சியளித்த கஃபாவும் மறைந்து விட்டது''.

இதன்பின் ஒரு நாள் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தம் நண்பர் ஒருவருடன் கடலோரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவரோ இறைநேசச் செல்வர்கள் அற்புதம் நிகழ்த்துவதை நம்பாதவர். வழியில் ஒரு பாழடைந்த பள்ளியைக் கண்டு, அதில் அவர்கள் தொழச் சென்றார்கள். அங்கு தொழுவதற்காக சூஃபிகளின் கூட்டம் ஒன்று வந்தது. அதில், இப்னு அரபி (ரஹ்) அவர்களைக் கடலில் கிடந்த கப்பலில் சந்தித்து உரையாடியவரும், கிள்ரு (அலை) அவர்கள் என்று பின்னர் தெரிய வந்தவருமான மனிதரும் இருந்தார். தொழுது முடிந்ததும், அவர் மிஹ்ராபில் விரிக்கப்பட்டிருந்த தொழுகை விரிப்பை எடுத்துத் தரையிலிருந்து ஏழடி உயரத்தில் விரித்து அதன் மீது நின்று நஃபீல் தொழுகை தொழத் தொடங்கினார். இதனை இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தம் நண்பரிடம் சுட்டிக் காட்டினார்கள். அப்பொழுது அவர், அது பற்றி அவரிடம் வினவுமாறு கூறினார். அவ்வாறே அவர் தொழுது முடித்ததும், ''ஏன் தாங்கள் இவ்வாறு தொழுதீர்கள்?'' என்று இப்னு அரபி (ரஹ்) அவர்கள் வினவினார்கள். அதற்கு அவர், ''உம்முடைய நண்பர், இறைநேசச் செல்வர்கள் அற்புதம் நிகழ்த்துவதை நம்பாதிருக்கிறாரல்லவா? அவர் அதனை நம்புவதற்காகச் செய்தேன்'' என்று பதில் கூறினார்கள்.

அடுத்த ஆண்டு, அதாவது ஹிஜ்ரி 591 ஆம் ஆண்டு, அவர்கள் ஃபெஸ்ஸுக்குச் சென்றனர். அப்பொழுது அவர்கள் அல்முஹத் அரச பரம்பரையின் சுல்தான் யஃகூப் அல்மன்சூர், அலர்க்காஸ் என்னும் இடத்தில் கிறிஸ்தவர்களை முறியடித்து, வாகை சூடுவார் என்ற முன்னறிவிப்புச் செய்தனர். அவர்கள் கூறிய வண்ணமே பின்னர் நிகழ்ந்தது.

இது பற்றி அவர்கள் பின்வருமாறு தம்முடைய ''ஃபுத்தூ ஹாத்'' தில் கூறுகிறார்கள்:

''நான் ஹிஜ்ரி 591 ஆம் ஆண்டில் ஃபெஸ்ஸில் இருந்தேன். அப்பொழுது அல்ஹமுத் படையினர், தம் நாட்டின் மீது அபாயம் விளைவித்த எதிரிப்படைகளைத் தண்டிக்கக் கடல் கடந்து, உந்துலூஸ் சென்றிருந்தனர். அப்பொழுது நான், என் நெருங்கிய நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவரோ இறைஞான வழியில் அடியெடுத்து வைத்து நடப்பவர். அவர் என்னை நோக்கி, 'எவர் வெற்றியடைவார்?' என்று வினவினார். 'தங்களுடைய கருத்து யாது?' என்று நான் அவரைத் திருப்பி வினவினேன்.

''அதற்கு அவர், 'இறைவன் தன் திருத்தூதருக்கு, இவ்வாண்டு வெற்றியளிப்பதாகத் தன் திருமறையில் கூறியுள்ளான்' என்று கூறி, 'திட்டமாக நாம் உமக்குத் தெளிவான வெற்றியைத் தந்துள்ளோம்', என்று பொருள்படும் திருவசனத்தை ஓதினார். அதன்பின் இங்கு தெளிவான வெற்றி என்பதைக் குறிப்பிட அவன் பயன்படுத்தியுள்ள சொற்கள், 'ஃபத்ஹுன் முபீனன்' என்பதாகும். இதனை அப்ஜத் கணக்கால் கூட்டிப் பார்த்துக் கொள்க!' என்றார். நான் அவ்விதமே கூட்டிப் பார்த்தேன். 591 வந்தது.''

ஹிஜ்ரி 592 -ஆம் ஆண்டு இப்னு அரபி (ரஹ்) அவர்கள் சிவில்லி திரும்பி, ஹதீதுக் கலையைத் தம் சிறிய தந்தையிடம் கற்பதில் கவனம் செலுத்தி வந்தனர். இச்சமயத்தில் அவர்கள் சிவில்லியிலுள்ள ரிளா பள்ளிவாயிலின் இமாமாகிய அபூ இம்ரான் மூஸா இப்னு இம்ரான் அல் மர்த்தூலி என்பவரைக் காண அவரின் இல்லம் சென்றிருந்தனர். அங்கு அபுல் காசிம் என்னும் ஹதீதுக்கலை வல்லுனரைச் சந்திக்க நேர்ந்தது. அவரோ இறை நேசச் செல்வர்கள் அற்புதம் நிகழ்த்துவதை நம்பாதவர். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய இரண்டு ஹதீதுகள் தங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினர். ''என்ன அவை?'' என்று அவர் கேட்டார்.

அதற்கு அவர்கள், ''தலைமுடி அலங்கோலமாகவும், கிழிந்த ஆடை அணிந்தும், மக்களால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் சிலர் இறைவன் மீது ஆணையிட்டுச் சிலவற்றைக் கூறுவார்கள். அவர்களின் ஆணையை இறைவன் நிறைவேற்றி வைப்பான்,'' என்ற ஹதீதைத் தாங்கள் அறிந்திருக்கிறீர்களா?'' என்று வினவினர். ''ஆம்'' என்று அவர் பதிலிறுத்தார்.

மீண்டும் அவர்கள் அவரை நோக்கி, ''நல்லது, 'அல்லாஹ்வின் நல்லடியார்கள், இறைவன் மீது ஆணையிட்டுக் கூறின், அல்லாஹ் அதனை நிறைவேற்றி வைப்பான்' என்ற மற்றொரு ஹதீதையும் தாங்கள் அறிந்திருக்கிறீர்களா?'' என்று வினவினர். ''ஆம்'' என்றார் அவர்.

அப்பொழுது அவர்கள், ''அல்லாஹ்வின் நல்லடியார்கள் ஆணை யிட்டுக் கூறுதல் எனில் நீர் மேல் நடப்பது, காற்றிலே பறப்பது, நெடுந் தொலைவைக் கணத்திலே கடப்பது, உண்ணாது உயிர் வாழ்வது, ஒரு வரின் உள்ளத்தில் உள்ளதை அறிவது, ஆகியவற்றையெல்லாம் குறிக்கு மல்லவா?'' என்று வினவினர். அவர் யாது பதில் கூறுவதென அறியாது திணறினார். அப்பொழுது அபூ இம்ரான் மர்த்தூலி அவர்கள் குறுக்கிட்டு, ''உமக்கு இறைவன் நல்லருள் பாலிப்பானாக!'' என்று இப்னு அரபி (ரஹ்) அவர்களை வாழ்த்தினார்கள்.

நாளுக்கு நாள் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் ஆன்மீகப் படித்தரம் உயர்ந்து வந்தது. தனிமையை நாடி அவர்கள் ஒரு சிற்றூர் சென்று, அங்குள்ள அடக்கவிடத்தில் அமர்ந்து தவம் செய்தார்கள். பெரும்பாலும் பட்டினியாயிருக்கும் அவர்கள், சில பொழுது வெளியில் வந்து எங்கேனும் காய்ந்த ரொட்டி கிடைப்பின், அதனைத் தண்ணீரில் நனைத்து உண்டு உயிர் வாழ்ந்து வந்தார்கள். இச் சமயத்தில் ஒரு நாள் கிள்ரு (அலை) அவர்கள் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் முன் திருத்தோற்றம் வழங்கி, அவர்களுக்கு தீட்சை நல்கி, 'கிர்க்கா'வும் வழங்கி மறைந்தனர். இதன்பின் அவர்களுக்கு ''இஸ்முல் அஃலமும்'' தெரிய வரலாயிற்று. இரும்பைப் பொன்னாக்கும் 'கீமியா' வித்தையையும் அவர்கள் தாமாகவே உதிப்பின் மூலம் தெரிந்து கொண்டார்கள்.

இதன்பின் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்கும் கிள்ரு (அலை) அவர்களுக்கும் இடையே அடிக்கடி சந்திப்பு நிகழ்ந்தது. இதைப்பற்றி இப்னு அரபி (ரஹ்) அவர்கள் 'புத்தூஹாத்' தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

''நான் கிள்ருடன் பல பாலைவனங்களில் பிரயாணம் செய்துள்ளேன். ஒரு தடவை மூஸா (அலை) அவர்களுடன், அவர்கள் கொண்ட தொடர்பைப் பற்றி நான் வினவினேன். அதற்கு அவர்கள், 'என் செய்வது? நான் அவருக்காக ஆயிரம் விஷயங்களைத் தயார் செய்து வைத்திருந்தேன். ஆனால், அவருக்கோ மூன்று விஷயங்களுக்குக் கூடப் பொறுமை இல்லாது போய் விட்டது. எனவே அவ்ரை விட்டுப் பிரிந்து விட்டேன்' என்று சொன்னார்கள்.''

இப்னு அரபி (ரஹ்) அவர்களின் ஆன்மீக உயர்வைக் கண்டு, செவில்லி மக்கள் அவர்களுக்குப் பெரிதும் மரியாதை செலுத்தினர்.

இதனை அவர்கள் விரும்பவில்லை. ஒரு நாள் அவர்கள் செவில்லியிலிருந்த அபுல் ஹுஸைன் இப்னு அம்ர் அல் துபைல் என்பவரின் இல்லம் சென்று தங்கிய பொழுது, அவரும் அவருடைய நண்பர்களும் அவர்களுக்குச் செய்த மரியாதைகளோ அளவிட முடியாதவையாக இருந்தன. அவர்களின் முன் கைகட்டி, வாய்பொத்தி, அவர்கள் நின்று கொண்டிருந்தனர். இது இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்கு என்னவோ மாதிரியாக இருந்தது. தம்முடன் பிறர் சாதாரணமாகப் பழக வேண்டுமென்று விரும்பிய அவர்கள், அபுல் ஹுஸைனை நோக்கி, ''வழக்கமான மரியாதைகளை விட்டொழிப்பதற்கான வழிகாட்டி'' என்று நான் எழுதிய நூலிலிருந்து ஓர் அத்தியாயத்தை உங்களுக்குப் படித்துக் காட்டவா?'' என்றனர். அதற்கு அவர் ''சரி'' என்று கூறியதும், அவர்கள் உடனே அவரைத் தம் அருகழைத்து அமரச் செய்து, தம் பாதங்களை அவரின் தொடை மீது வைத்து, அதனை அமுக்கி விடுமாறு கூறினர். இதன் உட்பொருளை அவரும் அவருடைய நண்பர்களும் விளங்கிக் கொண்டு, அக்கணத்திலிருந்து அவர்களுடன் சௌஜன்யமாகப் பழகினர்.

ஹிஜ்ரி 593 ஆம் ஆண்டில் அவர்கள், ஃபெஸ்ஸிலிருந்த அஸ்ஹர் பள்ளியின் இமாமான அப்துல் கரீம் என்பவர் ஃபெஸ்ஸில் தோன்றிய இறைநேசச் செல்வர்களைப் பற்றி ஆற்றிய பேருரைகளைக் கேட்பதற்காக, ஃபெஸ் சென்றனர். அங்கு சென்ற அவர்கள் அவர் ஆற்றிய பேருரைகளைக் கேட்டதுடன், அப்பள்ளியில் தனித்துத் தியானத்தில் மூழ்கியிருப்பதை வழக்கமாகக் கொண்டனர்.

ஒரு நாள் அவர்கள் அப்பள்ளியில் மற்றவர்களுடன் சேர்ந்து தொழுது கொண்டிருக்கும் பொழுது, பேரொளி ஒன்று அவர்களின் முன் தோன்றி அவர்களை மூடியது. அப்பொழுது அவர்களுக்குத் திக்குத் திசைகள் ஒன்றும் தெரியவில்லை. சற்று நேரத்திற்குப் பின் அப்பேரொளி மறைந்து விட்டது. இந்த நிகழ்ச்சியிலிருந்து ஒளியின் படித்தரத்தைத் தாம் அடைந்து விட்டதாக அவர்கள் உணரலாயினர்.

ஃபெஸ்ஸில் வைத்து அவர்களுக்கு அல் அஷல் அல் கபாயிலி என்னும் பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் அடிக்கடி வந்து அவர்களைச் சந்தித்துப் பழகி வந்தார். பேசினால் குர்ஆனைப் பற்றித் தான் அவர் பேசுவார். அவருடைய தகுதி யாது என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஓரிரவு அவர்கள் அயர்ந்து உறங்கும் பொழுது, கனவொன்று கண்டனர். அதில் அவர்களுக்கு அல் அஷல் கபாயிலி தாம் அந்தக் காலத்தின் 'குத்பு' என்று அறிவிக்கப்பட்டது. அன்று மாலை நல்லார் அல் ஸம்மாத், அவர்களிடம் வந்து, இப்னு ஹையான் தம்முடைய தோட்டத்

திற்குச் செல்வதற்காகத் தங்களை அழைத்து வரச் சொன்னார் என்று கூறினார். அவ்விதமே அவர்கள் சென்ற பொழுது இப்னு ஹையானுடன், ஏனையோரும் அவரின் தோட்டத்திற்குப் புறப்பட்டனர். அக்குழுவில் அல் அஷலும் இருந்தார்.

தோட்டத்தில் அமர்ந்து அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, திடீரென இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்குத் தாம் சென்ற இரவு கண்ட கனவு நினைவுக்கு வந்தது. அப்பொழுது அவர்கள், அங்கிருந்தோரை நோக்கி, ''சகோதரர்களே! நான் சென்ற இரவு இக்காலத்தின் 'குத்பு' பற்றிக் கண்ட வியப்பு மிகு கனவொன்றைக் கூறுகின்றேன்'' என்று கூறிவிட்டு, அல் அஷலை அவர்கள் திரும்பிப் பார்த்தனர். அப்பொழுது அவர், அவர்களை நோக்கி, ''நீர் கண்ட கனவை வேண்டுமானால் கூறும்! ஆனால் அதில் குறிப்பிட்டவரின் பெயரை மட்டும் கூறாதீர்!'' என்று சொல்லி முறுவல் பூத்தார். அவ்விதமே அவர்கள் செய்தார்கள்.

உரையாடல் முடிந்து அவர்கள் அனைவரும் அங்கிருந்து கிளம்பிய பொழுது, அல் அஷல், இப்னு அரபி (ரஹ்) அவர்களின் காதோடு வாய் வைத்து, ''நீர் என்னை எவரென விளங்கிக் கொண்டீர். இதன்பின் நான் இங்கிருப்பது நல்லதல்ல. எனவே நான் இன்றே இவ்வூரை விட்டுப் புறப்படுகிறேன்'' என்று கூறி விடை பெற்றார். இதன்பின் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அவரைச் சந்திக்கவே இல்லை.

ஃபெஸ்ஸில் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் மதிப்புப் பன்மடங்கு உயரலாயிற்று. இப்னு ஹையானின் தோட்டத்தில், இறைவழியில் அடியெடுத்து வைத்து நடப்பவர்களெல்லாம் குழுமியிருந்த அக்கூட்டம், இப்னு அரபி (ரஹ்) அவர்களைக் கௌரவிப்பதற்காகவே நடந்ததாகும். அதில் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் மட்டுமே பேசினர். மற்றவர்க ளெல்லாம் செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டே இருந்தனர். அவர்கள் தங்களிடையே எதைப் பற்றி விவாதித்த போதினும், முடிவு கூறும் பொறுப்பை, இப்னு அரபி (ரஹ்) அவர்களிடமே ஒப்படைத்தனர்.

ஃபெஸ் மக்கள் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களைக் காண்பதற்காக அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அலை அலையாய் வந்து கொண்டிருந்தார்கள். எனவே அவர்களிலிருந்து தப்ப எண்ணி, அவர்கள் சாதாரண மக்கள் அணியும் உடையணிந்து, அங்கிருந்த ஜாமிஆ பள்ளியின் மனாரா அருகே தனியாக அமர்ந்திருப்பார்கள். அவர்களைக் காண அவர்கள் தங்கியிருந்த இடம் சென்ற மக்கள், அங்கு அவர்களைக் காணாது பள்ளிவாயலுக்கு வந்து, அங்கிருந்த அவர்களிடமே அவர்களைப் பற்றி விசாரிப்பர். ''தேடிப் பாருங்கள்!'' என்று மட்டும் அவர்கள் பதில் கூறுவர்.

ஒருநாள் அவர்கள் வழக்கம் போல் பள்ளியில் மனாராவின் அருகில் அமர்ந்திருந்த பொழுது ஒருவர் வந்து அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து, அல் முஹாஸிபி எழுதிய 'ஞான விளக்கம்' என்ற நூலைத் திறந்து, அதிலிருந்து சில வரிகளைப் படித்து, அவற்றைத் தமக்கு விளக்கி அருளுமாறு வேண்டிக் கொண்டார். அப்பொழுது அவர்களுக்கு இறைவன் உள்ளுணர்வின் மூலம், அவர் நான்கு 'அவ்த்தாது' களில் ஒருவர் என்றும், அவருடைய பெயர் அப்துல்லாஹ் இப்னு ஜம்தூன் என்றும், அவருடைய மகனும் அவருக்குப் பின் அவ்த்தாதாக ஆகுவா ரென்றும் அறிவித்தான். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கித் தங்களின் பெயர் இன்னது தானே, தாங்கள் இன்னார் தாமே என்று வினவினர். அவ்வளவு தான். அவர் தம் கையிலிருந்த நூலை மடக்கி, ''நீர் என்னைப் பற்றி எவரிடமும் கூறாதீர்! நானும் உம்மைப்பற்றி எவரிடமும் கூற மாட்டேன்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

செவில்லியில் பிறந்து, ஃபெஸ்ஸில் வந்து வாழ்ந்து வந்த அப்துல்லாஹ் இப்னு தஹ்மிஸ்தையும், அவர்கள் ஃபெஸ்ஸில் வைத்துச் சந்தித்து அளவளாவினார்கள். அவர் 'அப்தால்'களில் ஒருவராக இருந்தார். அவர் சிறந்த மார்க்க மேதையாகவும் இருந்தார். பிறருக்குத் தெரியாத எத்தனையோ மார்க்க நுணுக்கங்களையெல்லாம் அவர் அறிந்திருந்தார்.

ஓரிரவு அவர் காவிய்யின் பள்ளிவாயிலில் நெடுநேரம் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டிருந்த பொழுது, அவர் பள்ளியினுள் இருப்பதை அறியாத முஅத்தின் பள்ளியைப் பூட்டி விட்டுச் சென்று விட்டார். தியானம் முடிந்து வந்து பார்க்கும் பொழுது, எல்லாக் கதவுகளும் மூடப் பட்டிருப்பதைக் கண்ட அவர், ஏதோ தம் வாய்க்குள் முணுமுணுத்தார். அடுத்த கணம் தானாகவே கதவொன்று திறந்தது. அதன் வழியே அவர் வெளியேறி இல்லம் சேர்ந்தார்.

அப்தால்களில் ஒருவராக இருந்து தாம் செய்த ஒரு தவறின் காரணமாக, அப்பதவியை இழந்த அல் ஷஹ்ஹான் என்பவரையும் அவர்கள் சந்தித்துள்ளார்கள். அவர், தாம் செய்த தவறை நினைத்து துக்கமே உருவாக இருந்தார். எவருடனும் உரையாடாது தனித்திருந்த அவர்மீது, அவர்கள் இரங்கி அன்பு செலுத்தினார்கள்.

ஏற்கனவே அவர்கள் அண்டங்களை ஆட்சி செய்யும் ஆன்மீக அரசு பற்றிய காட்சிகளைக் கண்டுள்ளார்கள். அண்ட கோளங்களின் முளை போன்றுள்ள குத்பையும், இரண்டு இமாம்களையும், நான்கு தூண்கள் போன்றுள்ள 'அவ்த்தாது' களையும், உலகின் தட்ப, வெப்பங்களைப் பரிபாலிக்கும் ஏழு 'அப்தால்'களையும், இராசிகளை ஆட்சி செய்யும்

பன்னிரண்டு 'நுகபா'க்களையும் விண்கோளங்களைப் புரக்கும் எட்டு 'நுஜபா' க்களையும் கண்டுள்ளார்கள்.

ஹிஜ்ரி 594 ஆம் ஆண்டில் ஃபெஸ்ஸில் வைத்து அவர்களுக்கு இறைவன் விலாயத்தெ முஹம்மதிய்யாவின் இறுதி முத்திரை போன்றவர் பற்றியும், அவரின் அடையாளங்கள் பற்றியும் சூக்கமாக உள்ளுணர்வின் மூலம் அறிவித்தான்.

இதன்பின் சூஃபிகள் தாம் நாட்டின் அமைதியின்மைக்குக் காரணம் என்று தவறாகக் கருதி, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அல் முஹத் அரசாங்கம் எத்தனித்துக் கொண்டிருப்பதை அறிந்த அவர்கள், உந்துலுஸ் திரும்பித் தம் பிறந்த ஊரான முர்ஸிய்யா செல்லும் வழியில், கிரானடாவில் சில நாட்கள் தங்கினர். அப்பொழுது அவர்களுக்கு ஓர் ஆச்சரியமான கனவு, தோற்றம் வழங்கியது. அதனை 'ஃபுத்துஹாத்துல் மக்கிய்யா'வில் அவர்களே பின்வருமாறு கூறுகிறார்கள்:

''நான் கார்டோவாவில் தங்கியிருக்கும் பொழுது அற்புதமான கனவொன்று கண்டேன். அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அரியணையில் வீற்றிருக்கிறார்கள். அவர்களைச் சூழ ஆதம் (அலை) அவர்கள் முதற் கொண்டு, அவனி தோன்றிய ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களும், அவர்களுக்குப் பின்னே வலிமார்களும் வீற்றிருக்கிறார்கள். இந்த மாண்பார்ந்த பேரவை கூட்டப்பட்டிருப் பதற்கான காரணத்தை அறிய என் இதயம் பெரிதும் அவாவுற்றது. என்னுடைய அவாவைத் தீர்த்து வைக்க ஹூத் (அலை) அவர்களைத் தவிர்த்து வேறு எவரும் முன்வரவில்லை. அவர்கள் நல்ல உடற்கட்டும் அழகும் வாய்க்கப் பெற்றவர்களாகவும், இனிமையாகப் பேசுபவர் களாகவும் சிறந்த மெய்ஞ்ஞானி (ஆரிஃப்) ஆகவும் இருந்தார்கள். அவர்கள் என்னை அணுகிக் காதோடு காதாக, ''இத் திருச்சபை உம் பொருட்டே கூட்டப்பட்டுள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்கள், வலிமார்கள் முன்னிலையில் வைத்து, உம்மை இன்றையத் தினம் 'விலாயத்தெ முஹம்மதிய்யா'வின் இறுதி வலியாகப் பிரகடனப்படுத்தப் போகிறார்கள்'' என்று கூறினர். அவர்கள் இவ்வாறு கூறி வாய் மூடுமுன், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் தம் அமுதவாய் திறந்து அப்பிரகடனத்தை வெளியிட்டார்கள். அப்பொழுது என் உள்ளமும் உடலும் ஒருங்கே பூரித்தன.''

அதன்பின் அல்மேரியா சென்ற அவர்கள் 'மஹாஸினுல் மஜாலிஸ்' என்னும் புகழ் பெற்ற நூலை எழுதிய இப்னுல் ஆரீஃப் நிறுவிய ஆன்மீகக் கல்வியைப் போதிக்கும் பள்ளி சென்று, அதனைப் பார்வையிட்டனர். அப்பொழுது அது இப்னுல் ஆரீஃபின் மாணவரான அபூ அப்துல்லாஹ்

அல் கஸ்ஸாலால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அங்கு வைத்துத் தான் அவர்கள் 'மவாக்கி அல் நுஜும்' (விண்மீன்களின் அடையும் இடம்) என்னும் நூலை எழுதி முடித்தனர். இதனை அவர்கள் எழுதி முடிக்கப் பதினொரு நாட்களே ஆயின.

அங்கிருந்து புறப்பட்டு அவர்கள், முர்ஸிய்யா வந்து தங்கியிருந்த பொழுது, இறைவன் அவர்களுக்கு, ''நாம் இறை நம்பிக்கையாளர்களுக்கு அளித்துள்ள அருட்கொடைகளில், நீர் பார்த்தவற்றை என் அடியார் களுக்கு எடுத்துரைப்பீராக!'' என்று உள்ளுணர்வின் மூலம் செய்தி அறிவித்தான்.

இதன்பின் அவர்கள், ஹிஜ்ரி 595 -ஆம் ஆண்டில் அல்முஹத் அரசாங்கத்தின் தலைநகரான மர்ராக்கஷ் சென்ற பொழுது, அங்கு இப்னு ருஷ்த் இறப்பெய்திய செய்தி அவர்களுக்குத் தெரியவந்தது. இது பற்றி அவர்களே கூறுகின்றார்கள்.

''அவர் மர்ராக்கஷில் இறப்பெய்திய பொழுது நான் அங்கிருந்தேன். அவருடைய உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்காக அங்கிருந்து கார்டோவா எடுத்துச் செல்லப்பட்டது. ஒட்டகத்தின் ஒரு பக்கத்தில் அவருடைய உடலம் ஏற்றப்பட்டபொழுது, அதனைச் சமநிலைப்படுத்த அப்பிராணியின் பக்கத்தில் அவர் எழுதிய நூல்கள் ஏற்றப்பட்டன. அதனை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு அசைவற்று நின்று கொண்டிருந்தேன்.

''அப்பொழுது என் நண்பர் அபுல் ஹகம், என்னையும், என் அருகே நின்று கொண்டிருந்த இப்னு ஜுபைரையும் நோக்கி, ''வாகனத்தின் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள அவரின் உடலைச் சமநிலைப்படுத்த அதன் மறுபக்கத்தில் என்ன வைக்கப்பட்டுள்ளது என்பதைப் பார்த்தீர்களா? ஒரு பக்கத்தில் ஆசான்; மறுபக்கத்தில் அவர் எழுதிய நூல்கள்' என்று கூறினார்.

''அதற்கு இப்னு ஜுபைர், 'நான் அதனைக் கவனிக்கவில்லை என்று எண்ணிக் கொண்டீரா? கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன். எனினும், நான் அதனை எடுத்துரைக்கவில்லை. நீர் அதனை எடுத் துரைத்தீர். உம்முடைய நாவை இறைவன் ஆசீர்வதிப்பானாக!' என்று பதிலிறுத்தார்.

''அபுல் ஹஸன் கூறிய வார்த்தைகளை நான் நன்கு நினைவில் பதித்துக் கொண்டேன். அவர் கூறியதைப் பற்றி நான் அடிக்கடி சிந்திப் பதுண்டு. அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மூவரில் நான் ஒருவனே இப்பொழுது உயிரோடு இருக்கிறேன். இப்னு ருஷ்தைப் பற்றி நினைவு கூறும் பொழுதெல்லாம், 'ஒரு பக்கத்தில் ஆசான்; மறுபக்கத்தில்

அவர் எழுதிய நூல்கள்' என்று அபுல் ஹஸன் கூறிய வார்த்தைகளையே கூறிக் கொள்கிறேன். அவரின் ஆசைகள் எவ்வளவு நிறைவேறின என்பதை நான் அறியேன்''.

இதற்குப் பின்னுள்ள இரண்டாண்டுகளில், அவர்கள் வட ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கும் பொழுது, இரண்டு ஆன்மீக அனுபவங்களை அடைந்தனர். அவற்றில் ஒன்று அவர்கள் இதுகாறும் இருந்த ஆன்மீகப் படித்தரத்திலிருந்து உயரிய படித்தரத்துக்கு உயர்த்தப்பட்டதாகும். மற்றொன்று அவர்களின் வாழ்வை உள்ளிலும் புறத்திலும் மாற்றியமைத்ததாகும்.

அவர்கள், இப்பொழுது அடைந்த முதலாவது ஆன்மீக அனுபவத்தைப் பற்றி அவர்களே பின் வருமாறு எடுத்துரைக்கின்றார்கள்:

''நான் ஹிஜ்ரி 597 -ஆம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் மஃரிப் நாட்டில் இருந்த பொழுது, இந்தப் படித்தரத்தில் கால் வைத்தேன். அதன் காரணமாக எனக்குப் பெரிதும் மகிழ்வேற்பட்டது. அதில் வேறு எவரையும் நான் காணவில்லை. அப்பொழுது எனக்குத் தனிமை உணர்வு ஏற்பட்டது. அந்தப் படித்தரத்தில் அபூயஸீத் பிஸ்தாமி, தனித்து எவருடைய உதவியுமற்ற நிலையில் நுழைந்ததை நான் நினைவு கூர்ந்தேன். இந்த ஆன்மீக இல்லமே நான் தங்குமிடம் என்பதை உணர்ந்து, என் தனிமையை மறக்கலானேன். நான் அந்த இல்லத்தின் பல்வேறு தன்மைகளையும் ஆராயலானேன். இந்தப் படித்தரத்தையும், இதன்மீது இறைவன் பொழியும் தனிப்பெரும் அருளையும் நான் உணர்ந்த போதினும், அதன் பெயரை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை. அதில் நான் இருக்கும் பொழுது இறைவனின் கட்டளைகள் என் மீது இறங்குவதையும், இறைவனின் தூதுவர்கள் என்னிடம் வந்து உறவாடுவதையும் உணர்ந்தேன்.''

அவர்கள் நுகர்ந்த இரண்டாவது ஆன்மீக அனுபவத்தைப் பற்றியும் அவர்களே எடுத்துரைக்கிறார்கள்:

''நான் இறைவனின் அரியாசனமாகிய அர்ஷை பார்த்தேன். அதனை ஒளிமயமான தூண்கள் தாங்கிக் கொண்டிருந்தன. அவை அனைத்தும் மின்னல் போல் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. எனினும் அதன் நிழல் கீழே விழுந்தது. அந்த நிழல் விழுந்த இடத்தில், கற்பனைக் கெட்டாத அமைதி நிலவியது. அது அர்ஷின் நிழலேயாகும். அடியில் புதையல் இருந்தது. அப்புதையலிலிருந்து 'லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்' என்னும் வாசகம் வெளிவந்து கொண் டிருந்தது. அந்தப் புதையல் ஆதம் (அலை) அவர்களே அன்றி

வேறில்லை. அப்புதையலுக்குக் கீழே, மற்றும் சில புதையல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் நான் இலக்குக் கண்டு கொண்டேன். அங்கு மிங்கும் அழகிய பறவைகள் பறந்து கொண்டிருந்தன. அவை அனைத்திலும் மிகவும் அழகாக இருந்த பறவை ஒன்று, என்னை நோக்கி, 'முஹம்மது முஹ்யித்தீனே! நீர் ஒரு கூட்டாளரை அழைத்துக் கொண்டு, கீழை நாடு செல்வீராக!' என்று கூறியது. 'யார் அந்தக் கூட்டாளர்?' என்று நான் அதனை வினவினேன். அதற்கு அப்பறவை, 'அவர் தாம் ஃபெஸ்ஸைச் சேர்ந்த முஹம்மது அல் ஹஸார் என்பவராவார். அவர் கீழை நாடு செல்ல விரும்புகிறார்' என்று பதிலிறுத்தது. 'இன்ஷா அல்லாஹ்! நான் அவ்விதமே செய்கிறேன்'' என்று நான் மறுமொழி பகர்ந்தேன்.

''நான் ஃபெஸ் வந்த பொழுது, அவரைப் பற்றி விசாரித்தேன். நான் விசாரித்ததை அறிந்து அவர் என்னிடம் வந்தார். நான் அவரிடம், 'நீர் எதைப் பற்றியும் இறைவனிடம் இறைஞ்சினீரா?' என்று வினவினேன். அதற்கு அவர், 'ஆம்; என்னைக் கீழை நாடு அழைத்துச் செல் என்று இறைவனிடம் இறைஞ்சினேன். விரைவில் ஒருவர் வந்து அங்கு உம்மை அழைத்துச் செல்வார் என்று எனக்குப் பதில் வந்தது. அவரை எதிர் பார்த்துத் தான் காத்துக் கொண்டுள்ளேன்' என்று மறுமொழி பகர்ந்தார்.''

இதன்பின் இப்னு அரபி (ரஹ்) அவர்கள், அவரிடம் தமக்கு அறிவிக்கப்பட்ட முன்னறிவிப்பைக் கூறி, அவரை அழைத்துக் கொண்டு ஹிஜ்ரி 597 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில், பூகியா சென்றனர். அங்கு அவர்கள் அபூ அப்துல்லாஹ் அல் அரபி முதலான பல அறிஞர்களைச் சந்தித்து அளவளாவினர். இங்கு வைத்து அவர்கள் மற்றொரு கனவைக் கண்டனர். இதைப் பற்றி அவர்களே இதோ கூறுகின்றார்கள்:

''நான் கனவொன்று கண்டேன். அதில் நான் விண்மீன்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டேன். வானிலே மிளிர்ந்த அத்தனை விண்மீன் களையும் நான் ஆன்மீக மகிழ்ச்சியுடன் மணம் புரிந்து கொண்டேன். பின்னர் நான் சந்திரன்களையும் மணம் புரிந்தேன். இவ்வாறு நான் கனவு கண்டதை நண்பர் ஒருவரிடம் எடுத்துரைத்தேன். அவர், அவ்வூரிலிருந்த அறிஞரும், கனவு விளக்கவல்லாருமான ஒருவரிடம் என் பெயரைக் கூறாது இக்கனவைக் கூறி, இது பற்றி விளக்கம் வேண்டினாராம். அப்பொழுது அவர், 'இது ஆழம் காண முடியாத கடலாகும். இந்தக் கனவைக் கண்டவருக்கு அளவிடற்கரிய நற்பேறுகள் வரப்போகின்றன. இறைவனிடமிருந்து ஆன்மீக அறிவு அவரை வந்தெய்தும். விண்மீன்கள் பற்றிய இரகசியங்களை அவர் அறிய வருவார். அவரின் சமகாலத்தில், அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனும் வண்ணம் அவர் சிறந்து

விளங்குவார்' என்று கூறினாராம். பின்னர் சற்று நேரம் தலைகுனிந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்துவிட்டு, 'இக்கனவைக் கண்டவர் இந்த ஊரில் தான் இருக்கிறார் என்றால் அவர் அந்தலூஸிலிருந்து நம் ஊருக்கு வந்திருக்கும் அந்த இளைஞராகத் தான் இருக்க வேண்டும்' என்று கூறினாராம்.''

இதன்பின் பூகியாவிலிருந்து அவ்விருவரும் தூனிஸ் வந்து சேர்ந்தார்கள். அங்கு வைத்து இப்னு அரபி (ரஹ்) அவர்கள் மற்றோர் ஆன்மீகப் படித்தரத்தை எய்தப் பெற்றார்கள். அது பற்றி அவர்களே இதோ கூறுகின்றார்கள்:

''நான் இந்தப் படித்தரத்தைத் தூனிஸில் வைத்து எய்தப் பெற்றேன். பள்ளியில் கூட்டுத் தொழுகையில் கலந்து நான் தொழுது கொண்டிருக்கும் பொழுது, நான் என்னை அறியாமல் அலறியுள்ளேன். அந்த அலறலைக் கேட்ட அனைவரும் மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள். பக்கத்து வீட்டு மாடிகளிலிருந்து பள்ளிவாயிலில் மக்கள் தொழுவதைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களும் மயங்கி மாடியிலிருந்து கீழே விழுந்த போதினும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை. முதலில் நான் தான் மூர்ச்சை தெளிந்து எழுந்தேன். ஏனையோர் மூர்ச்சையற்று மயங்கிக் கிடந்தனர். பின்னர் அவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்தனர். அப்பொழுது நான் அவர்களை நோக்கி, 'என்ன செய்தி?' என்று வினவினேன். அவர்கள் என்னை நோக்கி, 'என்ன செய்தி? ஏன் அலறினீர்?' என்று வினவினார்கள். அதற்கு நான், 'நான் அலறவா செய்தேன்? அது எனக்குத் தெரியாதே' என்று பதிலிறுத்தேன்.''

தூனிஸில் வைத்தே இப்னு அரபி (ரஹ்) அவர்கள், இப்னு அல் கஹ்ஹால் என்னும் இறைநேசச் செல்வரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர். ஒருநாள் அவர்கள் அங்கு நிற்கக் கூடாத இடம் ஒன்றில் நின்று கொண்டிருந்த பொழுது, அவ்வழியே வந்த அவர், ''தாங்களா இங்கு நின்று கொண்டிருக்கிறீர்கள்? தங்களைப் போன்றோர் இங்கு நிற்கக் கூடாதே'' என்று கூறினார்.

தம்மை எவரென அவர் அறிந்து கொண்டார் என்பதையும், அவர் சாமான்யரல்லர் என்பதையும் விளங்கிக் கொண்ட அவர்கள், ''நான் இதற்காக இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்'' என்று தாழ்மையுடன் கூறினர். அதற்கு அவர், ''பாவமன்னிப்பின் வாயில் திறந்திருக்கிறது'' என்று கூறினார்.

அவர் அங்குள்ள பள்ளியொன்றில் இமாமாகப் பணியாற்றினார். அவர் 'இஷா' நேரத்தில் தம் அறையிலிருந்து கனைக்கும் சப்தத்தைக்

கேட்டு, 'முஅத்தின்' இகாமத் கூறுவார். ஒரு நாள் அவருடைய அறையிலிருந்து கனைப்புச் சத்தம் வரவில்லை. தண்ணீர் சுமக்கும் பஷீர் பள்ளிவாயில் முற்ற வெளியில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது விண்ணிலிருந்து எவரோ வந்து அவரின் முதுகில் விழுவது போன்றிருந்தது. இமாம் பள்ளிவாயிலுக்குள் நுழைந்து மெதுவாகக் கனைத்தார். உடனே முஅத்தின் 'இகாமத்' கூறலானார். தொழுகை நடந்தது.

தொழுகை முடிந்ததும், அவர் பஷீரைத் தனியே தம் அறைக்கு அழைத்துச் சென்று, தாம் இறக்கும் வரையில் இதனை எவரிடமும் கூறக் கூடாதென்று வாக்குறுதி வாங்கினார். அப்பொழுது பஷீர், ''தாங்கள் எவ்வாறு விண்ணிலிருந்து குதித்தீர்கள்? எங்கு சென்றிருந்தீர்கள்?'' என்று வினவினார்.

அதற்கு அவர், ''இங்கு 'இஷா'த் தொழுகைக்கு பாங்கு சொல்லப் பட்ட பொழுது, நான் மக்காவில் இருந்தேன். அப்பொழுது தான் நான் தவாபின் முதல் சுற்றைத் துவக்கியிருந்தேன்.ஏழு சுற்றுக்களையும் முடித்துவிட்டு, இங்கு வரச் சற்றுத் தாமதமாகிவிட்டது'' என்று பதிலுரைத்தார்.

தூனிஸில் இப்னு அரபி (ரஹ்) அவர்கள், தம் பழைய நண்பர் அல் மஹ்தவீயின் இல்லத்தில் தங்கியிருந்தனர். அங்கு வைத்தே அவர்கள் 'இன்ஷா அல் தவாயிர்' என்னும் நூலை எழுதத் தொடங்கி, அதன் ஒரு பகுதியை எழுதி முடித்தனர்.

ஹிஜ்ரி 598 ஆம் ஆண்டில் தம் நண்பர் முஹம்மது அல் ஹஸாருடன் தூனிஸிலிருந்து கிளம்பிய அவர்கள், அலக்ஸாண்ட்ரியா, கெய்ரோ ஆகிய நகரங்களில் சில நாட்கள் தங்கியிருந்து விட்டு 'ஹஜ்'ஜுப் பயணத்தை மேற்கொண்டனர். மக்கா சென்று 'ஹஜ்'ஜுக் கடமையை இனிதே நிறைவேற்றிய அவர்கள், கஃபாவின் முற்ற வெளியில் அமர்ந்து இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய 'இஹ்யாவு உலூமித்தீ'னை மிகவும் பிரியத்துடன் ஓதி முடித்தனர். பின்னர் மதீனா சென்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்க விடத்தைத் தரிசித்து விட்டு மக்கா திரும்பினர்.

அவர்கள் மக்காவில் தங்கியிருந்த பொழுது, பல அற்புதமான கனவுகளையும், காட்சிகைளயும் கண்டனர். ஓரிரவு அவர்கள் அயர்ந்து படுத்துறங்கும் பொழுது, கஃபா தங்கம், வெள்ளியால் ஆன பாளங்களால் கட்டப்பட்டிருப்பதாகக் கனவு கண்டனர். அதில் ருக்னெ யமனீக்கும், ருக்கென ஷாமீக்கும் இடையிலுள்ள சுவர்ப் பகுதியில், மேல் வரிசையில் ஒரு தங்கப்பாளமும், அதற்குக் கீழுள்ள வரிசையில் ஒரு வெள்ளிப் பாளமும் வைக்கப்படாது இருந்தன. வெள்ளிப் பாளம் வைக்கப்படா திருந்த இடத்தில் அவர்கள் தூக்கி வைக்கப்பட்டனர்.

விழித்தெழுந்த பொழுது அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் ஹதீது நினைவுக்கு வந்தது.

''செங்கல்லால் ஒரு சுவர் எழுப்பி, அதில் ஒரு செங்கல் மட்டும் வைக்கப்படாமல் விடப்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்ளுங்கள்! அந்தச் செங்கல் தான் நான். எனக்குப் பின் எந்த நபியும் வரமாட்டார்.''

இந்த ஹதீது அவர்களுக்கு நினைவு வந்ததும், எவ்வாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், நபிமார்களுக்குத் தலைவராக இருக்கின்றார்களோ, அதே போன்று தாம் வலிமார்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டதாக எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் கஃபாவைச் சுற்றி வரும் பொழுது, அவர்களே போன்று ஒருவரானவரும், இளைஞனின் உருவில் அதனைச் சுற்றி வருவதைக் கண்டனர். எவ்வாறு தெய்வீகக் கருத்துக்கள், மார்க்க சட்டதிட்டங்கள் என்ற திரைக்குள் மறைந்து கிடக்கின்றனவோ, அதே போன்று கற்களால் நிர்மாணிக்கப்பட்ட கஃபாவிற்குள் மறைந்து நிற்கும் அகமியக் கஃபாவை அவர் அவர்களுக்குக் காட்டினார். அதனைக் கண்டதும் அவர்கள் மயங்கிக் கீழே விழுந்தார்கள். அவர்கள் மயக்கம் தெளிந்து உணர்வு பெற்றதும், அந்த இளைஞர் அவர்களை நோக்கி, ''நீர் கண்ட இரகசியங்களை எழுதுவீராக!'' என்று பணித்தார்.

அதன்பின் அவ் இளைஞர், இப்னு அரபி (ரஹ்) அவர்களையும், அழைத்துக் கொண்டு, கஃபாவிற்குள் நுழைந்தார். அங்கு நின்ற மூன்று கால்களையுடைய குதிரையின் மீது அமர்ந்து, அவர் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்குக் காட்சி வழங்கினார். பின்னர் அவர், அவர்களின் உள்ளத்தில் அனைத்துப் பொருள்கள் பற்றிய இரகசியங்களையும் ஊதி, அவற்றை மக்களுக்கு எடுத்துரைக்குமாறு மீண்டும் ஒரு முறை பணித்தார்.

அவ்வாறே ''புத்தூஹாத்துல் மக்கிய்யா'' (மக்காவின் வெளிப்பாடு) என்னும் பெயருடன் அவர்கள் ஒரு நூலை எழுதத் தொடங்கினர். அதன் முகவுரையை எழுதும் பொழுதே, அவர்களுக்கு மற்றொரு காட்சி தோற்றமளித்தது. அதனை அவர்கள் இதோ அந்நூலிலேயே எடுத்துரைக்கின்றார்கள்:

''நான் இந்த முகவுரையை எழுதும் பொழுது, மாபெரும் சந்நிதியின் முன் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களைக் கண்டேன். அவ்விடத்தின் தலைவராக இருந்த அவர்கள், என்னை அன்போடு வரவேற்று, 'நம் இருவருக்கும் பொதுவான நற்பண்பு இதோ உள்ளது' என்று கூறினர். பின்னர் அந்தப் புனித மிகு இடத்தில் ஒரு மேடை நிறுவுமாறு,

பணிக்கப்பட்டது. அந்த மேடையின் உச்சியில், 'இது 'மகாமெ மஹ்மூது என்னும் முஹம்மதுக்குரிய புனித இடமாகும். இதில் ஏறுகின்றவர் உண்மையின் பொறுப்பாளராக ஆவதுடன், ஷரீ அத்தின் பாதுகாவல ராகவும் ஆகிவிடுவார்' என்னும் வாசகம் பெறிக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் வைத்து எனக்கு எல்லாவிதமான அறிவுகளும் வழங்கப்பட்டன. சுருங்கக் கூறி விளங்க வைக்கும் ஆற்றலும், எனக்கு வழங்கப்பட்டது. நான் இறைவனுக்கு நன்றி கூற, அந்த மேடை மீது ஏறி மகாமெ மஹ்மூது வரை சென்றேன். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருப்பாதம் வைத்த இடத்தில், என் பாதங்கள் படாவண்ணம் அவ்விடத்தில் வெண்ணிறத் துணிகள் பல விரிக்கப்பட்டிருந்தன.''

இவ்வாறு எழுதிய இப்னு அரபி (ரஹ்) அவர்கள், இதன் பின் தமக்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையே நடந்த உரையாடலை விரிவாக எடுத்துரைக்கிறார்கள்.

பின்னர் அவர்கள் ஒரு தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டனர். அப்பொழுது ஒருவர் அவர்களின் முன் ஸஹீஹ் புகாரியை ஓதிக் கொண்டிருக்கிறார். அவர் அதனை ஓதி முடித்ததும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''இறைவனே! நல்லவற்றையே பார்க்கவும், கேட்கவும், எங்களைச் செய்வாயாக! எங்கள் மீது உன் மன்னிப்பைச் சொரிவாயாக! நன்மையில் எங்களின் இதயத்தை நிலை நிறுத்துவாயாக! நீ விரும்பும், நீ மகிழும் செயல்களில் எங்களை ஈடுபடுத்துவாயாக!'' என்று இறைஞ்சினர்.

வேறொரு தடவை அவர்கள், நள்ளிரவில் கஃபாவைச் சுற்றி வரும் பொழுது, தமக்குப் பின்னே நீண்டு உயர்ந்த சில மனிதர்களும் கஃபாவைச் சுற்றி வருவதைக் கண்டனர். அப்பொழுது அவர்களில் ஒருவர் இப்னு அரபி (ரஹ்) அவர்களை நோக்கி, ''எங்களை உம்மால் அடையாளம் தெரிய முடிகிறதா?'' என்று வினவினார். அதன்பின் அவரே, ''நாங்கள் ஆதத்திற்கு நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் வாழ்ந்த வர்கள் ஆவோம்'' என்று கூறினார். அப்பொழுது இப்னு அரபி (ரஹ்) அவர்கள், ''ஆதம் (அலை) அவர்கள்கூட அவ்வளவு காலத்திற்கு முன் வாழ்ந்தவர்களில்லையே'' என்று கூறினர். அப்பொழுது அவர்களுக்கு, ''இறைவன் இரண்டு இலட்சம் ஆதம்களை படைத்துள்ளான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் நினைவுக்கு வந்தது. இதனை அவர்கள் 'புதூஹாத்துல் மக்கிய்யா' வில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர்கள் மக்காவில் தங்கியிருந்த பொழுது, இஸஃபஹானிலிருந்து வந்து அங்குக் குடியேறிய பாரசீக சூஃபிகளின் குடும்பத்தினருடன் அவர்கள் தொடர்பு கொண்டனர். அக்குடும்பத் தலைவரான அபூ ஷுஜா

ஸாஹிர் இப்னு ருஸ்தம் என்பவரின் அருமைத் திருமகள் நிஜாம் என்ற ஐனுஷ் ஷம்ஸ், தெய்வபக்தியும், அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தார். அவர் மீது அவர்கள் பெருமதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். இச்சமயத்தில் அவர்கள் தெய்வீகக் காதல் கருத்துக்கள் அடங்கிய 'தர்ஜுமானுல் அஷ்வாக்' (ஆசைகளின் மொழி பெயர்ப்பு) என்னும் நூலை எழுதினர். அதில் ஓரிடத்தில் அவர்கள்,

''அந்த இளமங்கையின் அழகை நான் என்னென்பேன்! அவளின் பேரொளி இருளில் வழிகாட்டும் ஒளிவிளக்காகவல்லவோ அமைந்துள்ளது. அவளோ கருமுகில் போன்ற கூந்தலாகிய சிப்பிக்குள் மறைந்து கிடக்கும் முத்துப் போன்றல்லவோ இருக்கிறாள்!!! அந்த முத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, எண்ணமானது நீண்ட நேரம் ஆழ்கடலில் மூழ்கிக் கிடக்கிறது. அவளைக் கண்டவர்கள், அழகாய் அமைந்த அவளின் கழுத்தையும், அவளின் அங்க அசைவுகளின் அழகையும் பார்த்துவிட்டு, அவளை மலைச்சாரலில் துள்ளித் திரியும் மான் என்றல்லவோ எண்ணுகின்றனர்!!''

என்று பண்ணிசைக்கின்றார்கள்.

மற்றோரிடத்தில் அவர்கள்,

''நான் அவளின் அழகுத் திருமுகத்தைக் காண இயலாவிடினும், என் ஆன்மா அவளை நினைத்து உருகிக் கொண்டுள்ளது! உண்மையில் நான் அவளின் திருவதனத்தைப் பார்த்து விடுவேனாயின், அவளுடைய கருநிறப் புருவமே என்னைக் கொன்றொழித்து விடுமே? என்னுடைய பார்வை அவள் மீது விழுந்ததும், நான் என்னுடைய பார்வைக்கே அடிமையாகி விட்டேன். அவளின் போதையிலேயே இரவைக் கழித்தேன். பொழுது புலர்ந்தும் கூட என் பிதற்றல் நிற்கவில்லை. இளம் மான் போன்று புல்வெளியில் உலவும் அவளின் பாங்கும், நாணத்தால் தலையை அரை அளவு திருப்பிச் செல்லும் பான்மையும், மனிதர்களின் ஆன்மாக்களைச் சிறை பிடிக்க வல்லவையாகும். அவளின் மூச்சு கஸ்தூரி மணம் போன்று இன்பம் பயக்கிறது. நண்பகல் பரிதி போன்று அவள் ஒளிமயமாக விளங்குகின்றாள். திங்கள் போன்று தண்ணொளி சிந்துகின்றாள். அவள் காட்சி வழங்கும் பொழுது, இளங்காலையின் ஒளி போன்று உள்ளது. அவள் இருண்ட இரவு போன்ற கூந்தலை அவிழ்த்து விடும் பொழுது, முழு மதியமே மறைந்து விடுகிறது! மதி வதனத்து மங்கையே! நீ விரும்பின், என் இதயத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்! ஆனால் என் கண்களை மட்டும் விட்டு வை, நான் உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்க. ஏனெனில் என் இன்பம் முழுவதும் என் பார்வையிலேதான் உள்ளது''

என்று பாடிப் பரவசமுறுகிறார்கள்'.

இத்தகு பாடல்கள் அந்நூலில் நிறைந்திருப்பதைக் கண்டதும் தீயோர் சிலர் அவற்றிற்குத் தீதான கருத்துக்களைக் கற்பித்து அவற்றைப் பரப்பிவிட்டனர். எனினும் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அவற்றை அப்பொழுது பொருட்படுத்தவில்லை.

மக்காவில் அவர்கள் தங்கியிருந்த பொழுது, நடந்த மற்றொரு நிகழ்ச்சி ஒன்றை இப்னு அரபி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

''நான் மக்காவில் தங்கியிருந்த பொழுது, பக்தாதிலிருந்து அங்கு வந்திருந்த ஒரு பெண்மணி என்னைப் பெரிதும் போற்றிப் புகழ்வதாக என்னிடம் கூறப்பட்டது. அது கேட்டு மகிழ்ந்த நான், ரஜப் மாதம் முழுவதும் கஃபாவைச் சுற்றி வந்ததன் பலனை, அப்பெண்மணிக்கு அன்பளிப்புச் செய்தேன். இதன்பின் ஒரு நாள் ஒருவர் என்னிடம் வந்து, 'நான் என் தோட்டத்தில் படுத்துறங்கும் பொழுது, கனவொன்று கண்டேன். அதில் ஆயிரக்கணக்கான ஒட்டகங்கள் கஸ்தூரி, அம்பர், முத்து ஆகியவற்றின் பொதிகளைத் தம் முதுகிலே சுமந்த வண்ணம் சென்று கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்துப் பெரிதும் வியப்புற்ற நான், 'அவை யாருக்கு சொந்தமானவை?' என்று வினவினேன். அதற்கு ஒட்டகம் ஓட்டுபவர்கள், 'அவை அனைத்தும் இப்னு அரபியுடையவை. அவர் அவற்றை இன்ன பெயருள்ள பெண்மணிக்கு அன்பளிப்புச் செய்து விட்டார் என்று கூறினர்' எனச் சொல்லி, அப்பெண்மணியின் பெயரையும் என்னிடம் எடுத்துரைத்தார். நான் அப்பெண்மணிக்குச் செய்த அன்பளிப்பைப் பற்றி எவரிடமும் யாதொன்றும் கூறியதில்லை.

''இதன்பின் நான் அப்பெண்மணியை அழைத்து வரச் செய்து, அவரிடம் நடந்ததை எடுத்துரைத்து, அவற்றிக்குப் பிரதியாக எனக்கு அன்பளிப்புச் செய்யுமாறு வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர், 'ஒரு நாள் நான் கஃபாவின் முன்னால் வீற்றிருக்கும் பொழுது, தாங்கள் கஃபாவைச் சுற்றி வந்து கொண்டிருந்தீர்கள். தங்கள் மீது எனக்கு ஒருவித மதிப்பு ஏற்பட்டது. என்னைச் சூழ வீற்றிருந்த மக்களும், தங்களைப் பெரிதும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அன்றிலிருந்து நான் திங்கள், வியாழன் ஆகிய இருதினங்களில் செய்யும் நற்செயல்களின் பலனைத் தங்களுக்கு அன்பளிப்புச் செய்தேன். அத்தினங்களில் நான் நோன்பு நோற்று தான தருமங்கள் செய்து வந்தேன்'' என்று கூறினர்.

''அப்பொழுது நான், ''அந்தப் பெண்மணி எனக்கு அன்பளிப்புச் செய்ததைப் பார்த்தால், நான் அவருக்கு அன்பளிப்புச் செய்தது நூறில்

ஒரு பங்காகக் கூட இல்லையே. அவர் வள்ளன்மையில் என்னை மிகைத்து விட்டாரே' என்று எண்ணினேன்.''

மக்காவில் அவர்கள் தங்கியிருந்த பொழுது அவர்கள் பல தடவை 'ஹஜ்'ஜு செய்துள்ளார்கள். 'ஹஜ்'ஜின் அகமியத்தைப் பற்றி அவர்கள் கூறும் பொழுது, ''ஹஜ்ஜைக் கடமையாகக் கருதுபவர்களுக்கு, அதனை நிறைவேற்றுவது கடமையாகவுள்ளது. 'இஹ்ராம்' அணிவது உங்களைத் தற்காலிகமாகப் பாவச் செயல்களை விட்டும் விலக்கி வைக்கிறது. எனினும் நீங்கள், வாணாள் முழுவதும் 'இஹ்ராம்' அணிந்த நிலையில் இருப்பதாகக் கருதும் வழக்கத்தை மேற்கொள்ளுங்கள்! நோன்பு, தொழுகை ஆகியவற்றின் அகமியம் புலனடக்கமேயாகும். என் காதலியின் கால் சிலம்பின் மீதும், மோதிரத்தின் மீதும் நான் போதையுற்று விட்டேன். அதன் காரணமாகக் கஃபாவைச் சுற்றிச் சுற்றி வளையம் வந்து கொண்டிருக்கிறேன். நான் கல்லெறியும் பொழுது, என்னுள்ளிலிருந்து கொண்டு, என்னைத் தீய வழியில் இழுத்துச் செல்லும் ஷைத்தானைக் கல்லால் அடிக்கிறேன். மினாவில் நான் பிராணிகளைப் பலியிடும் பொழுது, நான் என் தீய எண்ணங்களையே பலி இடுகிறேன்'' என்று கூறினார்கள்.

மக்காவில் அவர்கள் தங்கியிருக்கும் பொழுது, அவர்கள் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் அறிஞர்களுடன் உரையாடுவதிலும், தம் நேரத்தைக் கழித்தனர். அங்கு வைத்து 'மிஷ்காத்துல் அன்வார்', 'ஹில்யத்துல் அப்தால்', 'தாஜுல் ரஸாயில்', 'ரூஹுல் குத்ஸ்' ஆகிய நூல்களை இயற்றினர்.

இப்பொழுது மக்காவும் அதன் சூழலும் இயற்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. யமனில் புழுதிக் காற்று வீசிப் பெரும் சேதத்தை உண்டு பண்ணியது. தாயிஃபில் பிளேக் நோய் கோர நர்த்தனம் புரிந்தது.

எனவே ஹிஜ்ரி 601 ஆம் ஆண்டில், அவர்கள் மக்காவிலிருந்து கிளம்பி பக்தாது சென்று, அங்கு முஹ்யித்தீன அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்தபின், அதன் அண்மையிலிருந்த தவமடத்தில் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருந்தனர்.

அங்கிருந்து மோசூல் சென்ற அவர்கள், அப்துல்லாஹ் இப்னு ஜாமி என்ற பெரியாரைச் சந்தித்தனர். அவருக்கு ஏற்கனவே கிள்ரு (அலை) அவர்கள், அவருடைய தோட்டத்தில் 'சுதீப் அல் பான்' என்னும் இறை நேசச் செல்வரின் முன்னிலையில் வைத்து தீட்சை வழங்கியிருந்தார்கள்.

அவ்விடத்திலேயே அவர்களை அமரச் செய்து, தமக்கு அவ் விடத்தில் வைத்து கிள்ரு (அலை) தீட்சையளித்து, தம் தலையில் ஒரு

தொப்பியை அணிவித்து, 'கிர்க்கா' வழங்கியதையும் எடுத்துரைத்தார் அவர். அப்பொழுது தமக்கும், அவ்வாறே செய்யுமாறு அவரை அவர்கள் வேண்டினர். உடனே அவர் ஒரு தொப்பியைக் கொண்டு வந்து அவர்களின் தலையில் அணிவித்து அவர்களுக்குத் தீட்சையும், கிர்க்காவும் வழங்கினார்.

அவர்கள் மோசூலில் தங்கியிருந்த பொழுது, 'அல்தனஸ புஸுலாத்தும் மௌஸிலிய்யா' (மோசூலில் ஏற்பட்ட வெளிப்பாடுகள்) என்னும் பெயருடன், ஐம்பத்து மூன்று அத்தியாயங்கள் அடங்கிய நூல் ஒன்றை எழுதி முடித்தனர்.

அங்கிருந்து கிளம்பி ஹெப்ரான் வழியாக அவர்கள் எகிப்து வந்து சேர்ந்தனர். அங்கு அவர்கள் தம் ஆன்மீகக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்த பொழுது அவற்றினைக் கேட்டு மக்களே ஆனந்தப் பரவச முற்றனர். மார்க்க விற்பன்னர்களோ பெரிதும் எதிர்ப்புக் காட்டினர். இப்னு அரபி (ரஹ்) அவர்களின் ஆதரவாளர்கள், அவர்களை, 'ஸித்திக்' என்றும் 'ஷைகுல் அக்பர்' என்றும் புகழ்ந்துரைத்த பொழுது, அவர்களின் விரோதிகளோ, அவர்களை 'ஸிந்தீக்' என்றும், 'காஃபிர்' என்றும் வாய் கூசாது இழித்துரைத்தனர். அவர்களைக் கொன்றொழிக்கவும் சதி சூழப்பட்டது.

இப்பொழுது அவர்களின் நண்பர், பூகியாவைச் சேர்ந்த அபுல் ஹஸன் என்பவர், ஐயூபிய சுல்தான் அல் மலிக்குல் ஆதிலிடம் அவர்களுக்காகப் பரிந்துரைத்ததன் காரணமாக, அவர் தலையிட்டு நிலைமை மோசமாகா வண்ணம் தடுத்தார்.

எகிப்தின் நிலைமை தமக்குச் சாதகமில்லாததைக் கண்ட அவர்கள், ஹிஜ்ரி 602 ஆம் ஆண்டு மக்கா திரும்பி, அங்கு ஓராண்டு தங்கி, வணக்கத்திலும், ஆராய்ச்சியிலும் தம் நேரத்தைக் கழித்தனர். இதன்பின் அவர்கள் ஹலப் நோக்கிப் பயணமாயினர்.

ஒரு நாள் அவர்கள் புரவி மீதமர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களின் எதிரே நடந்து வந்து கொண்டிருந்த ஒரு பயணி, அவர்களை நோக்கி, ''எங்கிருந்து வருகிறீர்? எங்கு போகிறீர்? வழியில் உமக்குக் கிடைத்தது யாது?'' என்று வினவினார். தம்மிடம் இக்கேள்விகளைக் கேட்பவர், சாமான்யரல்லர் என்பதை அவரின் கேள்விகளின் மூலம் விளங்கிக் கொண்ட இப்னு அரபி (ரஹ்) அவர்கள், ''அறிவிலிருந்து பொருளுக்கு வந்தேன் - இரண்டு குறிக்கோள்களையும் எய்தப் பெறுவதற்காக'' என்று பதிலிறுத்தனர். அவர்களின் இந்த பதில் கேள்வி கேட்டவரின் மூளையைச் சுழலச் செய்தது. அக்கணத்திலேயே அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களின் சீடராகிவிட்டார் அவர். அவர் தாம் கோனியாவைச் சேர்ந்த ஷைகு சத்ருத்தீன் ஆவார்.

வழியில் அவர்கள் சிறிது நாட்கள் ஹலபில் தங்கினர். அப்பொழுது ஒருவர், அவர்கள் எழுதிய 'கிதாபுல் தஜல்லியாத்' என்ற நூலின் கைப்பிரதியைச் சரிபார்த்துக் கையொப்பமிட்டுத் தருமாறு, அவர்களை வேண்ட அவர்களும் அவ்விதமே செய்தனர்.

ஹலபில், அதன் மன்னர் சுல்தான் ஸலாஹுத்தீன் ஐயூபியின் அருமைத் திருமகன் அல் மலிக் அல் ஸாஹிர், இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்குச் செய்த உபசாரம் அளவிட முடியாததாயிருந்தது.

ஒருநாள் அவர்கள் அரசவையில் வீற்றிருக்கும் பொழுது, அவர் முன், ஒரு நூற்றுப் பதினெட்டு வழக்குகள் தீர்ப்புக்காகக் கொணரப் பட்டன. அவை அனைத்தையும் அவர் விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார். அப்பொழுது அரசாங்க இரகசியத்தை ஒருவர் வெளிப்படுத்தி, அரசாங்கத்தின் கௌரவத்தையே குலைத்து விட்டார் என்று ஒருவரின் மீது வழக்கொன்று கொணரப்பட்டது. அவருக்காக அவர்கள் பரிந்துரைத் தார்கள்.

அப்பொழுது அவர், அவர்களை நோக்கி, ''இத்தகு விஷயங்களில் குற்றவாளி மீது இரக்கம் காட்டி அவரைத் தண்டிக்காது விடுவது சரியல்ல'' என்று வாதாடினார்.

அதற்கு அவர்கள்,''தாங்கள் அரசர் என்ற கௌரவத்துடன் இவ்வாறு கூறுகிறீர்கள். இறைவனின் மீது ஆணையாக நான் கூறுகிறேன். உலகில் மன்னிக்க இயலாத குற்றம் என்று ஒன்றில்லை. மேலும் இது இறைவனின் சட்டத்திற்கு, மார்க்கத்திற்கு மாறான குற்றமுமல்லவே. அவ்விதமிருக்க, தாங்கள் அதனை மன்னிக்க முடியாது என்று கூறுவது தங்களின் அரசத் தன்மைக்கே இழுக்காகும்'' என்று கூறினர். அதுகேட்டுப் பெரிதும் நாணமுற்ற அவர், அக்கணமே அக்குற்றவாளியை மன்னித்து விடுதலை செய்தார்.

மற்றொரு நாள் அவர்கள் அரசவையில் வீற்றிரக்கும் பொழுது அரசர் அல் மலிக் அல் ஸாஹிர், ஹர்மதான் என்பவனை அழைத்து வருமாறு தம் பணியாளர் ஒருவருக்கு ஆணையிட்டார். அப்பொழுது அவர்கள் அரசரை நோக்கி, ''ஹர்மதான் என்பவன் யார்?'' என்று வினவினர். அப்பொழுது அரசர், ''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? நாட்டில் தவறுகளும் அடக்குமுறைகளும் நிகழ்கின்றன என்று தாங்கள் கூறு கிறீர்கள். நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவை அனைத்தும் மார்க்க விற்பன்னர்களின் அனுமதியின் மீதுதான் நடக்கின்றன. அவர்கள் தாங்கள் கூறுபவை அனைத்தும் சரி என்பதற்கான ஆதாரங்களையும் எடுத்துரைக் கிறார்கள். ஒருவர் என்னிடம் வந்து 'தாங்கள் ரமலானில் தான் நோன்பு நோற்க வேண்டுமென்று அவசியமில்லை. அதற்குப் பதிலாக வேறு எந்த

மாதத்திலும் நோன்பு நோற்கலாம்' என்று ஃபத்வா வழங்கி, தாம் கூறியதற்கு ஆதாரமாகத் தம் நாட்டில் எவரோ வழங்கிய ஃபத்வாவையும் என்னிடம் காட்டுகிறார்'' என்று குறைபட்டுக் கொண்டார்.

அவரிடமிருந்து பிரியா விடை பெற்றுக் கொண்டு, கோன்யா வந்த அவர்களை, அதன் அரசர் கைக்கவ்ஸ் பெரிதும் அன்புடன் வரவேற்று உபசரித்தார். அவர்களுக்கு ஓரி லட்சம் திர்ஹம் மதிப்புள்ள அழகிய மாளிகை ஒன்றையே அன்பளிப்பாக வழங்கி, அதிலேயே அவர்களைத் தங்கியிருக்குமாறு வேண்டிக் கொண்டார்.

அவ்விதமே அதனை ஏற்று, அதில் குடியேறிய அவர்கள், அதில் சிறிது நேரமே வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஓர் ஏழை அவர்களின் முன் வந்து நின்று, தனக்கு ஏதாவது தருமாறு வேண்டிக் கொண்டான். ''இப்பொழுது என் கைவசம் யாதொன்றும் இல்லையே. என் செய்வேன்? இந்த மாளிகை ஒன்றுதான் என் வசம் உள்ளது'' என்று கூறினார்கள் அவர்கள்.

''அப்படியா! இந்த மாளிகையையாவது எனக்குத் தாருங்களேன்'' என்றான் அவன்.

அடுத்த கணம் வள்ளல் ஹாத்தியின் வழி வழி வந்த அப்பெருந்தகை, ''இதோ எடுத்துக் கொள்! தந்தேன், தந்தேன்; இனி இம்மாளிகை உன்னுடையதுதான்; என்னுடையதன்று'' என்று கூறி, அம்மாளிகையின் திறவு கோலை அவன் கையில், ஒப்படைத்து விட்டு வெளியேறி விட்டார்கள்.

அவர்கள் கோன்யாவில் இருக்கும் பொழுது, தாம் ஓர் ஓவியனுடன் கொண்ட தொடர்பைப் பின்வருமாறு கூறுகிறார்கள்:

''இறைவனின் திருப்பெயராகிய 'காலிக்' (படைப்பவன்) என்பதிலிருந்தே, ஓவியர்கள் தாம் வரையும் படத்திற்கு அழகும் பொருத்தமும் கொணர்வதற்கான உணர்வைப் பெறுகிறார்கள். நான் கோன்யாவில் ஒரு வியத்தகு நிகழ்ச்சியைக் கண்டேன். அங்கு ஓர் ஓவியன் இருந்தான். அவனுக்கு, அவனுடைய கலையில் சில நுட்பங்கள் பற்றாமல் இருந்தன. அவற்றை நான் அவனுக்குக் கற்றுக் கொடுத்து உதவி செய்தேன்.

''ஒரு நாள் அவன் ஒரு புறாவின் படத்தை, ஓர் அட்டையில் வரைந்து, என்னிடம் காட்டினான். உண்மையில் அது உயிரோடிருப்பது போன்றே தோன்றியது. அதில் அவன் கண்ணுக்குத் தெரியாவண்ணம் ஒரு குறையை வேண்டுமென்றே வைத்திருந்தான், என் கலையறிவைச் சோதிப்பதற்காக.

''அப்பொழுது அதனைப் பார்த்த இராஜாளி ஒன்று அதனை உயிரோடுள்ள புறா என்று கருதி, அதன் மீது பாய்ந்து தாக்கியது. இதனைப் பார்த்த மக்கள் பெரிதும் வியப்புற்றார்கள்.

''அதில் தான் வேண்டுமென்றே வைத்திருந்த குறையை அவன் அங்கிருந்தவர்களிடம் இரகசியமாகக் கூறியபின் என்னை அணுகி அதுபற்றிய என் கருத்தை வினவினான். அதற்கு நான், 'படம் என்னவோ சம்பூரணமானதுதான், ஒரே ஒரு குறையைத் தவிர' என்று பதிலிறுத்தேன்.

''அப்பொழுது அவன், 'என்ன குறை அது?' என்று வினவினான்.

''அதற்கு நான், 'அதன் கால்களின் உயரம் ஒன்றுக்கொன்று இம்மியளவு வித்தியாசப்படுகிறது' என்று பதிலிறுத்தேன்.

''அது கேட்டுப் பெரிதும் வியப்புற்ற அவன், என்னை அணுகி, என் தலையில் முத்தமிட்டான்.''

கோன்யாவில் சிலகாலம் தங்கிருந்து ஞானப் பயிர் வளர்த்து விட்டு, தம் சீடர்களுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்கள் அவர்கள். அப் பொழுது குளிர்காலமாக இருந்தது. குளிரில் புராத் நதி உறைந்து இறுகி இருந்தது. அதன் மீது மனிதர்களும், மிருகங்களும், வணிகக் கூட்டத் தினரும் நடந்து சென்றனர். பனிப்பாறைக்குக் கீழே தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

இத்தகு புராத் நதியைக் கடந்து, அவர்கள் ஹிஜ்ரி 608 ஆம் ஆண்டு பக்தாது வந்து சேர்ந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு அங்கு வைத்து 'அவாரிஃபுல் மஆரிஃப்' என்னும் ஞான நூலை எழுதிய ஷைகு ஷிஹாபுத்தீன் உமர் அல் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இருவரும் சந்தித்து நீண்ட நேரம், ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தனர். எனினும், ஒருவர் வாயிலிருந்தும் ஒரு வார்த்தையேனும் வெளிவரவில்லை. இந்நிலையிலேயே அவர்கள் இருவரும் பிரிந்தார்கள்.

இதன்பின் இப்னு அரபி (ரஹ்) அவர்களிடம், சுஹரவர்தீ (ரஹ்) அவர்களைப் பற்றி வினவப்பட்ட பொழுது, ''அவர்கள் அடிமுதல் நுனி வரை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் 'சுன்னத்' என்னும் வழிமுறை யால் நிரம்பப் பெற்றவர்களாக இருக்கின்றனர்'' என்று அவர்கள் கூறினர். பின்னர் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களிடம் இப்னு அரபி (ரஹ்) அவர்களைப் பற்றிக் கேட்கப்பட்ட பொழுது, ''முஹ்யித்தீன் ஆன்மீக ஞானத்தின் (ஹகாயிகின்) ஆழிய கடலாக விளங்குகிறார்கள்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஹிஜ்ரி 609 ஆம் ஆண்டில் அவர்களுக்குக் கோன்யா மன்னர் கைக்கவ்ஸிடமிருந்து, தம் கிறிஸ்தவப் பிரஜைகளை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி ஆலோசனை கேட்டுக் கடிதம் வந்தது. அதற்கு அவர்கள் எழுதிய பதிலில், இஸ்லாத்திற்கு அவர்களால் ஊறு ஏற்படா வண்ணம், மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு அறிவுரை பகர்ந்திருந்தார்கள்.

கைக்கவ்ஸ் அம்மடலில் தம்முடைய அரசவைக்கு வந்து சேருமாறு அவர்களை வேண்டியிருந்தார். எனினும் அங்குச் செல்லாது, ஹலப் சென்ற அவர்கள், அங்குச் சிறிது காலம் தங்கியிருந்தனர். அப்பொழுது அவர்கள் தாம் முன்னர் மக்காவில் வைத்து எழுதிய, 'தர்ஜுமானுல் அஷ்வாக்' என்னும் நூல் பற்றி ஏற்கனவே விஷமிகளால் கிளப்பி விடப்பட்ட புரளி பெரும் சூறாவளியாக மாறியிருக்கிறது என்று கேள்வியுற்று, அதனை அடக்குவதற்காக ஹிஜ்ரி 611 ஆம் ஆண்டு மக்கா சென்றனர். சென்ற அவர்கள், அந்நூலில் பொதியப் பெற்றுள்ள ஆன்மீகக் கருத்துக்களை விளக்கி, 'தகாயிருல் அஃலாக் (காதலர்களின் கருவூலங் கள்) என்னும் பெயருடன், ஒரு விரிவுரை எழுதி வெளியிட்டதும், விஷமிகளின் வாய் 'கப்சிப்' என்று பொத்திக் கொண்டது.

ஹிஜ்ரி 612 ஆம் ஆண்டில் மக்காவிலிருந்து கிளம்பிய அவர்கள், மலாட்டியாவை அடைந்த பொழுது, அங்கு அவர்களை அரசர் கைக்கவ்ஸ் சந்தித்து தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டிக் கொண்டார். அப்பொழுது அவர்கள் அவருக்கு அந்தாக்கியாப் போர்க் களத்தில் மாபெரும் வெற்றி ஏற்படப் போவதை முன்னறிவிப்புச் செய்தார்கள். அவ்விதமே நிகழ்ந்தது.

அவர்கள் சிறிது காலம் மலாட்டியாவில் தங்கியிருந்தனர். அப்பொழுது, அவர்களின் நீண்ட நாள் நண்பரான, அப்துல்லாஹ் பத்ர் அல் ஹபஷி என்பவர், அவர்களுடன் வந்து தங்கி இருந்தார். ஓரிரவு அவர் இறந்து விட்டார். அதனைக் கேள்வியுற்று மக்கள் அவருக்குத் தம் இறுதி மரியாதையைச் செலுத்துவதற்கு இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தங்கியிருந்த இல்லத்திற்கு வந்தனர். அவர்களில் ஒருவராக பிரபல மார்க்க மேதையும், சூஃபியுமான கமாலுத்தீன் முஸஃப்பரும் இருந்தார்.

அல் ஹபஷியின் வெற்றுடலைக் குளிப்பாட்டுமாறு இப்னு அரபி(ரஹ்) அவர்கள், அவரை வேண்டிக் கொண்ட பொழுது, 'அல்லாஹு அக்பர்' என்று அவர் கூறினார். அப்பொழுது ஒரு வித ஆன்மீக நிலை அவருக்கு ஏற்பட்டது. அதற்கான காரணத்தை அவரிடம் வினவிய பொழுது, அவர் பின்வருமாறு கூறினார்.

''நேற்று நான் என் தோட்டத்தில் இருந்த பொழுது, 'குளி!' என்று அசரீரியாக ஒரு சப்தம் கேட்டது, 'குளிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லையே' என்று நான் கூறினேன். அதன்பின் மீண்டும் 'குளி!' என்று அசரீரி ஆணையிட்டது. மீண்டும் முன்னர் சொன்ன பதிலையே நான் கூறினேன். அதன்பின் மூன்றாவது முறையாகவும் அது என்னைக் குளிக்குமாறு ஆணையிட்டு, 'நாளை அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவரின் வெற்றுடலைக் குளிப்பாட்டத் தயாராக இருந்து கொள்!' என்று கூறியது. அதன் பின் நான் என் தோட்டத்தில் ஓடிய ஓடையில் குளித்துத் துப்புரவாகிக் கொண்டேன். ஆனால் எவர் இறந்தார். எவரை நான் குளிப்பாட்ட வேண்டுமென்பது எனக்கு அப்பொழுது தெரிய வில்லை. இப்பொழுது தான் தெரிய வந்தது'' என்று கூறி அல் ஹபஷியைக் குளிப் பாட்டினார்.

குளிப்பாட்டியபின் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அவரை வேண்டிக் கொண்டதன் பேரில், அவரே 'ஜனாஸா'த் தொழுகைக்குத் தலைமை தாங்கி நடத்தவும் செய்தார். தொழுகை முடிந்த பின் அவர், இப்னு அரபி (ரஹ்) அவர்களை அணுகி, ''நான் அல் ஹபஷியைக் குளிப்பாட்டும் பொழுது, இவ்வளவு பெரிய பெரியாரைக் குளிப்பாட்டும் நான் எவ்வளவு சிறிய மனிதன் என்று எண்ணினேன். அப்பொழுது அவர் கண்களைத் திறந்து என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து விட்டு, மீண்டும் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார்'' என்று கூறினார்.

அன்று மாலை நடந்த மற்றொரு நிகழ்ச்சியை இதோ இப்னு அரபி (ரஹ்) அவர்களே கூறுகின்றார்கள்.

''நான் அன்று மாலை அவரின் அடக்கவிடத்திற்குச் சென்று, அவர் இறந்ததன் பின் எனக்கு ஏற்பட்ட ஒரு துன்ப நிலையை எடுத் துரைத்தேன். அவர் தம் அடக்கவிடத்திலிருந்து எனக்குப் பதிலுரைத்தார்; இறைவனைப் புகழ்ந்தார். நான் கூறியதைக் கேட்டுக் கவலை தொனிக்க அவர் கூறிய பதிலை நான் செவியால் கேட்டேன்.''

இதன் பின்னர் ஹலப் சென்று, அங்குச் சில ஆண்டுகள் தங்கியிருந்த அவர்கள், திமிஷ்க் மன்னர் அல் மலிக்குல் ஆதிலின் அன்பான அழைப்பை ஏற்று அங்குச் சென்றனர். அங்கு அவர்களை அரசரும் அவரின் மகன் அல் மலிக்குல் அஷ்ரஃபும் அன்புடன் வரவேற்று உபசரித்ததோடு அங்கேயே அவர்களை நிரந்தரமாகத் தங்குமாறு வேண்டிக் கொண்டனர். அந்நகரின் தலைமைக் காஜியாக இருந்த ஷம்சுத்தீன் அஹ்மது அல்குவாய், அவர்கள் மீது அளவற்ற அன்பு செலுத்தி, அவர்களுக்கு அடிமை போன்று ஊழியம் புரிந்தார்.

ஏற்கனவே அவர்கள் மக்காவில் இருக்கும் பொழுது, மக்காவின் ஷரீஃப் யூனுஸ் இப்னு யூசுஃப் தம் அருமை மகள் பாத்திமாவை அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்திருந்தார். இப்பொழுது அவர்கள் திமிஷ்க் வந்த பொழுது, அந் நகரின் மாலிக் மத்ஹபின் தலைமைக் காஜி தம் மகளை அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

பாத்திமா மூலம் அவர்களுக்கு முஹம்மதுல் கபீர் என்ற இமாதுத்தீன் பிறந்தார். அவர்களுக்கு ஸைனப் என்ற பெண் மகவும் இருந்தது. அக்குழந்தை அவர்களின் எந்த மனைவியின் மூலம் அவர்களுக்குப் பிறந்தது என்று தெரியவில்லை. அந்தக் குழந்தையைப் பற்றி அவர்கள் ஃபுத்தூஹாத்தில் பின் வருமாறு எழுதுகிறார்கள்:

''நான் அக்குழந்தையை, அதன் அன்னையிடம் ஒப்படைத்து விட்டு, அவர்களை அவ்வாண்டு 'ஹஜ்'ஜு செய்ய மக்கா வருமாறு கூறிவிட்டுப் புறப்பட்டேன். சிரியாவிலிருந்து ஒரு ஹஜ்ஜுக் குழு வந்திருப்பதாகக் கேள்வியுற்று, என்னுடன் இருந்தவர்களையும் அழைத்துக் கொண்டு அக்குழுவைச் சந்திக்கச் சென்றேன். என் மகள் என்னைத் தொலை விலேயே பார்த்துக் கொண்டதும், தன் அன்னையிடம் ஓடோடிச் சென்று, 'அம்மா, அப்பா அதோ வருகிறார்கள்' என்று சப்தமிட்டுக் கூறியது. அதன்பின்னரே அவரின் அன்னை என்னைப் பார்த்தார். ஸைனபோ, 'அதோ என் அப்பா வந்து விட்டார்கள்; அதோ என் அப்பா வந்து விட்டார்கள்' என்று மகிழ்ச்சிப் பேரொலி எழுப்பியது. நான் அதனை நெருங்கியதும், 'அப்பா, அப்பா' என்று சப்தமிட்டுக் கொண்டு ஓடிவந்து என்னைக் கட்டித் தழுவியது.''

திமிஷ்கில் அவர்கள் குடியேறி, அங்கு நிரந்தரமாகத் தங்கிய பின், அவர்களின் நூல்கள் பிரதி செய்யப்பட்டு, நகரமெங்கணும் பரத்தப் பட்டன. அவற்றிலுள்ள ஞானக் கருத்துக்கள், சிறு சிறு சலசலப்பை ஏற்படுத்தவே செய்தன. எனினும் அவர்களைப் பெரும் அளவில் எதிர்த்து நிற்க எவருக்கும் துணிவேற்படவில்லை.

இப்பொழுது அவர்களின் புகழ் விண்முட்டச் சென்று கொண் டிருந்தது. எங்கு பார்க்கினும் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் பெருகி வந்தன. ஹெம்ஸின் ஆளுநர் அவர்களுக்கு நாள்தோறும் நூறு திர்ஹங்கள் காணிக்கையாக அனுப்பிக் கொண்டிருந்தார். இப்னு அல் அஸ்கி என்ற செல்வர், அவர்களுக்கு தினந்தோறும் முப்பது திர்ஹங் களை அன்புக் காணிக்கையாக அனுப்பி வைத்தார். அவற்றில் தம் குடும்பச் செலவுக்குப் போக எஞ்சியதை, அவர்கள் ஏழை, எளியவர் களுக்கு வழங்கி வந்தார்கள்.

பிறருடைய உதவிப் பணத்தைக் கொண்டு வாழ விரும்பாத அவர்கள் திமிஷ்கில் வாணிபமும் செய்யலாயினர். அங்கு அவர்களுக்கு துணிக் கடை ஒன்றும், இரத்தினக் கடை ஒன்றும் இருந்தன. ஒருநாள் அவர் களையும், அவர்களின் ஞானக் கருத்துக்களையும், கடுமையாகத் தாக்கி வந்த மார்க்க அறிஞர் ஒருவர் வறுமை வாய்ப்பட்டு அவர்களின் உதவி வேண்டி அவர்களின் இரத்தினக் கடைக்குள் நுழைந்தார். அங்கு குவியல் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டிருந்த நவமணிகளைக் கண்டு, பெரிதும் பிரமித்துப் போன அவர், அங்கு நின்று கொண்டிருந்த கடை ஊழியர் ஒருவரை அணுகி, ''முதலாளி எங்கே இருக்கிறார்?'' என்று வினவினார். அவர் முதலாளியைக் காட்டுவதற்கு முன், நண்பகல் தொழுகைக்கு பாங்கு சொல்லப்படவே, கடையிலிருந்த அனைவரும் தம் அலுவல்கள் அனைத்தையும் அப்படி அப்படியே நிறுத்தி விட்டு, கடையையும் திறந்த வண்ணம் போட்டு விட்டுப் பள்ளிக்கு விரைந்தனர்.

இப்பொழுது கடையில் தனியாக நின்று கொண்டிருந்த அவரின் உள்ளத்தில் சிறிது சபலம் தட்டியது. அங்குக் குவிக்கப்பட்டிருந்த நவமணிகளின் குவியலை நோக்கி அவரின் கை நீண்டது. அவற்றில் ஒரு பிடி அள்ளி விட்டார். அதனை அவர் தம் துணியில் முடியப் போகும் சமயத்தில், அவரின் மனச்சான்று அவருடன் பேசியது. ''ஓதிப் படித்து உள்ளறிவு பெற்றாலும், இந்தப் புத்தி உன்னை விட்டுப் போகவில்லையே. நீ கற்றதெல்லாம் களவெடுக்கத்தானா?'' என்று அது இடித்துரைத்தது. அவ்வளவுதான். அடுத்த கணம் அவர் தாம் எடுத்த நவரத்தினங்களை, அப்படியே குவியலில் சேர்த்து விட்டுப் பள்ளிக்கு விரைந்தேகினார்.

மாலையில் அவர்களைக் காண்பதற்காக, அவர்களின் துணிக் கடைக்குச் சென்று, அவர்களைப் பற்றி ஆங்கு நின்று கொண்டிருந்த ஓர் ஊழியரிடம் விசாரித்தார். அவர் ஒரு மூலையில் கம்பளியுடையணிந்து எழுதிக் கொண்டிருந்த ஒருவரைச் சுட்டிக் காட்டினார். அப்பொழுது அந்த மார்க்க அறிஞருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

அவர்களை அணுகி அவர்களுக்கு அவர் 'ஸலாம்' உரைத்த பொழுது, அவருக்கு பதில் உரைத்து அக மலர, முகமலர அவரை வரவேற்றுத் தம் அருகே அமரச் செய்து ''என்னால் ஆகவேண்டியது என்ன?'' என்று பண்போடும், பரிவோடும் வினவினார்கள் அவர்கள். உடனே அவர், தாமும் தம் நண்பர்களும் வறுமையில் உழன்று கொண்டிருப்பதை எடுத்துரைத்து உதவி வேண்டினார். அவரையும் அவருடைய நண்பர்களையும் எவரென விளங்கிக் கொண்ட அவர்கள், உடனே தம் ஊழியர் ஒருவரை அழைத்து ஒரு துணியில் நவரத்தினங்களை வைத்துக் கட்டிக் கொண்டு வருமாறு பணித்தனர். அவரும் அவ்வாறே செய்ய, அவற்றை அந்த மார்க்க அறிஞருக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ''பெரிதும் நன்றி. நான் தங்களிடம் ஒன்று கூற விரும்புகின்றேன்'' என்று சிறிது தயக்கத்துடன் கூறினார்.

''நன்றாகக் கூறுங்கள்!'' என்றார்கள் அவர்கள்.

அப்பொழுது அவர், ''பாங்கொலி கேட்டதும், கடையிலுள்ளோர் அனைவரும் கடையைத் திறந்த வண்ணம் போட்டு விட்டு, பள்ளி செல்வது எனக்கு நன்றாகத் தெரியவில்லை. பூட்டி விட்டுச் செல்லலாம்'' என்று கூறினார்.

அது கேட்ட அவர்கள், ''நாங்கள் அனைத்தையும் இறைவனின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டுச் செல்லுகின்றோமேயன்றி, வேறில்லை. இறைவன் அவற்றைக் காப்பாற்றித் தரப் போதுமானவன். இன்று நண்பகல் தாங்கள் எங்களின் இரத்தினக் கடைக்கு வந்த பொழுது அங்கிருந்த நவரத்தினங்களில் ஒரு பிடி எடுத்துத் தங்களின் துணியில் முடியப் போனீர்கள். அப்பொழுது இறைவன் தங்களின் மனத்தை மாற்றி, அவற்றை எடுத்த இடத்திலேயே வைத்துவிடுமாறு செய்தானல்லவா?'' என்று கூறினர்.

எதிர்பாராத இந்தப் பதில், அந்த மார்க்க அறிஞரின் உச்சந்தலையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியது. யாது கூறுவதென அறியாது திணறிய அவர், ''ஷைகுல் அக்பர் அவர்களே! என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று அழாக் குறையாக அவர்களை வேண்டிக் கொண்டார். அவர்களும் அவ்விதமே செய்து, அவர் தம் ஊர் திரும்புவதற்கு, அவருக்கு ஒரு கோவேறு கழுதையையும் அன்பளிப்புச் செய்து அவரை வழி அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு நாள் அவர்களின் கடைக்கு வேறொரு மார்க்க விற்பன்னர் வந்தார் - பொருள் வாங்குவதற்காகவல்ல, அவர்களைச் சோதித்தறிவதற்காக. மாபெரும் ஞான நூல்களை எழுதும் அவர், எவ்வாறு பொருளீட்டும் துறையில் ஈடுபட்டுள்ளார் என்பது அவருக்கு விளங்க இயலாத புதிராக இருந்தது. கடைக்குள் நுழைந்ததும், அதன் அதிபரான அவர்கள் தம் முன் பணத்தைக் குவித்து வைத்து எண்ணிக் கொண்டிருந்தார்கள். வந்தவர் கூறிய ஸலாத்திற்கு பதிலுரைத்து, அமருமாறு சாடை செய்து விட்டு, எண்ணுவதில் ஈடுபட்டிருந்த அவர்கள் ளுஹருக்கான பாங்கொலியை கேட்டதும், அப்படியே அந்தப் பணத்தையெல்லாம் பெட்டியில் போட்டு விட்டு, அவரையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டு விட்டார்கள். இது, அந்த மார்க்க விற்பன்னருக்குப் பெரும் வியப்பை அளித்தது.

பள்ளியில் அவர்களே, இமாமாக நின்று தொழ வைத்தார்கள். அந்த மார்க்க விற்பன்னரும், அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுதார். அப்பொழுது அவருக்குத் தாம் தம் கைத்தடியை, 'ஹவ்ளு'க்கு அருகில் மறந்து வைத்து விட்டு வந்தது நினைவுக்கு வந்தது. அதுவோ வெள்ளிப் பூண் கட்டப்பட்ட ஐந்து திர்ஹம் பெறுமானம் உள்ள கைத்தடி. தக்பீரை விட்டு விட்டு, அதனை எடுத்து வந்து, தம் அருகில் வைத்துக் கொண்டு, மீண்டும் தக்பீர் கட்டித் தொழ அவர் எண்ணினார். அதற்கு மார்க்கத்தில் இடமுள்ளது என்று அவரின் வெளிமனம் கூறியது. எனினும், இந்த அற்பப் பொருளுக்காகத் தக்பீரை விட்டு விட்டுச் செல்வதா என்று அவரின் உள் மனம் வாதித்தது. இவ்விதச் சூழலிலே அவர் சிக்கித் தொழுகையை ஒருவாறு இமாமுடன் சேர்ந்து தொழுது முடித்தார்.

தொழுது முடித்ததும் 'ஹவுள்' அருகே ஓடோடிச் சென்று தம் கைத்தடியைப் பார்த்தார். அதுவைத்த இடத்தில் வைத்தபடியே இருந்தது. அதனை மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொண்டு வந்த பொழுது, இப்னு அரபி (ரஹ்) அவர்களும் 'துஆ' ஓதி இறைஞ்சிவிட்டு, வெளியே வந்தார்கள். தம் முன் எதிர்ப்பட்ட அவரையும் அழைத்துக் கொண்டு, உணவுண்ணத் தம் இல்லம் வந்தார்கள்.

விருந்தினராகிய அந்த மார்க்க விற்பன்னரின் முன் வகை வகையான உணவுகள் கொண்டு வந்து பரத்தப்பட்டன. அவற்றைத் தம் கண்களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர். அவரின் உள்ளத்தில் ஒரு கோடி எண்ணங்கள் ஓடி மறைந்தன. ''என்ன துறவு இது? பட்டு வாணிபம் செய்து கொண்டு, பலவகையான உணவுகளை உண்டு கொண்டு வாழ்வதுவா துறவு?'' என்று அவர் தம்முள்ளே தம்மை வினவிக் கொண்டார்.

'உண்ணீர், உண்ணீர்' என்று உபசரித்த வண்ணம், அவரின் முன் பரத்தி வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களை, அவரின் உணவுத் தட்டில் எடுத்து வைத்து உண்ணுமாறு வேண்டிக் கொண்டார்கள் அவர்கள்.

''தாங்கள்?'' என்று வினவினார் அந்த மார்க்க விற்பன்னர்.

''எனக்கான உணவுகள் இப்பொழுது வரும்'' என்று பதிலிறுத்தார்கள் அவர்கள்.

''ஓஹோ! இவற்றை விட மேலான உணவுகள் அவர்களுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் போல் இருக்கிறது. அவற்றை அவர்கள் உண்பார்கள் போல் இருக்கிறது'' என்று எண்ணிக் கொண்டு அவர் தம் முன் வைக்கப்பட்ட உணவை உண்ணத் தொடங்கினார்.

அவருக்கு அவர்கள் மீது கொண்டிருந்த ஐயம் உறுதிப்பட்டுக் கொண்டிருந்தது.

அப்பொழுது அவரின் ஐயத்தைத் தகர்த்தெறியும் வெடி குண்டே போன்று, அவர்களின் ஊழியன் ஒரு கோப்பையில் கஞ்சியையும், ஒரு தட்டில் துவையலையும் கொண்டு வந்து அவர்களின் முன் வைத்தான். துவையலைத் தொட்டுக் கொண்டு, அந்தக் கஞ்சியைப் பிரியத்துடன் குடித்தார்கள் அவர்கள். இதைக் கண்டதும் அந்தமார்க்க விற்பன்னருக்குத் தம் கண்களையே தம்மால் நம்ப இயலவில்லை.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, "சோதித்தது போதுமா? இன்னும் சோதிக்க வேண்டுமா?" என்று புன்முறுவலுடன் வினவிய வண்ணம், " நான் இந்த வாணிபத்தைப் பிறருக்குப் பிழைப்புக்கு வழி ஏற்படுவதற்காக நடத்தி வருகின்றேனே அன்றி, வேறில்லை. இங்கு குவிந்து கிடக்கும் பட்டுப் பட்டாளிகளிலோ, நவரத்தினங்களிலோ, பணங்காசுகளிலோ என் மனம் இலயிக்க, நான் ஒருபோதும் அனுமதிப் பதில்லை. பட்டும் மணியும் கடையில் உள்ளன. பணம் பெட்டியில் உள்ளது. அவற்றை என் உள்ளத்தில் நான் ஒருபோதும் கொலுவேற்றி வைப்பதில்லை.

"நானோ ஒரு சாமான்யன். என்னையே நான் துன்பத்திற்காளாக்கிப் பழக்கப்பட்டவன். பல நாட்கள் ' ஹவ்ளு'த் தண்ணீரை அருந்திக் கொண்டு, பட்டினி கிடந்துள்ளேன். பாயில் படுக்காது 'சந்தூக்' பெட்டியில் படுத்துறங்கியுள்ளேன். நான் இப்பொழுது, உண்பதோ இந்த எளிய கஞ்சியே ஆகும்.

"ஆனால் தாங்களோ, மாபெரும் மார்க்க விற்பன்னர். தொழுகையில் தக்பீர் கட்டியவுடன், ஹவ்ளின் அருகே தாங்கள் மறந்து வைத்து விட்டு வந்த கைத்தடியின் நினைவு வர, தக்பீரை விட்டு விட்டு, அதனை எடுத்து வர எண்ணினீர்கள். ஐந்து திர்ஹமே விலை மதிப்புள்ள அதன் மீது தங்களின் உள்ளம் இலயித்து நின்றது. தங்களின் உடல் தான் குனியவும், குப்புற விழவும், எழுந்து நிற்கவும் செய்தது" என்று கூறினர்.

அப்பொழுது அந்த மார்க்க விற்பன்னருக்கு ஏற்பட்ட நாணத்திற்கு அளவில்லை. அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களிடம் மன்னிப்புக் கோரினார் அவர். அவர்களும் அவரைப் பெரு மனத்துடன் மன்னித்து, அவருக்குப் பல பரிசில்களை வழங்கி, மரியாதையுடன் அவரை அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் கடையில் அமர்ந்து வாணிபம் செய்து கொண்டிருக்கும் பொழுது, துறவி போன்று உடையணிந்த ஒருவர்

அவர்களின் முன் வந்து நின்று, ''என்ன நீர் பற்றற்ற முனிவர் போன்று எழுதவும், பேசவும் செய்து விட்டு, இத்தகு பெரிய வாணிபம் செய்து கொண்டுள்ளீர்! உமக்கும் உம்முடைய பேச்சு, செயல் ஆகியவற்றிற்கும் ஒற்றுமை இருக்கிறது என்றால், நீர் இக்கணமே என்னுடன் கானகத்திற்கு வாரும், கடும் தவம் செய்ய!'' என்று கூறினார். அடுத்த கணமே அவர்கள் அனைத்தையும் அப்படி அப்படியே போட்டு விட்டு, அவருடன் காட்டுக்குப் புறப்பட்டு விட்டார்கள். பின்னர் அவர்களைக் காட்டிற்கு அழைத்தவர் அவர்களைச் சோதிப்பதற்காக அவ்விதம் கூறியதாகச் சொல்லி, அவர்களை வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்ட பாடு, போதும் போதுமென்றாகி விட்டது.

இடக்காகத் தம்மிடம் வினா எழுப்புபவர்களுக்கும், இதமாக பதிலுரைக்கும் இயல்பினராக அவர்கள் இருந்தனர். தீயவர் ஒருவர் அவர்களிடம் வந்து ''இறைவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?'' என்று வினவிய பொழுது '' அவன், பகலில் உம்மைப் போன்ற மனிதர்கள் செய்யும் செயல்களைக் கண்டு துன்புற்றுக் கொண்டிருக்கிறான். இரவில் எங்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான்'' என்று அவர்கள் பதிலிறுத்தனர்.

அவர்களின் அன்புள்ளம் அனைவர் மீதும் இரக்கம் காட்டியது. ஒரு நாள் அவர்கள் ஊருக்கு வெளியே உலவச் சென்ற பொழுது, அவர்களின் எதிரே ஒரு விறகுத் தலையன் நொண்டி நொண்டி வந்து கொண்டிருப் பதைக் கண்டனர். அவன் ஒவ்வோர் அடி எடுத்து வைப்பதற்கும், படும் சிரமத்தைக் கண்டு, அவர்களின் அன்புள்ளம் நைந்துருகியது. அவனின் பாதத்தில் முள் தைத்து விட்டதையும், தம் தலையிலுள்ள விறகுக் கட்டைக் கீழே இறக்கி வைக்க இயலாத நிலையில் அவன் நொண்டி, நொண்டி நடந்து வருகின்றான் என்பதையும், உய்த்துணர்ந்து கொண்ட அவர்கள், விறுவிறென அவனின் முன் நடந்து சென்று, முழங்காலில் அமர்ந்து, ''அப்பனே! ஒரு கையால் விறகுக் கட்டைப் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையை என் தலை மீது அழுத்தி வைத்து, முள் தைத்த உன் காலைத்தூக்கு!'' என்று கூறினர். அவ்விதமே அவன் செய்ய, அவர்கள் அவன் காலில் தைத்திருந்த முள்ளை மெதுவாக வெளியே எடுத்தனர். சில கணங்களில் வேதனை எங்கேயோ ஓடி மறைந்தது. நன்றி கூறிவிட்டு, நகர் நேக்கி நடந்து சென்றான் விறகுத் தலைவன்.

இதன் பின் அவர்களும் மேற்கொண்டு செல்லாது, இல்லம் திரும்பி னார்கள். இரவு முழுதும் அவர்கள் தம் தியான அறையில் இறைவனைத் தொழுதார்கள். தொழுதார்கள்; பொழுது விடியும் வரையில் தொழுதார்கள். அதன் பின் அவர்கள் தம் இருகரம் ஏந்தி, ''இறைவ

எம்பெருமநேற்று மாலை நான் உலவச் சென்ற பொழுது, எதிர்ப்பட்ட விறகு வெட்டிக்கு உதவக் கூடிய நல் வாய்ப்பினை எனக்கு நல்கியதற்கு, நான் உனக்கு எவ்வாறு கைம்மாறு செய்ய வல்லேன்? எனினும், என்னால் இயன்ற அளவு இரவு முழுவதும் நின்று தொழுதேன். அத் தொழுகையை, அதற்கான சின்னஞ்சிறு கைம்மாறாக, அன்புக் காணிக் கையாக ஏற்று என்னை ஆட்கொள்வாயாக!'' என்று கண்ணீருடனும், கம்பலையுடனும் கூறி இறைஞ்சினார்கள்.

அவர்கள் தம் பகைவர் மீதும் இரங்கினார்கள். திமிஷ்கில் அவர்களுக்குப் பரம விரோதியாக ஒருவன் இருந்து வந்தான். அவர்களை அவன் திட்டாத நாளே இல்லையென்று கூறலாம். ஒவ்வொரு நாளும் அவர்கள் மீது வசைமாரி பொழியப் புதுப்புதுப் பதங்களை உற்பத்தி செய்வதில், அவனுடைய மூளை வெகு வேகமாக வேலை செய்து வந்தது. ஒரு நாள் அவன் திடீரென்று இறந்து விட்டான். அது கேட்டு அவர்கள் பெரிதும் வருந்தினார்கள். வருந்தியதோடு மட்டுமல்லாது, அவனுடைய ஈமக்கிரியைகள் அனைத்திலும் கலந்து கொண்டார்கள்.

அவனை நல்லடக்கம் செய்து விட்டு இல்லம் திரும்பிய அவர்கள் தம் தியான அறையில் அமர்ந்து நெடுநேரம் தியானத்தில் ஈடுபட்டிருந் தார்கள். காலை உணவு அவர்களின் அருகே கொண்டு வந்து வைக்கப் பட்டது. அதனை அவர்கள் கடைக்கண்ணால் கூடப் பார்க்கவில்லை. நண்பகலானது. அப்பொழுதும் அவர்கள் தம் தியான அறையிலேயே அமர்ந்திருந்தார்கள். அவர்களின் ஊழியன், பகல் உணவு கொண்டு வந்து அவர்களின் அருகே வைத்துவிட்டுச் சென்றான். அவர்கள் அதனை ஏறிட்டும் பார்க்கவில்லை. கவலை தோய்த்த முகத்துடன் அவர்கள் தியானத்தில் ஈடுபட்டிருந்தார்கள். பொழுதும்பட்டது. இரவு உணவு உண்பதற்கான நேரமும் வந்தது. அப்பொழுது அவர்கள் ஊழியனைச் சப்தமிட்டு அழைத்து தமக்கு இரவு உணவு கொண்டு வருமாறு கூறினார்கள். அப்பொழுது அவர்களின் முகம் மேகங்களை விட்டும் நீங்கிய கதிரவன் போன்று பொலிவுடன் காட்சி வழங்கியது.

அப்பொழுது ஊழியன் அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! காலை உணவைத் தங்களின் அருகில் கொண்டு வந்து வைத்தேன். அதனைத் தாங்கள் உண்ணாது கவலை தோய்ந்த முகத்துடன் வீற்றிருந் தீர்கள். பின்னர் நண்பகல் உணவைத் தங்களின் அருகே கொண்டு வந்து வைத்தேன். அப்பொழுதும் தாங்கள் அப்படியே இருந்தீர்கள். இப் பொழுதோ, தாங்கள் மகிழ்ச்சி வதனத்துடன் இரவு உணவு கொண்டு வருமாறு கூறுகின்றீர்கள். இதற்கான காரணம் என்ன?'' என்று வினயமாக வினவினான்.

அதற்கு அவர்கள், ''என்னை நாள் தவறாமல் திட்டி வந்தவன் இன்று இறந்து விட்டானல்லவா? அவனை நல்லடக்கம் செய்து விட்டு இங்கு அமர்ந்து அவனை மன்னித்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சினேன். 'முடியாது' என்று இறைவன் கூறினான். 'அவ்விதமாயின் அவனை நீ மன்னிக்கும் வரை நான் உணவுண்ணவோ, நீர் அருந்தவோ மாட்டேன்' என்று ஆணையிட்டு, 'லா இலாஹ இல்லல்லாஹு' என்ற கலிமாவை எழுபதாயிரம் தடவை ஓதி, அவனுக்கு ஹதியா (அன்பளிப்பு) செய்தேன். அதன் பொருட்டு இறைவன் அவனின் பாவங்களை மன்னித்தான்'' என்று பதிலிறுத்தார்கள்.

இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்யும் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அழகிய வழி முறையை (சுன்னத்தை) மட்டுமின்றி, அவர்களின் அனைத்து வழி முறைகளையும் அணுவத்தனையும் விடாது இப்னு அரபி (ரஹ்) அவர்கள் பின்பற்றி வந்தார்கள்.

மார்க்க வரைமுறைகளுக்கு அணுவத்தனையும் மாறுபடாது வாழ்ந்து வந்த அவர்கள், இமாம்களில் எவரையும் பின்பற்றவில்லை. இதனை அவர்கள் ஒரு கவிதையில், ''இப்னு ஹஸம் இவ்வாறு, இவ்வாறு கூறினார், அஹ்மது (இப்னு ஹம்பல்) இவ்வாறு, இவ்வாறு கூறினார், அல் நுஃமான் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) இவ்வாறு, இவ்வாறு கூறினார் என்று சொல்லக் கூடியவர்களில் நானும் ஒருவனல்ல''என்று குறிப்பிடுகிறார்கள்.

மக்காவில் வைத்து அவர்கள் எழுதத் தொடங்கிய 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வை அவர்கள், திமிஷ்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது நிறைவு செய்தார்கள். அதில் பல்வேறு அகமியக் கருத்துக்களை எல்லாம் எடுத்துரைக்கும் அவர்கள் தாம் ஆன்மீக முறையில் இப்ராஹீம் (அலை) அவர்களைச் சந்தித்ததையும், அவர்களிடம் திருக் குர்ஆனை ஓதிக் காட்டியதையும், மூஸா (அலை) அவர்களைச் சந்தித்தையும், அவர்களின் கரங்களில் பாவமன்னிப்புச் செய்ததையும், அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்ததையும் குறிப்பிடுகின்றார்கள்.

அதில் 560 அத்தியாயங்கள் உள்ளன. அவர்கள் அதனை தெய்வீக உதிப்பின் மூலம் எழுதியதாகக் குறிப்பிடுகின்றார்கள். ''இது நான் சுயமாகச் சிந்தித்து எழுதியதில்லை. இதில் நான் எழுதியுள்ள அனைத்தையும், இறைவன், உதிப்பின் அமரர் மூலம் எனக்குத் தெரியப் படுத்தினான்.'' என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் அவர்கள் கூறும் பொழுது, ''நான் இந்நூலில், நான் எழுதிய பிற நூல்களில் பின்பற்றிய முறைகளையோ, ஏனையோர் பின்பற்றிய

முறைகளையோ, பின்பற்றவில்லை. தெய்வீக உதிப்பின் மூலம் நான் இதனை எழுதினேன். நான் எழுதும் தலைப்பிற்குத் தொடர்பில்லாத செய்திகள் போன்று, வெளிப்படையில் தோன்றக்கூடிய செய்திகளை இதில் பொறித்துள்ளேன். ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத கலப்படம் போன்று இது சிலருக்குத் தோன்றலாம். ஆனால், ஒவ்வொரு அத்தியா யத்தின் கீழ்ப் பொறிக்கப்பட்ட செய்திகளும், அதன் இருதயம் போன்றவை என்று நான் கருதுகிறேன். நான் 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வை மட்டும் எழுதாதிருந்திருப்பின், நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டிருப்பேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர்கள் எழுதிய மிகவும் பிரபலமான நூல் 'புஸூஸுல் ஹிகம்' என்பதாகும். இருபத்தேழு அத்தியாயங்களைக் கொண்ட அதனை அவர்கள் ஹிஜ்ரி 627 (கி.பி 1229) ஆம் ஆண்டில் எழுதி முடித்தார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் கையிலே ஒரு நூலை வைத்துக் கொண்டு, ''நான் கூறுவதை எழுதுக! அதனை உலகிற்கு வெளிப் படுத்துக!! அதனால் மக்கள் பயனடையட்டும்'' என்று கூறி, அதிலுள்ள செய்திகளைத் தமக்குக் கனவில் எடுத்துரைத்ததாக அவர்கள் அதன் முகவுரையில் குறிப்பிடுகின்றார்கள்.

இவற்றைத் தவிர, அவர்கள் 'புத்தூஹாத்துல் மதனிய்யா,' 'கீமியா அல் ஸஆதத்', 'ஹிலியத்துல் அப்தால்', முதலான முன்னூறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்கள். 'ஹில்யத்துல் அப்தால்' என்ற நூலை ஒரு மணி நேரத்தில் தான் அவர்கள் எழுதி முடித்தார்கள். அலைக்கு மேல் அலை வருவது போன்று, அவர்கள் ஒன்றிற்குப் பின் ஒன்றாக நூல்களை எழுதிக் குவித்துள்ளார்கள். அவர்களின் வசன நடை சில பொழுது எளிதாகவும், மற்றும் சில பொழுது கடினமாகவும் உள்ளது.

ஞானக் கருவூலமாக விளங்கும் அவர்களின் நூல்களில் பொதிந்து கிடக்கும் ஆழிய கருத்துக்கள், அவர்களுக்கு உள்ளுணர்வால் அறிவிக்கப் பட்டதாகவும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெரும் கருணையினால் உணர்த்தப்பட்டதாகவும் உள்ளன.

முற்கால ஆன்மீக ஞானிகளைப் பின்பற்றி, அவர்கள் தம் நூல்களில் ஹல்லாஜ் (ரஹ்), பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்), இமாம் கஸ்ஸாலி (ரஹ்) ஆகியோரின் தத்துவங்களை எடுத்துக் கையாண்டுள்ளார்கள். ஹக்கீம் அல் திர்மீதி (ரஹ்) அவர்கள் எழுதிய, 'ஹத்தமூல் அவ்லியா' என்ற நூலை அவர்கள் பெரிதும் ஈடுபாட்டுடன் படித்ததன் சாயல், அவர்களின் நூல்களில் ஆங்காங்கே தெரிகிறது.

அவ்வப்பொழுது அவர்களுக்கு ஏற்படும் உதிப்புகளின் தொகுப்பாக, அவர்களின் நூல்கள் இருப்பதால், அவற்றில் ஏனையோர் எழுதிய நூல்களில் காணப்படும் ஓர் ஒழுங்கு முறையை நாம் காண முடியாது. 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வில், அவர்கள் கையாண்டிருக்கும் நடை, அறிஞர்களுக்கே விளங்கிக் கொள்வதற்குக் கடினமாக உள்ளது. அவர்களின் நூல்களில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களோ, ஆழம் காண முடியாத ஞானக் கருத்துக்களாக இருக்கின்றன. எனவே, அவை பற்றிய ஒழுங்கான ஆய்வு நிகழ்த்த இதுவரை எவரும் முன்வரவில்லை.

அவர்கள் எழுதிய 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வே இத்தாலியக் கவிஞர் தாந்தேக்கு 'டிவைன் காமெடியா' என்ற புகழ் பெற்ற காப் பியத்தை எழுத 'கரு'அளித்தது என்று பேராசிரியர் நிக்கல்ஸன் கூறுகிறார். அவர்களின் மாணவர் ஸத்ருத்தீனுடன் நெருங்கிய தோழமை கொண் டிருந்த மௌலானா ரூமி (ரஹ்) அவர்களுக்கு, 'மஸ்னவீயை எழுதுவதற்கு 'கரு' அளித்ததும் அவர்களின் 'புத்தூஹாத்துல் மக்கிய்யா' வே என்றும், எனவே, தான் ஈரான் நாட்டு ஸூஃபிக் கவிஞர்கள், மஸ்னவீயை 'ஃபார்ஸி மொழியிலுள்ள புத்தூஹாத்' என்று அழைத்தனர் என்றும் கூறப்படுகிறது.

அவர்கள் வசன நடையில் மட்டுமின்றி, கவிதையிலும் சில நூல்கள் இயற்றியுள்ளனர். அவற்றில் தலை சிறந்து விளங்குவது, நாம் ஏற்கனவே குறிப்பிட்ட 'தர்ஜுமானுல் அஷ்வாக்' (ஆசைகளின் மொழி பெயர்ப்பு) என்பதாகும். அரபியிலுள்ள ஞானக் கவிதைகளில், அவர்களின் கவிதைகள், இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்களின் கவிதைகளுக்கு அடுத்த இடத்தைப் பெறுகின்றன.

இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்களோ அரபு நாடு ஈன்ற மாபெரும் ஸூஃபிக் கவிஞர். எவ்வாறு தன்னை அழித்த ஃபனா நிலையில், பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், சுப்ஹானீ' (நானே தூயன்) என்றும் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள், 'அனல் ஹக்' (நானே இறைவன்) என்றும் கூறினார்களோ, அதே போன்று, அதே நிலையில், இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்களும், 'அன ஹிய' (நான் தான் அவன்) என்று கூறினர்.

மாண்பாளரின் மாண்பை, மாண்பாளரே அறிவர் என்பது போன்று, இப்னு அரபி (ரஹ்) அவர்களும், இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்களும், ஒருவர் மற்றவரின் மாண்பை நன்கு அறிந்திருந்தனர். இருவரும் சந்தித்திராத போதினும், இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்கள், இப்னு அரபி (ரஹ்) அவர்கள் மீது கொண்டிருந்த மதிப்போ அளப்பரியதாக இருந்தது. "பெட்டிகளுடன் பாலையைக் கடந்து செல்லும் ஒட்டகம் ஓட்டுபவரே! அன்பு கூந்து தாயீ மலைச்சாரலில் சற்றுத் தாமதிப்பீராக!" என்று இப்னு

ஃபாரின் (ரஹ்) அவர்கள், ஒரு கவிதையில் கூறியிருப்பது, தாயீ கிளையில் தோன்றிய இப்னு அரபி (ரஹ்) அவர்களையே குறிக்கும் என்று சிலர் கூறுகின்றனர்.

இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்கள் எழுதிய 'அல் தயீயத்துல் குப்ரா' என்னும் கவிதை நூலினைப் படித்துச் சொக்கி மகிழ்ந்த இப்னு அரபி (ரஹ்) அவர்கள், அதற்கு ஒரு விரிவுரை எழுதத் தமக்கு அனுமதி வழங்கு மாறு இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்களுக்கு மடல் தீட்டிய பொழுது, இப்னு அரபி (ரஹ்) அவர்கள் எழுதிய 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வைப் படித்து, அதில் மூழ்கித்திளைத்துக் கொண்டிருந்த இப்னு ஃபாரின் (ரஹ்) அவர்கள், ''தாங்கள் எழுதிய 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வே நான் எழுதிய 'அல் தயீயத்துல் குப்ரா'வுக்கு அழகிய விரிவுரை போன்றுள் ளதே. பிறிதொரு விரிவுரையா தாங்கள் எழுத வேண்டும்?'' என்று பதில் எழுதிவிட்டார்கள்.

இப்னு அரபி (ரஹ்) அவர்கள், மாபெரும் மார்க்க மேதை ஃபக்ருத்தீன் ராஸி (ரஹ்) அவர்களுடனும், கடிதத் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் ஃபக்ருத்தீன் ராஸி (ரஹ்) அவர்களுக்கு எழுதிய ஒரு மடலில், நூல்களைப் படிப்பதில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, ஆன்மீகத் துறையில் கவனம் செலுத்துமாறு ஆலோசனை பகர்ந்தார்கள்.

'படைப்புப் பொருள்கள் அனைத்திலும் இறைவனே உள்ளான்' என்ற வஹ்தத்துல் உஜூத் கொள்கையின் மூலவர் அவர்களே ஆவர். ''அவனே ஆதி. அவனே அந்தம். அவனே புறமும் அவனே உள்ளும். நீங்கள் எங்குத்திரும்பினும், அல்லாஹ்வின் தோற்றத்தையே காண இயலும். அல்லாஹ் உங்களின் உயிர் நரம்பை விட, அண்மையில் உள்ளான். ஒவ்வொரு விநாடியும் அவன் புத்தம் புதிய காட்சியளிக் கிறான். படைப்புகள் அனைத்தும் இறுதியில் அல்லாஹ்விடமே திரும்ப வேண்டும்'' என்ற இறைவனின் திருவசனங்களையும், ''நீயே புறம். உனக்கு மேலே ஒன்றுமில்லை. நீயே உள். உனக்குக் கீழே ஒன்றுமில்லை. நீயே ஆதி. உனக்கு முன்னால் ஒன்று மில்லை. நீயே அந்தம். உனக்குப் பின்னே ஒன்றுமில்லை'' என்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருள் வாக்கையும் கொண்டு, இந்தக் கொள்கையை அவர்கள் உருவாக் கினார்கள்.

ஆனால் அவர்களின் இக்கொள்கையை, இப்னு தைமிய்யா பெரிதும் எதிர்த்தார். அதனைக் கண்டித்து 'பீ பதலு வஹ்தத்துல் உஜூத்' என்னும் பெயருடன் ஒரு நூலே எழுதி வெளியிட்டார்.

இதன்பின் ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில், பக்தாதில் குடியேறி வாழ்ந்த ஷைகு ருக்னுத்தீன் அலாவுத் தௌலா என்பவர், இப்னு அரபி (ரஹ்) அவர்களின் 'வஹ்தத்துல் உஜூத்' கொள்கையை எதிர்த்து, வஹ்தத்துஷ் ஷுஹூத்' கொள்கையை உருவாக்கி வெளியிட்டார். ''இவ்வுலகமும், இவ்வுலகிலுள்ள படைப்புப் பொருள்களும், இறைவனின் பிரதிபலிப்பேயன்றி, இறைவனின் வெளிப்பாடு அல்ல. இறைவன் வேறு, இறைவனின் பிரதிபலிப்பு வேறு'' என்று அவர் கூறினார்.

'வஹ்தத்து உஜூது' கொள்கையை, ஹிஜ்ரி பத்தாம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த முஜத்தித் அல் ஃபஸானி என்னும் சிறப்புப் பெயர் பெற்று ஷைகு அஹ்மது ஸர்ஹிந்த் (ரஹ்) அவர்கள் எதிர்த்தனர். அதைப் பற்றி அவர்கள் தம் மடல்களில் ஒன்றில் பின்வருமாறு எழுதினர்:

''ஒரு கழியை எடுத்து, அதன் ஒரு நுனியை நெருப்பில் வைத்தால், அதில் நெருப்புப் பற்றி எரிகிறது. அப்பொழுது அக் கழியை வேகமாகச் சுற்றினால் ஒரு நெருப்பு வளையம் ஏற்படுகிறது. அந்த நெருப்பு வளையத்தை நிரந்தரமாக இருக்குமாறு செய்து விட்டோம் என்று வைத்துக் கொண்டால், அது வெளிப்பார்வைக்கு ஓர் உருவைப் பெற்றிருப்பது போன்று தோன்றிடினும், அது அக்கழியின் நுனியிலிருந்த நெருப்பின் பிரதிபலிப்பே அன்றி உண்மையான நெருப்பல்ல.

''உண்மையில் இறைவன் ஒருவனே நிலைத்திருப்பவன். அவனைத் தவிர வேறொன்றும் நிலைத்திருப்பதில்லை. இவ்வுலகமானது நெருப்பு வளையம் போன்று உள்ளதேயாகும். அது உண்மையானதல்ல. எனினும், அதற்கு உருவம் அளிக்கப்பட்டு, உண்மையானது போன்று தோன்றுகிறது. இறைவன் தன் அளப்பரும் ஆற்றலினால், அதனை உண்மை போன்று தோன்றச் செய்துள்ளான்.''

இவ்வாறு அவர்கள் வாதித்த போதினும், பிற்காலத்தில் டில்லியில் வாழ்ந்த ஞான மேதை ஷா வலியுல்லாஹ் அவர்கள், இப்னு அரபி (ரஹ்) அவர்களின் 'வஹ்தத்துல் உஜூது' கொள்கையையே ஆதரித்தனர். அத்துடன் நில்லாது, 'வஹ்தத்துல் உஜூது', 'வஹ்தத்துஷ் ஷுஹூது' ஆகிய இரு கொள்கைகளையும் பற்றித் திறனாய்வு செய்து, 'பைஸலாத்து வஹ்தத்துல் உஜூது, வ ஷுஹூது' என்ற ஒரு நூலும் எழுதி வெளியிட்டனர். அதில் அவர்கள், 'வஹ்தத்துல் உஜூது' கொள்கைக்கும், 'வஹ்தத்துஷ் ஷுஹூது' கொள்கைக்கும் உள்ள வேறுபாடு, வார்த்தையளவிலேயே அன்றி வேறில்லை. உவமை, உருவகம் ஆகியவற்றைப் பயன்படுத்தாது, சிந்தித்துப் பார்ப்பின், இரண்டும் ஒன்றே என்பது நன்கு தெரியவரும்'' என்று அவர்கள் முடிவாகக் கூறியுள்ளனர்.

இப்னு அரபி (ரஹ்) அவர்கள், படைப்புகள் அனைத்திலும், இறைவனே உள்ளான் என்ற வஹ்தத்துல் உஜூது கொள்கையைத் தோற்றுவித்த போதினும், இறைவன் வேறு, மனிதன் வேறு; இரண்டும் இரண்டறக் கலக்க இயலாது என்பதில் அசைக்க முடியா நம்பிக்கையுடையவர்களாயிருந்தனர். ''அண்ணல் நபி (ஸல்) அவர்களே, காப கௌஸைனி அவ் அத்னா (வில்லின் இரண்டு நுனிகளும் அணுகும் அளவு இடைவெளி இருக்கும்) நிலையில் தானே, இறைவனை விண்ணேற்றத்தின் போது அணுகினர்'' என்று அவர்கள் வாதித்தனர்.

'வஹ்தத்துல் உஜூது' கொள்கை மட்டுமின்றி, இன்ஸானுல் காமில் தத்துவமும் - ஏன் - அந்தப் பதமும் கூட - அவர்களில் நின்றுமே உதித்தனவாகும் என்று கூறப்படுகின்றன. ஒரு விதையை மண்ணில் விதைத்து நீர் விட்டால், அது முளையிட்டுத் தளிர்த்து, வளர்ந்து மரமாகி, பூத்துக் காய்த்துப் பழுத்து, மீண்டும் விதையாக, அப்பழத்திலிருந்து வெளி வருவது போன்று அண்ணல் நபி (ஸல்)முதல் நபியாகவும் இறுதி நபியாகவும் விளங்கினர். இந்தத் தத்துவத்தை அடிப்படையாக வைத்தே ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞான மேதை அப்துல் கரீம் ஜீலி (ரஹ்) அவர்கள், 'அல்இன்ஸானுல் காமில் ஃபீ மஃரிஃபத்தில் அவாஹிர் வல் அவாயில்' என்னும் பெயருடன் ஞான நூல் ஒன்றை எழுதினர்.

இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தங்களின் வாழ்நாளின் இறுதியில், திருக்குர்ஆனுக்கு ஓர் அரிய விளக்கவுரை எழுதத் தொடங்கி, அதில் பதினைந்து பாகங்களுக்கு விளக்கவுரை எழுதினர். இந்நிலையில் அவர்கள் நோயுற்றனர். எனினும் அவர்கள் நோயைச் சற்றேனும் பொருட்படுத்தாது எழுதிக் கொண்டிருந்தனர். வீட்டில் இருந்த போதினும், பிரயாணத்தில் இருந்த போதினும், நாளொன்றுக்கு மூன்று குயர் காகிதம் வீதம், வாணாள் முழுவதும் எழுதிக் கொண்டிருந்த கரமல்லவா அவர்களின் கரம்! எனவே, அது எழுதிக் கொண்டே இருந்தது. திடீரென ஒரு நாள் அவர்களின் உடலைப் பீடித்திருந்த நோய், அவர்களின் கரத்தையும் தாவிப்பிடித்து அதனை எழுதவிடாது முடக்கியது. எனினும், அவர்கள் மனம் தளரவில்லை. தம் மாணவர் ஒருவரிடம் தாம் சொல்லச் சொல்ல அதனை எழுதுமாறு பணித்தார்கள். அவரும் அவ்வாறே செய்தார்.

ஒரு நாள், ஆசிரியரும் மாணவரும் அருகருகே அமர்ந்திருந்தனர். ஆசிரியர் உலகின் இறுதி நாளின் போது நடக்கக் கூடிய அத்தனையையும் பற்றிய அறிவிப்பைத் தன்னுள் பொதியப் பெற்றதாகக் கருதப்படும் 'சூரத்துல் கஃபு'க்கு விளக்கவுரை கூறிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவர்கள், அதன் 65 - ஆவது வசனமான 'இவ்விருவரும் அங்கு

வந்த போது, (அவ்விடத்தில்) நம் அடியாரில் ஒருவரைக் கண்டார்கள். அவர் மீது நாம் அருள்புரிந்து, நமக்குச் சொந்தமான ஒரு ஞானத்தையும் நாம் அவருக்குக் கற்பித்திருந்தோம்' என்பதற்கு விளக்கம் கூறிக் கொண்டு வரும் பொழுது திடீரென அவர்களின் மூச்சு நின்றது. அவர்களின் உடலில் சூரியக் கணக்குப் படி எழுபத்தைந்து ஆண்டுகள், மூன்று மாதங்கள் பதினெட்டு நாட்கள் ஆட்சி செய்த உயிர், குறுகிய இம்மை வாழ்வை முடித்துக் கொண்டு, முடிவற்ற மறுமைப் பயணத்தைத் தொடங்கியது. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 638 - ஆம் ஆண்டு, ரபீஉல் ஆகிர், பிறை 28 (கி.பி. 1240, நவம்பர் 16 ஆம் நாள்) வெள்ளிக்கிழமை இரவிலாகும்.

அவர்கள் இறுதியாக விளக்கம் கூறிய, அத்திரு வசனம், அவர்களின் வாழ்விற்கு இறைவனே இறுதியாக விளக்கம் கூறும் திருவசனம் போன்று அமைந்து நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது!

அவர்களின் பூத உடல் பண்டு தொட்டு, சுவனத்தின் ஒரு பகுதி என்று கருதப்பட்டு, நபிமார்களால் தரிசிக்கப்பட்டு வந்த காஸிய்யூன் மலையடி வாரத்திலுள்ள ஸாலஹ் என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டபின், அவ்விடம் முன்னைவிட அதிகமான பிரபல்யத்தைப் பெற்றது. அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காக மக்கள் நாள்தோறும் சாரிசாரியாக வந்து கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ சகாப்தம் பதினாறாவது நூற்றாண்டில், துருக்கி சுல்தான் இரண்டாம் ஸலீம் அதன் மீது மாபெரும் கட்டடத்தை எழுப்பினார். அவர்களின் அடக்கவிடத்தின் அருகே, அவர்களின் இரண்டு ஆண்மக்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள் ளார்கள்.

மறைவாக வைக்கப்பட்டிருந்த ஆன்மீக இரகசியங்களை, வெளிப் படையாக மக்களுக்கு எடுத்துரைத்த முதல் மனிதராக விளங்கிய இப்னு அரபி (ரஹ்) அவர்களை, மக்கள் 'ஷைகுல் அக்பர்' (மாபெரும் குருநாதர்) என்றும், 'ஹுஜ்ஜத்துல்லா ஹில் ளாஹிரா' (இறைவனின் வெளிப் படையான அத்தாட்சி) என்றும், 'ஆயத்துல்லாஹில் பாஹிரா' (இறை வனின் வியத்தகு அற்புதம்) என்றும் புகழ்ப் பெயர் சூட்டி அழைத்தனர்.

அவர்கள் அடைந்த ஆன்மீக உச்சமோ அளப்பரியதாகும். இதைப் பற்றி அவர்களின் ஆன்மீக மாணவர் ஸத்ருத்தீன் குறிப்பிடும் பொழுது, ''எங்களின் ஷைகு, நபிமார்களுடையவும், முற்காலத்து இறைநேசச் செல்வர்களுடையவும் ஆன்மாக்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இதனை அவர்கள் மூன்று விதமான வழிகளில் எய்தப் பெற்றனர். (1) இவ் உலகிற்கு அவர்களின் ஆன்மாக்களை வரவழைத்து, அவர்கள் இவ் உலகில் வாழ்ந்த உருவில் அவர்களைக் காண்பர். (2) அவர்களைக்

கனவில் தரிசிப்பர். (3) தாங்கள், தங்களின் சட உடலை நீத்து, அந்த ஆன்மாக்களைச் சந்திப்பர்'' என்று கூறுகிறார்.

சிலர் அவர்களைத் தூற்றித் திரிந்த பொழுது, இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி (ரஹ்) அவர்கள், அவர்களைப் போற்றிப் புகழ்ந்து, 'தன்பீஹ் காபி பி தன்ஸி யாத்தெ இப்னுல் அரபி' என்னும் பெயருடன் ஒரு நூலே எழுதி வெளியிட்டார்கள்.

ஷைகு அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி (ரஹ்) அவர்களோ, அவர்களின் 'புத்தூஹாத்'தைச் சுருக்கி எழுதியதோடு, அவர்களை 'மாபெரும் ஞான மகான்' என்று போற்றிப் புகழ்ந்தார்கள்.

அவர்களின் நூல்களைப் படிக்கக் கூடாதென்று சிலர் 'ஃபத்வா' வழங்கியதை அறிந்து, அது பற்றி அரபிப் பேரகராதியாகிய காமூஸைத் தொகுத்த அறிஞர் மஜ்துத்தீன் ஃபிரோஸாபாத்தி அவர்களிடம் வினவப் பட்ட பொழுது, ''அவற்றைப் படிக்கலாம்'' என்று ஆணித்தரமாக எடுத்துரைத்து, 'அல் இக்திபாத்து பி முஃஅலஜத்தி இப்னுல் கையாத்' என்னும் பெயருடன் ஒரு நூலே அவர்கள் எழுதி வெளியிட்டார்கள். அதில் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடும் பொழுது, ''ஷைகுல் அக்பர் அவர்கள், மாபெரும் ஞானவழி காட்டியாவார்கள். ஆன்மீக ஆராய்ச்சியில் அவர்கள் ஓர் இமாமின் தகுதியைப் பெற்றிருந்தார்கள். அவர்களின் சிந்தனைகளும், அவற்றிலிருந்து வெளியான நூல்களும், ஆழம் தெரியா அலைகடலுக்கு நிகரானவையாகும். அக்கடலின் அதளபாதாளத்தையும், அதில் கிடக்கும் முத்துக்களையும் கண்டவர்கள் எவருமில்லை. தகுதி வாய்ந்தவர்கள் மீதே அல்லாஹ்வின் அருள் ஞானம் சொரியப்படுகிறது.

''அவர்களின் நூல்களின் தனித்தன்மை என்னவென்றால், அவற்றை ஒருவர் படித்துச் சிந்திப்பின், அவரின் இதயம் விசாலமடைகிறது. அவரின் துன்பங்கள் அகல்கின்றன. அவரின் சிக்கல்களுக்கு ஒரு முடிவு காணப் படுகிறது. இறைவனின் அருள் பொழியப்பட்டு, அவனின் அறிவுக் கதவுகள் திறக்கப்பட்டவர்களுக்கேயன்றி, வேறு எவருக்கும் இத்தகு நூல்களை எழுதுவது இயலாத செயலாகும்.

''சிலர் அவர்களைப் புறக்கணிக்கிறார்கள். அறிவற்றவர்களோ, அவர்களைக் 'காஃபிர்' என்று கூறும் அளவிற்கும் சென்று விட்டார்கள். அவர்களின் சொல், செயல், கவிதை ஆகியவற்றைப்புரிந்து கொள்ள இயலாத் தன்மையால் ஏற்பட்ட விபரீதமே, இதுவன்றி, வேறில்லை. அந்த அறிவிலிகளின் துர் அதிர்ஷ்டக் கரங்கள், நீளமில்லாமல் போனதனால், ஷைகுல் அக்பர் அவர்களின் உன்னதமான உயரிய ஞானப்

பழங்களை எட்டிப் பறித்து உண்பதற்கு அவர்களால் இயலாமல் போய்விட்டது'' என்று அழகாக எடுத்துரைக்கிறார்கள்.

நம் நாட்டில் தோன்றிய மாபெரும் ஞானமேதை 'கல்வத்' நாயகம் அவர்கள், இப்னு அரபி (ரஹ்) அவர்கள் எழுதிய, புதூ ஹாத், புசூஸ் ஆகிய நூல்களைப் பெரிதும் விரும்பிப் படித்து வந்தார்கள். புசூஸை, இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தமக்காகவே எழுதினார்கள் என்றும், அவர்கள் கூறி னார்கள். ''ஆன்மீகப் பரிபக்குவம் பெற்றவர்களாலேயன்றி, ஏனையோரால் அவர்கள் எழுதிய நூல்களை எழுபது ஆண்டுகள் படித்த போதினும் விளங்க இயலாது. அதற்கு மாறாக, அவர்கள் வழி கேட்டிலாகிவிடுவார்கள். அவ்வாறு ஆனவர்களில் நூற்றுக்கணக் கானோரை நான் அறிவேன்'' என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இப்னு அரபி (ரஹ்) அவர்களைப் பற்றி ஷைகு நூரி (ரஹ்) அவர் களிடம் வினவப்பட்ட பொழுது, அவர்கள் திருக்குர் ஆனைத் திறந்து ''அவர்கள் சென்றுவிட்டனர்; அவர்கள் செய்த நல்வினை அவர்களுக்கு, நீங்கள் செய்த நல்வினை உங்களுக்கு, அவர்கள் என்ன செய்து கொண்டி ருந்தார்களென்று உங்களிடம் கேட்கப்பட மாட்டாது'' என்ற 2: 134 ஆவது திருவசனத்தைக் காட்டினார்கள். இதிலிருந்து அவர்களைக் குறை கூறிக் கொண்டிருந்தவர்கள் வாயடங்கி விட்டனர்.

இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களின் ஆன்மீக ஆசான் இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் (ரஹ்) அவர்களின் ஊழியர் கூறியதாக ஷைகுல் இஸ்லாம் ஸலாஹுத்தீனும், ஏனைய ஷைகுமார் களும் பின்வரும் செய்தியை எடுத்துரைக்கின்றனர்.

''ஒரு நாள் நாங்கள் ஷைகு இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாம் (ரஹ்) அவர்களின் வகுப்பறையில் அமர்ந்திருந்தோம். 'ஸிந்தீக்' என்னும் சொல்லின், மூலம் எதுவென்பது பற்றிப் பேச்சுவார்த்தை நடந்தது. அது அரபிச் சொல்லா அல்லது ஃபார்ஸிச் சொல்லா என்று ஒருவர் வினவினார். அப்பொழுது அங்கிருந்த ஒருவர், 'அது அரபியாக்கப்பட்ட ஃபார்ஸிச் சொல். ஃபார்ஸியில் அதன் பொருள் 'ஸன்தீன்' (பெண்களின் மார்க்கம்) என்பதாகும். அதாவது உள்ளத்தில் நிராகரிப்பை (குஃப்ரை) வைத்துக் கொண்டு, வெளியில் விசுவாசத்தை (ஈமானை) காட்டிக் கொள்வதாகும்'' என்று கூறினார். 'எவரைப் போல்?' என்று மற்றொருவர் வினவினார். அப்பொழுது இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களின் அருகில் வீற்றிருந்த ஒருவர், 'திமிஷ்கிலுள்ள இப்னு அரபியைப் போல' என்று பதிலிறுத்தார். அது கேட்டு ஷைகு அவர்கள், யாதொன்றும் கூறவு மில்லை; யாதொன்றும் மறுத்துரைக்கவும் இல்லை.

"அன்று நான் நோன்பு நோற்றிருந்தேன். ஷைகு அவர்கள் தம்மோடு சேர்ந்து நோன்பு திறக்க என்னையும் அழைத்தார்கள். என்னுடன் பரிவோடும், பாசத்தோடும் நடந்து கொண்டார்கள். அப்பொழுது நான் அவர்களை நோக்கி, "இக்காலத்தின் தலைசிறந்த ஞானமேதை எவரெனத் தாங்கள் அறிவீர்களல்லவா?" என்று வினவினேன். "அதைப் பற்றி உனக்கென்ன கவலை? பேசாமல் உண்!" என்று அவர்கள் கூறினார்கள்.

"அவர் எவரென்பதை அவர்கள் அறிவார்கள் என்பதை விளங்கிக் கொண்ட நான், உண்பதை நிறுத்திக் கொண்டு, "ஷைகு அவர்களே!நான் அல்லாஹ்வின் பெயரால் ஆணையிட்டுக் கேட்கிறேன். அவர் எவரெனத் தாங்கள் எனக்கு அறிவிக்கத்தான் வேண்டும்" என்று கூறி அடம் பிடித்தேன். அப்பொழுது அவர்கள் புன்முறுவல் தம் முகத்திலே தவழ, 'ஷைகு முஹ்யித்தீன் இப்னு அரபி' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

"அது கேட்டு நான் வியப்பு மிகுதியால் சற்று நேரம் பேச வாயற்று வீற்றிருந்தேன். அப்பொழுது ஷைகு அவர்கள் என்னை நோக்கி, "நீ வியப்படையக் காரணம் என்ன?" என்று வினவினார்கள்.

"அப்பொழுது நான், 'இன்று காலை ஒருவர் தங்களின் முன்னிலையில் வைத்து அவர்களை 'ஸிந்தீக் என்று கூறிய பொழுது, தாங்கள் யாதும் பேசாது வாய் மூடி இருந்தீர்கள். இப்பொழுதோ தாங்கள் அவர்களை இக்காலத்தின் 'குத்பு' என்று கூறுகின்றீர்கள். இஃதென்ன வேடிக்கையாக உள்ளது' என்று கூறினேன்.

"அதற்கு அவர்கள், "வாயை மூடிக் கொண்டிரு! அது மார்க்க விற்பன்னர்களின் கூட்டமல்லவா?" என்று பதிலிறுத்தார்கள்.

உண்மையில் இப்னு அரபி (ரஹ்) அவர்கள், உலகத்தினரின் சிந்தனைக்கெட்டாத புதிராகத்தான் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் அவர்களின் மாண்பு! அதுதான் அவர்களின் மகத்துவம்!!

8. இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்)

கடுமையான குளிர்கால இரவொன்றில் பெரியார் ஒருவர் கம்பளிப் போர்வையால் தம்மைப் போர்த்திக் கொண்டு படுத்துறங்குகின்றார். உறக்கத்தில் அவருக்கு அசுத்தம் ஏற்பட்டு விட்டது. திடுக்குற்று விழித்தெழுந்த அவர், குளித்துத் தூய்மை பெறுவதற்காக, அங்குமிங்கும் தண்ணீரைத் தேடுகிறார். தண்ணீர் கிடைக்கவில்லை. எங்குப் பார்க்கினும் பனிக்கட்டிகளே கிடக்கின்றன. என்ன செய்வதென அறியாது விழித்த அவர், ஒரு பனிக்கட்டியை எடுத்து, உடைத்து நீருண்டாக்கிக் குளித்தார். குளித்து விட்டு, மீண்டும் கம்பளிப் போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்தார். படுத்தவர் விரைவில் உறங்கி விட்டார். மீண்டும் அவருக்கு உறக்கத்தில் அதே நிலை ஏற்பட்டு விட்டது. மீண்டும் எழுந்து பனிக் கட்டியை உடைந்து நீருண்டாக்கிக் குளித்தார். அதன் காரணமாக அவரின் உடல் பெரிதும் நலிவுற்றது. அப்பொழுது அசரீரி ஒன்று, ''இஸ்ஸுத் தீனே! நீர் எமக்காக வேண்டிக் கடுங்குளிரையும் பொருட்படுத்தாது, குளித்துத் தூய்மை பெற்று, அதன் காரணமாக உம் உடலை வருந்திக் கொண்டதற்காக நாம் உம்மை, இம்மையிலும் மறுமையிலும் மாண்புறச் செய்வோம்'' என்று முழங்கியது. அதிலிருந்து அப்துஸ்ஸலாம் என்னும் இயற்பெயர் பெற்றிருந்த அப்பெரியார் இஸ்ஸுத்தீன் அப்துஸ்ஸலாம் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய, மஷீஸ் என்பவரின் அன்பு மகனாக அவனி தோன்றிய அவர்கள், சையிது அபூ முஹம்மது அப்துர் ரஹ்மான் அல் ஹஸனிய்யி (ரஹ்) அவர்களிடம் தீட்சை பெற்று, மொராக்கோ நாட்டில் மாபெரும் மகானாக விளங்கி வந்தார்கள். வட ஆப்பிரிக்காவில் ஆன்மீக ஞானத்தை முதன் முதலில் புகுத்தியவர்கள் அவர்களே என்று கூறலாம். எவருடனும் பழகாது, எவருக்கும் தீட்சை நல்காது, அவர்கள் மலைப் பொதும்பில் ஒதுங்கி வாழ்ந்து வந்தார்கள்.

கிழக்கு நாட்டின் 'குத்பு' அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் போன்று, மேற்கு நாட்டின் 'குத்பு' ஆகக் கருதப்பட்ட அவர்களை, ஒருவர்

அணுகித் தமக்கு அறவுரை வழங்குமாறு வேண்டி நின்ற பொழுது, ''ருஷரீ அத்தைப் பேணி நட! பாவத்தைத் தவிர்ந்து கொள்! உலக ஆசாபாசங்களில் மூழ்கி விடாதே! அல்லாஹ் உனக்கு விட்ட விதியைத் திருப்தியுடன் ஏற்றுக் கொள்! இறைக் காதலை எல்லாவற்றிற்கும் மேலாகக் கருது!' என்று அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களை அணுகி, ''தங்களுக்கோ வயதாகிறது. தாங்களோ எவருக்கும் தீட்சை வழங்காதிருக்கிறீர்கள். தங்களுக்குப் பின், தங்களின் ஆழிய ஆன்மீது அறிவுகள் மறைந்து விடாமல், மக்களுக்கு எக்காலும் பயன் தந்து கொண்டிருக்கும் முறையில், தாங்கள் ஒரு நூல் எழுதினால் நலமாக இருக்குமே'' என்று வினயமாகக் கூறி நின்ற பொழுது, ''நான் இப்பொழுது ஓர் ஈச்சமரம் வளர்க்கிறேன். வருங்காலத்தில் அதன் கனிகளை உண்டு மக்கள் பயனடைவார்கள்'' என்று பதிலிறுத்தார்கள் அவர்கள். இவ்வாறு அவர்கள் சூசகமாகக் கூறிய ஈச்சமரம் என்பது யார்?

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் ஹஸன் (ரலி)* அவர்களின் வழியில் தோன்றிய ஒரு குடும்பத்தினர், ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஸியூட்டா என்னும் நகருக்கு அண்மையிலுள்ள 'கிமாரா' என்னும் சிற்றூர் சென்று, அங்கு சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள். அக்குடியில் வணக்கமும், பொறையும், அறமும், நெறியும் வாய்க்கப் பெற்ற நல்லார் அப்துல்லாஹ் என்பவருக்கும், அவரின் ஆருயிர்த் துணைவியார் பாத்திமாவுக்கும், ஹிஜ்ரி 593 - ஆம் ஆண்டு ஷவ்வால் பிறை (மற்றொரு வரலாற்றின் படி துல்கஃதா பிறை) யில் ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்கு அவர்கள் தங்களின் குலாதிபரான அலீ (ரலி) அவர் களின் திருப்பெயரையே சூட்டி மகிழ்ந்தார்கள்.

இதனையே 'சாதுலி நாயகக் காப்பியத்தில், விளக்கு முஹம்மது முஹயித்தீன் லெப்பை ஹாஜி புலவர்.

''முன்னிலை யவரின் முன்னிலை யவராம்
முதுபுகழ் ஹஸன் மரபினிலே
நன்னிலை மேவு தோன்றலாய் வந்த
நாயகர் அப்துல்லா உருவும்

★ ஆனால் வேறு சிலர் இமாம் ஷாதலி (ரஹ்) அவர்கள் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றியவர்கள் என்று கூறுகின்றனர். ஹுமைதராவிலுள்ள அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்தின் மீது, அவர்கள் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழியில், தோன்றியவர்களென்றே எழுதப்பட்டுள்ளது என அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர். ஆனால், குத்பு அலீ இப்னு வஃபா (ரலி) அவர்களோ, அவர்கள் ஹஸன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றியவர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். இதுவே சரியானதெனப் பெரும்பாலோர் கூறுகின்றார்கள்.

மன்னிலை பாத்திமா★ எழிலுருவும்
மலிந்தன இலக்கணம் தோன்ற
அன்னிய மகல்வான் திருவுருவென்ன
அபுல் ஹஸன் அலீ பிறந்தனரே.

கலைதிகழ்ந் தெழுந்த முழுமதி தோற்கும்
கவினொளி விளங்கிய முகமும்
நிலைதிகழ் கனமும் நிகர்தராக் கருணை
நிவந்தடைந் திலங்கு நேத்திரமும்
மலைதிகழ் புயமும் மருவிரி மார்பும்
மணிதிகழ் கரங்களும் வனச
மலைதரச் சிறந்த பதங்களும் விளங்க
அபுல்ஹஸன் அலீ பிறந்தனரே"

என்று பாடிப் பரவசமடைகிறார்.

இளம் வயதிலேயே தம் ஊர் மதரஸாவில் குர்ஆன் முழுவதையும் ஓதி மனனம் செய்த ஆண்டகை அவர்கள், அதன் பின் கல்விதேடி தூனிஸ் மாநகரம் சென்று, அங்குள்ள மார்க்கக் கல்லூரியில் சேர்ந்து, நஹ்வு, ஸர்ஃபு, லுகத், மஆனி, மஃகூல், மன்கூல், ஹிக்மத், ஆதாப், ஹதீது, தஃப்ஸீர், ஃபிக்ஹு, உசூல், ஃபராயிளு முதலான கல்விகளையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார்கள். இப்பொழுது அவர்களைப் பெரிதும் கவர்ந்த நூல்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய 'இஹ்யாவு உலூமித்தீனு'ம் அபூத்தாலிப் மக்கீ (ரஹ்) அவர்கள் எழுதிய 'கூத்துல் குலூபு' ம் ஆகும். இவற்றை அவர்கள் திரும்பத் திரும்பப் படித்தார்கள். இவற்றின் சாரம் அவர்களின் இரத்தத்தோடு இரத்தமாக ஓடி, அவர்களின் வாழ்வையே மாற்றியமைத்தது.

இவற்றைப் படித்தது முதல் இறை ஞான இரகசியங்களை அறியப் பெரிதும் ஆவலுற்ற அவர்கள், தூனிஸ் மாநகரம் விட்டு நீங்கி, ஃபாஸ் என்னும் பட்டணம் வந்து சேர்ந்தனர். அங்கு ஜுனைது (ரஹ்) அவர்களின் ஆன்மீகக் கருத்துக்களை அள்ளி வழங்கிக் கொண்டிருந்த அலீ இப்னு ஹிர்ஜிம் (ரஹ்) அவர்களையும், இப்னு அரபி (ரஹ்) அவர்களின் ஆன்மீகக் கருத்துக்களை வாரி வழங்கிக் கொண்டிருந்த முஹம்மது இப்னு அலீ (ரஹ்) அவர்களையும், நேரில் சந்தித்து உரையாடினர். அவர்களின் சொற்பொழிவுகளையும் மாந்தி மகிழ்ந்தனர்.

★ இமாம் ஷாதலி (ரஹ்) அவர்களின் அன்னையின் பெயர் உம்மு ஹபீபா என்ற ஸாதிக்குல் ஜன்னா என்றும் ஒரு பெரியாரின் கனவில் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் இப்பெயரை அறிவித்ததாகவும் கூறப்படுகிறது.

பின்னர் மக்கா சென்று ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றித் தாயகம் திரும்பிய அவர்கள், தமக்கொரு 'காமில்' ஆன ஷைகைத் தேடி இராக் நாட்டில் அலைந்து திரிந்தார்கள். அங்குள்ள வாஸித் மாநகரில் சுல்தானுல் ஆரிஃபீன் சையிதுல் அஹ்மது கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவர் அபுல் ஃபத்ஹ் வாஸித்தி (ரஹ்) அவர்கள் ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வருகிறார்களென்றும், அவர்களின் வாயிலிருந்து உதிரும் அரு மணிகளைப் பொறுக்குவதற்காக, ஒவ்வொரு நாளும் அவர்களின் திருச்சபைக்கு ஐயாயிரம் பேர்வரை வருகிறார்களென்றும், அவர்கள் பேச்சைத் தொடங்கும் பொழுது, ''என் வாயிலிருந்தேயன்றி வேறொருவர் வாயிலாக வராத இந்த அறிவுகளைச் செவி தாழ்த்திக் கேளுங்கள்!'' என்று கூறிவிட்டே தம் பேச்சைத் தொடங்குகிறார்கள் என்றும் கேள்வியுற்ற அவர்களே, தமக்கேற்ற ஆன்மீக ஆசான் என்று கருதி அவர்களைக் காணச் சென்றார்கள். கண்டார்கள் அவர்களை, கேட்டார்கள் அவர்களின் பேச்சை. விண்டார்கள் தம் விருப்பத்தை.

குத்பு அபுல் ஃபத்ஹ் வாஸித்தி (ரஹ்) அவர்கள் தம் முன் வந்து, தாள் மடித்து அமர்ந்து, 'பை அத்' வேண்டிக் கையை நீட்டிய இளவலை, ஒரு முறைக்கு இரு முறை உற்று நோக்கினார்கள். இச்சந்திப்புப் பற்றி நாம் இப்பொழுது, இமாம் ஷாதலி ஆண்டகை அவர்களின் வாயிலாகவே கேட்போம்.

''நான் சையிது அஹ்மதுல் கபீர் ரிபாயீ (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவர் அபுல் ஃபத்ஹ் வாஸித்தி (ரஹ்) அவர்களைக் கண்டேன். அவர்களுக்குச் சரிநிகர் சமானமானவர்களை நான் இதுவரை பார்த்ததே இல்லை என்றே கூறலாம். அப்பொழுது என் உள்ளத்தில், 'நான் இன்று குத்புஸ் ஸாமனை நேருக்கு நேராகச் சந்திக்கும் நற்பேறு பெற்றேன்' என்னும் எண்ணம் தளிர் விட்டது. இதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட அவர்கள், என்னை நோக்கி, 'நீர் ஓர் ஞானாசிரியரைத் தேடி என்னிடம் வந்துள்ளீர். உம்முடைய ஞானாசிரியர் உம்முடைய நாட்டிலே தான் இருக்கிறார். அவரைத் தேடிக் கண்டடையும்!' என்று கூறினர்.''

அது கேட்டு ஒரு பக்கம் ஏமாற்றமும், மற்றொரு பக்கம் மகிழ்ச்சியும் கொண்ட ஆண்டகை அவர்கள், அங்குச் சில திங்கள் தங்கி, அபுல் பத்ஹ் வாஸித்தி (ரஹ்) அவர்களின் சொற்பொழிவுகளையெல்லாம் செவியாரக் கேட்டு, உள்ளத்தில் பதித்துக் கொண்டு தம் தாயகம் திரும்பினர். அப்பொழுது அவர்களின் உள்ளம், 'எங்கே என் ஞானாசான்? எங்கே என் ஞானாசான்?' என்று அல்லும் பகலும் துடித்துக் கொண்டிருந்தது.

இத்தகைய இதயத்துடிப்புடன், தம் ஞானாசிரியரைத் தேடி அவர்கள் நாடு நகரங்களிலெல்லாம் சுற்றித் திரிந்தார்கள். காணவில்லை. பஞ்ச காலம் ஒன்றில் அவர்கள் தூனிஸ் மாநகரத்தின் தெருவொன்றில் சென்ற பொழுது, பட்டினியால் மக்கள் சுருண்டு படுத்திருப்பதைக் கண்டு, அவர்களின் உள்ளம் இரக்கத்தால் கசிந்தது. அவர்களை மினாராவின் அடியிலிருந்த ரொட்டிக் கடை ஒன்றிற்கு அழைத்துச் சென்று, அவர் களுக்கு ரொட்டி கொடுக்குமாறு கடைக்காரனிடம் கூறினர். அவ்விதமே கொடுத்தான் அவன். அதன்பின் அதற்கான காசை எடுத்து அவர்கள் ரொட்டிக் கடைக்காரனிடம் கொடுத்த பொழுது, "இது செல்லாக் காசு. நீங்களெல்லாம் மஃரிப் நாட்டினர். செம்பைத் தங்கமாக்கும், 'கீமியா' வித்தையில் வல்லவர்கள்." என்று கூறி, அதனை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விட்டான் அவன். அவர்களிடமோ, அதைத் தவிர வேறு காசில்லை. என்ன செய்வதென்றறியாது அவர்கள் விழித்த பொழுது, "உன் சட்டையையும், தலைப்பாகையையும் கழற்றி வைத்து விட்டுப் போ!" என்று கூறினான் ரொட்டிக் கடைக்காரன். மறுவார்த்தை பேசாது அவ்விதமே செய்தார்கள் அவர்கள்.

அங்கிருந்து அவர்கள் சில அடிகள் தாம் எடுத்து வைத்திருப்பார்கள், அப்பொழுது ஒருவர் அவர்களின் முன் வந்து, "உம் கையிலிருக்கும் காசைக் கொடும்! பார்ப்போம்" என்று கூறினார். அவ்விதமே அவர்கள் கொடுத்த பொழுது, அதனைத் தேய்த்துப் பார்த்துவிட்டு, "இது நல்ல காசாகத்தானே இருக்கிறது. இதனை ஏன் செல்லாக்காசு என்று ரொட்டிக் கடைக்காரன் கூறுகிறான். போய் அவனிடம் இதனைக் காட்டும்!" என்று கூறினார் அவர்.

அவ்வாறே அவர்கள் சென்று ரொட்டிக் கடைக்காரனிடம் அதனைக் கொடுத்த பொழுது, முன்னர் அதனைச் செல்லாக்காசு என்று கூறிய அவன் இப்பொழுது அதனை நல்ல காசெனக் கூறி ஏற்றுக் கொண்டான்.

இதன்பின் அந்தக் காசைத் தேயத்துத் தந்தவர் எவராயிருக்கும் என்னும் எண்ணத்துடன் அவர்கள் திரும்பி வந்து பார்த்த பொழுது, அவரைக் காணோம். அவர் தாம் தம்முடைய ஞானாசிரியராக இருப் பாரோ என்ற எண்ணத்துடன், அவர்கள் அவரை அங்குமிங்கும் தேடினார்கள். எனினும் அவரைக் காணமுடியவில்லை.

இப்பொழுது வெள்ளிக்கிழமை வந்தது. ஜும்ஆத் தொழுகை தொழுவதற்காகப் பள்ளி சென்ற ஆண்டகை அவர்கள் , அங்கு ஓரிடத்தில் 'தஹிய்யத்துல் மஸ்ஜித்' தொழுகை தொழுது விட்டு, 'ஸலாம்' கொடுத்த பொழுது, தம் வலப்புறத்தில் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டனர். அப் பொழுது அவர் புன்முறுவல் பூத்த முகத்துடன், ஆண்டகை அவர்களை

நோக்கி, "அலீயே! அனைத்துப் படைப்பினங்களையும் படைத்துப் பரிபாலித்துவரும் அல்லாஹ்வுக்கு எதனை, எப்பொழுது, எவ்வாறு செய்வது என்பது தெரியாதா என்ன?" என்று இடித்துரைத்தார்.

அவரின் இந்த இடிமொழி, ஆண்டகை அவர்களை அதிர வைத்தது. எனினும் சமாளித்துக் கொண்டு, "ஐயன்மீர்! தாங்கள் யார்?" என்று வினவினர். அப்பொழுது அவர், "என்னை கிள்ரு என்று கூறுவார்கள். நான் சீனாவில் இருந்தேன். அப்பொழுது தூனிஸில் உம்மைக் கண்டு, ஆவன செய்யுமாறு இறைவன் கட்டளையிட்டான். அடுத்தகணம் தூனிஸ் வந்து சேர்ந்தேன்" என்று மீண்டும் புன்முறுவலித்துக் கொண்டு கூறினார். அதுகேட்டு ஆண்டகை அவர்களுக்கு ஒருவித மயக்கமே ஏற்பட்டு விட்டது. நடப்பது நனவா, கனவா என்றே அவர்களுக்கு விளங்க வில்லை.

இப்பொழுது இமாம் குத்பாப் பேருரை நிகழ்த்தத் தொடங்கி விட்டதால், ஆண்டகை அவர்களுக்கு மேற்கொண்டும் அவருடன் பேச இயலவில்லை. இருவரும் அருகருகே அமர்ந்து, குத்பாப் பேருரை யையும் கேட்டார்கள். தொழவும் செய்தார்கள். தொழுகை முடிந்ததும், 'ஸலாம்' கொடுத்து விட்டு வலப்புறம் திரும்பிப் பார்த்த பொழுது, அவரைக் காணோம். கைக்கெட்டியது வாய்க் கெட்டாதது போல் ஆகி விட்டது அறிந்து, ஆண்டகை அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை.

தம் அவல நிலையை எண்ணிப் பெரிதும் அவர்கள் வருந்தினார்கள். "இறைவ எம் பெரும! இதுவென்ன சோதனை!" என்றுஅலறினார்கள். "அபுல் பத்ஹ் வாஸித்தி (ரஹ்) அவர்கள் கூறிய ஞானாசிரியர், இந்த கிள்ரு ஆகத்தான் இருக்குமோ? அவ்விதமானால் அவர் ஏன் காட்சி தந்துவிட்டுக் கடுகி மறைந்துவிட்டார்? நான் அவரின் ஆன்மீக மாணவனாக இருக்க அருகதையானவனா என்று உறைத்துப் பார்க்கிறாரா?" என்று அவர்கள் தமக்குள் கூறிக் கொண்டு, காடுகளில் அலைந்து திரிந்தார்கள்.

அவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஒரு மாதம் வரை அவர்களுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அப்பொழுது அசரீரி ஒன்று, "அலீயே! நாடியது கிடைக்கப் பெற்றாலும் சரி, கிடைக்கப் பெறா விட்டாலும் சரி, இறைவனின் நாட்டத்திற்கு தலை சாய்க்கும் 'உபூதிய்யத்' என்ற அடிமைத் தனத்தைக் கேளும்! வெறுமனே இருக்க வேண்டாம்!" என்ற முழங்கியது.

அதுகேட்டு திடுக்குற்ற ஆண்டகை அவர்கள், இறைவனுடைய ஏவல்களுக்கு வழிப்பட்டு நடக்கும் 'உபூதிய்யத்' என்னும் அடிமைத்

தனத்தைத் தமக்குத் தந்தருளுமாறு இறைஞ்சினர். அப்பொழுதும் அந்த 'உபூதிய்யத்'தைத் தமக்குத் தந்து தான் தீரவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தவில்லை. அதற்குக் காரணம், ''இறைவன் தான் நாடியதைப் படைப்பான்; தான் நாடியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான். இறைவனின் நாட்டத்தில் குறுக்கிட, அவனுடைய அடிமைக்கு யாதொரு அதிகாரமும் இல்லை'' என்னும் கருத்துப் பொதிந்த இறைவசனம் அவர்களின் மனத்திரையில் பளிச்சிட்டதேயாகும்.

காடுகளில் அலைந்து திரிவோமா, நகரங்களுக்குச் செல்வோமா என முடிவு செய்ய இயலாமல் கால் போன திசையில் அவர்கள் சென்று கொண்டிருக்கும் பொழுது 'அலம்' என்னும் மலையில், அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஸ் என்னும் பெயருள்ள 'வலி' ஒருவர் இருக்கிறார், அவரைப் போய்க் காணும்!'' என்று, உள்ளுணர்வு மூலம் அவர்களுக்கு அறிவுறுத்தினான் இறைவன்.

அப்பொழுது ஆண்டகை அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. தம்முடைய ஞானாசிரியர் அவர் தாம் என்பதை விளங்கிக் கொண்ட அவர்கள், அவர் தம் திருப்பெயரைப் பல தடவை திரும்பத் திரும்பக் கூறினார்கள். கூறக் கூற அவர்களின் நாவெல்லாம் இனித்தது, நெஞ்சமெல்லாம் இனித்தது.

இதன்பின் அவர்கள், 'அலம்' மலை நோக்கிச் சென்றார்கள். அதன் சாரலை அவர்கள் அடைந்ததும், அங்கிருந்த சுனையொன்றில் குளித்துத் தம் உடலைத் தூய்மைப்படுத்திக் கொண்டார்கள். அத்துடன் நில்லாது 'தஜ்ரீத்' எண்ணத்துடன் அதாவது தாம் பெரும் வணக்கங்களை நிகழ்த்தவு மில்லை என்றும், பெரிய அகமியக் கல்விகளைக் கற்கவுமில்லை என்றும், எண்ணி - தம்மையே தாம் தாழ்த்திக் கொள்ளும் ஆன்மீகக் குளிப்பையும் குளித்துத் தம், ஆன்மாவையும் துப்புரவு செய்து கொண்டார்கள்.

பின்னர் மலை மீது ஏறி, மலை உச்சியிலுள்ள பொதும்பைத் தேடிச் சென்றார்கள். அதில் தான் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஸ் (ரஹ்) அவர்கள் பல ஆண்டுகளாகத் தங்கியிருந்து, தனிப்பெரும் தவ வாழ்வு நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆண்டகை அவர்கள் அப்பொதும்பினை அடையும் பொழுது, இருட்டிவிட்டது. எனவே வைகறையில் அவர்களைச் சந்தித்துக் கொள்ளலாமென்று எண்ணி அப்பொதும்பின் வாயிலிலேயே படுத்துக் கொண்டார்கள்.

இதன்பின் நிகழ்ந்தவற்றை ஆண்டகை அவர்களே இதோ கூறுகிறார்கள்:

"அப்பொழுது பொதும்பிலிருந்து, 'இறைவ எம்பெருமா! உன்னுடைய அடியார்களில் சிலர், உன்னுடைய படைப்பினங்களைத் தமக்கு வசப்படுத்தித் தருமாறு உன்னிடம் இறைஞ்சினார்கள். நீ அவ்விதமே செய்து கொடுத்தாய். அவர்கள் அதனை நன்றியுடன் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் எனக்கோ, உன்னையன்றி வேறொன்றும் தேவையில்லை. ஆதலின், உன்னுடைய படைப்பினங்களை நீ எனக்கு வசப் படுத்தித் தர வேண்டாம்!' என்று இறைஞ்சும் ஒலி கேட்டது. அப்பொழுது நான் என்னை நோக்கி, 'இந்த ஷைகு எந்தக் கடலில் மூழ்கி இவ்வாறு இறைஞ்சி அழுகிறார்கள். உன்னுடைய நிலை எவ்வாறு உள்ளது? இரண்டுக்கும் இடையேயுள்ள வேற்றுமையைச் சற்றுச் சிந்தித்துப்பார்!' என்று கூறினேன்.

"பொழுது புலர்ந்ததும், நான் பொதும்பிற்குள் புகுந்தேன். அவர்கள் என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பவர் போன்று எனக்குத் தோன்றியது. நான் அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்தேன். எனக்கு பதில் ஸலாம் உரைத்த அவர்கள், எழுந்து நின்று 'மர்ஹபா, மர்ஹபா' என்று கூறி, என்னை வரவேற்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களிலிருந்து என் வரை உள்ள கொடி வழியைக் கூறி, 'அலீயே! உம் வரவு நல்வரவாகுக! நீர் அறிவு, வணக்கம் ஆகியவற்றால் ஏற்படும் அகந்தைகளையெல்லாம் விட்டொழித்து 'பக்கீர்' (ஏழ்மை) நிலையில் எம்மிடம் வந்தீர். அதன் காரணமாக, இம்மையுடையவும், மறுமையுடையவும் நற்பேறுகளையெல்லாம் பெற்றுக் கொண்டீர்' என்று நன்மாராயம் நவின்றார்கள்.

"பின்னர் நான் அவர்களை நோக்கி, 'ஷைகு அவர்களே! தங்களுடைய நிலை' யாது? என்று வினவினேன். அதற்கு அவர்கள், "நீர் விருப்பம் என்ற சூட்டைக் குறித்து, இறைவனிடம் முறையிட்டது போன்று, நான் இறைவிருப்பமே என் விருப்பம் என்று கூறி, அவன் செய்வதெல்லாம் எனக்குச் சம்மதமே என்ற குளிர்ச்சியைக் குறித்து அவனிடம் முறை யிடுகிறேன்" என்று கூறினார்கள்.

"அப்பொழுது நான், 'தாங்கள் என் கொதிக்கும் ஆவலைப் பற்றிக் கூறியதை விளங்கிக் கொண்டேன். தங்களுடைய தலை சாய்த்தலென்னும் குளிர்ச்சியைப் பற்றிச் சற்று விளக்கமாகக் கூற வேண்டும்" என்று வேண்டினேன்.

"அதற்கு அவர்கள், 'அந்தக் குளிர்ச்சியின் இன்பத்தில் நான் மூழ்கி, இறைவனை மறந்துவிடக் கூடாதே. அத்தகு தவற்றினை நான் ஆற்றி விடக் கூடாதே என்ற கவலையினால், நான் இறைவனிடம் மன்றா கொண்டுள்ளேன். என்னைக் காத்தருள் புரியுமாறு' என்று பதில் தார்கள்.

''மீண்டும் நான் அவர்களை நோக்கி, 'சிலர், படைப்பினங்களை எனக்கு வசப்படுத்தித்தா!' என்று இறைஞ்சினார்கள். அவ்விதமே நீ செய்தருளினாய். ஆனால் நானோ, 'அவற்றை எனக்கு வசப்படுத்தித் தராதே!' என்று இறைஞ்சுகிறேன்' என்று கூறினீர்களே. அதன் விளக்கம் யாது?'' என்று வினயமாக வினவினேன்.

''அது கேட்ட ஷைகு அவர்கள், புன்முறுவல் முகத்திலே தவழ, 'மகனே! நீ எனக்கு இந்தக் கடலை வசப்படுத்தித் தா!' என்ற கருத்தில், இந்த ஷைகு எந்தக் கடலில் மூழ்கி இவ்வாறு இறைஞ்சி அழுகிறார்கள். உன்னுடைய நிலை எவ்வாறு உள்ளது? என்று நீர் உம்முடைய நெஞ்சோடு கிளத்திக் கொண்டீரே, அதற்குப் பகரமாக, 'அல்லாஹும்ம குன் லீ' (அல்லாஹ்வே! நீ எனக்காக இரு) என்று இறைஞ்சுவீராக! அல்லாஹ் ஒரு மனிதனுக்குப் பிணை ஏற்றுக் கொள்ளின், பின்னர் அந்த மனிதனுக்கு வேறு எவரின் துணை வேண்டும்?' என்று கூறினார்கள்.

சில நாட்கள் சென்ற பின் ஆண்டகை அவர்கள், அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஸ் (ரஹ்) அவர்களின் திருமுன், தாள் மடக்கி அமர்ந்து, தமக்குத் தீட்சை தந்தருளுமாறு வேண்டினர். அதுகேட்டு மகிழ்ந்த ஷைகு அவர்கள், தமக்கு 'அவ்வலுல் அக்தாப், (குத்புகளில் முதலாமவர்) சையிதினா ஹஸன் (ரலி) அவர்களிடமிருந்து, சங்கிலித் தொடர்போல் கிடைத்த தீட்சை என்னும் 'பைஅத்' தை அவர்களின் கரத்தில் ஒப்படைத்து, அவர்களுக்காக இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சினர்.*

ஆறு மாதங்கள் தம்முடன் தங்கியிருந்த தம் ஆன்மீக மாணவரை பற்பல பயிற்சிகள் மூலம் புடம்போட்ட பசும்பொன்னே போல் ஆக்கிய ஷைகு அவர்கள், ஒரு நாள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''எப்பொழுதும் அல்லாஹ், அல்லாஹ் என்று சொல்லும்! அதனை 'திக்ரு' செய்வதன் நன்மையை ஒருவன் அறிவானாயின், அவன் இரவிலும் உறங்கமாட்டான். பகலிலும் உறங்கமாட்டான். மேலும் நீர் படைப்பு களின் பெயர்களை நாவெடுத்தும் உச்சரிக்க வேண்டாம்! அவற்றின் மீது ஏற்படும் அன்பு என்னும் உருவச்சிலைகளை விட்டும், உம்முடைய

★ 'மஃபாகிர்' என்ற நூலில் இமாம் ஷாதுலி (ரஹ்) அவர்கள் இரு ஞானாசிரியர் களிடம் 'பை அத்' பெற்றிருப்பதாகவும் அவர்களில் ஒருவர் முஹம்மது இப்னு ஷைகு அபுல் ஹஸன் (ரலி) அவர்கள் என்றும் மற்றொருவர் அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஸ் (ரஹ்) அவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இமாம் ஷாதுலி (ரஹ்) அவர்களிடம் ''தங்கள் ஞானாசிரியர் எவர்?'' என்று வினவப்படும் பொழுது அவர்கள் அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஸ் (ரஹ்) அவர்களின் திருப்பெயரையே கூறி வந்தார்கள்.

இதயத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும்! உம்முடைய உறுப்புகளைத் தீய செயல்களை விட்டும் காத்துக் கொள்ளும்! மார்க்கக் கடமைகளை நியமமாகச் செய்து வாரும்! அவ்விதம் நீர் செய்துவரின் உமக்கு 'விலாயத்' முழுமை பெற்றுவிடும்.'' என்று கூறினர்.

பின்னர் ஒருநாள் ஷைகு அவர்கள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''அலீயே! நீர் இறைவனை எதைக் கொண்டு சந்திப்பீர்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''நான் இறைவனை என்னுடைய ஃபக்கீர் என்னும் ஏழ்மைத்தனத்தைக் கொண்டு சந்திப்பேன்'' என்று பதிலிறுத்தனர். அது கேட்ட ஷைகு அவர்கள், 'அவ்விதமாயின் நீர் இறைவனை, பெரிய உருவச்சிலையை உள்ளத்தில் ஏந்தியல்லவா சந்திப்பதாயிருக்கும்? ஏழ்மைத் தனம் உம்மிடம் இருக்கிறது என்ற இறுமாப்போடல்லவா நீர் அவனைச் சந்திப்பதாயிருக்கும்? அதுவும் இல்லாத நிலையில் சந்திப்பதல்லவோ சித்தியளிக்கும்'' என்று கூறினர்.

இவ்வாறு தம் ஆன்மீக மாணவருக்கு,

'பொறியும் உட்படு புலன்களும் அடக்கிய புகழ்சேர்
நெறியும் தேட்டமும் மானமும் மோனமும் நிலையும்
குறியும் கொள்கையும் நியதியும் அளவையும் குணமும்
அறியும் நீர்மையும் பகுதியில் உணர்த்தினர் அண்ணல்.'

பின்னர் ஆண்டகை அவர்கள் தம் ஞானாசிரியரின் ஆணையின் மீது ஒரு மலை மீது சென்று, பல ஆண்டுகள் பெரும் தவம் செய்தனர். ஓரிரவு காட்டு விலங்குகளெல்லாம் வந்து அவர்களைச் சூழ அமைதியாக அமர்ந்திருந்து விட்டு, விடிந்ததும் காட்டிற்குள் சென்றன. அது கண்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. இறைவன் தம்முடைய தகுதியை உயர்த்தியுள்ளான் என்று தம் மனத்திற்குள் எண்ணிக் கொண்டனர். இவ்வாறு எண்ணிக் கொண்டு, அவர்கள் தாம் தங்கியிருந்த இடத்தை விட்டுக் கிளம்பி, ஓர் ஓடைக்கரையை அடைந்தனர். அப்பொழுது அவர்களைக் கண்டதும் ஆங்கு அமைதியாக அமர்ந்திருந்த கௌதாரிகள் சிறகடித்துப் பறந்து சென்று, கார்முகில் சிதறல் போல் வானிலே அங்குமிங்கும் மிதந்தன. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை.

அப்பொழுது அசரீரி ஒன்று பின்வருமாறு முழங்கியது:

''இரவில் வனவிலங்குகள் வந்து சூழ வீற்றிருக்கும் பேறு பெற்றவரே! அப்பொழுது நீர் என்னுடன் இருந்தீர். அதன் காரணமாக அவ்விதம் நிகழ்ந்தது. ஆனால் இப்பொழுது நீர் உம்முடன், உம்முடைய நஃப்ஸுடன் இருக்கிறீர். அதன் காரணமாக இவ்விதம் நிகழ்ந்தது.''

நாட்கள் உருண்டோடின. ஒருநாள் இறைவன் உதிப்பின் மூலம், ''அலீயே! மக்களிடையே சென்று, அவர்களுக்கு ஆத்மீக போதம் புரியும்! உம்மால் மக்கள் நன்மையடைவர்'' என்று கூறினான்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''இறைவ எம்பெரும! நானோ பலவீனமானவன். அவர்களுடன் கலந்துறவாடி, அவர்களுக்கு அற போதம் நல்க நான் ஆற்றலற்றவன்'' என்று தம்முடைய ஆற்றாமையை வெளியிட்டனர். அப்பொழுது இறைவன், ''அலீயே! எம் அருள் உமக்குத் துணை நிற்கும். யாதும் மறுத்துரைக்காது செல்க!'' என்று அருண்மொழி பகர்ந்தான்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''இறைவ எம்பெரும! மக்களின் கைபடும் பொருளைக் கொண்டு உண்ணாமல் இருக்க, எனக்கு ஒரு வழியைக் காட்டியருள்!'' என்று இறைஞ்சினர். அப்பொழுது இறைவன் ''இன்ஃபின் யா அலீ, வ அனல் மாலீ இன்ஷிக்த்த மினல் கைபி, வ இன்ஷிக்த்த மினல்ஜேபி - அலீயே! பயப்படாதீர்; நான் பெரும் செல்வன். நீர் விரும்பின் உம் சட்டைப் பையிலிருந்து எடுத்துச் செலவு செய்யவோ, மறைவான இடத்திலிருந்து எடுத்துச் செலவு செய்யவோ செய்யும்'' என்று நன்மாராயம் பகர்ந்தான்.

இதன்பின் ஆண்டகை அவர்கள், அந்த மலையை விட்டு இறங்கித் தம் ஞானாசிரியரிடம் விடைபெறுவதற்காக வந்த பொழுது, அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து, கூற வேண்டிய அறிவுரைகளை எல்லாம் கூறி முடித்தார்கள் அவர்கள். அப்பொழுது அவர்களின் உள்ளம் தாம் ஓர் ஆன்மீக மகவை ஈன்றெடுத்த மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தது. தாம் வளர்த்த பேரீச்ச மரக்கன்று பலன் கொடுக்கும் பருவம் எய்திவிட்டது அறிந்து பூரித்து மகிழ்ந்தது. ஜக்கரிய்யா (அலை) அவர்கள் தமக்கு வாரிசாக ஓர் ஆண்மகவைத் தருமாறு இறைவனிடம் இறைஞ்சி யஹ்யா (அலை) அவர்களைப் பெற்றது போல், தாம் இயற்றி வழக்கமாக ஓதிவந்த 'ஸலவாத்' ஒன்றில் தமக்கு ஓர் ஆன்மீக வாரிசைத் தருமாறு குறிப்பிட்டதை இறைவன் ஏற்றுத் தம்முடைய ஆன்மீக வாரிசாக அபுல் ஹஸன் அலீயைத் தந்ததற்காக இறைவனுக்கு ஆயிரம், ஆயிரம் முறை நன்றி செலுத்தியது.

பின்னர் அவர்கள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''அலீயே! நீர் இங்கிருந்து புறப்பட்டு, ஷாதிலா என்னும் ஊர் சென்று, அங்கு சிலகாலம் தங்கி வாழ்ந்து வாரும்! அங்கு இறைவன் உமக்கு ஒரு திருப்பெயரைச் சூட்டுவான்! பின்னர் அங்கிருந்து கிளம்பி தூனிஸ் நகரம் செல்லும்! அங்கு உமக்கு அரச தண்டனை கிடைக்கும். அதன்பின் கிழக்கு நோக்கி நீர் செல்வீராயின், நீர் 'குத்பு'ப் பதவியை எய்தப் பெறுவீர்'' என்று கூறினர்.

மேலும் அவர்கள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''நீர் இந்த 'துஆ' வை நியமமாக ஓதி வாரும்!' என்று கூறிப் பின்வரும், 'துஆ'வைத் தம் ஆன்மீக மாணவருக்கு ஓதிக் கொடுத்தனர்.

''அல்லாஹும்ம அரிஹ்னீ மின் திக்ரிஹிம்; வ மினல் அவாரிளி மின் கிபளிஹிம்; வ நஜ்ஜினீ மின் ஷர்ரிஹிம். வ அஃனினீ பி கைரிக அன் கைரிஹிம் வ(த்) தவல்லனீ பில் ஹஸூஸிய்யத்தி மின்பைனிஹிம் இன்னக அலா குல்லி ஷைஇன் கதீர்'' (இறைவனே! படைப்புகளை நான் உள்ளத்தில் எண்ணாமலும், மேலும் அவர்களால் எனக்கு யாதோர் இன்னலும் ஏற்படாமலும், என்னைக் காத்தருள் புரிவா யாக! அவர்களால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும், என்னைப் பாதுகாத்தருள்வாயாக!! உன்னிடமிருந்தே நன்மையை எதிர்பார்ப்பவனாகவும், அவர்களிடமிருந்து எத்தகைய நன்மையையும் எதிர்பார்க்காதவனாகவும் என்னை ஆக்கியருள்வாயாக! அவர்களிடையே நீயே என்னுடைய செயலனாக இருப்பாயாக! நீ அனைத்தின் மீதும் பேராற்றலுடையவனாய் உள்ளாய்!!)

மீண்டும் அவர்கள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''அலீயே! நீர் இறைவனிடமிருந்து, எந்த இடத்தில் நன்மையை எதிர்பார்ப்பீரோ அந்த இடத்திலன்றி வேறோர் இடத்தில் உம் காலை எடுத்து வைக்க வேண்டாம்! அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் இடத்தை நீர் கண்ணாலும் ஏறிட்டுப் பார்க்க வேண்டாம்! இறைவணக்கத்தில் உமக்கு உதவி செய்பவரோடு நீர் உறவாடும்! எவருடைய நட்பு, உம்முடைய இறை நம்பிக்கையை வலுப்படுத்துமோ அவருடனேயன்றி வேறொருவருடனும் உறவாட வேண்டாம்! அத்தகைய நண்பர் கிடைப்பது இக்காலத்தில் அரிதாகவே இருக்கிறது'' என்று கூறினர்.

அப்பொழுது அவர்களின் ஆன்மீக மாணவரின் உள்ளத்தில், ''எல்லாவற்றையும் பற்றி எடுத்துரைத்த ஷைகு அவர்கள் முக்கியமான ஒன்றை - இஸ்முல் அஃலத்தை - சொல்லித் தர மறுந்துவிட்டார்களே. உண்மையில் அதனைச் சொல்லித் தர மறுந்து விட்டார்களா அல்லது வேண்டுமென்றே வெறுமனே மறைத்துவிட்டார்களா?'' என்னும் எண்ணம் இலேசாக இழையோடியது.

இதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஷைகு அவர்கள், தம் மடி மீதிருந்த மூன்று வயதுக் குழந்தையை முதுகில் தட்ட அது எழுந்து ஓடிவந்து ஆண்டகை அவர்களின் கழுத்தில் தன்கையைப் போட்டு, ''இஸ்முல் அஃலம் என்பது சொல்லித் தெரிவதல்ல. உணர்வால் அறியப்படுவது'' என்று கூறியது.

உடனே ஷைகு அவர்கள், தம் ஆன்மீக மாணவரைப் புன்சிரிப்புடன் நோக்கி, ''அலீயே ஒன்றிற்கும் கவலற்க! நான் கூறவேண்டிய பதிலைக் குழந்தை கூறிவிட்டது. நீர் ஷாதிலா போகும் வழியில் ஜபல் ஜப்ரான் (குங்கும மலை) என்னும் குன்றை அடையும் பொழுது, இஸ்முல் அஃலம் உமக்கு உள்ளுணர்வால் அறிவிக்கப்படும்'' என்று நவின்றனர்.

இதன்பின் தம் ஆசானிடம் பிரியா விடை பெற்றுப்புறப்பட்டுப் பல நாட்களாக நடந்து, ஜபல்ஜப்ரானை ஆண்டகை அவர்கள் வந்தடைந்தனர். அவர்கள் அதனை வந்தடைந்தது தான் தாமதம், திடீரென அவர்களின் உள்ளத்தில் இஸ்முல் அஃலம் பளிச்சிட்டது. அது கண்டு அவர்கள் களி கூர்ந்தனர். அடுத்து மின்னலென - இல்லை, இல்லை - இடி விழுந்த தென்ன மற்றொரு செய்தி உள்ளுணர்வு மூலம் அவர்களுக்குத் தெரியவந்தது. அன்று வைகறையில் அவர்களின் ஆசான் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஸ் (ரஹ்) அவர்கள் ஒரு சுனையில் 'உளூ'ச் செய்துவிட்டு மலையில் ஏறும் பொழுது, தன்னை நபியெனக் கூறிக் கொண்ட சூனியக்காரன் இப்னு அபித்தவாஜின் அடி ஆட்களை அனுப்பி அவர்களைக் கொன்றான். அப்பொழுது திடீரென எங்கிருந்தோ உடும்புக் கூட்டங்கள் கிளம்பி வந்து கயவர்கள் மீது தாக்குதல் நடத்தின. அவர்கள் வெருண்டோடும் பொழுது, கால் இடறி மலையிலிருந்து கீழே விழுந்து ஒருவர் கூட பாக்கி இல்லாமல் மாண்டொழிந்தனர் என்பதுதான் அச்செய்தி. அதனை அறிந்து ஆண்டகை அவர்கள் அதிர்ந்து போனார்கள்.

பின்னர் தம் ஆன்மீக ஆசானின் ஆணைப்படி, ஷாதிலா என்னும் ஊர் நோக்கி அவர்கள் அடியெடுத்து வைத்து நடந்தார்கள். அவ்வூருக்கு வெளியிலிருந்த ஈத்காஹ்வை அடைந்த பொழுது, அங்கு ஒரு விறகு வெட்டியைக் கண்டு, அவன் அவ்வூரைச் சேர்ந்தவன் என அறிந்து அவனோடு பேசிக் கொண்டு சென்றார்கள். திடீரென அவன் ஓரிடத்தில் ஒரு பொருளை மறந்து விட்டதை நினைவு கூர்ந்து அதனை எடுத்து வரத் திரும்பினான். அப்பொழுது கழுதையையும் வீணே ஏன் திரும்ப அழைத்துக் கொண்டு செல்ல வேண்டுமென்று எண்ணிக் கழுதையின் கடிவாளத்தை ஆண்டகை அவர்களின் கையில் கொடுத்து, ''சற்று இந்த கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு இங்கு நில்லும்! விரைவில் திரும்பி விடுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.

அவன் ஓரிரண்டு அடிதான் எடுத்து வைத்திருப்பான். அவனுடைய உள்ளத்தில், 'ஊர் பேர் தெரியாத வழிப்போக்கர் ஒருவரிடம் கழுதையை ஒப்படைத்து விட்டுச் செல்கிறோமே, அவர் அதனை ஓட்டிக் கொண்டு சென்றுவிட்டால் என் செய்வது?' என்ற ஐய எண்ணம் இரேகை விட்டது. இதனை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள்,

அவனை அழைத்து, "கழுதையைக் கையோடு கொண்டு போய் விட்டுக் கொண்டு வாரும்! நான் நீர் வரும் வரை இங்குக் காத்திருக்கிறேன்" என்று கூறினார்கள்.

அது கேட்ட அவன் பெரிதும் வியப்புற்று, தம் உள்ளத்தில் ஊறிய நினைவை அறியும் ஆற்றல் வாய்ந்த அவர், ஒரு 'வலி'யே அன்றி வேறில்லை என்று கூறி, தம் தவறினைப் பொறுத்துத் தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு பெரிதும் வேண்டினான். அவ்விதமே ஆண்டகை அவர்களும் செய்தார்கள்.

பின்னர் தாம் மறந்து வைத்து விட்ட பொருளை விரைவில் போய் எடுத்து வந்த அவன், ஆண்டகை அவர்களையும் வற்புறுத்தித் தம் கழுதையின் மேல் ஏற்றிக் கொண்டான். 'மெலிந்து துரும்பு போல் இருந்த கழுதை மீது உணர்ச்சி வசப்பட்டு இவர்களையும் ஏற்றிக் கொண்டோமே" என்று அவன் ஒரு கணம் எண்ணினான். அடுத்த கணம் ஆண்டகை அவர்கள் கழுதையிலிருந்து இறங்கிவிட்டார்கள். என்ன வியப்பு! ஷாதிலா நகரின் ஆற்றங்கரை வந்துவிட்டது.

இது கண்டு அவனுக்கு ஏற்பட்ட வியப்பு, பன்மடங்கு அதிகமாகியது. அவர்கள் இறையருள் பெற்ற 'வலி'யே ஆவர் என்னும் எண்ணம் வலுப்பெற்றது. தன் தவறினை மீண்டும் மன்னித்தருளுமாறு வேண்டிய அவன், அவர்களைத் தன் குடிலுக்கு அழைத்துச் சென்று, தன் வறுமையை அவர்களிடம் கூறி முறையிட்டான். அப்பொழுது அவனுடைய வீட்டில், அவனுக்கும், அவனுடைய மனைவி மக்களுக்கும், ஒரு நாளைக்குப் போதுமான உமி நீக்கப்படாத கோதுமைதான் இருந்தது. அதனை அவர்கள் கொண்டு வருமாறு செய்து அதில் தம்முடைய கைகளை விட்டு, "இதனை அள்ளி, அள்ளி எடுத்துப் பயன்படுத்துங்கள்! அளந்தெடுத்துப் பயன்படுத்தாதீர்கள்! அவ்விதம் செய்யின் அது குறைந்து விடும். இனி ஒரு போதும் உங்களுக்கு வறுமை என்பதில்லை. உங்களின் வழித்தோன்றல்களும் வளமுடன் வாழ்வார்கள்" என்று வாழ்த்தினார்கள். உண்மையில் அவ்விதமே நிகழ்ந்தது.

ஆண்டகை அவர்கள் ஷாதிலா வந்து, ஒரு பள்ளியின் அண்மையில் கிப்லா முன்னோக்கியதாக உள்ள வீட்டில் குடியேறி வாழ்ந்தனர். அப்பொழுது அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களிடம் முதன் முதலில் 'பைஅத்' பெற்றவர்கள், அப்துல்லாஹ் இப்னு ஸலாமா (ரஹ்) அவர்களாவர். அவர்கள் தூனிஸ் மாநகரம் சென்ற பொழுது, அங்கு வாழ்ந்து வந்த அபூ ஹஃப்ஸ் (ரஹ்) அவர்களை அண்மி, தமக்கு 'பைஅத்' தருமாறு வேண்டிய பொழுது, "உம் ஊருக்கு ஹஸன் (ரலி) அவர்களின்

வழிவந்த 'வலி' ஒருவர் வருகிறார். அவர்தாம் உமக்கு ஷைகாக இருப்பார். அவரின் கரம் பிடித்து 'பைஅத்' பெறுவீராக!'' என்று அருண்மொழி பகர்ந்தார்கள். அபூஹஃப்ஸ் (ரஹ்) அவர்கள். அவ்விதமே ஆண்டகை அவர்கள் ஷாதிலா வரவே, அவர்களின் கரம்பற்றி 'பைஅத்' பெறும் முதல் நபராக அப்துல்லாஹ் இப்னு ஸலாமா (ரஹ்) அவர்கள் விளங்கினார்கள்.

ஷாதிலாவுக்கு வந்தபின் ஆண்டகை அவர்களின் 'விலாயத்' எங்கணும் சுடர் வீசி ஒளிரலாயிற்று. அவர்களின் வாயிலிருந்து உதிரும் ஞான ரத்தினங்களைப் பொறுக்குவதற்காக, நாட்டின் நாலா பக்கங் களிலும் இருந்து மக்கள் ஷாதிலாவுக்கு வந்து குழுமலானார்கள்; அவர்களின் கரம்பற்றி 'பைஅத்' பெற்று, ஆன்மீக வழியில் அடியெடுத்து வைத்து நடக்கலானார்கள். இதனையே முஹம்மது முஹ்யித்தீன் புலவரும்,

இறையவன் நபிமார்க் கெல்லாம்
ஏந்தலாம் இரசூ லுல்லாஹ்
பெறுமகள் மைந்தர்க் குற்ற
பெற்றிசேர் மரபில் தோற்றி
தரையெலாம் புகழ வந்த
சாதுலி நாத ரென்ன
முறைமுறை வருவா ரெல்லாம்
முத்தியம் பதம்பெற் றுய்வார்.

என்று அழகாக எடுத்துரைக்கிறார் 'சாதுலி நாயக'க் காப்பியத்தில்.

இப்பொழுது ஷாதிலா நகரில் வந்து வாழ்ந்த ஆண்டகை அவர்களை, அவர்களின் திருப்பெயரோடு ஷாதிலி என்பதையும் சேர்த்து மக்கள் அழைக்கலாயினர். இது கண்டு ஆண்டகை அவர்களுக்குப் பெரு வியப்பாக இருந்தது. ' நான் பிறந்த ஊர் கிமாரா என்பதாக இருக்க, கிமாரி என்றல்லவா மக்கள் என்னை அழைக்க வேண்டும். அதற்கு மாறாக ஷாதிலி என்று அழைக்கிறார்களே. இதுவென்ன வேடிக்கை!' என்று ஆண்டகை அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு நாள் இறைவனும் அவர்களை 'ஷாஃத்துலீ' என்று அன்போடு அழைத்தான். அப்பொழுது ஆண்டகை அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெருமா! நான் ஷாதிலாவில் பிறக்காதிருக்க நீயும் என்னைப் பாமர மக்கள் போன்று, ஷாதிலி என்று அழைக்கக் காரணம் என்ன?'' என்று வினவினார்கள்.

அப்பொழுது இறைவன் ''நான் உம்மை ஷாதிலி என்று அழைக்க வில்லையே'' என்று பதிலிறுத்தான்.

''அவ்விதமாயின் நீ என்னை எவ்வாறு அழைத்தாய்?'' என்று ஆண்டகை அவர்கள் திடுக்கத்தோடு வினவினார்கள்.

இறைவன் சிரித்துக் கொண்டு, ''நான் உம்மை 'ஷாஃஃத்துலீ' என்று அழைத்தேன். அது பாமரர்கள் உம்மை அழைப்பது போன்று, நீர் வாழும் ஊரின் பெயரை ஒட்டியல்ல. என்னுடைய தனிப்பெரும் அன்பிற்கும், ஊழியத்திற்கும் உரியவர் என்ற பொருளில் ஃதாலுக்கு 'ஸத்' இட்டு ஷாஃஃத்துலீ என்று அழைத்தேன்'' என்றான் இறைவன். அப்பொழுது ஆண்டகையின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தது.

பின்னர் அவர்கள், தம் ஆன்மீக மாணவர் அப்துல்லாஹ் இப்னு ஸலாமா (ரஹ்) அவர்களுடன், 'ஜபல் ஜப்ரான்' சென்று, இலை, தழைகளைக் கொண்டு நோன்பு திறந்து கடும்தவம் செய்து வந்தார்கள். இச்சமயத்தில் ஒரு நாள் அவர்கள், அம் மலை மீது வைத்து, 'சூரத்துல் அன்ஆமை' ஓதிவரும் பொழுது, 'வ இன்தகுதில் குல்ல அதுலின்... யக்ஃஃபுரூன்'' (சாத்தியமான) யாவற்றையும் (பாவிகள் தங்கள் வேதனைக்குப்) பிரதியாகக் கொடுத்த போதிலும், அது ஏற்றுக் கொள் ளப்பட மாட்டாது. இவர்கள் தங்கள் (தீய) செயல்களின் காரணமாகவே ஆபத்திற்குள்ளானவர்கள். இவர்களின் நிராகரிப்பின் காரணமாக, மிகத் துன்புறுத்தும் வேதனையுடன் (குடிப்பதற்குக்) கொதிக்கும் பானமே இவர்களுக்குக் கிடைக்கும் - (6:70) என்ற திருவசனம் வந்ததும், அதனை உணர்ச்சி மீக்குற்றுத் திரும்பத் திரும்ப ஓதினார்கள். அவர்கள் அதனை அசைந்து அசைந்து, ஓதும்பொழுது, அம் மலையும் அவர்களுடன் சேர்ந்து அசைந்தது. நிறுத்தினால் அம் மலையும் அசையாது நின்றது. இவ்வாறு அங்கு வீற்றிருந்து தவம் செய்து, ஓர் ஆண்டைக் கழித்த பின், ஆண்டகை அவர்கள் தூனிஸ் மாநகரம் புறப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு மதிப்பும், அவமதிப்பும் காத்திருந்தன.

ஆண்டகை அவர்கள் தூனிஸ் வரும் செய்தி காட்டுத் தீ போல் நாலாதிக்கிலும் பரவ, மக்கள் அவர்களுக்கு அரசருக்குரிய மரியாதை அளித்து வரவேற்க சாரிசாரியாக வந்து திரண்டு கொண்டிருந்தனர். அன்று தூனிஸ் மாநகரமே மகிழ்ச்சி மீக்குற்றுப் பொலிவுடன் விளங்கியது.

மக்களின் அன்பான வரவேற்பை ஏற்று, தூனிஸிற்குள் புகுந்த ஆண்டகை அவர்கள், அங்கு 'பிலாத்' என்னும் பெயருள்ள பள்ளியின் அருகிலிருந்த வீடொன்றில் தங்கி வாழ்ந்து வந்தார்கள். அங்கு ஒவ்வொரு நாளும் மக்கள் ஒருங்கு வந்து, அவர்கள் அளிக்கும் ஞானாமிர்தத்தை மாந்தி மகிழ்வெய்தி வந்தனர்.

நாளுக்கு நாள் ஆண்டகை அவர்களின் பேரும் புகழும் வளர்ந்து வருவதையும், அவர்களைச் சந்தித்து 'பைஅத்' பெறுவதற்காக மக்கள் நெடுந்தொலைவில் இருந்தெல்லாம் வந்து கொண்டிருப்பதையும் கண்டு, தூனிஸ் மாநகரத் தலைமை நீதிபதி இப்னு பர்ராவுக்கு ஏற்பட்ட பொறாமைக்கும் புழுக்கத்திற்கு அளவில்லை. அவர் அரசர் அபூ ஜக்கரிய்யாவை அணுகி, ''ஷாதிலாவில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருவர், தூனிஸ் மாநகரம் வந்து மக்களைத் தம் நாவன்மையால் கவர்ந்து, தம்மை மாநபியின் வழித்தோன்றல் என்று நம்புமாறும் செய்து, வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டு வருகிறார். அவரின் இந்த அடாச் செயலை இத்துடன் நிறுத்தி, வேரறக் கிள்ளி, வெந்நீரும் ஊற்ற வேண்டும். இல்லையெனில் 'அடடா' என்று பின்னர் கையைப் பிசைய வேண்டி நேரிடுமோ? இந்த அரசும் தங்களின் கையை விட்டும் போய் விடுமோ என்று நான் அஞ்சுகிறேன்'' என்று கூறினார்.

அது கேட்டு அரசர் அபூ ஜக்கரிய்யாவின் மூளை வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. ''அழைத்து வாருங்கள் அவரை! விசாரித்து ஆவன செய்வோம்'' என்று அதிகாரத்துடன் ஆணையிட்டார் அவர்.

அரசவை. அரசர் அரியாசனத்தின் மீது திரை மறைவில் அமர்ந்திருக் கின்றார். அவரின் முன்னால் அமைச்சர்களும், பிரதானிகளும்,மார்க்க விற்பன்னர்களும், அணி அணியாக அமர்ந்திருக்கின்றார்கள். அசாங்கத் தலைமை நீதிபதி இப்னு பர்ராவும், அங்கு தமக்குரிய உடை அணிந்து கம்பீரமாக அமர்ந்திருக்கின்றார். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அரசவைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

ஆண்டகை அரசவையில் வந்தமர்ந்ததும், இப்னு பர்ராவின் ஏற்பாட்டின் படி, அங்கு வீற்றிருந்த மார்க்க விற்பன்னர்கள் தங்களின் கேள்விக் கணைகளைத் தொடுக்கலாயினர். அவற்றிற்கெல்லாம் ஆணித்தரமாகப் பதிலிறுத்தார்கள் ஆண்டகை அவர்கள். இறுதியாக அவர்கள், ''தங்களின் குலம் என்ன? கோத்திரம் யாது?'' என்று ஆண்டகை அவர்களை வினவினார்கள். அதற்கு ஆண்டகை அவர்கள் தம் மதுர வாய் திறந்து, ''புவனமெல்லாம் ஓங்கிய கீர்த்தி மன்னும் உயர்நபி நயினார் பெற்ற பூங்கொடி பாத்திமாவின் புதல்வர் தம் வழி'' என்று பதிலுரைத்தார்கள்.

''அதற்கான சான்று யாது?'' என்று அவர்கள் வினவ, தங்களின் கொடி வழியை ஒன்றின் பின் ஒன்றாகத் தக்க ஆதாரங்களுடன் எடுத்து ரைத்தார்கள். அது கேட்டு மார்க்க விற்பன்னர்கள் வாயடைத்து வீற்றிருந்தனர்.

இப்பொழுது அரசர், காஜி இப்னு பர்ராவை அழைத்து, ''இவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழியில் தோன்றிய இறைநேசச் செல்வர்களில் ஒருவராகத் தெரிகிறது. ஆதலின் இவர் பற்றிய வரையில் நீர் தவறாக நடந்து கொள்ளக் கூடாது என்று நான் எண்ணுகிறேன்'' என்று கூறினார்.

அதற்கு காஜி இப்னு பர்ரா, ''மன்னர் மன்ன! தாங்கள் அவரின் பேச்சைக் கேட்டு, அவரைத் தவறாக எடை போட்டு விட்டீர்கள். தாங்கள் அவரின் பேச்சில் ஏமாந்து, அவரை வெளியே அனுப்பின் அவர் தங்களின் அரசாங்கத்தையே கவிழ்த்து விடுவாரோ என்று நான் அஞ்சுகிறேன். அவரின் ஆதரவாளர்கள், இப்பொழுதே அரண்மனை வாயிலில் திரண்டு நிற்கிறார்கள்'' என்று கூறினார்.

''நல்லது, மார்க்க விற்பன்னர்களையெல்லாம் இல்லம் ஏகச் சொல்லுங்கள். அலீ மட்டும் அரண்மனையில் இருக்கட்டும். சிந்தித்து ஆவன செய்கிறேன்'' என்று கூறினார் அரசர். அவ்வாறே மார்க்க விற் பன்னர்கள் இல்லம் செல்ல, ஆண்டகை அவர்கள் மட்டும் அரண் மனையில் உள்ள ஓர் அறையில் காவலில் வைக்கப்பட்டனர்.

இப்பொழுது ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின் மீது, அவர்களின் சீடர் ஒருவர் அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். அழுது கொண்டே வந்த அவர் ''ஷைகு அவர்களே! தங்களை அடித்து, ஒழுக்கம் கற்பிக்க வேண்டுமென்று, அரண்மனை வாயிலில் ஒரு கூட்டம் திரண்டு நிற்கிறது. இந்நிலையில் என்ன செய்வதென்றே எனக்கு விளங்க வில்லை'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழலானார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், அவரை நோக்கி, ''ஒன்றிற்கும் கவலைப்பட வேண்டாம்! ஷரீஅத்திற்காக நான் வெறுமனே இருக்கின்றேன். நான் நாடின் இந்த, இந்த வழிகள் மூலம் வெளியேறி விட முடியும்'' என்று கூறி, அந்த அறையின் நாற்புறங்களிலும் தம் விரலை நீட்டினார்கள். உடனே சுவர்கள் தாமாகவே பிளந்து பிளந்து மூடிக் கொண்டன.

இதனை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றார் சீடர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''அஸருக்கான நேரமாகிவிட்டது. ஆதலின் 'உளூ'ச் செய்யத் தண்ணீரும், தொழுவதற்கு விரிப்பும் கொண்டு வாரும்! நீங்கள் அஸரை, உங்களில் ஒருவரை இமாமாகக் கொண்டு தொழுது கொள்ளுங்கள்! இன்ஷா அல்லாஹ்! மஃரிப் தொழுகையில் நான் உங்களோடு வந்து சேர்ந்து கொள்கிறேன்'' என்று கூறினார்கள்.

சீடர் தண்ணீரும், தொழுகை விரிப்பும் கொண்டு வந்ததும், 'உளூ'ச் செய்து தொழுத ஆண்டகை அவர்கள், அரசருக்கு எதிராக 'துஆ' எதனையும் இறைவனிடம் செய்யவில்லை. அதற்கு மாறாக, எவ்வாறு நம்ரூதின் நெருப்பிலிருந்து இப்ராஹீம் (அலை) அவர்களை இறைவன் காத்தருள் புரிந்தானோ, அதே போன்று தம்மை அரசரின் கொடும் பிடியிலிருந்து காத்தருள் புரியுமாறு இறைஞ்சினார்கள்.

அவர்கள் இவ்வாறு இறைஞ்சிக் கையைக் கீழே போடுமுன், அரசரின் பேரன்பிற்குரிய அடிமைப் பெண் திடீரென இறந்தாள். அவளை அடக்கம் செய்து விட்டுத் திரும்பிய பொழுது, அவளுடைய அறையில் இருந்த தூபச் சட்டியில் கனன்று கொண்டிருந்த கனல் ஆங்கிருந்த திரைச் சேலை மீது தாவிப் பரவி, அந்த அறையையும் அதன் அண்மையிலிருந்த அரண்மனையின் சில பகுதிகளையும் எரித்துச் சாம்பராக்கியது.

இச் சமயத்தில், வெளியூர் சென்றிருந்த அரசரின் இளவல் அபூ அப்துல்லாஹ், தம் தமயானரை அணுகி, அனைத்திற்கும் காரணம், காஜி, இப்னு பர்ராவின் பேச்சைக் கேட்டு அவர், ஆண்டகை அவர்களுடன் தகா முறையில் நடந்து கொண்டது தான் என்று இடித்துரைத்தார்.

தம்பியின் இடியுரை கேட்டு அதிர்ந்து போன அரசர், தம் தம்பியுடன் ஆண்டகை அவர்களை அணுகித் தம்மை மன்னிக்குமாறு வேண்ட, அவ்விதமே அவர்களும் பெருமனத்துடன் செய்தார்கள். பின்னர் அரண்மனையை விட்டு நீங்கி, தாம் கூறியவண்ணம் மஃரிப் தொழுகையில் தம் சீடர்களுடன் கலந்து கொண்டார்கள்.

இதன்பின் ஒரு நாள், ஆண்டகை அவர்கள், தம் மாணவர் அபுல் அஸாயிமுடன் தூனிஸின் தெருவழியே நடந்து சென்ற பொழுது, இப்னு பர்ரா வழியில் எதிர்ப்பட்டார். அவருக்கு ஆண்டகை அவர்கள் 'ஸலாம்' சொன்னார்கள். ஆனால் அவரோ பதில் 'ஸலாம்' கூறாது வெறுமனே சென்று விட்டார்.

பின்னர் ஆண்டகை அவர்கள் சற்றுத் தொலை தான் சென்றிருப்பார்கள், எதிரே வந்த அரண்மனை ஊழியர் ஃபகீஹ் அபூ அப்துல்லாஹ், ஆண்டகை அவர்களைக் கண்டதும், தம் வாகனத்தி லிருந்து கீழே இறங்கி, அவர்களின் கையைப் பிடித்து முத்தமிட்டு, தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டினார். அவ்விதமே ஆண்டகை அவர்களும் செய்தார்கள்.

ஆண்டகை அவர்கள் தம் இல்லம் சேர்ந்ததும், தம் மாணவர் அபுல் அஸாயிமை நோக்கி, ''இப்னுல் பர்ராவைக் குறித்தும், அபூ அப்துல் லாஹ்வைக் குறித்தும், இறைவன் என்னிடம், ''அலீயே! ஓர் அடிமைக்கு

தீக்குறி போடப்பட்டது. அதன் காரணமாக அவன் உண்மையை அறிந்திருந்தும், அதனை மறுத்தான். அதனால் தீமை எய்தினான். மற்றோர் அடிமைக்கு நற்குறி போடப்பட்டது. அதன் காரணமாக அவன் உண்மையை அறிந்து அதனை ஏற்றுக் கொண்டான். அதனால் நன்மையை எய்தப் பெற்றான் என்று கூறினான்'' எனச் சொன்னார்கள். இவ்வாறு கூறிய ஆண்டகை அவர்கள், இதற்கு மேல் அபுல் பர்ரா பற்றி யாதொன்றும் பேசவில்லை.

இப்பொழுது ஆண்டகை அவர்களுக்கு, எகிப்து வழியாக 'ஹஜ்'ஜுக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே ஒரு நாள் அவர்கள் தம் வீட்டை விற்று, முதலாக்கிக் கொண்டு, தம் மாணவர் களுடன் எகிப்துக்குப் புறப்பட்டு விட்டார்கள். புறப்படுமுன் ஓர் ஆளை இப்னு பர்ராவிடம் அனுப்பி, ''நாம் தூனிஸை உமக்கு விசால மாக்கித்தந்தோம். இரும்!'' என்று கூறுமாறு பணித்தார்கள். ஆண்டகை அவர்கள் தூனிஸை விட்டுப் புறப்பட்டதை அரசர் செவியுற்றதும், தாம் அவர்களை நன்முறையில் பயணம் அனுப்பிவைக்காததை எண்ணி வருந்தி, அவர்களை அழைத்து வருமாறு ஆள் விடுத்தார். ஆண்டகை அவர்களோ அரசரின் நல்லெண்ணத்தை உணர்ந்து கொண்ட போதினும், திரும்ப விரும்பாது, ''நாம் இப்பொழுது 'ஹஜ்'ஜுப் பயணத்தை மேற் கொண்டுள்ளோம். அங்கிருந்து மீளும் பொழுது, இறைவன் நாடினால் தூனிஸ் மா நகரம் வருகிறோம்'' என்று கூறிவிட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

விரைவில் இஸ்கந்தரிய்யா நகரின் அண்மையை அடைந்த ஆண்டகை அவர்கள், அங்கு தாம் முன்னர் சந்தித்த ஷைகு அபுல் ஃபத்ஹு வாஸித்தி (ரஹ்) அவர்கள் ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வருகிறார்களெனக் கேள்வியுற்று, அவர்களின் ஆன்மீக அரசின் எல்லைக்குள் அவர்களின் அனுமதியின்றிப் புகுதல் தவறெனக் கருதி, அவர்களிடம் அனுமதி பெற்று வரத் தம் சீடர் ஒருவரை அவர்களிடம் அனுப்பி வைத்தனர்.

சீடர் வந்து ஷைகு அபுல் ஃபத்ஹு வாஸித்தி (ரஹ்) அவர்களைச் சந்தித்துச் செய்தியைக் கூறியதும், ''ஒரு குல்லாய் இரண்டு தலைகளுக்கு எவ்வாறு பொருந்தும்?'' என்று கூறிவிட்டு வெறுமனே இருந்தனர்.

சீடர் வந்து இச்செய்தியை ஆண்டகை அவர்களிடம் கூறிய பொழுது, அவர்களுக்கும் என்ன செய்வதென்றே விளங்கவில்லை. எனவே அவர்களும் யாதொன்றும் கூறாது வெறுமனே இருந்தனர். அன்றிரவு ஷைகு அபுல் ஃபத்ஹு வாஸித்தி (ரஹ்) அவர்களை இறைவன் தம்பால் அழைத்து, ஆண்டகை அவர்களை இஸ்கந்திரியாவிற்குள் நுழைய வழி

செய்தான். மறுநாள் காலை ஆண்டகை அவர்கள், தம் சீடர்கள் சூழ இஸ்கந்திரியாவிற்குள் நுழைந்து, ஷைகு அபுல் ஃபத்ஹு வாஸித்தி (ரஹ்) அவர்களின் அடக்கத் தொழுகையில் கலந்து கொண்டு அவர்களை நல்லடக்கம் செய்தனர்.

இப்பொழுது தார்த்தாரியர்களின் படையெடுப்பால், மத்திய கிழக்கு நாடுகளோ அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தன. எகிப்தும் அப்படியே. உண்மையில் தார்த்தாரியர்களின் படையெடுப்பு இறைவனின் முனிவால் ஏற்பட்டதென்றே கூற வேண்டும். அச்சமயத்தில் முஸ்லிம்கள் இறைமொழியையும், இறைதூதர் மொழியையும் மறந்து செய்த ஆடம்பர அட்டகாசங்கள் அளவைக் கடந்தன. ஹிஜ்ரி 640 - ஆம் ஆண்டில், பக்தாது மாநகரில் கலீபா, ஈதுப் பெருநாள் அன்று பவனி வந்ததன் காரணமாக, மக்கள் அந்தப் பவனியைப் பார்த்துக் கொண்டிருப்பதில் சொக்கி, ஈதுப் பெருநாள் தொழுகையையே தொழ மறந்து, பின்னர் நினைவு வந்து, அன்றிரவு நள்ளிரவுக்கு சற்று முன் தொழுதார்கள்! இதே போன்று ஒரு வேடிக்கை விளையாட்டில் ஈடுபட்டதன் காரணமாக, அவர்கள் ஹிஜ்ரி 644 ஆம் ஆண்டில் ஈதுல் அல்ஹா தொழுகையைப் பொழுதடையும் நேரத்திற்குச் சற்றுமுன் தொழுதார்கள்.

தார்த்தாரியர்களின் படையெடுப்பின் காரணமாக, ஹிஜ்ரி 640 ஆம் ஆண்டிலிருந்து ஹிஜ்ரி 643 ஆம் ஆண்டு வரை, கலீபா 'ஹஜ்'ஜுப் பயணி களைப் பாதுகாப்புடன் அனுப்ப எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை; கஃபாவைப் போர்த்துவதற்கான போர்வையையும் உரிய காலத்தில் அனுப்பி வைக்கவில்லை. எனவே, வரலாற்றிலே இல்லா வண்ணம் கஃபா இருபத்தொரு நாட்கள் திரையால் போர்த்தப்படாமலே இருந்து கொண்டிருந்தது.

இத்தகைய சூழ்நிலையில், நாட்டின் பாதுகாப்புக்குப் படைகள் வேண்டி இருப்பதால், 'ஹஜ்'ஜுப் பயணிகளின் பாதுகாப்புக்காகப் படை அனுப்ப இயலாது என்று எகிப்து அரசாங்கம் கையை விரித்தது. வழியில் தார்த்தாரியர்களின் தாக்குதல் பற்றிய அச்சம் இருப்பதால் இச்சமயத்தில் ஹஜ்ஜுப் பயணத்தை மேற்கொள்வது 'ஹராம்' என ஃபத்வா வழங்கினார் எகிப்தின் பிரதம காஜி இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாம்.

காஜி இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாமுக்கு எகிப்தில் அபார செல்வாக்கு இருந்தது. எகிப்தில் அவரிட்டது தான் அப்பொழுது சட்டம். மன்னரும் அவரின் ஆணைக்குத் தலை சாய்க்கும் வண்ணம் அதிக வலிமையுடன் இருந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அன்னையின் வயிற்றில் கருவுற்ற இரவு ரஜப் பிறை 27 ஆம் இரவில் பன்னிரண்டு 'ரக அத்' துகள் தொழும் 'ஸலாத்துல் ரகாயிப்' தொழுகையையும், ஷஅபான்

பிறை 15 ஆம் இரவில் நூறு ரகஅத் தொழுவதையும், 'ஃபித் அத்' என்று ஆரம்பத்தில் கூறிய அவர், பின்னர் அவற்றைத் தொழுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதே என்று 'ஃபத்வா' வழங்கிய பொழுது, எகிப்தில் இருந்த மார்க்க விற்பன்னர்கள் எவரும் அதை எதிர்த்து ஒரு சிறு மூச்சுக் கூட விடவில்லை.

'ஹஜ்' பற்றிய காஜி இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாமின் ஃபத்வாவைப் பற்றிக் கேள்வியுற்றதும், கெய்ரோ சென்ற ஆண்டகை அவர்கள், தமக்கும் காஜி சாஹிபுக்கும் இடையில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுமாறு தம் சீடர்களிடம் கூறினார்கள். அவ்விதமே ஜாதிஉல் அஸ்ஹரில் 'ஜும் ஆ' தொழுகைக்குப் பின் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

காஜி சாஹிபைச் சந்தித்ததும், ஆண்டகை அவர்கள் கேட்ட முதல் கேள்வி, ''எழுவானிலிருந்து படுவானை ஒரே எட்டில் கடக்க, இறை அருளால் வல்லமை பெற்றுள்ள ஒருவரைத் தங்களின் ஃபத்வா கட்டுப்படுத்துமா?'' என்பதாகும்.

அதுகேட்டுச் சற்றுத் திணறிய காஜி சாஹிப், ''கட்டுப்படுத்தாது'' என்று ஒரே சொல்லில் பதில் மொழிந்தார்.

''அத்தகைய அல்லாஹ்வின் சின்னஞ்சிறு அடியான் தான் நான். அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் இதனைக் கூறுகிறேன். என்னுடன் வருபவர்களுக்கு வழியில் ஏதேனும் இடர் ஏற்படின், அதனையும் அல்லாஹ்வின் பேரருளால் நான் அகற்றிக் கொள்வேன். 'வலி' என்றால் அவருக்கு இத்தகு தகுதியெல்லாம் இருக்க வேண்டும். நான் கூறுவதன் உண்மையை நீர் பின்னால் அறிந்து கொள்வீர்'' என்று கூறி மஸ்ஜிதை விட்டு தம் சீடர்களுடன் புறப்பட்டனர். எங்கே? மக்காவை நோக்கி, இது கண்டு மஸ்ஜிதில் கூடியிருந்த மக்கள் திக்பிரமை அடைந்தனர்.

ஆண்டகை அவர்களையும், அவர்களின் சீடர்களையும் ஏற்றிக் கொண்டு இஸ்கந்திரியாவிலிருந்து புறப்பட்ட கப்பல் நடுக்கடலில் எதிர்க்காற்றால் பெரிதும் அலைக்கழிக்கப்பட்டது. இந்நிலையில் என்ன செய்வதென்று அறியாது மீகாமன் விழித்தான். எத்தகைய திறமை வாய்ந்த மீகாமனாக இருப்பினும், காற்று அவனுக்கு எதிராக அடிப்பின் அவன் என்ன செய்வான்? நாட்கள் பலவாயினும் காற்று ஓயவில்லை. மீகாமன் உட்பட கப்பலிலிருந்த ஆண்டகை அவர்களின் சீடர்கள் அனைவரும், ஆண்டகையின் முகத்தைப் பார்த்தார்கள்; ஆண்டகை அவர்களோ ஆண்டவனின் முகத்தைப் பார்த்தார்கள்; தம் அவல நிலையை அவனிடம் எடுத்துரைத்தார்கள். தாம் அவ்வாண்டு ஹஜ்ஜுச்

செய்யாது திரும்பின், தம்எதிரிகளின் நகைப்புக்கிடமாக வேண்டி ஏற்படும் துர்ப்பாக்கிய நிலையையும், அவனிடம் எடுத்தோதினார்கள். அப்பொழுது அவர் களைத் திடீரென ஒரு சிறு உறக்கம் ஆட்கொண்டது. அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ஒரு 'ஹிஸ்பை'* அவர் களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

திடுக்குற்று விழித்தெழுந்த ஆண்டகை அவர்கள், அந்த ஹிஸ்பை ஓதி, இறைவனிடம் இறைஞ்ச அவர்களின் சீடர்கள் அனைவரும் 'ஆமீன்' கூறினர். அடுத்த கணம் காற்று சாதகமாக வீசத் தொடங்கி, குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பேயே கப்பல் அரேபியத் துறைமுகத்தைப் போய்ச் சேர்ந்தது.

கரையில் இறங்கி அவர்கள், மக்காவை நோக்கி நடந்து செல்லும் பொழுது, காட்டரபிகள் அவர்களைச் சுற்றி வளைய, அவர்கள் இந்த ஹிஸ்பை ஓத, அது அந்தக் காட்டரபிகளை ஒரு மதில் போன்று சூழ்ந்து நின்றது. அது கண்டு அந்தக் காட்டரபிகள், ஆண்டகை அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களின் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டு நேர்வழியில் மீண்டனர்.

இதன்பின் மக்கா சென்று ஹஜ்ஜு செய்து விட்டு, மதீனா சென்ற ஆண்டகை அவர்கள், அண்ணலெம் பெருமான் முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தின் முன், தங்களின் தலையைத் திறந்த வண்ணம் நின்று, உணர்ச்சி மீக்குற்று ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்தார்கள். அப்பொழுது அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், தங்களின் 'கலிமா' விரலை வெளியே நீட்டிச் சைக்கினை செய்ததன் மூலம், ஆண்டகை அவர்களுக்கு பதில் ஸலாம் மொழிந் தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அண்மையிலிருப்பதே அரும் பெரும் நற்பேறு என்று கருதிய ஆண்டகை அவர்கள், மதீனாவிலேயே சில காலம் தங்கியிருந்தார்கள். பின்னர் தரைமார்க்கமாக எகிப்து திரும்பிய

★ இந்த மகத்தான ஹிஸ்பே 'ஹிஸ்புல் பஹ்ர்'ராகும். இது கடலின் நடுவே வைத்து ஓதப் பெற்றதால் ஹிஸ்புல் பஹ்ர் (ஹிஸ்புக்கடல்) என்றும் இதில் பல இடங்கள் பஹ்ர் என்ற சொல் பயன்படுத்தப்படுவதால், இது இப்பெயர் பெற்ற தென்றும், இதன் அகமியம் கடல் போன்று ஆழமும் அகலமும் பெற்றிருப்பதால், இதற்கு இப்பெயர் சூட்டப் பெற்றது என்றும், பல்வேறு விதமாகக் கூறப்படுகிறது. "நான் இந்த ஹிஸ்பில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருவாயி லிருந்து செவியுற்ற பின்னரே இதில் சேர்த்தேன்" என்றும் ஆண்டகை அவர்கள் கூறியுள்ளனர்.

அவர்கள், இஸ்கந்திரியாவின் எல்லையாகிய 'பிர்க்கா' என்ற இடத்தை அடைந்த பொழுது, எகிப்தின் தலைமை நீதிபதி இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாம் தம் நண்பர்கள் புடைசூழ ஆண்டகை அவர்களை வரவேற்க முன்வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

வழிநெடுக நடந்த அற்புதங்களை ஆண்டகை அவர்களின் சீடர்கள் காஜி சாஹிபிடம் கூறக்கூற, அது கேட்டு உள்ளம் பூரித்த அவர், புன் முறுவல் பூத்த முகத்துடன் ஆண்டகை அவர்களின் முன் தாள் மடித்து வந்து அமர்ந்த பொழுது, அவரின் உள்ளத்தைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், ''என் பாட்டனாரின் 'ஷரீஅத்'திற்கு மதிப்பளிக்க வேண்டுமே என்ற பேணுதலின் காரணமாக அமைதியாக இருக்கிறேன். இல்லையெனில் எகிப்து மக்கள் அனைவரையும் அரஃபா நாளன்று இங்கிருந்து கிளப்பிச் சென்று, அரஃபா வெளியில் 'ஹஜ்'ஜு செய்ய வைத்து அன்றே மீளவும் இங்கு கொண்டு வந்து சேர்த்து விடுவேன். நான் கூறுவதன் உண்மையை இதோ பாரும்!'' என்று கூறித் தங்களின் வலக்கரத்தை கிபுலாவின் பக்கம் நீட்ட, கஃபா அவர்களின் கண்களுக்கு தரசினம் அளித்தது. அதைக் கண்டு ஆங்கிருந்தோர் அனைவரும் தக்பீர் கூறினர். அவர்களால் அவர்களுடைய கண்களையே நம்ப இயலவில்லை.

''அஜபுன் யஹாருல் ஃபஹ்மு ஃபீஹி வயஃஜிபு
காரத் ஜிபாலுல் அர்ளி லைஸத்து தஹ்ஜுபு.

(ஆகா! இஃதென்ன புதுமை! எங்களின் அறிவு தடுமாறுகிறதே. மக்காவுக்கும், மிஸ்ருக்கும் இடையிருள்ள மலைகளெல்லாம் எங்கே? அவை கஃபாவை மறைத்து நிற்கா வண்ணம் பூமி விழுங்கி விட்டதோ?)

''அவ்பி இஷாரத்தி ஹில் ஜிபாலுன் கலஅத்து
மின் அஸ்லிஹா வ அதத் ஸஹாபன் வ அலத்து

(அல்லது ஷைகு அவர்கள் சைக்கினை செய்யவே, அவை அனைத்தும் மேகமாக மாறி விண்ணை நோக்கிக் கிளம்பிவிட்டனவோ?)

அவ் ருஃபி அத் உம்முல் குரா மத்தல் பஸர்
ஹத்தா யராஹா மன் யஈஷு அலாமிஸ்ர்

(அல்லது மிஸ்ரிலுள்ளவர்கள் கஃபாவைத் தரிசிக்கும் வண்ணம், அவர்களுக்கு மக்காவை உயர்த்திக் காட்டப்பட்டதோ?)

''மாஹாதிஹீ இல்லா ஸனீ அத்து முக்ததிர்
யஃரிஃபுஹா அஹ்லுல் பஸாயிரி வல் இபர்.''

(இது வல்ல நாயனின் செயலேயன்றி வேறில்லை. இதன் இரகசியத்தை, அகத்தெளிவும், ஈமானின் உறுதியும் உள்ளவர்களே அறிவார்கள்)

என்று அவர்கள் பாடிப் பரவசமுற்றார்கள். அடுத்த கணம் காஜி இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் தம் கரங்களை ஆண்டகை அவர்கள் பால் நீட்டி,

"வானோர் புகழ்குருவே, வள்ளலே வான்மதியே
தீனோர் மகிழ்நிதியே சீரார் மணிவிளக்கே
நானோத வாய்த்த நறும்பதத்து நாயகமே
கானார்கை தாங்கி எனைக் காரும் இமாம் ஷாதுலியே!"

என்று கூறி தீட்சை பெற்றார். ஏனையோரும் வரிசை, வரிசையாக வந்து அவ்விதமே செய்தார்கள்.

பின்னர் தூனிஸ் திரும்பிய ஆண்டகை அவர்களுக்கு, அரசர் அபூ ஜக்கரிய்யா முதல் பொதுமக்கள் வரை, அமோக வரவேற்பு அளித்துக் கௌரவித்தார்கள்.

இப்பொழுது ஆண்டகை அவர்கள் கனவொன்று கண்டனர். அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, "அலீயே! நீர் எகிப்துக்குத் திரும்பும்! அங்கு நீர் நாற்பது ஸித்தீக்குகளைப் பரிபக்குவப்படுத்த வேண்டியுள்ளது" என்று திருவாய் மலர்ந்தனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள், 'வெய்யிலோ கடுமை, தொலைவோ அதிகம். இந்நிலையில் நான் எவ்வாறு எகிப்துப் பயணத்தை மேற் கொள்வது?" என்று தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "அலீயே! அதற்காக நீர் கவலைப்பட வேண்டாம். செல்லும் வழியெல்லாம் கார்முகில் உமக்கு நிழலிடும்" என்று அருண்மொழி பகர்ந்தனர். மீண்டும் ஆண்டகை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி, "வழியில் தாகவிடாயால் நான் பெரிதும் நலிவுறுவேனே" என்று கூறிய பொழுது, "கவலைப்படாதீர்! தங்கும் இடமெல்லாம் உமக்குக் கருமுகில் ஒன்று மழை பொழியும். உமக்கு வழியில் எழுபது அற்புதங்கள் நிகழும்" என்று நன்மாராயம் நவின்றனர்.

இதன்பின் அண்ணல் நபி(ஸல்) அவ்ர்களின் ஆணையைத் தலை மேல் தாங்கி, ஆண்டகை அவர்கள் எகிப்து புறப்பட, அவர்களுக்குக் கார்முகிலொன்று நிழலிடவும், கருமுகிலொன்று மழை பொழியவும் செய்தன.

இதனையே அரபிப் புலவர் ஒருவரும்,

***"ஹன்னல் ஹபீபு இலல் ஹபீபி ரஅஷ்ஃபகா
இஷ்பாக்க அஸ்லி லில்ஃபழீலி வஅர்ஃபகா***

(நண்பர், நண்பர் மீது இரங்கினார்; தாய், குட்டிகளின் மீது அன்பு செலுத்துவது போன்று அன்பு செலுத்தினார்.)

***"அம்ரஸ் ஸமாஅன் அன்ஸிலீ ஃபீ மன்ஸிலிஹி
மாஅல் ஃபுராத்தி ஃபஅன்ஸலத் மா அஷ்ஷிகா***

(தம்முடைய நண்பர் தங்குமிடமெல்லாம் துய நீரைப் பொழிவிக் குமாறு வானத்திற்கு ஆணையிட்டார். வானம் அவ்விதமே செய்தது)

***"வல் கைமு ளல்லலஹு வ அன்ன ஸாரஸா
வல் கைமு யஹ்மீஹி வஷம்ஸன் அத்பகா".***

(மேகம் அவருக்கு நிழலிட்டது. அவர் செல்லும் வழியெல்லாம் கதிரவனின் கதிர்கள், அவரின் திருமேனியில் படாது தடுத்து நின்றது)

என்று பாடிப் பரவசமுறுகிறார்.

ஆண்டகை அவர்கள் தம் சீடர்களுடன் தூனிஸை விட்டு எகிப் துக்குப் புறப்படும் பொழுது, ஷைகு அபுல் அலீ இப்னு ஸிமாத் (ரஹ்) அவர்களும், தம் சீடர்களுடன் எகிப்துக்குப் புறப்பட்டார்கள். அனைவரும் ஒருங்கு சேர்ந்து, தராபலீஸ் என்ற நகர் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து இரண்டு பாதைகள் எகிப்துக்குச் சென்றன. எப்பாதை வழியாக எகிப்து செல்வது என்று இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆண்டகை அவர்கள் நடுப்பாதையைத் தேர்ந்தெடுத்தனர். கடலோரப் பாதையை அபுல் அலீ இப்னு ஸிமாத் (ரஹ்) அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

அன்றிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபுல் அலீ இப்னு ஸிமாத் (ரஹ்) அவர்களின் கனவில் தோன்றி, "அபூ அலீயே! நீரும் ஒரு 'வலி'; அபுல் ஹஸனும் ஒரு 'வலி'. ஒரு 'வலி' மற்றொரு 'வலி'யின் மீது ஆணை செலுத்துவதற்கில்லை. ஆதலின் நீர் தேர்ந்தெடுத்த வழியில் நீர் செல்லும்! அவர் தேர்ந்தெடுத்த வழியில் அவர் போகட்டும்" என்று அருள்வாய் மலர்ந்து விட்டு மறைந்தனர்.

அவ்விதமே இருவரும், தம் தம் சீடர்களுடன் தத்தமக்குப் பிடித் தமான வழியில் புறப்பட்டு, இறுதியாக இஸ்கந்தரியாவின் அண்மை யிலுள்ள ஓரிடத்தில் வந்து ஒன்று கூடினார்கள். அங்கு அவர்கள் கூடாரம் அடித்துச் சில நாட்கள் தங்கியிருந்த பொழுது, ஒரு நாள் காலையில் ஷைகு அபுல் அலீ ஸிமாத் (ரஹ்) அவர்கள் ஆண்டகை அவர்கள் தங்கியிருந்த

கூடாரத்திற்குச் சென்று, அவர்களுக்கு முன் மிகவும் மரியாதையுடன் கால் மடித்து அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உரை யாடியது ஒன்றும் ஆங்கிருந்தோருக்குச் சரியாக விளங்கவில்லை.

உரையாடி முடிந்ததும், ஷைகு அபுல் அலீ ஸிமாத் (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களை நோக்கி, ''நாயகமே! தங்களின் கைகளைத் தாருங்கள்!'' என்று கூறினர். அவ்விதமே ஆண்டகை அவர்கள் செய்ய, அவற்றைத் தம் கண்ணீரால் கழுவிப் பல தடவை முத்தமிட்டார்கள்.

பின்னர் ஆண்டகை அவர்களிடம் பிரியா விடை பெற்று வெளியே வந்த அவர்கள், தம் சீடர்களை நோக்கி, ''நான் இன்றிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டேன். அவர்கள் என்னிடம், ''எகிப்தில் இதுவரை அபுல் ஹஜ்ஜாஜுல் அக்ஸரீ 'குத்பு' ஆக இருந்தார். அவர் இன்றிரவு அல்லாஹ்வின் பால் ஏகிவிட்டார். அல்லாஹ், அபுல் ஹஸன் ஷாதலிக்கு அப்பதவியை வழங்கியுள்ளான்'' என்று கூறி மறைந்தனர். எனவே தான் நான் அபுல் ஹஸன் ஷாதலி அவர்களிடம் வந்து 'குத்பானிய்யத்' துக்கான 'பைஅத்'தைச் செய்தேன்'' என்று கூறினார்கள்.

அதன்பின் அனைவரும் ஒருங்கு சேர்ந்து இஸ்கந்திரிய்யாவுக்குள் நுழைந்த பொழுது, எதிர்நோக்கி வரும் கூட்டத்தினரை அபூ அலீ ஸிமாத் (ரஹ்) அவர்கள் அழுத கண்களுடன் நோக்கி, ''இப்பொழுது எங்களுடன் வந்து கொண்டிருப்பவரை, எவரென நீங்கள் அறிவீர்களானால், அவரின் ஒட்டகத்தின் குளம்பை முத்தமிட நீங்கள் முண்டியடித்து முன் செல்வீர்கள். அல்லாஹ் மீது ஆணையாக உங்களை நோக்கி, அல்லாஹ் வின் பேரருள் வந்து கொண்டிருக்கிறது'' என்று நன்மாராயம் பொதிந்து கட்டியம் கூறிக் கொண்டு சென்றார்கள்.

எகிப்து வந்தடைந்த ஆண்டகை அவர்கள், தம்முடன் வந்த எழுப தாயிரம் சீடர்களுடன், எகிப்தின் நாலா பக்கங்களிலும் சென்று அருள் நெறியை, அல்லாஹ்வின் திரு நெறியை மக்களுக்கு எடுத்தோதி வந்தார்கள். நாளுக்கு நாள் அவர்களின் செல்வாக்கு வளர்ந்தோங்கி வந்தது.

இச்செய்தி தூனிஸில் இருந்த இப்னு பர்ராவுக்குத் தெரியவந்ததும் அவருடைய பொறாமைத் தீயும் நாக்கு நீட்டி வளர்ந்து ஆண்டகை அவர்களைச் சுட்டெரிக்க முனைந்து நின்றது. ஆண்டகை அவர்களைப் பற்றி இல்லாததும், பொல்லாததும் கூறி, அவர்களை 'ஸிந்தீக்' என்றும் வாய் கூசாது எடுத்துரைத்து, அவர்கள் பற்றி எச்சரிக்கையாய் இருக்குமாறு எகிப்து சுல்தான் ஐயூப் மலிக்ஷாவுக்கு மடலொன்று தீட்டினார் அவர். மடலைப் பெற்றதும், சுல்தானின் மூளை சக்கரம் போல் சுழன்றது. அடுத்தகணம், ''அபுல் ஹஸன் ஷாதலி என்பவரைச் சிறை செய்க!'' என்ற ஆணை அனற்குண்டென அவருடைய வாயிலிருந்து வெளிவந்தது.

இச்செய்தி ஒன்றும் ஆண்டகை அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் வழக்கம் போல் அருள் நெறிப் பிரச்சாரம் செய்து கொண்டு கபாயில் என்ற ஊரை அடைந்த பொழுது, அங்கு வாழ்ந்து வந்த சூஃபிகள், அவர்களை அணுகி அரசு அதிகாரிகள் தங்களுக்கு இழைக்கும் அநீதிகளை எடுத்துரைத்தார்கள். அதுகேட்டு ஆண்டகை அவர்களின் அருள் நெஞ்சம் அனலிடைப்பட்ட மெழுகென உருகியது. அடுத்த கணமே, அவர்கள் அதுபற்றி அரசரிடம் முறையிட்டு, ஆவன செய்யக் கெய்ரோ கிளம்பி விட்டார்கள்.

தம்முன் ஆண்டகை அவர்கள் கையில் விலங்கிட்டு அழைத்து வரப்படாது, சுதந்திர புருடராக வந்து நிற்பதைக் கண்டதும் சுல்தான் ஐயூப் மலிக்ஷாவுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. "உம்மைச் சிறை செய்யுமாறல்லவா ஆணையிட்டேன். நீர் இங்கு எவ்வாறு வந்தீர்?" என்று வினவினார் அவர் ஆண்டகை அவர்களை நோக்கி. "இறைவனின் பேரருளால்" என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

"எதற்காக இங்கு வந்தீர்?" இது சுல்தானின் அடுத்த கேள்வி.

தாம் வந்த காரணத்தை இதமாக எடுத்துரைத்து கபாயில் வாழும் சூஃபிகளின் அவலம் துடைக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் ஆண்டகை அவர்கள்.

அவர்களின் இச்சொல் சுல்தானுக்கு நகைப்பை உண்டு பண்ணியது. "உம் பாடே திண்டாட்டமாக இருக்கும் பொழுது, பிறருக்குப் பரிவுரை செய்ய 'வக்காலத்து' வாங்கிக் கொண்டு வந்து விட்டீரா?" என்று கூறிக் கடகடவெனச் சிரித்தார். அவருடன் சேர்ந்து அவையும் சிரித்தது.

அப்பொழுது ஆண்டகை அவர்கள் சுல்தானை நோக்கி, "அனைத்தும் இறைவன் கையில் உள்ளது. அதை மறந்து விட்டுச் சிரிக்கிறீர்கள். உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்!" என்று கூறிவிட்டு அரசவையை விட்டு நீங்கினார்கள்.

அடுத்தகணம் சுல்தான் தம் அரியாசனத்திலிருந்து மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தார். அமைச்சர் பிரதானிகள் எவ்வளவோ முயன்றும், அவருக்கு மூர்ச்சை தெளியவில்லை. பின்னர் அவர்கள் ஆண்டகை அவர்களிடம் ஓடோடி வந்து செய்தியைக் கூறி மன்றாட, அவர்கள் மனமிரங்கி எழுந்தருளி, "எழுந்திரும்!" என்று கூறி, சுல்தானை ஒரு தட்டுத் தட்டினார்கள். இறப்பின் பிடியிலிருந்து மீண்டது போல், அவர் பிரக்ஞை தெளிந்து எழுந்தார். பின்னர் தாம் செய்த தவற்றை உணர்ந்து மன்னித் தருளுமாறு ஆண்டகை அவர்களின் காலில் கரம் வைத்து வேண்டியதோடு, கபாயிலுள்ள சூஃபிகளுக்கு ஆங்குள்ள அதிகாரிகள் யாதோர்

இடையூறும் இழைக்கக் கூடாது என்று கண்டிப்பான ஆணையும் பிறப்பித்தார்.

எனினும் சுல்தானின் உள்ளத்தில் ஆண்டகை பற்றி அசூயையும் பகைமையும் நீறு பூத்த நெருப்பென இருந்து கொண்டே இருந்தன. அவற்றை ஊதி வளர்ப்பது போன்று, ஆண்டகை அவர்களுக்கு எதிரான மொட்டைக் கடிதங்கள் சுல்தானுக்கு வந்து கொண்டே இருந்தன. ஜின்களை வசக்கி ஆளும், வல்லுநரான அபுல் ஹஸன் ஷாதலி, அவற்றின் உதவியால் சுல்தானை மயக்குற்று வீழச் செய்துவிட்டார் என்றும், செம்பைத் தங்கமாக்கும் கீமியாக்கலை மூலம் ஏராளமான தங்கத்தைச் செய்து, நாட்டின் பொருளதார நிலையையே சீர் குலைக்க முயன்று வருகின்றார் என்றும், அரசாங்கப் பணத்தைக் கையாடல் செய்து, அதற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முஹம்மது பின் குலாவு என்பவருக்கு அடைக்கலம் நல்கியுள்ளார் என்றும், 'ஸிந்தீக்' ஆகிய அவர் மக்களை வழிகொடுக்கிறார் என்றும், அவர் ஒரு 'கீமியா'க்காரரென்றும், 'சீமியா'க்காரென்றும், 'ஜின்' வாஸிலாத்துக்காரரென்றும், அந்த மொட்டைக் கடிதங்கள் தம்மை எழுதியவர் எவரெனக் காட்டிக் கொள்ளாமல் முக்காடிட்டுக் கொண்டு சுல்தான் முன் நின்று பேசின.

அப்பொழுது சுல்தானுக்கு ஏற்பட்ட வெஞ்சினத்திற்கு அளவில்லை. கள்ளத் தங்கம் செய்வது அரசாங்கத்திற்கு விரோதமான செயல் என்றும், தூக்குத் தண்டனை விதித்த ஒருவருக்கு அடைக்கலம் அளிப்பது அதைவிடக் கொடிய குற்றம் என்றும், எனவே கள்ளத் தங்கம் செய்வதை இத்துடன் நிறுத்துவதோடு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவரை உடனே அரசாங்கக் காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், இல்லையேல் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமென்றும், எச்சரித்து சுல்தானிடமிருந்து ஆண்டகை அவர்களுக்கு ஒரு கடிதம் பறந்தது.

அதைப் பார்த்துப் புன்னகை பூத்த ஆண்டகை அவர்கள் அக்கடிதம் கொண்டு வந்த தூதுவர்களை நோக்கி, ''சுல்தானின் கருவூல அறையி லிருந்து இரண்டு ஈயப்பாளங்களை எடுத்து வருமாறு கூறினார்கள். அவ்விதமே அவர்கள் செய்ய, தம்மிடம் அபயம் தேடிய முஹம்மது பின் குலாவை அழைத்து, அதன் மீது சிறுநீரைப் பெய்யுமாறு ஆணையிட் டார்கள். அவரும் அவ்விதமே செய்ய, அவை இரண்டும் அடுத்தகணம் தங்கப் பாளங்களாக மாறின. அப்பொழுது ஆண்டகை அவர்கள் அரசத் தூதுவர்களை நோக்கி, ''இது கெடுக்கிற செயலா, திருத்துகிற செயலா?'' என்று வினவினார்கள். ''திருத்துகிற செயல்'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள். இதன்பின் அசுத்த நீரால் சுத்தம் செய்யப்பட்ட அவற்றை எடுத்துச் சென்று சுல்தானிடம் தம்முடைய அன்பளிப்பாக

வழங்குமாறும், ஏழைகளிடம் ஈவிரக்கத்துடன் நடந்து கொள்ளுமாறு சுல்தானைத் தாம் கேட்டுக் கொண்டதாகக் கூறுமாறும், அத்தூதுவர் களிடம் ஆண்டகை அவர்கள் கூறினார்கள்.

நடந்ததை வந்து தூதுவர் நவில சுல்தானால் தம் காதுகளையே தம்மால் நம்ப இயலவில்லை. அரச ஆணைப்படி அவர்கள் அவற்றை நிறுத்துப் பார்த்த பொழுது, அவை ஐந்தாறு இராத்தல் இருந்தது. அது கண்டு சுல்தானுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் அளவில்லை. ஆண்டகை அவர்களை நேரில் சந்தித்து 'கீமியா' பற்றி விசாரித்து, அதுபற்றிய இரகசியத்தை அறிந்து கொள்ள விரும்பிய அவர் மாறுவேடம் பூண்டு, இஸ்கந்தரிய்யா வந்து, ஆண்டகை அவர்களைச் சந்தித்து, 'கீமியா என்றால் என்ன?' என்று வினவினார். அவர் எவரென்பதையும், அவர் எதற்காக வந்து இக்கேள்வியைக் கேட்கிறார் என்பதையும் நன்கு விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், ''உண்மையான 'கீமியா' தக்வா (பய பக்தி) தான். 'தக்வா' வுடையவர்கள் குன் (ஆகுக) என்று கூறிய கணமே, அவர்கள் விரும்பியது ஆகிவிடும். நீரும் அத்துறையில் முயலின் இந்த அற்புதக் 'கீமியா' சித்தை எய்தப் பெறலாம்'' என நவின்றார்கள்.

அறிவுத் தெளிவு பெற்ற சுல்தான், அதுமுதல் ஆண்டகை அவர் களுடன் பெரிதும் மரியாதையுடன் நடந்து கொண்டார். அவருடைய புகழும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்தது. ஆனால், அவர்களுக்கு இன்னல் இழைப்பதையே தம்முடைய அன்றாட அலுவலாக எண்ணி ஆற்றி வந்த இப்னு பர்ராவோ, அறிவு தடுமாறி, ஆக்கம் குலைந்து, நாதியற்று, அங்குமிங்கும் அலைந்து திரிந்து, இறுதியாக கெட்ட மரணத்தை எய்தினார். அவருடைய மக்களும் குடியில் மூழ்கி அழிந் தொழிந்தனர்.

எகிப்தில் ஆண்டகை அவர்களின் புகழ், உச்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அவர்கள் வாகனத்தில் ஏறித் தெருவில் பவனி புறப் பட்டால் வலிமார்களும், அமீர்களும், கனவான்களும், பொது மக்களும் புடை சூழ்ந்து வருவர். அப்பொழுது ஒருவர் கொடி பிடித்து, ''இதோ குத்பு வந்து கொண்டிருக்கிறார்கள். குத்பைப் பார்க்க விரும்பு கின்றவர்கள், இதோ வந்து கொண்டிருக்கும் இமாம் அவர்களைப் பார்த்துக் கொள் ளுங்கள்!'' என்று கட்டியம் கூறிய வண்ணம் முன்சென்று கொண்டிருப்பார்.

சுல்தானுல் உலமா, முஃப்தியெ அஃலம், இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம், ஆண்டகை அவர்களிடம் கொண்டிருந்த பக்தியோ அளவிடற்பாலதாய் இருந்தது.

ஒரு தடவை மன்சூரா என்ற இடத்தில் கூடாரமடித்து மார்க்க விற்பன்னர்கள் புடை சூழ, ஆண்டகை அவர்கள் வீற்றிருந்த பொழுது, 'லிஸாலத்துல் ஹுஷைரீ' என்னும் நூல் படிக்கப்பட்டது. அதில் ஆழிய கருத்துக்கள் அடங்கிய வாசகங்கள் வருந்தொறும், வருந்தொறும், மார்க்க விற்பன்னர்கள் அவை பற்றித் தங்களுடைய கருத்துக்களை ஒருவரோ டொருவர் பரிமாறிக் கொண்டார்கள். அப்பொழுது ஆண்டகை அவர்கள் எதுவும் கூறாது மௌனமாக இருந்தனர்.

இறுதியாக மார்க்க விற்பன்னர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து, ''ஷைகு அவர்களே! தாங்கள் எங்களுக்கு ஏதேனும் அறிவுரை பகர வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்கு ஆண்டகை அவர்கள், ''தாங்களோ மார்க்கக் கல்வியை ஐயம் திரிபறக் கற்ற உலமாக்கள். தங்களின் முன்னிலையில் நான் பேசுவது தகுமா?'' என்று கூறி வாளாவிருந்தனர்.

இதன்பின் மார்க்க விற்பன்னர்கள் பெரிதும் விரும்பிக் கேட்டுக் கொண்டதன் பேரில், ஆண்டகை அவர்கள் தம் பவளவாய் திறந்து, மளமள வென ஆன்மீகத்தின் ஆழிய ஆணிமுத்துக்கள் போன்ற செய்திகளை உதிர்த்தனர். அப்பொழுது மார்க்க விற்பன்னர்கள் தாங்கள் கற்ற கல்வி வேறாகவும், அவர்கள் கூறும் கருத்துக்கள் வேறாகவும் சிறப்பாகவும் இருப்பதைக் கண்டு, ஆனந்த பரவசமுற்றார்கள். பெரிதும் உணர்ச்சி வசப்பட்ட இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் தம்மை அடக்க முடியா நிலையில் வெளியே குதித்தோடி வந்து, ''இறைஞானச் செல்வத்தை அள்ளிக் குவிக்க விரும்புவோர், இங்கே துள்ளி ஓடி வாருங்கள்!'' என்று மக்களைக் கூவி அழைத்தார்கள்.

மற்றொரு நாள் ஆண்டகை அவர்கள், முந்நூற்றிப் பதின்மூன்று வலிமார்கள் புடை சூழ, ஓரிடத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டி ருக்கும் பொழுது, இறை ஆணைப்படி திடீரென, ''கதமி ஹாதிஹி அலா ஜபஹத்தி குல்லி வலியில்லாஹி'' (என்னுடைய பாதங்கள் இறைநேசச் செல்வர்களின் நெற்றி மீதில் இருக்கும்)★ என்று கூறினர். அதனை ஆங்கிருந்த இறைநேசச் செல்வர்கள் அனைவரும் தலைசாய்த்து ஏற்றுக் கொண்டார்கள்.

ஆன்மீகத் துறையில் 'ஃபர்த்' என்ற தனிப்பெரும் படித்தரத்தை எய்தி நின்ற ஆண்டகை அவர்கள், ஒரு நாள் தம் சீடர்களை நோக்கி, ''என்னிடம்

★ இது தலைமைத்தனத்தை உணர்த்துவதற்காகக் கூறப்பட்ட சொல்லேயன்றி வேறில்லை. இதன் மூலம் ஆண்டகை அவர்கள் ஃபர்த் என்னும் தனிப்பெரும் படித்தரத்தை எய்திவிட்டனர் என்று புலப்படுகிறது.

இறைவன், 'அலீயே! உலகில் மார்க்க சட்டதிட்டங்கள் (ஃபிக்ஹ்) பற்றிப் பேசப்படும் கூட்டங்களில், இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாம் பேசும் கூட்டத்தை விடச் சிறப்பு மிகு கூட்டம் வேறொன்றில்லை. உலகில் ஹதீது பற்றிப் பேசப்படும் கூட்டங்களில் அப்துல் அளீமுல் முன்திரி பேசும் கூட்டத்தைவிட மாண்புமிகு கூட்டம் மற்றொன்றில்லை. உலகில் ஆன்மீகம் பற்றிப் பேசப்படும் கூட்டங்களில், நீர் பேசும் கூட்டத்தைவிட அழகுமிகு கூட்டம் பிறிதொன்றில்லை' என்று கூறினான்'' என எடுத்துரைத்தார்கள்.

அவர்கள் அவ்வாறு கூறியது உண்மையிலும் உண்மை என்பதில் ஐயமில்லை. எனவே தான் தகிய்யுத்தீன் முஹம்மது இப்னு குஷைரீ (ரஹ்) அவர்களும், ''உலகில் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களை விட இறைவனை அறிந்த ஞானவானை நான் கண்டுமறியேன், கேட்டு மறியேன்'' என்று கூறினார்கள்.

துவக்கத்தில் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் போன்றே இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களும், சூஃபிகளைக் குறை கூறுகிறவர்களாக இருந்தனர். இறைவனைப் பற்றிப் பொய்மையைப் புனைந்துரைத்து, மக்களை வழி கெடுக்கிறார்கள் என்றும் கூறிக் கொண்டிருந்தனர். பின்னர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களுக்கு ஆன்மீகக் கண் திறந்து சூஃபிகள் பேரின்பக் கடலில் மூழ்கித் திளைக்கும் பொழுது, உலமாக்களாகிய தாங்கள் அதன் கரையில் கெரண்டைக்கால் தண்ணீரில் நிற்பது போன்று உணர்ந்து, ஷைகு பாஃதகானி (ரஹ்) அவர்களிடம் 'பைஅத்' பெற்று, நிஜாமிய்யாக் கல்லூரியின் முதல்வர் பதவியைத் துறந்து, தவம் செய்யக் காடேகினார்கள். அங்கு ஒருவர் அவர்களை, பழைய துணியை உடுத்தியவர்களாய், பக்கீர் கோலத்துடன் கையில் கழியையும், குவளையையும் வைத்துக் கொண்டு வேகமாகச் செல்வதைக் கண்டு அவர்கள் மீது இரங்கி, ''இமாம் அவர்களே! பக்தாதில் மார்க்கக் கல்வியை சுல்தான் முதல் பொதுமக்கள் ஈறாக அனைவருக்கும் கற்றுக் கொடுக்கும் பேறு பெற்றிருந்தீர்களே, அது இதைவிட மேலான தல்லவா?'' என்று வினவிய பொழுது, அவர்கள் சினத்துடன் அவரை நோக்கி, ''விருப்பம் என்னும் வானில், இறையருள் என்ற தண்மதி தோன்றிய பொழுது, கல்வி என்னும் கதிரவன், படுவானில் போய் விழாது என் செய்யும்?'' என்று கூறி விட்டு, விறுவிறுவென நடந்தார்கள். அது போன்றே காஜி இஸ்ஸுத்தின் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களும் ஆண்டகை அவர்களைச் சந்தித்து அவர்களிடம், 'பைஅத்' செய்த பின் ஆன்மீகத் தெளிவுபெற்று, ''நான் இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களிடம் 'பைஅத்' செய்த பின்னரேதான், முழுமையான இஸ்லாம் எதுவென அறியலானேன்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

பல தடவை 'ஹஜ்'ஜு செய்த ஆண்டகை அவர்கள் ஒரு தடவை ஹஜ்ஜுச் செய்துவிட்டு, இஸ்கந்தரிய்யா திரும்பிய பொழுது, இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களைக் கண்டு, ''தங்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ' ஸலாம் சொன்னார்கள்'' என்று கூறினர். அது கேட்டு இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தன்னை ஒரு பொருட்டாகக் கருதி 'ஸலாம்' கூறி அனுப்பக்கூடிய தகுதி தமக்கு உண்டா? என்று தம்மைத் தாமே இலேசாக எண்ணிக் கொண்டார்கள்.

இச்சமயத்தில் அவர்களைச் சந்தித்த முஹ்யித்தீன் இப்னு சுராக்கா (ரஹ்) அவர்கள், ''தங்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஸலாம் கூறி அனுப்பியதாகக் கேள்வியுற்றோமே'' என்று கூறி, 'மர்ஹபா, மர்ஹபா' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

நான்கு பேர் மத்தியில் வைத்து அவர்கள் இவ்வாறு கூறியது அடக்கமே உருவாய் அமைந்த, இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களுக்குச் சிறிது நாணத்தை உண்டுபண்ணியது. ''அல்லாஹ் என்னுடைய இரகசியங்களை மறைப்பானாக!'' என்று கூறினார்கள் அவர்கள். அப்பொழுது அங்கிருந்த அபுல் அலம் யாஸீன் (ரஹ்) அவர்கள், ''இல்லை; இல்லை. அல்லாஹ் அவற்றை வெளிப்படுத்து வானாக!'' என்று மறுத்துரைத்துவிட்டு, ''இதன் உண்மையை எங்களுக்குக் காட்டியருள்வாயாக!'' என்று இருகரம் ஏந்தி இறைவன் பால் இறைஞ்சினர்.

அப்பொழுது அவ்விடத்திற்கு ஒரு பாடகன் வந்தான். அங்கிருந்தோர் அவனை நோக்கி, 'ஒரு பாட்டுப் பாடு!' என்று கூறினர். அடுத்தகணம் அவன்,

''ஸத(க்) கல் முஹத்திது வல் ஹதீது கமாஜரா''

என்று தொடங்கும் ஒரு பழம் பாடலைப் பாடினான். அதன் பொருள் ''சொன்னவர் உண்மை சொன்னார். செய்தியும் உண்மையில் நடந்த தேயாகும்'' என்பதாகும். அதுகேட்டு அங்கிருந்தோர், அனைவருக்கும் ஏற்பட்ட வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை.

ஆண்டகை அவர்களுக்கும், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையே இருந்த ஆன்மீகத் தொடர்போ, விண்டிட இயலா மாண்புடை யதாக இருந்தது. ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, கண் இமைக்கும் நேரம், எனக்கும் என் பாட்டனார் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையில் திரை போடப்படினும், நான் என்னை முஸ்லீம்களின் குழுவில்

சேர்ந்தவனெனக் கருத மாட்டேன்'' என்று ஆண்டகை அவர்கள் கூறினர். விழித்திருப்பின் விழிப்பிலும், கண்ணுறங்கின் கனவிலும், அவர்கள் எப்பொழுதும் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கண்டு கொண்டிருந்தனர்.

ஒரு தடவை அவர்கள் நோயுற்ற பொழுது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''அலீயே! உம்முடைய உடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும்! அதன் காரணமாக உமக்கு இறையருள் கிட்டும்'' என்று கூறினர். அதன் பொருள் விளங்காது திணறிய ஆண்டகை அவர்கள், அதனை விளக்கமாகக் கூறுமாறு வேண்ட, ''அலீயே! இறைவன் உமக்கு ஐந்து பரிவட்டங்களை வழங்கியுள்ளான். அவற்றில் முதலாவது 'மஃரிஃபா' என்னும் இறையருள் ஞானம். நீர் இறையருள் ஞானத்தை எய்தப் பெறின், ஏனைய அனைத்தும் கைவந்த கலையாக ஆகிவிடும். இரண்டாவது 'மஹப்பத்' என்னும் இறை அன்பு. இறைவன் மீது அன்பு செலுத்துகின்றவன்பால், அவனின் அனைத்துப் படைப்புகளும் அன்பு செலுத்தத் தொடங்கி விடும். மூன்றாவது 'ஈமான்' என்னும் இறை நம்பிக்கை. நான்காவது 'தௌஹீது' என்னும் ஏகத்துவம். ஐந்தாவது 'இஸ்லாம்' என்னும் சாந்தி மார்க்கம். இந்த ஐந்தையும் கைக் கொள்பவன், இறைவனுக்கு மாறு செய்ய மாட்டான். ஒரு வேளை தன்னை அறியாது மாறு செய்துவிடின், அதற்காக இறைவனிடம் பச்சாதாபப்பட்டு வருந்தி பாவமன்னிப்பை எய்தப் பெறுவான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விளக்கம் பகர்ந்தனர். இதன்பின்னரே, இறைவன் தன் திருமறையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி ''முஹம்மதே! உம்முடைய உடைகளைத் தூய்மைப் படுத்திக் கொள்ளும்!'' என்று கூறியிருப்பதன் உட்பொருள் ஆண்டகை அவர்களுக்குத் தெற்றென விளங்கலாயிற்று.

மற்றொரு தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டனர். அப்பொழுது அவர்களுடன் மூஸா (அலை) அவர்களும், ஈஸா (அலை) அவர்களும், இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும் இருந்தனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அந்த இரு நபிமார்களிடமும் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களைச் சுட்டிக் காட்டி, ''இவர் போன்ற ஒரு மார்க்க அறிஞர், உங்களுடைய 'உம்மத்'துகளில் எவரேனும் உண்டா?'' என்று வினவினர். அதற்கு ஈஸா (அலை) அவர்கள் 'இல்லை' என்று மறுமொழி பகர்ந்தனர். இதனையே இமாம் யாஃபீ (ரஹ்) அவர்கள்,

''பிஹில் முஸ்தஃபா யாஹா பி ஈஸப்னி மர்யமி
லஹு¬ கால ஸித்கன் ஹா லியன் அன் தகவ்வுலி

அஹுப்ருன்க ஹும்ஷ்தாஃபீ கவாரீக்க கால லா
வ நாஹுீக்க ஃபீஹுாதல் ஃபஹுாரில் முஅஷ்த்தவீ.
என்று பாடுகிறார்கள்.*

மற்றொரு தடவை ஆண்டகை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களையும், அனைத்து நபிமார்களையும் ஒருங்கு சேரக் கனவொன்றில் கண்டனர். அது பற்றிய விவரத்தை நாம் அவர்கள் வாயிலாகவே கேட்போம்.

''ஓரிரவு நான் பைத்துல் முகத்தஸ் பள்ளியில் படுத்திருந்தேன். அப்பொழுது கனவொன்று கண்டேன். பள்ளிவாயிலின் நடுவே ஓர் அரியணை போடப்பட்டிருந்தது. அதைச் சூழ மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து நின்று கொண்டிருந்தார்கள். ''யார் அவர்கள்? எதற்காக இங்கு வந்து குழுமியுள்ளார்கள்?'' என்று நான் அங்கிருந்த ஒருவரை வினவினேன். அதற்கு அவர், ''ஹுஸைனுல் ஹல்லாஜ் உயிரோடிருக்கும் பொழுது, அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பற்றி மரியாதைக் குறைவான பேச் சொன்றைக் கூறிவிட்டார். அவருக்காக நாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் மன்றாடி மன்னிப்புப் பெற வந்துள்ளோம்'' என்று கூறினார்.

''நான் அரியாசனத்தை நோக்கினேன். அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களின் காலடியில் இலட்சத்து பதினாலாயிரம் நபிமார்களும் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது மூஸா (அலை), அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி, 'என்னுடைய உம்மத்திலுள்ள உலமாக்கள், பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்களுக்கு இணையானவர்கள் என்று கூறியுள்ளீர்களே, அது எவ்வாறு?' என்று வினவினர். அப்பொழுது இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் ஆன்மா அவர்களின் முன் வந்து நின்றது . அப்பொழுது மூஸா (அலை) அவர்கள், இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்க, அதற்கு இமாம் அவர்கள் பத்துவிதமான விடை பகர்ந்தனர். அப்பொழுது மூஸா (அலை) அவர்கள், இமாம் அவர்களை நோக்கி, 'ஒரு கேள்விக்குப் பத்து விதமான விடையா அளிப்பது?' என்று கூற, 'இது குற்றமெனில், இதே போன்ற குற்றத்தைத் தாங்களும் இழைத்துள்ளீர்களே. இறைவன் தங்களிடம், 'மூஸா! உம்முடைய வலக்கையில் என்ன இருக்கிறது?' என்று வினவ, அதற்குத் தாங்கள். 'அது என் கைத்தடி' என்று பதிலுரைப்

★ மேலும் இமாம் யாஃபீ (ரஹ்) அவர்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களைக் கனவில் கண்டு, ''தங்களை மக்கள் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் என்று கூறுகிறார்களே. அது பற்றித் தங்கள் கருத்தென்ன?'' என்று வினவிய பொழுது, ''நீ நாடியதைக் கூறிக்கொள்!'' என்று சொல்லிவிட்டு, அவர்கள் போய்விட்டார்கள் என்று மற்றொரு கவியில் பாடுகிறார்கள்.

பதற்குப் பதிலாக, 'அது என் கைத்தடி. அதனை நான் தரையில் ஊன்றி நடப்பேன். அதைக் கொண்டு ஆடுகளுக்கு இலை குழைகளைப் பறிப்பேன். அதனால் எனக்கு வேறு பயன்களும் உள்ளன. அதனை நான் என் தோளில் வைத்து, அதன்மீது என் வில்லையும் அம்பறாத்துணியையும் ஏனைய உடைமைகளையும் கொழுவிச் சுமந்து செல்வேன்' என்று கூறினீர்களே' என்று பதிலிறுத்தனர். அதுகேட்டு மூஸா (அலை) மறு வார்த்தை பேசவில்லை.

''அனைத்து நபிமார்களும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாதார விந்தங்களில் வீற்றிருப்பதைக் கண்டு, நான் வியப்புற்று அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மாண்பினைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, எவரோ ஒருவர் வந்து என்னைத் தட்டி எழுப்பினார். விழித் தெழுந்தேன். ஆனால் அவரைக் காணவில்லை. அங்குமிங்கும் தேடி னேன். காணவில்லை. இதுவரை தேடிக் கொண்டிருக்கிறேன். காண வில்லை.''

மற்றொரு தடவை அவர்கள், தம் சீடர்களை நோக்கி ''நான் கனவில் கஃபாவைச் சுற்றி வருவது போல் கண்டேன். அப்பொழுது அல்லாஹ் என்னிடம், 'அலீயே! நாம் உமக்கு ரசூல்மார்களுடையவும், நபிமார் களுடையவும் அறிவைத் தவிர்த்து, முந்தியவர்களுடைய, பிந்தியவர் களுடைய அறிவுகளை விட்டும், நீர் தேவையற்றவராக இருக்கும் வகையில், உமக்கு அவ்வளவு அதிகமான அறிவுகளைத் தந்துள்ளோம்' என்று கூறினான்'' என எடுத்துரைத்தார்கள்.

வேறொரு தடவை அவர்கள் தம் சீடர்களை நோக்கி, ''நான் கனவொன்று கண்டேன். அதில் நான் ஓர் உயரமான இடத்தில் இருப்பது போல் தோன்றுகிறது. அப்பொழுது நான் இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! மனிதர்களில் நீ மிகமிக விரும்பும் நிலை எது?'' என்று வினவினேன். அதற்கு இறைவன், ''நான் மனிதர்களில் மிகமிக விரும்பும் நிலை 'முஷாஹதா' ஆகும்'' என்று பதிலிறுத்தான். மீண்டும் நான் அவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! மனிதர்களில் நீ மிகமிக விரும்பும் சொல் எது?'' என்று வினவினேன். சட்டென இறைவன், ''லா இலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமா தையிபாவாகும்'' என்று மறுமொழி பகர்ந்தான். பின்னர் நான் இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! உன் அன்பை எய்தப் பெற மனிதர்கள் ஆற்ற வேண்டிய செயல் எது?'' என்று வினவினேன். அதற்கு இறைவன், ''துன்யாவையும் (உலக இன்பங்களையும்) துன்யா - தார்களாகிய உலகத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பவர்களையும், வெறுத்தொதுங்குவதாகும்' என்று விடையிறுத்தான்'' என மொழிந்தார்கள்.

பிறிதொரு தடவை அவர்கள் ''நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து என்னுடைய வாரிசு உரிமையைப் பெற்றேன். அஸ்மாக்களின் கருவூலங்கள் எனக்குத் திறந்து தரப்பட்டுள்ளன. ஜின்களும் மனிதர்களும், உலக முடிவு நாள் வரையில், நான் பெற்றிருக்கும் கல்வியை எழுதப் புகின், அவர்கள் எழுத இயலாது சடைந்து போவார்கள்'' என்றும் கூறினர்.

பிறிதொரு தடவை ஆண்டகை அவர்கள் தம்முடைய சீடர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்த பொழுது, ''என்னுடைய பாட்டனார் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், எனக்கு இவ்விதம் அறிவித் தார்கள்'' என்று அடிக்கடிக் கூறிப் பற்பல விதமான அறிவுரைகளை எடுத்துரைத்தார்கள். அப்பொழுது அங்கிருந்த 'வலி' ஒருவர், ''இவருடைய பாட்டனார் எங்கிருக்கிறார்கள்? இவர் எங்கிருக்கிறார்? இவர் என்ன இவ்வாறு திரும்பத் திரும்பக் கூறி, அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்' என்று மனத்திலெண்ணி எரிச்சலுற்று அங்கிருந்து கிளம்பி, ஷைகு முஜாஹித் (ரஹ்) அவர்களின் தவ மடத்தில் போய்த் தங்கினார்.

அன்றிரவு அவர் கனவொன்று கண்டார், அதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''மனிதரே! என் மகன் அபுல் ஹஸன் கூறியது உமக்கு உண்மையாகத் தோன்றவில்லையா? அவர் கூறியவை அனைத்தும் நான் அவருக்குக் கூறியவையேயாகும்'' என்று அருள்வாய் மலர்ந்து விட்டு மறைந்தனர்.

உடனே அவர் பதறி விழித்து, ஷைகு முஜாஹித் (ரஹ்) அவர்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, ஆண்டகை அவர்களிடம் வந்த பொழுது, அவர்கள் அந்த 'வலி'யைப் பார்த்து, ''மனிதரே! அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மிடம் வந்து நான் கூறியவை அனைத்தும் உண்மை என்று கூறும் வரை, நீர் என்னை உண்மையாளன் என்று நம்ப வில்லை. நீர் இக்கணமே இவ்வூரை விட்டும் கிளம்பிவிடும்! இல்லை யேல் அல்லாஹ்வின் மீது ஆணையாக உம்முடைய 'வலி'த்தனம் பறிபோய்விடும்'' என்று கூறினார்கள். அது கேட்டுத் திடுக்குற்ற அவர் அக்கணமே அவ்வூரை விட்டும் கிளம்பி விட்டார்.

ஒரு நாள் ஒருவர், ஆண்டகை அவர்களை அணுகி, ''ஷைகு அவர்களே! தங்களின் ஆன்மீக ஆசான் யார்?'' என்று வினவினார். அதற்கு ஆண்டகை அவர்கள் ''முன்பு என்னுடைய ஆன்மீக ஷைகு அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஸ் அவர்களாவர். ஆனால், இப்பொழுது நான் எவர் பாலும் சேர்ந்தவனாயில்லை. நான் பத்துக்கடல்களிலிருந்து ஆன்மீகப் பேரமுதை அள்ளுகிறேன். அவற்றில் ஐந்து கடல்கள் விண்ணகத்தைச் சேர்ந்தவையாகும். ஏனைய ஐந்து கடல்கள் மண்ணகத்தைச்

சேர்ந்தவையாகும். விண்ணகத்தைச் சேர்ந்த கடல்கள், ஜிப்ரீல், மீக்காயில், இஸ்ராஃபீல், இஸ்ராயீல், ரூஹ்★ ஆகியோர் ஆவர். மண்ணகத்தைச் சேர்ந்த ஐந்து கடல்கள் அபூபக்ர், உமர், உதுமான், அலீ, முஹம்மது (ஸல்) ஆகியோராவர்'' என்று பதிலிறுத்தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களை அணுகி, ''கிள்ரு உயிரோடு உள்ளாரா அல்லது இறந்து விட்டாரா?'' என்று வினவிய பொழுது, ''நீர் ஃபகீஹ் நாஸிருத்தீன் அம்பாரியிடம் செல்லும்! அவர் கிள்ரு உயிரோடுள்ளார் என்றும், அவர் நபிமார்களில் ஒருவர் என்றும் ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) வழங்குவார்'' என்று பதிலிறுத்தார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ''கிள்ரு இறந்து விட்டார் என்று மார்க்க விற்பன்னர்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஐதாபுக் காட்டில், நான் கிள்ரை எத்தனையோ தடவை, என்னுடைய இந்தக் கை கொண்டு முஸாபஹா (கைலாகு) செய்துள்ளேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, ''அபுல் ஹஸனே! இறைவன் உமக்கு அழகிய முறையில் பேரருள் பாலிப்பானாக! காட்டிலும், கரையிலும், மேட்டிலும், மலையிலும் அவன் உமக்குத் துணை நிற்பானாக!'' என்று கூறி இறைஞ்சியுள்ளார். அவருடைய கலிமா விரலும் நடுவிரலும் ஒரே நீளமுடையதாய் இருப்பதைக் கண்டேன்.''

ஒருவர் ஒவ்வோர் இரவும், தொழுது முடித்தபின் ஸலவாத்து ஓதி, அதன் பிறகு 'ரலியல்லாஹுஅன் ஸையிதீ அபில் ஹஸன் ஷாதலி' என்று சில தடவை ஓதிவிட்டு, ஆண்டகை அவர்களைக் கொண்டு 'வஸீலா'த் தேடி, இறைவனிடம் தம் நாட்டங்களை முறையிட்டு வந்தார். அவை உடனுக்குடன் நிறைவேறின.

ஓரிரவு அவர் அண்ணல்நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டபொழுது, ''நாயகமே! நான் தங்களைக் கொண்டு வஸீலாத் தேடி இறைஞ்சாமல் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களைக் கொண்டு வஸீலாத் தேடி இறைஞ்சியது என்பால் குற்றமாகுமா?'' என்று பதற்றத்துடன் வினவினார்.

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சிரித்துக் கொண்டு, ''அபுல் ஹஸன் வெளியிலும், உள்ளிலும் என்னுடைய பிள்ளையாவார். பிள்ளை தகப்பனின் ஒரு பிரிவேயாவர். பிள்ளையைப் பற்றிப் பிடித்தோர்

★ இவர் ஒரு வானவர். இவருக்கு மேலாக எந்த வானவருமில்லை. இவர் தாம் வானவர்களின் தலைவர். இவரை மையமாக வைத்துத்தான், அகிலம் என்ற திரிகையை அல்லாஹ் சுற்றுகின்றான். இந்த வானவரையே, 'ஹகீகத்தெ முஹம்மதிய்யா' என்று சூஃபிகள் கூறுகின்றனர்.

தகப்பனைப் பற்றிப் பிடித்தோரேயாவர். ஆதலின் நீர் என் பிள்ளை அபுல் ஹஸனைக் கொண்டு வஸீலாத் தேடி இறைஞ்சியது, என்னைக் கொண்டு வஸீலாத் தேடி இறைஞ்சியதேயாகும்'' என்று பதிலிறுத்தார்கள்.

ஒரு தடவை ஆண்டகை அவர்களும், தங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''ஒருவனுக்கு ஒரு தேவை ஏற்படின் அவன் என்னைக் கொண்டு இறைவனிடம் ஆணையிட்டு, அதனை நிறைவேற்றித் தருமாறு இறைஞ்சின், அதனை இறைவன் நிறைவேற்றியருள்வான்'' என்று கூறியுள்ளார்கள்.

மகீனுல் அஸ்மர் (ரலி) அவர்கள் கூறுகின்றனர்: ''இஸ்கந்திரியாவில் ஒரு மனிதர் இருந்தார். அவர் சில காலம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களின் திருச்சபைக்கு வந்து, அவர்கள் கூறும் அற்புதமான செய்திகளையும், அறிவுகளையும் கேட்டுச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். பின்னர் அவர் திடீரென அங்கு வரும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

'ஓரிரவு நான் அசரீரி ஒன்றைச் செவியுற்றேன். அதில் அவரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. இன்னார் நம்மிடத்தில், தம்முடைய ஆறு தேவைகளை நிறைவேற்றித் தருமாறு இன்ன நேரத்தில் முறையிட்டார். அவர், அத்தேவைகள் நிறைவேறப் பெற விரும்பின், அபுல் ஹஸன் ஷாதலியிடம் செல்லவும் என்று கூறி அவர் வேண்டிய வேண்டுதல்களை ஒன்றன் பின் ஒன்றாக என்னிடம் எடுத்துரைக்கப்பட்டது.

''விடிந்தெழுந்ததும் நான் அவரிடம் சென்று, 'நீர் இன்றிரவு உம்முடைய ஆறு தேவைகளை நிறைவேற்றியருளுமாறு இறைவனிடம் முறையீட்டீரா?' என்று வினவினேன். 'ஆம்' என்று அவர் பதிலிறுத்தார். அதன்பின் நானே அவற்றை அவரிடம் ஒன்றின் பின் ஒன்றாக எடுத்துரைத்து, 'நீர் இவை நிறைவேற வேண்டுமென விரும்பின், உம்மை அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களிடம் போகச் சொல்லுமாறு அசரீரியாக எனக்கு அறிவிக்கப்பட்டது' என்று கூறினேன்''.*

உண்மையில் ஆண்டகை அவர்களின் தகுதி அப்படித் தான் இருந்தது. எனவே தான் அவர்கள் தங்களைப் பற்றி, மற்றொரு தடவை குறிப்பிடும் பொழுது, ''என்னைக் கண்டவன், கண்டவனைக் கண்டவன், அவனைக் கண்டவனைக் கண்டவனுக்குச் சுபசோபனம்'' என்று கூறினார்கள்.

★ அவர் அவ்விதமே சென்றாரா, அல்லவா என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

ஒரு தடவை ஆண்டகை அவர்கள் ஷைகு அமீனுத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''என் மீது அல்லாஹ்வின் பேரருள் (மதது) இறங்கிக் கொண்டுள்ளது. பின்னர் அது தண்ணீரில் வாழும் மீன்களிலும், விண்ணில் பறக்கும் பறவைகளிலும் செல்ல நான் காண்கிறேன்'' என்று கூறினார்கள். அப்பொழுது அவர்கள், ''அவ்விதமாயின் தாங்கள் ஒரு குத்பாக இருக்கிறீர்கள்'' என்று கூறினர். அதுகேட்ட ஆண்டகை அவர்கள், ''அனா அப்துல்லாஹ், அனா அப்துல்லாஹ்'' (நான் அல்லாஹ்வின் அடிமை, நான் அல்லாஹ்வின் அடிமை) என்று அறிவித்தனர்.

இவ்வாறு அவர்கள் தாழ்மையுடன் கூறிய போதினும், அவர்கள் குத்பு என்பதில் ஐயமில்லை. அதனை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்ட பொழுது அதனை அவர்கள் வெளிப்படுத்தவும் தயங்கவில்லை. மற்றொரு தடவை முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் சீடர் ஸத்ருத்தீன் கூனவீ இஸ்கந்திரிய்யாவுக்கு வந்திருந்த பொழுது, ஓரிடத்தில் ஆண்டகை அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அப்பொழுது அவர், ஆன்மீகம் பற்றிய செய்தியை அருவி நீரெனக் கொட்டினார். அதனைத் தலை தாழ்த்திக் கேட்டுக் கொண்டிருந்த ஆண்டகை அவர்கள், அவர் பேச்சை இலகுவில் நிறுத்தமாட்டார் என்பதை விளங்கிக் கொண்டு, தலையை நிமிர்த்தி ''இன்று குத்புஸ் ஸமான் எங்கியிருக் கிறார்?'' என்று அவரை வினவினர். இப்பொழுது தான் அவர்கள் எவரென விளங்கினார் அவர். இதுவரை அவர்களை எவரென அறியாது அவர்களின் முன் பேசிவிட்டோமே என்று வருந்தி, அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டார் அவர்.

பேரருளாளனாகிய அல்லாஹ் அவர்களுக்குப் பெரும்பேறு அளித்திருக்கிறான். அதற்காக அவர்கள் அல்லாஹ்வுக்கு ஆயிரம், ஆயிரம் முறை நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மலைப் பொதும்பில் தவம் செய்து கொண்டு இருக்கும் பொழுது ஒரு தடவை, இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! நான் எப்பொழுது உனக்கு மிகவும் நன்றி செய்யும் அடியானாவேன்?'' என்று வினவினர். அப் பொழுது பொதும்புக்குள்ளிருந்து, ''உம்மைத் தவிர, மிகவும் நற்பேறு பெற்றவன் ஒருவனுமில்லை என்று நீ கண்டு கொண்டால் தான், நீ எனக்கு மிகவும் நன்றி செய்யும் அடியானாவாய்'' என்று அசரீரியாகப் பதில் வந்தது.

அப்பொழுது அவர்கள் அந்த ஒலி வந்த திசையை நோக்கி, 'அவ் விதம் நான் எவ்வாறு காண்பேன்? நீ நபிமார்களின் மீதும், உலமாக்களின் மீதும், அரசர்கள் மீதும் எவ்வளவோ அருட்பேறுகளையெல்லாம் சொரிந்திருக்கிறாயே'' என்று கூறினர்.

''ஆம், நபிமார்களில்லையேல் நீர் நேர்வழி பெற்றிருக்கமாட்டீர். உலமாக்கள் இல்லையேல், நீர் பின்பற்ற வழிவகை தெரியாது போயிருக்கும். அரசர்களில்லையேல் உமக்கு அச்சம் தீருதல் இல்லாமல் போயிருக்குமே. இவர்கள் அனைவருக்கும் நாம் அளித்த நற்பேறுகள் உமக்களித்த நற்பேறுகள் தாமே'' என்று மீண்டும் அசரீரி முழங்கியது. அதுகேட்டு அவர்களின் உள்ளம் நன்றிப் பெருக்கில் திளைத்தது.

அவர்கள் தம் 'தரீக்கா'வை இறைவனுக்கு நன்றி செலுத்தும் முறையிலேயே அமைத்தார்கள். எனவே தான் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் மேற்கொண்ட துறவு முறைக்கு, ஆண்டகை அவர்களின் முறை மாற்றமாக இருந்தது. தம் தரீக்காவைப் பற்றி ஆண்டகை அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''நம்முடைய தரீக்கா திருமணம் முடிப்பதை விட்டொழிப்பதையோ, உமி நீக்கப்படாத கோதுமை ரொட்டியை உண்பதையோ, குருணைக் கஞ்சியைக் குடிப்பதையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. நம்முடைய தரீக்கா இறைவனிட்ட ஏவலைப் பொறுமையுடன் மேற்கொள்வதும், நேர்வழியில் திடமாகச் செல்வதுமாக இருக்கும். ஏனெனில், இறைவன் தன் திருமறையில் 'வஜஅல்னாஹும் அயிம்மத் தன் யஹ்தூன பி அம்ரினாலல்மா ஸபரூ வ கானூ பி ஆயாத்தினா யூக்கி னூன்' (அவர்கள் நம் வழிபாட்டினை உளமார மேற்கொண்டு, நம் அத்தாட்சிகளைத் திடமாக ஏற்றுக் கொண்டதும், நாம் அவர்களை நம்முடைய அலுவல்களுக்கு நேர்வழி காட்டும் தலைவர்களாக ஆக்கினோம்) என்று கூறுகின்றான்'' என எடுத்துரைத்தார்கள்.

எனவே தான், ஆண்டகை அவர்கள் தம் சீடர்களை நோக்கி, ''நல்ல உணவுகளை உண்ணுங்கள்! மதுரமான பானங்களை அருந்துங்கள்! மென்மையான விரிப்பில் அமருங்கள்! உயரிய உடையை உடுத்துங்கள்! நீரைக் குளிர வைத்துக் குடியுங்கள்! இவ்வாறு நீங்கள் செய்து, 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறி, இறைவனுக்கு நன்றி சொல்லின், அவ்விதமே உங்களின் ஏனைய உறுப்புகளெல்லாம் கூறி நன்றி செலுத்தும். ஆனால் உமி நீக்கப்படாத கோதுமை ரொட்டியை உண்டு கொண்டும், கம்பளிப் போர்வையைப் போர்த்திக் கொண்டும், கட்டாந்தரையில் படுத்துக் கொண்டும், வெந்நீரை அருந்திக் கொண்டும் இருப்பவர்கள் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறினால், அவர்கள் மனப்பூர்வமாக அவ்விதம் கூறமாட்டார்கள். மனம் மிக வருந்தித் தம் விதியை நொந்து கொண்டே அவ்விதம் கூறுவ்ார்கள். நீங்கள் இறைவன் உங்களுக்கு உலகில் 'ஹலால்' ஆக்கித் தந்ததைச் செய்த பொழுது, அதாவது உண்டு, சுகித்து மகிழ்வுடன் இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொழுது, அவர்கள் இறைவன் தங்களுக்கு 'ஹலால்' ஆக்கித் தந்தவற்றை நுகர மறுத்து 'ஹரா'

மாக்கி வைத்ததை அதாவது தம் விதியை நொந்து கொள்வதைச் செய்கிறார்கள்'' என்று கூறினார்கள்.

ஒரு சமயம் அவர்களின் சீடர் ஒருவருக்கு நல்ல உணவுண்பதையும், உடை உடுத்துவதையும் நிறுத்தி பக்கீர்கள் போன்று எளிய உணவையும் உடையையும், உடுத்திக் கொள்ளலாமென்று உள்ளத்தில் ஓர் ஊசாட்டம் ஏற்பட்டது. இவ்வித ஊசாட்டத்துடன் அவர் ஆண்டகை அவர்களின் முன் சென்ற பொழுது, அதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட அவர்கள், தம் சீடரை நோக்கி, ''நீர் இறைவனை அறிந்து கொள்ளும்! பின்னர் மார்க்கத்திற்கு முரண்படாதவகையில் நீர் விரும்பியதைச் செய்து கொள்ளும்!'' என்று அறிவுரை பகர்ந்தார்கள். உண்மையில் ஆண்டகை அவர்கள் தாம் செய்து வந்ததையே தம் சீடருக்கும் கூறினார்கள்.

ஒரு நாள் அவர்கள் அழகிய உடை அணிந்து, யமன் நாட்டில் நெய்யப்பட்ட உயர்தரமான பரிவட்டத்தைப் போர்த்திக் கொண்டு, இவ் வுலகின் இழிதன்மையையும், அதனை வெறுக்க வேண்டிய அவசியத் தையும் பற்றித் தம் சீடர்களுக்கு அறிவுரை பகர்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கு ஒரு பக்கீரும் இருந்தார். அவருக்கு அவர்களின் பேச்சும், செயலும் முரண்பட்டதாகத் தெரிந்தது. 'இவர்கள் உலகை விரும்பி, உயரிய உடை உடுத்திக் கொண்டு, இவ்விதம் பேசுகின் றார்களே. நானல்லவா உலகை வெறுத்துத் துறவை மேற்கொண்டு, பழைய உடையை அணிந்து கொண்டுள்ளேன்'' என்று தம் உள்ளத்தில் நினைந்தார்.

அடுத்த கணம் ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''பக்கீரே! நீர் மிடிமையின் சின்னமாக, பழைய உடையை அணிந்து கொண்டு, எவரும் புத்தாடை தரமாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறீர். இதுவே உலக ஆசையாகும். ஆனால் நானோ, செல்வச் சீமான்கள் அணியும் உடை அணிந்து கொண்டுள்ளேன். இது எவரிடமிருந்தும் எதிர்பார்க்காத நிலையாகும். இதுவே உண்மையான துறவு ஆகும்'' என்று கூறினார்கள்.

தம் உள்ளின் உள்ளே எண்ணியதை, உள்ளங்கை நெல்லிக் கனி போல் ஆண்டகை அவர்கள் விளங்கிக் கொண்டதைக் கண்ட அந்த பக்கீர், அலறித் துடித்துத் தம் பிழை பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆண்டகை அவர்களை வேண்டிக் கொண்டார். அவ்விதமே செய்த ஆண்டகை அவர்கள், அவருக்காக இறைவனிடம் இறைஞ்சிய தோடல்லாது, அவருக்கு நல்ல உடை அணிவிக்கச் செய்து, அவர் ஒழுங்கான கல்வியைக் கற்க இப்னுத் தஹான் (ரஹ்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

ஆண்டகை அவர்களின் இந்தத் தத்துவத்தின் அடிப்படையில், தொழில் செய்வதற்கு ஷாதலியா தரீக்காவின் ஷைகுமார்கள் பெரிதும் உற்சாகமளித்தார்கள். நன்கு தொழில் செய்து வந்த ஒருவர், தமக்கு நாளொன்றுக்கு இரண்டு ரொட்டிகள் இருந்தால் போதும். வீணே உழைக்க வேண்டிய தேவை இல்லை என்று எண்ணினார். அடுத்த கணம் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவர் ஏதோ குற்றமிழைத்ததாகக் கூறி, அரசு அதிகாரிகள் அவரைச் சிறை செய்தனர். சிறையில் அவருக்கு நாளொன் றுக்கு இரண்டே இரண்டு ரொட்டிகள் தாம் கொடுக்கப்பட்டன. அவை பற்றாததால், அவர் பெரிதும் வருந்தினார். எல்லாம் தம் தவறான எண்ணத் தால் நிகழ்ந்தது என்று எண்ணி, அவர் இறைவனிடம் தம் பவம் பொறுத் தருளுமாறு இறைஞ்சினார். இறைவனும் அவரின் இறைஞ்சுதலை ஏற்று, அவருக்கு விடுதலை வழங்கினான். அதன்பின் அவர் தம் தொழிலில் ஈடுபட்டு, நன்முறையில் பொருளீட்டி, நன்முறையில் அவற்றை நுகர்ந்து வாழ்ந்து வந்தார். இதுஅவர்கள் கூறும் ஓர் அறிவுக்கதை.

அவர்கள் கூறும் மற்றோர் அறிவுக்கதை இது:

தவமடம் ஒன்றில், யாதொரு வேலையும் செய்யாது ஒருவன் சோம்பேறியாய் இருந்து வந்தான். அவனிடம் அதற்கான காரணத்தை ஒரு பெரியார் வினவிய பொழுது, 'நான் கானகம் சென்றேன். அங்கு ஓரிடத்தில் குருட்டு ஆந்தை ஒன்று அமர்ந்திருந்தது. அது எவ்வாறு ஒவ்வொரு நாளும் உணவு பெறுகிறது என்று வியப்புடன் அங்கு சற்று நேரம் அமர்ந்திருந்தேன். அப்பொழுது கழுகு ஒன்று ஏதோ ஒன்றைத் தன் அலகிலே கௌவி வந்து, அங்கு வைத்துத் தின்று எஞ்சியதை அந்த ஆந்தையின் முன் போட்டு விட்டது. மோப்பத்தால் அதை உணர்ந்த அந்த ஆந்தை, அதனை அருந்திப் பசி தீர்த்தது. இதிலிருந்து குருட்டு ஆந்தைக்கு உணவளித்த இறைவன், எனக்கும் உணவளிப்பான் என்ற நம்பிக்கையும், வீணே அலட்டிக் கொள்ளாது வெறுமனே இருக்கிறேன்'' என்று பல்லை இளித்துக் கொண்டு அவன் பதிலளித்தான்.

அப்பொழுது அப்பெரியவர் அவனை நோக்கி, ''நீ ஏன் அந்தக் குருட்டு ஆந்தை போன்று பிறர் உண்டு எஞ்சிய எச்சிலைத் தின்ன வேண்டும்? ஆண்மகன் போன்று நீ ஏன் அந்தக் கழுகைப் பின்பற்றி உழைத்து அதிலிருந்து வரும் வருவாயை உண்ணக் கூடாது?'' என்று கடாவினார். அதிலிருந்து அறிவுத் தெளிவு பெற்ற அவன், தொழில் செய்யத் தொடங்கிவிட்டான்.

மேலும் இந்தத் தரீக்காவின் மூலவரும், ஏனையோரும், தம் சீடர்களுக்குக் கடமையான வணக்கங்களுக்கு மேற்பட்டு, அதிகமான வணக்க முறைகளை ஏற்படுத்தி, அவர்களைத் துன்புறச் செய்யவுமில்லை.

நாளொன்றுக்கு ஆயிரம் தடவை 'அல்லாஹ்' என்று திக்ரு செய்யுமாறும், நூறு தடவை இஸ்திஃபார் செய்யுமாறும் நூறு தடவை ஸலவாத்துச் சொல்லுமாறுமே அவர்கள் பணித்துச் சென்றுள்ளார்கள்.

இவ்வளவு எளிதாக ஆண்டகை அவர்களின் தரீக்கா அமைக்கப் பட்டதன் காரணமான, மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்து ஆண்டகை அவர்களிடம் தீட்சை பெற்றார்கள். தீட்சை பெற்ற தம்முடைய சீடர்கள் ஒவ்வொருவரையும், ஒரு நிமிடமும் தவறாது ஆண்டகை அவர்கள் கண்காணித்து வந்தார்கள். ''எவ்வாறு ஆமை கடலோரத்தில் முட்டை யிட்டு, அதனைத் தன் கண்களால் பார்த்துப் பொறிக்கச் செய்து வளர்க் குமோ, அதே போன்று நானும் என் சீடர்களை என் பார்வையால் பரிபாலித்து வளர்ப்பேன்'' என்று அவர்கள் ஒரு தடவை கூறினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் தம்முடைய சீடர்களுக்கு உரை நிகழ்த் திக் கொண்டிருக்கும் பொழுது, ''என்னுடைய சீடர்கள் எங்கிருந்தாலும், அவர்களை என்னுடைய கை காத்து நிற்கும்'' என்று கூறினார்கள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அபுல் அஜாயிரம் என்பவருக்கு இது பற்றி ஐயம் ஏற்பட்டது. விடிந்தெழுந்ததும், அவர் இதே ஐயத்துடன் கடலோரம் சென்று, பகற்பொழுதை அங்குக் கழித்துவிட்டு, மாலை நேரத் தொழுகையையும் அங்கேயே தொழுது விட்டுத் தலையைக் குனிந்த வண்ணம் இதே சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அப்பொழுது எவரோ ஒருவர் அவரை முதுகில் தட்டுவது போல் இருந்தது. பக்கீர்களில் ஒருவர் வேடிக்கையாக அவ்விதம் செய்கிறார் என்று எண்ணிக் கொண்டு வெறுமனே இருந்தார் அவர். மீண்டும் தொடர்ந்து தட்டப்படவே, திரும்பிப் பார்த்தார். அப்பொழுது அழகு வதனத்து ஆரணங்கு ஒருத்தி, அவரைத் தன் ஆசைக்கு இணங்குமாறு அழைத்தாள். அவர் எவ்வளவோ மறுத்துரைத்தும், அவள் கேட்க வில்லை. பின்னர் அவள் வன்முறையைப் பயன்படுத்தி, அவரைத் தன் மடிமீது தூக்கி வைத்துக் கொண்டாள். அவருக்கும் கொஞ்சம் சபலம் தட்டி விட்டது. அப்பொழுது ஒரு கை குறுக்கிட்டு, அவர்கள் இருவரையும் வெவ்வேறாகப் பிரித்து, வீசி எறிந்தது. அது எவருடைய கை என்று ஏறிட்டுப் பார்த்தார் அவர். அது தம் குருநாதர் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களின் கையாக இருந்தது. அங்கு அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களே தோற்றம் வழங்கி, ''அபுல் அஜாயிமே! இதுவென்ன விபரீதம்!!'' என்று கூறிவிட்டு மறைந்து விட்டார்கள்.

பின்னர் அபுல் அஜாயிம், தாம் தம் குருநாதர் கூறியதைப் பற்றி அறிவற்ற முறையில் ஐயமுற்றதற்காகத் தம்மையே தாம் நொந்து கொண்டு இல்லம் வந்து சேர்ந்தார். அவருடைய உடல் முழுவதும் வேதனையால் வருந்தியது.

அப்பொழுது ஆண்டகை அவர்களிடமிருந்து ஓர் ஆள் வந்து, அவரை அழைத்து வருமாறு ஆண்டகை அவர்கள் தம்மிடம் கூறியதாகச் சொன்னார். நாணத்துடன் அவர் ஆண்டகை அவர்களை அடைந்த பொழுது, ஆண்டகை அவர்கள், அவரிடம் கேட்ட முதற்கேள்வி, "அபுல் அஜாயிமே! நேற்று நான் கூறியது பற்றி ஐயுற்றீரே. இன்று நீர் பாவத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்த பொழுது, எவருடைய கை உம்மை வந்து காப்பாற்றியது, பார்த்தீரா?" என்று வினவினர். அபுல் அஜாயிமின் முகத்தில் அசடு வழிந்தது.

வேறொரு தடவை ஆண்டகை அவர்கள், தம்ஹூர் என்னும் நகருக்குச் சென்றிருந்த பொழுது, மாலை நேரத் தொழுகை தொழுத பின் தம் மாணவர் அபுல் அஜாயிமை அழைத்து, "நான் ஒரு கடிதம் தருகிறேன். அதனை இஸ்கந்திரிய்யாவிலிருக்கும் பக்ருத்தீன் இப்னுல் பாயிஜி இடத்தில் கொடுத்துவிட்டு வர வேண்டும். அதுவும் இப் பொழுதே புறப்பட வேண்டும்" என்று கூறினார்கள்.

தம்ஹூரிலிருந்து, இஸ்கந்தரியா, குதிரை வீரன் ஒருவனுக்கு ஒரு நாள் பயணத் தொலைவாக இருந்தது. எனவே மலைத்தார் அபுல் அஜாயிம். "நாளை வைகறையில் புறப்படுகின்றேனே" என்று நளின மாகக் கூறினார்.

"இல்லை; இல்லை. இப்பொழுதே நீர் இங்கிருந்து புறப்பட வேண்டும். கடிதத்தைக் கொடுத்துவிட்டு, அடுத்த கணமே நீர் அங்கிருந்து திரும்பி விட வேண்டும்" என்றார்கள் ஆண்டகை.

மறு வார்த்தையின்றி கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, தம் வாளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்ட அபுல் அஜாயிம், விரைவில் இஸ்கந்தரியா சேர்ந்து, அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து கொண் டிருந்தார். அப்பொழுது எவரோ தம்மைப் பின் தொடர்ந்து வருவது போன்று அவருக்குத் தோன்றியது. கள்வர்களாயிருக்கலா மென்று எண்ணிய அவர் தம் வாளை உருவிக் கையில் பிடித்த வண்ணம் வழியைக் கடந்து மறுநாள் பொழுதடையும் முன் தம்ஹூர் வந்து சேர்ந்தார். அவரை, ஆண்டகை அவர்கள் புன்முறுவலுடன் வரவேற்று, "அபுல் அஜாயிமே! உம்மைப் பின் தொடர்ந்து வந்தது கள்வர்களாயிருக் கலாமென்று எண்ணித் தற்காப்புக்காக வேண்டி, வாளை உருவிக் கொண்டு வந்தீர். ஆனால் அவர்களோ கள்வர்கள் அல்லர், வானவர்கள். நீர் இருங்கிருந்து புறப்பட்டு, மீண்டும் இங்கு வந்து சேரும் வரை உமக்குக் காவலாக இருக்க வேண்டுமென்று, அவர்களிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டே, நான் உம்மை இங்கிருந்து அனுப்பி வைத்தேன்" என்று கூறினார்கள்.

ஆண்டகை அவர்களுக்கும், அவர்களின் தலைமைச் சீடர் அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களுக்கும், தொடர்பு ஏற்பட்ட விதமே ஓர் அற்புதமாகும். அதனையே அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களே இதோ கூறுகின்றார்கள்:

''நான் என்னுடைய பிறந்தகமாகிய முர்ஸீயை விட்டுக் கிளம்பி, தூனிஸ் நகருக்கு வந்த பொழுது, ஒருவர் என்னிடம், 'நான் நாளை அபுல் ஹஸன் ஷாதலி அவர்களைச் சந்திக்கச் செல்கிறேன். நீரும் வருகிறீரா?' என்று என்னிடம் கேட்டார். 'நான் இன்றிரவு அது பற்றி இஸ்திகாராத் தொழுகை தொழுது, அவனுடைய உத்திரவு பெற்று வருகிறேன்' என்று கூறி, அன்றிரவு இஸ்திகாராத் தொழுகை தொழுது, இறைஞ்சி விட்டுப் படுத்துறங்கினேன். அப்பொழுது ஒரு கனவு கண்டேன். நான் மலைமீது ஏறிச் செல்கிறேன். மலையின் உச்சியில் பச்சைத் தொப்பி அணிந்த ஒருவர் வீற்றிருக்கிறார். அவரின் இருமருங்கிலும் இருவர் வீற்றிருக்கின்றனர். அப்பொழுது பச்சைத் தொப்பி அணிந்தவர் என்னை நோக்கி, 'குத்புஸ்ஸ மானைக் கண்டு கொண்டீரா?' என்று வினவுகிறார். இத்துடன் கனவு கலைந்தது.

''இது இறைவனிடமிருந்து எனக்குச் சூசகமாகக் கிடைத்த அனுமதி என்று விளங்கிக் கொண்ட நான், அடுத்த நாள் அந்த நண்பருடன் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களைக் காணச் சென்றேன். என்ன வியப்பு! நான் கனவில் கண்ட அதே மனிதராக அவர்கள் இருந்தனர். என்னைப் பார்த்ததும், புன்முறுவல் பூத்த முகத்துடன், கனவில்'கண்ட குத்புஸ்ஸ மானை நேரில் கண்டு கொண்டீரா?' என்று வினவினார்கள். 'ஆம்' என்று நான் மறுமொழி பகர்ந்தேன். அதன்பின் அவர்கள், என் பெயரையும் வம்சத்தையும் பற்றி வினவினார்கள். பதில் கூறினேன். அடுத்து, 'உமக்கு வயது என்ன இருக்கும்?' என்று வினவினார்கள். 'முப்பது இருக்கும்' என்று சற்று ஐயத்துடன் கூறினேன். அப்பொழுது அவர்கள், 'உமக்கு நாற்பது வயது ஆகும் பொழுது, நீர் சித்தீக்கீன்களுடைய படித்தரத்தை எய்தப் பெறுவீர். நீரே என்னைப் பின்பற்றியவர்களில் மாண்புற்று விளங்குவீர். உம்மை நான் பத்து ஆண்டுகளாக எதிர்பார்த்துக் காத்திருந்தேன்' என்று கூறினர்.

''இதன்பின் ஆண்டகை அவர்களின் ஊழியத்தில் நான் இருந்தேன். அப்பொழுது அவர்கள் எனக்குக் கடுமையான ஆன்மீகப் பயிற்சிகள் அளித்தார்கள். பல சோதனைகளுக்கும் என்னை ஆளாக்கினார்கள். நான் அதன் காரணமாகத் துன்புற்று வருந்துவதைக் கண்ட அவர்கள், ஒரு நாள் என்னை அழைத்து, ''அபுல் அப்பாஸே! இறைவன் ஆதம் (அலை) அவர் களைத் தம் திருக்கரங்களால் படைத்து விண்ணகத்தில் வாழச் செய்தான்.

பின்னர் அவர்களை மண்ணகம் இழியச் செய்தபொழுது அவர்களின் மாண்பினை இழியச் செய்யவில்லை. அதற்கு மாறாக, உயரச் செய்தான். விண்ணகத்தில் இறைவனை அறிந்து மட்டும் அவனை வணங்கிக் கொண்டிருந்த ஆதம்(அலை) அவர்கள் மண்ணகத்தில் அவனுடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு வணங்கத் தொடங்கினார்கள். அதன் காரணமாக அவர்களின் வணக்கம் நிறைவு பெற்றது. அதன் காரணமாக அவர்களும் மண்ணகத்தில் இறைவனின் கலீபா (பிரதிநிதி) ஆவதற்கான தகுதியைப் பெற்றார்கள். அது போன்று உமக்கும், வணக்கங்கள் முழுமை எய்தப் பெறின் நீரும் கலீபாப் பதவியைப் பெற அருகதை அடைந்து விடுவீர்'' என்று கூறினர்.

''மற்றொரு நாள் அவர்கள் என்னை அழைத்து, 'என்னுடைய மாணவராக நீர் இருக்க விரும்பின், எவரிடமும் எதனையும் கேட்கக் கூடாது!'' என்று கண்டிப்பான உத்தரவிட்டார்கள். இந்நிலையில் என்ன செய்வது? எவரிடமும் கேட்டு வாங்கினாலொழிய உணவுக்குத் வேறு வழியில்லை. எனவே பல நாட்கள் பட்டினி கிடந்தேன். எவராவது என் நிலையை அறிந்து, தாமாகவே தந்தால், அதனை வாங்கி உண்டு உயிர் வாழ்ந்து வந்தேன்.

''இதனை அறிந்த அவர்கள், 'எதனை எவர் தந்தாலும் வாங்கி அருந்தக் கூடாது!' என்று ஆணையிட்டார்கள். மனம் அதனை ஏற்றுக் கொண்டாலும், வயிறு என்ன ஏற்றுக் கொள்ளவா செய்யும்? அதனுடைய கிள்ளல் பொறுக்க இயலாது, துறைமுகத்திற்குச் சென்று, அங்குச் சிதறிக்கிடக்கும் கோதுமை மணிகளைப் பொறுக்கி வந்து வேக வைத்து உண்டு உயிர் வாழ்ந்து வந்தேன்.

ஒரு நாள், நான் வழக்கம் போல் துறைமுகத்தில் கோதுமைத் தானியங்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் பொழுது, அப்துல் காதிருந் நகாத் என்ற 'வலி' ஒருவரும், என்னைப் போன்று கோதுமைத் தானியங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அவர் என்னைக் கண்டதும், ''நான் இன்றிரவு உம்முடைய ஷைகு அபுல் ஹஸன் ஷாதலி அவர்களை, அவர்களின் 'மகாம்' தன்னில் கண்டேன்' என்று கூறினார். 'அவர்களின் 'மகாம்' யாது?' என்று நான் வினவினேன். 'அர்ஷ்' என்று பதில் கூறினார் அவர். அப்பொழுது நான் அவரை நோக்கி, 'தாங்கள் அவர்களைக் கண்டது, தங்களுடைய மகாமிலேயன்றி அவர்களுடைய மகாமில் அல்ல. தங்களைக் காண்பதற்காக அவர்கள் தங்களின் மகாமிலிருந்து இறங்கி வந்துள்ளார்கள்'' என்று கூறினேன்.

இதன்பின் நாங்கள் இருவரும் ஆண்டகை அவர்களைக் காண்பதற்காக அவர்களின் இருப்பிடம் சென்றோம். அப்பொழுது ஆண்டகை

அவர்கள் பேச்சினூடே, 'இன்றிரவு நான் அப்துல் காதிருந் நகாதியைக் கனவில் கண்டேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'தாங்கள் அர்ஷைச் சேர்ந்தவர்களா, குர்ஷியைச் சேர்ந்தவர்களா' என்று வினவினார். அதற்கு நான், 'அப்துல்காதிரே! இந்தப் பேச்சை விடும்! என்னுடைய இந்த உடல் மண்ணைச் சேர்ந்தது, நஃப்ஸ் விண்ணைச் சேர்ந்தது, இதயம் அர்ஷைச் சேர்ந்தது, ஆன்மா குர்ஷியைச் சேர்ந்தது ஸிர்ரு (இரகசியம்) இறைவனிடத்தில் எந்த 'மகாம்' என்பதின்றி இருக்கிறது. இதன் நடுவே செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன'' என்று சொன்னார்கள்.

''இத்தகு மாண்பு பெற்ற ஆண்டகை அவர்கள், என்னைப் பல சோதனைகளில் புடம்போட்டுப் பயிற்சியளித்த பின், என்னை என் தாயக மாகிய முர்ஸீக்குத் திரும்பி அங்குள்ள மக்களுக்கு ஆன்மீகப் பயிற்சியளிக் குமாறு பணித்தார்கள். அவ்விதமே செய்து வரும் நாளில், நான் கனவொன்று கண்டேன். அதில் ஒருவர் தோன்றி, என்னை ஹஜ்ஜுக்குப் போகுமாறு பணித்தார். விழித்தெழுந்த நான் வீட்டிலிருந்த பத்து பொற் காசுகளையும் எடுத்துக் கொண்டு, மிக்ஸம் என்னும் இடத்தில் தங்கி இருந்த என்னுடைய ஆசானிடம் அனுமதி பெறுவதற்காக, அங்கு சென்றேன். என்னைக் கண்டதும் அவர்கள், 'இவ்வாண்டு நீர் ஹஜ்ஜுக்குச் செல்லும்!' என்று கூறினார்கள். 'அதற்குத் தான் ஊரிலிருந்து புறப்பட்டு வந்தேன்' என்று நான் பதிலிறுத்தேன். 'சரி. அமரும்!' என்று அவர்கள் கூறினார்கள். அவ்வாறே நான் அமர்ந்திருந்தேன்.

''இச்சமயத்தில் ஒருவர் அங்கு வந்து, தாம் இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்ய நாடி ஊரிலிருந்து புறப்பட்டதாகவும், எனினும் தம் கையில் அதற்கான பணம் இல்லையென்றும் கூறினார். அப்பொழுது ஆண்டகை அவர்கள் என்னை நோக்கி, 'உம்மிடம் ஏதாவது பணம் இருக்கிறதா?' என்று வினவினார்கள். 'ஆம், பத்துப் பொற்காசுகள் இருக்கின்றன' என்று நான் விடையிறுத்தேன். 'அவற்றை அவரிடம் கொடும்!' என்று அவர்கள் கூறினார்கள். அவ்விதமே நான் செய்தேன்.

''பின்னர் அவர்கள் என்னை நோக்கி, 'நீர் இஸ்கந்தரிய்யா சென்று, இருபது மூட்டை கோதுமையைக் கடனுக்கு வாங்கி வாரும்!' என்று கூறினார்கள். அவ்விதமே நான் வாங்கிக் கொண்டு வந்த பொழுது, 'கோதுமை அனைத்தும் உழுத்துப் போயிருக்கிறது. எனவே, அவை எனக்கு வேண்டாம்! வாங்கியவரிடமே அவற்றைத் திருப்பிக் கொடுத்து விடும்!' என்று அவர்கள் கூறினார்கள். இந்நிலையில் என்ன செய்வ தென்றே எனக்கு விளங்கவில்லை. நல்லவேளையாக, மூன்று நாட்களா கியும் கடன் தந்தவரும் பணத்தைக் கேட்டு என்னிடம் வரவில்லை.

''நான்காவது நாள் ஒருவர் என்னைத் தேடிக் கொண்டு வந்தார். 'நீர் தாமா இஸ்கந்தரிய்யாவிலிருந்து கோதுமை வாங்க வந்தவர்?' என்று

என்னை வினவினார். 'ஆம்' என்று நான் பதிலிறுத்தேன். 'அந்த இருபது மூட்டைகளுக்கும் உமக்கு ஆயிரம் திர்ஹம் இலாபம் தருகிறேன். அவற்றை என்னிடம் ஒப்படைத்துவிடும்!' என்று கூறிப் பணத்தை எண்ணி என் முன் வைத்தார். அந்த ஆயிரம் திர்ஹத்திலும், எனக்கு இறைவன் பாக்கியத்தை வைத்தான். அதிலிருந்து நான் இன்று வரை செலவு செய்து வருகிறேன்.''

இவ்வாறு தம் மாணவரைப் புடம் போட்டுப் பசும் பொன்னாக்கிய பின், ''நாம் நீராகவும், நீர் நாமாகவும் இருப்பதற்காகவே, நாம் இவ்வாறெல்லாம் செய்தோம்'' என்று ஆண்டகை அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய வழிமுறையைப் பின்பற்றி, இல்லறத்தை நல்லறமாகச் செய்து, இனிதே வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஷர்ஃபுத்தீன், ஷிஹாபுத்தீன், அலீ என்ற மூன்று ஆண்மக்களும், வஜீஹா என்று அன்புடன் அழைக்கப்பட்ட இர்ரீஃபத்துல் கைர் என்ற பெண்மகளும் இருந்தனர்.

ஒருநாள் அலீ என்ற மகனை எவனோ ஒருவன் அழைத்துச் சென்று, அவரை மதுவருந்தச் செய்துவிட்டான். மயக்கமுற்ற நிலையில் தெருவில் நிற்கக் கண்ட ஆண்டகை அவர்களின் சீடர் அபுல் அஜாயிம், அவரை ஆண்டகை அவர்களின் இல்லம் அழைத்து வந்து அடித்தார். அலீ அழுதார். மகனுடைய செய்தியை அறிந்து, அன்னையும் கண்ணீர் சிந்தினார். அப்பொழுது ஆண்டகை அவர்கள் அங்கு வந்து விடவே, மகன் அழுவதைக் கண்டு, ''மகனே! ஏன் அழுகிறாய்? உன்னை யார் அடித்தார்?'' என்று வினவினார்கள். மகன் யாதொரு பதிலும் கூறவில்லை. அப்பொழுது அன்னை முன் வந்து, அபுல் அஜாயிம் அடித்ததாக மட்டும் கூறினார். வேறு ஒன்றும் கூறவில்லை. அது கேட்டு மன வருத்தத்துடன் ஆண்டகை அவர்கள் ஜாவியாவுக்குச் சென்றார்கள்.

அவர்களைப் பின் தொடர்ந்து அபுல் அஜாயிமும், ஜாவியாவுக்குச் சென்றார். அப்பொழுது ஆண்டகை அவர்கள், அபுல் அஜாயிமை நோக்கி, அவரை அடித்ததற்கான காரணத்தை வினவினர். அபுல் அஜாயிம் நடந்ததைக் கூறி, ''அவரை நான் அடித்தபொழுது, தம் அன்னையின் முன் தாணையைப் பற்றிப் பிடித்தார். அவர் தங்களுடைய மேலங்கியைப் பற்றி பிடித்து அபயம் தேடியிருந்த போதினும், நான் அவரை அடித்திருப்பேன்'' என்று கூறினார். அது கேட்டு ஆண்டகை அவர்களின் முகம் பேதலித்தது. எனினும் எதுவும் கூறாது வெறுமனே இருந்துவிட்டனர்.

சற்று நேரம் கழித்து அவர்கள், அபுல் அஜாயிமை அழைத்துவரச் செய்து, ''அபுல் அஜாயிமே! நான் ஜாவியாவுக்குள் நுழையும் பொழுது, இத்துடன் இப்பிள்ளையை ஒழித்துக்கட்டி விடுமாறு இறைவனிடம்

'துஆ' இறைஞ்ச எண்ணினேன். அப்பொழுது அசரீரி ஒன்று, 'நீர் ஏன் எம்முடைய 'வலி' விஷயத்தில் தலையிடுகிறீர்? அவருக்கு விதித்த படி நடந்தது. அவரை அவரின் போக்கில் விட்டுவிடும்!'' என்று முழங்கியது'' என மகிழ்ச்சி வதனத்துடன் கூறினர். இதன்பின் அலீ, காடேகிக் கடும் தவம் செய்து பெரும் 'வலி' யாகிப் பிரசித்தி பெற்று விளங்கினார்.

ஆண்டகை அவர்களின் மற்றொரு மகன் ஷிஹாபுத்தீன் பருவ மெய்திய பொழுது, அன்னை அவரை ஆண்டகை அவர்களிடம் அழைத்து வந்து, 'மகனுக்கு வயதாகி விட்டது. அவருக்கு அறிவுரை பகர்ந்து அல்லாஹ்வின் பாதையில் அவரை அடியெடுத்து வைத்து நடக்கச் செய்யுங்கள்!'' என்று கூறினர். ''நல்லது. அவ்விதமே செய்கிறேன்'' என்று கூறிய ஆண்டகை அவர்கள், மகனைச் சிறிது நேரம் பார்க்கிறதும், பின்னர் திரும்பிக் கொள்கிறதுமாகச் சிறிது நேரம் இருந்தனர். பின்னர் அவர்கள் தம் மகனை நோக்கி, ''எழும்! அல்லாஹ் உமக்கு நேர்வழி காட்டுவானாக!'' என்று கூறி அவருக்காக இறை வனிடம் இறைஞ்சி மன்றாடினர்.

இறைஞ்சி முடிந்ததும், அவர்களின் துணைவியார் அவர்களை நோக்கி, ''தாங்கள் தங்களின் மகனுக்கு எதுவும் அறிவுரை பகரவோ, எதனையும் கற்றுக் கொடுக்கவோ, அவருடன் எதுவும் பேசவோ செய்ய வில்லையே'' என்று கூறிக் குறைபட்டுக் கொண்டார்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், தம் துணைவியாரிடம், ''என் மகன் என் முன் வந்தமர்ந்த பொழுது, அவரை நான் உற்றுப்பார்த்தேன். அவருக்கு அறிவுரை பகர்வதற்கு ஒன்றுமில்லை. எனவே அவருக்கு அறிவுரை பகர நாணி 'துஆ' மட்டும் செய்தேன்'' என்று கூறினர்.

ஆண்டகை அவர்களின் அருமைத் திருமகள் இர்ரீஃபத்துல் கைர், ஹுர்ரத்துல் பாழிலா (மாண்புமிகு நாச்சியார்) என்றும் அழைக்கப் பட்டார். அவர் இரு கண்களும் பார்வையற்றவராக இருந்தார். எனினும், குர்ஆன் முழுவதையும் மனனமிட்ட ஹாஃபிளாகவும், அதனை ஏழுவித 'கிராஅத்' முறைகளிலும் இனிய குரலெடுத்து ஓதக் கூடிய 'காரீ' ஆகவும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு 'வலி'யாகவும் இருந்தார். திரைக்குள் இருந்து அவர் குர்ஆனைத் தேனினும் இனிய குரலில் ஓதுவதை மக்கள் செவிமடுத்து மகிழ்ந்து செல்வார்கள்.

ஒருநாள் அபுல் அஜாயிம், அப்பெண்மணியிடம், ''தங்களுக்குச் சூட்டப் பெற்ற பெயர் என்ன!'' என்று வினவினார். அதற்கு அம்மங்கை நல்லார், ''நான் இஸ்கந்தரிய்யாவில் பிறந்தேன். அப்பொழுது என் தந்தையார் காஹிராவில் இருந்தார்களாம். அவர்களுக்கு நான் பிறந்த செய்தி அறிவிக்கப்படும் முன்பே, அவர்களிடமிருந்து என் அன்னைக்கு

ஒரு மடல் வந்ததாம். அதில் நான் 'கல்வத்' தில் இறைவனளவில் முகம் வைத்தவனாக இருந்தேன். அப்பொழுது இறைவன் எனக்குப் பிள்ளை பிறந்துள்ள செய்தியை எடுத்துரைத்து, அதற்கு இர்ஃபத்துல் கைர் என்று பெயர் சூட்டுமாறு பணித்தான்' என்று குறிப்பிட்டிருந்தார்களாம். பின்னர் தந்தையார் இஸ்கந்திரிய்யாவுக்கு வந்தபொழுது, அன்னை என்னைக் கொண்டு சென்று, அவர்களின் மடியில் வைத்த பொழுது, என்னை முத்தமிட்டு, 'வஜீஹாவுக்கே சோபனம்' என்று வாழ்ந்துரை பகர்ந் தனராம்'' என்று பதிலிறுத்தார்கள். இறைவனின் முகத்தோடு தம் முகத்தை வைத்து 'கல்வத்' தில் இருந்த சமயம் அவர் பிறந்ததனால் 'முகம் வைத்தவர்' என்ற பொருள்படும் அப்பெயரால் ஆண்டகை அவர்கள் அவரை வாழ்த்தினார்கள். அதுவே பின்னர் அவரின் செல்லப் பெயராக ஆகிவிட்டது.

அவர் இறந்தபொழுது, ''ஹழ்ரத்து பாழிலா இறந்து விட்டார். அவரின் அடக்கச் சடங்கில் கலந்து கொள்ள வாருங்கள்! அவர் தம் வாணாளில் மூன்றே மூன்று முறை தான் வெளியில் வந்துள்ளார். (1) தம் அன்னையின் வயிற்றிலிருந்து பிறந்த பொழுது, (2) மணமுடித்துத் தம் கணவரின் இல்லம் சென்ற பொழுது, (3) இறந்து தம் அடக்கவிடத்திற்குச் செல்லும் இப்பொழுது'' என்று குரல் ஒலித்ததைப் பலர் செவியுற்றார்கள்.

இத்தகு மாண்பாளர்களைப் பெற்ற மாண்பாளரான ஆண்டகை அவர்கள், உடல் மெலிந்தவர்களாகவும், உயரமானவர்களாகவும் இருந் தனர். கைகளும் விரல்களும் நீளமாயிருந்தன. தலையும் நீண்டிருந்தது. அவர்களின் உடல் மாந்தளிரின் நிறத்தை ஒத்திருந்தது. கன்னங்கள் ஒட்டியும், புயங்கள் மெலிந்தும் காணப்பட்டன. இத்தகு மெல்லிய உரு விற்குள்ளே மாபெரும் ஆன்மா ஆட்சி செய்து, மக்களைப் பல ஆண்டு களாக நேர்வழிப்படுத்தி நின்றது. ஆன்மீகக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைப்பதில், மிகவும் எச்சரிக்கையாய் இருந்த அவர்கள், அவற்றை வெளிப்படையாக எடுத்துரைத்ததனால், ஹல்லாஜ் (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்டதை மறக்கவே இல்லை. ''பிறர் பழிக்காத நிலையை நீங்கள் எய்தப் பெற விரும்பினால், இறைவனுடன் ஜம்உ (ஒன்று படுதல்) ஆவதை உள்ளத்தில் வைத்திருங்கள்! இறைவனை விட்டும் வேறுபட்டி ருப்பதையே (ஃபர்க்கையே) வெளியில் எடுத்துரையுங்கள்!'' என்று தம் சீடர்களுக்கு அவர்கள் அறிவுறுத்தினார்கள். இவ்வாறு அறிவுறுத்திய திலிருந்து ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் பற்றிய ஆண்டகை அவர்களின் கருத்துத் தெளிவாகிறது.

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் மீது ஆண்டகை அவர்களுக்குத் தனிப்பட்ட மதிப்பு இருந்து வந்தது. ''இறைவனிடம் இமாம் கஸ்ஸாலி

(ரஹ்) அவர்களை 'வஸீலா' வாகக் கொண்டு இறைஞ்சப்படும் இறைஞ்சுதல் நிறைவேறும்'' என்று அவர்கள் கூறினார்கள்.

தம் வாணாளில் பெரும்பாலான பகுதியை இஸ்கந்தரிய்யாவில் கழித்து வந்த அவர்களுக்கு அங்கு இறப்பெய்தி அடங்கப் பெற விருப்பமில்லை. ஒரு நாள் அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவனே! என்னைக் கிப்திகளின் நாட்டில் கொண்டு வந்து குடியேற்றி வைத்திருக்கிறாயே. நான் இறப்பெய்தின் அவர்களுக்கிடையிலா என்னை அடக்கம் செய்வாய்?'' என்று வினவினார்கள். அதற்கு இறைவன், ''அலீயே! நான் உம்மை அவ்விதம் செய்யமாட்டேன். எக்காலத்திலாயினும், எவரேனும், ஒருவரேனும் எனக்கு மாறுசெய்யவில்லையோ, அத்தகைய நன்மக்கள் வாழும் மண்ணில் உம்மை இறக்கச் செய்து, அடங்கப் பெறச் செய்வேன்'' என்று உறுதி மொழி பகர்ந்தான். அது கேட்டு ஆண்டகை அவர்கள் மகிழ்ந்தார்கள்.

பின்னர் அவர்களின் இறுதி அண்மிய பொழுது, அவர்கள் கனவொன்று கண்டார்கள். அக்கனவு பற்றிய விவரத்தை இதோ ஆண்டகை அவர்களே தம் மாணவர் அபுல் அஜாயிம் அவர்களிடம் கூறுகின்றார்கள்:

''ஓரிரவு நான் கனவொன்று கண்டேன். இதில் நான் இறந்துவிட்டது போன்றும் என்னை ஒரு கிணற்றருகில் அடக்கம் செய்யப்பட்டது போன்றும், அக்கிணற்றில் சிறிதளவு தண்ணீரே இருந்தது போன்றும், அதுவும் கைப்பாக இருந்தது போன்றும், கண்டேன். அக்கனவு கண்டதிலிருந்து, அது பற்றியே எனக்கு நினைவாக இருந்து வந்தது. அப்பொழுது, எனக்கு அக்கிணறு மதுரமான நீரால் நிரம்பிவிடும் என்று அறிவிக்கப்பட்டது.''

அந்த இடம் எது என்று அறியாது ஆண்டகை அவர்கள் திணறிக் கொண்டிருக்கும் பொழுது, இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! நாம் இருவரும் எப்பொழுது சந்திப்போம்?'' என்று வினவினார்கள். அதற்கு இறைவன். ''ஹுமைதராவில்'' என்று பதிலிறுத்தான். இதிலிருந்து தம் அடக்கவிடம் ஹுமைதரா என்பதை உய்த்துணர்ந்து கொண்ட ஆண்டகை அவர்கள், அங்குப் புறப்பட ஆயத்தமானார்கள்.

இதன்பின் நடந்த செய்தியை இதோ அபுல் அஜாயிம் கூறுகிறார்:

''ஒரு நாள் ஆண்டகை அவர்கள் என்னையும் தம்முடன் ஹுமைதரா புறப்பட வேண்டுமென்று கூறினார்கள். அப்பொழுது, நான் புதிதாக மணமுடித்த என் மனைவி நிறை கர்ப்பிணியாக இருந்தாள். அவளிடம் போய் நான் இச்செய்தியைக் கூறிய பொழுது, ''என்னை இச்சமயத்தில் தனியே விட்டுச் செல்லப் போகின்றீர்களா?'' என்று கூறிக் கதறியழுதாள்.

நான் இதனை ஆண்டகை அவர்களிடம் கூறிய பொழுது, அவர்கள் அவளை அழைத்து வருமாறு கூறினார்கள். அவ்விதமே நான் அவளை அழைத்து வந்ததும், ''அப்துத்தாயிமுடைய அன்னையே!'' என்று அவர்கள் அவளை விளித்து, ''நீர் உம் கணவர் அபுல் அஜாயிமை என்னுடன் வர அனுமதிக்க வேண்டும். இறைவன் உமக்குப் பேரருள் பாலிக்கப் போதுமானவன்'' என்று கூறினார்கள். அது கேட்ட அவள், ''ஷைகு அவர்களே! தங்களின் திருவாக்குக்கு மறுவாக்கு உண்டா? இறைவனருளால் அவரை இனிதே அழைத்துச் செல்லுங்கள்!'' என்று உளப்பூர்வமாகக் கூறினாள். ஆண்டகை அவர்கள் அவளுக்காக இறைவனிடம் இறைஞ்சினார்கள். அவர்களின் இறைஞ்சுதலின் காரணமாக, அவள் ஓர் ஆண்மகவை நலமாக ஈன்றெடுத்தாள். அதற்கு அப்துத் தாயிம் என்றே பெயர் சூட்டப் பெற்றது.

''இதன் பின் மண்வெட்டியும் கடப்பாறையும் எடுத்துக் கொள்ளுமாறு, ஆண்டகை அவர்கள் என்னிடம் கூறினார்கள். 'ஏன்?' என்று நான் வினவினேன். 'நம்மில் எவரேனும் இறந்துவிடின் 'கப்ர்' தோண்டிக் கொள்ளலாமல்லவா?'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். இதற்கு முன் எப்பயணத்தின் போதும், இவ்வாறு கூறாத அவர்கள், இப்பொழுது இவ்வாறு கூறுவது கண்டு, அங்கு அவர்கள் இறந்து அடங்கப் பெறப் போகின்றார்கள் என்பதை நாங்கள் உய்த்துணர்ந்து கொண்டு அவ்விதமே செய்தோம்.

இதன்பின் நடந்ததை ஆண்டகை அவர்களின் மகனார் ஷர்ஃபுத்தீன் (ரஹ்) அவர்கள் இதோ கூறுகின்றார்கள்:

''எங்களிடம் ஒரு பெண் ஊழியம் செய்து வந்தாள். அவளுக்கு ஒரு சிறுவன் இருந்தான். அவன் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தான். அவனுடைய தந்தை ஏற்கனவே இறந்து விட்டார். நாங்கள் ஹுமைதராவுக்குப் புறப்பட வேண்டுமென்று தந்தையார் ஆணையிட்டிருந்தார்கள். அவ்விதமே நாங்கள் புறப்பட்டோம். அந்தச் சிறுவனும், அவனுடைய அன்னையும் எங்களுடன் வந்தார்கள். அப்பொழுது அவன் அன்னை என் தந்தையாரிடம், 'ஷைகு அவர்களே! என் மகன் மீது தங்களின் கவனம் இருக்கட்டும்!' என்று கூறினாள். அதற்கு அவர்கள், 'இன்ஷா அல்லாஹ்! நம்முடைய கவனம் அவன் மீது ஹுமைதரா வரையிலும் இருக்கும்' என்று கூறினர். நாங்கள் காட்டின் வழியே வந்து கொண்டிருக்கும் பொழுது, அச்சிறுவன் இறந்துவிட்டான். அவனுடைய வெற்றுடலை ஹுமைதராவுக்கு எடுத்து வருமாறு தந்தையார் கூறினர். அவ்விதமே செய்தோம். ஹுமைதரா வந்ததும், அவனைக் குளிப்பாட்டி நல்லடக்கம் செய்ய முனைந்த பொழுது, தந்தையார் அவர்களே அவனுக்கு ஜனாஸா தொழுகை தொழுவித்தனர். இது பகலில் நிகழ்ந்தது.

''மாலையில் தந்தையார் தம்முடன் வந்த அனைவரையும் அழைத்து அருகில் வைத்துக் கொண்டு, அறவுரைகள் பல பகர்ந்தனர். 'ஹிஸ்புல் பஹ்ரை'ப் பற்றிப்பிடித்துக் கொள்ளுமாறும், எங்களுடைய மக்களுக்கும் அதனைக் கற்றுக் கொடுக்குமாறும், அதில் இஸ்முல் அஃலம் அடங்கியுள்ளதென்றும் கூறினர்.

''பின்னர் எங்களைப் போகச் சொல்லிவிட்டு, அபுல் அப்பாஸுல் முர்ஸீ அவர்களை மட்டும் தனியே அழைத்து, அவர்களிடம் பல்வேறு செய்திகளையும் பேசி, அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சி, பின்னர் எங்களை அழைத்து, 'நான் இறப்பெய்திய பின் நீங்கள் அபுல் அப்பாஸைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! அவரே என்னுடைய கலீஃபாவாக இருப்பார். வருங்காலத்தில் அவர் பெரிதும் மாண்புற்று விளங்குவார். இறைவன் பால் செல்லும் வாயிலாயிருப்பார்'' என்று அருள்வாய் மலர்ந்தனர்.''

பின்னர் நடந்ததை அபுல் அஜாயிம் கூறுகிறார்:

''அவர்கள் பொழுதுபட்டபின் என்னை அழைத்து, 'இன்ன கிணற்றிற்குப் போய், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு வாரும்!' எனப் பணித்தார்கள். 'அந்தக் கிணற்று நீர் உப்பு நீராயிற்றே. நம்மிடம் மதுரமான நீர் உள்ளதே' என்று நான் கூறினேன். அதற்கு அவர்கள் அந்தக் கிணற்று நீர் தான் வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறினார்கள். நான் அக்கிணற்றிற்குப் போய் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தேன். அதில் சிறிதை அருந்திவிட்டு, சிறிதை அப்பாத்திரத்திலேயே கொப்பளித்து, 'இதைக் கொண்டு போய் அந்தக் கிணற்றில் ஊற்றிவிடும்!' என்று கூறினார்கள். அவ்விதமே நான் செய்தேன். பின்னர் நான் அக்கிணற்றில் நீர் அள்ளி வாயில் வைத்துச் சுவைத்துப் பார்த்தேன். மதுரமாக இருந்தது.*

''அன்றிரவு முழுதும் அவர்கள் படுத்திருந்த அறையிலிருந்து 'இலாஹீ, இலாஹீ' என்ற திக்ரின் சப்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் ஸஹ்ரு நேரத்தில் அந்த சப்தம் ஓய்ந்தது. நாங்கள் உள்ளே நுழைந்து பார்த்தோம். தந்தையார் அவர்கள் இறைவனின் திருச்சமூகத்திற்கு ஏகி விட்டார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) இது நிகழ்ந்தது, ஹிஜ்ரி 656 ஷவ்வால் மாதம், பத்தாம் நாளிலாகும். அப்பொழுது அவர்களுக்கு வயது அறுபத்து மூன்று. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடி தழுவி அணுவத்தனை விஷயத்திலும் நடந்த

★ இன்றும் அந்தக் கிணற்று நீர் மதுரமாக உள்ளது. எக்காலத்திலும் அது வற்றியதில்லை.

ஆண்டகை அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களே போன்று, தம் தாயின் பையுலகிலிருந்து வந்த அறுபத்து மூன்றாவது ஆண்டில் இப் பொய்யுலகினை நீத்து, மெய்யுலகு புகுந்ததில் எவ்வித வியப்புமில்லை.

''ஆண்டகை அவர்களின் இறுதி உரைப்படி, அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களே ஆண்டகை அவர்களைக் குளிப்பாட்டி, கஃபனிட்டு, தொழ வைத்து நல்லடக்கம் செய்த பின், 'ஹஜ்'ஜுச் செய்ய மக்கா புறப்பட்டனர்.

''ஆண்டகை அவர்கள் இஸ்கந்தரிய்யாவிலிருந்து, ஹுமைதரா புறப்படுமுன், ''நான் இவ்வாண்டு பதலி ஹஜ்ஜுச் செய்யப் போகின் றேன்'' என்று கூறியிருந்தார்கள். நடுவழியில் அவர்கள் ஹுமைதராவில் இறக்க, அவர்களை அங்கு நல்லடக்கம் செய்துவிட்டு, அவர்களின் கலீபா அவர்களின் இறுதி ஆணைப்படி, 'ஹஜ்'ஜுச் செய்யச் சென்றது சிலருக்கு வியப்பையும் திகைப்பையும் வழங்கியது.

''இதுபற்றி அவர்கள் காஜி இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களிடம் ஐயத் தெளிவு வேண்டிய பொழுது, அவர்கள் அழுது கண்ணீர் வடித்து, ''ஷைகு அவர்கள் இவ்வாறு கூறியதன் மூலம், தாம் விரைவில் இறந்து விடப் போவதை மறைமுகமாக அறிவித்ததை நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லை. ஒருவர் ஹஜ்ஜை நாடி வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஹஜ்ஜுச் செய்யுமுன் இறந்துவிட்டால், அவருக்குப் பகரமாக ஆண்டாண்டு தோறும், உலக முடிவுநாள் வரை 'ஹஜ்'ஜுச் செய்யுமாறு ஒரு வானவரை இறைவன் பணிப்பான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். இதனையே ஆண்டகை அவர்கள், தாம் 'பதலி ஹஜ்' செய்யப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்'' என்று விளக்கம் பகர்ந்தார்கள்.

ஆண்டகை அவர்கள் நிர்யாணமடைந்த சில காலத்திற்குப் பின், அவர்களின் தலைமை மாணவர் அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்கள் கனவொன்று கண்டார்கள். அவர்கள் அதனை இதோ கூறுகின்றார்கள்:

''நான் விண்ணுலகில் (ஆலமுல் மலக்கூத்தில்) குதிரை மீது இவர்ந்து செல்வது போன்றுள்ளது. அப்பொழுது நான் அபுல் மத்யன் (ரஹ்) அவர்களை, அர்ஷின் தூண்களில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு நிற்கக் கண்டு, 'தாங்கள் கற்ற கல்வி யாது? தாங்கள் அடைந்திருக்கும் தகுதி என்ன?' என்று வினவினேன். அதற்கு அவர்கள், 'நான் கற்ற கல்வி எழு பத்து ஒன்று. நான் அடைந்திருக்கும் தகுதி நான்காவது கலீபா பதவி யாகும். அதாவது நான் ஏழு அப்தால்களுக்குத் தலைவன்' என்று விடையிறுத்தனர்.

''அப்பொழுது நான் அவர்களை நோக்கி, 'என்னுடைய ஆன்மீக ஆசான் ஷைகு அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களை இங்கு எங்கேனும் கண்டீர்களா?' என்று வினவினேன்.

''அதற்கு அவர்கள், 'ஃபாக்கனீ பி அர்பயீன இல்மா; ஹைஹாத்த ஹைஹாத்த பஹ்ருன் லா யுஹாத்' (அவர்கள் என்னை விட நாற்பது கல்விகளை அதிகமாகக் கற்றவர்கள். அவர்களின் தகுதி வெகு தொலைவில், வெகு தொலைவில் உள்ளது. அவர்கள் கரை காண இயலாப் பெரும் கடல்) என்று பதிலிறுத்தார்கள்.''

இதன்பின் மற்றொரு நாள் 'வலி' மார்களில் ஒருவர் கனவு கண்டார். விண்ணிலிருந்து அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்கள் இறங்குவ தாகவும், அவர்கள் அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்கள் தாங்க நிற்கிறார்கள் என்றும், ஒரே பேச்சாக உள்ளது. அப்பொழுது அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்கள் தங்களின் கால்கள் இரண்டையும் பூமியில் நன்கு பதித்து, அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களைத் தாங்குவதற்குத் தயாராக நிற்கிறது போல் தெரிகிறது. அப்பொழுது விண்ணிலிருந்து வெண்துகிலுடுத்திய ஒருவர், அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்கள் மீது இறங்கி, அவர்களின் தலைவழியாக அவர்களின் உடலில் அமைந்து ஒன்றாகிவிட்டார். முன்னர் ஆண்டகை அவர்கள் உயிரோடிருந்த பொழுது, தம் மாணவர் அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களை நோக்கி, 'நாம் உம்மைச் சேர்ந்தது, நாம் நீராகவும், நீர் நாமாகவும் ஆவதற்காகவே அன்றி வேறில்லை' என்று கூறியது உண்மையாகி விட்டது.

அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்கள் யாதொரு நூலும் எழுத வில்லை. ''என்னுடைய சீடர்களே என்னுடைய நூல்கள்'' என்று அவர்கள் கூறியதற்கேற்ப, அவர்களின் சீடர்கள், அவர்களின் கருத்துக் களை எடுத்துரைக்கும் நூல்கள் போன்றே விளங்கினர்.

ஆண்டகை அவர்களுக்குப் பின் அவர்களின் ஆட்சி பீடத்தில் அமர்ந்த அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களும், தம் தரீக்காவில் சேர்ப வர்களை நோக்கி, ''நீங்கள் தொழில் செய்யுங்கள்! அதில் நேர்மையைக் கடைபிடியுங்கள்! நீங்கள் மரக்கால் பிடித்துத் தானியங்களை அளக்கும் பொழுது அந்த மரக்காலே உங்களுக்குத் தஸ்பீஹ்மணியாக அமையட்டும் தையல் தொழில் செய்பவர் தம் விரலால் ஊசியைப் பிடித்துத் தைக்கும் ஒவ்வொரு தடவையும், தஸ்பீஹ் செய்வதைத் தம்முடைய வழக்கமாக ஆக்கிக் கொள்ளட்டும்!'' என்று அருளுரை பகர்ந்தர்கள்.

தம் ஆன்மீக ஆசானின் வழியொழுகி, ஆன்மீக உச்சத்தை எய்தப் பெற்ற அவர்கள், ''ஒரு கணமேனும் என்னை விட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மறைக்கப்பட்டாலும், என்னை விட்டு ஃபிர்தௌஸ் என்னும் சுவனம் மறைக்கப்பட்டாலும், ஓராண்டேனும் நான் துல்ஹஜ் பிறை ஒன்பதில் அரபாத் வெளியில் சற்று நேரம் தங்குவதில் தடையேற் பட்டாலும், நான் என்னை முஸ்லிம் என்று கூறிக் கொள்ளமாட்டேன்.'' என்று கூறினார்கள்.

அவர்களின் மாண்பினைச் சோதித்தறிய விரும்பிய ஒருவர், ஐயத்திற்குரிய உணவை அவர்களின் முன் கொண்டு வந்து வைத்து, உண்ணுமாறு வேண்டிக் கொண்ட பொழுது, அதனை உண்ண அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதற்குக் காரணம் வினவப்பட்ட பொழுது, ''ஹாரீஸ் மஹாஸிபி (ரஹ்) அவர்களின் முன் ஐயத்திற்குரிய பொருளைக் கொண்டு போய் வைப்பின், அவர்களின் கையிலுள்ள ஒரு நரம்பு அதனை எடுக்கவிடாது துடிக்குமாம். அதே போன்று, என்முன் ஏதேனும் ஐயத்திற்குரிய பொருளைக் கொண்டு வந்து வைப்பின், என் கையிலுள்ள ஒரு நரம்பல்ல, அறுபது நரம்புகள் அதனை எடுக்க விடாது துடிக்கின்றன'' என்று பதிலிறுத்தார்கள்.

'கீமியா' என்னும் இரசவாதக் கலையில், வல்லுநரான ஒருவர் அவர்களை அணுகி, ''தங்களுக்கு நான் 'கீமியா'க் கலையைக் கற்றுத் தருகிறேன். அதைக் கொண்டு தாங்கள், தங்களுக்கும் தங்களுடைய சீடர்களுக்கும் போதுமான தங்கத்தைச் செய்து, செலவு செய்து சுகமாக வாழலாம்'' என்று கூறிய பொழுது, ''நான் ஒரு குழுவினரிடம் நட்புச் செய்தேன். அவர்கள் ஒரு மரத்தைப் பார்த்து, 'பொன்னாலான பழங் களைப் பொழி!' என்று பணித்தால், அது அடுத்தகணம் அவற்றைப் பொழியத் தொடங்கிவிடும். இத்தகு பேற்றினைப் பெற்ற எனக்கு, உம் முடைய 'கீமியா'வும், எதற்கு? 'சீமியா'வும் எதற்கு?'' என்று வெகுண்டுரைத்தார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ்வின் மீது ஆணையாக மஃரிபு, மஷ்ரிகு, இராக், மிஸ்ர், ஷாம், ரூம் ஆகிய நாடுகளில் வாழும் மார்க்க விற்பன்னர்கள், இந்தத் தாடியின் கீழ் அடங்கிக் கிடக்கும் ஆன்மீக இரகசியங்களைப் பற்றி அறியவரின், அவர்கள் காலால் அல்ல, முகங் களால் என்னை நோக்கித் தவழ்ந்து வருவார்கள்'' என்று தம் தாடியைச் சுட்டிக் காட்டிக் கூறினார்கள்.

மேலும் அவர்கள், ''வலிமார்களும் அப்தால்களும் காபுமலையைச் சுற்றித் திரிவதெல்லாம் என் போன்ற ஒருவரைக் கண்டு கொள்வ தற்காகவே'' என்றும் எடுத்துரைத்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் உமர் (ரலி) அவர்களைக் கனவில் கண்டு, ''ஒருவன் உலகத்தை உவந்தான் என்பதற்கான அடையாளம் என்ன?'' என்று வினவினார்கள். அதற்கு உமர்(ரலி) அவர்கள், ''இகழை வெறுப்பதும் புகழை விரும்புவதுமாகும்'' என்று பதிலிறுத்தார்கள்.

அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 686 ஆம் ஆண்டில் நிர்யாணம் அடைந்த பின், அவர்களின் இடத்தில், அவர்களின் மாணவர் அர்ஷின் மாணிக்கம் என்று பொருள்படும் யாக்கூத்தில் அர்ஷி (ரஹ்) அவர்கள் அமர்ந்து ஆன்மீகச் செங்கோல் செலுத்தினார்கள்.

அவர்கள் தம் ஆசான் அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களின் அருமைத் திருமகளையே மண முடித்து வாழ்ந்து வந்தார்கள். தம் ஆசானுக்குக் கொடுக்கக் கூடிய மரியாதையைத் தம் ஆசானின் மகளுக்கும் அவர்கள் கொடுத்தார்கள். அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, 'வலி' மார்கள் தம்மைக் காணவரினும் பேச்சை முடித்து விட்டுத்தான், அந்த 'வலி' மார்களிடம் அவர்கள் வருவார்கள். அப் பொழுது அவர்கள், ''என் ஆசானின் மகளுடன் பேசிக் கொண்டிருந்தேன். அதனால் தான் வரத் தாமதமாகி விட்டது. பொறுத்துக் கொள்ளுங்கள்!'' என்று பணிவோடு கூறுவார்கள்.

அம்மங்கை நல்லாரின் வேண்டுகோளின் மீது, அவரை மணமுடித்த நாளிலிருந்து அவர் இறக்கும் வரை - பதின்மூன்று ஆண்டுகள் அவருடன் உடலுறவு கொள்ளாமலேயே வாழ்ந்து வந்தார்கள்.

ஹிஜ்ரி 732 ஆம் ஆண்டு அவர்கள் இறக்க, அவர்களின் பீடத்தில் ஒருவர் பின் மற்றொருவராக இருவர் அமர்ந்து, ஆன்மீக ஆட்சி செய்தபின் ஐந்தாவது கலீபாவாக ஷம்சுத்தீன் முஹம்மதுல் ஹனஃபிய்யிஷ் ஷாதலி (ரஹ்) அவர்கள் ஆட்சி செலுத்தத் தொடங்கினர்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய அவர்களைப் பற்றி, இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்கள் ஏற்கனவே, ''என்னுடைய ஐந்தாவது கலீபாவாக முஹம்மதுல் ஹனஃபிய்யி என்பவர் எகிப்தில் தோன்றி, என்னுடைய ஷாதலிய்யா வீட்டைத் திறப்பார்; மிக உயர்ந்த படித்தரத்தை எய்தி நிற்பார், என்று முன்னறிவிப்புச் செய்ததற்கிணங்க அவர்கள் சிறந்து விளங்கினார்கள்.

அவர்கள் சிறுவராயிருக்கும் பொழுது, அவர்களை ஷைகு அஸன் அல் கப்பாஸ் (ரலி) அவர்கள் காணுந்தொறும், ''இச்சிறுவர் எதிர் காலத்தில் எகிப்தில் மிகவும் சிறப்புற்று விளங்குவார்'' என்று கூறுவார்கள்.

இளமையில் திருக்குர்ஆனை மனனம் செய்து முடித்ததும், இமாம் இப்னு ஹஜர் மக்கீ (ரஹ்) அவர்களுடன் சேர்ந்து, மார்க்க சட்ட திட்டங்களை ஓதி முடித்த அவர்கள், ஒரு புத்தகக்கடை வைத்து வாணிபம் செய்து வந்தார்கள். அப்பொழுது தெருவிலே சென்ற பக்கீர் ஒருவர், ''முஹம்மதுல் ஹனஃபிய்யே! இறைவன் உம்மை உலக விவகாரங்களுக்காகப் படைக்கவில்லை'' என்று உரத்த சப்தமிட்டுக் கூறிச் சென்றார்.

இதனைச் செவியுற்றதும் முஹம்மதுல் ஹனஃபிய்யி (ரஹ்) அவர்களின் மூளை சுழலத் தொடங்கியது. ''ஆம் இவர் கூறியதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. நான் இத்தனை ஆண்டுகளாகப் பாடுபட்டு குர்ஆனை மனனமாக்கியதும், மார்க்க சட்டதிட்ட நூல்களைப் பயின்றதும், இந்தப் புத்தகக் கடையை வைத்து வயிறு வளர்ப்பதற்கா என்ன? இல்லை; இல்லை. ஒரு போதும் அவ்விதம் இருக்காது. இறைவன் என்னை மாபெரும் அலுவலை ஆற்றுவதற்காகவே படைத்துள்ளான்'' என்று அவர்கள் எண்ணினார்கள்.

இதன்பின் என்ன? புத்தகக் கடையை மூடி விட்டு, தனித்து தியானத்தில் இருந்தார்கள். ஒரு நாளா, இரண்டு நாட்களா? ஏழு ஆண்டுகள், இந்த ஏழு ஆண்டுகளுக்குள் மூன்று தடவை, ''முஹம்மதுல் ஹனஃபிய்யே! வெளியே வந்து மக்களுக்குத் தொண்டாற்றுவீராக!'' என்று உருத்தோற்றமின்றி சப்தம் முழங்கியது. முதல் இரண்டு தடவையும் அவர்கள் அசட்டையாக இருந்து விட்டார்கள். மூன்றாவது தடவை அந்த அசரீரி சிறிது உரத்த குரலுடன் முழங்கிய பொழுது, அவர்கள் தாம் 'கல்வத்' இருந்த இடத்திலிருந்தும் கிளம்பி வெளியே வந்தார்கள்.

வெளியே வந்த அவர்கள், ஷாதலிய்யா தரீக்காவின் மூன்றாம் கலீபா ஷிஹாபுத்தீனுல் மைலஹூ (ரஹ்) அவர்களின் பேரரும், கலீபாவுமான நாஸிருத்தீன் இப்னு மைலஹூ (ரஹ்) அவர்களை அணுகி, அவர்களின் கரம் பற்றி தீட்சை பெற்றார்கள்.

இதன்பின் அசரீரி மூலம் அறிவுறுத்தப்பட்ட வண்ணம், மக்கள் பணியே இறைவன் பணியெனக் கொண்டு மக்களுக்கு அறிவுரை பகரத் தொடங்கினார்கள். அவர்களின் அறிவுரையைக் கேட்க மக்கள் திரள் திரளாக வந்தனர். அதன் காரணமாக 'ஜாவியா' வே மக்கள் வெள்ளத்தால் நிறைந்து வழிந்தது.

இந்தச் சமயத்தில் ஒரு செல்வர் வீட்டில் பெரும் விருந்து நடந்தது. அதற்கு சையிது அலீ இப்னு வபா ஷாதலி (ரஹ்) அவர்களும், ஏனைய ஷைகுமார்களும், தம் சீடர்களுடன் வந்திருந்தார்கள். ஆனால், அதற்கு

முஹம்மது ஹனஃபிய்யி (ரஹ்) அவர்கள் வராதது ஒரு பெரும் குறையாகத் தோன்றியது. இதனை அனைவரும் உணர்ந்தனர். எனவே அவர்கள் விருந்தளிப்பவரை அழைத்துத் தம் மனக்குறையை எடுத்துரைத்து முஹம்மதுல் ஹனஃபிய்யி (ரஹ்) அவர்களை அழைத்து வருமாறு வேண்டிக் கொண்டார்கள். அவ்வாறே அவரும் சென்றார்.

தம்மை அழைத்துச் செல்ல வந்திருக்கும் செல்வரைக் கண்டதும், ''விருந்திற்கு ஷைகுமார்கள் வந்துள்ளார்களா?'' என்று வினவினார்கள் முஹம்மது ஹனஃபிய்யி (ரஹ்) அவர்கள்.

''ஆம்; வந்துள்ளார்கள்'' என்று பதில் கூறினார் விருந்தளிப்பவர்.

''யார், யார் வந்துள்ளார்கள்?'' இது ஆண்டகை அவர்களின் அடுத்த கேள்வி.

''சையிது அலீ இப்னு வபா (ரஹ்) அவர்கள் தம் சீடர்களுடன் வந்துள்ளார்கள். மேலும் இன்னார், இன்னாரெல்லாம் வந்துள்ளார்கள்'' என்று பதில் கூறினார் அவர்.

அது கேட்ட ஆண்டகை அவர்கள், ''அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. நான் அங்கு வருவதற்கு முன் அங்குள்ள தலையாய ஷைகு இடம் அனுமதி பெற்று வருவதே ஒழுக்க முறைமையாகும். அவ்விதம் அனுமதி பெறாது, ஒருவர் பெரியோர்கள் இருக்கும் இடத்தில் புகுந்தால் அவரின் பதவி சில பொழுது பறி போய்விடும். ஆதலின் அனுமதி பெற்றுவாரும்!'' என்று கூறினார்கள்.

இச்செய்தியை அவர் வந்து ஆங்கிருந்த, ஷைகுமார்களிடம் கூறியதும், அவர்களில் முதியவராயிருந்த சையிது அலீ இப்னு வபா (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்கள் அங்கு வர அனுமதி வழங்கினார்கள். அதன்படி அங்கு வந்த ஆண்டகை அவர்களை சையிது அலீ இப்னு வபா (ரஹ்) அவர்கள் எழுந்து நின்று வரவேற்றுத் தம் அருகே அமரச் செய்து இனிமையுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது சையிது அலீ இப்னு வபா (ரஹ்) அவர்கள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''ஒருவன் திருகைக் கல்லைச் சுற்றிவிட்டால், அது அவன் நாடிய வண்ணம் சுற்றிச் சுழன்று வருமல்லவா?'' என்று வினவினார்கள்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''மற்றொருவன் அதில் தம் கையை வைத்து அழுத்திக் கொண்டால், அது எவ்வாறு சுற்றிச் சுழலும்?'' என்று விடையிறுத்தார்கள்.

அவர்களின் இப்பதில் அம்முதியவரின் மூளையை ஒரு கணம் சுழலச் செய்தது. மறுகணம் அவர்கள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''முஹம்மதுல் ஹனஃபிய்யே! நான் என் அதிகாரங்களை உம்மிடம் ஒப்படைத்து விட்டேன்'' என்று கூறினார்கள். பின்னர் அவர்கள் சீடர்களின் பக்கம் திரும்பி, ''உங்களின் ஷைகு அல்லாஹ்வின் பால் மீளும் காலம் அண்மிவிட்டது'' என்று கூறினார்கள்.

இது நிகழ்ந்து சில நாட்களே ஆகியிருக்கும். ஓரிரவு ஆண்டகை அவர்கள், ''முஹம்மதுல் ஹனஃபிய்யே! அலீ இப்னு வஃபாவுக்கு அளிக்கப்பட்டிருந்ததைவிட, அதிகமானவற்றை நாம் உமக்கு எளிதாக்கித் தந்துள்ளோம்'' என்று அசரீரி முழங்கியதைச் செவியுற்றனர். உடனே ஆண்டகை அவர்கள் ஒரு பக்கீரை, அலீ இப்னு வஃபா (ரஹ்) அவர்களின் இல்லம் அனுப்பி, அவர்களின் நலம் விசாரித்து வருமாறு செய்த பொழுது, 'அவர்கள் இறந்து விட்டார்கள்' என்னும் செய்தியை அவர் கொண்டு வந்தார்.

இதன்பின் ஆண்டகை அவர்களின் மாண்பு நாளுக்கு நாள் அதிகப் பட்டுக் கொண்டு வந்தது. கெய்ரோவுக்குள் புகும் எந்த இறைநேசரும் ஆண்டகை அவர்களின் அனுமதி பெறாது உள்ளே நுழைவதில்லை. உள்ளே நுழைந்ததும், அவர்கள் முதலில் சந்திப்பது ஆண்டகை அவர்களையே.

இதற்கு மாறாக ஒரு 'வலி' ஆண்டகை அவர்களின் அனுமதியின்றி கெய்ரோவுக்குள் நுழைந்த பொழுது, அவரின் 'விலாயத்' பறிக்கப் பட்டது. பின்னர் அவர் வந்து ஆண்டகை அவர்களிடம் அழுது கெஞ்சி மன்னிப்புக் கேட்ட பொழுது, ஆண்டகை அவர்கள் அவர்மீது இரங்கி அதனை அவருக்கு மீட்டிக் கொடுத்தார்கள்.

இவ்வாறு கெய்ரோ நகரில் அமர்ந்து ஆண்டகை அவர்கள் ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வரும் பொழுது, அங்கு ஒரு பக்கீர் வந்து தம் கையை வானின் பக்கல் உயர்த்தி, பொற்காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் எடுத்து மக்களுக்குக் கொடுத்து வந்தார். இது ஆண்டகை அவர்களுக்குத் தெரியவந்ததும், அவர்கள் அவரை அழைத்துவரச் செய்து, ''பக்கீரே! உம்முடைய சித்தைக் கொண்டு எனக்கும் பொன், வெள்ளிக்காசுகளை எடுத்துத்தாரும்!'' என்று கூறினர். உடனே அவர் தம் கையை வானின் பக்கல் நீட்டினார். தம் கையில் வந்தவற்றை ஆண்டகை அவர்களிடம் கொடுத்தார். அவற்றை எண்ணிப் பார்த்தபொழுது, எண்பது பொற்காசுகள் இருந்தன. மீண்டும் எடுத்துத் தருமாறு ஆண்டகை அவர்கள் கூறினர். மீண்டும் அவர் அவ்வாறே செய்தார். ஆனால் இப்பொழுது முன்னை விடக் குறைவான காசுகளே வந்தன. மீண்டும் எடுத்துத் தருமாறு

ஆண்டகை அவர்கள் கூற, அவரும் அவ்வாறே செய்தார். ஆனால் இப்பொழுதோ இரண்டாவது தடவையைவிடக் குறைவான காசுகளே வந்தன. இதன்பின் நான்காவது தடவையும் தமக்குக் காசை எடுத்துத் தருமாறு ஆண்டகை அவர்கள் கூற, அவரும் கையை வானின் பக்கம் உயர்த்தினார். ஆனால் ஒரு காசும் அவரின் கையில் வரவில்லை. அப்பொழுது ஆண்டகை அவர்கள் அவரை நோக்கி, ''இறைவனின் கருவூலம் ஒரு போதும் வற்றி வரண்டு போகாதே. இது ஷைத்தானின் வேலையே அன்றி வேறில்லை'' என்று கூறி அங்கிருந்தும் அவரை விரட்டி அடித்தனர்.

ஆண்டகை அவர்களின் மாண்பினை அறியாது, பிஸ்தாமியை சேர்ந்த இப்னுத் தமார் என்ற 'வலி' ஆண்டகை அவர்களுடன் தவறாக நடந்து கொண்டார். அது கண்டு பெரிதும் வெகுண்ட ஆண்டகை அவர்கள், ''நாம் இப்னுத் தமாரைக் கிழித்துவிட்டோம். அவருக்கு ஆதரவான ஆயிரம் பிஸ்தாமி 'வலி' மார்கள் வந்தபோதினும் சரியே'' என்று கூறினார்கள். இதன்பின் என்ன? துன்பங்கள் ஒன்றின் பின் ஒன்றாக இப்னுத் தமாரைப் பீடித்தன. அவருடைய வீட்டையும் அரசு கைப்பற்றி, அவரை நடுத்தெருவில் நாதியற்ற நிலையில் விட்டு விட்டது.

ஆண்டகை அவர்களின் முனிவிற்கு ஆளானவர்கள், 'விலாயத்' தை இழந்தது போன்று, அவர்களின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் 'விலாயத்' தைப் பெற்றார்கள். உண்மையில் கெய்ரோவிலிருந்த அவர்களின் 'ஜாவியா', 'வலி' மார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை போன்றே இருந்தது. ஒரு தடவை அவர்கள் இதைப் பற்றி ஷைகு தல்ஹா (ரஹ்) அவர்களிடம் குறிப்பிடும் பொழுது, ''இந்த ஜாவியாவிலிருந்து மக்களை அல்லாஹ்வின் பால் அழைக்க, நானூறு 'வலி' மார்கள் வெளிப்பட்டுச் சென்றுள்ளார்கள். என்னுடை தோழர்கள், மஃரிபு, ரூம், ஷாம்,எமன் ஆகிய நாடுகளில் ஏராளமாக இருக்கின்றனர். அவர்கள் மலைகளிலும், பொதும்புகளிலும், காடுகளிலும், பாலைகளிலும் வாழ்ந்து கொண்டுள்ளனர்.'' என்று கூறினார்கள்.

ஆன்மீகப் பேரரசராக, குத்புல் அக்தாபாக இருந்த அவர்களுக்குப் பேரரசர்களும், சிற்றரசர்களும், அமைச்சர்களும் பெரிதும் மரியாதை செலுத்தினர். அவர்கள், ஆண்டகை அவர்களைக் காணச் செல்லின், அவர்களின் முன் சம்மணம் போட்டு அமராது, கால் மடித்து அமர்ந்து வலம், இடம் திரும்பிப் பாராது தலை கவிழ்ந்து மரியாதையுடன் இருப்பர். அவர்களின் கரங்களை முத்தமிடுவதைப் பெறுதற்கரிய பெரும் பேறாகக் கருதுவர். அவர்களுக்குத் தாகம் ஏற்பட்டுத் தண்ணீர் அருந்த கூஜாவை எடுத்துத் தருமாறு அவர்கள் தம் ஊழியரிடம் கூறின் உடனே

அங்கு வீற்றிருக்கும் அரசரும், அமைச்சரும் எழுந்தோடிப் போய் அதனை எடுத்து வந்து கொடுப்பர். பின்னர் அமருமாறு அவர்களை ஆண்டகை அவர்கள் கூறிய பின்னரே அவர்கள் கீழே அமர்வர்.

ஒரு தடவை ஜாவியாவிலிருந்த நீர்த்தேக்கத்தில் (ஹௌளலில்) நீர் குறைந்துவிட்டது. அப்பொழுது ஆண்டகை அவர்கள் தம் அருகே வீற்றிருந்த இரண்டு அமீர்களை நோக்கி, கிணற்றிலிருந்து நீர்த்தேக்கத் திற்குத் தண்ணீர் இறைக்குமாறு கூறினர். உடனே அவர்கள் தம் உடுப்பு களைக் கழற்றி எறிந்து விட்டு, கச்சை கட்டிக் கொண்டு தண்ணீர் இறைக்கத் தொடங்கிவிட்டார்கள். நீர்த்தேக்கம் தண்ணீரால் நிரம்பி வழியும் வரை அவர்கள் ஓய்வு கொள்ளவில்லை.

ஆண்டகை அவர்கள் வாகனத்தில் ஏறி வெளியில் புறப்பட்டார் களானால், 'திக்ரு' முழங்கிய வண்ணம் செல்வார்கள். அவர்களைச் சூழ மக்களும் 'திக்ரு' முழங்கிய வண்ணம் சென்று கொண்டிருப்பார்கள். 'திக்ரு' முழக்கம் வீட்டிலுள்ளவர்களையும், பள்ளியில் உள்ளவர்களையும் வெளியே இழுத்து நிற்கும். அவர்களுக்கெல்லாம் ஆண்டகை அவர்கள் 'துஆ' ச் செய்வார்கள். இவ்வாறு 'திக்ரு' செய்து கொண்டே 'துஆ'ச் செய்து கொண்டு செல்வது இம்மையிலும், மறுமையிலும் தம்முடைய அடையாளமாக இருக்கும் என்று ஆண்டகை அவர்கள் கூறுவார்கள். அப்பொழுது அவர்களைக் காணும் அரசர்களும், அமீர்களும், காஜிகளும் அவர்கள் பின்னே மரியாதையுடன் செல்வர்.

ஒரு தடவை சுல்தான் முஜயத், ஆண்டகை அவர்களைக் காண்பதற்காக ஜாவியா வந்தபொழுது, ஆண்டகை அவர்கள் ஜாவியாவின் மேல் மாடியில் தியானத்தில் வீறறிருந்தனர். அரசர் வந்துள்ள செய்தியை அபுல் அப்பாஸுல் ஸர்ஸீ (ரஹ்) அவர்கள் ஓடோடிச் சென்று ஆண்டகை அவர்களிடம் கூறிய பொழுது, "நாம் இச்சமயத்தில் எவரையும் வரவேற்று உரையாடுவதில்லை என்று அவரிடம் கூறிவிடும்!" என்று சொன்னார்கள். இச்செய்தியை அபுல் அப்பாஸுல் ஸர்ஸீ (ரஹ்) அவர்கள் சுல்தானிடம் வந்து கூறிய பொழுது, அவர் மறுவார்த்தையின்றி அவ் விடத்தைவிட்டு அகன்றார். அவர் ஆண்டகை அவர்கள் மீது அணுவத்தனையும் வருத்தம் கொள்ளவில்லை.

ஜக்மிஹ் என்னும் அரசர், பொதுவாக பக்கீர்கள் மீதும், குறிப்பாக ஆண்டகை அவர்கள் மீதும் தவறான கருத்துக் கொண்டவராக இருந்தார். இதனை ஆண்டகை அவர்களும் உணர்வார்கள். எனினும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. ஒரு சமயம் சிலருக்காக, அவரிடம் பரிந்துரைக்க வேண்டிய நிலை ஆண்டகை அவர்களுக்கு ஏற்பட்டது. அவ் விதமே அவர்கள் செய்தார்கள். அடுத்தகணமே அவர் அவற்றை

நிறைவேற்றிக் கொடுத்தார். அப்பொழுது அவர் தம் அமைச்சர், பெருமக்களை நோக்கி, ''இவருக்கு வழிப்பட மாட்டேன். இவரின் பரிந்துரை எதனையும் நிறைவேற்றிக் கொடுக்கமாட்டேன் என்று இதுகாறும் கூறிவந்த நான் இவரின் பரிந்துரைகள் கிடைத்த அடுத்த கணமே அவற்றை நிறைவேற்றிக் கொடுத்தது, உங்களுக்கு வியப்பளித்திருக்கலாம். ஆனால் உங்களை விட எனக்கே அது பெரும்வியப்பை அளிக்கிறது. இதென்ன புதுமை!'' என்று கூறினார். ஆம்; இது ஆண்டகை அவர்கள் ஆற்றிய புதுமையாகவே இருந்தது.

சுல்தான் பர்ஜ் இப்னு பர்க்கூத் என்பவர், சிலரை அம்பால் எய்து கொல்லுமாறு ஆணையிட்ட பொழுது அவ்விதம் செய்ய வேண்டா மென்று ஆண்டகை அவர்கள் எதிர் முழக்கம் செய்தார்கள். அது கேட்டு சினம் கொண்ட அரசர், ''அரசு எமக்குரியதா? உமக்குரியதா?'' என்று வினவினார். அதற்கு ஆண்டகை அவர்கள் அமைதியாக, ''எமக்கும் உரிய தல்ல, உமக்கும் உரியதல்ல. வம்பர்களை அடக்கியாளும் அல்லாஹ் வுக்கே உரியதாகும்'' எனப் பதிலிறுத்தார்கள். அரசர் மறுவார்த்தை பேசவில்லை.

இதன்பின் அரசருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டு, உடலெல்லாம் வீங்கி விட்டது. நாட்டிலிருந்த மருத்துவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து மருத்துவம் செய்தபோதினும், எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. இது ஆண்டகை அவர்களின் முனிவினால் ஏற்பட்டது என்பதை உணர்ந்து அவர்களை அழைத்து வருமாறு 'அமீர்'களை அனுப்பி வைத்தார் அரசர்.

அவர்கள், ஆண்டகை அவர்களைச் சந்தித்து, அரசருக்கு ஏற்பட்டிருக்கும் உயிர் போக்கும் கொடும் பிணியை எடுத்துரைத்து அவர்களை அரண்மனைக்கு அழைக்க அவர்கள் எவ்வித மறுமொழியும் கொடாது வாளாவிருந்தனர். இதனை அவர்கள் அரசரிடம் போய்க் கூற, அவர் மீண்டும் ஆண்டகை அவர்களை அழைத்து வருமாறு அனுப்பி வைத்தார். அப்பொழுதும் ஆண்டகை அவர்கள் எவ்விதப் பதிலும் கூறவில்லை.

மூன்றாவது முறை அவர்கள் வந்து ஆண்டகை அவர்களிடம் அழுது கெஞ்சி மன்றாடிய பொழுது, அவர்கள் ஒரு ரொட்டியை ஜைத்தூன் எண்ணெய்யில் நனைத்து, அவர்களிடம் கொடுத்து, ''இதனை எடுத்துச் சென்று, அரசரிடம் கொடுத்து உண்ணச் செய்யுங்கள்! அவர் நலன் பெற்றெழுவார். இனிமேல் மரியாதைக் குறைவாகப் பேச வேண்டாமென்று அவரிடம் கூறுங்கள்!'' என்று சொன்னார்கள்.

ஆண்டகை அவர்களின் திருக்கரம்பட்ட அந்த ரொட்டியை அரசர் உண்டதும், அவர் நலன் பெற்றார். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் அளவில்லை. அக்கணமே அவர் தாம் முன்னர் சிலரை அம்பெய்து கொல்லுமாறு பிறப்பித்த கட்டளையை நீக்கினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் ஆண்டகை அவர்களின் மதிப்பு மக்களின் கண்களில் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக உயர்ந்தது. அவர்கள் குளியல்கூடம் சென்று, தம் தலைமுடியைச் சிரைத்துக் கொள்வார் களானால், மக்கள் முண்டியடித்துக் கொண்டு, அதனைப் பொறுக்கிப் பேணுதலாக வைத்துக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டார்கள்.

ஆண்டகை அவர்கள் குளிக்கும் பொழுது அவர்களின் உடலைத் தேய்த்துவிடும் பணியை ஒருவர் செய்து வந்தார். ஒரு தடவை அவர் 'மஃரிப்' நாட்டிற்குச் சென்ற பொழுது , அவரை இன்னார் என்று விளங்கிக் கொண்ட அந்நாட்டு மக்கள், அவரின் கரங்களைப் பிடித்து 'முஸாபஹா' செய்ததோடு மட்டுமல்லாது. ''இவை குத்பு நாயகம் முஹம்மதுல் ஹனஃபிஷ் ஷாதலி (ரஹ்) அவர்களின் புனித உடலைத் தொட்ட பேறு பெற்றவையல்லவா?'' என்று கூறி, அவற்றை எடுத்துத் தம் கண்களிலும் ஒற்றிக் கொண்டார்கள்.

அந்நாட்டு மக்கள் மட்டும் இவ்வாறு செய்யவில்லை. அவரின் வரவை அறிந்த அந்நாட்டு மன்னர் மௌலா அபுல் பாரிஸ், அவரைத் தம் அரண்மனைக்கு அழைத்து வரச் செய்து, அவரின் கரங்களை முத்தமிட் டதுடன், அவரின் கரங்களைத் தொட்ட தம் கரங்களை நற்பேறு விரும்பித் தம் உடலெல்லாம் தடவிக் கொண்டார்.

இவ்வாறு ஆண்டகை அவர்களின் புகழ்மணம் பாரெங்கும் பரவிப் பரிமளித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களின் மனைவிக்கு மட்டும் தெரியாதிருந்தது. ஒரு தடவை அவருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டபொழுது அவர், ''யா சையிதீ அஹ்மது அல் பதவீ! தாங்கள் என் மீது அருள் கூர்ந்து என் நோய் நீக்கமாட்டீர்களா?'' என்று அலறினார்.

அன்றிரவு அவர் கனவொன்று கண்டார். அதில் அஹ்மது அல் பதவீ (ரஹ்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''அம்மணீ! தாங்கள் என்னை, என்பெயர் கூறிப் பல தடவை உதவி தேடியது, என் செவியில் விழுந்தது. எனினும் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. தாங்களோ குத்புல் அக்தா பாகிய தங்களின் கணவரின் பாதுகாவலில் உள்ளீர்கள். இத் தகு மாபெரும் தகுதி பெற்றவர்களின் தலத்தில் இருப்பவர்கள் எவரும் எங்களை அழைப்பின், நாங்கள் பதில் கூறமாட்டோம். ஆதலின் தாங்கள், தங்களின் கணவரையே 'யா ஷைகு முஹம்மது அல் ஹனஃபீ' என்று அழைத்து

உதவி தேடுங்கள்! தங்களுக்கேற்பட்ட நோயைத் தங்களின் கணவரின் பொருட்டால், பேரருளானாகிய அல்லாஹ் நீக்கி வைக்கப் போதுமானவன்'' என்று கூறிவிட்டு மறைந்தனர். அவரும் அவ்வாறே செய்ய, அவரைப் பீடித்த நோய் அடுத்த நொடியே மறைந்தது.

ஆண்டகை அவர்கள் மனிதர்களுக்கு மட்டுமல்லாது, ஜின்களுக்கும் மார்க்க சட்டதிட்டங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். ஹனஃபி மத்ஹபின் சட்டதிட்டங்கள் அடங்கிய நூல்களை அவர்களிடம் ஓதுவதற்காக, ஜின்கள், கூட்டம் கூட்டமாக அவர்களிடம் வந்து கொண்டிருந்தன.

ஒருநாள் ஆண்டகை அவர்களின் மனைவிக்கு ஒருவர் 'உத்ருஜ்' பழத்தை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். அன்று ஜின்கள் ஓதுவதற்கு வரவில்லை. அவர் அதனைத் தின்ற பின்னரே அவை வந்தன. இதனை அறியாத ஆண்டகை அவர்கள், அவை அடுத்த நாள் ஓத வந்த பொழுது, ''ஏன் நீங்கள் நேற்று ஓத வரவில்லை?'' என்று வினவினர்.

அதற்கு அவை. ''நாங்கள் 'உத்ருஜ்' பழத்தின் வாடையைத் தாங்க மாட்டோம். அப்பழம் இருக்கும் இல்லத்தில் புகவும் எங்களுக்கு ஆற்றலில்லை. நாங்கள் இங்கு ஓத வந்த பொழுது, அப்பழத்தின் வாடை 'கப்' பென்று எங்களின் நாசியில் பட்டதும், திரும்பி விட்டோம்'' என்று கூறின.

இது ஆண்டகை அவர்களுக்கு புதுச் செய்தியாக இருந்தது. இதன்பின் எவருக்கேனும் ஜின் பிடித்திருந்தால், அவரின் இல்லத்தில் 'உத்ருஜ்' பழத்தை வைக்குமாறு அவர்கள் கூறினர்.

வானிலே பறக்கும் பறவை இனங்களும் ஆண்டகை அவர்களிடம் அறிவுரை பெறுவதற்காக, அவர்கள் முன் கூட்டம் கூட்டமாக வந்து தலைதாழ்த்தி அமர்ந்திருந்தன. கடல் வாழ் உயிரினங்களுக்கும் அறிவுரை பகர்வதற்காக அவர்கள் சில பொழுது, கடலில் மூழ்கி இருந்துவிட்டு வருவர். அப்பொழுது அவர்களின் உடைகள் நனையாதிருக்கும்.

ஆண்டகை அவர்களுக்கு, மக்களின் உள்ளங்களை அறியும் ஆற்றலையும் இறைவன் வழங்கியிருந்தான். ஒரு தடவை அவர்கள், தங்களுக்கு அன்பளிப்பாக வந்த விலையுயர்ந்த உடைகளை அணிந்து கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட ஒருவர், ''இவர்களை மக்கள் குத்புல் அக்தாப் என்று கூறுகிறார்கள். ஆனால் இவர்களோ, அரசர்க்கரசர்கள் அணியும் உயரிய உடைகளை அணிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உண்மையான இறைநேசச் செல்வராயிருப்பின், தாம் அணிந்திருக்கும் உடைகளைக் களைந்து எனக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டும். நான் அவற்றை விற்று என் குடும்பத்தினருக்காகச் செலவு செய்வேன்'' என்று

தம் மனத்திற்குள் எண்ணினார். இவ்வாறு எண்ணிக் கொண்டு, ஆண்டகை அவர்கள் அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கும் அவையில் வந்து அமர்ந்தார்.

அவரின் உள்ளத்தில் ஓடிய எண்ணத்தைத் தம் ஞானக் கண்ணால் பார்த்த ஆண்டகை அவர்கள், தாம் பேசி முடிந்ததும், அவரைத் தம் அருகே அழைத்து, தம் உடைகளைக் களைந்து அவரிடம் கொடுத்து, ''இவற்றை விற்று உம் குடும்பத்தினருக்காகச் செலவு செய்து கொள்ளும்!'' என்று கூறினார்கள். அவற்றைப் பெற்று மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றார் அவர். அப்பொழுது அவரின் வாய், ''வலி என்றால் இவர்கள் தாம் வலி'' என்று உவகை மொழி பகர்ந்தது.

மற்றொரு நாள் அவர் ஆண்டகை அவர்களைக் காண வந்தபொழுது அவர்கள் முன்னர் போன்று விலையுயர்ந்த உடைகளை அணிந்திருப் பதைக் கண்டு, 'இந்த உயரிய உடைகளை அணிவதற்கு இவர்களே தகுதி பெற்றவர்கள். வேறு எவரும் தகுதி பெற்றவர்கள் அல்ல' என்று தம் மனத்திற்குள் எண்ணினார். இதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், அவரைத் தம் அருகழைத்து தாம் அணிந் திருந்த உடைகளைக் கழற்றி அவருக்கு மீண்டும் அன்பளிப்புச் செய் தார்கள். அப்பொழுது அவரின் உள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

ஆண்டகை அவர்கள் தம்முடைய ஜாவியாவில் தொழ வைப்பதற்கு ஒருவரை இமாமாக நியமித்திருந்தார்கள். ஒரு நாள் அவர் தொழ வைப்பதற்காக ஜாவியாவுக்கு வந்து கொண்டிருந்த பொழுது, வழியில் எதிர்ப்பட்ட ஓர் அழகிய பெண்ணைக் கூர்ந்து பார்த்தார். இதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்கள், அவர் ஜாவியாவுக்கு வந்ததும் அவரைத் தொழவைக்க வேண்டாமென்று கூறி விட்டு வேறொருவரை இமாமாக நின்று தொழ வைக்குமாறு பணித்தார்கள். இவ்வாறே ஐந்து வக்திலும் நிகழ்ந்தது.

இமாமுக்கோ தம்மீது ஆண்டகை அவர்கள் வருத்த முற்றிருப் பதற்கான காரணம் என்னவென்றே விளங்கவில்லை. அவரும் அதுபற்றி அன்றிரவு முழுவதும் சிந்தித்து, சிந்தித்து அலுத்துப் போனார். இறுதியாக, தாம் அன்று வைகறையில் ஜாவியாவுக்குச் செல்லும் பொழுது, வழியில் எதிர்ப்பட்ட அழகிய பெண்ணைக் கூர்ந்து கவனித்தது தான் தாம் செய்த தவறு என்பது அவரின் மனக்கண் முன் பளிச்சிட்டது. உடனே அவர் தம் பாவம் பொறுத்தருளுமாறு இறைவனிடம் அழுது கெஞ்சி இறைஞ் சினார்.

இமாமின் செயல்கள் அனைத்தும், ஆண்டகை அவர்களுக்கு அப்படியே விளங்கின. அவர் அடுத்த நாள் வைகறையில் தொழுவதற்காக - தொழவைப்பதற்காகவல்ல - ஜாவியா வந்தபொழுது, ஆண்டகை அவர்கள் அவரை அழைத்துத் தொழ வைக்குமாறு பணித்தார்கள். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வியப்பு சொல்லுந்தரத்ததாயில்லை.

ஆண்டகை அவர்களுக்குச் சில பொழுது பணமுடை ஏற்பட்டால், செல்வர்களிடம் கடன் கேட்டு அனுப்புவார்கள். பணத்தை வைத்துக் கொண்டு, 'பணம் இல்லை' என்று எவரேனும் சொன்னால் அவர்கள் வைத்த இடத்தில் பணம் இல்லாமலே போய்விடும். எனவே பயந்து கொண்டு அவர்கள், ஆண்டகை அவர்கள் கேட்ட பணத்தை அனுப்பி வைப்பர். அதனைக் கடனாகப் பெற்று, தம் கைக்குப் பணம் வந்ததும் ஆண்டகை அவர்கள் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள்.

ஒரு தடவை ஆண்டகை அவர்களுக்கு, அறுபதாயிரம் பொற்காசுகள் கடன் ஏற்பட்டது. அது பற்றி அவர்கள் பெரிதும் கவலையுற்றார்கள். ஒருநாள் அவர்கள், அது பற்றிக் கவலையில் இருந்து கொண்டிருக்கும் பொழுது, ஒருவர் திடீரென ஜாவியாவுக்குள் நுழைந்து அவர்களுக்கு வேண்டிய அறுபதாயிரம் பொற்காசுகளை அவர்களின் காலடியில் காணிக்கையாக வைத்தார். அவற்றை எடுத்துக் கடன்காரர்களுக்குப் பங்கிட்டு கொடுத்துவிட்டு, இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள் அவர்கள்.

ஆண்டகை அவர்கள் குர்ஆனுக்கு விளக்கவுரை கூறத் தொடங்கி விட்டால், நான் முந்தி, நீ முந்தி என்று புதுப் புதுக்கருத்துக்கள் அவர்களின் வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும். ஒரு தடவை அவர்கள் திருக்குர்ஆனின் ஒரு வசனத்திற்குப் பல்வேறு விதமான பொருள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஷைகு ஜலாலுத்தீனுல் மல்கீனி (ரஹ்) அவர்கள் வியப்பு மேலிட்டவர்களாய் எழுந்து நின்று, ''அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகின்றேன். நான் நாற்பது திருமறை விளக்க நூல் (தஃப்ஸீர்) களை ஆராய்ந்துள்ளேன். ஆனால், அவற்றின் ஒன்றிலேனும் இவர்கள் கூறிய விளக்கங்களைப் பார்த்தும் அறியேன். படித்தும் அறியேன்'' என்று வாயார்ந்து கூறினார்கள்.

மற்றொரு நாள் ஆண்டகை அவர்கள், திருக்குர் ஆனின் திருவசனங் களுக்கு அற்புதமான முறையில் விளக்கவுரை கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஷைகு சிராஜுத்தீனுல் மல்கீனி (ரஹ்) அவர்கள், மகிழ்ச்சி மீக்குற்றவர்களாய் எழுந்து நின்று, ஆண்டகை அவர்களின் புருவ மத்தியில் முத்தமிட்டு, ''தாங்கள் நீண்ட காலம் வாழ்வீர்கள்'' என்று கூறி, ''வஅம்மா என்பகுன்னாஸ ப எம்குது ஃபில் அர்ளி'' என்னும் திருவசனத்தை ஓதினார்கள்.

ஆண்டகை அவர்கள் இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களின் ஹனஃபி மத்ஹபைப் பின்பற்றிய போதினும், மற்ற இமாம்களுக்கும் பெரிதும் மரியாதை செய்தார்கள். ஒரு தடவை மதரஸாவில் ஹனஃபி மத்ஹபின் சட்டதிட்டங்களை ஓதிக் கொடுத்து வந்த, 'ஆலிம்' ஒருவர் ஒரு 'மஸலா' பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'இவ்விஷயத்தில் ஷாஃபி கருத்து வேறுபாடுடையவராயிருக்கிறார்' என்று கூறினார். இது ஆண்டகை அவர்களின் செவிப்பட்டதும் அவர்களின் கண்கள் சிவந்தன. உடனே அவர்க்ள் அவரை அழைத்து, ''இமாம் ஷாஃபி (ரஹ்) அவர்களை 'ரஹ்மஹுல்லாஹி' என்றோ, 'ரஹ்மத்துல்லாஹி அலைஹி' என்றோ அடைமொழியிட்டுக் கூறாது, எவரோ தெருவில் செல்பவரைக் குறிப்பிடுவது போல், மரியாதைக் குறைவாகக் கூறிவிட்டீரே. இதுவென்ன அறிவீனம்?'' என்று கடிந்தார்கள். உடனே அவர் தாம் செய்த தவற்றிற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

ஒரு நாள் ஆண்டகை அவர்களின் தோழர்களில் ஒருவரான ஷரீஃபுன் நுஃமானி (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களை அணுகி, ''ஷைகு அவர்களே! நான் சென்ற இரவு என்பாட்டனார், அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டேன். அவர்கள் ஒரு சிறப்பு வாய்ந்த கூடாரத்தில் அமர்ந்திருக்கின்றனர். 'வலி' மார்கள் அணி அணியாக வந்து அவர்களுக்கு 'ஸலாம்' உரைக்கின்றனர். அவர்களை இன்னார், இன்னார் என்று ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

''அப்பொழுது ஒரு பெரும் கூட்டத்துடன் தாங்கள் அங்கு வருகிறீர்கள். தங்களையும் அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார். அப்பொழுது அவர்கள் தங்களைத் தம் அருகே அமரச் செய்து, அபூபக்ர் (ரலி) அவர்களின் பக்கம் திரும்பி, 'நான் இவரை உவக்கிறேன். எனினும் இவர் தலைப்பாகை கட்டியிருக்கும் முறையை நான் உவக்கவில்லை' என்று கூறுகின்றனர்.

''உடனே அபூபக்ர் (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அவருக்குத் தலைப்பாகை கட்டிவிட அனுமதியருளுங்கள்!' என்று வினயமாக வேண்டிக் கொள்கின்றனர். அவ்விதமே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்க, அபூபக்ர் (ரலி) அவர்கள், தம் தலைப்பாகையைக் கழற்றித் தங்களின் தலையில் சூட்டி, அதன் தொங்கலைத் தங்களின் இடது புறத்தில் தொங்கவிட்டனர்'' என்று கூறினர். அது கேட்டு ஆண்டகை அவர்களும் அங்கிருந்த அனைவரும் அழுதார்கள்.

எனினும் ஆண்டகை அவர்கள் தம் தோழரை நோக்கி, ''நீர் மற்றொரு முறை உம்பாட்டனார் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் தரிசிப்பின், என்னுடைய வணக்க, வழிபாடுகளில் எதனை அவர்கள் அறிந்திருக்கிறார்களென்று ஓர் அடையாளம் கேளும்!'' என்று கூறினர்.

ஓரிரவு அவர்களின் தோழர் அயர்ந்து படுத்துறங்கும் பொழுது அண்ணல் நபி(ஸல்) அவர்களைக் கனவில் தரிசித்து அவ்விதமே அடையாளம் வேண்ட, ''நான், அவர் ஒவ்வொரு நாளும் பொழுதடையும் முன் தனித்திருந்து என் மீது 'ஸலவாத்' ஓதுவதை அறிவேன்'' என்று கூறினர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்.

அது கேட்ட ஆண்டகை அவர்கள் ''அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியது உண்மையே உண்மை. நீர் முன்னர் கண்ட கனவும் உண்மை. நீர் இப்பொழுது கண்ட கனவும் உண்மை'' என்று கூறித் தம் தலைப் பாகையைக் கழற்றி, அதில் தொங்கல் விட்டுக் கட்டி, அத்தொங்கலைத் தங்களின் இடது புறத்தில் தொங்குமாறு விட்டார்கள். அத்துடன் நில்லாது, ஆங்கிருந்த அனைவரையும் அவ்விதமே செய்யுமாறு பணித்தார்கள்.

ஆண்டகை அவர்களைக் காண்பதற்காக கிள்ரு (அலை) அவர்கள் பல தடவை வந்து, அவர்களின் வலப்புறத்தில் அமரும் வழக்க முடையவர்களாக இருந்தனர். அப்பொழுது ஆண்டகை அவர்கள் எழுந்திருப்பின், கிள்ரு (அலை) அவர்களும் எழுந்திருப்பர். அவர்கள் தம் தியான அறைக்குச் செல்லின், அதன் வாயில் வரைக்கும் கிள்ரு (அலை) அவர்களும் செல்வர்.

ஆண்டகை அவர்கள் ஏழு ஆண்டு காலம், 'ஆஸ்த்மா' நோயால் பெரிதும் அவதியுற்றார்கள். எனினும் அதனைச் சிறிதேனும் பொருட் படுத்தாது, ஒவ்வொரு நாளும் ஐந்து வேளையும், கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்வதற்காக முற்கூட்டியே 'உளூ'ச் செய்து தயாராயிருப் பார்கள்.

நாற்பத்தாறு ஆண்டுகளும், மூன்று மாதங்களும், மூன்று நாட்களும் 'குத்புல் அக்தாப்' ஆக இருந்து ஆன்மீகச் செங்கோல் செலுத்திய ஆண்டகை அவர்கள், இறுதியாக ஹிஜ்ரி 847 ஆம் ஆண்டு இவ்வுலகு நீத்து மறுஉலகு எய்தினார்கள்.

அவர்களுக்குப் பின் ஷாதலிய்யா தரீக்காவில் சிறப்புற்று விளங்கியவர்கள், ஷைகு முஹம்மது அபுல் மவாஹிபஷ் ஷாதலி (ரஹ்) அவர்களாவர். அவர்கள் கெய்ரோவில் ஜாமிஉல் அஸ்ஹர் பள்ளியின் அருகில் வாழ்ந்து வந்தனர். கல்வத்தில் இருக்க நாடின், அப்பள்ளியின்

மனாராவிலுள்ள அறையில் 'கல்வத்' இருக்கும் வழக்கமுடையவர் களாயிருந்தனர். அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளனர். ஸலவாத்து மிஷீஷிய்யாவுக்கு விளக்கம் (ஷரகு) எழுதியதோடு, அந்த ஸலவாத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதி வரும் வழக்கத்தை ஷாதலிய்யா தரீக்காவில் ஏற்படுத்தியவர்களும் அவர்களேயாவர்.

அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அதிகமதிகமாகக் கனவில் தரிசிக்கும் பேறு பெற்று விளங்கினர். ''வஅம்மா பிநிஃமத்தி ரப்பிக ஃபஹத்திஃத்'' (இறைவன் உமக்களித்த பேற்றினை மக்களுக்குச் சொல்லிக் காட்டுக!) என்ற இறைவசனத்திற்கேற்ப அவர்கள், அவற்றை மக்களிடம் எடுத்துரைத்த பொழுது, அவர்கள் அவற்றை நம்பவில்லை. அப்பொழுது அபுல் மவாஹிபு (ரஹ்) அவர்கள் பெரிதும் வருத்த முற்றனர்.

ஓரிரவு அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு இதனைக் கூறிய பொழுது, அவர்கள், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீர் என்னைக் கண்டீர். இதனை நம்பாதவன் யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ தான் இறப்பெய்துவான்'' என்று கூறினர்.

மற்றொரு தடவை அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்ட பொழுது, ''நான் இறக்கவில்லை. அல்லாஹ்வை அறியா தவனின் கண்களுக்கு நான் மறைந்திருக்கிறேனேயன்றி வேறில்லை. அல்லாஹ்வை அறிந்தவன், என்னைக் காண்கிறான். நானும் அவனைக் காண்கிறேன்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தனர்.

வேறொரு தடவை அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்ட பொழுது, அவர்கள் அபுல் மவாஹிபு (ரஹ்) அவர்களை நோக்கி, ''நீர் உம் கையைத் தாரும்! நான் உமக்கு தீட்சை வழங்குகிறேன்'' என்று கூறினர். அப்பொழுது அவர்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களின் திருக்கரங்களைத் தொட்டு, தீட்சை பெற்றபின் நான் பாவம் செய்ய நேரிடின் அது மன்னிக்க முடியாத குறறமாகி விடுமே என்று நான் அஞ்சுகிறேன். மேலும் அவ்விதம் நிகழாது என்னைக் காத்துக் கொள்ள எனக்கு ஆற்றலும் இல்லையே. இந்நிலையில் நான் என் செய்வேன்?'' என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தவர்களாய் ''முதலில் உம் கையைத் தாரும்! நான் தீட்சை வழங்குகிறேன். அதன்பின் உம்மை எந்தப் பாவச் செயலும் பற்றாது'' என்று அருள்மொழி பகர்ந்தார்கள்.

பிறிதொரு தடவை அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னைக் கைவிட்டு விடாதீர்கள்!" என்று வேண்டினர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "அபுல் மவாஹிபே! நீர் ஹௌளுல் கௌதருக்கு வந்து நீர் அருந்தும் வரை, நான் உம்மைக் கைவிட மாட்டேன். மேலும் "நீர், சூரத்துல் கௌதரையும் ஸலவாத்தையும் வழக்கமாக ஓதி வருகிறீர். ஸலவாத்து ஓதுவதன் நன்மையை, நான் உமக்கு வழங்கினேன். சூரத்துல் கௌதரை ஓதுவதன் நன்மையை, நான் உமக்குத் தங்கரித்து வைத்துள்ளேன்" என்று அமுதவாய் விண்டனர்.

அபுல் மவாஹிபு (ரஹ்) அவர்கள், ஒவ்வொரு நாளும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஆயிரம் ஸலவாத்துகள் ஓதும் வழக்க முடையவர்களாயிருந்தார்கள். அந்த எண்ணிக்கையை நிறைவு செய்வதற்காகச் சிலபொழுது, அவற்றை வேகமாகவும் ஓதினார்கள். ஒரு தடவை அவர்கள் அவ்விதம் ஓதிய பொழுது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் தோன்றி, "அபுல் மவாஹிபே! அவசரம் ஷைத்தானின் இயல்பு, என்பதை நீர் அறிய மாட்டீரா? என் மீது ஸலவாத்து ஓதும் பொழுது, அமைதியாகவும் ஒழுங்காகவும் ஓதும்!" என்று அறிவுரை பகர்ந்து மறைந்தனர்.

ஒரு நாள் அபுல் மவாஹிபு (ரஹ்) அவர்கள் தம் இல்லத்தில் தனியே அமர்ந்திருக்கும் பொழுது ஒருவர் வந்து, "ஷைகு அவர்களே! நான் சென்ற இரவு அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டேன். அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவ்விடத்திற்குத் தாங்கள் வருகிறீர்கள். தங்களைக் கண்டதும் அவர்கள் எழுந்து நின்று தங்களுக்கு சங்கை செய்கிறார்கள்" என்று கூறினார். அதுகேட்ட அபுல் மவாஹிபு (ரஹ்) அவர்கள், "இதனை வெளியே எவரிடமும் எடுத்துரைக்க வேண்டாம்!" என்று அவரைக் கேட்டுக் கொண்டனர். இத்தகு மாண்பு மிகு சீலர் ஹிஜ்ரி 882 - ஆம் ஆண்டில் காலமாயினர்.

மேலே குறிப்பிடப்பட்ட இவர்களைத் தவிர, புர்தாவை இயற்றிய ஷைகு ஷரஃபுத்தீன் முஹம்மதுல் பூஸிரி (ரஹ்) அவர்களும் ஷாதலிய்யா தரீக்காவில் சிறப்புற்று விளங்கினர். அவர்கள் ஹிஜ்ரி 608 - ஆம் ஆண்டில், எகிப்திலுள்ள அல்பூஸிர் என்ற ஊரில், ஸயீது இப்னு ஹம்மாது (ரஹ்) அவர்களின் அருமைத் திருமகனாகப் பிறந்தனர். சிறு வயதிலேயே குர்ஆன் முழுவதையும் ஓதி மனனம் செய்த பின்னர், 'ஜாமி உல் அஸ்ஹர்' பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்று, பட்டம் பெற்று வெளிவந்த அவர்கள், அபுல் அப்பாஸ் முர்ஸீ (ரஹ்) அவர்களிடம் தீட்சை பெற்றனர்.

அதன் பின் அரசாங்க அலுவலகத்தில் சேர்ந்து பணியாற்றி ஓய்வு பெற்று வாழ்ந்து வந்தனர். அப்பொழுது அவர்களைக் காண வந்த நல்லார் ஒருவர், அவர்களை நோக்கி, ''தாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் தரிசித்துள்ளீர்களா?'' என்று வினவினார்.

அக் கேள்வி அவர்களுக்கு அளவற்ற வெட்கத்தையும், வருத்தத்தையும் அளித்தது. ''இல்லை; நான் அத்தகு பேற்றினை இதுவரை அடையவில்லை'' என்று வருத்தத்துடன் பதில் கூறினர்.

எனினும் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் ஆசி இருந்தால், அது கிடைக்காமலா போய் விடும் என்று எண்ணி, அவர்களின் ஆசி வேண்டி, 'அல் கஸீதத்துல் முன்ரிய்யா' 'அல் கஸீதத்துல் முஹம்மதிய்யா', 'அல் கஸீதத்துல் ஹம்ஸிய்யா' என்னும் பெயருடன் மூன்று புகழ்ப்பாடல்களை இயற்றினர். எனினும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருக்காட்சியைக் கனவில் பெறும் பேற்றினை அவர்கள் பெறவில்லை. அதுகண்டு அவர்களுக்குச் சொல்லொணா வருத்தம் ஏற்பட்டது.

இச்சமயத்தில் அவர்கள் பக்கவாத நோயால் பீடிக்கப் பட்டனர். எவ்வளவோ மருந்துண்டும் பலனில்லை. யாது செய்வதென அறியாது திகைத்த அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் தம்மை ஒப்படைத்து 'அல்கவாகிப் அல்துர்ரிய்யா ஃபீ மத்ஹி கைரில் பரிய்யா' என்னும் பெயருடன், ஒரு பனுவலைக் கண்ணீரைக் காணிக்கையாக வைத்துப் பாடி முடித்தனர்.

அன்றிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், இமாம் பூஸிரி (ரஹ்) அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''கவிஞரே! நீர் பாடிய பனுவலைப் பாடும்!'' எனப் பணித்தார்கள்.

அது கேட்டு, உள்ளமும் உடலும் சேர்ந்து பூரிக்க இமாம் அவர்கள், அதனைப் பாட, அதனை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அசைந்து, அசைந்து கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். அதில் தம் பெயரின் முதல் எழுத்தான இரண்டு 'மீம்' களோடு முடியும் கண்ணிகளைக் கேட்டதும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள்.

அதனை இமாம் அவர்கள் ஓதி வரும் பொழுது, 51 ஆவது கண்ணியின் முதல் அடியாகிய,

ஃபமப்லஉல் இல்மி ஃபீஹி அன்னஹூ பஷருன்

(அறின் முடிவாகும் எல்லை; அவர் மனிதரே யெனினும்) என்பதனைப் பாடியதும், அடுத்த அடி நினைவுக்கு வராது திணறிய பொழுது,

வ அன்னஹூ கைரு கல்க்கில்லாஹி குல்லிஹிமி

(இறை சிருஷ்டி யாவையினும், ஏற்றமுள்ளார் என்பதுவே) என்ற அடுத்த அடியை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எடுத்துக் கொடுத்தார்கள்.

அது கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்த இமாம் அவர்கள் இதன் பின் தாம் இயற்றிய ஒவ்வொரு கண்ணியைப் பாடியதும்,

'மௌலாய ஸல்லிவஸல் லிம்தாயி மன்அபதா
ஆலா ஹபீபிக கை ரில் கல்க்கி குல்லிஹிமி'

என்ற கண்ணிகளைப் பாடலாயினர்.

மொத்தம் 165 கண்ணிகளையும் கேட்டுப் புளகாங்கிதமுற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தம் திருமேனியில் இருந்த போர்வையை எடுத்து இமாம் அவர்களின் உடலில் போர்த்தி, தம் திருக்கரங்களால் அவர்களின் உடலைத் தடவி விட்டார்கள்.

திடுக்குற்று விழித்தெழுந்த இமாம், தாம் முழு நலம் பெற்றிருப்பதை உணர்ந்தனர். தாம் படுத்திருந்த அறை முழுவதும் கஸ்தூரி மணம் கமழ்வதையும் நுகர்ந்தனர்.

பன்னெடும் நாட்களாகப் படுத்த படுக்கையாய்க் கிடந்த அவர்கள், புத்தாடை புனைந்து, வைகறைத் தொழுகை தொழுவதற்காகப் பள்ளி சென்ற பொழுது, ஒரு பக்கீர், அவர்களின் முன் எதிர்ப்பட்டு, அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது பாடிய பனுவலைத் தமக்குத் தருமாறு வேண்டிக் கொண்டார்.

அதற்கு இமாம் அவர்கள், ''நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பல பனுவல்கள் பாடியுள்ளேனே. எந்தப் பனுவலைத் தாங்கள் விரும்புகின்றீர்கள்?'' என்று வினவினர்.

அப்பொழுது அவர், ''அமின் ததக்குறு ஜீரானின் பீதீ ஸலமி' என்று தொடங்கும் பனுவலைத்தான்'' என்று பதில் கூறினார்.

''அதனை நான் எவரிடமும் இதுவரை காட்டவில்லையே. அதைப் பற்றித் தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று இமாம் அவர்கள் வியப்புடன் வினவினர்.

அதற்கு அவர், ''அதனைத் தாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருமுன் பாடிக் காட்டிய பொழுது, அதனை அவர்கள் ஒரு செடி போல் அசைந்து, அசைந்து கேட்டு ரசித்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்'' என்று கூறினார்.

இச்செய்தி நாடெங்கும் பரவவே, அமைச்சர் பஹாவுத்தீன், இமாம் அவர்களைத் தம் மாளிகைக்கு அழைத்து, அதனைப் படிக்குமாறு கூறி, வெறுங்காலுடனும், வெறுந்தலையுடனும், நின்று அதனை மரியாதை யுடன் செவிமடுத்து மகிழ்ந்தார். பின்னர் அதனைப் பிரதி செய்து அனுதினமும் வழக்கமாக ஓதி வந்தார்.

இச்சமயத்தில் ஸஅதுத்தீன் பாரக்கீ என்பவருக்குத் தீராத கண்நோய் ஏற்பட்டது. அப்பொழுது ஒருவர் அவரின் கனவில் தோன்றி, அமைச்சர் பஹாவுத்தீனிடமிருந்து 'புர்தா'வை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொள்ளுமாறு பணித்தார். அவ்விதமே அவர் அமைச்சரிடம் சென்று தாம் கண்ட கனவைக் கூறினார். அதற்கு அவர், ''என்னிடம் புர்தா என்று ஒன்று மில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது பாடப்பட்ட புகழ்ப்பாக்கள் அடங்கிய பனுவல் ஒன்றுள்ளது. அதை வேண்டுமானால் தருகிறேன்'' என்று கூறி அதனை எடுத்தவந்து கொடுத்தார். அதனைப் பெற்று ஸஅதுத்தீன் தம் கண்களில் ஒற்றிக் கொண்டதும், அவரின் கண்நோய் அக்கணமே நீங்கியது. இந்நிகழ்ச்சிக்குப் பின் இப்பனுவலுக்கு 'புர்தா' எனப்பெயர் ஏற்பட்டது.

இத்தகு மாண்பார்ந்த பனுவலை ஆக்கித்தந்த இமாம் பூஸிரி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 696 ஆம் ஆண்டில் தம்முடைய 88- ஆவது வயதில் காலமாயினர்.

அவர்களுக்கு அடுத்தபடியாக, ஹிகம் என்ற ஞான நூலை எழுதிய அதாவுல்லாஹ் இஸ்கந்தரிய்யிஷ் ஷாதலி (ரஹ்) அவர்களும், மற்றும் சிலரும் ஷாதலிய்யா தரீக்காவில் சிறப்புற்று விளங்கினர். அவர்களுக்குப் பின் சிறப்புற்று விளங்கியவர்கள், இமாம் ஷாதலி (ரஹ்) அவர்களின் இருபத்தொன்றாவது கலீபா குத்பு ஷைகு முஹம்மதுல் பாஸிய்யிஷ் ஷாதலி (ரஹ்) அவர்களேயாவர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமை மகளார் பாத்திமா (ரலி) அவர்களின் வழியில் வந்த ஒரு குடும்பத்தினர், பாஸ் (FEZ) நகரில் வாழ்ந்து வந்தனர். அக்குடியில் தோன்றிய முஹம்மது இப்னு மஸ்வூது இப்னு அப்துர் ரஹ்மான் என்பவரின் அருமைத் திருமகவாக ஹிஜ்ரி 1218- ஆம் ஆண்டு, பாஸி ஆண்டகை பிறந்தனர். அவர்களுக்குப் பெற்றோர் இட்ட பெயர் முஹம்மது என்பதாகும்.

இளமையிலேயே குர்ஆனை ஓதி முடித்த பாஸி ஆண்டகை அவர்கள், அரபு மொழியின் இலக்கணங்களை இமாம் அப்துஸ் ஸலாம் இப்னு மூஸா உந்துலூஸி அவர்களிடத்திலும், ஹதீதுக் கலையை இமாம் அரபி அவர்களிடத்திலும், மார்க்க சட்டதிட்டங்களை இமாம் அப்பாஸ்

இப்னு ஸௌதா அவர்களிடத்திலும், திருக் குர்ஆன் விளக்கவுரைகளை இமாம் அப்துஸ் ஸலாமில் யஸ்மீ அவர்களிடமும், ஆன்மீக ஞானம் பற்றிய நூல்களை அல் ஆரிஃபுபில்லாஹ் இமாம் ஹம்மாதீ (ரஹ்) அவர்களிடமும் பயின்றனர். அவர்களின் கூரிய அறிவும், அபார நினைவாற்றலும் ஆசிரியர்களையே வியப்பில் ஆழ்த்தின.

இச்சமயத்தில் அவர்கள் இமாம் சுலைமானுல் ஜஸ்வலிய் யிஷ் ஷாதலி (ரஹ்) அவர்கள் எழுதிய, 'தலாயிலுல் கைராத்' என்ற ஸலவாத்துத் தொகுப்பை, நாள்தோறும் பதினொரு தடவை (மற்றொரு வரலாற்றின் படி இருபத்தொரு தடவை) ஓதிவரும் வழக்கத்தை மேற்கொண்டனர்.

கல்வி கற்று முடிந்தபின் அவர்கள், பாஸ் நகரில் வாழ்ந்து வந்த இறைநேசச் செல்வர், ஹஸனுல் அக்ரவு (ரஹ்) அவர்களை அணுகி அவர்களுக்கு ஊழியம் செய்து வந்தனர். அவர்களுக்கு உணவூட்டி விடும் பணியையும் ஆண்டகை அவர்களே செய்தனர். ஒரு நாள் அவர்களுக்கு உணவூட்டிய பின், பாத்திரத்தில் ஒரு பிடி அன்னம் எஞ்சியிருந்தது. அதனை அப்பெரியார் தம் திருக்கரத்தால் எடுத்து ஆண்டகை அவர்களுக்கு ஊட்டிவிட்டனர். அதனை ஆண்டகை அவர்கள் விழுங்கியதும், அவர்களின் கண்கள் வெளிச்சம் பெற்றன. 'லௌஹுல் மஃஃபூல்' என்ற விதிப்பலகையும், அதனை எழுதும் தூரிகையும், அதில் எழுதப்பட்டிருப்பவையும் அவர்களின் கண்களுக்குத் தெளிவாகத் தெரிய வந்தன. இந்நிலை ஒரு நாள் முழுவதும் நீடித்தது.

இந்நிலை நீடித்தால், அவர்கள் மேலான பதவியை அடைவது தடைப்படும் என்பதை விளங்கிய அப்பெரியார், அடுத்த நாள் உணவுண்டதும், அதில் எஞ்சிய ஒரு பிடியை எடுத்து முந்தைய நாள் போன்று ஆண்டகை அவர்களுக்கு ஊட்டி விட்டனர். அதனை ஆண்டகை அவர்கள் விழுங்கியதும், அவர்கள் கண்டு வந்த காட்சி அக்கணமே திடீரென மறைந்தது.

ஆண்டகை அவர்கள் இளைஞராயிருக்கும் பொழுது, பாஸ் நகரில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழியில் தோன்றிய இறைநேசச் செல்வர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரின் பெயர் சையிது அஹ்மது இப்னு பைவான் என்பதாகும். தன்னுணர்விழந்து பரவச நிலையடைந்த 'மஜ்தூப்' ஆக விளங்கிய அவர், ஆண்டகை அவர்களைக் காணுந்தொறும், "இப்னு அதாவுல்லாஹ்வுக்கே சோபனம்!" என்று கூறுவார். இவ்வாறு அவர் கூறியதற்குக் காரணம், அவரின் கண்களுக்கு ஆண்டகை அவர்களின் தகுதி, இமாம் ஷாதலி (ரஹ்) அவர்களின் மாணவரின் மாணவர் இமாம் இப்னு அதாவுல்லாஹ் (ரஹ்) அவர்களின் தகுதியொத்துக் காட்சி வழங்கியதேயாகும்.

ஒரு நாள் பாஸ் நகர மன்னரின் அத்தாணி மண்டபத்தில் ஆண்டகை அவர்களும், அந்த இறைநேசச் செல்வரும் அமர்ந்திருக்கும் பொழுது, அவர்கள் அருந்துவதற்குத் தேநீர் வந்தது. அரசரே எழுந்து அத்தேனீரை எடுத்து, அந்த இறைநேசச் செல்வருக்கு முதலில் அருந்தக் கொடுத்த பொழுது அவர், ''இப்னு அதாவுல்லாஹ்வை விட எனக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டும் நான் அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்'' என்று கூறி, முதலில் ஆண்டகை அவர்களுக்கு அதனை அருந்தக் கொடுக்குமாறு சைகை செய்தார். அவ்வாறு அரசர் செய்த பின்னரே, அவர் தேநீர் அருந்தினார். அப்பொழுது அவர் அரசரை நோக்கி, ''இப்னு அதாவுல்லாஹ்வைப் பற்றிப் பிடித்துக் கொள்க! அவர் அல்லாஹ்விடத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்'' என்று கூறினார்.

ஆண்டகை அவர்கள் முஹம்மது இப்னு ஹம்ஸத்து ளாஃபிருல் மதனி (ரஹ்) அவர்களிடம் ஷாதலிய்யா தரீக்காவில் தீட்சை பெற்று, அவர்களுடன் பதினெட்டு ஆண்டுகள் இருந்து, அவர்களுக்கு ஊழியம் புரிந்து, உயரிய படித்தரத்தை எய்தப் பெற்றார்கள். ஆண்டகை அவர்களுக்கு அவர்களின் ஆசான் இஸ்முல் அஃலத்தைக் கற்றுக் கொடுத்து, அதனை இரவிலும் பகலிலும் நியமமாக ஓதி வருமாறும், அதன் பொருட்டே பலர், 'விலாயத்' எய்தப் பெற்றார்கள் என்றும் கூறி, அவர்களுக்குக் 'கிலாபத்' தும் வழங்கினார்கள்.

இறக்கு முன் அவர்கள் ஆண்டகை அவர்களைத் தம் ஆசனத்தில் அமர்த்தி, தம் சீடர்கள் அனைவரையும் நோக்கி, ''எனக்குப் பின் நீங்கள் இவரிடமே தீட்சை பெற்று, இவரிட்ட ஆணைக்குக் கீழ்படிந்து நடங்கள்!'' என்று இறுதி உரை பகர்ந்தார்கள். அவ்வாறே அவர்கள் இறந்ததும், அவர்களின் சீடர்கள் அனைவரும், ஆண்டகை அவர்களின் கரம் பற்றித் தங்களின் தீட்சையைப் புதுப்பித்துக் கொண்டனர். அவர்களில் சிலரை ஆண்டகை அவர்கள், தம்முடைய கலீபாவாகவும் நியமித்தார்கள்.

அந்தக் கலீபாக்களில் ஒருவரின் கரம் பற்றி, ஒருவர் தீட்சை பெற்றார். தாம் அவரிடம் தீட்சை பெற்றது பற்றி, அவரின் உள்ளத்தில் ஒருவித ஐயம் ஏற்பட்டது. தாம் அவரிடம் தீட்சை பெற்றது சரியா, தவறா, அதனைத் தமக்குக் கல்வி கற்றுத் தந்த ஆசான் உவப்பாரா, மாட்டாரா என்பதே அந்த ஐயம்.

இந்த ஐயத்துடன் அவர் ஓரிரவு படுத்துறங்கும் பொழுது, கனவொன்று கண்டார். அதில் ஓர் அழகிய இளைஞர் விண்ணிலிருந்து இறங்கி, அவர் முன் வந்து நிற்கிறார். அவரைப் பார்த்து அந்த மனிதர் 'தாங்கள் யார்?'' என்று வினவுகிறார். அதற்கு அவர், ''நான் இப்ராஹீம் (அலை) அவர்களின் மக்களில் ஒருவன்' என்று விடையிறுக்கிறார்.

''தாங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?'' என்று அடுத்து அவரை வினவுகிறார் அந்த மனிதர். ''தங்களிடம் தீட்சை பெறுவதற்காக'' என்று பதிலிறுக்கிறார் வந்தவர். அதுகேட்டு வெட்கமுற்ற அவர், ''நபிமார்களின் மக்களுக்கு தீட்சை வழங்க நான் அருகதையற்றவன்'' என்று கூறி விலகிக் கொள்கிறார். இத்துடன் அந்த இளைஞர் மறைந்து விடுகிறார். கனவு கலைகிறது.

விழித்தெழுந்ததும் அவரின் ஐயமெல்லாம் ஒரு நொடியில் மறைந்துவிட்டது. தாம் தீட்சை பெற்ற 'தரீக்கா' உண்மையானதேயாகும். தாம் அதில் தீட்சை பெற்றதும் சரியே யாகும், இல்லையெனில் தம்மிடம் நபியின் மக்களில் ஒருவர் தீட்சை பெற வருவாரா என்று எண்ணினார். அவரின் மனம் அமைதியுற்றது.

ஆண்டகை அவர்களின் புகழ் நாளுக்கு நாள் நாடெங்கிலும் பரவவே, அவர்களின் கரம் பற்றி தீட்சை பெறுவதற்காக, மக்கள் அணி அணியாக அவர்களிடத்தில் வந்துகொண்டிருந்தனர். யமன் நாட்டில் ஒருவர் தாம் தீட்சை பெறுவதற்காகத் தகுந்த ஷைகு ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். ஒருவரும் கிடைக்கவில்லை. ஓரிரவு அவர் அயர்ந்து உறங்கும் பொழுது, கனவொன்று கண்டார். அதில் இப்ராஹீம் (அலை) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, அவரை மக்கா சென்று பாஸி (ரஹ்) அவர்களைச் சந்தித்து, அவர்களிடம் தீட்சை பெற்றுக் கொள்ளுமாறு பணித்தனர். அவ்விதமே அவரும் செய்தார்.

ஆண்டகை அவர்களிடம் பொதுமக்கள் மட்டுமின்றி, ஆன்றோர்களும், சான்றோர்களும், அரசர்களும் தீட்சை பெற்றனர். ஒரு நாட்டின் அரசர் ஆண்டகை அவர்களை அணுகி, அவர்களிடம் தீட்சை பெற்றார். இது அந்நாட்டிலிருந்த மார்க்க விற்பன்னர் ஒருவருக்குத் தெரிய வந்ததும், அவருக்கு ஏற்பட்ட பொறாமைக்கு அளவில்லை. அவர் அரசவை சென்று ஆண்டகை அவர்களை இழித்துரைத்து, ''ஓர் அமீர், ஃபக்கீர் ஒருவருக்கு அடங்கி ஒழுகுவது ஒரு போதும் சரியாகாது'' என்று கூறினார்.

இதன் பின் ஒரு நாள், ஆண்டகை அவர்கள், அந்த அரசரின் அவைக்குச் சென்றனர். அப்பொழுது அரசவையில் அந்த மார்க்க விற்பன்னரும் இருந்தார். ஆண்டகை அவர்களைக் கண்டதும், அரசர் முதல் ஆங்கிருந்த அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்த பொழுது அந்த மார்க்க விற்பன்னர் மட்டும் ஆடாது அசையாது அமர்ந்திருந்தார். அவருடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண் டிருந்தன.

சற்று நேரத்தில் அவர் தாமாகவே ஆண்டகை அவர்களுடன் வாதத்தில் ஈடுபட்டு, வாயில் வந்த வண்ணம் தாறுமாறாகப் பேசினார். ஏசினார். ஆண்டகை அவர்களும், அவருக்கு இதமாகப் பதிலுரைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் இதமான பதில், அவரின் பேச்சுக் களுக்கும், ஏச்சுக்களுக்கும் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போன்றிருந்தது. எனவே கனன்றெழுந்து திட்டினார் அவர்.

இப்பொழுது ஆண்டகை அவர்களின் பொறுமைக்கும் ஒரு முடிவேற்பட்டது. அவர்கள் அவரை நோக்கி, ''அவனைத் தவிர நாயனில் லையே, அத்தகைய இறைவன் மீது ஆணையாக, இன்று பொழுதுபட்டு கிழக்கு வெளுக்குமுன், இதற்கான கூலி உமக்குக் கிடைக்கும்'' என்று கூறினார்கள். குணமென்னும் குன்றேறி நின்ற ஆண்டகை அவர்களின் வெகுளியை, அந்த மார்க்க விற்பன்னரால் கணமேனும் காத்தல் அரிதாகி விட்டது. அன்றிரவே அவருக்கு அதற்கான கூலி கைமேல் கிடைத்துவிட்டது. அன்றிரவே அவர் மாரடைப்பால் மரணமடைந்தார்.

நாளுக்கு நாள் ஆண்டகை அவர்களின் தகுதி உயர்ந்து கொண்டே வந்தது. அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின், பிரதிநிதியெனும் மகோன்னதமான பதவியாகிற 'குத்பியத்துல் குப்ரா' வையும் எய்தப் பெற்றனர். ஒரு தடவை அவர்கள் ஸவாக்கின் என்ற ஊரில் இறை நேசச் செல்வர்கள் புடைசூழ வீற்றிருக்கும் பொழுது, இறைவனுடையவும், அவனுடைய திருத்தூதருடையவும் ஆணையின் மீது, ''கதமீ ஹாதிஹி அலா ரகபத்தி குல்லி வலிய்யின் ஹையின்'' (என்னுடைய பாதங்கள் இப்பொழுது உயிரோடிருக்கும் இறைநேசச் செல்வர் அனைவரின் பிடரி மீதும்) என்று கூறினர்.

அப்பொழுது அங்கு வீற்றிருந்த அனைத்து இறை நேசச் செல்வர்களும், தம் தலை சாய்த்துப் பணிந்தனர். எனினும் தீவானுடைய 'வலி' மார்களில் ஒருவரும், அவ்விதமே தாமும் சொல்ல நாடினார். அதனை அறிந்த ஆண்டகை அவர்கள், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீர் அவ்விதம் சொல்ல வாயைத் திறந்தால், உம்மை தீவானை விட்டு தூக்கி எறிந்து விடுவேன்'' என்று எச்சரிக்கை செய்தனர். அவரின் வாய் இறுக மூடிக் கொண்டது.

ஒரு தடவை ஆண்டகை அவர்களிடத்தில், தீவானுடைய 'வலி' மார்களைப் பற்றி வினவப்பட்ட பொழுது, அவர்கள் பின்வருமாறு கூறினர்:

''தீவானுடைய 'வலி' மார்கள் உயிரோடுள்ள வலிமார்கள் ஆவர். அவர்களை 'ரிஜாலுல் கைப்' (மறைவான மனிதர்கள்) என்றும் கூறுவர்.

அவர்கள் முர்ஸலான நபிமார்களின் எண்ணிக்கைக்கு ஒப்ப, முந்நூற்றுப் பதின்மூன்று பேர் ஆவர். அவர்கள் 'ஹிரா' மலைப் பொதும்பில், ஒவ்வோர் இரவும் கூடி, உலகில் நடக்க வேண்டிய அலுவல்கள் குறித்து ஆலோசனை செய்கின்றனர். 'ஹிரா' மலைப் பொதும்பு அவர்கள் அனைவரும் இருக்க விரிந்து இடமளிக்கிறது. அவர்களில் குத்புஸ்ஸ மானாக உள்ளவர் கஃபாவை முன்னோக்கியவராக அமர்ந்திருக்கிறார். அவரின் இருமருங்கிலும், இரு இமாம்கள் வீற்றிருக்கின்றனர். இந்த மூன்று பேர்களுக்கும் பின்னால், ஏழு குத்புமார்கள் உட்கார்ந் திருக்கின்றனர். அவர்களுக்குப் பின் பாக்கியுள்ள முன்னூற்று மூன்று பேர் அணியணியாக ஏழு அணிகளில் அமர்ந்திருக்கின்றனர். ஏதாவது முக்கியமான பிரச்சினை பற்றி முடிவு செய்ய வேண்டியிருந்தால், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கு வருகை தந்து, வழிகாட்டு கின்றனர். அவர்களின் அறிவுரையின் படி அந்த 'வலி' மார்கள் செயலாற்றுகின்றனர்.

''ஒவ்வோர் ஆண்டும் 'லைலத்துல் கத்ர்' இரவு அன்று, ஓரிலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களும், நபித்தோழர்களும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களும், அவர்களின் அருமை மகள் பாத்திமா நாச்சியாரும், உயிரோடுள்ள, இறந்து போன வலிமார்களும், அத்திருச்சபையில் வந்து கலந்து கொள்கின்றனர். இறந்து போன 'வலி' மார்கள் தங்களின் இறப்பு வேளையில், எவ்விதம் இருந்தார்களோ, அவ்வித நிலையிலேயே அங்கு வந்து சேர்கின்றனர்'' என்று கூறினர்.

ஒரு தடவை ஆண்டகை அவர்களைச் சந்திக்க கிள்ரு (அலை) அவர்கள் வந்த பொழுது, அவர்கள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''என்னிடத்தில் யாதேனும் தேவைப்படின் கூறுங்கள்! நிறைவேற்றித் தருகிறேன்'' என்று கூறினர். அதற்கு ஆண்டகை அவர்கள், ''அல்லாஹ்வைத் தவிர வேறு எவரிடத்திலும் எனக்கு யாதொரு தேவையுமில்லை'' என்று கூறிவிட்டனர்.

ஆண்டகை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அடிக்கடிக் கனவில் கண்டு வந்தனர். அவர்கள் 'யாக்கூத் திய்யா' என்ற ஸலவாத்தை இயற்றிய பொழுது, அதனை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்ட பின்னரே வெளியிட வேண்டுமென்று எண்ணிக் கொண் டிருந்தனர். இச்சமயத்தில் அவர்கள் அண்ணல்நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டனர். அவர்களுடன் ஆண்டகை அவர்களின் ஆசான் முஹம்மது இப்னு ஹம்ஸத்து ஷரீஃபிருள் மதனீ (ரஹ்) அவர்களும் வீற்றிருந்தனர். அப்பொழுது முஹம்மதுல் மதனீ (ரஹ்) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் தூதர்

அவர்களே! முஹம்மது பாஸி தங்கள் மீது ஒரு ஸலவாத்து இயற்றி யுள்ளார். அதனை அவர் தங்களிடம் ஓதிக்காட்ட விரும்புகிறார்'' என்று கூறினர். அதுகேட்டு மகிழ்ந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆண்டகை அவர்களைப் பார்த்து, ''முஹம்மதே! ஓதும்!'' என்று கூறினர்.

அவ்விதமே ஆண்டகை அவர்கள் அதனை ஓதத் தொடங்கி இறுதிவரை ஓதிக்காட்டினார். அதில் ஓரிடத்தில் 'லி அன்னஹூஸ் ஸிர்குல் மஸூன்' (அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எவராலும் சூழ்ந்தறிய இயலாதபடி காக்கப்பட்ட அகமியம்) என்று பொறிக்கப்பட்டதை ஆண்டகை அவர்கள் ஓதிய பொழுது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆண்டகை அவர்களின் நெஞ்சுக்கு நேரே தம் விரலால் சைக்கினை செய்து, அவர்களின் ஆசானைப் பார்த்து, ''மதனீயே! இவரும் காக்கப்பட்ட அகமியம்'' என்று கூறினர். அப்பொழுது ஆண்டகை அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை.

இதன்பின் சில நாட்கள் கழித்து, ஆண்டகை அவர்கள் ஸலவாத்துல் யாக்கூத்தியாவை தீவானுடைய வலிமார்களிடத்திலும், குத்புஸ் ஸமானிடத்திலும் ஓதிக்காட்டினர். அதைக் கேட்டுப் பூரித்துப் புளகாங்கிதமுற்ற அவர்கள், அதனைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து, அதனைக் காலையிலும், மாலையிலும் ஒவ்வொரு தடவை (மற்றொரு வரலாற்றின் படி மும்மூன்று தடவை) ஓதிவரின், பெரும் நலன் ஏற்படுமென்று கூறினர்.

மக்கமா நகரில் ஷாஃபியீ மத்ஹபின் முஃப்தியாக இருந்து, சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெற்று விளங்கிய, ஸையிது அஹ்மது ஜைனி தஹ்லான் (ரஹ்) அவர்கள், ஸலவாத்துல் யாக்கூத்திய்யாவைப் படித்துப் பார்த்துவிட்டு, ''இறைவன் மீது ஆணையாக, இது குத்பியத்துல் குப்ராவுடைய நாவினாலன்றி வெளிவர முடியாது'' என்று பாராட்டு மொழி பகர்ந்தனர்.

மற்றொரு நாள் ஆண்டகை அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களை விழிப்பு நிலையில் கண்டனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆண்டகை அவர்களை நோக்கி, ''முஹம்மதே! நீர் வழக்கமாக ஓதி வருகிற ஸலவாத்தில் 'தஸ்லீமன் பிகதரி அளமத்தி ஃதாத்திக ஃபீ குல்லி வக்தின் வ ஹீன்' என்பதையும் சேர்த்து ஓதி வருவீராக! அதில் அதிகமான நன்மைகள் இருக்கின்றன'' என்று அருள்வாய் மலர்ந்து மறைந்தனர்.

இதற்கு முன் ஷாதலிய்யா தர்க்காவில் 'அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் அப்திக வ நபிய்யிக வ ரசூலிகந் நபிய்யில்

உம்மிய்யி வஅலா ஆலிஹி வ ஸஹ்ற பிஹி வ ஸல்லிம்' என்று மட்டும் தான் ஓதுவது வழக்கமாக இருந்தது. இதன்பின் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய வசனத்தையும், அத்துடன் சேர்த்துஓதி வரும் வழக்கத்தை ஆண்டகை அவர்கள் ஏற்படுத்தினர்.இந்த ஸலவாத்தை ஒரு தடவை ஓதுவது, மற்ற ஸலவாத்துக்களை ஓரிலட்சம் தடவை ஓதுவதற்குச் சமமாகும் என்று கூறப்படுகிறது.

வேறொரு நாள் ஆண்டகை அவர்கள் கனவில், அண்ணல் நபி (ஸல்) அவர்களை ஒரு சிறப்பு வாய்ந்த இடத்தில் அமர்ந்திருக்கக் கண்டு, அவர்களை நோக்கிச் சென்றனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவர்களைக் கைலாகு கொடுத்து வரவேற்றுப் பின்னர் தம் கரத்தை ஆண்டகை அவர்களின் நெஞ்சில் தடவி, ''வ அம்மா பி நி ஃமத்தி ரப்பிக ஃபஹத்தித்'' (இறைவன் உமக்களித்த பேற்றினை மக்களுக்குச் சொல்லிக் காட்டுக!) என்ற இறைவசனத்தை ஓதினர்.

பிறிதொரு நாள், அஹ்மதுல் ஹள்ராவீ (ரஹ்) அவர்கள் ஆண்டகை அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! ஷைகு அப்துஸ் ஸலாம் இப்னு மஸீஷ் (ரஹ்) அவர்கள், தம்முடைய ஸலவாத்துல் மஸீஷிய்யாவில், 'வஜ் அலில்லாஹு"ம்மல் ஹிஜாபல் அஃலம ஹயாத்த ரூஹி' (இறைவனே! மாண்புமிகு இத்திரையை என்னுடைய உயிருக்கு உயிராக ஆக்கியருள்!) என்று கூறுகிறார்களே, இங்குத் திரை என்று எதைக் குறிப்பிடுகிறார்கள்?'' என்று வினவினர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''இங்கு திரை என்று குறிப்பிடப் படுவது, அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தாம். அவர்களே படைத்தவனுக்கும் (ஹக்குக்கும்) படைப்பினங்களுக்கும் (ஹல்க்குக்கும்) இடையேயுள்ள அருள் திரையாகும். அத்திரை இல்லையெனில், அல்லாஹ்வுடைய பேரொளியினால் படைப்பினங்கள் அனைத்தும் பொசுங்கிச் சாம்பலாகியிருக்கும். அல்லாஹ்வுடைய பேரொளியைத் தாங்கும் ஆற்றல் அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறொரு வருக்கும் இல்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அப் பேரொளியைப் பெற்றுப் பின்னர், அதனை நபிமார்கள், வலிமார்கள், அறவோர்கள், சான்றோர்கள் ஆகியவர்கள் மீது சிறிது சிறிதாகப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள்'' என்று கூறினர்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ''உமக்கேற்பட்டது போன்ற ஐயம் எனக்கும் ஏற்பட்டது. ஒரு தடவை நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தின் முன் அமர்ந்திருக்கும் பொழுது, இந்தத் திரை பற்றி எனக்கு விளக்கியருளுமாறு இறைவனிடம் இறைஞ்சினேன். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், வான வெளியிலே

தோற்றமளித்தார்கள். அவர்களிலிருந்து வெளியான பேரொளி, அகில உலகிலும் வீசிப் பரவியது. அவர்கள் இறைவன் பக்கல் ஒரு பார்வையையும், படைப்பினங்கள் மீது மற்றொரு பார்வையையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பார்வை மூலம் இறைவனிட மிருந்து பேரருளைப் பெற்று, மற்றொரு பார்வை மூலம் அதனைப் படைப்பினங்களுக்குப் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து நான் 'திரை' என்பதன் பொருளை விளக்கிக் கொண்டேன்.''

துவக்கத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு வந்த ஆண்டகை அவர்கள், பின்னர் அவர்களை விழிப்பு நிலையில் காணலாயினார்கள். இது நாளாக, ஆக அதிகப்பட்டு, ஒவ்வோர் இமைப் பொழுதும், அவர்கள்ளைக் கண்டு கொண்டிருக்கும் பெறுதற்குரிய பேற்றினைப் பெற்றார்கள். இத்தகு பெரும் பேற்றினை அவர்கள் பெற்றதற்குக் காரணம், 'மகாமு ஜம் இல் முஹம்மதிய்யி' என்னும் சாயுச்சிய நிலையை அவர்கள் எய்தியதேயாகும்.

முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் வழித்தோன்றலாகவும் மக்கமா நகரில் ஹதீதுக் கலை விற்பன்னராகவும், ஜித்தாவின் 'காஜி' யாகவும் விளங்கிய ஸையிது முஹம்மது ஸாலிஹ் (ரஹ்) அவர்கள், ஆண்டகை அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களின் தகுதி, பாஸி ஆண்டகையின் தகுதியை விட மேலானதென்று நான் கூறமாட்டேன்'' என்று பல தடவை கூறியுள்ளார்கள்.

ஆண்டகை அவர்கள் வள்ளல்களுக்கு வள்ளலாய், வரையாது கொடுக்கும் வள்ளலாய் விளங்கினார்கள். அதன் காரணமாக மக்கள், அவர்களை 'அஜ்வாது' (வள்ளல்) என்னும் சிறப்புப் பெயராலும் அழைத்து வந்தார்கள்.

இத்தகு மாண்புமிகு சீலர், தாமாகவும், சில பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழைப்பின் மீதும், மதீனா சென்று வரும் வழக்கமுடையவர்களாக இருந்தனர். ஒரு தடவை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தை தரிசிப்பதற்காக மக்காவிலிருந்து மதீனா புறப்பட்டுச் செல்லும் வழியில், 'வாதி பாத்திமா' என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது காட்டரபிகள் வந்து அவர்களைச் சந்தித்து, ''ஷைகு அவர்களே! மக்காவின் அமீரைப் பதவியிலிருந்து நீக்கம் செய்திருப்பதாகவும், எங்களை மக்காவுக்கு விரைந்து வருமாறும், மக்காவிலிருந்து எங்களுக்கு மடல் வந்துள்ளது. இத்தகு வேளைகளில் வழியில் கலகம் ஏற்படுவது வழக்கம். ஆதலின் தாங்கள் மதீனா செல்லாது மக்கா திரும்பி விடுவதே நல்லது'' என்று கூறினர்.

அதற்கு ஆண்டகை அவர்கள், ''நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழைப்பின் மீதே இப்பயணத்தை மேற் கொண்டுள்ளேன். ஆதலின் நான் முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன். எனக்கு வழியில் எவ்வித ஆபத்தும் ஏற்படாது'' என்று கூறி, நலமே மதீனா சென்று 'ஜியாரத்' செய்து விட்டு நலமாக மக்கா வந்தடைந்தார்கள்.

இச்சமயத்தில் தமிழ் நாட்டிலுள்ள காயல் பட்டினத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கு அபூபக்ர் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய முஹம்மது அபூபக்ர் மிஸ்கீன் என்ற பெரிய ஷைகுனா அவர்கள், நீண்ட நாட்களாக ஒரு காமிலான ஷைகைத் தேடியவர்களாக இருந்தார்கள். ஓரிரவு அவர்கள் அயர்ந்து உறங்கும் பொழுது, தைக்கா சாஹிபு வலியுல்லாஹ் அவர்களைக் கனவில் கண்டு, தமக்கு தீட்சையருளுமாறு வேண்ட, அவர்கள் மேற்குப் பக்கம் சைக்கினை செய்து விட்டு மறைந்தனர்.

விடிந்தெழுந்ததும், பெரிய ஷைகுனா அவர்கள், தைக்கா சாஹிபு வலியுல்லாஹ் அவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் சாஹிபு தைக்கா சென்று, அங்கு வீற்றிருந்த தைக்கா சாஹிபு வலியுல்லாஹ் அவர்களின் தம்பி மகன் உமர் லெப்பை ஹாஜியாரிடம், தாம் கண்ட கனவைக் கூற ''இதன் பொருள் உம்முடைய ஷைகு மேற்குப் பக்கத்திலிருக்கிறார் என்பதேயாகும். மேற்குப் பக்கத்தில் தான் மக்கா உள்ளது. அங்கு தான் உம்முடைய ஷைகு இருக்கிறார். அங்கு சென்று, அவரிடம் தீட்சை பெற்றுக் கொள்ளும் என்று என் பெரிய தந்தையார் சைக்கினை மூலம் தெரியப்படுத்தியுள்ளார்கள் என்று நான் கருதுகிறேன். நான் மக்கா சென்றிருந்த பொழுது, ஹரம் ஷரீஃபில் வைத்து ஒரு ஷைகைக் கண்டேன். அவர் ஒரு மாமேதையாகக் காட்சியளித்தார். நான் இறைவனருளால் இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்ய மக்கா செல்ல நாடியுள்ளேன். நீரும் வந்தால் அவரை நான் காட்டுகிறேன். அவரிடம் நீர் தீட்சை பெறலாம்'' என்று கூறினார்.

அவ்வாறே மக்கா சென்ற பெரிய ஷைகுனா அவர்களை, உமர் லெப்பை ஹாஜியார் ஹரம் ஷரீஃபில் நடந்த ஒரு திருச்சபைக்கு அழைத்துச் சென்று, ''அதோ நடுவில் அமர்ந்திருக்கிறாரே, அவர் தாம் நான் கூறிய ஷைகு ஆவார். அவரிடம் நீர் செல்லலாம்'' என்று கூறிச் சென்று விட்டார்கள்.

அப்பொழுது பெரிய ஷைகுனா அவர்கள் தம் உள்ளின் உள்ளே, ''இவர்கள் உண்மையில் ஒரு காமிலான ஷைகாக இருப்பின் நான் அவர்களின் திருச்சபையில் நுழையும் பொழுது முதலில் திருக்குர்ஆனின் முதல் வசனமாகிய 'அலிஃப், லாம், மீம், தாலிகல் கிதாபு' என்பது, அங்கு

ஓதப்பட்டு, விளக்கம் தரப்பட வேண்டும். இரண்டாவதாக அவர்கள் என் பெயர் சொல்லி என்னை அழைக்க வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டனர்.

இவ்வாறு எண்ணிக் கொண்டு, அவர்கள் அங்கு நுழைந்த பொழுது, அவர்களின் செவியில் முதலில் விழுந்தது 'அலிஃப் லாம், மீம் தாலிகல் கிதாபு' என்ற வசனமும், அதன்பின் அதற்கான விளக்கமும் தான். அது கேட்டு உவுகை மீக்குற்ற பெரிய ஷைகுனா அவர்கள் சில அடிகள் தாம் உள்ளே எடுத்து வைத்திருப்பார்கள். ஸையிதீ மிஸ்கீன் என்ற அழைப்பொலி· அவர்களின் செவியில் ஒலித்தது. அந்த ஒலியை எழுப்பியவர் யார்? அத் திருச்சபையின் நடுவில் வீற்றிருந்த பாஸி ஆண்டகை அவர்களே.

இதன்பின் ஆண்டகை அவர்கள் பெரிய ஷைகுனா அவர்களை அன்போடணைத்துத் தம் அருகே அமர்த்தி நலம் விசாரித்தபின், அவர்களுக்கு பை அத்தும், கிலாஃபத்தும் (தீட்சையும், பிறருக்கு தீட்சை அளிக்கும் அதிகாரமும்) கொடுக்க முன் வந்தார்கள். அப்பொழுது பெரிய ஷைகுனா அவர்கள், ஆண்டகை அவர்களை நோக்கி, ''பை அத்தைப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் கிலாஃபத்தைப் பெற எனக்குத் தகுதியில்லையே என்ற நான் அஞ்சுகிறேன்'' என்று வினயமாகக் கூறினர்.

அப்பொழுது ஆண்டகை அவர்கள், ''ஸையிதீ மிஸ்கீன்! உம்மைப் பற்றி எனக்கு இறைவன் பால் இருந்து செய்தி வந்துள்ளது. அதனை ஏற்க உமக்கும் தகுதியுண்டு. இன்று முதல் இத் தரீக்காவிற்கு நீரே கலீபா, நீரே 'வலி' என்று கூறினார்கள்.

அப்பொழுது பெரிய ஷைகுனா அவர்கள் மீண்டும், ''நான் அப்பதவியைத் தாங்க மாட்டேனே'' என்று தம் ஆற்றாமையை வெளிப்படுத்திய பொழுது, ''நீர் மட்டுமல்ல, உம் மகனும் வலி தான்'' என்றார்கள் ஆண்டகை அவர்கள்.

மீண்டும் பெரிய ஷைகுனா அவர்கள், ''நான் அப் பதவியைத் தாங்க மாட்டேனே'' என்று கூறிய பொழுது, ''உம் மகனின் மகனும் வலி'' என்று கூறி, அம்மூவருக்கும் கிலாஃபத் வழங்கினார்கள் ஆண்டகை அவர்கள்.

இதன்பின் யாது கூறுவதென அறியாது, வாய்பொத்தி இருந்த பெரிய ஷைகுனா அவர்களை; ஆண்டகை அவர்கள் நோக்கி, ''உம் ஞான நிலை நிறைவு பெற்றுத் தான் இருந்தது. நம்முடன் நீர் கொள்ள வேண்டிய தொடர்பு ஒன்றே பாக்கியாக இருந்தது. அதுவும் இப்பொழுது நிறைவு பெற்று விட்டது'' என்று கூறினார்கள்.

பெரிய ஷைகுனா மூலம் ஷாதலியா தரீக்கா தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் நல்ல முறையில் பரவி வருவதை அறிந்த ஆண்டகை அவர்கள், பெரிதும் மகிழ்ந்து, தாமே இந்தியாவுக்குப் புறப்பட்டு வர எண்ணி, ஜித்தா துறைமுகத்திற்கும் வந்து விட்டார்கள். இதற்கிடையில் மதீனா புறப்பட்டு வருமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஆணை வந்து விட்டதால், அப்பயணத்தைக் கைவிட்டு மதீனா புறப்பட்டு விட்டார்கள். எனினும் பின்னர் அவர்கள், தம் பிரதி நிதியாக முஹம்மது ஸாலிஹ் (ரஹ்) அவர்களைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஆண்டகை அவர்கள், 'புதூஹாத்தூர் ரப்பானிய்யா'. 'அல் கன்சுல் முதல்ஸம்', 'மராத்திபுல் உஜூது', 'மராத்திபுத்தீன்', 'புயூளாத்துல் குயூப்', 'கிதாபுத் திஃதாத்', 'அத்துர்ரத்துல் லாமிஆ', 'நபஹாத்துல் தாஇபிய்யா' ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்கள்.

தம் முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்ததும் ஆண்டகை அவர்கள், தம் மாணவர்களை ஒருங்கழைத்து, இரவிலும், பகலிலும், மறைவாகவும், வெளிப்படையாகவும், அல்லாஹ்வை நியமமாக 'திக்ரு' செய்து வருமாறும், எந்த நேரமும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி வருமாறும், பக்கீர்கள் மீதும், சான்றோர்கள் மீதும், அன்பு செலுத்தி வருமாறும், இறுதி உரை பகர்ந்தார்கள். பின்னர் தம் மகன் ஷம்சுத்தீன் முஹம்மதுல் மக்கீ (ரஹ்) அவர்களைத் தம் ஆசனத்தில் அமர்த்தி, அவரின் கரம் பற்றி 'பைஅத்' தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு தம் மாணவர் களைப் பணித்தார்கள். அவ்விதமே அவர்களும் செய்தனர்.

இதன்பின் ஆண்டகை அவர்கள் ஹிஜ்ரி 1288 -ஆம் ஆண்டு, துல்கஃதா மாதம், பத்தாம் நாள், புதன்கிழமை வைகறையில் மக்கமா நகரில் இறப்பெய்தினார்கள். அவர்களின் பொன்னுடல் குளிப்பாட்டப் பட்டபின், அவர்களின் நெஞ்சுக்குழியில் இருந்த தண்ணீரை, இமாம் ஸையிது அஹ்மது ஜைனி தஹ்லான் (ரஹ்) அவர்கள் தம் வாயினால் உறிஞ்சிப் பருகிவிட்டு, ''இவர்கள் கல்விக் கடலல்லவா?'' என்று கூறி வாயார்ந்தனர். பின்னர் அவர்களின் பூத உடல் கஃபனிடப்பட்டு, ஜன்னத்துல் முஅல்லாவில், அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களின் அடக்கவிடத்திற்கு அண்மையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

9. சையிது அஹ்மது அல் பதவீ (ரஹ்)

எகிப்தில் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்), அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்), இப்ராஹீம் அல்தஸூகி (ரஹ்) ஆகியோருக்கு நிகரான மாபெரும் குத்பாகக் கருதப்படுபவர்கள், அஹ்மது அல் பதவீ (ரஹ்) அவர்களாவர். அவர்கள் பிறந்த கிளை, பனீபுவை கிளை என்றும் அது மாண்பார்ந்த கிளை என்றும், இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைப்பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழித்தோன்றல்களான அக்குடும்பத்தினர், சிறிது காலம் சிரியாவில் தங்கி வாழ்ந்து வந்தார்கள். பின்னர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபின் கொடுமை தாங்க இயலாது, அங்கிருந்து புறப்பட்டு ஃபாஸ் நகரம் வந்து அங்குத் தங்கினார்கள்.

இச்சமயத்தில் இக்குடும்பத்தில் தோன்றிய சையிது அலீ என்பவருக்கும், இந்நகரில் வாழ்ந்த அரபிக்கிளையில் தோன்றிய ஆரணங்கான பாத்திமாவுக்கும் திருமணம் நிகழ்ந்தது. அத்திருமணத்தின் மூலம் பூத்த நறுமலராக, ஹிஜ்ரி 596 - ஆம் ஆண்டில், சையிது அஹ்மது அல் பதவீ (ரஹ்) அவர்கள் பிறந்தார்கள்.

ஏழெட்டு குழந்தைகளை ஈன்ற பின் இறுதியாக இக் குழந்தையை பாத்திமா ஈன்றெடுத்த பொழுது, அவரின் கனவில் ஒரு பெரியார் தோன்றி, அவருக்குப் பிறந்திருக்கும் குழந்தை அல்லாஹ்வின் மாண்பார்ந்த இறைநேசராக விளங்குவார் என்று நன்மாராயம் நவின்று விட்டு மறைந்தனர்.

ஹிஜ்ரி 603 ஆம் ஆண்டில் ஓரிரவு, தந்தை சையிது அலீ அயர்ந்து படுத்துறங்கும் பொழுது, கனவொன்று கண்டார். அதில் அவரை மக்கா செல்லுமாறு பணிக்கப்பட்டது. அவ்வாறே அவர் தம் குடும்பத்தினர் அனைவரையும் அழைத்துக் கொண்டு மக்கா புறப்பட்டார். வழியில் அவர்கள் பற்பல ஊர்களிலும் தங்கி, இறுதியாக மக்கா வந்துசேர நான்கு ஆண்டுகளாயின.

இப்பயணத்தைப் பற்றிப் பிற்காலத்தில் அஹ்மது அல்பதவீ (ரஹ்) அவர்கள் கூறும் பொழுது, அது கவிதை உருவில் பின்வருமாறு வெளிவந்தது.

''எந்த மண் நறுமணம் கமழுமோ, அந்த அரபு நாட்டு மண்ணில் நாங்கள் பயணம் செய்தோம். அந்தப் புனிதப் பயணத்தைத் தவிர, எனக்கொரு சேமிப்புப் பொருள் வேறு இல்லை. அதன் நிழலில் நாங்கள் தங்குவதற்காக வந்தோம். அது எங்களுக்கு நிழல் நல்கும் இடமாகவும், மாண்பும் மதிப்பும் தரும் இடமாகவும், அமையுமென்று நாங்கள் ஆதரவு வைத்தோம்.''

மக்காவில் 'ஹஜ்'ஜு செய்து விட்டு, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காக, அக்குடும்பத்தினர் மதீனா சென்ற பொழுது, அவர்களுக்குப் பெரும் வியப்பு ஒன்று காத்திருந்தது. அவர்களை வரவேற்க மதீனாவின் ஆளுநரின் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டமே நகர வாயிலுக்கு வந்திருந்தது.

அவர்களைக் கண்டதும் ஆளுநர் முன் வந்து, குடும்பத் தலைவரான சையிது அலீயை நோக்கி, 'எங்கே அஹ்மது? எங்கே அஹ்மது?'' என்று ஆவலோடு வினவினார்.

அது கேட்டு என்னவோ, யாதோ என்று பதறிப்போன சையிது அலீ, ''அப்பெயருடன் பெரியவர் எவரும் இங்கில்லை. என் மகன் அஹ்மது என்பவர் தாம் உள்ளார். அவரோ பருவமெய்தாப் பதினொரு வயது இளவல்'' என்று பதிலிறுத்தார்.

''அப்படியா! அவரை என்னிடம் காட்டுங்கள்! அவரை நான் அவசியம் பார்த்தாக வேண்டும். அவரைத் தரிசித்து, அவரின் ஆசிபெறத் தான் நாங்கள் இங்குத் திரண்டு வந்துள்ளோம். சென்ற இரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், என் கனவில் திருத்தோற்றம் வழங்கி, அஹ்மது என்ற ஒருவர் மதீனா வருவதாகவும், அவரை நன்முறையில் வரவேற்று ஆவன செய்யுமாறும் பணித்துவிட்டுச் சென்றனர்'' என்று மூச்சுத் திணறக் கூறினார்.

அப்பொழுது சையிது அலீ, அவரை நோக்கி, ''மேதகு ஆளுநர் அவர்களே! என் புதல்வர் சிறியவராயிற்றே, அவரிடம் நீங்கள் எவ்வாறு ஆசிபெறப் போகின்றீர்கள்?'' என்று வினவினர்.

அவரின் இவ்வினா ஆளுநரை ஒரு கணம் குழப்பத்தில் ஆழ்த்தியது. எனினும் சமாளித்துக் கொண்டு, ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவரின் அங்க அடையாளங்களை என்னிடம் கூறியுள்ளார்கள். அவருக்கு

வட்டமான முகமும், கூரிய மூக்கும் இருக்குமென்றும், அவரின் மூக்கின் மீது மருவொன்று இருக்குமன்றும் மொழிந்துள்ளார்கள். அவற்றைக் கொண்டு நான் அவரை இலக்குக் கண்டுபிடித்து விடுவேன். காட்டும் உம் மகனை! காட்டும் உம் மகனை!'' என்று பதற்றத்துடன் கூறினார் அவர்.

சற்றுப் பின்னால் வந்து கொண்டிருந்த சையிது அலீயின் குடும்பத்தினர், நகரவாயிலை அடைந்ததும், சையிது அலீ, தம்முடைய கடைசிச் செல்வமான அஹ்மதை அழைத்துச் சென்று ஆளுநரின் முன் நிறுத்தி, ''இவர் தாம் என் புதல்வர் அஹ்மது'' என்று கூறினார்.

சற்று நேரம் அவ்விளவலைக் கூர்ந்து கவனித்த ஆளுநர், ஓடோடிச் சென்று அவரை ஆரத்தழுவி முத்தமிட்டு, ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய அங்க அடையாளங்கள் அப்படியே உள்ளன'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்து, அவர்களை நகருக்குள் அழைத்துச் சென்று, பெரிதும் சங்கை செய்தார். இதிலிருந்து அவர்களின் புகழ் நாடெங்கணும் பரவலாயிற்று.

பல நாட்கள் அரசு விருந்தினராக மதீனமா நகரில் தங்கி, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்து, அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்து வந்த அக்குடும்பத்தினர், பின்னர் அந்நகர ஆளுநரிடமும் மக்களிடமும் பிரியா விடை பெற்று மக்கமா நகர் வந்தனர். மக்கமா நகர் வந்த சிறிது காலத்திற்குள், அக்குடும்பத்தின் தலைவர் சையீது அலீ காலமாகிவிடவே, அக்குடும்பத்தினர் நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டனர்.

இப்பொழுது குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு முழுவதும் சையீது அலீயின் முதல் மகன் சையிது ஹஸனின் தோள் மீது வந்து விழுந்தது. அவர் தம் மகன் ஹுஸைனுடன் சேர்த்துத் தம் இளவல் அஹ்மதையும் பள்ளிக்கு அனுப்பி வைத்து இருவரையும் இருகண்கள் போன்று கவனித்து வந்தார்.

பள்ளியிலே இளவல் அஹ்மது, மாலிக் மத்ஹப் ஃபிக்ஹையும், ஏழு வகை 'கிரா அத்' களையும் ஐயம் திரிபறக் கற்றுத் தேர்ச்சியுற்றார்கள். சிறிது காலத்திற்குப், பின் ஷாஃபி மத்ஹபில் அவர்களுக்கு ஈடுபாடு ஏற்பட, அவர்கள் ஷாஃபி மத்ஹப் ஃபிக்ஹைப் பயின்று ஷாஃபியாக மாறி இறுதிவரை அந்த மத்ஹபிலேயே இருந்து வந்தார்கள்.

அவர்களுக்கு இளமைப் பருவத்தில் வீர விளையாட்டுகளிலும், கவனம் சென்றது. எனவே அவர்கள் மக்காவின் பிரபுக்கள் போன்று, குதிரை மீது இவர்ந்து செல்வதிலும் இன்பம் கண்டனர். வீர

விளையாட்டுகளிலும், குதிரைச் சவாரியிலும் அவர்கள் சிறந்து விளங்கியதன் காரணமாக, அவர்களுக்கு 'அல் அத்தாப் (மாபெரும் குதிரைச் சவாரி வீரர்) என்னும் பெயரும் 'அத் கத்பான்' (மூர்க்கமானவர்) என்ற பெயரும், 'அபுல் ஃபித்யான்' (இளைஞர்களின் தந்தை) என்ற பெயரும் ஏற்பட்டன. மேலும் அவர்களை 'இத்தாப்' (தளபதி) என்றும் 'கல்பான்' (கோபக்காரர்) என்றும், 'முஹாரிஸுல் ஹர்ப்' போரைத் தூண்டுபவர்) என்றும் மக்கள் அழைத்தனர். பிற்காலத்தில் அவர்களுக்கு 'அபுல் ஃபரஜ்' (மகிழ்ச்சியின் தந்தை) என்ற பெயரும், அவர்கள் காட்டரபிகளின் உடையணிந்திருந்ததால் 'பதவி' என்ற பெயரும் ஏற்பட்டு, இறுதியாக 'பதவி' என்ற பெயரே அவர்களின் இயற் பெயருடன் இணைந்து நிலைத்து விட்டது. எனவே அவர்கள், அரபு அவனி முழுவதும் அஹ்மது அல் பதவீ என்று அழைக்கப்பட்டனர்.

அஹ்மது அல் பதவீ (ரஹ்) அவர்களுக்கு வயதேறப் பெற்றதும் அவர்களின் தமயனார், அவர்களுக்குத் திருமணம் முடித்து வைக்க விரும்பினார். ஆனால் அவர்களோ திருமணத்தை அறவே வெறுத்து, துறவறத்தை மேற்கொண்டனர். துறவறத்தை மேற்கொண்டதோடு, மட்டுமின்றி வாய் மூடி மௌனமும் காத்தனர்.

இப்பொழுது அவர்கள் கனவொன்று கண்டனர். அதிலே அசரீரி ஒன்று "படுத்திருப்பவரே! எழுந்து கிழக்கு நோக்கிச் செல்லும்! பின்னர் மேற்கு நோக்கிச் செல்லும்!" என்று கூறியது.

கனவு கண்டு விழித்தெழுந்த அவர்கள், அதனைப் பொருட் படுத்தாது வாளாவிருந்தனர். பின்னர் இரண்டாவது தடவையும் அக்கனவு தோன்றி, அவர்களுக்கு முன்னர் போன்று அறிவுறுத்தியது. பின்னர் மூன்றாவது தடவையும் அக்கனவு தோன்றி அவர்களை அதட்டியது.

இதன் பின்னரே உணர்வு பெற்ற அவர்கள், இது தெய்வ அறிவிப்பு என்பதை நன்கு உணர்ந்து, தம் தமயனார் சையிது ஹஸனிடம் சென்று தாம் கண்ட கனவுகளைக் கூறினர்.

அப்பொழுது தமயனார் தம்பியை நோக்கி, "தம்பீ! நீர் கண்ட கனவுகளின் உட்பொருளைக் கவனித்தால், உம்மை இராக் செல்லுமாறு பணிக்கப்பட்டது போல் தோன்றுகிறது. ஆனால் நீர் அங்குச் செல்வதை நான் விரும்பவில்லை. ஏனெனில், இராக்கில்தான் பல இறைநேசச் செல்வர்கள் அடங்கப் பெற்றுள்ளனர். நீர் அங்கு சென்றால் இறந்து விடுவீரோ, நீர் அடங்கப் பெறும் இடமும் அதுவாக ஆகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்" என்று கூறினார்.

எனினும் அஹ்மது அல் பதவி (ரஹ்) அவர்கள், தமயனாரின் பேச்சைக் கேட்கவில்லை. ''நான் கண்ட கனவோ சாதாரணக் கனவாக எனக்குத் தெரியவில்லை. தெய்வ அறிவிப்பாகவே நான் அதனைக் கருதுகிறேன். எனவே நான் இராக் செல்லத்தான் போகிறேன்'' என்று உறுதியாகக் கூறினர்.

தம்பியைத் தனியே இராக்குக்கு அனுப்ப விரும்பாத சையிது ஹஸன், தம்பியுடன் சேர்ந்து, தாமும் இராக் பயணத்தை மேற் கொண்டார். ஹிஜ்ரி 634 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில், மக்காவி லிருந்து புறப்பட்ட அவர்கள், ரபீயுல் அவ்வல் மாதத்தில் அப்பாஸியக் கிலாபத்தின் தலைமைப் பீடமாகிய பக்தாது மாநகரம் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு வந்ததும், அவர்கள் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுடையவும், அதீ இப்னு முஸாஃபிர் ஹக்காரி (ரஹ்) அவர்களுடையவும், ஹல்லாஜ் (ரஹ்) அவர்களுடையவும், மூஸல் காலிம் (ரஹ்) அவர்களுடையவும் அடக்கவிடங்களை எல்லாம் தரிசித்தார்கள்.

அவர்கள் பக்தாதில், அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் 'ஹஜ்'ஜுப் பயணத் தோழராக இருந்த, அதீ இப்னு முஸாஃபிர் ஹக்காரி (ரஹ்) அவர்களின் அடக்கவிடத்திலேயே தங்கியிருந்தார்கள். ஹக்காரி (ரஹ்) அவர்களைப் பின்பற்றியவர்களோ, யஸீத் மீண்டும் இவ்வுலகிற்கு வருவார் என்றும், தாம் செய்த தீவினைக்குரிய தண்டனையைப் பெற்றபின் மரிப்பார் என்றும் கருதிக் கொண்டிருந்தனர்.

ஓராண்டு காலம் அஹ்மது அல் பதவீ (ரஹ்) அவர்கள் பக்தாதில் தங்கியிருந்தார்கள். இச்சமயத்தில் ''நாடுகளின் திறவுகோல்களின் உரிமையாளர்கள்' ஆன அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களும், அஹ்மதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ்) அவர்களும், அவர்களின் கனவில் தோன்றி, தங்களுடன் சேர்ந்து அத்திறவு கோல்களைப் பங்கு கொள்ளு மாறு அவர்களிடம் கூறி, சில நாடுகளின் திறவுகோல்களை அவர்களிடம் நீட்ட அவர்களோ, ''நான் இவற்றை இறைவனின் கையிலிருந்தே பெற விரும்புகிறேன்'' என்று கூறி, வாங்க மறுத்து விட்டார்கள்.

ஹிஜ்ரி 635 - ஆம் ஆண்டில் மக்கா திரும்பிய அவர்கள், பகலெல்லாம் நோன்பு நோற்கவும், இரவெல்லாம் வணங்கவும், திருக்குர்ஆனை ஓதவும் செய்து வந்தனர். இச்சமயத்தில் அவர்கள் கனவொன்று கண்டனர். அதிலே அவர்களைத் 'தந்தா'என்ற ஊருக்குப் போகுமாறு பணிக்கப் பட்டது. அவ்வாறே அவர்கள் 'தந்தா' புறப்பட்டார்கள்.

தந்தாவிலே பாத்திமா பின்த் பாரி என்ற சீமாட்டி வாழ்ந்து வந்தார். அவரும் ஒரு கனவு கண்டார். அதிலே அவருக்கு அஹ்மது அல் பதவீ (ரஹ்) அவர்கள் 'தந்தா' வரும் செய்தி அறிவிக்கப்பட்டது. கனவு கண்டு விழித்தெழுந்த அவர் பெரிதும் மகிழ்வுற்று, ஆண்டகை அவர்களைத் தெருவிலே சந்தித்துத் தம் இல்லம் அழைத்து வருமாறு ஓர் அலுவலாளரை அனுப்பி வைத்தார்.

அவ்வாறே அலுவலாளர் ஆண்டகை அவர்களைத் தெருவிலே சந்தித்து, அவரின் இல்லம் அழைத்து வந்த பொழுது, அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. ஆண்டகை அவர்களை அன்போடு வரவேற்று, விருந்தளித்த பின், அவர்களைப் பெயர் சொல்லி அழைத்துத் தம்மைத் திருமணம் முடித்து மகிழுமாறு வேண்டினார் அவர்.

அவரின் இவ்வேண்டுகோள் ஆண்டகை அவர்களின் செவியில் நாராசம் போல் பாய்ந்தது. எனினும், தம்முடைய வெறுப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''அம்மணீ! நான் அல்லாஹ்வின் மீது அடங்காக் காதலுற்றேன். எனவே நான் எவரையும் மணமுடித்துக் கொள்ள விரும்பவில்லை'' என்று கூறினார்கள்.

எனினும் அப்பெண்மணி கேளாது, திரும்பத் திரும்ப அவர்களை நச்சரிக்கவே அவர்கள் அவரை நோக்கி, ''தாங்கள் அஹ்மது அல் கபீர் (ரஹ்) அவர்களின் அடக்கவிடம் சென்று, இதுபற்றி அவர்களின் அனுமதி பெற்று வாருங்கள்!'' என்று கூறினார்கள்.

அவரும் இதற்கு ஒப்பி, ஃபதாயிஹ் புறப்படத் தயாரானார். ஆனால், அவரின் உதவியாளர்கள், இந்த பக்கீரின் பேச்சைக் கேட்டு இவ்வளவு தொலைவுப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாமென்று கூறித் தடுத்து விட்டனர்.

அவரோ வாள் போரிலும், குதிரை ஏற்றத்திலும் தேர்ச்சி பெற்ற வீராங்கனையாக விளங்கினார். எனவே வன்முறையால் அவர் ஆண்டகை அவர்களைத் தம் நோக்கத்திற்கு இணங்க வைக்க முயன்ற பொழுது, அவர்கள் தம் அருகே நின்று கொண்டிருந்த புரவி மீது பாய்ந்தேறி, அதனை வேகமாகச் செலுத்திக் கொண்டு சென்றார்கள். பாத்திமாவும் அவர்களுக்குச் சிறிதேனும் சளையாது புரவி மீது ஏறி அவர்களை விரட்டிக் கொண்டு சென்றார். அது கண்டு பொறுமையின் புகலிடமான ஆண்டகை அவர்களுக்குக் கடும் சினம் ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தார்கள் அவர்கள். அடுத்த கணம் பாத்திமா இவர்ந்து வந்த புரவி அவ்விடத்திலேயே விழுந்து செத்து மடிந்தது.

இதன் பின்தான் ஆண்டகை அவர்களின் மாண்பு பாத்திமாவுக்குத் தெரியவந்தது. தாம் செய்த தவற்றிற்காகப் பெரிதும் வருந்தி, ஆண்டகை அவர்களிடம் மன்னிப்புக் கோரினார் அவர். ஆண்டகை அவர்களும் பெருமனத்துடன் அவரை மன்னித்தார்கள். இதன் பின் அவர் ஆண்டகை அவர்களிடம் 'பைஅத்' செய்து அவர்களின் சீடர்களில் ஒருவராகி விட்டார்.

தந்தாவில் அவர்கள் ருக்னுத்தீன் இப்னு ரகீன் என்பவரின் இல்லத்தில் தங்கி வாழ்ந்து வந்தார்கள். அவரோ தேன், தானியங்கள், எண்ணெய் ஆகியவற்றைக் கொள் முதல் செய்து வாணிபம் செய்து வந்தார். அவர்கள் அங்கு வந்து தங்கிய முதல் இரவிலேயே, அவர்கள் அஹ்மது அல் கபீர் ரிஃபாயீ(ரஹ்) அவர்கள் அங்கு வருகை தந்து மக்களுக்கு அறிவுரை செய்வதாகக் கனவு கண்டார்கள். அதிலிருந்து அவ்வில்லமே தாம் தங்குவதற்கு ஏற்ற இடமெனக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டார்கள்.

இப்னு ரகீன் தம் இல்லத்திலேயே வாணிபம் செய்து வந்தார். தானியங்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை இலாபத்திற்கு விற்காது, தானியங்களை வாங்கிச் சேமித்து வைத்துப் பஞ்ச காலத்தில் மலிவு விலைக்கு அவற்றை மக்களுக்கு விற்குமாறு அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

இப்னு ரகீன் இறந்ததன் பின், அவர்கள் இப்னு ஷைகு நாஹியாவுக்குச் சொந்தமான அடுத்த வீட்டில் குடியேறி வாழலானார்கள். அவ்வீட்டில் அவர்கள் இருபத்தாறு ஆண்டுகாலம் தங்கி, மக்களுக்குப் பின்வருமாறு அறபோதம் செய்து வந்தார்கள்:

(1) எவனுடைய இதயம் மாசின்றி தெளிவு பெறவில்லையோ, அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மாண்பு இல்லை.

(2) எவனிடத்தில் அடக்கம் இல்லையோ, அவனுக்கு அவனுடைய அறிவால் எத்தகைய பலனும் ஏற்படாது.

(3) எவனிடத்தில் ஈகைக் குணம் இல்லையோ, அவனுக்கு அவனுடைய செல்வத்தை அனுபவிக்கும் நற்பேறும் இல்லை.

(4) எவன் அல்லாஹ்வின் அடியார்கள் மீது இரக்கம் கொள்ள வில்லையோ, அவன் மீது அல்லாஹ்வும் இரக்கம் கொள்ள மாட்டான்.

(5) எவனுக்குப் பொறுமை இல்லையோ அவனுக்கு 'ஸலாமத்'தும் இல்லை.

(6) எவனிடத்தில் தக்வா (இறையச்சம்) இல்லையோ, அவனுக்கு இறைவனிடத்தில் எத்தகைய தகுதியும் இல்லை.

இந்த ஆறு செயல்களையும் எவன் பெற்றிருக்கவில்லையோ அவனுக்கு சுவனத்தில் மதிப்பிற்குரிய இடமுமில்லை.

அவர்கள் தாம் வாழ்ந்து வந்த இல்லத்தின் கூரை மீது ஏறி நின்று, கதிரவனைக் கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதன் காரணமாக அவர்களின் கண்கள் தீக்கங்கு போல் ஆகிவிட்டன. எப்பொழுதும் வாய் மூடி இருக்கும் அவர்கள், சிலபொழுது கன்னா பின்னா என்று கத்திக் கொண்டு, நாற்பது நாட்கள் வரை அன்ன ஆகாரமின்றி இருப்பார்கள். அவர்கள் பற்பல அற்புதங்களை நிகழ்த்தி னார்கள் என்றும் கூறப்படுகிறது. அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்ற அல் மலிக்குஸ் ஸாஹிர் பைபர்ஸ், தந்தா வந்து அவர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிபெற்றுச் சென்றார்.

நாற்பத்தொரு ஆண்டுகள் தந்தாவில் வாழ்ந்து தீன் சுடர் கொளுத்தி வந்த அவர்கள் ஹிஜ்ரி 675, ரபீயுல் அவ்வல் பிறை 12 (கி.பி.1276 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 - ஆம் தேதி) அங்கேயே இறப்பெய்தி, நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களின் அடக்கவிடத்தின் மீது அவர்களின் கலீபா ஸாலிஹ் அப்துல் என்பவரால் கட்டடம் எழுப்பப் பட்டுள்ளது.

அவர்களின் அடக்கவிடத்தில் ஆண்டொன்றிற்கு மூன்று மௌலீதுகள் - ஒன்று, ஆகஸ்ட் மாதத்திலும் மற்றொன்று, பிப்ரவரி மாதத்திலும் பிறிதொன்று, மார்ச், ஏப்ரல் மாதங்களிலும் - ஓதப்படு கின்றன.

எகிப்து மக்கள் 'ஹஜ்'ஜு செய்யச் செல்லுமுன், இவர்களின் இடத்தைத் தரிசித்து, அவர்களின் ஆசி பெறவருவதால் அவர்களின் அடக்கவிடம் 'பாபுந்நபி' (நபியின் வாயில்) என்று அழைக்கப்படுகிறது.

10. மௌலானா ரூமி (ரஹ்)

அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அன்புத் தோழர் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகனார் அப்துர் ரஹ்மானின் வழி வழி வந்த ஒரு குடும்பத்தினர், கொராஸான் நாட்டிலுள்ள பல்க் நகரில் வாழ்ந்து வந்தார்கள். அக்குடும்பத்தில் தோன்றிய ஜலாலுத்தீன் ஹுஸைன் காத்திபி என்பவர், மார்க்க ஞானத்தில் தேர்ச்சி பெற்று, சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். அவரின் பேரும் புகழும் நாடெங்கணும் பரவிப் பரிமளித்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது கொராஸான் நாட்டு மன்னராக முஹம்மது கரம் ஷா செங்கோலோச்சிக் கொண்டிருந்தார். அவரின் அருமைத் திருமகள் மாலிகாஜஹான், அழகெல்லாம் திரண்ட ஆரணங்கு. அவரின் அழகோடு போட்டியிட்டுக் கொண்டு, அறிவும் அவரிடம் குடி கொண்டிருந்தது. அறிவும் அழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற தம் அன்புத் திருமகளுக்கு ஏற்ற கணவன் அரசகுலத்தில் எங்குத் தேடினும் கிடைக்காமல் போகவே, தம் அமைச்சரின் ஆலோசனையின் படி, தம் நாட்டில் மார்க்க மேதைகளின் தலைவராக விளங்கிய ஜலாலுத்தீன் ஹுஸைன் காத்திபிக்கு அவரை மணமுடித்து மகிழ்ந்தார் சுல்தான் முஹம்மது கரம் ஷா.

ஜலாலுத்தீன் ஹுஸைன் காத்திபி - மாலிகாஜஹான் தம்பதிகளின் அருமைத் திருமகவாக ஹிஜ்ரி 543 ஆம் ஆண்டில் பிறந்த பஹாவுத்தீன் வலத் அவர்கள் விரைவில் கல்வி, கேள்விகளில் தேர்ச்சியுற்றுத் தம் தந்தையினும் சிறந்தது விளங்கினார்கள். தீராத மார்க்கப் பிரச்சினைகளையெல்லாம் ஒரு நொடியில் தீர்த்து வைக்கும் திறன் பெற்றிருந்த அவர்களின் திருச்சபை அரசர்களின் அத்தாணி மண்டபம் போன்று விளங்கியது. 'சுல்தானுல் உலமா' என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கிய அவர்கள், ஒவ்வொரு நாளும் காலையிலிருந்து நண்பகல் வரை பொதுமக்களுக்கு மார்க்க சட்ட திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கவும், பிற்பகலில் குறிப்பிட்ட சிலருக்கு ஆன்மீகக் கல்வியைப் போதிக்கவும் செய்து வந்தார்கள். வெள்ளி, திங்கள் ஆகிய இரு தினங்களிலும் அவர்கள்,

மார்க்கம் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள். அதனைக் கேட்க மக்கள் திரண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

சிறந்த மார்க்க மேதையாக விளங்கிய அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமை மருகர் அலீ (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய ஒரு மங்கை நல்லாரை மணமுடித்து, இல்லறத்தை நல்லற மாகச் செய்து வந்தனர். அவர்களின் இரண்டாவது மகனாக ஹிஜ்ரி 604 ஆம் ஆண்டு ரபீயுல் அவ்வல் பிறை ஆறில் (கி.பி.1207 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள்) ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு பஹாவுத்தீன் வலத், தம் தந்தையின் திருப்பெயராகிய ஜலாலுத்தீன் என்பதையே சூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார்கள்.

பஹாவுத்தீன் வலதின் திருச்சபை நாளுக்கு நாள் மக்கள் வெள்ளத்தால் வழிந்து கொண்டிருந்தது. அவர்களின் கரம் பற்றித் தீட்சை பெறுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. அதைக் கண்டு மார்க்க விற்பன்னர்கள் பலர் பொறாமையுற்றனர். கிரேக்க தத்துவ ஞானிகளை அவர்கள் கடுமையாகத் தாக்கியதும், இறைமறையாம் திருமறையைப் புறக்கணித்து விட்டு, கிரேக்க தத்துவ ஞானிகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவோர் ஒரு போதும் இறையருளை எய்தப் பெற மாட்டார்கள் என்று அவர்கள் ஆணித்தரமாக எடுத்துரைத்ததும், பலரை அவர்களுக்குப் பகைவர்களாக்கின. எனினும் என் செய்வது? மன்னரே அவர்களின் கரம் பற்றித் தீட்சை பெற்ற ஆன்மீக மாணவராக இருக்கும் பொழுது, என் செய்வது என்று அவர்கள் ஏங்கிக் கொண் டிருந்தார்கள். எனினும் பகைமை அவர்களின் உள்ளத்தில் நீறு பூத்த நெருப்பென இருந்து கொண்டிருந்தது.

ஒருநாள் அரசர் தம் ஆன்மீக ஆசானைக் காண்பதற்காக அவர்களின் தவமடம் வந்த பொழுது, அங்குக் குழுமியிருந்த மக்கள் திரளைக் கண்டு பிரமித்துப் போய் விட்டார். ''என்ன கூட்டம் இது? என்ன கூட்டம் இது'' என்று வியப்புடன் வினவிய அவருக்கு, ஆங்கு நின்று கொண்டிருந்த மார்க்க மேதை ஒருவர், ''மன்னர் மன்ன! தங்களின் ஆன்மீக ஆசானின் கரம் பற்றித் தீட்சை பெறுவதற்காக வந்துள்ள மக்கள் திரள்தான் இது. இதனை இப்படியே வளர விட்டுக் கொண்டு போனால், இது எதில் போய் முடியும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்!'' என்று கூறினார்.

அவ்வளவுதான். அரசரின் மூளை வெகு வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. ''ஆம்; ஆம். இதனை இப்படியே வளரவிட்டுக் கொண்டு போனால், இது எதில் போய் முடியும்? என் ஆட்சிக்கே முடிவு கட்டிவிடும். எனவே இதனை மூளையிலே கிள்ளி எறிவதே அறிவுடைமை'' என்று எண்ணினார் அவர்.

பின்னர் அந்த மார்க்க விற்பன்னரை அரண்மனைக்கு அழைத்து வரச் செய்து, அவருடன் அது பற்றி ஆலோசனை கலந்தார் அரசர். தாம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பொன்னான வாய்ப்பு, தம் முன் வந்து நிற்பதைக் கண்ட அவர், ''மன்னர் மன்ன! தாங்கள் தங்களின் அரண்மனை, கோட்டை, கொத்தளங்கள், கருவூலங்கள் ஆகியவற்றின் திறவு கோல்களை அனைத்தையும் ஒருங்கு சேர்த்து அவரிடம் அனுப்பி வைத்து, 'ஒரு நாட்டில் இரண்டு அரசர்கள் ஆள முடியாததால் இவற்றைத் தங்களிடம் அனுப்பி வைத்துள்ளேன்' என்று சொல்லி அனுப்புங்கள்!'' என்று ஆலோசனை கூறினார். அவ்வாறே செய்தார் அரசர்.

அரசத் தூதுவன் திறவு கோல்களைத் தம் முன் குவியல் குவியலாகக் கொண்டு வந்து குவித்து, அரசர் கூறிய செய்தியையும் எடுத்துரைத்த பொழுது, சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய அவர்கள், அதன் பின் அந்த அரசத் தூதுவனை நோக்கி, அரசருக்கு என் 'ஸலாம்' கூறுக! நானோ ஒரு பக்கீர். இந்தக் கருவூலங்களையும், கோட்டை கொத்தளங்களையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். எனவே இத்திறவு கோல்களையெல்லாம் எடுத்துச் சென்று அவரிடமே கொடுத்து, இவ்வரசாங்கம் அவருக்கே உரியதென்றும், நான் இங்குள்ள பெரிய பள்ளியில் என்னுடைய இறுதி ஜும்ஆப் பேருரையை நிகழ்த்திவிட்டு, இந்நகரை விட்டு நீங்குகிறேன் என்றும் கூறிவிடும்!'' என்று சொல்லி அனுப்பினர்.

இச்செய்தி நொடியில் நகரமெங்கணும் பரவியதும், மக்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. தெருவில் கும்பல் கும்பலாக நின்று இதைப் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டார்கள். மக்களின் மனோ நிலையை உணர்ந்த அரசர், இதனை முற்ற விட்டால் தம் அரசுக்கே ஆபத்து ஏற்படுமென்று அஞ்சி, தம் அமைச்சர் பிரதானிகளுடன் பஹாவுத்தீன் வலத் அவர்களின் தவ மடத்திற்கு ஓடோடி வந்து, தம் பிழை பொறுத்தருளுமாறும், பல்கிலேயே இருந்து வழக்கம் போல் ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வருமாறும் வேண்டிக் கொண்டார். ஆனால், அவர்களோ அதற்கு இணங்கவில்லை. ''ஒரு நாட்டில் இரண்டு அரசர்கள் ஆளமுடியாது தான். எனவே நான் விடை பெறுகிறேன்'' என்று அவர்கள் முத்தாய்ப்பாகக் கூறி விட்டார்கள்.

அப்பொழுது அரசர், அவர்களை நோக்கி, ''நல்லது நலமே செல்லுங்கள்! எனினும் தாங்கள் இங்கிருந்து புறப்படுவது இரகசியமாக இருக்கட்டும். மக்கள் அதனை அறியவரின் கலவரம் ஏற்பட்டு வீணே இரத்தம் சிந்தப்படலாம்'' என்று வேண்டிக் கொண்டார். அதற்கு அவர்கள் இணங்கினார்கள்.

வெள்ளிக் கிழமை வந்தது. அன்று அவர்கள் பள்ளியில் ஜும்ஆத் தொழுகைக்குப் பின் ஒரு சொற்பொழிவாற்றினர். அதில், ''அரசரின் அரசாங்கமோ அழியக் கூடியது. ஆனால் என்னுடைய ஆன்மீக அரசாங்கமோ உலக முடிவு நாள் வரை நிலைத்து நிற்கக் கூடியது'' என்று கூறியதுடன், ''விரைவில் இந்நாட்டின் மீது தார்த்தாரியர்களின் படையெடுப்பு நிகழும்'' என்று சூசகமாக முன்னறிப்புச் செய்தனர்.

அடுத்த நாள் சனிக்கிழமை வைகறையில், அவர்கள் பல்கை விட்டுப் புறப்படும் பொழுது, அந்நகர வீதிகளில் இரத்த ஆறு இல்லை, இல்லை - கண்ணீர் ஆறு கரைபுரண்டோடியது. அக்கண்ணீர் ஆற்றைக் கடந்து அவர்கள் தம் துணைவியோடும் ஐந்து வயதே நிரம்பப் பெற்ற அருமைப் பாலகர் ஜலாலுத்தீனோடும், பல்கை விட்டும் புறப்படும் பொழுது, அவர்களுடன் சேர்ந்து நாற்பது மார்க்க விற்பன்னர்களும் அந்நகர் விட்டு நீங்கினர்.

பஹாவுத்தீன் வலத் அவர்கள் பல்க் விட்டு நீங்கிவிட்டார்கள் என்ற செய்தி நாடெங்கணும் பரவ, வழியில் உள்ள ஒவ்வோர் ஊரினரும் அவர்களை எதிர் கொண்டு வரவேற்று, அவர்களைத் தம் ஊருக்கு எழுந்தருளி அங்கேயே தங்கியிருக்குமாறும், அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தருவதாகவும் கூறினர்.

அவர்களின் அன்பான வேண்டுகோளை நன்றியுடன் மறுத்துவிட்டு, பல ஊர்களையும் கடந்து அவர்கள் நைஷாப்பூர் வந்த பொழுது, அங்கு வாழ்ந்து வந்த ஆன்மீக ஞானி ஃபரீதுத்தீன் அத்தார் அவர்கள், அவர்களை அகமலர முகமலர வரவேற்றதோடு, அவர்களின் அன்பு மகன் ஜலாலுத்தீனை வாரி அணைத்து முத்தமிட்டு, அவர் வருங்காலத்தில் மாண்புற்று மிளிர்வார் என்றும், அவர் மூலம் இலட்சோப லட்சம் மக்கள் நேர்வழி பெறுவர் என்றும், முன்னறிவிப்புச் செய்தார். அத்துடன் நில்லாது தாம் எழுதிய 'அஸ்ரார் நாமா' என்ற நூலையும் அவருக்கு அன்பளிப்பு வழங்கினார்.

அங்கிருந்து அவர்கள் பக்தாது மாநகர் வந்த பொழுது, அங்கு வாழ்ந்து வந்த இறைநேசச் செல்வர் ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்கள், அவர்களை எதிர் சென்று அன்போடு வரவேற்றுத் தம் இல்லம் அழைத்துச் சென்று, அவர்களின் காலணிகளைக் கழற்றினார்கள். அவ்விதம் தாம் செய்ததைத் தமக்குக் கிடைத்த மாபெரும் பேறு என்றும் கருதினார்கள்.

பக்தாது வந்த பஹாவுத்தீன் வலத் (ரஹ்) அவர்கள், அங்கேயே பல்லாண்டுகள் தங்கி, மக்களுக்கு அறபோதம், ஆன்மீக போதம் செய்து

வந்தனர். அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவைக் கேட்ட செல்ஜூக் மன்னர், அலாவுத்தீன் கைக்கு பாதின் தூதுவர் பெரிதும் மகிழ்வுற்று அவர்களின் மாண்பினைத் தம் மன்னருக்குத் தெரிவிக்க, அவர் பக்தாது வந்து அவர்களின் கரம் பிடித்து தீட்சை பெற்று அவர்களின் ஆன்மீக மாணவரானார்.

பின்னர் ஹிஜாஸ் சென்று விட்டு, ஸஞ்சான் வந்த அவர்கள் அங்கு ஓராண்டு காலம் தங்கி இருந்தனர். அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு, கூஃபா வழியாக திமிஷ்கை அடைந்த அவர்களை, அந்நகர மக்கள் தங்களிடையே தங்கி வாழுமாறு கூறத் தம் மூதாதையர் வாழ்ந்து மரித்த கௌன்யாவுக்கே சென்று, அங்கேயே வாழ்ந்து இறப்பெய்த விரும்புவதாக அவர்கள் கூறிவிட்டார்கள்.

பின்னர் லாரந்த் (கிர்மான்) வந்தடைந்த அவர்களை, அதன் மன்னர் வரவேற்று உபசரித்ததோடு, அவர்களின் கரம் பிடித்துத் தீட்சையும் பெற்றார். அந்நகரில் அவர்கள் ஏழாண்டுகள் தங்கியிருந்தனர். இச்சமயத்தில் டில்லியை ஆண்ட சுல்தான் அலாவுத்தீன், இவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களைத் தம் நாட்டிற்கு வருமாறு வேண்ட, ''மது வருந்தும், இசை கேட்கும், உம்மிடம் நான் வர மாட்டேன்'' என்று அவர்கள் கூறிவிட்டார்கள். விரைவில் பல்க் மன்னர் முஹம்மது கரம் ஷா தார்த்தாரியர்களிடம் தோல்வியுற்று இறப்பெய்திய செய்தியும் அவர்களை வந்தெய்தியது.

இப்பொழுது பதினேழு வயதை எட்டிப்பிடித்திருந்த தம் அருமை மகன் ஜலாலுத்தீனுக்கு, அங்கு வாழ்ந்து வந்த காஜா ஷர்புத்தீன் சமர்க்கந்தியின் அருமை மகள் கௌஹர் காத்தூனை மணமுடித்து வைத்து, மகிழ்ந்தார்கள் அவர்கள். அங்கு வைத்து அவ் இளம் தம்பதிகளுக்கு பஹாவுத்தீன் என்ற மகன் பிறந்தான்.

இப்பொழுது அவர்களின் ஆன்மீக மாணவரும், ஸெல்ஜூக் மன்னருமான அலாவுத்தீன் கைக்குபாத், அவர்களைத் தம் தலைநகரான கௌன்யாவுக்கு வருமாறு அழைக்க, அவர்களும் கௌன்யா புறப்பட்டனர். சுல்தான் கைக்குபாத், தம் அமைச்சர் பெருமக்களுடன் நகருக்கு வெளியே வந்து, அவர்களை அன்புடன் வரவேற்று, அவர்களின் பின்னே மரியாதையுடன் கால்நடையாகவே நடந்து சென்றார். மன்னர் தம் அரண்மனையிலேயே தங்குமாறு அவர்களை வேண்ட அவ் வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக் கொள்ளாது, அங்கிருந்த மதரஸாவை தங்களின் இருப்பிடமாக ஆக்கிக் கொண்டனர். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 626 ஆம் ஆண்டிலாகும்.

பஹாவுத்தீன் வலத் (ரஹ்) அவர்களின் ஆழிய கல்வி ஞானத்தையும், ஆன்மீக உயர்வையும் கண்டு பிரமித்துப் போன சுல்தானின் ஆசான் பத்ருத்தீன் கோஹர்த்தஷ், அவர்களினால் கௌன்யா மக்கள் பலனடைய வேண்டுமென்று கருதி, 'மதரஸா குதாவந்தகர்' என்று பெயருடன் ஒரு மதரஸாவை நிறுவி, அதற்குத் தலைவராக அவர்களை நியமித்தார்.

அம்மதரஸாவின் தலைமைப் பீடத்தில் அமர்ந்த அவர்கள் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலும், மார்க்கத் தீர்ப்பு எழுதிக் கொடுப்பதிலும், திங்கள், வெள்ளி ஆகிய இரு நாட்களிலும் மக்களுக்கு அறிவுரை வழங்குவதிலும், வணக்கத்திலும் தங்களின் வாணாளைக் கழித்து வந்தனர்.

அவர்கள் மீது சுல்தான் அலாவுத்தீன் கைக்குபாத் கொண்டிருந்த மதிப்போ அளப்பரியதாக இருந்தது. கௌன்யா நகரைச் சூழ மதிள் எழுப்பி, அதனை அரண் போன்று செய்த அரசர், அதனை அவர்களிடம் காட்டுவதற்காக ஒரு நாள் அவர்களை அழைத்துச் சென்றார். கோட்டைச் சுவர் மீது ஏறி, அதனைப் பார்வையிட்ட அவர்கள், அரசரை நோக்கி, ''வெள்ளத்தையும், வெள்ளம் போன்று வரும் எதிரிகளின் குதிரைப் படைகளையும் எதிர்த்து நிற்க நீர் சிறந்த அரண் அமைத்துள்ளீர். பெரிதும் மகிழ்ச்சி, ஆனால் அநியாயம் செய்யப்பட்டவர்களின், அநீதிக் குள்ளானவர்களின் பெருமூச்சு, அழுகை ஆகிய கண்ணுக்குத் தெரியா அம்புகளை எதிர்த்து நிற்க நீர் என்ன அரண் அமைத்துள்ளீர்? அவை ஆயிரம் கோட்டை, கொத்தளங்களையும் ஊடுருவிப் பாய்ந்து, அகில உலகத்தையும் அழிவுக்குள்ளாக்கி விடுமே. ஆதலின் நீதி, நேர்மை ஆகியவற்றை கோட்டைகளாக நிர்மாணித்து ஆட்சி செய்வீராக! அவைகளே அசைக்க முடியாத கோட்டைகளாகும். அவைகளே இம்மை, மறுமைப் பலன்களை நல்குவதாகும்'' என்று அறிவுரை பகர்ந்தனர்.

கௌன்யா வந்து இரண்டு ஆண்டுகளே உயிர் வாழ்ந்த அவர்கள் ஹிஜ்ரி 628 ரபீயுல் அவ்வல் பிறை 18 வெள்ளிக் கிழமை ஜுஃம்ஆ தொழுகை நேரத்தில், இவ்வுலகு நீத்தனர். இப்பொழுது அவர்களின் மகன் ஜலாலுத்தீனுக்கு வயது இருபத்து நான்காகும்.

'ஜனாபெ மௌலவியெ மஸ்னவீ' என்றும், ஆசியாவிலேயே மிகவும் சிறப்பு வாய்ந்த சூஃபிக் கவிஞர் என்றும் போற்றப்படும் மௌலானா ஜலாலுத்தீன் ரூமி அவர்கள், இளமையிலேயே அருள் வாய்க்கப் பெற்ற இறைநேசச் செல்வராக விளங்கினர். ஏழு வயது தொடுத்தே தொழுகை, நோன்பு ஆகிய மார்க்கக் கடமைகளை

நியமமாகச் செய்து வந்த அவர்களுக்கு, அப்பொழுதிருந்தே பற்பல அற்புதங்களை ஆற்றும் ஆற்றலையும் இறைவன் வழங்கியிருந்தான்.

அவர்கள் பதினொரு வயதுச் சிறுவராக இருக்கும் பொழுது தம் வயதொத்த சிறுவர்களுடன் தம் வீட்டு மேற்கூரை மீது விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, "நாம் அடுத்த வீட்டு மேற்கூரைக்குச் சென்று விளையாடுவோமே" என்று தம் நண்பர்களிடம் கூறினர். அதற்கு அவர்களும் ஒப்பினர்.

"வா! அங்குப் போகலாம்" என்று அவர்கள், அவர்களை அழைத்த பொழுது, "நான் வரமாட்டேன்" என்றார்கள் அவர்கள்.

"நீதானே எங்களை அங்கு அழைத்தாய்?" என்று அவர்கள் வினவிய பொழுது, "ஆம்; நான்தான் அழைத்தேன். ஆனால் படிகளின் மீது இறங்கி, ஏற என்னால் இயலாது. ஆதலின் நீங்கள் செல்லுங்கள். நான் அங்கு வந்து விடுகிறேன்" என்றார்கள் அவர்கள்.

"என்ன இவ்வாறு கூறுகிறாய். உன் வீட்டிற்கும், அடுத்த வீட்டிற்கும் இடையில் அகன்ற வீதி இருக்கிறதே. எவ்வாறு நீ அங்கு வருவாய்?" என்று வியப்புடன் வினவினர் தோழர்கள்.

"அதைப் பற்றி உங்களுக்கு ஏன் கவலை? நான் வருகிறேன். நீங்கள் செல்லுங்கள்!" என்றனர் அவர்கள்.

அவ்வாறே சென்ற அவர்களுக்கு, அங்குப் பெரிய வியப்பொன்று காத்து நின்றது. ஜலாலுத்தீன் அங்கு புன்முறுவல் பூத்த வண்ணம் அவர்களை எதிர்பார்த்துக் காத்து நின்றார்கள்.

கௌன்யாவில் வாழத் தொடங்கியபின் கௌன்யாவின் மற்றொரு பெயரான ரூம் என்பதனைத் தம் பெயருடன் சேர்த்துக் கொண்ட மௌலானா ஜலாலுத்தீன் ரூமி அவர்கள், இளமையில் தம் தந்தையிடமும், பின்னர் சையிது புர்ஹானுத்தீன் என்னும் பெரியாரிடமும் கல்வி பயின்றனர். தந்தை இறந்ததன் பின்னர் அவர்கள் தம் தந்தையின் பீடத்தில் அமர்ந்து மாணவர்களுக்குக் கல்வி போதித்தனர். ஹிஜ்ரி 630 ஆம் ஆண்டில், மேல் கல்வி பயில்வதற்காக அவர்கள் ஹலப் சென்றனர். ஹலப் அக்காலத்தில் கல்வியின் பீடமாக இருந்து வந்தது. அதனை ஆண்ட சுல்தான் மலிக்குஸ் ஸாஹிர், காஜி பஹாவுத்தீன் இப்னு ஷத்தாதின் ஆலோசனையின் மீது அங்கு பல கல்லூரிகளை நிர்மாணித்திருந்தார்.

அங்குள்ள மதரஸா ஹலாவிய்யாவில் சேர்ந்து கமாலுத்தீன் இப்னுல் ஆதிம் என்னும் ஆசிரியரின் திருமுன் கால் மடித்து அமர்ந்து, கல்வி பயின்ற அவர்கள், அப்பொழுதே தீராத மார்க்கப் பிரச்சினைகளுக்கெல்லாம், தீர்வு காணும் திறன் பெற்று விளங்கினர். தாம் கண்ட

தீர்வுகளுக்கு அவர்கள் அறிவார்ந்த காரணம் கூறும் பொழுது, அவை எந்த நூலிலும் காணப் பெறாததைக் கண்டு, சகமாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் வியந்து, அவர்களின் அறிவு வளத்தைப் பாராட்டினர்.

பின்னர் திமிஷ்க் சென்று அங்குள்ள மதரஸா மக்தஸிய்யாவில் சேர்ந்து கல்வி பயின்ற அவர்களுக்கு, ஷைகு முஹ்யித்தீன் இப்னு அரபி, ஷைகு ஸஅதுத்தீன் ஹமவீ, ஷைகு அவ்ஹதுத்தீன் கிர்மானீ, ஷைகு ஸத்ருத்தீன் கௌனவீ ஆகியோரின் தொடர்பு கிடைத்தது.

ஐந்தாண்டுகளுக்குப் பின் கௌன்யா திரும்பித் தம் தந்தையின் ஆசனத்தில் அமர்ந்து கல்வி போதிக்கத் தொடங்கிய–அவர்களின் முன், நானூறு மாணவர்கள் வரை கால் மடித்து வீற்றிருந்து, கல்வி பயிலலாயினர். கல்வி போதிப்பது மட்டுமின்றி, தம்மிடம் வரும் சிக்கலான மார்க்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு 'ஃபத்வா வழங்குவதற்கு ஓர் அறக்கட்டளை அவர்களுக்குப் பதினைந்து தீனார் ஊழியம் வழங்கியது. எனவே, தாம் தியானத்தில் இருந்த போதினும் சரி, வணக்கத்தில் இருந்த போதினும் சரி, மார்க்க ஃபத்வா வேண்டி எவரேனும் மதரஸா வரின், உடனே அவரைத் தம்மிடம் அழைத்து வருமாறு அவர்கள் தம் ஊழியர்களுக்கு ஆணையிட்டிருந்தார்கள். அதற்குக் காரணம், பெறும் ஊதியத்திற்கு ஒழுங்காகப் பணி புரிய வேண்டும் என்று அவர்கள் கருதியதாகும். இவ்வாறு ஏழு ஆண்டுகள் உருண்டோடின.

எனினும் இத்தகு வாழ்வு அவர்களுக்கு மன நிறைவு நல்கவில்லை. அவர்களுக்கு இளமையிலிருந்தே ஆன்மீக ஆசானாக இருந்த சையிது புர்ஹானுத்தீனும் ஹிஜ்ரி 637 ஆம் ஆண்டு இறப்பெய்தி விட்டார். எனவே அவர்களின் ஆன்மீகச் செடி, பற்றிப் படர ஒரு கொழு கொம்பின்றித் தவித்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஆன்மீக விளக்கு, தூண்டுகோல் இன்றி மினுக், மினுக் கென்று எரிந்து கொண்டிருந்தது. என் செய்வதென அறியாது அவர்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள். இச் சமயம் அவர்களின் வாழ்வையே மாற்றியமைக்க வல்ல ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஹிஜ்ரி 642 ஆம் ஆண்டு, ஜமாதியுல் ஆகிர் மாதம், 26 ஆம் நாள் மௌலானா ரூமி பள்ளி வாயலில் நீர்த் தேக்கத்தின் அருகில் அமர்ந்து சில நூல்களை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கம்பளி உடையணிந்த ஒருவர் அவர்களின் அருகே வந்தமர்ந்தார். அவரை அவர்கள் அருவருப்புக் கண்களுடன் பார்த்தார்கள். அப்பொழுது அவர் அந்த நூல்களை அவர்களிடம் கட்டிக் காட்டி, ''அவை என்ன நூல்கள்?'' என்று வினவினார். ''இவை ஞான உதிப்பால் எழுதப்பட்டவை. இவை பற்றி உமக்கு ஏன் அக்கரை?'' என்று வெடுக்கெனப் பதிலிறுத்தார்கள்

அவர்கள். அடுத்த கணம் அவர் அந்நூல்களையெல்லாம் வாரி நீர்த் தேக்கத்தில் போட்டு விட்டார். அது கண்டு அவர்களுக்கு உயிரே போய் விட்டது போன்றிருந்தது. தாம் அரும்பாடுபட்டுச் சேகரித்து வைத்திருந்த அரிய நூல்களல்லவா அவை? எனவே, 'என்ன செய்தீர்? என்ன செய்தீர்?' என்று வாய்விட்டு அலறினார்கள் அவர்கள். ஆனால் வந்தவரோ அவர்களின் அலறலைச் சற்றேனும் பொருட்படுத்தாது, புன்முறுவல் தம் முகத்திலே தவழ, தம் கைகளை நீர்த் தேக்கத்தில் விட்டு வெளியே எடுத்தார். என்ன வியப்பு! அவை அனைத்தும் அணுவத் தனையும் நனையாதிருந்தன. அது கண்டு, ''இது என்ன புதுமை! இது என்ன புதுமை!!'' என்று வினவினார்கள் மௌலானா ரூமி. ''இது பற்றி உமக்கேன் அக்கறை?'' என்று அவர்களின் 'பாஷை'யிலேயே அதற்கு மறுமொழி பகர்ந்தார் அவர். அது கேட்டு மௌலானா ரூமியின் கண்கள் திறந்தன. தாம் சாமான்யர் என்று கருதியவர், சாமான்யரல்லர், மாபெரும் மகான் என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள். இந்த மாபெரும் மகான் யார்?*

★ ஆனால் வேறொரு நூலில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

ஒரு நாள் மௌலானா ரூமி தம்முடைய கோவேறு கழுதையின் மீது இவர்ந்து கௌன்யா நகரின் வீதி வழியே வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைச் சூழ அவர்களின் மாணவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கிருந்த விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஒருவர், சரேலென முன் பாய்ந்து, ''கல்வி கற்பதன் நோக்கம் என்ன?'' என்று வினவினார். ''ஷரீஅத்'தின் சட்டதிட்டங்களை விளங்கிக் கொள்வதற்காக'' என்று மௌலானா ரூமி அவர்கள் பதிலிறுத்தார்கள். ''இல்லை; அறிய வேண்டியதை அறிவதற்காக'' என்று மறுத்துரைத்த அவர், அதன்பின் ஹகீம் ஸினாயீயின் பின்வரும் கருத்தமைந்த கவிதை ஒன்றைக் கூறினார்:

''அந்த அறிவோடு ஒப்பு நோக்கின், உன்னை முன்பு போல் இருக்கச் செய்யும் அறியாமையே மேலானதாகும்'' அது கேட்டு மௌலானா ரூமி பிரமிப்படைந்தார்கள்.

ஆனால் மற்றொரு நூலில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.

சீடர்கள் புடை சூழக் கோவேறு கழுதை மீது இவர்ந்து தெரு வழியே சென்ற மௌலானா ரூமியை, ஒருவர் முன் பாய்ந்து, ''அண்ணல் நபி (ஸல்) அவர்களிலும் பா யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களிலும் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருங்கிய அடியார் யார்?'' என்று வினவினார். ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தாம்'' என்று பதிலிறுத்தனர் மௌலானா ரூமி. ''அவ்விதமாயின், அவர்கள் இறைவனை நோக்கி, 'நான் உன்னை எந்த அளவுக்கு அறிந்திருக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு நான் உன்னை அறியவில்லையே' என்று கூறியிருக்க, பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களோ, 'அனைத்துப் புகழும் எனக்கே! என்னுடைய பெருமை எவ்வளவு மாண்புடையது என்று கூறியிருக்கிறார்களே. இதன் அகமியம் என்ன?'' என்று

அவர்களே ஷம்ஸுத் தப்ரேஸ் (ரஹ்) ஆவார்கள். அவர்களின் இயற்பெயர் ஷம்சுத்தீன் என்பதாகும். அவர்களின் தந்தையின் பெயர் அலீ பின் மலிக் தாவூத் ஆகும். அவர்களின் தந்தை கொராஸானைச் சேர்ந்த பஸார் என்ற ஊரைச் சேர்ந்தவர் என்றும் வாணிபத்தின் பொருட்டு தப்ரேஸ் வந்திருந்த பொழுது அவர்கள் பிறந்தார்கள் என்றும் அஃப்லாக்கியும் ஜாமியும் கூறுகின்றனர். அவர்களுக்கு இளமையிலிருந்தே அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அடங்காக் காதல் இருந்தது. அவர்களின் நினைவிலேயே திளைத்த அவர்கள் அதன் காரணமாக முப்பது அல்லது நாற்பது நாட்கள் கூட ஊனை மறந்து உண்ணாதிருப்பர் எனறு அஃப்லாக்கி கூறுகிறார்.

மார்க்கக் கல்வியைப் பயின்ற பின் ஆன்மீகக் கல்வியைக் கூடை பின்னி விற்று உயிர் வாழ்ந்து வந்த அபூபக்ர் என்பவரிடமும் பின்னர் ருக்னுத்தீன் ஸஞ்சரியிடமும் பயின்ற அவர்கள் பின்னர் ஆன்மீக ஞானிகளைத் தேடி தப்ரேஸ், பக்தாது, ஜோர்தான், ரூம், கைஸரிய்யா, திமிஷ்க் ஆகிய நகரங்களெல்லாம் சுற்றித் திரிந்தார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு பரிந்தா (பறக்கும் பறவை) என்ற பட்டப்பெயர் ஏற்பட்டது.

அவர்கள் கால்சராய்க்குப் பயன்படுத்தும் நாடாவை நெய்து அதிலிருந்து கிடைக்கும் அற்ப வருவாயைக் கொண்டு தம் வாணாளைக் கழித்து வந்தனர். தம்முடைய பொருளாதாரத் தாழ்வையோ, ஆன்மீக உயர்வையோ எவரிடமும் காட்டிக் கொள்ளாது வாழ்ந்து வந்த அவர்கள், ஓர் ஊரில் தங்கியிருந்த பொழுது, வழக்கமாக ஒரு கடையில் ரொட்டி மட்டும் வாங்கி, அதனைத் தண்ணீரில் நனைத்து உண்டு வந்தனர். இதனை எவ்வாறோ அறிந்து கொண்ட அக் கடைக்காரர் ஒரு ரொட்டியில்

வினவினார். யாது பதில் கூறுவதென அறியாது மௌலானா ரூமி அவர்கள் விழித்தனர். அப்பொழுது அவர், 'பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் ஆன்மீகத் தாபம் ஒரு முடக்கு நீரினால் தணிந்து விடக் கூடியது. அவர்களின் ஆன்மீகக் கோப்பையோ சிறியது. அதில் சிறிதளவு நீர் ஊற்றினாலே போதும், அது நிரம்பி வழிந்து விடும். எனவே அவர்கள் சிறிதளவு ஆன்மீக வெளிச்சத்தைப் பெற்றதுமே அவர்கள் தாம்அடைந்த நிலையே இறுதியானது என எண்ணிக் கொண்டு, அவ்வாறு கூறத் தொடங்கி விட்டார்கள். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆன்மீகத் தாபமோ, அளப்பரியதாகும். அவர்களின் ஆன்மீகக் கோப்பையோ அளவிட முடியாப் பெரியதாகும். இதனையே இறைவன் தன் திருமறையில், "நாம் உம் இதயத்தை விரிவாக்க வில்லையா?" என்று கூறுகின்றான். ஞான ஒளி அவர்களின் உள்ளத்தில் பாய்ச்சப் பெற, பாய்ச்சப் பெற அவர்களின் தாபம் அதிகரித்ததேயொழிய, குறைவில்லை. எனவே 'இன்னும் தா இறைவனே! இன்னும் தா இறைவனே!! நான் உன்னை அறிய வேண்டிய அளவுக்கு நான் இன்னும் உன்னை அறியவில்லையே" என்று கூறிக் கொண்டிருந்தார்கள்" என்று விளக்கம் பகர்ந்தனர்.

முன்னரே நெய் தோய்த்து வைத்திருந்து, அவர்கள் வந்து கேட்டதும், அதனை எடுத்துக் கொடுத்தார். அன்றிலிருந்து அக்கடையில் ரொட்டி வாங்குவதையே அவர்கள் நிறுத்திக் கொண்டனர்.

பின்னர் அங்கிருந்து திமிஷ்க் சென்ற அவர்கள், அங்கு ஓராண்டு காலம் தங்கியிருந்தனர். இந்த ஓராண்டு காலமும் ரொட்டி வாங்கி உண்பதையே நிறுத்திவிட்டு, வாரத்திற்கு ஒரு தடவை, ஒரு கோப்பை 'சூப்' வாங்கிக் குடிப்பதையே தமக்குப் போதுமாக்கிக் கொண்டனர்.

வெளியூர்களில் அவர்கள் விடுதிகளிலே தங்கினார்கள். அங்கு அறையின் கதவுகளை மூடிக் கொண்டு, இறை வணக்கத்தில் ஈடுபடுவார்கள். ஆனால், வெளியில் செல்லும் பொழுது, தம்முடைய ஆன்மீக உயர்வை மக்கள் அறியக்கூடாதென்று எண்ணி, செல்வ வணிகர் போன்று கம்பளி உடையணிந்து செல்வார்கள். அப்பொழுது தம் அறைக்கதவை விலை உயர்ந்த பூட்டால் பூட்டி விட்டுச் செல்வார்கள். ஆனால், அறைக்குள்ளேயோ ஒரு கிழிந்த பாயையன்றி வேறொன்றும் இருக்காது.

ஆன்மீக உச்சத்தை நோக்கி அடியெடுத்து வைத்து நடந்த அவர்கள், தாம் நுகரும் தெய்வீகக் காதலின் இரகசியங்களைத் தம்முடன் பங்கு கொள்ள ஓர் அன்புத் தோழரைத் தமக்குக் காட்டியருளுமாறு இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இறைவன் உள்ளுணர்வின் மூலம், அவர்களைக் கௌன்யா செல்லுமாறும், அங்கு ஓர் ஆன்மா தெய்வீகக் காதலுக்காக ஏங்கிக் கொண்டிருப்பதாகவும் செய்தி அறிவித்தான். அவ்வாறே அவர்கள் கௌன்யா வந்த பொழுது தான் நாம் மேலே குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்தது.

இதன்பின் அவர்களைத் தம் இல்லம் அழைத்துச் சென்று, மரியாதையுடன் உபசரித்தனர் மௌலானா ரூமி. இருவரும் அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு, நாற்பது நாட்கள், மற்றொரு வரலாற்றின் படி, ஆறு மாதங்கள் தனித்திருந்தனர். இந்த ஆறுமாத காலத்தில் ஷம்சுத் தப்ரேஸ் (ரஹ்) அவர்கள், மௌலானா ரூமியின் இதயத்தில் ஆன்மீக இரகசியங்களை ஊட்டினர். மௌலானா ரூமியின் ஆன்மீகக் கண், வெளிச்சம் பெற்றது. தாம் இதுகாறும் கற்ற கல்வியெல்லாம் சாதாரணமானவை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இதனையே மௌலானா ரூமி அவர்கள்,

> "உண்மையின் பாதையில் ஷம்சுத் தப்ரேஸ்தான்
> என்னை அழைத்துச் சென்றார்கள்.
> நான் பெற்ற ஆன்மீக ஞானமெல்லாம் அவர்கள்
> அளித்த பிச்சையாகவே இருந்தது"

என்று ஒரு கண்ணியில் பாடுகிறார்கள்.

மற்றொரு கண்ணியிலோ,

"ரூமின் எசமானர் அறிவார்ந்த ஞானியாகவில்லை
அவர் ஷம்சுத் தப்ரேஸின் அடிமையாகும் வரை"

என்று அவர்கள் பண்ணிசைக்கிறார்கள்.

பல்வேறு நாடுகளிலும் இருந்து வந்த அறிஞர்களும், துறவிகளும், மௌலானா ரூமி அவர்களின் திருமுன் கால் மடித்து வீற்றிருந்து பாடம் கேட்டது ஒருபுறமிருக்க, இப்பொழுது மௌலானா ரூமி அவர்களே, ஷம்சுத் தப்ரேஸ் (ரஹ்) அவர்களின் திருமுன், கால் மடித்து வீற்றிருந்து பாடம் கேட்கத் துவங்கி விட்டார்கள். ஆசான் மாணவராகி விட்டார்கள்.

இதைப் பற்றி மௌலானா ரூமி அவர்களின் மகன் சுல்தான் வலத் கூறும் பொழுது,

"ஷைகே மாணவராகி விட்டார்கள்.

தம் ஆசானின் பாதத்தில் அமர்ந்து தம் பாடங்களைப் புதிதாகப் பயிலத் தொடங்கிவிட்டார்கள்.

ஆன்மீகத்துறையில் அவர்கள் நிறைவு பெற்றிருந்த போதினும்,

மீண்டும் ஒருமுறை அத்துறையில் பாடம் கேட்கத் தொடங்கி விட்டார்கள்." என்று எடுத்துரைக்கிறார்.

தம் மகன் கூறுவது சரியே என்று சொல்வது போன்று மௌலானா ரூமியும்,

"நானோ ஒரு துறவியாக இருந்தேன்.

(ஷம்சுத் தப்ரேஸாகிய) தாங்களோ, எனக்கு மதுவூட்டி மயக்கமுறச் செய்து விட்டீர்கள்.

மார்க்க மேதை என்று நான் பெரிதும் கௌரவிக்கப்பட்டேன்.

தாங்களோ என்னைக் குழந்தைகளும் பார்த்துச் சிரிக்குமாறு செய்து விட்டீர்கள்" என்று பண்ணிசைக்கிறார்கள்.

இதன் காரணமாக மௌலானா ரூமி, மதரஸாவில் அமர்ந்து மாணவர்களுக்கு பாடம் போதிப்பதையும், மேடை மீதேறி மக்களுக்கு அறிவுரை பகர்வதையும் விட்டொழிந்தார்கள். 'ஸமா' என்ற பேரின்ப இசை நிகழ்ச்சியை வெறுத்து வந்த அவர்கள், இப்பொழுது அதனைப் பெரிதும் விரும்பிக் கேட்கலானார்கள்.

இதைப் பற்றி மௌலானா ரூமி அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''மதுக்கிண்ணத்தை வைத்திருப்பவரின் நெற்றியை நான் பார்த்ததும், போதை என் தலைக்கேறியது. அடுத்த கணம் நான் என் எழுதுகோலை உடைத்தெறிந்து விட்டேன்'' என்று கூறுகிறார்கள்.

அவர்களின் இந்த விபரீதப் போக்கைக் கண்டு மௌலானா ரூமியின் மாணவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. வருத்தம், ஷம்சுத் தப்ரேஸ் மீது வெஞ்சினமாக மாறியது. ''அவர் யார்? அவரின் தந்தை யார்? அவரின் குலம், கோத்திரம் யாது என்று எவருக்கேனும் தெரியுமா? அவர் எங்கிருந்து வந்தார் என்பதை எவரேனும் கூறுவாருண்டோ?'' என்று ஒருவர் மற்றவரைக் கேட்டுக் கொண்டார்கள். 'எங்கிருந்தோ வந்த மந்திரவாதி, மாயக்காரன் ஒரு நொடியில், மௌலானா அவர்களை மாற்றியமைத்து விட்டானே' என்று தங்களுக்குள்ளே இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

மாணவர்கள் மட்டுமல்லாது, மார்க்க அறிஞர்களும், மௌலானா ரூமி மீது குறைபட்டுக் கொண்டார்கள். ''தப்ரேஸ் வாசியான ஒரு மந்திரவாதியின் மாயவலையில் சிக்கி, மௌலானா ரூமி தம்முடையவும், தம் தந்தையுடையவும் பெயரைக் கெடுத்துக் கொண்டாரே'' என்று அவர்களில் ஒருவர் கூறியது மௌலானா ரூமியின் செவிப்பட்டதும், ''நீரும் ஒரு மார்க்க அறிஞரா? மார்க்க அறிஞராயிருப்பின் வீணே ஏன் ஒருவர் மீது பொறாமையுறுகிறீர்?'' என்று அவர்கள் சினமொழி பகர்ந்தார்கள்.

மௌலானா ரூமியின் மாணவர்களுக்கு ஷம்சுத் தப்ரேஸின் மீது ஏற்பட்ட வெறுப்பு, நாளுக்கு நாள் பகையாக மாறிக் கொழுந்து விட்டெரிந்தது. இதனை உணர்ந்து கொண்ட ஷம்சுத் தப்ரேஸ் அவர்கள், தாம் கௌன்யா வந்த பதினாறு மாதங்களுக்குப் பின் ஒரு நாள், - ஹிஜ்ரி 643 ஆம் ஆண்டு, ஷவ்வால் பிறை, இருபத்தொன்று, வியாழன் அன்று - எவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் கௌன்யாவை விட்டே நீங்கி விட்டார்கள்.

இதனை அறிந்த மௌலானா ரூமியின் மாணவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். உவகைக் கூத்தாடினார்கள். ஆனால், மௌலானா ரூமி அவர்களோ, ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கினார்கள். மக்களின் சகவாசத்தையே விட்டொழித்து, ''பாவிகள் என் ஆசானை விரட்டி விட்டனரே. என்று காண்பேன் அவரை இனி?'' என்று ஏங்கித்தவித்து, கண்ணீரை ஆறாகப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். கண்ணீரோடு சேர்ந்து கொண்டு காலமும் ஓடியது.

ஒரு நாள் அவர்களுக்கு திமிஷ்கிலிருந்து ஒரு மடல் வந்தது. யாருடைய மடல் என்று அதனை அவர்கள் பிரித்துப் பார்த்தார்கள். அதனைப் பிரித்துப் பார்த்ததும், அவர்களின் உடல் முழுவதும் ஒருவித இன்ப உணர்வு ஏற்பட்டது. அவர்களால், அவர்களின் கண்களையே நம்ப இயலவில்லை. எவரிடமிருந்து அம்மடல் அவர்களுக்கு வந்தது? ஷம்சுத் தப்ரேஸிடமிருந்து தான்.

இதன்பின் சிறிது மன அமைதி அடைந்த அவர்கள், ஷம்சுத் தப்ரேஸ் மீது பகைமை பாராட்டாத ஒரு சிலரைத் தம் அறைக்குள் வர அனுமதி வழங்கினார்கள். 'ஸமா' என்ற பேரின்ப இசை நிகழ்ச்சியில் முன்னர் தாம் தம் ஆசானுடன் கலந்து இன்பம் துய்த்த நாட்களை நினைவு கூர்ந்து, மீண்டும் அவர்கள் 'ஸமா' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, துன்பம் மறந்திருந்தார்கள். எனினும் தம் ஆசானின் நினைவு வந்ததும், மீண்டும் துன்பத்திற்காளானார்கள்.

ஒருநாள் அவர்கள் ஷம்சுத் தப்ரேஸுக்குப் பின்வருமாறு மடல் தீட்டினார்கள்.

'என் ஆசையின் கனியே! என் இதயத்திய் ஒளியே! மீண்டும் என்னிடம் வருவீர்களாக! தாங்கள் வரின், நான் இன்புறுவேன், இல்லையெனில் துன்புறுவதே என் தொழிலாகப் போய்விடும். தொலைவிலிருந்த போதினும், அருகிலிருப்பது போல் தோன்றும் சூரியன் போன்று, தாங்கள் இருக்கிறீர்கள். தாங்கள் தொலைவிலிருப் பினும் தங்களை நான் இங்கு என் அருகிலேயே காண்கிறேன். ஆதலின் வருக, வருக, விரைவில் வருக!''

இவ்வாறு ஒரு மடல் அல்ல மூன்று மடல்கள் எழுதினார்கள். ஆனால் ஒன்றிற்கேனும் ஷம்சுத் தப்ரேஸிடமிருந்து பதில் வரவில்லை. அது கண்டு அவர்கள் நிலை குலைந்தார்கள்.

மௌலானா ரூமி அவர்களின் பரிதாபகரமான நிலையைக் கண்டு, அவர்களின் மாணவர்கள் பெரிதும் இரங்கினர். தாங்களே ஷம்சுத் தப்ரேஸிடம் சென்று, அவர்களிடம் மன்னிப்பு கோரி, அவர்களைக் கௌன்யா அழைத்து வருவதாக மௌலானா ரூமியிடம் வலியச் சென்று கூறினர். அதுகேட்டு மகிழ்ந்த அவர்கள், தம் மகன் சுல்தான் வலதின் தலைமையில் இருபது பேர்கள் அடங்கிய ஒரு குழுவை திமிஷ்கிற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களிடம் தம் ஆசானுக்குத் தம் அன்புக் காணிக்கையாக ஆயிரம் தீனார்களையும் கொடுத்து, பின் வருமாறு ஒரு மடலும் தீட்டி அனுப்பி வைத்தார்கள்:

''தாங்கள் என்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து, தேனை விட்டுப் பிரிக்கப்பட்ட மெழுகு போன்று நான் இருக்கிறேன். இன்ப உறவை இழந்த நான் காதல் நெருப்பில் உருகிக் கொண்டிருக்கும் மெழுகு திரிபோல் ஆகிவிட்டேன். தங்களின் பிரிவாற்றாமையால் நான் அழிந்தழிந்து கொண்டிருக்கிறேன். என் ஆன்மா, கானகத்தில் வசிப்பது போன்று, தனிமையில் கிடந்து தவித்துக் கொண்டிருக்கிறது. தங்களின் வாகனத்தின் கடிவாளத்தைத் திருப்புவீர்களாக! (இந்தப் பாதையில்) தங்களின் மகிழ்ச்சியின் வாகனத்தைத் திருப்புமாறு நான் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் இல்லாத பொழுது, இன்னிசையே எனக்கு 'ஹராம்' ஆகிவிட்டது. மேலும் மகிழ்வுடன் இருப்பதை நான் ஷைத்தானை வெறுப்பது போன்று வெறுக்கிறேன். தங்களிடமிருந்து ஒரு மடல் வரும்வரை நான் ஒரு கவிதை கூட எழுதவில்லை. தங்களின் மடலைப் படித்தபின் தான், மகிழ்ச்சி மீக்குற்று ஐந்து அல்லது ஆறு கவிதைகளை எழுதினேன். இறைவனே! எங்கள் இருவரையும் மீண்டும் சந்திக்க வைத்து, என்னுடைய மாலை நேரத்தைக் காலை நேரமாக ஆக்குவாயாக! நிச்சயமாக, தாங்கள் சிரியா, அர்மீனியா, ரோம் ஆகிய நாடுகள் பெருமைப்படக் கூடிய மாமனிதராக இருக்கிறீர்கள்.''

இந்த மடலுடன் திமிஷ்க் சென்ற தூதுக்குழு, அங்கு ஷம்சுத் தப்ரேஸைத் தேடிக் கண்டுபிடித்து மடலையும் காணிக்கையையும் அவர்களிடம் சமர்ப்பித்து, அவர்களிடம் தாங்கள் செய்த தீமைகளுக்கு மன்னிப்புக் கோரி, அவர்களைக் கௌன்யாவுக்கு அரசரை அழைத்து வருவது போன்று அழைத்து வந்தது. ஷம்சுத் த்பரேஸை வாகனத்திலேற்றி, மற்றவர்களெல்லாம் வாகனத்தில் ஏறிவந்த பொழுது, சுல்தான் வலது மட்டும் மரியாதையின் பொருட்டு, திமிஷ்கிலிருந்து கௌன்யா வரை நடந்தே வந்தார். ஷம்சுத் தப்ரேஸை வரவேற்க கௌன்யா நகரமே திரண்டு வந்தது.

தம் ஆன்மீக வழிகாட்டியை மீண்டும் கௌன்யா நகரில் கண்ட மௌலானா ரூமி, அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களைத் தம் இல்லம் அழைத்துச் சென்று, அங்கேயே அவர்களைத் தங்க வைத்ததுடன், தம் வளர்ப்புப் பெண்ணையும் அவர்களுக்கு மணமுடித்து வைத்தார்கள்.

நாளுக்கு நாள் மௌலானா ரூமி,ஷம்சுத் தப்ரேஸ் மீது கொண்ட ஈடுபாடு உச்ச நிலையை எய்திக் கொண்டிருந்தது. இருவரும் தனித்துத் தியானத்தில் ஈடுபட்டும், ஆன்மீகம் பற்றி உரையாடியும், இன்பப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்டு மௌலானா ரூமியின் மாணவர்கள் மீண்டும் புழுங்கலாயினர்.

எவ்வாறு மௌலானா ரூமி, ஷம்சுத் தப்ரேஸ் மீது அன்பு செலுத்தினரோ, அதே போன்று ஷம்சுத் தப்ரேஸும் மௌலானா ரூமி மீது அன்பு செலுத்தினார்கள். இருவர் அன்பும் ஒன்றுக்கொன்று மாற்றுக் குறையாமல் இருந்தது. ஒரு நாள் சிலர் மௌலானா ரூமியைப் பார்க்க வந்த பொழுது, வெளியில் இருந்து கொண்டிருந்த ஷம்சுத் தப்ரேஸ், அவர்களை நோக்கி, 'தாங்கள் மௌலானாவுக்கு என்ன காணிக்கை கொண்டு வந்தீர்கள்?'' என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், ''அது இருக்கட்டும், தாங்கள் அவர்களுக்கு என்ன காணிக்கை கொண்டு வந்துள்ளீர்கள்?'' என்று இடக்காக மறு வினா விடுத்தனர். உடனே ஷம்சுத் தப்ரேஸ் அவர்கள், ''நான் என் அன்பாளருக்கு என் சிரசையே காணிக்கையாகக் கொண்டு வந்துள்ளேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

இப்பொழுது ஒரு சம்பவம் நிகழ்ந்துது. ஷம்சுத் தப்பேரஸ் தம் மனைவியுடன் மௌலானா ரூமியின் இல்லத்தின் முகப்பிலிருந்த அறையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். மௌலானா ரூமிக்கு இரண்டாம் மனைவி மூலம் பிறந்த மகனாகிய அலாவுத்தீன் என்பவரோ, தம் தந்தையைக் காண்பதற்காக அவ் இல்லம் வருந்தோறும் அந்த அறை வழியாகவே உள்ளே போகவும் வெளியே வரவும் செய்தார். இதனை விரும்பாத ஷம்சுத் தப்ரேஸ், அவரிடம் இவ்விதம் செய்ய வேண்டாமென்று எத்தனையோ தடவை இதமாக எடுத்துரைத்தும், அதனை அணுவத்தனையும் கேளாததோடு, அவர்களை முறைத்துப் பார்த்துவிட்டும் சென்றார்.

அலாவுத்தீனுக்கு ஏற்கனவே ஷம்சுத் தப்ரேஸ் மீது ஒருவகைக் காழ்ப்பும் வெறுப்பும் இருந்தன. அதற்குக் காரணம் ஷம்சுத் தப்ரேஸ், சுல்தான் வலதின் மீது அதிக அன்பு செலுத்தியது தான். எனவே அவர், ஷம்சுத் தப்ரேஸ் மீது பொறாமை கொண்டு, புழுங்கிக் கொண்டிருந்தவர் களுடன் சேர்ந்து கொண்டு பகைமைத் தீயைக் கிளறி விட்டார்.

துவக்கத்தில் ஷம்சுத் தப்ரேஸ் இதனை மௌலானா ரூமியிடம் கூறவில்லை. நாளுக்கு நாள் அது மீண்டும் வளர்ந்து கொண்டு வருவதைக் கண்ட அவர்கள். தாம் விரைவில் கௌன்யாவை விட்டுத் தடயமே இல்லாது நீங்க வேண்டியிருக்கும் என்று சாடையாக மௌலானா ரூமிக்குத் தெரியப்படுத்தினர். அதனை அறிந்த மௌலானா ரூமி துடித்துடித்து விட்டார்கள். அந்த எண்ணத்தையே விட்டொழிக்குமாறு அவர்களைப் பெரிதும் வேண்டிக் கொண்டார்கள்.

எனினும் பொறாமைக்காரர்கள் ஷம்சுத் தப்ரேஸுக்கு நாள் தவறாது செய்து வந்த இடையூறுகள், அவர்களால் இனி ஒரு கணமேனும் பொறுக்க இயலா நிலையை எய்தியது. எனவே ஓரிரவு அவர்கள்,

சொல்லாமல், கொள்ளாமல் மீண்டும் கௌன்யாவை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். எப்பொழுது புறப்பட்டார்கள்? எங்குச் சென்றார்கள் என்று எவருக்கும் தெரியவில்லை.★

விடிந்தெழுந்தும் ஷம்சுத் தப்ரேஸைக் காணாத பொழுது, மௌலானா ரூமிக்கு உயிரே நின்று விடும் போல் இருந்தது. தம்மகன் சுல்தான் வலதின் அறைக்கு ஓடோடிச் சென்று, ''என்ன, இன்னுமா உறங்கிக் கொண்டிருக்கிறாய் ஷைகு எங்கேயோ போய்விட்டார்கள். அவர்களைத் தேடிக் கண்டு பிடி'' என்று அலறினார்கள்.

அத்துடன் தாமும் ஷம்சுத் தப்ரேஸைக் கண்டு பிடிக்க நாடெங்கும் சுற்றித் திரிந்தார்கள். என்ன செய்தும் என்ன? ஷம்சுத் தப்ரேஸின் தடயத்தையே காணவில்லை. அப்பொழுது மௌலானா ரூமிக்கு ஏற்பட்ட வருத்தமோ, முன்னை விடப் பன்மடங்கு அதிகமாகியது. அழுது, அழுது புலம்பினார்கள். புலம்பிப் புலம்பி அழுதார்கள். அவர்களின் உள்ளக் குமுறல் கவிதை வடிவாக வெளி வந்தது. அதுவே 'தீவானெ - ஷம்சுத் தப்ரேஸ்' என்னும் கவிதைத் தொகுப்பாகும்.

இப்பொழுது அவர்கள் தம் கவலையை மறக்கப் புல்லாங்குழல் இசையுடன் நின்று ஆடினார்கள். அவர்களுடன் சேர்ந்து, அவர்களின் மாணவர்களும் ஞானப் பாடல்களைப் பாடிய வண்ணம் ஆடினார்கள். உணர்ச்சி வயப்பட்டு ஆடினார்கள்.

என்ன ஆடியும் பாடியும் என்? ஷம்சுத் தப்ரேஸின் பிரிவால் அவர்களுக்கு ஏற்பட்ட கவலை, அவர்களின் இதயத்தை அறுத்துக்

★ ஆனால் ஜாமியோ பின்வருமாறு கூறுகிறார்: ஒரு நாள் மௌலானா ரூமியும், ஷம்சுத் தப்ரேஸும் தனியே அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருவன் வந்து ஷம்சுத் தப்ரேஸை வெளியே அழைத்தான். அப்பொழுது அவர்கள் "இறப்பு என்னை அழைக்கிறது" என்று கூறிக் கொண்டு வெளியே சென்றனர். அப்பொழுது ஏழுபேர் அவர்கள்மீது பாய்ந்து அவர்களைக் கத்தியால் குத்தினர். பெரும் சப்தமிட்ட வண்ணம் ஷம்சுத் தப்ரேஸ் கீழே சாய்ந்தனர். அவர்களைக் கொலை செய்தவர்களில் மௌலானா ரூமியின் மகன் அலாவுத்தீனும் ஒருவர். அவர்களைக் கொலை செய்து, எழுவரும் ஒருவர் பின் ஒருவராக விரைவில் இறந்தனர்.

'இது நிகழ்ந்தது கி.பி .1245 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு வியாழன்' இரவு என்று கூறப்படுகிறது.

தம் ஆசானின் இறப்புச் செய்தி அறிந்து பெரிதும் துன்புற்ற மௌலானா ரூமி பின்னர், "அவர்கள் தம் சிரசை எனக்கு அர்ப்பணம் செய்வதாகக் கூறி வந்ததை நிரூபித்து விட்டனர். இறை நாட்டத்தில் எவர் தாம் தலையிட இயலும்?" என்று தமக்கே, தாம் ஆறுதல் கூறிக் கொண்டனர் என்று கூறப்படுகிறது.

கொண்டிருந்தது. ஹிஜ்ரி 645 ஆம் ஆண்டில் தார்த்தாரியர்களின் படையெடுப்பால், மத்திய கிழக்கு நாடுகளில் நிகழ்ந்த படுகொலை களைப் பற்றிக் கேள்விப்பட்டதும், தம் ஆசானின் கதி என்னவாயிற்றோ என்று அவர்கள் பெரிதும் வருந்தினார்கள். எவரேனும் அவர்களிடம் வந்து தாம் ஷம்சுத் தப்ரேஸை இன்ன இடத்தில் கண்டதாகக் கூறின், அதுகேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியுற்ற அவர்கள், தம் கையில் கிடைத்த எந்தப் பொருளையும் எடுத்து அவருக்கு அன்பளிப்பாக வழங்கி விடுவார்கள்.

ஒரு தடவை ஒருவர் வந்து ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, அந்த இடத்தில் ஷம்சுத் தப்ரேஸைக் கண்டதாகக் கூறிய பொழுது, அவர்கள் தாம் அணிந்திருந்த மேலங்கியையே கழற்றி அவருக்கு அன்பளிப்புச் செய்துவிட்டார்கள். சிறிது நேரம் கழித்துமற்றொருவர் அவர்களிடம் வந்து, "அவர் தங்களிடம் பொய்யுரைத்து ஏமாற்றிவிட்டார்" என்று கூறியபொழுது, "அதனால் தான் நான் என் மேலங்கியைக் கழற்றிக் கொடுத்தேன். அவர் உண்மைச் செய்தியை கூறியிருப்பின், நான் என் உயிரையே அவருக்குக் கொடுத்திருப்பேனே" என்று பதில் சொன்னார்கள்.

பிரிவாற்றாமை தாங்க இயலாது, இறுதியாக அவர்கள் சில நண்பர் களையும் அழைத்துக் கொண்டு, ஷம்சுத் தப்ரேஸைத் தேடி திமிஷ்கிற்கே புறப்பட்டு விட்டார்கள். அங்கு அவர்கள் ஷம்சுத் தப்ரேஸைத் தேடி, அதன் வீதிகள் எங்கும் ஏங்கிப் புலம்பிய வண்ணம் அலைந்து திரிந்தார்கள். ஒரு காலத்தில் கௌன்யா நகர வீதியில் அவர்கள் தம் கோவேறு கழுதையின் மீதுஏறிவரும் பொழுது, மாணவர்களும், மார்க்க மேதைகளும், பிரபுக்களும் கால் நடையாக அவர்களைச் சூழ வந்தது போக, அவர்களைக் கண்டதும் அரசர்களும், ஆளுநர்களும் மரியாதையுடன் வரவேற்றது போக, இப்பொழுது அவர்கள் பஞ்சைப் பராரி போல திமிஷ்க் நகர வீதிகளில் அலைந்து திரிந்தது உள்ளத்தை உருக்கும் காட்சியாக இருந்தது. அறிவாற்றல் மிகுந்த மார்க்க மேதை, ஆன்மீகச் சிகரத்தில் வீற்றிருக்கும் சான்றோர் ஒருவர், இவ்வாறு ஒரு மனிதருக்காக அலங்கோல நிலையை அடைந்தது, அங்கிருந்த மார்க்க விற்பன்னர் களுக்குப் புரியாத புதிராக இருந்தது.

திமிஷ்க் நகர வீதிகளில் பல நாட்களாக கால் நோவ, உடல் நோவ, உள்ளம் நோவ அலைந்து திரிந்தும் அவர்கள் ஷம்சுத் தப்ரேஸைக் காணாத பொழுது, அவர்களின் ஏமாற்றம் அளவைக் கடந்தது. இறுதியாக அவர்கள் தமக்கே தாம் பின் வருமாறு ஆறுதல் கூறிக் கொண்டார்கள்: "நானும் ஷம்சும் இருவரல்ல. (ஒருவர்தாம்) அவர் சூரியன் என்றால்,

அதன் கதிர் தான் நான். அவர் கடல் என்றால், அதன் ஒரு திவலை தான் நான். கதிருக்கு ஒளி அளிப்பது சூரியன். திவலையை உண்டுபண்ணுவது கடல். எனவே ஷம்சுக்கும் எனக்கும் இடையே எவ்விதப் பாகுபாடும் இல்லை.''

இவ்வாறு தமக்கே தாம் ஆறுதல் கூறிக் கொண்டு, கௌன்யா மீண்ட அவர்கள், சிறிது காலம் அமைதியாக இருந்தார்கள். அதன்பின் அவர்களுக்கு மீண்டும் ஷம்சுத் தப்ரேஸின் பிரிவாற்றாமை ஏற்பட, அவர்கள் மீண்டும் திமிஷ்க் சென்று ஷம்சுத்தப்ரேஸைத் தேடி அலைந்தார்கள். எனினும் காணவில்லை.

இதன்பின் தாமே ஷம்ஸ்; ஷம்ஸைத் தேடித் தாம் அலைவதெல்லாம் தம்மையே தாம் அறிவதற்காக அலையும் அலைச்சலேயன்றி வேறில்லை என்று முடிவுக்கு வந்த மௌலானா ரூமி அவர்கள், கௌன்யா திரும்பினர். இப்பொழுது எந்த ஆன்மீக அறிவை வேண்டி ஷம்ஸைத் தேடி அலைந்தார்களோ, அது தம் உள்ளிருந்தே பீரிட்டு வெளியே பாய்வதை அவர்கள் கண்டார்கள்.

மௌலானா ரூமியின் ஆன்மீக மாணவர்களில், ஷைகு ஸலாஹுத்தீன் என்பவரும் ஒருவர். கௌன்யாவின் அண்மையிலிருந்த ஒரு சிற்றூரில் பிறந்த அவரின் தந்தை, மீன்விற்பவர். அவர் ஒரு பொற்கொல்லர்.

கௌன்யா மீண்ட சில நாட்களுக்குள், மௌலானா ரூமி அவர் களுக்கு மீண்டும் அமைதியின்மை ஏற்பட, அவர்கள் தம் ஆன்மீக மாணவர் ஷைகு ஸலாஹுத்தீனிலே, தம் ஆன்மீக ஆசான் ஷம்சுத் தப்ரேஸைக் கண்டனர். அவரைக் காணக் காண, அவர்களுக்கு ஆன்மீக உணர்வு அதிகப்படலாயிற்று. எனவே அவர்கள், அவரைத் தம்முடைய ஷைகாக ஏற்படுத்திக் கொண்டதோடு தம்முடைய நண்பர்களையும், மாணவர்களையும் அவருக்குக் கீழ்ப்படிந்தொழுகுமாறு பணித்தார்கள்.

ஒரு நாள் மௌலானா ரூமி அவர்களின் மாணவர்கள், அவர்களை அணுகி, ''ஃபத்வா வழங்குவதற்கு தங்களுக்கு அறக்கட்டளையிலிருந்து பதினைந்து தீனாரே தரப்படுகிறது. ஸலாஹுத்தீனுக்கோ ஆயிரம் தீனார் வழங்கப்படுகிறதே'' என்று கூறிய பொழுது, ''அவருக்குப் பணம் தேவை அதிகம். எனவே எனக்குத் தரும் பதினைந்து தீனாரையும் அவருக்கு வழங்கி விட்டால் கூட நலமாக இருக்குமென்று தோன்றுகிறது'' என்று அவர்கள் கூறினார்கள்.

அது கேட்டு அவர்களின் மாணவர்கள் எரிச்சலும், பொறாமையும் கொண்டனர். ''ஷம்சுத் தப்ரேஸாவது படித்தவர். ஆனால் இவரோ ஒரு

பொற் கொல்லர். இவருக்கு மௌலானா ரூமி இத்துணை மதிப்பு வழங்கியுள்ளார்களே'' என்று கூக்குரலிட்டார்கள். இது ஷைகு ஸலாஹுத்தீனின் செவிப்பட்டதும், ''மௌலானா ரூமி, தம் ஆன்மாவின் மீது அளவற்ற அன்பு செலுத்துகின்றார்கள். நான் இதனை மறைப்பதற்காக திரையாகவே பயன்படுத்தப்படுகிறேன். இதனை அவர்கள் அறியாதது ஏனோ?'' என்று கூறிக் குறைபட்டுக் கொண்டார்.

ஆம்; மௌலானா ரூமி ஒரு சுடர் விளக்காக இருந்தனர். எனினும் அது நன்றாக ஒளி வீசி எரிய ஒரு தூண்டுகோல் வேண்டியிருந்தது. அந்தத் தூண்டுகோலாகவே முன்னர் ஷம்சுத் தப்ரேஸ் இருந்தனர். இப்பொழுது ஷைகு ஸலாஹுத்தீன் இருந்தார்.

அவர் ஹிஜ்ரி 657 ஆம் ஆண்டு முஹர்ரம் முதல் நாள் இறப் பெய்தியதும், மீண்டும் மௌலானா ரூமி என்ற ஒளி விளக்கு சுடர் வீசி எரிய ஒரு தூண்டுகோல் தேவைப்பட்டது. அத்தூண்டுகோலான மௌலானா ரூமி தம் ஆன்மீக மாணவர் ஷெலபி* ஹிஸாமுத்தீன் என்பவரைத் தேர்ந்தெடுத்து, அவர் மீது தம் அன்பைச் சொரிந்தனர்.

அர்மீனியாவில் வாழ்ந்து வந்த ஓர் உயரிய குடும்பத்தில் பிறந்த ஹிஸாமுத்தீன், தம் உடைமைகளையெல்லாம் மௌலானா ரூமிக்காகச் செலவு செய்தவர். அவ்விதம் செய்தும் மௌலானா ரூமியின் குளியலறையிலுள்ள தண்ணீரைக் கூடத் தாம் 'உளூ'ச் செய்வதற்குப் பயன்படுத்தமாட்டார். கடும் குளிரிலும் தம் இல்லம் சென்றே 'உளூ'ச் செய்துவிட்டு வருவார். மௌலானா ரூமியின் மீது அவருக்கு அவ்வளவு மதிப்பு!

மௌலானா ரூமியும், அவர் மீது கொண்டிருந்த பற்றும், பாசமும், மதிப்பும் அளவிறந்ததாகும். மௌலானா ரூமி அவருடன் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால், அவர்கள் ஹிஸாமுத்தீனுடைய சீடராக இருக்குமோ என்று புதிதாக இங்கு வருபவர்களை ஐயுறச் செய்யும்.

மௌலானா ரூமிக்கு எந்த அன்பளிப்புகள் வந்த போதினும் உடனே அவற்றை அவர்கள் ஹிஸாமுத்தீனுக்கே அனுப்பி வைப்பர். இதைப்பற்றி ஒரு நாள் அவர்களின் மகன் சுல்தான் வலத் குறைபட்டுக் கொண்ட பொழுது, ''இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். என் கையில் ஒரே ஒரு ரொட்டித் துண்டே இருந்து, ஓரிலட்சம் நல்லோர்கள் பஞ்சத்தால் நலிவதாக இருந்தாலும், உலகமே அழிந்துவிடும் நிலை ஏற்பட்டாலும்,

★ இது துருக்கி மொழியில் சையிது என்பதற்கு நிகரான சொல்லாகும்.

நான் அந்த ரொட்டித் துண்டை மரியாதைக்குரிய ஷைலபிக்கே அனுப்பி வைப்பேன்'' என்று அவர்கள் கூறினர்.

இப்பொழுதெல்லாம் மௌலானா ரூமி, தமக்கென எதனையும் விரும்பாத துறவியாய், எளியார்க்கு எளியாராய், விளங்கினர். தம் மகன் சுல்தான் வலது பெரிதும் வற்புறுத்தி வேண்டிக் கொண்டதன் பேரில், அவர்கள் தமக்கு அரசரிடமிருந்தும், செல்வர்களிடமிருந்தும் வரும் நன்கொடைகளில் ஒரு பகுதியைத் தம் குடும்பத்தினருக்கென ஒதுக்கிக் கொடுத்தனர். எனினும் தம் இல்லத்தில் உண்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்படும் பொழுது தான், அவர்கள் பெரிதும் மகிழ்ச்சியுறுவர். அப்பொழுது அவர்கள், ''இப்பொழுது தான் என்னுடைய இல்லம் ஒரு பக்கீருடைய இல்லம் போன்று காட்சி வழங்குகிறது'' என்று உவகையுடன் கூறுவர்.

தம்மிடம் வந்து 'இல்லை' என்று கூறி இரப்போருக்கு, அவர்கள் ஒரு போதும் 'இல்லை' என்று கூறுவதில்லை. எவர் வந்து தம்மிடம் இரப்பினும், அவருக்கு உடனே எடுத்துக் கொடுப்பதற்கு வசதியாக , இருக்கும் பொருட்டு, அவர்கள் தம் சட்டைக்கோ, மேலங்கிக்கோ ஒரு போதும் பித்தான் மாட்டுவதில்லை.

ஒரு நாள் அவர்கள் தம் மாணவர்களுடன் ஒரு முடுக்கு வழியே சென்று கொண்டிருந்தார்கள். அதன் குறுக்கே ஒரு நாய் படுத்து, அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அதன் உறக்கத்தைக் கலைக்கக் கூடாதென்று எண்ணி, அவர்கள் அங்கு சற்று நேரம் தாமதித்தார்கள். அதற்குள் பொறுமை இழந்த அவர்களின் மாணவர் ஒருவர் அதனை விரட்ட, அதுவோ தூக்க வெருட்சியுடன் வெருண்டோடியது. அப்பொழுது மௌலானா ரூமி அளவற்ற வருத்தம் அடைந்தார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்த பொழுது, அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் ஓடோடி வந்து, அவர்களின் கைகளைப் பிடித்து முத்தமிட்டனர். ஒரு சிறுவன் மட்டும் பின் தங்கிவிட்டான். எனினும் தான் வரும் வரை நிற்குமாறு சப்தமிட்டுக் கொண்டு வந்தான். அவர்களும் அவன் அங்கு வரும் வரை, பொறுமை யுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் தெரு வழியே சென்று கொண்டிருந்த பொழுது இருவர், ஒருவர் மற்றவர் மீது வசைமாரி பொழிந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட அவர்கள், அவ்விருவர் முன் சென்று, ''அன்பர்களே! நீங்கள் ஏன் ஒருவர் மற்றவரை ஏசிக் கொண்டிருக்கிறீர்கள்? அந்த ஏச்சு, வசை, திட்டு ஆகிய அனைத்தையும் என் மீது வாரிக் கொட்டுங்கள்! நான் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக்

கொள்கிறேன்'' என்று கூறினார்கள். அது கேட்டு அவ்விருவரும் வெட்கமுற்று, அவர்களின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

மௌலானா ரூமியின் மீது அளவற்ற அன்பு செலுத்தி வந்த கொல்லர் ஒருவர், ஒரு தடவை அவர்களைச் சந்தித்த பொழுது, அவர் களுக்கு ஏழு தடவை 'ஸலாம்' உரைத்தார். அவருக்கு, அவர்கள் ஏழு தடவையும் அலுக்காது அழகான முறையில் பதில் 'ஸலாம்' கூறினார்கள்.

ஏழைகள் மீது இவ்வளவு அன்பு செலுத்திய அவர்கள் அரசர்களும், அரசிளங்குமரர்களும், பிரபுக்களும், செல்வர்களும் தம்மைக் காண வருவதைப் பெரிதும் வெறுத்தார்கள். ஒரு தடவை செல்வர் ஒருவர் அவர்களைக் காண வந்த பொழுது, ''தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். அதிக வேலையின் காரணமாக நான் தங்களை அடிக்கடி வந்து காண இயல்வதில்லை.'' என்று கூறிக் குறைபட்டுக் கொண்டார். அதற்கு அவர்கள், ''அதைப்பற்றிக் கவலையுறாதீர்கள்! என்னை வந்து காணாதவர்கள் மீது தான் அதிகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்'' என்று பதில் கூறினார்கள்.

பெண்களை அவர்கள் பெரிதும் மதித்தனர். தம் வீட்டுப் பணிப் பெண் மீது கூட அவர்கள் அன்புடன் நடந்து கொண்டனர். அவ்விதமே நடந்து கொள்ளுமாறு தம் மனைவிக்கும் அறிவுரை பகர்ந்தனர். ''பெண்கள் இறைவனின் படைப்பு மட்டுமல்ல. இறைவனின் ஒரு சுடருமாவர்'' என்று அவர்கள் கூறினார்கள்.

மௌலானா ரூமியிடம் ஹாஸ்ய உணர்வும் அமைந்திருந்தது. ஒரு நாள் அவர்கள் தம் சீடர்களுடன் ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்த பொழுது, சில நாய்கள் ஒன்றின் கழுத்தின் மீது மற்றொன்று தலையை வைத்த வண்ணம், அமைதியாகப் படுத்துறங்கிக் கொண்டிருந்தன. அது கண்டு அவர்கள், அவற்றின் உறக்கத்தைக் கலைக்கக் கூடாதென்றெண்ணி, ஒதுங்கிச் சென்றனர். அப்பொழுது அவர்களின் சீடர் ஒருவர், ''எவ்வளவு ஒற்றுமையுடன் அவை உள்ளன!'' என்று வியந்து கூறினார். அப்பொழுது மௌலானா ரூமி குறுக்கிட்டு; ''அவற்றின் முன்னால் ஓர் எலும்புத் துண்டை வீசி எறிந்த பின்பல்லவா, அவற்றின் ஒற்றுமையைப் பார்க்க வேண்டும்?'' என்று கூறினர்.

இறைவனைத் தொழுவதில் அவர்கள் எவருக்கும் இளைத்தவராக இருக்கவில்லை. சில பொழுது மஃரிபு (பொழுதடைந்ததும் தொழும்) தொழுகைகையத் தொழத் தொடங்கிவிட்டால், பொழுது விடியும் வரை தொழுது கொண்டே இருப்பார்கள். அவர்கள் இரவில் படுப்பதற்கெனப் பாயும் கிடையாது; தலையணையும் கிடையாது, ஓய்வு கொள்வதற்காக

அவர்கள் தம் விலாவைப் பூமியில் சிறிது சாய்ப்பதுமில்லை. உறக்கம் மிகுந்து விடின், உட்கார்ந்த நிலையிலேயே சற்று நேரம் உறங்குவார்கள். தம் நிலையைப் பற்றி அவர்கள் குறிப்பிடும் பொழுது, ''முள்ளாலான போர்வையைப் போர்த்திக் கொண்டுள்ள ஒருவன் எவ்வாறு படுத்துறங்க இயலும்?'' என்று கூறுவார்கள்.

பேரின்ப இசை நிகழ்ச்சியின் போது அவர்களின் மாணவர்கள் களைப்புற்று உறங்கிவிடின், அவர்களும் தம் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, அவற்றின் மீது தம் தலையை வைத்த வண்ணம் உறங்குவது போன்று பாவனை செய்வர். அவர்கள் அனைவரும் உறங்கிய பின் அவர்களின் உறக்கத்தைக் கலைக்கா வண்ணம் மெதுவாக எழுந்து சென்று இறைவனைத் துதிப்பதிலும் தியானிப்பதிலும் ஈடுபட்டு விடுவர்.

அவர்கள் எந்த அலுவல்களில் ஈடுபட்ட போதினும் தொழுகை நேரம் வந்ததும், வேறுபட்ட மனிதராக ஆகிவிடுவர். உடனே அவர்கள் அனைத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தொழுகையில் ஈடுபட்டு விடுவர். அப்பொழுது அவர்களின் முகம் வெளிறிவிடும். அவர்கள் தம்மை மறந்த நிலையில் தொழுவர். ஓரிரவு முழுவதும் இரண்டு 'ரகஅத்து'களே தொழுது முடிப்பர். இதைப்பற்றி அவர்கள் ஒரு கவிதையில் பின்வருமாறு கூறுகின்றனர்.

''மஃரிப் தொழுகை தொழுத பின் ஒருவர் விளக்கேற்றவோ, உணவருந்தவோ செய்கிறார்.

ஆனால் நானோ, என்னை விட்டுப் பிரிந்து சென்ற தோழர்களை நினைத்துக் கண்ணீர் சிந்தவும், பெருமூச்சு விடவும் செய்கிறேன்.

கண்ணீருடன் நான் 'உளூ'ச் செய்கிறேன்; என் இறைஞ்சுதல் நெருப்பால் நிறைந்துள்ளது.

தொழுகையின் அழைப்பொலி கேட்டதும், பள்ளியின் வாயில்கள் வெளிச்சத்தால் ஒளிர்கின்றன.

பேரின்ப மயக்கமுற்ற ஒருவரின் தொழுகை, எவ்வளவு அற்புதமாக உள்ளது!

அது மாசுமறுவற்றது என்று கூறுவாயாக! அது நேரத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்டது.

நான் இரண்டு 'ரகஅத்'துகளோ, நான்கு 'ரகஅத்'துகளோ தொழுதேன்.

நான் தொழுகையில் என்ன ஓதினேன் என்று எனக்குத் தெரியாது.

நான் எவ்வாறு 'ஹக்'குடைய வாசலைத் தட்டுவேன்? என்னுடைய கைகளும் இதயமும் என்னுடையவையல்லவே.

உம்மைப் போன்ற ஒரு நண்பர் என் இதயத்தைக் களவாடிச் சென்று விட்டாரே.

இப்பொழுது இறைவன் தான் எனக்கு அடைக்கலம் அளிக்க வேண்டும்.

இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். எப்பொழுது தொழுகை முடிந்தது? யார் தொழ வைத்தது என்பது எனக்குத் தெரியாது.''

இவ்வாறு தொழும் மௌலானா ரூமி அவர்கள், கடுமையான குளிர் நிரம்பிய இரவிலும், 'தஹஜ்ஜுத்' தொழுகை தொழத் தவறுவதில்லை. அப்பொழுது கண்ணீர் அவர்களின் தாடியில் விழுந்து உறைந்து, பனிக்கட்டியாகிவிடும். எனினும் அதனைக் கூட அவர்கள் உணராது, தம்மை மறந்த நிலையில் தொழுது கொண்டிருப்பார்கள்.

இத்தகு மாண்பாளர், துவக்கத்தில் ஷம்சுத் தப்ரேஸையும், பின்னர் ஷைகு ஸலாஹுத்தினையும், அதன்பின் ஷெலபி ஹிஸாமுத்தீனையும் தம்முடைய கூட்டாளராகக் கொண்டு, அவர்கள் மீது தம் அன்பைச் சொரிந்தார்களென்றால், அதற்குக் காரணம் மௌலானா ரூமிக்கும் அவர்களுக்கும் இடையேயிருந்த கருத்தொற்றுமை தான். அவர்கள் நால்வரும் இறைகாதல் பற்றி ஒருமித்த கருத்துடையவர்களாக இருந்தனர். அதன் காரணமாக ஒருவர் மற்றொருவரை நேசித்தனர்.

ஒரு தடவை சுல்தான் வலத் தம் தந்தையை நோக்கி, அம்மூவர் மீதும் அவர்கள் அளவற்ற அன்பு செலுத்துவதற்கான காரணம் என்ன என்று வினவிய பொழுது, ''எங்களுக்கிடையேயுள்ள கருத்தொற்றுமை தான் அதற்குக் காரணம். கருத்தொற்றுமையால் ஏற்படும் அன்பு, உறவு, ஒரு போதும் இம்மையிலாயினும் சரி, மறுமையிலாயினும் சரி, துன்பத்திற்கு வழி கோலாது'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மௌலானா ரூமியின் மாணவர்கள் ஹகீம் ஸனாயியின் ஹதீக்காவையோ, அத்தாருடையே மந்திக்குத் தைரையோ படித்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஹிஸாமுத்தீன், அவர்களை அணுகி, ''ஏன் இவற்றைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''என் செய்வது? இவற்றில் தாம் நாங்கள் ஆன்மீக ஞானம் ஒளிர்வதைக் காண்கிறோம். தெய்வீகக் காதல் மிளிர்வதைக் காண்கிறோம். நம்முடைய ஆசானுடைய கவிதைகளில் அவற்றைக் காணவில்லையே'' என்று கூறினார்கள்.

ஒருநாள் மௌலானா ரூமியுடன் ஹிஸாமுத்தீன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, 'ஹதீக்கா' போன்றும், 'மந்திக்குத் தைர்' போன்றும் - இல்லை, இல்லை - அவற்றை விட மேலான முறையில் ஒரு ஞான காவியம் எழுத வேண்டும் என்று அவர்களை வேண்டிக் கொண்டார். உடனே மௌலானா ரூமி அவர்கள், சென்ற இரவு, நானும் இதே போன்று எண்ணினேன். அதன் காரணமாகப் பதினெட்டு அடிகளை எழுதியுள்ளேன்.'' என்று கூறித் தம் தலைப் பாகையிலிருந்து ஒரு காகிதச் சுருளை எடுத்து ஹிஸாமுத்தீனிடம் கொடுத்தனர். அது

''மூங்கிலாலான புல்லாங்குழலிலிருந்து அது என்ன கதை கூறுகிறது என்பதைக் கேட்போம்'' என்று தொடங்கி,

''இப்பொழுது என் பேச்சு முடிந்தது. உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!'' என்று முடிந்திருந்தது.

அதைப் படித்து முடித்ததும், ஹிஸாமுத்தீன் அளவற்ற வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். தாம் எண்ணியதை அவர்களும் எண்ணி யுள்ளார்களே என்பதானால் ஏற்பட்ட வியப்பு அது. தாம் விரும்பியதை அவர்களும் செய்யத் தொடங்கி விட்டார்கள் என்பதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி அது. இதுவே உலகப்புகழ் பெற்ற ஞான காவியமான மத்னவீ ஷரீஃபின் தொடக்கமாகும்.

இதன்பின் ஒவ்வொரு நாள் இரவிலும் மத்னவீ ஷரீஃபின் வேலை வேகமாக நடந்தது. மௌலானா ரூமியின் வாயிலிருந்தும் கவிதை வெள்ளம் கரை புரண்டோடும். அதனை உடனுக்குடன் ஹிஸாமுத்தீன் எழுதிக் கொள்வார். இறுதியாக, எழுதியவை அனைத்தையும் இனிய குரலில் உரத்து சப்தமிட்டுப் பாடுவார். அனைவரும் அதனைக் கேட்டுச் சொக்கி மகிழ்வர்.

மௌலானா ரூமியின் இல்லத்தில் ஒரு தூண் இருந்தது. சில பொழுது அவர்கள் பேரின்ப போதை மேலிட்டதும், தன்னுணர்வற்றவர் களாய் அத்தூணைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, அதனைச் சுற்றிச் சுழன்று கொண்டு வருவார்கள். அப்பொழுது அவர்களின் வாய், கவிமாரி பொழியும். உடனே ஹிஸாமுத்தீனும், ஏனையோரும் அதனை எழுதிக் கொள்வர். இவ்வாறு இரவு முழுவதும் நடந்து கொண்டிருக்கும்.

மத்னவீ ஷரீஃபின் முதல் தொகுதி எழுதி முடிக்கப்பட்டதும், ஹிஸாமுத்தீனின் துணைவியார் கடுமையான நோய்வாய்ப்பட்டு இறப்பெய்தினார்.அதன் காரணமாக ஹிஸாமுத்தீன் பெரிதும் மன முடைந்து ஆற்றொணாத் துக்கத்தில் ஆழ்ந்தார். எனவே இரண்டாண்டுகள் வரை மத்னவீ ஷரீஃபின் வேலை தடைப்பட்டது. பின்னர் மீண்டும்

துவக்கப்பட்டு, மௌலானா ரூமி இறப்பெய்தும் வரை பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது.

ஆறு தொகுதிகளில் 26,600 அடிகளைக் கொண்ட அந்த மாபெரும் ஞான காவியம், பாரசீக இலக்கியத்தின் சிகரமெனப் போற்றப்படுகிறது. பாரசீக மொழியில் ஃபிர்தௌஸியின் 'ஷா நாமா'வும், ஸஅதியின் 'குலிஸ்தானு'ம், ஹாபிஃஃஸுடைய, 'தீவானு'ம் சிறப்புற்று விளங்கிய போதினும், இவை மூன்றினுக்கும் மேலான இடத்தை மௌலானா ரூமியின் 'மத்னவீ ஷரீஃப்' பெற்றுத் தன்னிகரற்று விளங்குகிறது. அதனை அறிஞர் பெருமக்கள், ''பாரசீக மொழியிலுள்ள திருக்குர்ஆன்'' என்று போற்றிப் புகழ்கிறார்கள். திருக்குர்ஆனின் சாரத்தைப் பிழிந்து, அதனைச் சமைத்துள்ளதாக மௌலானா ரூமியே கூறுகிறார்கள். அதில் மார்க்கத்தின் வேர்களும், இயற்கை இரகசியங்களின் கண்டுபிடிப்புகளும், தெய்வீக அறிவும் பொதிந்திருப்பதாக அதன் முதல் தொகுதியின் அரபி முன்னுரையில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதிலே மௌலானா ரூமி உன்னதமான உயரிய கருத்துக்களை, ஆழமான ஞானங்களை, இனிய உவமானங்கள், கதைகள் மூலமாக எல்லார்க்கும் விளங்கக்கூடிய எளிய முறையில் எடுத்துரைக்கிறார்கள். இதுவே, அவர்களின் நூல், மக்களின் உள்ளங்களைக் கைப்பற்றி, அவற்றில் கொலு வீற்றிருப்பதற்கு மூல காரணம் என்று கூறலாம்.

இறுதியாக மௌலானா ரூமியின் மாண்பார்ந்த பெருவாழ்வும், தன் முடிவை நெருங்கியது. ''மக்கள் என்னை இவ்வுலகில் இருக்க வேண்டுமென்று விரும்பிய போதினும், ஷம்சுத்தப்ரேஸ் என்னை அங்கு அழைத்துக் கொண்டிருக்கிறார்'' என்று கூறிக் கொண்டிருந்த மௌலானா ரூமியும், தம் முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்து, அதற்கான ஆயத்தங் களைச் செய்யத் தொடங்கினார்கள்.

அவர்களின் பூத உடலை ஏற்றுக் கொள்ளத் தயாராகும் முறையில் மண்ணும் அசைந்தது. அவர்கள் இறப்பதற்கு நாற்பது நாட்களுக்கு முன்பிருந்து, கௌன்யா நகரில் இலேசான நில அதிர்ச்சிகள் ஏற்பட ஆரம்பித்தன. அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடந்த ஏழு நாட்களும், அடிக்கடி நில அதிர்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அது கண்டு மக்கள் திடுக்குற்று ஓடி வந்து, மௌலானா ரூமி அவர்களிடம் உதவி வேண்டிய பொழுது, ''பயப்படாதீர்கள்! பாவம்! பூமி பசித்துக் கொண் டுள்ளது. கொழுத்த உணவை அது விரும்பி ஏங்கிக் கொண்டுள்ளது. விரைவில் அவ்வுணவு அதற்குக் கிடைக்கும். அதன்பின் அது பசி தீர்ந்து, அமைதியுற்று விடும்'' என்று அவர்கள் கூறினார்கள்.

இப்பொழுது ஷைகு ஸத்ருத்தீன் சில தர்வேஷ்களுடன், அவர்களைக் காண வந்த பொழுது, அவர்களுக்கு ஆறுதல் கூறும்

முறையில், "இறைவன் தங்களுக்கு விரைவில் நலன் நல்குவானாக!" என்று கூறினார். அது கேட்டு அவர்கள், "காதலனுக்கும் காதலிக்கும் ஒரு மயிரிழையே இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளியும் அகன்று, முடிவற்ற பேரொளியில் நான் சேர்ந்து விடுவதைத் தாங்கள் விரும்ப வில்லையா?" என்று கேட்டார்கள்.

இவ்வாறு கூறிய மௌலானா ரூமி, அவர்கள், ஹிஜ்ரி 672 ஆம் ஆண்டு, ஜாமதியுல் ஆகிர் மாதம் ஐந்தாம் நாள்; அறுபத்தெட்டு ஆண்டுகள் மூன்று மாதங்கள் இவ்வுலகில் வாழ்ந்த பின் மறுமைப் பேற்றை அடைந்தார்கள்.

அவர்களின் உடல் அடக்கப் பெறுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட பொழுது, மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுத வண்ணம், அதனைப் பின் தொடர்ந்து சென்றனர். அந்த மக்கள் திரளில் ஏராளமான யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்களின் வேத நூல்களைப் படித்த வண்ணம் வந்து கொண்டிருப்பதைக் கண்ட முஸ்லிம்கள், அவர்களை அங்கிருந்து விரட்டிய பொழுது, அவர்கள் திரும்பிச் செல்லாது தொடர்ந்து வந்து கொண்டே இருந்தனர். இதனால் முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இடையே கைகலப்பு ஏற்பட்டு விடுமோ என்னும் நிலையே ஏற்பட்டு விட்டது.

இச்செய்தி அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட கௌன்யாவின் ஆளுநர் முயீனுத்தீன் பர்வானாவுக்குத் தெரியவந்த பொழுது, அவர் யூத ரப்பிகளையும், கிறிஸ்தவப் பாதிரிமார்களையும் அழைத்து, "ஒரு முஸ்லிம் மகானின் மயான ஊர்வலத்தில் நீங்களும் ஏன் கலந்து கொள்கிறீர்கள்?" என்ற வினவிய பொழுது, "எங்களின் வேதங்களில் நபிமார்களின் பண்புகள் எத்தகையதாய் இருந்தன என்று பொறிக்கப் பட்டிருந்ததோ, அதனை நாங்கள் இவர்களிலே கண்கூடாகக் கண்டோம். எனவே, இவர்களைக் கௌரவிக்கும் முறையில், நாங்களும் இந்த மயான ஊர்வலத்திலே கலந்து கொள்கிறோம்" என்று அவர்கள் பதில் கூறினர். அது கேட்டு மகிழ்ந்த ஆளுநர், அவர்களையும் அந்த மயான ஊர்வலத்தில் தொடர்ந்து வர அனுமதி வழங்கினார்.

ஊர்வலம் செல்லச் செல்ல மக்கள் அதில் ஓடோடி வந்து கலந்து கொண்டதால், அது நீண்டு கொண்டே சென்றது. எனவே வைகறையில் புறப்பட்ட 'ஜனாஸா' அடக்கவிடத்தை அடையும் பொழுது, பொழுது பட்டுவிட்டது. அதன் பின் அவர்களின் பொன்னுடல், எல்லாவிதமான மரியாதைகளுடனும், அவர்களின் தந்தையின் அடக்கவிடத்தின் மீது சுல்தான் அலாவுத்தீன் கைக்குபாத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

© நூல் உரிமை : யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை - 17.

முதற் பதிப்பு : டிசம்பர், 1886
இரண்டாம் பதிப்பு : மே, 2004

விலை : ரூ. 140.00

ஒளி அச்சு:

விக்னேஷ்வர் கிராபிக்ஸ்,
சென்னை - 600 005.
தொலைபேசி : 9444186261

அச்சிட்டோர் :

மணி ஆப்செட்
112, பெல்ஸ் ரோடு,
சென்னை - 600 005.
தொலைபேசி : 2855 5249